வெளியீடு : 1-12-2003

Issued : 1-12-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 4, 2003 – தொகுதி 39 – எண் 2

**Friday the 4th April, 2003 – Volume 39 – No. 2**



...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

4-4-2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** உடுக்குறியிடாத வினாக்கள் (12-வது மற்றும் 13-வது பட்டியல்) | 183-257 |
| **2. கவனத்தை ஈர்த்தல்—** கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குநர்களுக்குள் தகராறும் மக்கள் பாதிப்பும் | 257-258 |
| **3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 18 - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 258-298 |
| மாண்புமிகு திரு. செ. செம்மலை | 258-290, 291-292 |
| (ஆ) கோரிக்கை எண் 19 - உயர் கல்வித் துறை | 299-377, 387-764 |
| (இ) கோரிக்கை எண் 37 - பொதுத் துறை | 299-377, 387-764 |
| (ஈ) கோரிக்கை எண் 11 - பள்ளிக் கல்வித் துறை | 299-377, 387-764 |
| (உ) கோரிக்கை எண் 14 - தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு | 299-377, 387-764 |
| (ஊ) கோரிக்கை எண் 17 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 299-377, 387-764 |

பக்கங்கள்

3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. செ. செம்மலை | 299,313,321-322, 339,350,365 368-369,370 371,372,374-375 396,398,399,400, 401,404-405,407 420,426,429,430 431,435,437,439, 444-445,449,450, 460-489,490 |
| *டாக்டர் பி. வள்ளல் பெருமான் | 365-377 |
| *திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி | 387-394 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 395-409 |
| திரு. ஜி.கே. மணி | 409-421,434-435 478-479 |
| திரு. நா. சந்திரமோகன் | 422-428 |
| திரு. என். நன்மாறன் | 428-438 |
| திரு. வே. கிருஷ்ணமூர்த்தி | 439-445 |
| *திரு. கே.வி. முரளிதரன் | 446-453 |
| *திருமதி சான்ட்ரா டான் க்ாவல் | 453-455 |
| *திரு. லா. சந்தானம் | 455-459 |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 491-492 |

4. விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை—

| | |
|---|---|
| புதிய தலைமைச் செயலக வளாகம் மற்றும் இராணி மேரி கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுதல் | 377-386 |

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 520


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 21, சித்ரபானு – திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 4, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வியால் கிடைக்கும் சிறப்புகள் அந்தப் பிறவிக்கு மட்டுமல்லாமல் எழுகின்ற பல பிறவிகளுக்கும் தொடர்ந்து வரும்.

### 1. வினாக்கள்–விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்***

**பன்னிரண்டாவது பட்டியல்**

1—

**சாலையைச் செப்பனிடல்**

**வினா 17890—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், திருமங்கலம் - பள்ளப்பட்டி சாலையில் பிரிந்த பன்னியான் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2003 ஏப்ரல் 4

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.19.00 இலட்சம் தேவைப்படும். மதுரை மாவட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட பத்தாவது ஐந்தாண்டு பெருந்திட்டம் *(2002-2007)* (Master—Plan)-ல் இப்பணி சேர்க்கப்பட்டுள்ளது.

2—

**சாலை வசதி**

**வினா 17892—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், மதுரை-தேனி, மெயின் ரோட்டில் பிரிந்து வடுகபட்டிக்குச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையின் சரியான பெயர் மதுரை-தேனி சாலையில் கி.மீ. 36/0-ல் பிரிந்து செல்லும் வடுகபட்டி சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 1.80 கி.மீ. ஆகும். இச்சாலையினை மேம்பாடு செய்ய சுமார் ரூ.9.50 இலட்சம் தேவைப்படும். இச்சமயம் இப்பணி அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

3—

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா 17895—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

184530
சென்னை - 600 009
நூலகம்



2003 ஏப்ரல் 4]

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், மதுரை-தேனி சாலையில் பிரிந்து பூதிப்புரம் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை, மதுரை-தேனி சாலையில் கி.மீ. 36/2-ல் பிரிந்து செல்லும் பூதிப்புரம் சாலையாகும். இச்சாலை கி.மீ. 0/0-2/0 நீளம் கொண்ட தார் பாத்தப்பட்ட மாவட்ட இதாச் சாலையாகும். இச்சாலையில் இதா மாவட்டச் சாலைகள் மிகவும் பழுதடைந்த பகுதி மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் (முதற்கட்டப்பணி) கி.மீ.0/0-2/0 வரை ரூ.4.00 இலட்சத்திற்கும், கி.மீ. 1/0-2/0 வரை ரூ.4.50 இலட்சத்திற்கும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

4—

**சிறு சேமிப்பு**

**வினா 26944—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறுசேமிப்புத் துறையின் மூலம் வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

2001-2002ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறுசேமிப்புத் துறையின் மூலம் ரூ.19.03 கோடி நிகர வசூல் செய்யப்பட்டுள்ளது.

5—

## சிறுசேமிப்பு

**வினா 27221—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2001-2002* ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சிறுசேமிப்புத் துறையின் மூலம் வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*2001-2002* ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சிறுசேமிப்புத் துறையின் மூலம் ரூ.81.72 கோடி வசூல் செய்யப்பட்டது.

6—

## அடிப்படை வசதி

**வினா 16252—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, குடவாசல் வட்டம், கூத்தனூர் சரஸ்வதி அம்மன் கோயிலுக்கு போதிய வசதியும், பக்தர்கள் சென்றுவர அடிப்படை வசதியும் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மயிலாடுதுறை தொகுதி, குடவாசல் வட்டம், கூத்தனூர் அருள்மிகு சரஸ்வதி அம்மன் கோயில், ஆம்பல் அருள்மிகு பிரம்மபுரீசுவரர் திருக்கோயிலின் குழுக் கோயிலாகும். இக்கோயில் மயிலாடுதுறை - திருவாரூர் பேருந்து மார்க்கத்தில், பூந்தோட்டம் பேருந்து நிலையத்திலிருந்து ½ கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. சாலை வசதி உள்ளது. புகைவண்டி மார்க்கத்தில் பூந்தோட்டம் இரயில் நிலையத்திலிருந்து 1-½ கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. கோயிலுக்குச் சென்று வருவதற்கு பேருந்து, ஆட்டோ வசதிகள் உள்ளன. எனவே திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே கழிப்பறை வசதி, குளியலறை வசதி ஆகிய போதிய அடிப்படை வசதிகள் ஏற்கெனவே செய்து தரப்பட்டுள்ளன. தங்குமிட ஓய்வு விடுதி உபயதாரர் கலைமகள் திருப்பணி மன்றத்தாரால் கட்டப்பட்டு வருகிறது.



7—

## உண்டியல் வசூல்

**வினா 25607—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்திலுள்ள வேதகிரீஸ்வரர் கோயில் உண்டியல் வசூல் கடந்த 10 ஆண்டுகளில் எவ்வளவு? ஆண்டு வாரியாக அரசு அறிவிக்குமா?

(ஆ) உண்டியல் வசூலின் நிதியிலிருந்து என்ன தேவைகள் ஆலயத்தில் பூர்த்தி செய்யப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்திலுள்ள வேதகிரீஸ்வரர் கோயில் உண்டியல் வசூல், கடந்த 10 ஆண்டுகளில் ரூ.15,58,662/- ஆகும். ஆண்டு வாரியான உண்டியல் திறப்புகளின் மூலம் பெறப்பட்ட வசூல் தொகை விவரம் பின்வருமாறு:

| வ. எண். | வருடம். | உண்டியல் மூலம் பெறப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. பை. |
| 1. | 1992 | 65,208.80 |
| 2. | 1993 | 71,649.15 |
| 3. | 1994 | 1,21,117.95 |

| வ. எண். (1) | வருடம். (2) | உண்டியல் மூலம் பெறப்பட்ட தொகை. (3) |
|---|---|---|
| | | ரூ. பை. |
| 4. | 1995 | 1,18,609.35 |
| 5. | 1996 | 1,44,895.85 |
| 6. | 1997 | 1,86,964.15 |
| 7. | 1998 | 1,66,173.05 |
| 8. | 1999 | 1,98,624.60 |
| 9. | 2000 | 2,10,037.95 |
| 10. | 2001 | 2,75,380.85 |
| | கூடுதல் .. | 15,58,662.00 |

(ஆ) மேற்காணும் திருக்கோயிலில் உண்டியல் திறப்பு மூலம் பெறப்படும் தொகைகள், நிலங்கள், அடிமனை, கட்டடம் ஆகியவைகளின் மூலம் பெறப்படும் வாடகை, கட்டணச் சீட்டுகளின் மூலம் பெறப்படும் வரவு ஆகியவை, திருக்கோயில் பணியாளர்களின் சம்பளம், துறைக்குச் செலுத்த வேண்டிய உதவித் தொகை, தணிக்கைக் கட்டணம், நித்திய பூஜைகள், திருவிழாக்கள் செலவுகள், திருக்கோயில் மராமத்து, செயல் அலுவலர் சம்பளம் மற்றும் மின் கட்டணம் என்றவாறு செலவிடப்படுகிறது.

8—

**திருக்கோயில் வருவாய்**

**வினா 25608—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் முருகன் திருக்கோயிலில் கிருத்திகை தினங்களில் வசூலாகும் தொகை எவ்வளவு?



(ஆ) உண்டியல் வசூல் கடந்த 5 ஆண்டுகளில் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் முருகன் திருக்கோயிலில் மாதந்தோறும் நடைபெறும் கிருத்திகை தின வசூல் தொகை பசலி 1406-ல் ரூ.1,93,454/-ஆக இருந்தது. பசலி 1410-ல் ரூ.3,29,177/-ஆக உயர்ந்துள்ளது.

(ஆ) உண்டியல் வசூல் கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ.54,94,175.60 ஆகும்.

9—

**மாத ஊதியம்**

**வினா 25611—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலையத் துறைக்குச் சாராத கிராமக் கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள், சிப்பந்திகளுக்கு மாத ஊதியம் வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமக் கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள், சிப்பந்திகளுக்கு மாத ஊதியம் வழங்கும் உத்தேசம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[2003 ஏப்ரல் 4

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு ஆணை (நிலை) எண். 326, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 21-5-1999-ல் உத்தாவிடப்பட்டு இந்து சமய அறநிலையத் துறையால் ரூ.17.80 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் அருள்மிகு சுகவனேஸ்வரர் சுவாமி திருக்கோயில் வளாகத்தில் "உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்" கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இம்மையத்தில் சுமார் 600 உலோகத் திருமேனிகளே வைத்து பாதுகாக்கும் வசதி உள்ளது. இம்மையம் 2000-2001 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு 22-3-2001 முதல் செயல்பட்டு வருகிறது.

**13—**

**தங்கி பணியாற்றுதல்**

**வினா 11745—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதியிலுள்ள 8 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அங்கு தங்கி பணியாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோவில்பட்டி சுகாதார மாவட்டம், விளாத்திக்குளம் சட்டமன்றத் தொகுதியில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (1) நாகலாபுரம், (2) பூதலாபுரம், (3) புதூர், (4) பேரிலோவன்பட்டி, (5) குளத்தூர், (6) வேம்பார், (7) எப்போதும் வென்றான், (8) வேப்பலோடை ஆகியன செயல்படுகின்றன. நாகலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 மருத்துவ அலுவலர் குடியிருப்புகளும் 11 பணியாளர் குடியிருப்புகளும் உள்ளன. இவற்றில்



2003 ஏப்ரல் 4]

மருத்துவ அலுவலர் மற்றும் பணியாளர்கள் தங்கி பணிபுரிந்து வருகின்றனர். பேரிலோவன்பட்டி மற்றும் குளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடங்களில் உள்ள பழுதுகளை 2002-2003 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலைய கட்டட பராமரிப்புக்காக ஒதுக்கப்படும் நிதியில் சரிசெய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுதுபார்ப்புப் பணிகள் முடிவடைந்த உடன் மருத்துவ அலுவலர்கள் குடியிருப்புகளில் தங்கி பணிபுரிவார்கள்.

பூதாலபுரம், புதூர், வேம்பார், எப்போதும் வென்றான், வேப்பலோடை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடியிருப்பு கட்டிட வசதிகள் இல்லை. எனவே மேற்குறிப்பிட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அலுவலர்களும் பிற பணியாளர்களும் தலைமையிடத்திலேயே தங்கி பணிபுரிந்து வருகிறார்கள்.

**14—**

**ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

**வினா 16219—திரு. பீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும், கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(ஆ) அதைப் பராமரிக்கும் பொறுப்பு எந்தத் துறையிடம் உள்ளது?

(இ) அதற்காக எவ்வளவு தொகை 2001-2002-ல் ஒதுக்கப்பட்டது? அதில் எவ்வளவு செலவழிக்கப்பட்டது? செலவழிக்கப்பட்ட தொகையில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் பராமரிக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 47 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.

[2003 ஏப்ரல் 4

(ஆ) அரசுக் கட்டடங்களில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் பராமரிப்பு பொதுப் பணித் துறையினரின் பொறுப்பு ஆகும்.

| | | |
|---|---|---|
| (இ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலைய பழுதுகளுக்காக 2001-2002 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (காஞ்சிபுரம் மற்றும் சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம்) | .. ரூ. | 13.90 இலட்சம் |
| செலவிடப்பட்ட தொகையின் விவரம் | .. ரூ. | 12,63,849.00 |
| ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு | .. ரூ. | 5,12,861.00 |
| துணை சுகாதார நிலையங்களுக்கு | .. ரூ. | 7,50,988.00 |
| | ரூ. | **12,63,849.00** |

(இ) செலவழிக்கப்பட்ட தொகையில் பராமரிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மொத்தம் 15 ஆகும்.

**15—**

**பணியிடங்களை நிரந்தரமாக்குதல்**

**வினா 18738—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் துப்புரவு, புறநோயாளி சீட்டு எழுதுபவர் மற்றும் இரவுப் பாதுகாவலர் பணியிடங்களை நிரந்தாமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஏப்ரல் 4]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர், புறநோயாளி சீட்டு எழுதுபவர், இரவுப் பாதுகாவலர் ஆகிய பணியிடங்கள் நிரந்தரமானதாகும். புறநோயாளி சீட்டு எழுதுபவர், இரவுப் பாதுகாவலர் என தனியாக பணியிடங்கள் கிடையாது. மேற்குறிப்பிட்டுள்ள இரு பணியிடங்களிலும் மருத்துவமனைப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

**16—**

**சிகிச்சை**

**வினா 19712—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டத் தலைநகரான எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் சரியான சிகிச்சை மேற்கொள்ளப்படாமல் இருப்பதையும் நிர்வாகச் சீர்கேடு இருப்பதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் பொது மக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சரியான சிகிச்சை அளிக்கப்படவில்லை என்ற புகார் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. எந்தவிதமான நிர்வாகச் சீர்கேடுகளும் இம்மருத்துவமனையில் இல்லை.

[2003 ஏப்ரல் 4

17—

## சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 24517—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கானஞ்சாவடியில் சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கானஞ்சாவடி கிராமத்தின் மக்கள் தொகை 265 ஆகும். இக்கிராமம் கீழ்மாம்பட்டு துணை சுகாதார நிலையத்தினையும் மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. இக்கிராமத்திற்கு 5 கி.மீ. தொலைவில் காடாம்புலியூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால் கானஞ்சாவடி கிராமத்திற்கும், காடாம்புலியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோமீட்டர் மட்டுமே உள்ளதாலும் தமிழக மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1411 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், கானஞ்சாவடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

## பணியிடங்கள்

**வினா 24900—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 4]

(அ) எடப்பாடி தொகுதி, சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலியாக உள்ள பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அவற்றை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி தொகுதி, சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் 39 ஆகும். இவற்றில் தற்சமயம் ஓட்டுநர் பணியிடம் ஒன்று 15-11-1999 முதலும் ஆய்வக உதவியாளர் பணியிடம் ஒன்று 1-8-1998 முதலும் கிராம சுகாதார செவிலியர் பணியிடம் ஒன்று 1-8-2002 முதலும் காலியாக உள்ளது. தற்போது நுழைவு நிலை பணியிடங்களை நிரப்ப அரசு தடை விதித்துள்ளதால் இப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. அரசு இத்தடையை விலக்கியதும் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19—

## தேசிய மாணவர் படை

**வினா 25616—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய மாணவர் படை உள்ள பள்ளிகள் எத்தனை?

(ஆ) மாணவர் படையற்ற பள்ளிகளில் தேசிய மாணவர் படை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30 பள்ளிகளில் தேசிய மாணவர் படை உள்ளது.

[2003 ஏப்ரல் 4

(ஆ) தேசிய மாணவர் படை இல்லாத பள்ளிகளிலிருந்து தங்கள் பள்ளிகளில் தேசிய மாணவர் படைப் பிரிவு அமைக்கக் கோரி பெறப்பட்டும் விண்ணப்பங்கள் காத்திருப்போர் பட்டியலில் வரிசையாக வைக்கப்பட்டு தேசிய மாணவர் படைக்குக் கூடுதல் மாணவர் ஒதுக்கீட்டினையும் நிதி ஒதுக்கீட்டினையும் பொறுத்து பரிசீலிக்கப்படுகிறது.

**20—**

**மருத்துவ பரிசோதனை**

**வினா 27546—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"வரும்முன் காப்போம்" திட்டத்தின்கீழ் ஏழை எளிய மக்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டு எத்தனை பேருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

"வரும்முன் காப்போம்" திட்டம் தமிழகத்தில் 31-3-2001 ஆம் நிதியாண்டுடன் முடிவடைந்துவிட்டது. தற்பொழுது இத்திட்டம் செயல்பாட்டில் இல்லை.

**21—**

**தரம் உயர்த்துதல்**

**வினா 27859—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் எத்தனை தரம் உயர்த்தி அரசு மருத்துவமனையாக்கப்பட்டது?



2003 ஏப்ரல் 4]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் 21 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது. இதில் பிரதம மந்திரியின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் (PMGY) 20 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 2001-2002 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் ஆக 21 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**22—**

**குடியிருப்புகள்**

**வினா 27860—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர் குடியிருப்புகள் எத்தனை கட்ட அரசு எண்ணியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் உள்ள 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 23 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடங்கள் உள்ளன. 2002-2003 ஆம் நிதியாண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

[2003 ஏப்ரல் 4

23—

**சுற்றுச்சுவர்**

**வினா 28051—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஒட்டம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே செஞ்சி தொகுதி, ஒட்டம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

24—

**சுற்றுச்சுவர்**

**வினா 28171—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 56 வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலைய சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும (ஆ): தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.



2003 ஏப்ரல் 4] எனவே சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

25—

**மருத்துவமனை**

**வினா 28543—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மருதமுத்தூர் கிராமப் பஞ்சாயத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுவது மருதம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையமாகும். திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் முக்கூடல் ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்தப்பட அரசாணை எண் 106, சுகாதாரம், நாள் 7-6-2002-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 படுக்கைகள் கொண்ட ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கை ஆகும். பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், அதே ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மருதம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

[2003 ஏப்ரல் 4

26—

### இலவச சலவைப் பெட்டி

**வினா 22663—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டாம்பள்ளி தொகுதி, சின்ன கத்திலி ஊராட்சியில் வசித்துவரும் வண்ணார் சமுதாயத்தினருக்கு இலவச சலவைப் பெட்டி, சலவை தள்ளுவண்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாட்டாம்பள்ளி தொகுதி, சின்ன கத்திலி ஊராட்சியைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர்களிடமிருந்து சலவைப் பெட்டி மற்றும் சலவை தள்ளுவண்டி கோரி மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) எழாது.

27—

### அடிப்பம்பு, தொட்டி அமைத்தல்

**வினா 25482—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் வாழும் சலவைத் தொழிலாளர்களுக்கு அடிப்பம்பும் தொட்டியும் அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஏப்ரல் 4]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் வாழும் சலவைத் தொழிலாளர்களுக்கு அடிப்பம்பும், தொட்டியும் அமைத்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

28—

### பயனாளிகள் விவரம்

**வினா 30606—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முடிதிருத்தும் கருவிகள் வழங்கும் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

முடிதிருத்தும் கருவிகள் வழங்கும் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் 145 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

29—

### திட்டங்கள்

**வினா 25158—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் நிறைவேற்றப்பட இருக்கின்ற பணிகளின் முழு விவரம் என்ன?

[2003 ஏப்ரல் 4

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் நிறைவேற்றப்பட இருக்கின்ற பணிகளின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு**

1. நெல் மற்றும் சிறுதானிய சான்று விதைகள் 612 மெ. டன் ரூ.9.64 இலட்சம் செலவிலும் பயறு வகை விதைகள் 41 மெ. டன் ரூ.2.218 இலட்சம் செலவிலும் எண்ணெய் வித்துக்கள் 340 மெ. டன் ரூ.11.404 இலட்சம் செலவிலும் காய்கறி விதைகள் 700 கிலோ ரூ.3.42 இலட்சம் செலவிலும் கொள்முதல் செய்து விநியோகிக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. பசுந்தாள் உர விதைகள் 10 மெ. டன் அளவிற்கு 25 சதம் மானியத்தில் வழங்கப்படவுள்ளது. மேலும் 10 மெ. டன் நீலப்பச்சைபாசி ரூ.4,100 செலவில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது.

3. ரூ. 0.867 இலட்சம் செலவில் நெட்டை மற்றும் நெட்டைக்குட்டை தென்னை நெற்றுகள் கொள்முதல் செய்து, தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து 22500 நெட்டை இரக மற்றும் 10000 நெட்டைக்குட்டை இரக தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

4. பண்ணை மகளிருக்கு பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பதற்கென ரூ.1.10 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5. உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் கிராம அளவிலான ஆடவர், மகளிர் பயிற்சி மற்றும் உழவர் விவாதக் குழு அமைப்பாளர் பயிற்சிகள் 42 எண்களும், 154 செயல் விளக்கங்களும் ரூ. 0.471 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தி முதல் மற்றும் இரண்டாவது பரிசுகள் 30 எண்கள்



2003 ஏப்ரல் 4]

வழங்கிட ரூ.30000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அளவிலான போட்டிகளுக்கு 10 போட்டியாளர்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

7. 8800 மண் மாதிரிகள் எடுத்து ஆய்வுக்கு அனுப்பவும் 588 உர மாதிரிகள் மற்றும் 670 பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆய்வு செய்யவும் திட்டமிடப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

8. நடப்பு ஆண்டில் 13124 மெ. டன் தழைச்சத்து, 5520 மெ. டன் மணிச்சத்து மற்றும் 5225 மெ. டன் சாம்பல் சத்து உரங்களை தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விநியோகிக்க திட்டமிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

9. இயற்கை முறை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் 1,40,000 அசோஸ்பைரில்லம் பொட்டலங்கள், 40,000 ரைசோபியம் பொட்டலங்கள், 50,000 பாஸ்போ பாக்டீரியா பொட்டலங்கள், 20 டன் அசோலா மற்றும் நுண்சத்து குறைபாட்டை தடுக்க 30 டன் நுண் சத்து விநியோகம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

10. ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்திற்கென ரூ.46.09 இலட்சம் செலவில் நெல் மற்றும் சிறுதானிய விதை விநியோகம், செயல்விளக்கம், பயிற்சி, வேளாண்மைக் கருவிகள், பவர் டில்லர்கள், டிராக்டர்கள், நுண்சத்து ஜிப்சம் மற்றும் உயிர் உரப் பொட்டலங்கள் ஆகியவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

11. தேசிய நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.15.683 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

12. தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம் ரூ.3.34 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு விதை கொள்முதல், விநியோகம், செயல்விளக்கம், பயிற்சி, கருவிகள் விநியோகம், நுண்சத்து ஜிப்சம் உள்ளிட்ட இடுபொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

13. தீவிர பருத்தி பெருக்கத் திட்டத்தின்கீழ் விதை விநியோகம், செயல்விளக்கம், பயிற்சிக் கருவிகள், உயிரியல் காரணிகள் போன்ற இனங்களுக்காக ரூ.2.735 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

14. எண்ணெய்வித்து பெருக்கத் திட்டம் ரூ.13.403 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விதை கொள்முதல், உற்பத்தி, விநியோகம், பயிற்சி, திருபணங்கள், கருவிகள் நுண்சத்து மற்றும் ஜிப்சம் போன்ற இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

30—

## பணிகள்

**வினா 25159—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளின் விவரம் என்ன?

(ஆ) பயன்பெற்ற விவசாயிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளின் விவரமும், பயன்பெற்ற விவசாயிகளின் விவரமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு

1. ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நெல் மற்றும் சிறுதானிய விதைகள் விநியோகம், பயிற்சி, செயல்விளக்கங்கள், கருவிகள், நுண்சத்து விநியோகம் ஆகிய இனங்களுக்காக கடந்த ஆண்டு நிலுவைத் திட்டத்தையும் சேர்த்து ரூ.32.254 இலட்சம் செலவிடப்பட்டு 18997 விவசாயிகள் பயனடைந்தனர்.





2. தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம் ரூ.2.556 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. விதை கொள்முதல் விநியோகம் செயல்விளக்கம், பயிற்சிக் கருவிகள் விநியோகம், நுண்சத்து மற்றும் ஜிப்சம் விநியோகம் ஆகிய இனங்களை செயல்படுத்தியதன் மூலம் 3906 விவசாயிகள் பயன்பெற்றனர்.

3. தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் விதை விநியோகம், பயிற்சி செயல்விளக்கம், கருவிகள் விநியோகம் போன்ற இனங்கள் ரூ.2.824 இலட்சம் செலவில் மேற்கொளளபபட்டு 475 விவசாயிகள் பயனடைந்தனர்.

4. எண்ணெய் வித்துக்கள் பெருக்கத் திட்டத்தில் ரூ.12.937 இலட்சம் செலவிடப்பட்டது. 9561 விவசாயிகள் பயன்பெற்றனர். விதை உற்பத்தி, விநியோகம், கருவிகள், செயல்விளக்கம், பயிற்சி நுண்சத்து மற்றும் ஜிப்சம் போன்ற இனங்களில் தொகை செலவிடப்பட்டது.

5. விதை கொள்முதல் திட்டத்தின்கீழ் நெல், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்களின் விதைகள் கொள்முதல் ரூ.128.571 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு 407 விவசாயிகள் பயனடைந்தனர்.

6. மினிகிட் விநியோக திட்டத்தின்கீழ் ரூ.1.234 இலட்சம் செலவிடப்பட்டு நெல் மற்றும் சிறுதானிய சிறுதளைகள் 3512 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

7. ஜிங்சல்பேட் 25 சதம் மானியத்தில் 1250 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

8. பகுதி-2 திட்டத்தின்கீழ் வீரிய ஒட்டு நெல் செயல்விளக்கமும் பயறு வகை வயல் வெளிப்பள்ளியும் 50 விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு ரூ.0.694 இலட்சம் செலவிடப்பட்டது.

9. நெட்டை மற்றும் நெட்டைக்குட்டை தென்னை நெற்றுகள் கொள்முதல் மற்றும் தென்னங்கன்றுகள் உற்பத்திக்கு ரூ.5.584 இலட்சம் செலவிடப்பட்டு 975 விவசாயிகள் பயன்பெற்றனர்.

[2003 ஏப்ரல் 4

10. இயற்கை முறை விவசாய உத்திகளான நீலப்பச்சைப் பாசி உற்பத்தி மற்றும் விநியோகம், பசுந்தாள் உர உற்பத்தி மற்றும் விநியோகம், அசோலா உற்பத்தி மற்றும் விநியோகம், அசோஸ்பைரில்லம் பொட்டல விநியோகம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா விநியோகம், நுண்சத்து விநியோகம் ஆகியவற்றுக்கு ரூ.1.266 இலட்சம் செலவிடப்பட்டு 35,531 விவசாயிகள் பயடைந்தவர்.

11. உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்கள் ரூ.0.171 இலட்சம் செலவில் மேற்கொண்டு 3,165 விவசாயிகள் பயன்பெற்றனர்.

12. தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகளுக்கென ரூ.3.571 இலட்சம் செலவிடப்பட்டு 2,122 விவசாய மகளிர் பயன்பெற்றுள்ளனர்.

13. தேசிய நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.18.103 இலட்சம் செலவில் திட்டப் பணிகள் செயலாக்கப்பட்டு 3,651 விவசாயிகள் பயன்பெற்றனர்.

14. மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தி 6 விவசாயிகளுக்குப் பரிசுகள் வழங்கியதில் ரூ.0.305 இலட்சம் செலவிடப்பட்டது.

**31—**

## ஆராய்ச்சிப் பண்ணைகள்

**வினா 26241—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பண்ணைகள் தமிழ்நாட்டில் எங்கெங்கு செயல்பட்டு வருகின்றன?

(ஆ) மேலும் இவற்றில் நல்லமுறையில் செயல்பட்டு வருபவை எவை?



2003 ஏப்ரல் 4]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இதற்கான விடை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கி வரும் அனைத்து ஆராய்ச்சிப் பண்ணைகளிலும், அனைத்து ஆராய்ச்சிகளிலும் உலகம் போற்றும் அளவிற்கு தலைசிறந்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

## இணைப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கீழ்க்கண்ட 7 வளாகங்களில் செயல்பட்டு வரும் 10 கல்லூரிகளிலும் மற்றும் 31 ஆராய்ச்சி நிலையங்களிலும் வேளாண் சம்பந்தப்பட்ட அனைத்து ஆராய்ச்சிகளும் செவ்வனே நடைபெற்று வருகின்றன:

(1) **கோவை:**

1. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.
2. தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.
3. வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

(2) **மதுரை:**

4. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.
5. மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

(3) **கிள்ளிகுளம் (தூத்துக்குடி மாவட்டம்):**

6. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

(4) **பெரியகுளம் (தேனி மாவட்டம்):**

7. தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

[2003 ஏப்ரல் 4

**(5) நாவலூர் குட்டப்பட்டு (திருச்சி மாவட்டம்):**

8. அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

**(6) குமுளூர் (திருச்சி மாவட்டம்):**

9. வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

**(7) மேட்டுப்பாளையம் (கோவை மாவட்டம்):**

10. வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் 31 ஆராய்ச்சி நிலையங்கள் பின்வருமாறு:**

1. தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை, தஞ்சை மாவட்டம்.

2. நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்.

3. நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர், திருவள்ளூர் மாவட்டம்.

4. நெல் ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம், கன்னியாகுமரி மாவட்டம்.

5. நெல் ஆராய்ச்சி நிலையம், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

6. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை, தேனி மாவட்டம்.

7. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்.

8. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி, சிவகங்கை மாவட்டம்.

9. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை, தஞ்சை மாவட்டம்.

10. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், இராமநாதபுரம்.



2003 ஏப்ரல் 4]

11. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விருஞ்சிபுரம், வேலூர் மாவட்டம்.

12. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

13. மண்டல ஆராய்ச்சி நிலையம், கோலாங்குளம், விருதுநகர் மாவட்டம்.

14. மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர், தருமபுரி மாவட்டம்.

15. மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

16. கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்.

17. கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர், வேலூர் மாவட்டம்.

18. கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி, திருச்சி மாவட்டம்.

19. தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம், தஞ்சை மாவட்டம்.

20. தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் நகர், கோவை மாவட்டம்.

21. பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

22. தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், வம்பன், புதுக்கோட்டை மாவட்டம்.

23. எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்.

24. மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர், சேலம் மாவட்டம்.

25. மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர்.

26. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம்.

[2003 ஏப்ரல் 4

27. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை, திண்டுக்கல் மாவட்டம்.

28. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஊட்டி, நீலகிரி மாவட்டம்.

29. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு, சேலம் மாவட்டம்.

30. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.

31. காய்கறிகள் ஆராய்ச்சி நிலையம், பாலூர், கடலூர் மாவட்டம்.

**32—**

### தொட்டில் குழந்தைகள்

**வினா 12457—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001ஆம் ஆண்டு தமிழக அரசின் தொட்டில் குழந்தைத் திட்டத்தினால் சேலம் மாவட்டத்தில் வாழ்வு பெற்ற குழந்தைகள் எத்தனை?

(ஆ) அவர்களைப் பாராமரிக்க அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001ஆம் ஆண்டு தமிழக அரசின் தொட்டில் குழந்தைத் திட்டத்தினால் சேலம் மாவட்டத்தில் வாழ்வு பெற்ற குழந்தைகள் 51.

(ஆ) இவர்களைப் பாராமரிக்க அரசால் செலவு ஏதும் செய்யப்படவில்லை. அக்குழந்தைகளைப் பாராமரிக்க ஏற்கெனவே சேலம் தொட்டில் குழந்தைத் திட்டத்திற்கு நன்கொடையாகப் பெற்ற தொகையிலிருந்து செலவிடப்பட்டது.



2003 ஏப்ரல் 4]

**33—**

### முதியோர் இல்லம்

**வினா 14752—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடியில் முதியோர் இல்லம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடியில் முதியோர் இல்லம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. சேலம் மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் எவையேனும் முதியோர் இல்லம் நடத்தி மானியம் வேண்டி விண்ணப்பித்தால் அதுகுறித்து ஆராய்ந்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும். இதுவரை எந்த நிறுவனமும் முதியோர் இல்லம் நடத்த முன்வந்ததாக அறிக்கைகள் ஏதும் அரசால் பெறப்படவில்லை.

**34—**

### முதியோர் இல்லம்

**வினா 14758—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் முதியோர் இல்லம் அமைக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சங்ககிரி தொகுதியில் முதியோர் இல்லம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. சேலம் மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு

நிறுவனம் எவையேனும் முதியோர் இல்லம் நடத்தி மானியம் வேண்டி விண்ணப்பித்தால் அதுகுறித்து ஆராய்ந்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும். இதுவரை எந்த நிறுவனமும் முதியோர் இல்லம் நடத்த முன்வந்ததாக அறிக்கைகள் ஏதும் அரசால் பெறப்படவில்லை.

**35—**

## குழந்தைகள் பராமரிப்பு

**வினா 16594—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் இதுவரை எத்தனை குழந்தைகளை அரசு பராமரித்து வருகிறது?

(ஆ) மாவட்ட வாரியாக எத்தனை தொட்டில் குழந்தைகள் உள்ளனர்.

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 30-9-2002 வரை 478 குழந்தைகள் தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் பராமரிப்புச் செய்யப்பட்டு வரப்படுகின்றனர்.

(ஆ) தொட்டில் குழந்தைகள் திட்டம் அரசு ஆணை எண் 158, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 21-10-2001-ன்படி மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பெண் சிசுவதையைக் குறைக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. இதற்கு முன்னரே 1992-ல் சேலம் மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, சீரிய முறையில் இயங்கி வருகிறது. சேலம், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் வரப்பெற்ற தொட்டில் குழந்தை விவரம் பின்வருமாறு:—



| | | |
|---|---|---|
| சேலம் | .. | 303 |
| மதுரை | .. | 57 |
| திண்டுக்கல் | .. | — |
| தேனி | .. | 7 |
| தருமபுரி | .. | 80 |
| இம்மாவட்டங்கள் தவிர தொட்டில் குழந்தைகள் அல்லாமல் கைவிடப்பட்ட குழந்தைகள் இதர மாவட்டங்களில் பெறப்பட்டு உரிய தத்து நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட குழந்தைகள். | .. | 3 |
| மொத்தம் | .. | 478 |

**36—**

## தையல் இயந்திரம்

**வினா 20323—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 2001-2002-ல் தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசால் தையல் இயந்திரம் வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை நபர்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2001-2002-ஆம் ஆண்டில் 649 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

[2003 ஏப்ரல் 4

37—

## இலவச மின்சாரம்

**வினா 12185—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001ஆம் ஆண்டு எடப்பாடி தொகுதியில் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வேண்டி எத்தனை பேர் பணம் செலுத்தி இலவச மின்சாரம் பெற விண்ணப்பம் அளித்துள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

2000-2001ஆம் ஆண்டு எடப்பாடி தொகுதி முழுவதிலுமாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வேண்டி விண்ணப்பம் அளித்துள்ளவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| சேலம் மின் பகிர்மான வட்டம் | .. 6 எண்ணிக்கை |
| மேட்டூர் மின் பகிர்மான வட்டம் | .. 231 எண்ணிக்கை |
| **மொத்தம்** | .. **237 எண்ணிக்கை** |

இவர்கள் விண்ணப்பம் பதிவுக் கட்டணம் ரூ.50/- செலுத்தி மனு செய்துள்ளார்கள். இவ்விண்ணப்பதாரர்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் வரிசைக்கிரமமாக மின் இணைப்பு வழங்கப்படும்.

38—

## ஆய்வுக் குழுக் கூட்டம்

**வினா 16448—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டங்களில் அனைத்து வங்கிகளும் பங்கு கொள்ளும் டி.எல்.ஆர்.சி. கூட்டத்தை நடத்துவதால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை என்பதை அரசு அறியுமா?



2003 ஏப்ரல் 4]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

நலிவுற்ற பிரிவினருக்கான மத்திய, மாநில அரசுகள் அறிவிக்கும் கடன் திட்டங்கள் வங்கிகளின் ஆண்டுக் கடன் திட்டம் மற்றும் வங்கியின் செயல்பாடுகள் ஆகியவற்றின் செயலாக்கம் குறித்து காலாண்டுக்கு ஒரு முறை மாவட்டங்களில் நடத்தப்படும் மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக் கூட்டம் அரசுக்கும், வங்கிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாகும்.

39—

## கடன் வழங்குதல்

**வினா 25539—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் கிராம மக்களுக்கு 50 சதவீத மானியத்துடன் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் கிராம மக்களுக்கு 50 சதவீத மானியத்துடன் கடன் வழங்கும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

40—

## கைவினைப் பொருட்கள் கண்காட்சி

**வினா 26796—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 4

(அ) தருமபுரியில் மாவட்ட அளவில் வருடந்தோறும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கைவினைப் பொருட்களின் விற்பனை தருமபுரியில் மிகக் குறைவாக இருப்பதாலும், இலாபம் ஈட்டுவதற்கு வாய்ப்புகள் இல்லாமையினாலும் வருடந்தோறும் கண்காட்சி நடத்த இயலவில்லை.

(ஆ) எழவில்லை.

**41—**

### கழிவு நீர்

**வினா 20314—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வரிசி தொழிற்சாலையின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் பி.ஓ.டி. தா அலகு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) விவசாய நீர்ப்பாசனத்திற்கு பி.ஓ.டி. தா அலகு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜவ்வரிசி தொழிற்சாலைகள் மட்டுமல்லாது அனைத்துத் தொழிற்சாலைகளுக்கும் பொதுவாக, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் பி.ஓ.டி. தா அலகு வெளியேற்றப்படும் இடத்தினைப் பொறுத்து கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—



2003 ஏப்ரல் 4]

| வ.எண் | கழிவுநீர் வெளியேற்றப்படும் இடம் | தா அலகு |
|---|---|---|
| 1. | நீர் நிலைகள் | 30 |
| 2. | பொதுக்கழிவுநீர் வடிகால்கள் | 350 |
| 3. | விவசாயத்திற்கான நிலங்களில் | 100 |
| 4. | கடல் | 100 |

**42—**

### காடுகளைப் பாதுகாத்தல்

**வினா 25566—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள காடுகளை அழிவிலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) காப்பு வனங்களில் மரங்கள் வெட்டப்படுவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக தொழில் நுட்பக் கருத்துகளின்படி நிழல் தரும் மரங்கள் மற்றும் விறகு மரங்கள் தனியார் தோட்டங்களில் அவர்களால் நடவு செய்யப்பட்டு வரும் மர இனங்களை மட்டுமே வெட்டிக்கொள்ள மாவட்ட வனக்குழுவால் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றது. தற்போது நடைமுறையிலுள்ள வனச்சட்டம் மலைத்தள (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் மற்றும் தனியார் வனப்பாதுகாப்புச் சட்டங்களின்படி வால்பாறையிலுள்ள காடுகளை அழிவிலிருந்து காப்பாற்ற வன அலுவலர்கள் மூலமாகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) வனச் சட்டம் மற்றும் வனப் பாதுகாப்புச் சட்டங்களின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் இவ்வினா எழவில்லை.

43—

**திருட்டு வழக்குகள்**

**வினா 29879—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் சந்தன மாம் மற்றும் பலவகைப்பட்ட மாரங்கள் குறித்த திருட்டு வழக்குகள் 2001-2002 ஆம் ஆண்டு வரை பதிவான வழக்குகள் எத்தனை?

(ஆ) இதில் முடிவடைந்த வழக்குகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டு வரை சந்தன மாம் மற்றும் பலவகைப்பட்ட மாரங்கள் திருட்டு வெட்டு குறித்து பதிவான வழக்குகளின் எண்ணிக்கை.. 6,919

(ஆ) இதில் முடிவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை .. 5,907

44—

**கண்காணிப்புக் குழு**

**வினா 20733—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு பால் உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்து வழங்கப்படும் பாலின் அளவு, எடை, தாம் ஆகியவை





நிர்ணயம் செய்வதில் உள்ள குறைபாடுகளைப் போக்க பால் உற்பத்தியாளர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

பால் உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்து சேகரிக்கப்படும் பால், பால் பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பாலின் தாம் மற்றும் எடை துல்லியமாக கணக்கிடப்படுகிறது. மேலும் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பண்ணை ஆகியவற்றை பால் உற்பத்தியாளர்கள் பார்வையிடவும் அனுமதிக்கப்படுகின்றனர். எனவே பால் உற்பத்தியாளர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்க செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

45—

**வருமானம்**

**வினா 30480—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரிலுள்ள அரசினர் சிறுவர் பூங்காவின் மூலம் எவ்வளவு வருமானம் அரசுக்குக் கிடைத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் இருந்த சிறுவர் பூங்கா 2001-2002 ஆம் ஆண்டில், தனியாரிடம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. குத்தகைத் தொகையாக, அவ்வாண்டில் ரூ.20.00 இலட்சம் அரசுக்கு வருவாயாகக் கிடைத்தது.

46—

**முன்பணத்தை உயர்த்துதல்**

**வினா 13561—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முன் பணத்தை பத்து மடங்காக அதிகரித்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முன் பணத்தை பத்து மடங்காக உயர்த்தி வழங்க வாய்ப்பு ஏதும் இல்லை.

47—

**புதிய திட்டம்**

**வினா 14747—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மற்றும் எடப்பாடியில் நெசவாளர்களின் வேலையின்மையைப் போக்க அரசு புதிய திட்டம் தீட்டியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மற்றும் எடப்பாடி பகுதியிலுள்ள அனைத்துச் சங்கங்களையும் பழைய இரக உற்பத்திக்குப் பதிலாக மாற்று இரக உற்பத்தியாக எளிதில் விற்பனை செய்யக்கூடிய இரகங்களையும் மற்றும் நுகர்வோர்



அதிகம் விரும்பும் புதிய இரகங்களையும், ஏற்றுமதி இரகங்களையும் உற்பத்தி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ள காரணத்தால், இப்பகுதியில் உள்ள நெசவாளர்களுக்கு வேலையின்மை என்ற பிரச்சினை ஏதும் இல்லை.

48—

**முன்னுரிமை**

**வினா 24335—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலுள்ள கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தில் சேர்க்கையின்போது சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நெசவாளர் குடும்பக் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் பயனடைந்துள்ளார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தில் மாணவர் சேர்க்கையின்போது சேலம் மாவட்டம் உட்பட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் 10-வது வகுப்பில் பெற்றுள்ள மதிப்பெண் மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையிலேயே தேர்வு செய்யப்படுகின்றனர். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நெசவாளர் குடும்பக் குழந்தைகளுக்கென்று தனியாக எவ்வித முன்னுரிமையும் வழங்கப்படுவதில்லை.

49—

**மகளிர் கூட்டுறவுச் சங்கம்**

**வினா 24338—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 4

(அ) சேலம் மாநகரத்தில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) இவற்றில் மகளிருக்கெனத் தனியாக அமைக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரத்தில் ஒரு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் உள்ளது.

(ஆ) இங்கு மகளிருக்கான தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எதுவும் இல்லை.

**50—**

### சுற்றுலா மையங்கள்

**வினா 28469—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சுற்றுலா மையங்கள் அமைக்க எத்தகைய அளவுகோல் பயன்படுத்தப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

பொதுவாக அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத்தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத்தலங்களில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை இத்துறை செய்து வருகிறது. ஒவ்வொரு சுற்றுலாத்தலத்திலும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் நிதி ஆதாரம் முதலியவற்றை மனதிற்கொண்டு அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. அதனால் சுற்றுலா மையங்கள் அமைப்பது குறித்து அளவுகோல் ஏதும் அமைக்கப்படவில்லை.



2003 ஏப்ரல் 4]

## பதிமூன்றாவது பட்டியல்

**1—**

### சாலையைச் செப்பனிடல்

**வினா 17877—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், திடியன் நாட்டாமங்கலம் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் மாவட்ட இதரச் சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் திடியன் நாட்டாமங்கலம் சாலை (கி.மீ.0/0-4/4) ஆகும். இச்சாலையில் கி.மீ. 0/0-1/0 வரை இதர மாவட்டச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் பகுதி-1-லும், கி.மீ. 1/0-3/0 வரை, பகுதி-2-லும் சீர் செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 3/0-4/4 வரை மாவட்ட இதரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் பகுதி-3-ல் ரூ. 6 இலட்சம் மதிப்பில் சீர் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**2—**

### தமிழ் மொழிப் பாடம்

**வினா 27157—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டக் கல்லூரிகளில் முதலாமாண்டு தமிழ் மொழிப் பாடத்தை அமல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**3—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா 15761—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பத்தமடையில் ஏற்கெனவே ஒரு மேம்படுத்தப்பட்ட (Upgraded) ஆரம்ப சுகாதார நிலையம் பேரூராட்சிப் பகுதியில் செயல்படுகிறது. சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,15,812 (1991 கணக்கெடுப்பு) ஆகும். இந்த ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் (1) பத்தமடை, (2) காசல்பட்டி, (3) வீரவநல்லூர், (4) கல்லிடைக்குறிச்சி ஆகியன செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு தற்போதுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்தில் மேலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.



**4—**

**சிகிச்சை**

**வினா 27581—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா புற்று நோய் மருத்துவமனையில் ஆண்டொன்றுக்கு சிகிச்சை பெறும் நோயாளிகள் எண்ணிக்கை எவ்வளவு என அரசு அறிவிக்குமா?

(ஆ) புதிய சிகிச்சை முறை ஏதாவது இந்த ஆண்டு அறிவிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம் மற்றும் மருத்துவமனையில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 4,100 உள்நோயாளிகளும், 22,000 புற நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

(ஆ) ஏற்கெனவே அளிக்கப்பட்டு வரும் அறுவைச் சிகிச்சை, ரேடியோதெரபி, கீமோதெரபி தவிர புதிய சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**5—**

**சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 28137—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சியில் சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?

[2003 ஏப்ரல் 4

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், மாதானம் கிராம மக்கள் தொகை 2144 ஆகும். இக்கிராமம் அகரவட்டாரம் துணை சுகாதார நிலையத்தினையும், கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) நல்லூர், (2) குன்னம், (3) கொள்ளிடம், (4) திருமுல்லைவாசல் ஆகியன செயல்படுகின்றன. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,18,268 (1991 கணக்கெடுப்பு) ஆகும். மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் மாதானம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

6—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 28210—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியத்தில் உள்ள வள்ளுவக்குடி ஊராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**



2003 ஏப்ரல் 4]

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அதில் பல ஊராட்சி ஒன்றியங்களில் மேம்படுத்தப்பட்ட மருத்துவ சிகிச்சைகள், மாவட்ட மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், சமுதாய சுகாதார நிலையம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்புடைய ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக படிப்படியாக தரம் உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியத்தில் சீர்காழி வட்ட மருத்துவமனை மற்றும் அதே ஒன்றியத்தைச் சார்ந்த வைத்தீஸ்வரன் கோயில் பகுதியில் வட்டம் சாரா மருத்துவமனை செயல்படுவதால் சீர்காழி ஒன்றியத்திலுள்ள வள்ளுவக்குடியில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

7—

### மலேரியாக் காய்ச்சல்

**வினா 29876—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் மலேரியா காய்ச்சலால் இறந்தவர்கள் எவ்வளவு பேர் என்று கண்டறியப்பட்டுள்ளதா?

(ஆ) மலேரியாக் காய்ச்சலை ஒழிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மலேரியா நோயால் இறந்தவர்கள் எவரும் இல்லை. மலேரியா காய்ச்சல் பொது சுகாதாரத் துறையின் முயற்சியால் வெகுவாகக் குறைந்துள்ளது. 1991-ல் மலேரியா நோய் கண்டவர்களின் எண்ணிக்கை 1,44,762 ஆக இருந்தது. 2001-ல் 31,551 ஆகக் குறைந்துள்ளது. மலேரியா நோய் வராமல்

[2003 ஏப்ரல் 4

தடுக்க அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும் காய்ச்சல் கண்ட நோயாளிகளுக்கு இரத்தப் பரிசோதனை செய்து அவர்களுக்கு மலேரியா நோய் இருப்பின் பூரண சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் பொதுச் சுகாதாரப் பணியாளர்களும் கிராமந்தோறும் வீடு வீடாகச் சென்று காய்ச்சல் உள்ளவர்களைக் கண்டறிந்து இரத்தப் பரிசோதனை செய்து மலேரியாவாக இருந்தால் சிகிச்சை அளிக்கப்பட்டு மலேரியா நோய் பாவாமல் தடுக்கப்படுகிறது.

8—

**மாணவர் விடுதி**

**வினா 7730—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி மிகவும் பழுதடைந்துள்ளதை சரி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதிக்கு ரூ. 70,000 செலவில் கழிவுநீர் வசதி மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. இதைத்தவிர வேறு பழுதுபார்க்க வேண்டிய இனங்கள் குறித்த தகவல் ஏதுமில்லை.

9—

**மாணவ/மாணவியர் விடுதி**

**வினா 21660—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 4]

2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்கள் விடுதி எத்தனை புதிதாக உருவாக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியர் விடுதிகள் ஏதும் புதிதாகத் துவங்கப்படவில்லை.

10—

**சம்பள உயர்வு**

**வினா 29445—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் பணியாற்றும் சமையலர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் பணியாற்றும் சமையலர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

11—

**தொழிற் பயிற்சி**

**வினா 12899—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்குட்பட்டுள்ள பல தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் பயன்பெற மாலை நேரங்களில் தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2003 ஏப்ரல் 4

(ஆ) ஆம் எனில், என்னென்ன தொழிற் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

12—

### பயிற்சி நிலையம்

**வினா 13244—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மின் பற்றவைப்பு பயிற்சி நிலையம் தொடங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



2003 ஏப்ரல் 4]

13—

### பயிற்சி மையம்

**வினா 24321—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான பயிற்சிகளை அளிக்க சேலம் மாநகரத்தில் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படவுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரத்தில் ஏற்கெனவே மொத்தம் 992 இருக்கைகள் கொண்ட இரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 10 தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருகின்றன. எனவே சேலம் மாநகரத்தில் மேற்கொண்டு அரசு தொழிற்பயிற்சி மையம் துவங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

14—

### எடை அளவுக் கருவிகள்

**வினா 24851—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் முத்திரையிடப்படாத எடை அளவுக் கருவிகள் பயன்படுத்தியதாக எவ்வளவு பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது?

[2003 ஏப்ரல் 4

(ஆ) அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

| | நாமக்கல் மாவட்டம். | சேலம் மாவட்டம். |
|---|---|---|
| (அ) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 2001 ஆம் ஆண்டில் முத்திரையிடப்படாத எடை அளவுக் கருவிகள் பயன்படுத்தியதற்காக தொடரப்பட்ட வழக்குகள் | 681 | 475 |
| (ஆ) 2001 ஆம் ஆண்டில் முத்திரையிடப்படாத எடை அளவுக் கருவிகளை சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பயன்படுத்திய நபர்கள் மீது எடை அளவு சட்டப்பிரிவு 24(2) உடன் விதி 14(1)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டது | 96,825/- | 42,830/- |

**15—**

## வேலைவாய்ப்பு அளித்தல்

**வினா 25111—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் வேலை அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்கள், பதிவு மூப்பின் அடிப்படையில், வேலைவாய்ப்பு அலுவலகத்தால் பரிந்துரை செய்யப்படுகின்ற அனைவருக்கும் நேர்முகத் தேர்வு நடத்தி வேலையளிப்போரால் அவர்களின் திறமையின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



**16—**

## மறுவாழ்வு அளித்தல்

**வினா 28013—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களை பள்ளிக்கு அனுப்பி மறுவாழ்வு அளிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். புதுக்கோட்டை மாவட்டத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் 14-11-1995 அன்று தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டச் சங்கம் அமைக்கப்பட்டு 40 சிறப்புப் பள்ளிகளின் மூலம் குழந்தைத் தொழிலாளர்களை பள்ளிகளில் சேர்த்து கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் இச்சிறப்புப் பள்ளிகளில் பயின்ற 1,848 குழந்தைத் தொழிலாளர்கள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர். தற்போது இச்சிறப்புப் பள்ளிகளில் 1,638 குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு மதிய உணவும், ஊக்கத்தொகையாக மாதந்தோறும் ரூ.100/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இக்குழந்தைத் தொழிலாளர்களுக்கு சீருடைகள், மதிய உணவு மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**17—**

## தொழிற்சங்கப் பதிவு

**வினா 30079—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள உழைக்கும் மக்கள் தொழிற்சங்கம் காங்கிரஸ் (W.P.T.U.C) என்ற அமைப்பு இந்தியத் தொழிற்சங்கங்களின் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) அதைப் பற்றிய விவரங்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையில் உள்ள உழைக்கும் மக்கள் தொழிற்சங்க காங்கிரஸ் (W.P.T.U.C.) தொழிற்சங்கச் சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை.

**18—**

**கூட்டுறவுச் சங்கங்கள்**

**வினா 2934—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதில் செயல்படாமல் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(இ) அதை மேம்படுத்த அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டில் மொத்தம் 20 மாவட்ட பணிக் கூட்டுறவு மையங்களும், 191 வட்டார பணிக் கூட்டுறவு மையங்களும், மாநில அளவில் தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையமும் உள்ளன. அவற்றுள் 16 மாவட்ட பணிக் கூட்டுறவு மையங்களும், 153 வட்டார பணிக் கூட்டுறவு மையங்களும் நட்டத்தில் இயங்கி வந்தன. அவற்றில் பணியாற்றும்





பணியாளர்களுக்குக்கூட சம்பளம் கொடுக்க இயலாத நிலை இருந்தது. எனவே 27-11-2002 ஆம் நாளிடப்பட்ட வேளாண்மைத் துறை ஆணை நிலை எண் 395-ல் தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தை (AGROFED) மூடி விட நடவடிக்கை எடுக்குமாறு வேளாண்மைத் துறை கூட்டுறவுப் பதிவாளருக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.

**19—**

**ஏற்றுமதி**

**வினா 23364—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதியில் வாழைப்பழங்களை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சமயநல்லூர் தொகுதியில் உற்பத்தியாகும் வாழைப்பழங்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

**20—**

**நாற்றுகள் விநியோகம்**

**வினா 28259—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 4

(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், கொல்லிமலை மலைவாழ் பழங்குடியினர் விவசாயிகளுக்கு முழு மானியத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழச் செடிகள், காபி, மிளகு, லவங்கம் மற்றும் சில்வர் ஓக் நாற்றுகள் விநியோகம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை பகுதி மலைவாழ் பழங்குடி விவசாயிகளுக்கு நடப்பு ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தோட்டக்கலைத் துறை சார்பாக மிளகுச் செடிகள், அன்னாசிக் கன்றுகள், சில்வர் ஓக், திசு வளர்ப்பு வாழை, காபி, மா, புளி போன்ற செடிகள் 230 விவசாயிகளுக்கு 75% மானியத்தில் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இதற்கென ரூ. 5.812 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசாணை வழங்கப்பட்டதும், பழச்செடிகள், காய்கறி விதைகள் அனைத்தும் மலைவாழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**21—**

**முன்னுரிமை**

**வினா 28630—திரு. ச. ராசாராம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடி தொகுதியில் அதிகம் மலைப் பிரதேசங்களில் விவசாயம்—முன்கால மிளகு, வாழைப்பழம், எலுமிச்சை, காபி, ஏலம் பயிரிடப்படுகின்றன. இப்பகுதி விவசாயிகள் முன்னேற ஏற்றுமதி அடையக்கூடிய விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 ஏப்ரல் 4]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், போடி தொகுதியில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடும் விவசாயிகள் முன்னேற ஏற்றுமதி அடையக்கூடிய விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் உற்பத்தி செய்யப்படும் தோட்டக்கலை விளைபொருட்கள் யாவும் தரமானவையாக இருப்பதற்கும், சாகுபடி அனைத்தும் இயற்கைப் பண்ணையம் (Organic Farming) முறையினை விவசாயிகள் கடைப்பிடிக்கும் வகையில் தொழில்நுட்ப ஆலோசனைகள் தோட்டக்கலைத் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இதுகுறித்து போடி தொகுதியில் முந்திரி சாகுபடி மற்றும் பயிர் பாதுகாப்பு கருத்தரங்கம் நடத்தவும் வாழையில் ஏற்றுமதிக்கேற்ற வகையில் பூச்சி மற்றும் நோயின் தாக்குதலைத் தவிர்க்கும் வகையில் திசு வளர்ப்பு-வாழைக் கன்றுகள் வழங்கிடவும், உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் நடத்திடவும் தனியாக பழப் பயிர் சாகுபடிக் கூட்டங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. காபி சாகுபடி செய்யும் விவசாயிகள் நலனைக் கருத்திற்கொண்டு அத்தகைய விவசாயிகளின் நிலங்களில் கூடுதல் வருவாயை ஈட்டிடவும் ஏற்றுமதிக்கேற்ற வெனிலா ஊடுபயிர் செய்திட நிருபணத்தளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**22—**

**சாலை விபத்துக்களைக் குறைத்தல்**

**வினா 8559—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் அதிகப்படியான சாலை விபத்துக்கள் நடைபெறுகின்றன என்று அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) சாலை விபத்துக்களைக் குறைக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

[2003 ஏப்ரல் 4

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில், சென்னை மாநகரம், கோவை, விழுப்புரம், செங்கை கிழக்கு, காஞ்சிபுரம், ஈரோடு, வேலூர், சேலம், தருமபுரி மற்றும் திண்டுக்கல் ஆகிய காவல் துறை மாவட்டங்களில் அதிகப்படியாக சாலை விபத்துக்கள் நடைபெறுவதாக அரசு கண்டறிந்துள்ளது.

(ஆ) சாலை விபத்துக்களைத் தவிர்க்க அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:-

(1) விபத்து அதிகமாக நடைபெறும் பகுதிகளை அடையாளம் கண்டு, அவ்விடங்களில் விபத்துக்களைத் தவிர்க்கும்பொருட்டு, போக்குவரத்துக் குறியீடுகள் பொருத்துதல், சாலையைப் பிரிக்கும் தடுப்புகளை ஏற்படுத்துதல், சாலையை அகலப்படுத்துதல், நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், சாலையோரங்களில் கிணறுகளும், குளங்களும் அமைந்துள்ள இடங்களில் சுற்றுச்சுவர்களைக் கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(2) சாலைகள் தெளிவாகத் தெரியும் வகையில் மின் விளக்குகளை அமைத்தல், சாலை விதிகளை உணர்த்தும் வகையில் குறியீடுகளை வரைதல் ஆகியவை நடைபெறுகிறது.

(3) அதிவேகமாக வாகனங்களை ஓட்டுதல், குடித்துவிட்டு ஓட்டுதல், அதிக சுமைகளை ஏற்றிச் செல்லுதல் ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(4) சாலை விதிகளை மீறும் ஓட்டுநர்களை கண்காணிக்கும் வகையில் சென்னை நகரத்தில் கணினி மயமாக்கப்பட்ட சலான் (Challan) முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(5) தேசிய நெடுஞ்சாலைகளில் நடைபெறும் கொள்ளை மற்றும் விபத்துக்களை குறைத்து, போக்குவரத்து சீராக அமைய நெடுஞ்சாலை ரோந்து காவல் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(6) சாலைப் பாதுகாப்பு விதியின்கீழ் போக்குவரத்தை முறைப்படுத்த காவல் துறைக்கு நவீனக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

(7) மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 7-1-2002 முதல் 13-1-2002 வரையில் 13-வது சாலைப் பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப்பட்டது.



2003 ஏப்ரல் 4]

**23—**

**சிறு பேருந்துகள்**

**வினா 22957—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-ஆம் ஆண்டில் தமிழகத்தில் தனியாருக்கு எவ்வளவு பேருக்கு சிறு பேருந்துகள் அரசு விதிமுறைக்கு உட்பட்டு இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

2001-ஆம் ஆண்டில் தமிழகத்தில் தனியாருக்கு (Private operators) 1886 சிறு பேருந்துகள் இயங்க அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

**24—**

**மணல் குவாரிகள்**

**வினா 27754—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு மணல் குவாரிகளை குத்தகை அடிப்படையில் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு மணல் குவாரிகளை குத்தகை அடிப்படையில் வழங்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

25—

### சாக்கடை வசதி

**வினா 1213—திரு. ஐ. சந்தானம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி, 23-வது வார்டு பகுதிக்கு சாக்கடை வசதி செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி நகராட்சியின் நிதிநிலைமை போதுமானதாக இல்லாததால், உசிலம்பட்டி 23-வது வார்டு பகுதிக்கு சாக்கடை வசதி செய்து தர நகராட்சியால் இயலவில்லை.

26—

### குடிநீர்

**வினா 4275—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெ. வள்ளியூர் ஊராட்சி இரண்டாவது வார்டு பகுதி நம்பிபத்து கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர் ஊராட்சி, நம்பிபத்து கிராமப் பகுதியில் நிலவும் கடும் வறட்சியின் காரணமாக ஆழ்குழாய்க் கிணற்று நீராதாரம்



தோற்றுவிப்பது இயலாத நிலையில் உள்ளது. இக்குடியிருப்பு பணகுடி-வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் இடம் பெற்றது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 9/2003-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

27—

### தொலைக்காட்சிப் பெட்டி

**வினா 9009—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, 4-வது வார்டு பொதுமக்களுக்காக தொலைக்காட்சிப் பெட்டி சேனையர் புதுத்தெருவிற்கு வழங்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி 4-வது வார்டு பொது மக்களுக்காக தொலைக்காட்சிப் பெட்டி சேனையர் புதுத் தெருவிற்கு வழங்க திட்டம் எதுவும் இல்லை.

28—

### குடிநீர் வசதி

**வினா 10756—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாலஜங்கமனஅள்ளி ஊராட்சி, கூன்மாரிக் கொட்டாய் கிராமத்தில் அரசு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்துளைக் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாலஜங்கமன அள்ளி ஊராட்சி, கூன்மாரிக் கொட்டாய் (மாரிக் கொட்டாய்) குடியிருப்பில் தற்போதைய மக்கட்தொகை 250 ஆகும். இக்குடியிருப்பில் தற்போது ஒரு கைவிசைப்பான் திட்டம் செயலில் உள்ளது. தற்போதைய மக்கட்தொகைக்கேற்ப ஊரக குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்குட்பட்டு வரும் நிதியாண்டுகளில் தேவை, தகுதி மற்றும் நிதியாதார அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

29—

## ஆழ்துளைக் கிணறு

**வினா 10763—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், காணாப்பட்டி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், காணாப்பட்டி குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் 1986-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு தற்போது செயலில் உள்ளது. இத்திட்டத்தின் நீராதாரத்தில் நீர்வரத்து குறைவாக உள்ளதால் ஊரக குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்குட்பட்டு, வரும் நிதியாண்டுகளில் தேவை, தகுதி மற்றும் நிதியாதார அடிப்படையில் புதிய மாற்று நீராதாரம் அமைக்க பரிசீலிக்கப்படும்.



2003 ஏப்ரல் 4]

30—

## குடிநீர் வழங்குதல்

**வினா 11879—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், இராவுத்தபேரி கிராமத்தில் ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி ஊராட்சி, இராவுத்தபேரி குடியிருப்பிற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்றுநீர் வழங்கப்படவுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. இக்குடியிருப்பில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. கிராமக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இக்குடியிருப்பிற்குப் போதுமானதாகும்.

31—

## குடிநீர் விநியோகம்

**வினா 11926—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட இராஜீவ் காந்தி நகர், கரிசல்பட்டி சாலை முதல் புதுக்காலனி முடிய குழாய் இணைப்பு விஸ்தரிப்பு செய்து குடிநீர் விநியோகம் செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

[2003 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியின் இராஜீவ்காந்தி நகர், கரிசல்பட்டி சாலை முதல் புதுக்காலனி முடிய குடிநீர்க் குழாய் இணைப்பு விஸ்தரிப்பு செய்ய தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. தற்போது அடிப்பம்பு வாயிலாக தண்ணீர் வசதி பெறப்படுகிறது.

32—

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 12040—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பஞ்சாயத்து ஒன்றியம், அண்ணா நகர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், தெற்கு வீரவநல்லூர் ஊராட்சி, அண்ணா நகர் குடியிருப்பின் தற்போதைய மக்கள்தொகை மிகவும் குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு தற்சமயம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசிலனையில் இல்லை. எனினும் நிதி ஒதுக்கீடு, முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



2003 ஏப்ரல் 4]

33—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 12045—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ஏ.பி.நாடானூர் பஞ்சாயத்து ஒன்றியம், சொக்கலிங்கபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், ஏ.பி. நாடானூர் பஞ்சாயத்து, சொக்கலிங்கபுரம் குடியிருப்பிற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

34—

**ஆழ்குழாய் அமைத்தல்**

**வினா 12076—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கட்ரெங்கபுரம் ஆதிதிராவிடர் காலனியில் ஆழ்குழாய் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 ஏப்ரல் 4

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோழமாதேவி தொகுதி, வெங்கட்ரெங்கபுரம் ஆதிதிராவிடர் காலனி வெங்கட்ரெங்கபுரம் குடியிருப்பின் ஒரு பகுதி. இக்குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**35—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 12148—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சானிலுள்ள பழைய நீர்த்தேக்கத் தொட்டி முற்றிலும் பழுதடைந்துள்ளதை அப்புறப்படுத்தி புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், ஓடைமறிச்சான் குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டு 16-5-2002 முதல் ஊராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**36—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா 13590—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 4]

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் வசிக்கும் அனைத்து மலைவாழ் மக்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் வசிக்கும் பழங்குடியினருக்கு 566 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 2002-2003ஆம் நிதியாண்டில் பழங்குடியினருக்கு 10 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**37—**

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா 15943—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சிபுரம் ஊராட்சி, நரிப்பாறை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிடவும், காலனிப் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்திடவும் அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சிபுரம் ஊராட்சி, நரிப்பாறை குடியிருப்பிற்கான குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு 15-05-2002 முதல் ஊராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**38—**

**ஆழ்துளைக் கிணறு**

**வினா 21123—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், சுந்தரேசபுரத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், சுந்தரேசபுரம் குடியிருப்பு, கடையநல்லூர்-புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வழியோர கிராமமாக சேர்க்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

39—

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 22478—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சிக்குட்பட்ட சிவசுப்பிரமணியபுரம்/பத்தியநாதபுரம் கிராமத்திற்கு கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, சிவசுப்பிரமணியபுரம்/பத்தியநாதபுரம் ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் சேர்த்து 1999-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் 60000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு பயனில் உள்ளது. கிராமக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி இந்த மேலநிலை நீர்தேக்கத் தொட்டி இக்குடியிருப்புகளுக்குப் போதுமானதாகும்.



40—

**குடிநீர்**

**வினா 22606—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, நக்கனேரி கிராமத்தில் GLR கட்டி குடிநீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, நக்கனேரி கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

41—

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 22621—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சிபுரம் ஊராட்சி, கன்னங்குளம் பகுதியில் கூடுதலாக 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், லெவிஞ்சிபுரம் ஊராட்சி, கன்னங்குளம் குடியிருப்பில் 60,000 லிட்டர் மற்றும் 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

[2003 ஏப்ரல் 4

42—

## குடிநீர் வடிகால் வாரியம்

**வினா 23288—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூரில் செயல்பட்டு வந்த குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தினை மொரப்பூருக்கு மாறுதல் செய்யாமல் அரூரிலேயே செயல்படச் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரூரை தலைமையிடமாகக் கொண்டு 1-6-2002 முதல் மீண்டும் ஒரு கிராம குடிநீர் திட்ட உபகோட்டம் செயல்பட்டு வருகிறது.

43—

## குடிநீர்

**வினா 24422—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவிரியிலிருந்து வெள்ளியணைக்கு வரும் குடிநீர் வேடசந்தூர் தொகுதியிலுள்ள கூம்பூருக்கு வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்திற்கு உட்பட்ட கூம்பூர் பஞ்சாயத்தில் உள்ள கூம்பூர் மற்றும் 19 கிராம குடியிருப்புகளும் காவிரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்படவுள்ள திண்டுக்கல் நகராட்சி, நத்தம் பேரூராட்சி, ஐந்து கிராமப் பேரூராட்சிகள் மற்றும் 816 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் பயன்பெறும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. திட்ட ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



2003 ஏப்ரல் 4]

44—

## குடிநீர்த் தொட்டி

**வினா 27356—திரு. அ. இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, 22-வது வார்டிலுள்ள சேந்தமங்கலம் பிரிவு சாலை காமராசர் நகரில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராசிபுரம் நகராட்சி, 22-வது வார்டு, சேந்தமங்கலம் பிரிவு ரோடு காமராஜர் நகரில் தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2001-2002ன்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு தற்போது குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது.

45—

## தூர்வாரும் பணி

**வினா 27358—திரு. அ. இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் புதிய பேருந்து நிலையத்திலுள்ள மூலக்கிணற்றினை தூர்வாரி குடிநீராகப் பயன்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடைமுறைப்படுத்தப்படுமா? எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராசிபுரம் புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள மூலக்கிணற்றில் தற்போது 22 அடி தண்ணீர் உள்ளது.

[2003 ஏப்ரல் 4

இக்கிணற்றிலிருந்து மின் மோட்டார் மூலம், பேருந்து நிலையத்திலுள்ள கழிப்பிடம், திரு.வி.க. பூங்கா மற்றும் பேருந்து நிலையத்தின் இதர உபயோகங்களுக்கும் தண்ணீர் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. நகரில், தற்போது இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் ஒருநாள் விட்டு ஒருநாள் சீராக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏதுமில்லை. எனவே மூலக்கிணறு தண்ணீரை குடிநீருக்கு உபயோகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**46—**

**அலுவலகம்**

**வினா 27369—திரு. கே.எஸ். பழனிசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் உதவி செயற்பொறியாளர் (A.E.E.) அலுவலகம் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் ஆரம்பிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-2003ஆம் நிதியாண்டில் வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் வேலைப்பளுவின் அடிப்படையில் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

**47—**

**மருத்துவ வசதி**

**வினா 20655—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 4]

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், வேலாயுதபுரம், கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவமனையில் சரியான மருத்துவ வசதியுடன், தினசரி மருத்துவரும் வந்து செயல்பட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**48—**

**கால்நடை மருத்துவ முகாம்கள்**

**வினா 22331—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001ஆம் ஆண்டில் எத்தனை கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன?

(ஆ) அதில் எத்தனை கால்நடைகளுக்கு தடுப்பூசி மற்றும் மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.**

(அ) 2001 ஆம் ஆண்டில் 4613 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

(ஆ) 2001-2002ஆம் ஆண்டில் நடைபெற்ற கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் மூலம் 55.57 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டன. மற்றும் 23,54,210 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டன.

49—

[2003 ஏப்ரல் 4

**மின் இணைப்பு**

**வினா 6699—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட 50 ஆண்டுகளுக்கு மேல் பாபநாசம் சாலையில் குடியிருக்கும் சொந்த பட்டா உரிமைதாரர் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க முன்வரும்பொழுது, வனத் துறை தடையில்லாச் சான்றளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

*1969* ஆம் வருடத்தில் மாவட்ட வன அலுவலர், திருநெல்வேலி வடக்கு கோட்டம் 18 காணிக் குடியிருப்பு வசதிக்காக, 30 ஏக்கர் வன நிலம், முண்டந்துறை அருகில் பாபநாசம் ஒதுக்கு காட்டுப் பகுதியில் ஒதுக்கப்பட்டது. வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 நடைமுறைக்கு வந்தபின்னர், இவர்களுக்கு காட்டுப்பகுதியில் வசிக்க அனுமதிக்க இயலாது. இவர்களுக்கு இன்றுவரை சட்டபூர்வமாக செட்டில்மெண்ட் செய்யப்படவில்லை. மேலும் காணிக்காரர்கள் அல்லாத நபர்களும் வன நிலத்தினை ஆக்கிரமித்து வசித்து வருகிறார்கள். சரணாலயப் பகுதிகளில் வசித்துவரும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு சலுகைகள் செய்து கொடுப்போமேயானால் வன நிலம் மற்றும் வன உயிரினங்கள் பிற்காலகட்டங்களில் அழிய வாய்ப்புள்ளது. மேற்கண்ட ஆக்கிரமிப்புதாரர்களுக்கு பட்டா உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. பட்டா செய்து கொடுக்க வனப் பாதுகாப்பு சட்டத்தில் எந்தவிதமான விதிகளும் இல்லை. மேற்கூறிய காரணங்களை கருத்தில்கொண்டு இவர்களுக்கு மின் இணைப்பு மற்றும் இதர வசதிகள் செய்ய மின் வாரியத்திற்கு பரிந்துரை செய்ய இயலாது.



2003 ஏப்ரல் 4]

50—

**பால் கூட்டுறவுச் சங்கங்கள்**

**வினா 20552—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாட்ராம்பள்ளி தொகுதியில் சின்ன மேட்டூர் மற்றும் மல்லப்பள்ளி ஆகிய கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய நிர்வாக இயக்குநரால் தக்க மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவனத்தை ஈர்த்தல்

**கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களுக்குள் தகராறும் மக்கள் பாதிப்பும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான நிகழ்வு குறித்து தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்; இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழகம் முழுமையாக இரண்டு டி.வி. காரர்கள் தகராறு செய்து

கொண்டிருக்கிற காரணத்தினால், இன்றைக்கு விஜய் டி.வி. சம்பந்தப்பட்ட எந்த நிகழ்ச்சிகளும் தொலைக்காட்சிகளில் பார்க்கமுடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், நேற்றையதினம் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் ஸ்டிரைக் செய்த காரணத்தினால், பல இடங்களிலே ஒயர்களெல்லாம் அறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், பொதுமக்கள் இதுகுறித்து மிகவும் வேதனை அடைத்திருப்பதைக் குறித்து இந்த மாமன்றத்திலே நான் நம்முடைய முன்னவர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 18—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்மீது நடந்த விவாதத்தில் எட்டு மாமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களுடைய மேலான கருத்துகளையும் அரிய ஆலோசனைகளையும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களில்கூட, ஆட்சியினுடைய கொள்கைகளையோ திட்டங்களையோ செயல்பாடுகளையோ குறைத்து அல்லது குறையாக எதுவும் சொல்லவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் தங்களுடைய தொகுதிக்கு வேண்டிய தேவைகளை, கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையங்களை, மருத்துவமனைக்கு வேண்டிய கூடுதலான வசதிகளைத்தான் கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும், பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் அந்தக் கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே ஏதாவது



குற்றம் இருக்கிறதா, குறை இருக்கிறதா என்று பார்த்து, பூதக் கண்ணாடி போட்டுத் தேடி, குறையாக ஒன்றை இங்கே சொன்னார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே இந்தத் துறைக்கு ரூ.1380.48 கோடி என்று குறிப்பிட்டிருப்பதாகவும், ஆனால் இந்தத் துறையின் சார்பாக கோரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையில் 1380.29 கோடி என்று குறிப்பிட்டிருப்பதாகவும் இங்கே ஒரு குறையாகச் சொன்னார்கள். அதிலே எந்தத் தவறும் இல்லை. ரூ.0.19 கோடி Charged amount என்று அதிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே அந்த Charged amount-ஐ மானியக் கோரிக்கையிலே கோரிப் பெறவேண்டியதில்லை. எனவே அதையும் சேர்த்துக் கொள்ளலாம்; தவறு இல்லை. எனவே மானியக் கோரிக்கையிலே Charged amount வரவேண்டியதில்லை என்பதாலே அதைக் கழித்து, மீதித் தொகைத்தான் மானியக் கோரிக்கையிலே கோரப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதாவது, செய்யக்கூடாத செயல்களைச் செய்வதாலும் கெடும். செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் இருந்தாலும் கெடும் என்பது அதனுடைய பொருள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எப்போதுமே மருத்துவத் துறைக்கு ஒரு சிறப்பு உண்டு. ஆனால் 1996 முதல் 2001 வரை இந்தத் துறையிலே ஒரு தேக்கம் ஏற்பட்டுவிட்டது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். அதற்குக் காரணம், அடிப்படைத் தேவைகளை அந்தத் துறைக்குச் செய்யாததன் காரணமாக அந்தத் துறையிலே தேக்கம் ஏற்பட்டது என்பதுதான் உண்மை.

*முற்பகல்10-05*

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய உறுப்பினர் திரு. வைதியலிங்கம் அவர்கள் கடந்த கால ஆட்சியில் நிறைய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன என்ற கருத்தைச் சொன்னார்கள். அதுவும் தேவைதான். ஆனால் அதற்குப் பிறகு தொடர் நடவடிக்கையாக அடிப்படைத் தேவைகளை நீங்கள் செய்யத் தவறிவிட்டீர்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள்

5 ஆண்டு கணக்குகளைச் சொன்னார்கள். நாங்களும் இந்த இரண்டு ஆண்டு காலத்திலே கட்டடங்கள் கட்டாமல் இல்லை. 58 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தரம் உயர்த்துவதற்காக கட்டடங்களைக் கட்டியிருக்கிறோம். 740 துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டடத்தை இந்த இரண்டு ஆண்டு காலத்திலே கட்டி முடித்து இருக்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக 5 ஆண்டு கால ஆட்சியில் 234 தான் நீங்கள் கட்டியிருக்கிறீர்கள். 177 ஆரம்ப சுகாதார நிலையங்கள் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல 25 இடங்களிலே ஆபரேஷன் தியேட்டரை நாங்கள் புதிதாகக் கட்டியிருக்கிறோம். 64 வட்டார மருத்துவமனைகளிலே உள்ள ஆபரேஷன் தியேட்டர்களுக்கு ஏ.சி. வசதி செய்து கொடுத்திருக்கிறோம். 9 இடங்களிலே உள்ள தீக்காயப் பிரிவுகளுக்கு ஏ.சி. வசதி செய்து கொடுத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், இன்னும் ஓராண்டுக்குள் ஒவ்வொரு மருத்துவமனையிலும் இருக்கிற ஆபரேஷன் தியேட்டர்களிலே ஒரு ஆபரேஷன் தியேட்டருக்கு கண்டிப்பாக ஏ.சி. வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். இதுபோன்ற அடிப்படையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நாங்கள் முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு நாங்கள் புதிதாக 39 அறிவிப்புகளைக் கொடுத்திருந்தோம். இந்த ஓராண்டு காலத்திலே அதிலே 36 அறிவிப்புகளை நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். 3 அறிவிப்புகள் நிறைவேற்றப்படாததற்குக் காரணம்; ஒன்று Integrated Diseases Surveillance System. அது மைய அரசு, உலக வங்கி சம்பந்தப்பட்டது. எனவே மைய அரசையும், உலக வங்கியையும் நாங்கள் நாடி அதையும் விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் பேசுகிறபோது முதியோர்களுக்கு சுகாதார அட்டை வழங்கவில்லை என்று சொன்னார்கள். அதற்காக இப்போது 5 இலட்சம் அட்டைகள் அச்சடிக்கப்பட்டு, அவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவராலே வழங்கப்படுகிற O.A.P. Pensioners-களுக்கு வழங்கப்படுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மேலும் 5 இலட்சம் சுகாதார அட்டைகளை அடித்து சிறப்பு மருத்துவ



முகாம்கள் நடத்தினோம். அதிலே கிட்டத்தட்ட 1,78,834 பேர் முதியோர்கள்; அவர்களுக்கு இருக்கிற நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெறுவதற்கு வருகை தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்க இருக்கிறோம். மீதமுள்ள அட்டைகளை ஆங்காங்கு இருக்கிற மருத்துவமனைகளிலே கொடுத்து மருத்துவமனைகள் மூலமாக வருகிற முதியோர்களுக்கு சிறப்பு வைத்தியம் அளிக்கிற வகையில் அவர்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

மூன்றாவது, ஜப்பான் நாட்டின் உதவியோடு எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு ரூ. 21 கோடி பெறுவதற்கான திட்டம். இதற்கு மைய அரசோடு ஜப்பான் அரசு பேச வேண்டும். அதற்காக நம்முடைய அரசு இரண்டு முறை நினைவூட்டுக் கடிதங்களை மைய அரசுக்கு எழுதியிருக்கிறது. அதனால்தான் இந்த 3 அறிவிப்புகளைச் செயல்படுத்த கொஞ்சம் காலதாமதாகி இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் இந்தத் துறையில் சர்வீஸை improve செய்ய வேண்டும், அந்த சர்வீசும் குவாலிட்டியோடு இருக்க வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள், 5 ஆண்டு கால ஆட்சியிலே அவர்கள் நியமித்த செவிலியர்கள், டாக்டர்களுடைய எண்ணிக்கையை எல்லாம் இங்கே சொன்னார்கள். நாங்கள் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும் 905 டாக்டர்களை நியமித்திருக்கிறோம். இந்த ஆண்டு 500 டாக்டர்களை நியமிப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதைப்போல 1,037 செவிலியர்களை நாங்கள் இந்த 2 ஆண்டு காலத்திலே நியமித்திருக்கிறோம். எனவே அந்த ஐந்து ஆண்டு காலத்திலே நியமிக்கப்பட்ட டாக்டர்கள் செவிலியர்களுடைய எண்ணிக்கையையும், இந்த இரண்டு ஆண்டு காலத்திலே எங்களுடைய ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்ட எண்ணிக்கையையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால் எங்களுடைய விகிதாச்சாரம்தான் அதிகமாக இருக்கும். அதிலும் நாங்கள் நல்ல நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

இன்னொன்று. இவ்வளவு கட்டடங்களைக் கட்டி டாக்டர்களை நியமித்தால் மட்டும் போதுமா என்று சொன்னால் அது போதாது. எனவே சிகிச்சை அளிப்பதற்கு முன்னாலே நோயைக் கண்டறியக்கூடிய வசதி வாய்ப்புகளை மருத்துவமனைகளிலே ஏற்படுத்த வேண்டும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அந்த முயற்சிக்கு எந்தவித நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் கட்டடம் கட்டினோம் என்று சொல்கிறார்களே தவிர அதற்குரிய infrastucture facilities-ஐ மருத்துவமனைகளிலே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே செய்தார்களா என்று சொன்னால், செய்யவில்லையென்றுதான் நாங்கள் ஒரு குற்றச்சாட்டாகக்கூடச் சொல்ல முடியும். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு சென்னை, மதுரை ஆகிய இரண்டு இடங்களிலும்—M.R.I. Scan ஒவ்வொன்றும் 5 கோடி ரூபாய் மதிப்பு—இந்த இரண்டு மருத்துவமனைகளுக்கும் M.R.I.Scan-ஐ வழங்கி மிகத் துல்லியமாக மனிதனுடைய உடல் உறுப்புகளில் இருக்கிற நோயினுடைய அறிகுறிகளை மிகத் துல்லியமாகக் கண்டறிகிற வகையிலே மிகப் பெரிய நவீன கருவிகளை வழங்கி, தென் மாவட்ட மக்களுக்கும், வட மாவட்ட மக்களுக்கும் நாங்கள் அந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

அதைப்போல C.T. Scan. C.T. Scan என்றால் ஏழைகளுக்கு எட்டாத ஒரு கருவி. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995-96 ஆம் ஆண்டு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, போட்ட உத்தாவின் காரணமாக, ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கும் ஒரு C.T.Scan வழங்க வேண்டுமென்று அரசாணை பிறப்பித்து அதனுடைய தொடர்ச்சியாக இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாவட்டங்களுக்கும் - 29 மாவட்டங்களுக்கும் - ஒரு மாவட்டத்திற்கு ஒரு C.T. Scan என்ற வகையிலே இன்றைக்கு அனைத்து மாவட்டங்களுக்கும் C.T. Scan வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் கோயம்புத்தூர், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு இரண்டு கொடுக்கப்பட்டிருக்கின்றது; சென்னையில் நான்கு C.T. Scan இருக்கிறது. ஆக 35 C.T. Scan-கள் இருக்கின்றன. இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் மாவட்டத்திற்கு ஒரு C.T. Scan உள்ள எந்த மாநிலமும் இல்லை



என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே தமிழகம், நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இந்தியாவிலேயே இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு முதன்மை மாநிலமாக, முன்னோடி மாநிலமாக விளங்குகிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு வைதியலிங்கம் அவர்கள் இங்கே சொன்னார்கள். பெரம்பலூரிலே மத்திய அரசு நிதி கொடுத்திருக்கிறது என்றும், அங்கே Trauma Care Centre இன்னும் முடிக்கப்படவில்லை என்றெல்லாம்கூடச் சொன்னார்கள். நான் அவரிடம் குறிப்பிட்டுச் சொல்வது, செய்த காரியங்களை நீங்கள் பாராட்டிவிட்டு செய்ய வேண்டியவற்றை நினைவுறுத்தினால்கூட பரவாயில்லை. எவ்வளவோ காரியங்களைச் செய்திருக்கிறோம். இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்குகிற வகையிலே, தமிழ்நாட்டில் 7 இடங்களில் —Regional Diagnostic Centre என்ற மையங்களை ஆரம்பித்து—திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், விருதுநகர், நாமக்கல் ஆகிய இடங்களிலே Regional Diagnostic Centre-கள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஒரு இடத்திற்கு 3 கோடி ரூபாய் செலவிலே இன்றைக்கு அந்தப் பணி முடிவடைகிற நிலையிலே இருக்கிறது. திருவண்ணாமலை என்று சொன்னால் அது மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பிச்சாண்டி அவர்களுடைய தொகுதி என்றோ, விழுப்புரம் என்று சொன்னால் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பொன்முடி தொகுதி என்றோ ஒதுக்கிவிடாமல் அந்த மக்களுடைய நலன் கருதி இன்றைக்கு 21 கோடி ரூபாயில் மிகப் பெரிய மையங்களை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம்.

அதைவிட இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு ஒன்றியத்திற்கு ஒரு Ultra Scan. நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் M.R.I. Scan, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு C.T. Scan, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு Ultra Scan. இந்த மூன்று மெஷின்கள் இருந்தால் போதும். மனிதனுக்கு எந்த நோய் வந்தாலும் துல்லியமாக ஆரம்ப கட்டத்திலேயே தெரிந்துகொண்டு அதற்கு சிகிச்சை அளித்துவிடலாம். எனவே அந்த வகையிலே Ultra Scan என்ற அந்த ஸ்கேனையும் ஒன்றியத்திற்கு ஒன்று என நாங்கள் கொடுத்திருக்கிறோம்.

முற்பகல் 10-15

அதேபோன்று ஒன்றியத்திற்கு ஒரு E.C.G. machine-ஐ, இருதய நோயைக் கண்டுபிடிக்கிற அந்தக் கருவியைக் கொடுத்து இருக்கிறோம். அதேபோல் ரத்தத்திலே சர்க்கரை இருக்கிறதா என்று பார்ப்பதற்கு குளுகோ மீட்டர் என்ற கருவியை ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் வழங்கி இருக்கிறோம். Boyle's Apparatus ஒன்றியத்திற்கு ஒன்று வழங்கியிருக்கிறோம். அதேபோல் எக்ஸ்ரே கருவி ஒன்றியத்திற்கு ஒன்று என வழங்கியிருக்கிறோம். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் எல்லாம் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றீர்கள். ஒரு தொகுதிக்கு 2 ஒன்றியம் அல்லது 3 ஒன்றியம் இருக்கும். ஆனால் நான் சொல்கிற வசதிகள், Ultra Scan, E.C.G. machine, Glucometer, Boyle's apparatus, X-ray ஆகிய இந்தக் கருவிகள் எல்லாம் முன்பெல்லாம் தலைமை மருத்துவமனைகளில்கூட இருக்காது. மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில்கூட இருக்காது. ஆனால் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின்பேரிலே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இந்த நவீன கருவிகளை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** ஒரே ஒரு clarification.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** நான் பேசிய பிறகு நீங்கள் பேசுங்கள். இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இந்த வசதி செய்து கொடுக்கப்படவில்லை. ஆனால் நாங்கள் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** செய்வதற்கு நடவடிக்கை எடுத்து இப்போது நாங்கள் அதைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் இரண்டு ஆண்டு காலத்திலே அந்தப் பணிகள் முடிக்கப்பட்டுவிடும். இன்னொன்றையும் நான் சொல்கிறேன். இதெல்லாம்கூடப் போகட்டும் (குறுக்கீடு) இல்லை, இல்லை. அண்ணா, இதெல்லாம்கூடப் போகட்டும். ஒரு simple biological process சொல்கிறேன். ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு பேறு காலத்திலே எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர்மீது எவ்வளவு மரியாதை வைத்திருக்கிறார். நான் சொன்னால்கூட உட்காரமாட்டார்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு பேறு காலத்திலே எந்த நேரத்திலேயும் சிக்கல் வரலாம். அதுவும் கிராமப்புறத்திலே இருக்கிற பெண்கள் பிரசவ காலத்திலே எப்படியெல்லாம் சிரமப்படுகிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதுபோன்று சுகாதார சேவையே இல்லாத கிராமப்புறப் பகுதியிலே இருக்கிற துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இந்த அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அங்கே கிராமப்புற சுகாதார நிலையத்திலே பணியாற்றுகிற கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு ஒரு B.P. Apparatus வழங்கப்பட்டிருக்கிறது. பொதுவாக கர்ப்பிணிப் பெண்களுக்கு இரத்த அழுத்தம் பார்க்க வேண்டும். அடுத்ததாக Sugar இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சர்க்கரை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இன்னொன்று, anaemia இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இந்த மூன்று டெஸ்டுகள் அவர்களுக்கு முக்கியம். காரணம், anaemia இருந்தால் அவர்களுக்கு இரத்தப் போக்கு ஏற்பட்டு பாதிப்பு ஏற்படும். அதேபோல் இரத்த அழுத்தம் இருந்தாலும் அவர்களுக்கு பிரசவ காலத்திலே பாதிப்பு ஏற்படும். Sugar இருந்தாலும் பாதிப்பு ஏற்படும். எனவே இந்த மூன்றையும் கண்டறிந்து அவர்களுக்கு பிரசவத்திற்கு முன்னாலே தேவைப்படும் சிகிச்சைகளைச் செய்வதற்கு B.P. Apparatus வழங்கப்பட்டிருக்கிறது. ஸ்டெதாஸ்கோப் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அவர்களுக்கு எடை பார்க்கிற கருவி வழங்கப்பட்டிருக்கிறது. பிரசவம் பார்ப்பதற்கு Instrument kit வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல் பிரசவ காலத்திலே வெந்நீர் தேவை. பிரசவம் பார்ப்பதற்கு வெந்நீர் தேவை. அதற்குக்கூட ஸ்டவ் கொடுத்திருக்கிறோம். இவற்றையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளை சென்ற ஆட்சியிலே செய்தார்களா என்று சொன்னால், செய்யவில்லை. எனவே அடிப்படைத் தேவைகள் எவையெவை என்று உணர்ந்து இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இவ்வளவு வசதி வாய்ப்புகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

Primary Health Centre-களிலே இருக்கிற பிரசவ அறை. அதேபோல் ஆபரேஷன் தியேட்டர்களை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக பிரசவ அறை, ஆபரேஷன் தியேட்டர் எல்லாம் சீர்படுத்தப்பட்டு நல்ல நிலைமையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆபரேஷன் தியேட்டர்களில் ஏ/சி வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதேபோல் 91 மருத்துவமனைகளில் மட்டுமே இருந்த சிசேரியன் செய்கிற அந்த வசதி 115 மருத்துவமனைகளுக்கு இப்போது செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்து கொடுத்ததன் பயனாக சென்ற ஆண்டு மட்டும் 3,400 சிசேரியன்கள் கூடுதலாக செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆக பிரசவக் காலத்திலே, சுகப் பிரசவம் ஆவது ஒரு நிலை. இன்னொன்று, சிக்கலான கேஸ்களுக்கு கண்டிப்பாக சிசேரியன் செய்ய வேண்டும். எனவே, சிசேரியன் வசதி இல்லாத காரணத்தாலே, பிரசவக் காலத்தில் தாய்மார்கள் இறப்பு, குழந்தைகள் இறப்பு எல்லாம் நிறைய நடந்தன. அதைப் போக்குகிற வகையில் இப்போது 3,400 சிசேரியன்கள் இந்த ஆண்டு கூடுதலாகச் செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு 17,500 சிசேரியன்கள் செயயப்பட்டன. இந்த ஆண்டு 20,900 சிசேரியன்கள செய்யப்பட்டிருக்கின்றன. எனவே இந்த வகையிலே 3,400 உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. இதைத்தான் இங்கே நான் குறிப்பிட்டுச சொல்லியாக வேணடும். எனவே அந்த வகையிலே அந்த வசதி வாய்ப்பையும் இப்போது செய்து கொடுத்திருக்கிறோம்.

*முற்பகல் 10-20*

குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிக்கூட இங்கே மன்றத்திலே ஏற்கெனவே பேசப்பட்டது. குடும்ப நலத் திட்டத்திற்கு, கடந்த காலத்தில் முக்கியத்துவம் கொடுக்காமல், ஆண்டுக்கு 3½ இலட்சம் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைகள்தான் நடந்துவந்தன. ஆனால் இந்த ஆண்டு, இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக 4,17,046 குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு, பொதுமக்களிடத்திலே நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்துகிற ஒரு மிகச் சிறந்த சேவையை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக 1994-95-ல் பேறுகாலத்திலே தாய்மார்கள் இறக்கிற நிலைமை 600 என்று இருந்தது. ஆண்டுக்கு 600 பேர் இறந்த நிலைமை இருந்தது. ஆனால் அது கடந்த திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில்



1,600 ஆக உயர்ந்துவிட்டது. காரணம், நான் சொன்ன இந்த அடிப்படைத் தேவைகள் எல்லாம் அரசு மருத்துவமனைகளில், ஆரம்ப சுகாதார நிலையங்களில், துணை சுகாதார நிலையங்களிலே இல்லாததாலே தாய்மார்களினுடைய இறப்பு 1,600 என்ற அளவிற்கு உயர்ந்துவிட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 600 என்று இருந்தது. இப்போது 1,600 என்று ஆகிவிட்டது. காரணம், அந்தச் சிறப்புச் சேவை இல்லாததுதான். அந்த வகையிலே இப்போது அந்த இறப்புகள் எல்லாம் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னால், குடும்ப நல அறுவைச் சிகிச்சைகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். இப்போது, higher order birth என்கிற அந்த வகையில்—மூன்றாவது குழந்தை, நான்காவது குழந்தை இப்போது அதிகமாக, அதாவது ஆண்டுக்கு 11½ இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. ஓர் ஆண்டுக்கு 11½ இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. ஆனால் அதிலே higher order birth என்ற வகையிலே-2½ இலட்சம். அதாவது 24 சதவீதம், 2½ இலட்சம் குழந்தைகள் தேவை இல்லாத குழந்தைகள், அதாவது மூன்றாவது குழந்தை, நான்காவது குழந்தை என்கிற வகையிலே அந்தக் குழந்தைகள் பிறக்கின்றன. அந்தக் குழந்தைகளுடைய பிறப்பைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக higher order birth rate-ஐக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக 24 விழுக்காடு என்று இருந்த நிலைமை மாறி, இப்போது 21 விழுக்காடு என்று குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், குடும்ப நல அறுவைச் சிகிச்சையை ஊக்கப்படுத்தியதுதான். எனவே மீண்டும் அதை இன்னும் குறைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று. மருத்துவமனைகளுக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வசதி வாய்ப்புகளைச் செய்து கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மருத்துவ வசதி கிடைக்காத கிராமப்புறங்களுக்கு ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அந்த வகையிலே 385 ஒன்றியங்களிலேயும்

சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. அதற்காக மட்டும் இந்த அரசு ரூ.289.39 இலட்சத்தை ஓராண்டிலே செலவு செய்து, 385 ஒன்றியங்களிலும் அந்தச் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடந்தன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு இடத்திலும் அந்தச் சிறப்பு மருத்துவ முகாம்கள் தலைசிறந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்டு, நவீன கருவிகளை எல்லாம் அமைத்து, அங்கே இருக்கிற கிராமப்புற மக்களுக்குப் பரிசோதனை செய்து, அங்கேயே கண்டறிகிற ஒரு நிலைமையை நாங்கள் ஏற்படுத்தினோம். அந்த வகையிலே 7,98,442 பேர் அதன் மூலமாகப் பலன் அடைந்திருக்கிறார்கள். இந்த மருத்துவ முகாம்கள் ஆரம்பித்ததனுடைய நோக்கம், கிராமப்புறங்களிலே நீரிழிவு நோய், இருதய நோய், புற்று நோய் ஆகியவை அதிகமாகப் பாவி வருகிறது என்பது அரசினுடைய கவனத்திற்கு வந்ததனாலே கிராம மக்களுக்கு இதுபோன்ற வியாதிகளினுடைய அறிகுறிகள் தென்படாத காரணத்தாலே, இந்த மருத்துவ முகாம்கள் மூலமாக அவர்களைப் பரிசோதித்தோம். அந்த வகையிலே 7,98,442 பேர் அந்தப் பரிசோதனையைச் செய்துகொண்டதில், நீரிழிவு நோயாலே பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் 41,815 பேர். இருதய நோய்க்கான அறிகுறி இருந்தவர்கள் 40,071 பேர். புற்று நோய்க்கான அறிகுறி இருந்தவர்கள் 4,284 பேர். எனவே இவர்களை எல்லாம் கண்டறிந்து அவர்களுக்கு மேல் சிகிச்சை அளிப்பதற்காக ஏற்பாடுகள் செய்து மாவட்ட மருத்துவமனைகளுக்கு அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

அதைப்போல நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் எதையுமே ஒரு தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களைத் தீட்டுபவர்கள். அதுபோன்ற நடவடிக்கையிலே அவர் ஈடுபடுவது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தவகையிலே பொது இடங்களில் புகைப் பிடித்தலைத் தடை செய்வதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்து இப்போது ஜனாதிபதியுடைய ஒப்புதலை அந்தச் சட்டத்திற்குப் பெற்று இருக்கிறோம். அதேபோல புகையிலை, பான்பராக், பான் மசாலா போன்றவற்றையெல்லாம் தடை செய்வதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். இவையெல்லாம் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு



மக்களுடைய உடல்நலம் எந்த வகையிலும் பாதிக்கக்கூடாது என்ற வகையிலே இன்றைக்கு அதற்கும் நாங்கள் இங்கே சிறப்பாக ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

அதைப்போல இந்திய மருத்துவத்திற்கு, குறிப்பாக சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யுனானி போன்ற சிகிச்சையை மக்கள் விரும்புகிறார்கள் என்பதால் இந்த ஆண்டு மட்டும் 89 இடங்களிலே இந்திய மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தி இருக்கிறோம். இந்த அளவிற்கு, எந்த ஆண்டிலும் இந்திய மருத்துவத் துறைக்கு இவ்வளவு பிரிவுகள் துவக்கப்பட்டதாக வரலாறு கிடையாது. அந்தவகையிலே 80 இடங்களிலே சித்தா பிரிவையும், 6 இடங்களிலே யுனானி பிரிவையும், 3 இடங்களிலே ஆயுர்வேதப் பிரிவையும் ஏற்படுத்தியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள்கூட, நேற்று ஆயுர்வேத சிகிச்சைப் பிரிவை கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அங்கு கிள்ளியூர், இடைக்கல், குலசேகரம் ஆகிய மூன்று இடங்களிலே அதை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

யுனானியைப் பொறுத்தவரையிலே பெரம்பலூரிலே லப்பைக்குடிகாடு, நாகை மாவட்டத்திலே நாகூர், தஞ்சாவூரில் வேலூர்-மேல் விசாரம், அதிராம்பட்டணம், திருவாரூரிலே கூத்தாநல்லூர், திருநெல்வேலியிலே மேலப்பாளையம் ஆகிய இடங்களிலே யுனானி பிரிவைத் துவக்கியிருக்கிறோம்.

அதைப்போல, இந்த 80 சித்தா பிரிவையும் தாலுகா மருத்துவமனையிலே 37-ம், ஆரம்ப சுகாதார நிலையம் 50-ம், வட்டம் சாரா மருத்துவமனையிலே இரண்டும், ஆக 80 இடங்களிலே அந்தப் பிரிவுகளை துவக்கியிருக்கிறோம். எப்படி இந்த அலோபதிக்கு சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தினோமோ அதைப்போல இந்திய மருத்துவத் துறைக்கும் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தினோம். அந்த வகையிலே 757 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. அதனால் 2.9 இலட்சம் பேர் பயனடைந்து இருக்கிறார்கள். அதற்கும் மேலாக நடமாடும் மருத்துவக் குழு ஒன்றை மலைவாழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி அங்கேயும் மலைவாழ் மக்களுக்கு அல்லது remote-ஆக உள்ள அதாவது மருத்துவ வசதியே கிடைக்கப்பெறாத அளவிற்கு நீண்ட தூரத்திலே இருக்கிற குக்கிராமங்களுக்கு எல்லாம் Mobile Health Centre-ஐ அனுப்பி வைத்து அவர்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு செய்த வகையிலே, சென்ற ஆண்டு 25 Mobile Health Centre-ஐ நாங்கள் ஏற்படுத்தி அதன்

மூலமாக 1,79,571 பேர் பலன் அடைந்திருக்கிறார்கள். அந்தச் சேவையையும் நாங்கள் செய்திருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்கள் பேசுகிறபோது யானைக்கால் வியாதிக்கு ஊசி போடுவதில்லை. அம்மை குத்துவதில்லை என்று சொன்னார்கள். அம்மை குத்தாததற்கான காரணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெளிவுபடுத்தினார்கள். யானைக்கால் வியாதிக்கு ஊசி போடுவதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் மாத்திரை கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதையாவது அவர் பாராட்டி இருக்கலாம். இந்த DEC மாத்திரை Albendazole என்ற மாத்திரைகளை எல்லாம் நாங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. BCG ஊசி குழந்தைகளுக்குத் தவறாமல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் சென்னை மாநகரத்திலே Hepatitis, முப்பத்தாறாயிரம் குழந்தைகளுக்குப் போடுவதற்கு இப்பொழுது நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். இந்த ஆண்டு விருதுநகர், மதுரை, இராமநாதபுரம், நீலகிரி போன்ற நான்கு மாவட்டங்களுக்கு இதை விரிவுபடுத்துவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

அதேபோல போலியோ சொட்டு மருந்து கொடுத்ததிலே, தமிழகத்திலே அதிகப்படியான குழந்தைகளுக்கு, கிட்டத்தட்ட 74 இலட்சம் குழந்தைகளுக்கு நாங்கள் கொடுத்து இருக்கிறோம். எனவே அந்தவகையிலே அந்தத் தடுப்பு ஊசிகளையும் குறைவு இல்லாமல் நாங்கள் போட்டுக்கொண்டிருக்கிறோம்.

இன்னொன்றையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்கள் சொன்னார்கள். தாம்பரம் தொழுநோய் மருத்துவமனையிலே டாக்டர்கள் இல்லை என்று சொன்னார்கள். தொழுநோய் வியாதியஸ்தர்கள் அங்கே உள் நோயாளியாக எவ்வளவு பேர் இருந்தார்களோ அந்த எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் அன்றைக்கு ஆரம்பித்தார்கள். நீங்கள்கூட சொன்னீர்கள். அது 40-க்குக் கீழே குறைந்துவிட்டது. கிட்டத்தட்ட தமிழகத்தில் தொழுநோய் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. எனவே ஏற்கெனவே இருந்த அதே மருத்துவர்களை அங்கே நியமிக்க வேண்டுமென்கிற அந்த நிலைமை இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே 10 ஆயிரம் பேருக்கு 3.5 என்றிருந்த அந்த விகிதாச்சாரம் இப்போது 2.8 ஆகக் குறைந்துவிட்டது.



**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நோயாளிகளுடைய எண்ணிக்கை அடிப்படையிலே நியமிக்கப்பட்ட டாக்டர்களைக் குறைத்து இருப்பது பற்றிச் சொல்லவில்லை. ஒரே ஒரு ஆர்த்தோ டாக்டர் இருந்தார். அறுவைச் சிகிச்சைக்காக இருந்தாக வேண்டும்; தொழு நோயாளிகளின் அறுவைச் சிகிச்சைக்காக இருந்த அந்த ஒரு ஆர்த்தோ டாக்டரும் மாறுதல் செய்யப்பட்டு வேறு டாக்டர் போடப்படவில்லை என்பதுதான் நான் சுட்டிக்காட்டியது.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இன்னொன்றையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஈஞ்சம்பாக்கம் புறநகர் மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டும், அதற்காக மத்திய அமைச்சர் மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்கள் ரூ. 25 இலட்சம் கொடுத்தார்கள், அதைப் பயன்படுத்தவில்லை, நான் நிலம் கொடுக்கிறேன் என்று உறுதி சொல்லி, கொடுக்கவில்லை என்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் கிடைத்திருக்கிற தகவல் என்னவென்று சொன்னால், நீங்கள் கேட்டது 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை. ஆனால் உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒதுக்கியது 25 இலட்சம் ரூபாய். எனவே துறையின் சார்பிலே, அதற்கு 25 இலட்ச ரூபாய் போதாது; ஒரு கோடியாகக் கொடுத்தால் நீங்கள் கேட்டபடி அந்த மருத்துவமனையைக் கட்ட இயலும்; இடத்தைக் கொடுக்கிறோம் என்று நாங்கள் சொல்லியிருந்தும்; அதற்கு பதில் அவர்தான் கொடுக்கவில்லையே தவிர, நான் உங்களுக்குப் பதில் கொடுக்கவில்லை என்று நீங்கள் சொல்லியது தவறு. காரணம், நான் உங்களுக்கே—நானே உங்களுக்கு—கைப்பட கடிதம் எழுதி உங்களுக்கு இதில் என்ன என்று விளக்கம் கேட்டு அதற்குப் பிறகு துறையை நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறேன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும்கூட சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் மத்திய அமைச்சரிடமிருந்து ஒன்று, ஒரு கோடி ரூபாய் பெற்றுத் தந்தால் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைக் கட்டுவதற்கு வசதியாக இருக்கும். அல்லது, அந்த 25 இலட்ச ரூபாயையாவது release செய்தால் அதற்குத் தகுந்தாற்போல் அந்த மருத்துவமனையை நாங்கள் கட்டிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

**திரு. பீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 25 இலட்ச ரூபாய் release செய்தாகிவிட்டது. அந்தப் பணிகள் துவக்கப்பட்ட பிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அதை கார்ப்பரேஷனிலிருந்து பெற்று அரசுக்குத் தாமுடியும். நீங்கள் அதைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் நான் நகலை அனுப்பி வைத்தேன்.

அதுமட்டுமல்ல, நீங்கள் ஒரு கோடி வேண்டுமென்று கேட்கவில்லை. தயவுசெய்து குறிப்பை எடுத்துப் பாருங்கள். 15 இலட்ச ரூபாய் தந்திருந்தார். 25 இலட்ச ரூபாயாவது பெற்றுக் கொடுங்கள் என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் 25 இலட்ச ரூபாய் பெற்றுத் தந்திருக்கிறேன். எனவே நீங்கள் சொல்கிற அந்த ஒரு கோடி என்பதுகூட இல்லை. இன்னும் நுழைவுக்கு நீங்கள் அனுமதி பெறவில்லை. அந்த இடத்திலே அதைப் பெற்றால்கூட, அதற்குப் பிறகு நிதி ஆதாரங்களை நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெற்றுச் செய்யலாம்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தேகப்படுவதுபோல் அந்த இடத்தை நாம் எடுத்துக்கொள்ள எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். ஒரு V.A.O. quarters கட்டுவதற்கு அவர்கள் நுழைகிறபோது நாம் மருத்துவமனை கட்டுவதற்கு எந்தத் தடங்கலும் இருக்காது. நீங்கள் 25 இலட்ச ரூபாயை வாங்கிக் கொடுப்பீர்களானால், உடனடியாக இந்தத் துறை இதுகுறித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அதுபற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இதுகுறித்து நான் நடவடிக்கை எடுக்கப்போகிறேன். பணத்தை release செய்யுங்கள்.

**திரு. பீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணத்தை release செய்வது நாடாளுமன்ற உறுப்பினருடைய வேலை கிடையாது. அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கிவிட்டார்கள். பணி துவங்குகிறபோதுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் டெண்டர் கொடுத்த பிறகு, அதை மாநகராட்சியிலிருந்து கேட்டுப் பெற வேண்டும். அதுதான் நியதி.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அப்படி பணம் ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு மத்திய அமைச்சரிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றுத் தருவார்களானால் உடனடியாக (குறுக்கீடு) இப்போது இருக்கிற



நிலைமையைச் சொல்கிறேன். உடனடியாக இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும்.

இவ்வளவு நேரம், நிறைய நேரம் அவர்கள் பேசி, கடைசியாக ஒரே ஒரு வரியிலே எங்களைக் குற்றச்சாட்டு சொல்வதுபோல் சொல்லிவிட்டார்கள். அதாவது, முரசொலி பத்திரிகையிலே தலைப்புச் செய்திக்காகச் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியாது. இந்த மானியக் கோரிக்கை வெண்டைக்காய் குழம்பு வைத்து, கற்றாழை சாறு பிழிந்த மாதிரி என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலேயும் ஒரு நல்ல கருத்து இருக்கிறது. வெண்டைக்காயிலே நல்ல வைட்டமின் இருக்கிறது. மூளைக்கு மிகச் சிறந்த காய். அதைப்போலவே கற்றாழை என்பது கிட்னிக்கு வருகிற அனைத்து வியாதிகளையும் தீர்க்கிற (மேசையைத் தட்டும் ஒலி) குணம் உடைய நல்ல மருந்து. எனவே, நீங்கள் சொன்ன அந்த வெண்டைக்காய், காற்றாழைகூட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், அவர் பெயரே வைதியலிங்கம். அதனால்தான் வைத்தியத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** ஒருவேளை தன்னுடைய பெயரை வைதியலிங்கம் என்று வைத்திருக்கிற காரணத்தாலே வைத்திய முறையிலே எங்களைக் குற்றம் சாட்டுவதற்காக அந்த உதாரணத்தைச் சொன்னாரோ என்னவோ தெரியாது. இருந்தாலும் அவர் சொன்னதுபோல வெண்டைக்காயாகவும், கற்றாழையாகவும் இருந்தாலும்கூட இந்த மானியக் கோரிக்கை மிகச் சிறந்த, மக்களுக்குப் பயன்படக்கூடிய, மக்களுக்கு மருத்துவ சேவை செய்யக்கூடியதாக இருக்கிறது என்பதை அவரே இதன் மூலம் ஒத்துக்கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-35

பொதுவாக, பெருகிவருகின்ற சாலை விபத்தைப் பொறுத்த வரையில், அவரே சொன்னார் பெரம்பலூரிலே இன்னும் விரைவாகக் கட்டி முடிக்கவேண்டுமென்று சொன்னார். அதாவது உங்கள் பணம் இல்லை; மத்திய அரசு கொடுப்பதைப்போலச் சொல்லியிருக்கிறார்கள். அது மத்திய அரசு பணம்தான். ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது பணி முடிவடைகின்ற தருவாயிலே

இருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்தச் சாலை விபத்தைத் தடுப்பதற்கு Trauma Care Centres—அவசர விபத்து சிகிச்சைப் பிரிவை ஆரம்பிப்பதற்காக கிருஷ்ணகிரி, கோவில்பட்டி, திண்டிவனம், ஸ்ரீபெரும்புதூர், ஆம்பூர் ஆகிய 5 இடங்களிலே, ரூபாய் 3.38 இலட்சத்தை ஒதுக்கி அந்தப் பணியும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. மேலும் 5 இடங்களிலே துவங்குவதற்கு அனுமதி கேட்டு, மைய அரசினுடைய உதவியை நாடி இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே சொன்னதைப்போல, சென்னையிலே இருக்கிற புறநகர் மருத்துவமனைகளுக்கு ரூ.100.93 இலட்சம் செலவிலே அனைத்துப் புறநகர் மருத்துவமனைகள், அதாவது அண்ணா நகர், பெரியார் நகர், தண்டையார்பேட்டை, கே.கே. நகர், சைதாப்பேட்டை மருத்துவமனை, மதுரை, பாலாங்காபுரம் மருத்துவமனை ஆகியவை விரிவுபடுத்தப்பட இருக்கின்றன. அந்த வகையிலே, அண்ணா நகருக்கு ரூ. 11.10 இலட்சம், பெரியார் நகருக்கு ரூ.10.75 இலட்சம். கே.கே. நகருக்கு ரூ.8.10 இலட்சம். தண்டையார்பேட்டைக்கு ரூ.50.39 இலட்சம், பாலாங்காபுரத்திற்கு ரூ.12.39 இலட்சம், சைதாப்பேட்டைக்கு ரூ.8.20 இலட்சமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் M.B.,B.S. படிப்பிற்கு மட்டும் 315 கூடுதல் இடங்கள் உருவாக்கப்படுகின்றன. M.D., M.S-க்கு உருவாக்கவில்லை என்ற ஒரு குறையைச் சொன்னார். இந்த நேரத்திலே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லியாகவேண்டும். கிட்டத்தட்ட 75 மேல் பட்டப்படிப்பிற்கு M.C.I. நமக்கு அனுமதி கொடுத்தும் இன்னும் recognise ஆகாத ஒரு நிலைமை இருக்கிறது. சென்ற ஆட்சிக்காலத்திலே அதுபற்றி எதுவும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் இப்போது M.C.I., இதற்கு நீங்கள் recognition வாங்கவில்லையென்றால் இந்தப் பட்டப்படிப்பை நிறுத்திவிடுவோம் என்ற மிரட்டுகின்ற வகையிலே நமக்கு தாக்கீது அனுப்பி இருக்கிறார்கள். எனவே அதைக் காப்பாற்றுவதற்காக 75 மேல் பட்டப்படிப்புக்கு M.C.I.யினுடைய அனுமதியைப் பெறுவதற்காக, அங்கீகாரம் பெறுவதற்காக, M.C.I.-க்கு 35 இலட்சம் ரூபாயை Inspection Charge-ஆக பணத்தைக் கட்டி அந்த இடங்களைத் தக்கவைப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் சொல்கிறபோது, சென்னை பொது மருத்துவமனையிலே 22-ஆக இருந்த M.S. இடம்



11-ஆகக் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். அது எங்கள் ஆட்சிக்காலத்திலே அல்ல. 1999 ஆம் ஆண்டு அந்த இடம் குறைக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும், சென்ற ஆட்சியிலே அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னாலும், இந்த ஆண்டு நாங்கள் அதற்கு நடவடிக்கை எடுத்து, M.C.I.-க்கு எழுதி, அந்த 11 இடங்களைக் கூடுதலாக பெறவேண்டும் என்பதற்காக அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, 315 கூடுதல் இடங்கள் உருவாக்கப்பட்டு, செங்கல்பட்டு, கீழ்ப்பாக்கம், கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய கல்லூரிகளுக்கு தலா 150 இடங்கள் என்ற நிலையில் ஓதுக்கப்பட்டு, அதற்கான கட்டுமானப் பணிக்கு 10.01 கோடி ரூபாய் ஓதுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல தேனி மருத்துவக் கல்லூரிக்கு 12 கோடி ரூபாய் ஓதுக்கப்பட்டு 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

வேலூர் மற்றும் கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரிகளுக்கு முறையே தலா 5 கோடி ரூபாய் ஓதுக்கப்பட்டு கட்டடம கட்டும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது சென்னையில் மட்டும்தான் B.Sc. Nursing கல்லூரி இருக்கிறது. எனவே மதுரையிலே ஒரு B.Sc. Nursing கல்லூரியைத் துவக்கவேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் 114.48 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, மதுரையிலே B.Sc. Nursing கல்லூரி ஒன்று, 50 இடங்கள் கொண்ட அந்தக் கல்லூரி இந்த ஆண்டு துவக்கப்பட இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போல இங்கேகூடச் சொன்னார்கள்; lift சரியாக வேலை செய்யவில்லை என்று மருத்துவமனையிலே இருக்கின்ற உபகரணங்கள எல்லாம் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. என்று சொன்னார்கள். இதைக் கருத்தில்கொண்டுதான் மருத்துவக் கல்லூரிகளிலே கட்டடம், lift, generator பழுது பார்ப்பதற்கு ஒரு Building Management Committee, மருத்துவக் கல்லூரி டீன், பொதுப் பணித் துறை அதிகாரிகளைக் கொண்டு ஒரு Committee அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் இநத நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கோவிந்தசாமி அவர்கள் பேசுகிறபோது, மருந்துகளைக் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலம் மிகக் குறைந்த விலையிலே மருந்துகளை வாங்கி இப்போது ஏழை எளிய நோயாளிகளுக்கு நாங்கள் அவற்றை இலவசமாகக் கொடுத்து வருகிறோம். வெளி மார்க்கெட்டிலே மருந்தின் விலை உயர்ந்துகொண்டே போனாலும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலமாக வாங்குகிற மருந்து, ஆண்டுக்காண்டு குறைந்த விலைக்கு வாங்கப்படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 'பாராசிட்டமால்' மாத்திரை 1998-99-ல் 100 மாத்திரைகள் 13.19 ரூபாய் என்ற நிலையிலே இருந்தது. 2002-2003-ல் அது 11.24 ரூபாயாகக் குறைந்த விலைக்கு வாங்கப்படுகிறது. அதைப்போல 'செப்டிரான்' மாத்திரை 100 மாத்திரைகள் 1998-99-லே 31 ரூபாய் என்றிருந்தது. இப்போது 27.82 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. இப்படி குறைந்த விலைக்கு வாங்கப்பட்டு அதிக அளவிலே மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக இந்தத் துறையின் மூலமாக வாங்கப்படுகிற மருந்து குறைந்த விலையில் வாங்கப்படுகிறது. தனியார் கடைகளை எடுத்துக்கொண்டால் இந்த "பாராசிட்டமால்' மாத்திரை தனியார் கடைகளில் 100 மாத்திரைகள் 38 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. ஆனால் மருத்துவக் கழகத்தின் மூலமாக அவற்றை 11.24 ரூபாய்க்குத்தான் வாங்குகிறோம். அதைப்போல 'பாராசிட்டமால்' சிரப்' 60 எம்.எல். பாட்டில் வெளி மார்க்கெட்டிலே 10 ரூபாய்க்கு விற்கிறது. இந்தக் கழகத்தின் மூலமாக 3.08 ரூபாய்க்கு வாங்குகிறோம். அந்த வகையிலே இப்போது மிக நல்ல தரமான மருந்துகளைக் குறைந்த விலைக்கு நாங்கள் வாங்குகிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல மருத்துவக் கருவிகளைப் பழுதுபார்ப்பதற்காக முன்பெல்லாம் ELCOT நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டு வந்தது. அவர்கள் அதைப் பழுது பார்ப்பதற்குக் காலதாமதம் செய்கிறார்கள் என்பதற்காக, TNMSC மூலமாக ஒரு Maintenance Cell-ஐ ஏற்படுத்தி காலதாமதம் ஏற்படாமல் இருக்கிற வகையிலே, மருத்துவமனைகளிலே பழுதுபடுகிற அந்த equipments, நவீனக் கருவிகளைப் பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அதைப்போல தமிழ்நாடு பார்வையிழப்புத் தடுப்புச் சங்கத்தின் மூலமாக 7 இலட்சம் பேருக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 91 சதவீதத்தினருக்கு I.O.L. கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 34 இலட்சம் பள்ளிச் சிறார்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு 40,000 சிறார்களுக்கு இலவசக் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப்போனால் இறந்தவர்களிடமிருந்து கண்களை தானமாகப் பெற்று 1,230 பேருக்கு பார்வை பெற கண்கள் பொருத்தப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தைப் பொறுத்தவரையில் 2001-ல் எடுக்கப்பட்ட கணக்கின்படி H.I.V.-யினுடைய தாக்கம் 1.1 விழுக்காடு என்றிருந்த நிலை மாறி 2002-ல் 0.87 விழுக்காடாகக் குறைந்துள்ளது. 97 சதவீதம் இப்போது தமிழகத்திலே இது குறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நல்ல முறையிலே சேவை செய்கிறார்கள். அதைப்போலவே தாயிடமிருந்து பிறக்கும் குழந்தைக்கு இந்த நோய் பரவாமல் இருக்க தாய்க்கும் சேய்க்கும் வைரஸ் கிருமிக்கு எதிரான மருந்தான 'நவாப்ரான்' மருந்து தற்போது 47 மருத்துவமனைகளிலே கொடுக்கப்படுகிறது. பால்வினை நோய்க்கான சிகிச்சைக்கு 57 மருத்துவமனைகளில் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே 2003-2004 ஆம் ஆண்டுக்கு 15 கோடி ரூபாய் செலவில் 'நேக்கோ' நிறுவனத்தின் உதவியோடு திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதைவிட மேலாக, பாதுகாப்பான இரத்தம் தேவைப்படும் அனைவருக்கும் தேவையான இடத்தில் தேவையான அளவு கிடைக்க வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. இதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இந்த முக்கியமான பணியைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்கு இரத்த வங்கிக் கொள்கை ஒன்றை வரைவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இந்தக் கொள்கையினை முடிவு செய்வதற்காக மருத்துவ வல்லுநர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். அநேகமாக திரு. இராஜேந்திரன் என்று நினைக்கிறேன், மாணவர்களை இந்தப் பணியிலே பயன்படுத்தக்கூடாது என்று சொன்னார்கள். மாணவர்களை நாங்கள் பயன்படுத்தவில்லை. எய்ட்ஸ் பிரச்சாரத்திற்காக மாணவ, மாணவிகளை நாங்கள் பயன்படுத்தவில்லை. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அவர்களுக்கு இது குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோமே தவிர, மாணவர்களை நாங்கள் பயன்படுத்தவில்லை. எனவே இந்த எய்ட்ஸ் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் திரு. பில் கேட்ஸ் அவர்களுடைய பிரதிநிதியாக வந்த மைக்ரோ சாப்ட் நிறுவனத்தினுடைய டைரக்டர் திரு. அசோக் அலெக்சாண்டர் அவர்கள் நம்முடைய தமிழ்நாட்டினுடைய செயல்பாடுகளைப் பற்றிச் சொல்கிறபோது "I am very impressed with the quality of work in the State by the Government. Tamil Nadu is truly a model State. There are a lot of lessons to be learnt here" என்று பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த வகையிலே தமிழ்நாடு அரசினுடைய தரமான சேவை வெகுவாக என்னைக் கவர்ந்தது என்றும், தமிழ்நாடு உண்மையிலேயே ஒரு முன்னோடி மாநிலம் என்றும், இங்கிருந்துதான் அதிகப்படியான படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டியது உள்ளது என்றும் திரு. அசோக் அலெக்சாண்டர் அவர்கள் பெருமைபட சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த வகையிலே மிகச் சிறப்பாக இப்போது அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

முற்பகல் 10-15

அதேபோல் பேறுசார் குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் மதுரை, தேனி மாவட்டங்களில், தேனி, கம்பம், போடி, பெரியகுளம், சின்னமனூர், திருமங்கலம், மேலூர் மற்றும் உசிலம்பட்டி ஆகிய இடங்களில் 8 நகர் சுகாதார மையங்கள் ரூ.126.88 இலட்சம் செலவிலே அமைக்கப்பட்டுள்ளன. ரூ.115.26 இலட்சம் செலவில் 21 துணை சுகாதார மையங்கள் கட்டப்பட்டு சுகாதாரப் பணியாளர்கள் அங்கேயே தங்கி பணி புரிகிற வகையிலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ரூ.6.5 இலட்சம் செலவில் பழுதடைந்த



கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. தேனி மாவட்டத்தில் 2 ஆம்புலன்சுகள் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டு, பிரசவத்திற்காக அழைத்து வர அவை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

அதைப்போல டேனிடா திட்ட உதவியுடன் ரூ.20.76 கோடி திட்ட மதிப்பீட்டில் 352 துணை சுகாதார நிலையங்கள் புதியதாகக் கட்டப்பட்டும், தமிழகத்திலே 809 கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டும், 533 துணை 239 ஆரம்ப சுகாதார நிலையங்கள் பழுது பார்க்கப்பட்டும், சுகாதார நிலையங்களுக்குக் குடி தண்ணீர் விநியோகம், மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டும், கிராம சுகாதாரச் செவிலியர்கள் அங்கேயே தங்கி பணியாற்றக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கியும், அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டும், சுகாதாரச் சேவையை வழங்கி வருகிறது. அவர்களுக்குச் சீருடை, மருந்துகள் மற்றும் உபகரணங்கள் அடங்கிய KIT கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் 1981-லே ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துறையில் இயங்கி வருகிற வாகனங்களுடைய விழுக்காடு 72.6 ஆக இருந்தது. 2002-2003-லே அது 96 விழுக்காடாக உயர்ந்தது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான நோயாளிகள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றனர். ஒரு புள்ளிவிவரப்படி ஏறக்குறைய 4 இலட்சம் பேர் தமிழ்நாட்டிலே மட்டும் இந்தத் தேவையுடையவர்களாக இருக்கிறார்கள். இவ்வளவு பேருக்கும் அறுவைச் சிகிச்சை செய்வதற்கு அதிக செலவாவதால் சிறுநீரகம் கிடைப்பதிலே உள்ள சிரமத்தினால் அறுவைச் சிகிச்சை செய்ய அதிக அளவு இயலவில்லை. அதனால் அவர்களுக்குக் குறைந்தபட்ச உதவியாக மாவட்டங்களில் dialyser கருவிகள் நிறுவி குறைந்த செலவிலே இந்த வசதியை செய்து தருவதற்கு அரசு ஆவலாக உள்ளது. அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே சொன்னதுபோல மாவட்டத்திற்கு இரண்டு dialyser-களை வழங்குவதற்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல சிறுநீரகங்கள் தானமும் மற்ற உடல் உறுப்புகளான கண், பேங்கிரியாஸ், லிவர், ஹார்ட் போன்ற உறுப்புகளை தானம் அதிகமாகச் செய்வதற்கு மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிற வகையிலே ஒரு தொலைநோக்குக் கொள்கையாக cadaver உடல் உறுப்பு தானத்தைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி மேம்படுத்த இவற்றை ஒரு அரசு மருத்துவமனையில் பரீட்சார்த்தமாகச் செயல்படுத்தவிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதேபோல மாவட்டம், வட்டம், வட்டம் சாரா மருத்துவமனையில் 50 குழந்தைகள் நலப் பிரிவுகள், 10 எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவுகள், 20 ENT பிரிவுகள், 15 இரத்த வங்கிப் பிரிவுகள், 50 டென்டல் பிரிவுகள், 12 மனநலப் பிரிவுகள், 16 நீரிழிவுப் பிரிவுகள், 25 இரத்த அழுத்தப் பிரிவுகள் மற்றும் 25 கான்சர் பிரிவுகள் என்ற வகையிலே 4 கோடி ரூபாய் செலவிலே ஒரு திட்டம் துவங்கப்பட்டிருக்கிறது. தற்போது உபயோகத்திலுள்ள மிகவும் பழமையான 70 ஆம்புலன்சு வண்டிகளுக்குப் பதிலாக புதியதாக வண்டிகள் வாங்குவதற்கு ரூ.3.50 கோடி வழங்க உத்தேசித்திருக்கிறோம். அந்த வகையிலே காரைக்குடிக்கு ஓர் ஆம்புலன்ஸ் வண்டி கொடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ராஜு அவர்கள் பேசுகிறபோது, ஊட்டிக்கு கூடுதல் டாக்டர் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது 500 டாக்டர்களை நாம் நியமிக்கவிருக்கிறோம். இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். சிறப்பு மருத்துவர்கள் என்கிற Speciality Doctor-களுக்கு வேலைப்பளு குறைவாக இருக்கிறது என்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களிலே நிறைய பேர் இருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்களையெல்லாம் நாங்கள் கண்டறிந்து இப்போது 152 பேர்களை ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து எடுத்து மருத்துவமனைக்கு நியமிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து, இப்போது நியமித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குழித்துறையில் G.H.-க்கு நிச்சயமாக ஒரு Ortho Specialist நியமிக்கப்படுவார் என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.


முற்பகல் 10-50

அதைப்போல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி தமிழ்மொழி ராஜதத்தன் மற்றும் திரு. ஏ. பூவராகமூர்த்தி ஆகியோர் சொன்ன கோரிக்கைகளும் அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் துறையின் சார்பிலே, இந்த ஆண்டு செயல்படுத்தக்கூடிய 56 செயல் திட்டங்களை, அறிவிப்புகளாகச் செய்யச் சொல்லி எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

நேற்று பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். குறிப்பாக, தாய்மார்களுக்கு மார்பகப் புற்று நோய் அதிகமாக ஏற்பட்டு, அதனாலே இறப்புகள் எல்லாம்கூட ஏற்படுகின்றன. ஆனால் இந்தப் புற்றுநோயை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிந்தால் அறுவைச் சிகிச்சை இல்லாமலேகூட சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்றலாம், அல்லது கண்டறியப்பட்ட பிறகு அறுவைச் சிகிச்சை செய்து இவர்களைக் காப்பாற்றலாம். ஆனால் இதைக் கண்டறிவதற்கான கருவி இல்லாததினாலே, நிறைய பெண்கள் மார்பகப் புற்று நோய் காரணமாக இறந்துவிடுகிற நிலைமை தமிழகத்திலே இருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டிய பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேற்றைக்கே அது குறித்து ஒரு நல்ல அறிவிப்பைச் செய்யச் சொல்லி இருக்கிறார்கள். தற்போது மார்பகப் புற்று நோயைக் கண்டறிவதற்காக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இந்நோயினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சென்னைக்கு வந்து Mammography Unit என்ற கருவி மூலமாக பரிசோதனை செய்து கொள்ள வேண்டியுள்ளது. இந்த நோய் சரியான நேரத்தில் கண்டறியப்பட்டால் அதனை அறுவைச் சிகிச்சையின்றியே குணப்படுத்திவிடலாம் அல்லது தேவைப்பட்டால் அறுவைச் சிகிச்சை செய்தும் பாதிக்கப்பட்ட பெண் நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றி விடலாம். மகளிரின் பிரச்சினையை நன்கு உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் மார்பகப் புற்று நோயைக் கண்டறியும் Mammography Unit-ஐ அனைத்து மாவட்டத் தலைநகரங்களுக்கும் வழங்குவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காகத் தேவைப்படும் ஏறத்தாழ 8.5. கோடி ரூபாய் நிதிக்கும் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்கள் என்பதையும் இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள பெண்களுக்குப் பெரிதும் உதவிடும் இத்தகைய நவீன மருத்துவ வசதியை அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய சிந்தையில் உதித்தது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்வதிலே மகிழ்ச்சி அடைகின்றேன். அந்த வகையிலே இந்தியாவிலேயே நம்முடைய தமிழகம்தான் முதல் மாநிலமாக, ஒரு முன்னோடி மாநிலமாக இதைச் செயல்படுத்துவதிலே இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள்.

(1) மருத்துவமனைகளில் சுத்திகரிக்கப்பட்ட நீர் கிடைப்பதை உறுதி செய்திட சென்னையில் இரண்டு பெரிய மருத்துவமனைகளில் ரூ.130 இலட்சம் மதிப்பீட்டில் Reverse Osmosis Plant நிறுவப்படும்.

(2) சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகளில் மருத்துவக் கழிவுகளை Bio Medical Waste நிருவகிப்பதற்கு ரூ.275 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான வசதிகள் செய்து தரப்படும். அந்த வகையிலே சென்னைக்கு அருகிலே ஒரு Insinerator அமைக்கப்படும். மற்ற அனைத்து மருத்துவமனைகளிலுமே Autoclave வசதி செய்து கொடுக்கப்படும். அதன் மூலம் Biological waste பிரித்து எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் இரத்த சுத்திகரிப்புக் கருவிகள் Dialysis Machines வழங்கப்படும். சென்னையில் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கும் சிறுநீரகக் கற்களை உடைத்து நீக்கும் கருவியான Lithotripsy Machine வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கே தெரியும். சிறுநீரகத்திலே கல் இருந்தால் அதை Operation செய்து எடுக்க வேண்டும். இல்லையென்றால் அந்தக் கல்லை உடைத்து



அதைச் சரி செய்ய வேண்டும். இதற்காக தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்றால் எவ்வளவு சார்ஜ் செய்கிறார்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். இந்த நிலைமையை மாற்றுவதற்காக, ஏழையெளியவர்களுக்கு அந்த வசதி கிடைப்பதற்காக மதுரையிலும், சென்னையிலும் கிட்டத்தட்ட ரூ. 1.2 கோடி மதிப்பில் வாங்கக்கூடிய அந்த Lithotripsy Machine-ஐ இந்த இரண்டு மருத்துவமனைகளுக்கும் வழங்குவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-55

(4) மேல் உதடு மற்றும் அன்னத்தில் பிளவு (Cleft Palate) மற்றும் இருதயக் கோளாறுகள் போன்ற பிறவிக் குறைபாடுகள் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க அறுவை சிகிச்சை செய்ய வழிவகை செய்யப்படும்.

(5) நாட்டிலேயே முதன்முதலாக சென்னை அரசு மருத்துவமனையில் எலும்பு வங்கி (Bone Bank) ஒன்று தொடங்கப்படும். இவ்வங்கி தண்டுவடம், முடக்கியல் மற்றும் புற்றுநோயாளிகளின் தேவையைப் பெரிதும் பூர்த்தி செய்யும். இப்பொழுதெல்லாம் புற்றுநோய் வந்தவர்களுக்கு அந்த எலும்பை நீக்கி, மெட்டல் வைத்துத்தான் அறுவை சிகிச்சை செய்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்காக இந்த எலும்பு வங்கி உருவாக்கப்பட இருக்கிறது. இதுவும் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையிலே உதித்த புதிய திட்டம் என்பதை நான் சொல்வதிலே மகிழ்ச்சி அடைகின்றேன்.

(6) (அ) அதைப்போல தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் செவிலியர் பள்ளிகள் தொடங்கப்படும். இப்பொழுது 9 இடங்களில்தான் அரசு சார்பிலே செவிலியர் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிலே 715 மாணவிகள்தான் படித்து வெளியேறுகிறார்கள். எனவே அதை அதிகப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து தலைமை மருத்துவமனைகளிலும் இதுபோன்ற செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்படும்.

(ஆ) செவிலியர்களின் மருத்துவப் பயிற்சியின் தரத்தினை உயர்த்திடுவதற்கென செவிலியர் பட்டம் பெற்ற பின்னர், அவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் உள்ளுறைப் பயிற்சி (Internship) அளிக்கப்படும்.

(இ) அதேபோல மருத்துவமனைகளில் செவிலியர் பணியின் தரத்தினை உறுதி செய்வதற்கென மருத்துவப் பயிற்சித் தேர்வின் (Clinical Test) அடிப்படையில் செவிலியர் பணிக்கு மறுபதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

அதற்குக் காரணம், தனியார் பள்ளிகளிலே படிக்கிற செவிலியர்கள், அதாவது Clinical practice இல்லாமல் வெளியிலே வருகிறவர்கள், அந்தத் தரமான பயிற்சி பெறாததன் காரணமாக, அந்த ஒரு நிலைமை இருந்து வருகிறது. அதைத் தவிர்ப்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற Clinical Test-ஐ அவர்களுக்கும் ஏற்படுத்த வேண்டும், வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் மூலமாக செவிலியர்களுடைய தரம், அந்தப் பயிற்சியைப் பெறுவதன் மூலம் அவர்களுடைய தரம் உயர்த்தப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(7) பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்கள் கிடைக்கக்கூடிய இடம் தமிழகம் என்று உலக அளவில் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தமிழகத்தை முன்னேற்றுவதற்கான ஆலோசனை வழங்கிட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும்.

(8) தமிழகத்திலும் மற்றும் தமிழகத்தின் வெளியேயும் தேவைப்படும் பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களின் தேவையினை நிறைவு செய்வதற்கென, இரத்தம் சுத்திகரிப்பு (Dialysis) இருதய மின்வரைவு (ECG) போன்ற மருத்துவ சோதனைகளை மேற்கொள்வதற்கான கருவிகளை இயக்கும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் (Certificate Course) ஒன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொடங்கப்படும்.

(9) எய்ட்ஸ் தொடர்பான கல்வித் திட்டம் மாநிலத்தின் அனைத்துப் பள்ளிகளுக்கும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்படும்.



(10) உடல் உறுப்பு தானத்தை (Human Organ Donation) மக்களிடையே ஊக்குவித்து, உடல் உறுப்பு மாற்று சிகிச்சைக்கு (Organ Transplantation) வசதி செய்யும் வண்ணம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, அரசு மருத்துவமனைகளில் Hospital Eye Retrieval மற்றும் Cadaver Transplantation திட்டங்கள் முன்னேற்றப்படும்.

(11) தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவுகள் (Payment Wards) படிப்படியாகத் தொடங்கப்படும்.

(12) மருத்துவமனைகளில் உள்ள கருவிகளை மேம்பாடு செய்வதற்கென, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு அளிக்கப்படும் சேவைக் கட்டணத்திலிருந்து கிடைக்கும் சேமிப்பிலிருந்து ஒரு நிதி உருவாக்கப்படும். அந்த நிதியிலிருந்து மருத்துவமனைகளுக்கு அவற்றின் செயல்பாடுகள் மற்றும் தேவையின் அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும்.

(13) தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் வாயிலாக மருத்துவமனைகளில், இன்சுலின், சைக்ளோஸ்போரின், [A.S.V. மற்றும் A.R.V.] போன்ற உயிர்காக்கும் மருந்துகள், விலை கொடுத்து வாங்கும் அளவுக்கு வசதி படைத்தோருக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும்.

(14) HIV/AIDS உடன் வாழ்பவர்களுக்கு ஏற்ற சுற்றுப்புறம் மற்றும் அவர்களுக்கு உரிமை அளிப்பதற்காக யு.என்.டி.பி. உதவியுடன் ரூ. 80.77 இலட்சத்தில் ஒரு திட்டம் செயலாக்கப்படும்.

(15) மாநிலத்தில், குறிப்பாக மருத்துவ வசதிகள் இல்லாத பகுதிகளில் அவசர கால பேறுசார் வசதிகள் உருவாக்குவதில் தனியார் துறை பங்கேற்பு ஊக்குவிக்கப்படும்.

(16) பிரசவ மற்றும் அவசர மருத்துவச் சிகிச்சை தேவைப்படும் நிகழ்வுகளில் மருத்துவ ஊர்தி வசதி ஏற்படுத்துவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்திட திட்டம் ஒன்று உருவாக்கப்படும்.

(17) சென்னை மகப்பேறு மற்றும் குழந்தை நல நிறுவனத்தில் அவசர அறுவைச் சிகிச்சை அரங்கம், மகப்பேறுக்கு முன்னர் சிகிச்சை அளிக்கும் பிரிவு உள்ளிட்ட மகப்பேறு பிரிவுக்கு ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

முற்பகல் 11-00

(18) 315 M.B.B.S., இடங்கள் கூடுதலாக உருவாக்குதல், அதன் தொடர்பாக 5 அரசு மருத்துவக் கல்லூரிகளில் ரூ.100 இலட்சம் செலவில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

(19) தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் பிணவறை ஒன்று கட்டப்படும்.

(20) சென்னை பொது மருத்துவமனையில் உள்ள பேர்னார்ட் கதிர்வீச்சு நிறுவனம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.

(21) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுடன் மருத்துவக் கல்வி இயக்ககத்தின் இடையே கணினி நெட்வொர்க் வசதி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

(22) சென்னை குழந்தைகள் நல மருத்துவமனையில் உள்ள மின்தூக்கி ரூ.22.40 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும்.

(23) தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோய் கண்டறியும் மைய ஆய்வுக் கூடக் கட்டடம்-Central Diagnostic Centre-ரூ.16.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

(24) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.

(25) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி மருத்துவமனையில் உள்ள சிறுநீரக சிகிச்சைப் பிரிவு ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

(26) திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி நினைவு மருத்துவமனையில் இரத்தம் சுத்திகரிப்பு மற்றும் பிளாஸ்மா பிரித்தெடுக்கும் கருவி ரூ. 26 இலட்சத்தில் நிறுவப்படும்.



(27) காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

(28) மதுரை இராஜாஜி மருத்துவமனையில் முடவியல் பிரிவில் சி.ஆர்ம். (C-Arm) கருவி ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

(29) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் கொள்ளை நோயியல் பிரிவு ரூ.25 இலட்சத்தில் வலுப்படுத்தப்படும்.

(30) பாம்புக்கடி மருந்து (A.S.V.) உற்பத்தி செய்வதற்கென சென்னை கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்மா போரிஸிஸ் கருவி வழங்கப்படும்.

(31) வட்ட மருத்துவமனைகளில் ரூ.144 இலட்சம் மதிப்பீட்டில் கதிர்வீச்சு கருவிகள் நிறுவி, அதற்கான கட்டடங்கள் கட்டப்படும்.

(32) திருவண்ணாமலை தலைமையிட மருத்துவமனையில் ரூ.50.40 இலட்சம் மதிப்பீட்டில் 48 படுக்கை வசதிகள் கொண்ட கூடுதல் பிரிவு ஒன்று உருவாக்கப்படும்.

(33) கரூர் தலைமையிட மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை அரங்கத்துடன் கூடிய 24 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறுப் பிரிவு ரூ.55 இலட்சத்தில் கட்டப்படும்.

(34) முதுகுளத்தூர், திட்டக்குடி மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதிகளுடன்கூடிய அறுவைச் சிகிச்சை அரங்கங்கள் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

(35) மூன்று மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 75 KVA ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் கட்டடம் கட்டுதல் ரூ.37.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

(36) ரூ.50 இலட்சம் செலவில் 25 தலைமையிட மருத்துவமனைகளுக்கு தளவாடங்கள், படுக்கைகள் போன்றவை வழங்கப்படும்.

(37) இராமநாதபுரம் தலைமையிட மருத்துவமனையில் ரூ.130 இலட்சம் செலவில் 100 கூடுதல் மின்விசிறி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(38) ஈரோடு தலைமையிட மருத்துவமனையில் ரூ.15.78 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மின்தூக்கி அமைக்கப்படும்.

(39) திண்டுக்கல் தலைமையிட மருத்துவமனையில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அறுவைச் சிகிச்சை அரங்கம் ஒன்று கட்டப்படும்.

(40) கும்பகோணம் தலைமையிட மருத்துவமனையில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிப் பிரிவு ஒன்று கட்டப்படும்.

(41) 25 வட்டார மருத்துவமனைகளில் உள்ள 25 அறுவைச் சிகிச்சை அரங்கங்களில் ரூ.14 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதிகள் செய்து தரப்படும்.

(42) 27 வட்டார மருத்துவமனைகளில் ரூ.1.65 இலட்சம் செலவில் தொலைபேசி வசதிகள் செய்து தரப்படும்.

(43) அனைத்து வட்டாரத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு தளவாடங்கள் மற்றும் படுக்கைகள் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

(44) சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர் அரசு மருத்துவமனையில் ரூ.30.50 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு ஒன்று கட்டப்படும்.

(45) 20 வட்டம் சாரா மருத்துவமனைகளில் தளவாடங்கள், படுக்கைகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

(46) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்கு ரூ.4.50 இலட்சம் செலவில் கணினிகள், உபகரணங்கள் வழங்கப்படும்.

(47) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் தானியங்கி காகிதம் வெட்டும் சாதனம் வழங்கப்படும்.

(48) தெரிந்தெடுக்கப்பட்ட 4 மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.40 இலட்சம் செலவில் மாதிரி பல் மருத்துவச் சிகிச்சைத் திட்டம் அமலாக்கப்படும்.

(49) 600 துணை சுகாதார மையங்களுக்கு ரூ.30 இலட்சம் செலவில் மின் வசதி செய்து தரப்படும்.

(50) பொது சுகாதாரத் துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கு கணினி பயிற்சி அளிப்பதற்கென சேலம் மற்றும் மதுரையில் ரூ.49.40 இலட்சம் செலவில் கணினி பயிற்சி மையங்கள் நிறுவப்படும்.



(51) மருந்துக் கட்டுப்பாடு இயக்ககத்தில் உள்ள மருந்துகள் பரிசோதனை நிலையத்திற்கு ரூ.9.25 இலட்சம் மதிப்பீட்டில் கருவிகள் வழங்கப்படும்.

(52) மருந்துக் கட்டுப்பாடு அலுவலகத்திற்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கணினி முதலானவை வழங்கப்படும்.

(53) 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.66.11 இலட்சம் மதிப்பீட்டில் இந்திய மருத்துவ முறை மற்றும் ஓமியோபதி பிரிவுகள் தொடங்கப்படும்.

(54) சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனையில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவிற்கான கட்டடம் கட்டப்படும்.

முற்பகல் 11-05

(55) அனைத்து மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள அவசர மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவிற்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கருவிகள் வழங்கப்படும்.

(56) தலைமைச் செயலகத்தில் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையை நவீனப்படுத்துவதற்கென ரூ.5.09 இலட்சம் செலவில் கணினி வழங்கப்படும்.

இந்த அறிவிப்புகளை மாமன்றத்திற்குத் தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். எங்களுடைய துறைக்கு இவ்வளவு நிதியை ஒதுக்குவதற்குக் காரணமாக இருந்த நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே என்னுடைய பதிலுரையிலே முடிந்த அளவிற்கு நம்முடைய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துகளுக்குப் பதிலை நான் சொல்லியிருக்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக, உலக வங்கியிலிருந்து நிதியைப் பெறுகிற அந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற, வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகச் சொல்லியிருக்கிற, அத்துணை கோரிக்கைகளும் நிச்சயமாக நிதி வசதியைப் பொறுத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப்பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 18...

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல்வேறு அறிவிப்புகளை இங்கே வெளியிட்டார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ULTRASONIC Scan, ஒரு ECG கருவி, அதைப்போல இயன்றவரையில் ஒரு எக்ஸ்ரே கருவி, மாவட்டத் தலைமையிடங்களிலே MRI Scan, C.T. Scan (குறுக்கீடு) சரி, MRI Scan இரண்டு மாவட்டங்களிலும், மற்ற இடங்களில் C.T. Scan, டயாலிசிஸ் கருவி, இவை எல்லாம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். நல்ல அறிவிப்புகள், நான் வரவேற்கிறேன்.

இப்போது வழங்கப்படுகிற இந்தக் கருவிகள் மட்டுமல்ல; ஏற்கெனவே பல மருத்துவமனைகளில் வழங்கப்பட்டிருக்கிற கருவிகள் அனைத்தும் எப்போதும் இயங்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், நாங்கள் செல்கின்ற பல இடங்களில் எங்களிடம் புகார்கள் சொல்கிறார்கள் இந்தக் கருவிகள் இயங்கவில்லை என்று. சில இடங்களில் இயங்கக்கூடிய நிலையில் கருவிகள் இருந்தன என்று சொன்னால், அதை இயக்குவதற்கு டெக்னீஷியன்கள் கிடையாது. உதாரணமாக எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் பேசினார்கள். அவருடைய மாவட்டத்தில் நான் சென்ற மாதம் சென்றிருந்தபோதுகூட, கூடலூரிலே என்னிடத்திலே சொன்னார்கள். எக்ஸ்ரே மெஷின் வேலை செய்யவில்லை; ஈ.சி.ஜி. கருவி வேலை செய்யவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். எனவே இத்தகைய புகார்கள் இல்லாத வண்ணம் அனைத்து இடங்களிலும் அவை இயங்கக்கூடிய நிலையைப் பார்க்கவேண்டும். நல்ல தரமான டெக்னீஷியன்கள் இருக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல; என்னுடைய தொகுதியிலேகூட—அமைச்சர் அவர்களுக்கே தெரியும்—தொண்டாமுத்தூரில் 24 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு அரசு மருத்துவமனை இயங்கிக்கொண்டிருக்கிறது. அங்கே மருத்துவமனை கட்டடம் மட்டும்தான் இருந்தது. முன்பு எதுவுமே இல்லை. நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னர், 10 படுக்கைகள்



வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். முழுமையாக 24 படுக்கைகள் வசதி செய்து தரப்பட வேண்டும்.

அதைப்போல பெரியநாயக்கன்பாளையத்திலே அரசு மருத்துவமனையாக மேம்படுத்தப்பட்டு பல ஆண்டுகள் ஓடிவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., கோரிக்கைகளை இங்கே சொல்லக்கூடாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரே நிமிடம், கோரிக்கை அல்ல. Clarification தான். அது கோரிக்கையாக இருந்தாலும் அதில் ஒன்றும் தவறு இல்லை. பெரியநாயக்கன்பாளையம் மருத்துவமனை ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைகள் கூட ஒன்று அல்லது இரண்டுதான் கேட்கலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒன்றேதான், நான்கும் connected. Connection இல்லாமல் ஒன்றுமே இல்லை. ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உள்ளவை. அதைப்போல பக்கத்தில் துடியலூரில் இயங்குகிற ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக கோரிக்கைகள் வைத்துக்கொண்டிருக்கிறோம். பக்கத்திலே பல்லாயிரக்கணக்கான செங்கல் சூளைத் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தடாகம் பகுதியிலே. அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்துகிறோம். கருத்துருவும் அனுப்பப்பட்டு இருக்கிறது. இவை எல்லாம் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிற கருவிகள், இப்போது வழங்க இருக்கிற கருவிகள் எல்லாம் நல்ல முறையிலே பராமரிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நல்ல ஆலோசனைதான். அதற்காகத்தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்—நான் ஏற்கெனவே சொன்னதுபோல முன்பு கருவிகள் எல்லாம் 'எல்காட்' நிறுவனத்தின் மூலமாகத்தான் பழுதுபார்க்கப்பட்டு வந்தன.

[திரு. செ. செம்மலை] [2003 ஏப்ரல் 4

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1966, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் மாவட்டத்தில் விளையாட்டு மையம் ஒன்று உடன் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3176, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சி மாநகராட்சியில் உள்ள நான்கு கோட்டங்களில் ஒவ்வொரு கோட்டத்திலும் ஓர் தலைமையிடத்தைத் தேர்வு செய்து பொது விளையாட்டு மைதானங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3471, திரு. ஆ. ராஜகோபால்.



***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஊராட்சி ஒன்றிய அளவில் விளையாட்டு மையங்கள் அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1984, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரில் புதிதாக ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2037, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்டத் தலைநகரங்கள் அனைத்திலும் வெளி மற்றும் உள் விளையாட்டுக்கள் விளையாட ஏதுவாக விளையாட்டு அரங்கங்கள் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2925, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3755, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரத்தில் விளையாட்டு அரங்கம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2153, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள அனைத்து வட்டத் தலைநகரங்களில் விளையாட்டு மைதானங்களும், மாவட்டத் தலைநகரங்களில் உள் விளையாட்டு அரங்குகளும் உடன் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 995, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி மலையடிவாரத்தில் உள்ள 6 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் பெரிய ஸ்டேடியம் உள் விளையாட்டு அரங்கம், துறையின் மூலம் நடப்பாண்டில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2939, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்டந்தோறும், விளையாட்டுப் பள்ளிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3276, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இளைஞர்களிடையே விளையாட்டை ஊக்கப்படுத்தும் வகையில் வட்டந்தோறும், விளையாட்டுப் பயிற்சி மையங்களை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3501, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறையில் உள்ள விளையாட்டு மைதானத்தைச் சீர்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1091, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் உள்ள விளையாட்டு மையங்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 341, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இளைஞர்களை சமூக விரோதச் செயல் அல்லது தவறான குற்றங்களோ செய்யாமல் சமூக உறவு மலரும் வகையில் அனைத்து கிராமங்களிலும் விளையாட்டை ஊக்குவிக்கின்ற அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 516, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் இளைஞர் நலக் குழு அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3062, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்திய கிரிக்கெட் வாரியத்தின் மூலம் வீரர்கள் தேர்வு செய்வதில் தமிழக வீரர்கள் இடம் பெறாதது குறித்தும், தமிழகத்தைச் சேர்ந்த திறமையான வீரர்களை இந்திய அணியில் இடம் பெறச் செய்திட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்திட வேண்டியதன் அவசியம் குறித்தும்' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1771, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விளையாட்டு வீரர்களுக்கு அரசுத் துறையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3062, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மனிதனை எல்லா வகையிலும் சிறந்தவனாக்க உதவும் விளையாட்டுத் துறைக்கு அதிக நிதியொதுக்கி தனிக் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,11,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை, பொதுத் துறை, பள்ளிக் கல்வித் துறை, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற அனைத்து வெட்டுத் தீர்மானங்களுக்கும் அந்தந்தத் துறை தக்க பதிலை அளித்து இருக்கிறது. இந்த விவாதத்திலே கலந்துகொள்ள இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளையும், ஆலோசனைகளையும் இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்ன பிறகு, என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கத்தை அளிக்க இருக்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

***டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துகளைப் பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைக் கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன். கல்வியானது, வறுமை, துயரம், வன்முறை போன்றவற்றைப் போக்குவதற்கு சிறந்த சக்தியாக விளங்குகிறது. கல்வியானது, பட்டம் பெறுவதற்கு மட்டும் அல்லாமல், வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து பல விஷயங்களை கற்றுக் கொள்வுதற்கு ஒரு வாய்ப்பாக உள்ளது. இப்படிப்பட்ட சிறப்பான கல்வியானது, ஒருகாலத்திலே, ஒருசிலரின் ஏகபோக உரிமையாக இருந்ததை, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கிராமங்கள்தோறும் பள்ளிகளை ஆரம்பித்தார்கள். பள்ளிகளை ஆரம்பித்து, அனைவருக்கும் கல்வி, அனைத்து சமுதாயத்திற்கும் கல்வி, எல்லோருக்கும் கல்வி என்ற திட்டத்தின் மூலமாக 30,000 பள்ளிகளுக்கு மேல் ஆரம்பித்து, மிகப் பெரிய அளவில் ஒரு கல்விப் புரட்சியை ஏற்படுத்தினார்கள்.

---

@ 521 முதல் 764 வரையிலான பக்கங்களில் இணைப்பு I, II, III, IV, V மற்றும் VI ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

மாணவர்கள் படிப்பதற்காக இலவச மதிய உணவு, இலவச உடை, இலவச புத்தகங்கள் போன்ற பல்வேறு சலுகைகளை அளித்து பல இலட்சக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்பதற்கு வழி வகுத்தார்கள். மாணவர்களுக்கு மட்டும் காமராஜர் செய்யவில்லை. கல்வி போதிக்கின்ற ஆசிரியப் பெருமக்களுக்கும் பல்வேறு சலுகைகளை அளித்தார்கள். அதன் மூலமாக தமிழ்நாட்டிலே மிகப் பெரிய கல்விப் புரட்சியை ஏற்படுத்தினார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த ஆண்டில் அவரை நினைவுகூர்ந்து நான் பேசத் தொடங்குகின்றேன்.

முற்பகல் 11-40

இன்றைக்கு தமிழ்நாட்டிலே, Literacy rate, படித்தவர்களுடைய சதவிகிதம் 62.66 ஆக இருக்கிறது. Rural படிப்பறிவானது 54.59 சதவிகிதமாக இருக்கிறது. பெண்கள் படிப்பறிவு 51.33 சதவிகிதம். Rural பெண்கள் 41.84 சதவிகிதம். ஆதிதிராவிடர்கள் படிப்பறிவு 39.47 சதவிகிதம். ஆதிதிராவிடர் பெண்கள் படிப்பறிவு 29.5 சதவிகிதமாக இருக்கிறது. கல்வி கற்றோர் சதவிகிதத்தைப் பார்க்கும் போது இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெறுகின்றது. முதலிலே கேரளா; இரண்டாவதாக மகாராஷ்டிரம்; மூன்றாவதாக தமிழகம் திகழ்கின்றது. இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்ததற்குக் காரணம், இன்றைக்கு தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், தனியார் பாலிடெக்னிக்குகள், சுயநிதி தொழில் கல்வி நிறுவனங்கள், தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் போன்றவை சிறுபான்மையினர் மற்றும் சிறுபான்மையினர் அல்லாதவர்களால் நடத்தப்பெற்று, தரமான கல்வி கொடுக்கப்படுவதால்தான். அதற்கு மேலாக அரசின் பல்வேறு கல்வித் திட்டங்களின் மூலமாக இப்போது மாபெரும் எழுச்சி மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கின்றது. நகரத்தில் மட்டுமல்லாமல் கிராமங்களிலும் கல்வியைப் பற்றி ஒரு மிகப் பெரிய விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. அதற்கும் மேலாக காலங்காலமாக தமிழகத்திலே உள்ள சமூக நீதி பெற வேண்டும் என்ற அந்த உணர்வு மக்களிடத்திலே இருப்பதன் காரணமாக இப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போல இன்றைய நிலையில் இந்தியா வளர்ந்த நாடாக மாற வேண்டுமென்றால் மிகச் சிறந்த மனிதவளம் தேவை என்று நம்முடைய இந்திய ஜனாதிபதியாக இருக்கின்ற மரியாதைக்குரிய



டாக்டர் அப்துல் கலாம் உட்பட பல அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். சிறந்த மனித வளத்திற்கு கல்வி நிறுவனங்களினுடைய பங்களிப்பு மிக அதிகம் தேவை.

அதைப்போல மாணவர்கள் சிறந்து விளங்குவதற்கு அரசும், கல்லூரிக் கல்வித் துறையும், கல்வி நிறுவனங்களும் கைகோர்த்து ஒன்றோடொன்று ஒற்றுமையாக செயல்பட்டால்தான், அனைவருக்கும் கல்வி என்ற முறையிலே 100 சதவிகிதத்தை எட்ட முடியும் என்பதை நான் பேரவையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் இப்போது அரசும், கல்லூரிக் கல்வித் துறையும், கல்வி நிறுவனங்களும் ஒன்றோடொன்று முரண்பட்டு இருந்துகொண்டிருக்கின்றன. தமிழகத்திலே எவ்வளவு தூரம் கல்வி வளர்ச்சி பெற்றிருக்கின்றதோ அவ்வளவு தூரம் இப்போது வழக்குகளும் நிறைய இருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் போன்றவை எல்லாம் தொடர்ந்து பல வழக்குகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. தினமும் பத்திரிகையைப் பார்த்தால் ஏதாவது ஒரு வழக்கு சம்பந்தமான அறிக்கைகள் வந்து கொண்டேதான் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அரசு போக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவதாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் 10ஆம் வகுப்பு வரை நடத்துகிற 2059 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. Plus Two வரை இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகள் 1391 இருக்கின்றன. ஆக மொத்தம் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 3450 பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பள்ளிகளிலே 10 இலட்சம் மாணவர்களுக்கு மேல் படித்துக்கொண்டிருக்கிறார்கள். 30 ஆயிரம் ஆசிரியர்களுக்கு மேல் பணி செய்துகொண்டிருக்கிறார்கள்.

தமிழக அரசு 17-7-2001-லே ஓர் அரசாணையை G.O. 188 அறிவித்திருக்கிறது. நிருவாக அமைப்புகளிலே இருக்கின்ற, ஏற்படுகின்ற பிரச்சினைகளையும், ஆசிரியர்களுடைய பணிநிலைமைகளையும் உறுதி செய்வதற்கும், அடிப்படை வசதிகள், பள்ளிக் கட்டடம், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் போன்ற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக இந்த அரசாணை

வழங்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கென தனி இயக்குநரகம் நியமனம் செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப்போல இந்த அரசாணை மூலமாக நிர்வாகத்திடமிருந்து பங்குத் தொகை வசூலிப்பது, முறையான அங்கீகாரம், அனுமதி வழங்குதல், மூன்று ஆண்டுக்கு ஒருமுறை தொடர் அங்கீகாரம் கொடுத்தல், நிரந்தர அங்கீகாரம் கொடுத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்காக தமிழக அரசு இந்த அரசாணையை அளித்தது. ஆனால் 1,000 மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு மேல் அங்கீகாரம் கொடுக்கப்படாமல் உள்ளதாக பத்திரிகை வாயிலாகத் தெரிய வருகிறது. இதற்கு என்ன காரணம்? அரசு நிர்ணயித்த அந்தக் கட்டுப்பாட்டிற்குள் அவர்கள் வரவில்லையா? அல்லது வேறு என்ன காரணம் என்பதை அரசு தெரிவிக்க வேண்டுகிறேன்.

அதைப்போலவே இதுவரையில் தமிழக அரசு, நிர்வாகத்திடமிருந்து எவ்வளவு பங்குத்தொகை வசூல் செய்திருக்கிறது? அந்தப் பங்குத் தொகை உரிய முறையில் செலவு செய்யப்படுகிறதா என்பதையும் தெரிந்துகொள்ள நான் விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ரிகுலேஷன் பள்ளிகளை ஒழுங்குபடுத்துவது என்ற வகையிலே அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அதற்கான தனி இயக்குநரகம் நமமுடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது. நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அதை வரவேற்பார் என்று நான் கருதுகிறேன். காரணம், அதற்கு முன்னாலே மெட்ரிகுலேஷன் பள்ளிகளை ஒழுங்கு படுத்துவதற்கோ அல்லது அவற்றைக் கண்காணிப்பதற்கோ எந்த ஓர் அமைப்பும் இல்லை. காளான் வளர்வதைப் போல என்று சொல்வார்கள் அதைப்போல மெட்ரிகுலேஷன் பள்ளிகள் வளர்ந்துவிட்டு, கட்டுப்பாடு இல்லாமல் பலாாலே, ஆதாய நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படுகின்ற கல்வி நிலையங்களாக மாற்றப்பட்டிருந்தது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். எனவேதான் இந்த இயக்குநரகம் அமைக்கப்பட்டு அதை ஒழுங்கு படுத்துவது என்ற வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நிச்சயமாக இதை மாண்புமிகு உறுப்பினர் வரவேற்பார் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) இருங்கள், சொல்லிவிடுகிறேன்.



ஆரம்பிக்கப்பட்டு, ஆரம்பிக்கப்பட்ட பிறகு நிறைய பள்ளிகள் மாணவர்களை சேர்த்தார்களே ஒழிய, பெற்றோர்களிடம் அதிகமான தொகையை வசூல் செய்தார்களே ஒழிய Infrastructure facilities எதையுமே அவர்கள் செய்யவில்லை. அதாவது 5-வது வகுப்பு வரை இருந்தால் என்னென்ன வசதி வாய்ப்புகள் இருக்க வேண்டும், 8-வது வகுப்பு வரை இருந்தால் எப்படி இருக்க வேண்டும், 10-வது வகுப்பு வரை இருந்தால் எப்படி இருக்க வேண்டும், பிளஸ் 2 வரை வகுப்பு இருந்தால் எப்படி இருக்க வேண்டுமென்று ஒரு வரைமுறை இருக்கிறது. இந்த வசதிகள் எல்லாம் இல்லாமல் அந்தப் பள்ளிகள் நடத்தப்பட்டதால்தான் நாங்கள் அதை ஆய்வு செய்தோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல ஆய்வுக்குப் பிறகு முழுமையாக recognition-ஐ இரத்து செய்வதில்லை. உதாரணமாக 10-வது வகுப்பு வரை அவர்கள் பள்ளிகளை நடத்திக்கொண்டிருந்தால் அவர்களுக்கு இருக்கிற அந்த வசதி வாய்ப்புகள், கட்டுமானம், ஆசிரியர்கள், இடவசதி இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அது 8ஆம் வகுப்பு வரை நடத்தத்தகுதி உள்ளது என்று சொன்னால், 8ஆம் வகுப்பு வரை நாங்கள் அங்கீகாரம் கொடுத்து விடுகிறோம். 10ஆம் வகுப்பு வரை கூடாது அல்லது 10ஆம் வகுப்பு வரை வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்குக் கால அவகாசம் கொடுக்கிறோம். அங்கீகாரத்தை இரத்து செய்கிறபோது அந்த உறுதியோடுதான் செய்கிறோம். ஒன்று, இருக்கிற வசதிக்கு ஏற்ப வகுப்புகளை நடத்துங்கள் அல்லது நடத்துகிற வகுப்புகளுக்கு ஏற்ப வசதிகளைப் பெருக்கிக்கொள்ளுங்கள் என்று அதற்குக் கூடுதலான கால அவகாசமும் கொடுக்கிறோம். எனவே இதிலே எந்தவிதத் தவறும் இல்லை. காரணம், மாணவர்களுடைய நலனும் முக்கியம். எனவே அந்த வசதி வாய்ப்புகள் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதே தவிர அங்கீகாரத்தை இரத்து செய்ய வேண்டுமென்பது எங்களுடைய நோக்கமல்ல.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், வரவேற்க வேண்டும், வரவேற்பார் என்று சொன்னார். உள்ளபடியே நாங்கள் இதை வரவேற்கிறோம். ஆனால் இயக்குநர் அவர்கள் மிகக் கெடுபிடியாக இருப்பதன் காரணமாக 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகளுக்கு மேலாக நடத்திக் கொண்டிருக்கிற பள்ளிக்கூடங்களில் ஒருசில அடிப்படை வசதிகளை திடீரென

காட்டுவதற்கு, infrastructure-களை வைக்க ஓரளவு அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையில் ஓர் அதிகாரி கெடுபிடியானவராக கொஞ்சம் strict- ஆக இருப்பதிலே என்ன தவறு இருக்கிறது? அவர் நியாயமாக ஆய்வு செய்கிறார். நியாயத்தின்படி செயல்படுகிறார். இதில் தவறு இல்லை. நான் ஏற்கெனவே சொன்னேன். 10-வது, 12-வது வகுப்புகளை நடத்துகின்றவர்கள் அதற்கான அடிப்படை வசதிகளை செய்துகொள்வதில்லை. எனவே எந்த அளவிற்கு அவர்களுக்கு வசதி இருக்கிறதோ அந்த வகுப்பு வரை நடத்துவதற்கு நாங்கள் அனுமதி கொடுக்கிறோம். மேற்கொண்டு அந்தத் தகுதிகளை நீங்கள் உருவாக்கிக் கொள்ளுங்கள் என்று கால அவகாசமும் கொடுக்கிறோம். நாங்கள் யாரையும் தொந்தரவு செய்வதில்லை, அல்லது யாரையும் வஞ்சிப்பதில்லை. அந்தத் தகுதிக்கு அவர்கள் தங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும். அதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். நான் ஏற்கெனவே சொன்னதுபோல இதில் மாணவர்களுடைய நலனைக் கருதித்தான் இதைச் செய்கிறோம். தனியாருக்கு சாதகமாக இருக்க வேண்டுமென்றால், மாணவர்களின் நலன் பாதிக்கப்படும். எனவேதான் இந்த நடவடிக்கை. இதை நீங்கள் வரவேற்க வேண்டும்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** இதிலே இயக்குநரகம் வேண்டியவர், வேண்டாதவர், விருப்பு, வெறுப்புக்களை கடைப்பிடிப்பதன் காரணமாக பல்வேறு கஷ்டங்களை, பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள் என்பதைத்தான் நான் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கின்றேனே ஒழிய, அது ஒட்டுமொத்தமாக கூடாது என்ற கருத்தில் அல்ல.

அதைப்போல--ஜி.ஓ. 56 மூலமாக--தமிழ் மீடியம் வகுப்புகளை மூடவும், ஆங்கில மீடியத்திற்கு இணையாக தமிழ் மீடியம் நடத்துவதற்கு கோரிக்கைகள் ஏதாவது வந்தால் அதைத் தடுக்கவும் அரசாணை 56-ஐப பிறப்பித்திருக்கிறார்கள். தமிழ் வழிக் கல்வியை ஊக்கப்படுத்தவும், கல்வியில் தமிழ் ஆர்வம்...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசாணை எந்த ஆட்சிக் காலத்தில், எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் நன்றாக இருக்கும்.



**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** ஆட்சியைப் பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். நம்முடைய நோக்கம்தான் முக்கியமாக இருக்க வேண்டுமே ஒழிய, ஆட்சியைப் பற்றிச் சொல்வதிலே அர்த்தம் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வள்ளல் பெருமான், எந்த ஆண்டு என்றாவது சொல்லுங்களேன், அமைச்சருக்கு.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசாணை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் போடப்பட்டது. இதிலிருந்தே தெரிகிறது திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு தமிழ்மீது எவ்வளவு அக்கறை இருந்தது என்பது புலனாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்கள், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் தமிழ் வழிக் கல்வி நடத்திட வேண்டும் என்று முந்தைய ஆட்சிக் காலத்தில் உத்தரவிட்டது நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அந்த வழக்கு உச்சநீதி மன்றத்திலே நிலுவையிலே இருக்கிறது.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** வழக்கு இருந்தாலும் அதை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்பதை நான் கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சட்ட விவகாரங்களில் அப்பாவியாக இருக்கிறார் என்று தெரிகிறது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்றபோது மாநில அரசு அதைச் செயல் படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** அரசு அதற்கு ஏதேனும் அப்பீல் செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. ஆட்சி மாறினாலும் அந்த வழக்கு அரசாங்கத்தாலே எதிர்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றும் தவறு இல்லை. இருந்தாலும் இதைக் கருத்தில் கொண்டு—தமிழுக்கு யார் யாரோ நாங்கள் தமிழைக் காப்பாற்றுகிறோம், தமிழை வளர்க்கிறோம் என்று சொல்கிறவர்கள் எடுத்த முயற்சி தோல்வியடைந்த நிலையில்—நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டையும் செய்திருக்கிறார்கள். எனவே அந்த ஏற்பாட்டின்படி தமிழகத்திலே இருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும், including Matriculation Schools,—இப்போது தமிழகத்திலே 872 பள்ளிகள் தமிழே சொல்லித் தராமல் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணம், விருப்பம் எல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும்—தமிழ் கட்டாயமாக பயிற்று மொழியாகவோ, பாட மொழியாகவோ இருக்க வேண்டும் என்பதிலே தீவிரமாக இருக்கிறார்கள். எனவே இந்த வழக்கு நிலுவையிலே இருப்பதாலே அதைச் செயல்படுத்த முடியவில்லை. இருந்தாலும் அதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்து, அனைத்துப் பள்ளிகளிலும்—தமிழ் படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு இந்த மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட இருக்கிறது, என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளைப் பற்றி தினமும் பத்திரிகைகளிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அண்ணா பல்கலைக்கழகத்தோடு அனைத்துக் கல்லூரிகளையும் இணைத்திருக்கிறீர்கள். அதற்குத் தரமான கல்வி கொடுக்க வேண்டுமென்ற காரணத்தையும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் பல்கலைக்கழகத்தோடு இணைந்த பொறியியல் கல்லூரிகள் இப்போது பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன. சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கு என்று A.I.C.T.E.-யின் வழிகாட்டு நெறிமுறைகள், பல்வேறு கொள்கைகள் ஏற்கெனவே இருக்கின்றன. அதற்கு மேலாக அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருந்தார்கள். அதன் காரணமாக உச்ச நீதிமன்றம், வழக்கிலே பல்வேறு தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் சுயநிதி பொறியியல்



2003 ஏப்ரல் 4] [டாக்டர் பி. வள்ளல் பெருமான்]

கல்லூரிகளின் நிர்வாகிகள் தனியாகக் கூடி மாணவர்கள் சேர்க்கை, மற்றும் படிப்பிற்கான கட்டணங்களை அவர்கள் தனியாக அறிவித்தார்கள். அதற்கு மேலாக தமிழக அரசு, சில திட்டங்களை அறிவித்திருக்கிறது. B.E. admission-களில் சிறுபான்மையினர் கல்லூரிகளிலே மாணவர்கள் சேர்க்கை நிர்வாகத்திற்கு 70 சதவிகிதமாகவும், அரசு ஒதுக்கீடு 30 சதவிகிதமாகவும், சிறுபான்மை அல்லாத கல்லூரிகளிலே நிர்வாகத்திற்கு 50 சதவீதமும் ஒதுக்கி இருக்கிறார்கள். படிப்புக் கட்டணமாக ரூபாய் முப்பது ஆயிரம் வசூலித்துக் கொள்ளலாம் என்று அரசு அறிவித்து இருக்கிறது. இந்த முப்பதாயிரம் ரூபாய் மிக அதிகமாக இருப்பதாக பொது மக்கள் மற்றும் மாணவர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டிலே இருபது ஆயிரம் சீட்டுகளுக்கு மேல் நிரப்பப்படாமல் இருந்தன. அப்போது 49,500 ரூபாய் payment seat-க்காக கல்லூரிக் கட்டணமாக ஒதுக்கியிருந்தார்கள். Free Seat-க்கு— (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்து விடுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** இல்லை, இல்லை. ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 10 பேர் பேச வேண்டும்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** ரூ. 12,000-த்திலிருந்து 15,000 ரூபாய் வரை ஒதுக்கியிருந்தார்கள். அப்படிக் குறைவாக இருந்தபோதே 20,000 சீட்டுகளுக்கு மேல் நிரப்பப்படாமல் இருந்தன. இபபோது சீட் ஒன்றுக்கு 30,000 ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். அந்தக் கட்டணத்திற்கு மேலாக, கல்லூரிகள் mess fees, library, transport என இன்னும் பல்வேறு தொகைகளை வசூலிப்பதன் காரணமாக 50 ஆயிரத்தில் இருந்து 60 ஆயிரம் ரூபாயாக ஒரு மாணவன் படிப்பதற்குச் செலவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இப்போது இருக்கிறான். ஆகவே இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு உரையை முடித்து விடுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பிறகு அரசு நன்றாக ஆய்ந்து மாணவர்கள், பெற்றோர்கள் பாதிக்காத வகையில்தான் அந்த வழிகாட்டுதல்களை நாங்கள் செய்தோம், தெளிவான கொள்கையை நாங்கள் வகுத்தோம். இருந்தாலும் அதற்குப் பிறகு A.I.C.T.E.-லிருந்து தனியாக ஒரு கொள்கை சொல்லப்பட்டது. எனவே அதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்திலே சில தனியார் பொறியியல் கல்லூரிகள் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். அந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது. அந்த வழக்கினுடைய தீர்ப்பு வெளிவந்த பிறகு நம்முடைய அரசினுடைய கொள்கை தெளிவாக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயமாக இருக்க வேண்டும் என்ற ஒரு நிலையை எடுத்து அதற்கான வழிமுறையைக் கண்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கிற வழக்கின் அடிப்படையில் ஒரு மொழியைக் கட்டாயப் பாடமொழியாகவோ, பயிற்று மொழியாகவோ யார் மீதும் திணிக்கக்கூடாது என்பதுதான் நீதிமன்றத்திலே இருக்கிற அந்த வழக்கினுடைய தன்மை. ஆனால் இப்போது அதற்கு மாறாக பகுதி-1 அல்லது பகுதி-2-லே தமிழ மொழியை பாடமாக்கினால்தான் கட்டாயமாகத் திணிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதுபோல பயிற்று மொழி என்று சொல்கிறபோதுதான் கட்டாயம் என்று சொல்கிறார்கள். எனவே அதறகு ஒரு மாற்று ஏற்பாடாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3-வது பகுதியிலே தமிழை ஒரு பாடமாக ஆக்கி அதற்கு அறிவியல் தமிழ் என்று பெயர் வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் அது எந்தப் பள்ளிகளாக இருந்தாலும், தனியார் பள்ளிகளாக இருந்தாலும் சரி, அரசாங்கப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, Matriculation பள்ளிகளாக இருந்தாலும் சரி, அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்றாவது முதல் ஐந்தாவது வரை 3-வது பகுதியிலே தமிழ் மொழி ஒரு பாட மொழியாக, அதுவும் அறிவியல் தமிழ் என்ற அந்தப் பெயரிலே அது கட்டாயமாக கற்பிக்கப்படும். இதை யாரும் மறுக்க மாட்டார்கள். இதிலே மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல், சுமையும் இல்லாமல் அதற்கு பாடத் திட்டங்களை வகுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே இனி எதிர்காலத்தில் தமிழகத்திலே இருக்கிற



அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கற்றுக் கொடுக்கப்படும். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்கி இருப்பவர் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தமிழக சட்டப் பேரவையின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிக்கு, பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்லும் வாகனங்களுக்குத் தமிழக அரசு அதிகமான அளவில் வரியை உயர்த்தி இருக்கிறது. அந்த வரி போட்டதன் காரணமாக — மாணவர்கள் ஏற்கெனவே நிறைய தொகையை செலவு செய்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாகனங்களுக்குப் போடப்பட்டிருக்கின்ற வரியின் காரணமாக—அதற்குண்டான பணத்தையும் பெற்றோர்களிடத்தில்தான் வசூல் செய்வார்கள். ஆகவே இதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்து இந்த Tax-ஐ குறைக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். Tax, Transport மாணவர்கள் செல்லும் பஸ்......

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினை இந்தத் துறையின்கீழ் வராது. அதற்கு நான் சம்பந்தப்பட்ட அமைச்சரும் அல்ல.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** இருந்தாலும் கல்வி படிக்கக்கூடிய மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய வாகனங்களாக இருப்பதன் காரணமாக இதை நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தனியார் பள்ளி நிறுவனங்கள் அவர்கள் இயக்குகிற வாகனங்களுக்கு பள்ளி மாணவர்களிடமும், கல்லூரி மாணவர்களிடமும் தேவைக்கு மேல் கட்டணம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். மாணவர்களிடம் அதிக கட்டணம் வசூல் செய்து கொண்டு அரசுக்கு வெறும் 500 ரூபாய்தான் 3 ஆண்டு காலத்திற்கு வண்டிக்கு வரி செலுத்தி வந்தார்கள். ஆகவே அவர்கள் வசூல் செய்கிற ஒரு பகுதியிலேதான் இப்போது அரசுக்கு வரி

செலுத்துகிறார்கள். புதிதாக ஒன்றும் கட்டணம் விதிக்கவில்லை. ஏற்கெனவே வாங்கிக் கொண்டிருக்கிற கட்டணத்திலேதான் இந்த வரியைச் செலுத்துகிறார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வள்ளல் பெருமான், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

நுழைவுத் தேர்வு எழுதுவதற்கு மாணவர்கள் இரண்டு தேர்வுகள் எழுதுவதுபோல இப்போது ஒரு மாயை இருக்கிறது. அரசாங்கம், பல்கலைக்கழகம் மூலம் ஒரு தேர்வும், தனியார் கல்லூரிகள் மூலம் ஒரு தேர்வும் எழுத வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறார்கள். இது சம்பந்தமாக மக்களிடத்திலே, பொதுவான ஒரு குழப்பம் இருக்கிறது. இரண்டு முறை தேர்வு எழுதினால் இரண்டு முறை கட்டணம் கட்ட வேண்டும். இரண்டு Application-கள் போட வேண்டும். இது சம்பந்தமாக அரசு ஒரு நிலைப்பாட்டினை பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் ஒற்றைச் சாளர முறையில், Single window system மூலமாக மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமாக தமிழக அரசு ஒரு நிலைப்பாட்டினை எடுத்திருக்கிறது. அது சம்பந்தமாக அவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறார்கள். திரும்ப 2002-2003-லே உச்ச நீதிமன்றம் ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. பல்கலைக்கழக மானியக் குழு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள். கடைசி வாக்கியத்தைச் சொல்லுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் தேர்வின் மூலமாக நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் சேர்க்கை நடைபெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பேச்சை முடித்துவிடுங்கள். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

***திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004ஆம் ஆண்டு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை முடியுங்கள். விஜயலட்சுமி பழனிச்சாமி, கொஞ்சம் இருங்கள். வள்ளல் பெருமான் கடைசி, நிறைவு வாக்கியத்தைச் சொல்லுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆரம்பிப்பது சம்பந்தமாக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவு எல்லாம் பேசுவதற்கு முடியாது. திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, பேசுங்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

## 4. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

### புதிய தலைமைச் செயலக வளாகம் மற்றும் இராணி மேரி கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் புதிய தலைமைச் செயலக வளாகம் கட்டுவது சம்பந்தமாக இந்தப் பேரவையில் கடந்த 31-1-2003 அன்று நான் ஓர் அறிவிப்பை ஏற்கெனவே வெளியிட்டேன். அதைத் தொடர்ந்து, அரசு உயர் அலுவலர்களுடன் கலந்து ஆலோசனை நடத்தப்பட்டது. அரசு அளவில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து தமிழக அரசின் நிலையை இங்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தற்போதைய தலைமைச் செயலக வளாகத்திலுள்ள பிரதான கட்டடம் 1781 ஆம் ஆண்டிலேயே கட்டப்பட்டது. ஆனால் நாமக்கல் கவிஞர் மாளிகை என்று அழைக்கப்படுகின்ற 10 மாடிக் கட்டடம் 1975 ஆம் ஆண்டு கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் கட்டப்பட்டது. தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்களின் தேவைக்கும் அரசு தொடர்பான பிற தேவைகளுக்கும் இந்த இரு கட்டடங்களில் உள்ள இட வசதி சற்றும் போதுமானதாக இல்லை. நான் ஏற்கெனவே இந்தப் பேரவையில் தெரிவித்துள்ளபடி செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்று அழைக்கப்படுகின்ற இந்த வளாகம் மத்திய அரசின் இராணுவத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை மொத்தம் 107.5 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். இதில் மிகக் குறைந்த அளவான 3.9 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமேதான் தமிழக அரசின் தலைமைச் செயலகமும், சட்டமன்றப் பேரவைக் கட்டடமும் அமைந்திருக்கின்றன. ஆக, ஏறத்தாழ 7,000 அரசுப் பணியாளர்களும், அலுவலர்களும், அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், ஆயிரக்கணக்கான பொதுமக்களும், தினசரி பயன்படுத்துகின்ற நமது தலைமைச் செயலக வளாகம் இவ்வளவு சிறிய இடத்தில் அமைந்துள்ள காரணத்தினாலேயே இங்கே இட நெருக்கடி என்பது எப்போதும் நமக்கு ஓர் இடர்ப்பாடாகவே இருக்கிறது என்பதையும் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

பிற்பகல். 12-05

மேலும் அப்போதைய தி.மு.க. ஆட்சியினரால் கட்டப்பட்ட இந்த 10 மாடிக் கட்டடம், கட்டுமானப் பணிகள் தொடர்பான ஊழல்கள் காரணமாக தரமற்ற முறையில் கட்டப்பட்டதால் நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டடத்தின் உட்பகுதியில் அனேக இடங்களில் விரிசல் ஏற்பட்டு, பல இடங்களில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளது. கழிப்பிடங்கள்கூட சீர்கேடு அடைந்து அவற்றிலிருந்துகூட நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளதால், அரசுப் பணியாளர்கள் பயன்படுத்தத் தகுதியற்றவையாக இருக்கின்றன. மேலே உள்ள தளங்களில் உள்ள கழிப்பிடங்களில் இருந்து நீர்க்கசிவு கீழ்தளங்களில் இறங்கி விழுவதால், அந்தக் கட்டடத்திலேயே மனிதர்கள் அமர்ந்து பணியாற்ற முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது அனைவருக்கும் நன்கு தெரியும்.



நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டடத்தின் கடந்த 1994 ஆம் ஆணடு, மூன்றாவது தளத்திலுள்ள பால்கனியின் கான்கிரீட் சாய்மானச் சுவர் இடிந்து விழுந்து, தலைமைச் செயலகப் பணியாளர் ஒருவர் படுகாயம் அடைந்ததும் அனைவருக்கும் தெரியும். இதையடுத்து, இடிந்துவிழும் நிலையில் இருந்த பால்கனி சுவர்கள் மட்டும், 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்க்கப்பட்டன. மேலும் 1996-1997 ஆம் ஆண்டு முதல் 2002-2003 ஆம் ஆண்டு வரை, சிறப்பு பழுது பார்ப்பதற்காக, 7 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பழுது நிவர்த்திப் பணிகளுக்காக இந்த ஆண்டு, 1 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டியுள்ளது. தற்போது மேலும் பழுது அடைந்துள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டடம் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் மேலும் மோசம் அடைந்து பணியாற்றுவதற்கு சற்றும் தகுதியற்றதாகவும், பாதுகாப்பற்றதாகவும் ஆகிவிடும் என்பதே அதன் தற்போதைய அவலநிலை.

நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டப்பட்டபோது ஒரு குறுகிய கண்ணோட்டத்தில் சற்றும் தொலைநோக்குப் பார்வையின்றி முற்றிலும் அலுவலக இடவசதிக்காக மட்டுமே வடிவமைக்கப்பட்டது. எனவே ஒரு நவீன தலைமைச் செயலகத்திற்குத் தேவையான பல்வேறு கட்டமைப்பு வசதிகள் இக்கட்டடத்தில் இல்லை. ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டால் அதை உடனடியாக சமாளித்து அணைக்க சரியான திட்ட வசதி கூட இக்கட்டடத்தில் இல்லை. கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் குஜராத் மாநில தலைமைச் செயலகக் கட்டடங்களில், பெரிய கூட்ட அரங்கம், விருந்தினர் கூடம், சட்டமன்றப் பேரவை அரங்கம் போன்ற பல நவீன வசதிகள் உள்ளன. கேரள அரசு, சட்டமன்றப் பேரவைக்கென ஒரு புதிய வளாகத்தையே தனியாகக் கட்டியுள்ளது.

நமது மாநிலத்தில்கூட, புதிதாக தலைமைச் செயலக வளாகம் கட்ட வேண்டுமென்ற எண்ணம் நீண்ட நாட்களாகவே இருந்து வந்துள்ளது. இது ஒன்றும் புதிய கருத்து அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் புதிதாக தலைமைச் செயலக வளாகத்தை புனித ஜார்ஜ் கோட்டைக்கு வெளியே ஏற்படுத்துவது பற்றி ஏற்கெனவே பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. 2-5-1983ஆம் நாளிட்ட சட்டமன்றச் செயலக அரசாணையின்படி, புதிதாக சட்டப்பேரவை வளாகத்தை புனித ஜார்ஜ் கோட்டைப் பகுதிக்கு எதிர்ப்புறத்தில் அரசுக்குச் சொந்தமான காலியிடத்தில் கட்டுவதற்கு கொள்கை முடிவு எடுத்து ஆணை வெளியிடப்பட்டது. பல்வேறு

காரணங்களினால், இந்த முயற்சி பின்னர் தொடரப்படவில்லை. நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டப்பட்டு 8 ஆண்டு காலத்திற்குள்ளேயே இடவசதியின்மை காரணமாக சட்டப்பேரவை வளாகத்தை புதிதாக வெளியில் கட்ட வேண்டுமென்ற தேவை எழுந்த நிலையில் கடந்த 20 ஆண்டு காலத்தில் இந்தத் தேவை எந்த அளவுக்கு அதிகரித்துள்ளது என்பதையும், இன்னும் வருங்காலத்தில் எந்த அளவுக்கு இந்தத் தேவை மேலும் அதிகரிக்கும் என்பதையும் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் காரணங்களின் அடிப்படையில்தான், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அனைத்து வசதிகள் கொண்ட விசாலமான சட்டமன்றப் பேரவை அரங்கம், கூட்ட அரங்கம், விருந்தினர் கூடம், ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கான விசாலமான அறைகள், அலுவலகங்கள் மற்றும் பணியாளர்களுக்கான இடவசதி, நவீன கழிப்பறை வசதி, ஹெலிகாப்டர் இறங்கும் தளம் ஆகிய வசதிகளுடன் தமிழக அரசின் புதிய தலைமைச் செயலக வளாகத்தை சென்னையில் புதிதாக நிர்மாணிக்கலாம் என்று தமிழக அரசு முடிவெடுத்தது.

அதன்படி புனித ஜார்ஜ் கோட்டையைச் சுற்றியிருக்கும் சில இடங்களும் வேறு சில இடங்களும் விரிவாக பரிசீலிக்கப்பட்டன. தற்போதைய தலைமைச் செயலக வளாகத்திலேயே புதிய தலைமைச் செயலக வளாகம் கட்டுவது, அல்லது புதிய கூடுதல் கட்டடம் ஒன்றை மட்டும் கட்டுவது, புனித ஜார்ஜ் கோட்டைக்கு எதிரில் உள்ள இடத்தில் முழுமையான தலைமைச் செயலக வளாகம் கட்டுவது போன்ற சில ஆலோசனைகளும் பரிசீலிக்கப்பட்டன. ஆனால் இவற்றில் அடங்கியுள்ள சிக்கல்கள் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள் கட்டடம் கட்டுவதற்கு இந்திய தொல்பொருள் துறையால் விதிக்கப்படும் தடைகள் போன்றவை காரணமாக இந்த யோசனைகள் கைவிடப்பட்டன. எனவே அதன் பின்னர் காமராஜர் சாலையில் இராணி மேரி கல்லூரிக்கும் விவேகானந்தர் நினைவிடத்திற்கும் இடைப்பட்ட இடம் முழுமையான அனைத்து வசதிகள் கொண்ட புதிய தலைமைச் செயலகம் கட்டத் தகுந்த இடமாகக் கருதப்பட்டு, அதுவும் தமிழக அரசினால் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது.

பிற்பகல் 12-10

சென்னையை அடுத்த மாமல்லபுரம் அருகே 'புதிய நிர்வாக நகரம்' New Administrative City, அமைக்கும் திட்டம் ஒன்றும் அரசின்



பரிசீலனையில் ஏற்கெனவே இருப்பதையும் தமிழக அரசு தனது கவனத்தில் கொண்டது. இதற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்துவது, தக்க நிதி ஆதாரத்தைத் திரட்டுவது, போக்குவரத்து முதலிய உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது, போன்ற சிக்கல்களைப் பார்க்கும்போது, இந்தத் திட்டம் எப்போது தொடங்கி, எப்போது முடிவடையும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது என்பதே உண்மை. மேலும் அதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம். இதற்காகக் காத்திருந்தால், இதற்கிடையே தற்போதைய தலைமைச் செயலகக் கட்டடம் மேலும் மோசமான நிலையை அடையும். பணியாளர்கள் பணி செய்யத் தகுதியற்றதாகவும், பாதுகாப்பற்றதாகவும் ஆகிவிடும் என்பதே யதார்த்த உண்மை என்பதையும் தமிழக அரசு நன்கு உணர்ந்துள்ளது. நாமக்கல் கவிஞர் மாளிகை முற்றிலும் சேதம் அடைந்து, இடிந்து விழுவதற்குள் புதிய தலைமைச் செயலக வளாகக் கட்டடத்தைக் கட்டுவது இன்றைய அவசர, அவசியத் தேவையாகும். இது காலத்தின் கட்டாயம் ஆகும்.

பெங்களூரிலுள்ள "விதான் செளதா" கட்டடத்தைப் போன்ற எழிலார்ந்த தோற்றத்தையும், பெரிய கூட்ட அரங்கங்கள் கொண்ட புது தில்லியில் உள்ள "விக்யான் பவன்" மற்றும் பாராளுமன்றத்தை ஒட்டியுள்ள Parliament Annexe-ல் உள்ள நவீன வசதிகளுடன் கூடிய கூட்ட அரங்கங்கள் போன்றவற்றைக் கொண்டும் புதிய தலைமைச் செயலக வளாகக் கட்டடம் உலகப் புகழ் பெற்ற மெரீனா கடற்கரைக்கு தனது கலைநயம் கொண்ட கட்டடத்தால் மேலும் சிறப்பு சேர்க்க வேண்டும் என்றும் நான் விரும்பினேன்.

இதன் பின்னர், இக்கருத்து பற்றி தலைமைச் செயலகத்தில் தொடர்புடைய அதிகாரிகளுடன் மேலும் விவாதிக்கப்பட்டது. Lady Willington College விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி, அதாவது வளாகத்தில் உள்ள 12 முதல் 15 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பு, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட அனைத்து நவீன வசதிகளுடன் புதிய தலைமைச் செயலக வளாகம் கட்டப்பட பொருத்தமாக இருக்காது என்பதாலும், பெங்களூரிலிருக்கும் "விதான் செளதா" கட்டடத்தைவிட, மிகவும் அழகுடன் இந்தப் புதிய கட்டடம் அமைய வேண்டுமெனில், அதற்கு ஏற்ற போதுமான காலி இடம் விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி வளாகத்தில் இல்லை என்பதாலும், அதற்குப் பதிலாக வேறு இடத்தைத் தேர்வு செய்யலாம் என்றும் அரசு கருதியது.

இந்தச் சூழ்நிலையில் இராணி மேரி கல்லூரிக்கு அருகில் உள்ள இடமும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த இடம் கிட்டத்தட்ட 30 ஏக்கர் பரப்பளவில், 300 மீட்டர் பக்கம் கொண்ட சதுர வடிவ நிலமாக அமையப் பெற்றுள்ளது. அங்கு 26 சிறிய மற்றும் நடுத்தர வகைக் கட்டடங்கள் உள்ளன. அங்குள்ள பெரும்பாலான கட்டடங்கள் செங்கல் மற்றும் சுண்ணாம்புக் காரையில் கட்டப்பட்டவை. இவற்றில் ஒன்றுகூட கட்டடக் கலைநயமோ, நேர்த்தியான முகப்போ கொண்டவை அல்ல. பெரும்பாலான கட்டடங்கள் பழுது பார்க்க முடியாத நிலையில் இருப்பதாகவும், Capper House என்ற கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாகவும், பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவின் தலைமைப் பொறியாளர் தெரிவித்திருந்தார். இராணி மேரி கல்லூரி நிர்வாகத்தினர்கூட, அங்கு தங்கியிருப்பவர்களின் பாதுகாபபு கருதி Capper House என்ற இந்தக் கட்டடத்தை இடித்துவிட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். கல்லூரி நிர்வாகத்தின் வேண்டுகோளின் பேரில் அக்கட்டடத்தின் வலுவை ஆய்வு செய்து, அதனை விரைவாக இடித்துத் தரைமட்டமாக்கிவிட முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி 1-12-2000 நாளிட்ட, நிலை எண் 471 கொண்ட அரசாணைப்படி, அதாவது முந்தைய தி.மு.க. ஆட்சிக்காலத்திலேயே அக்கட்டடத்தை இடிக்க தமிழக அரசின் உயர் கல்வித் துறை உத்தரவு பிறப்பித்தது என்பதையும், கட்டடத்தை இடிக்கும் பணி பிப்ரவரி 2003-ல் முடிவடைந்தது என்பதையும் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இராணி மேரி கல்லூரி வளாகத்தில் உள்ள மற்ற கட்டடங்களும் இன்னும் சில ஆண்டுகளில் இதைப் போலவே இடித்துத் தரைமட்டம் ஆக்கவேண்டிய நிலையில்தான் உள்ளன.

இதற்கிடையில், இராணி மேரி கல்லூரி வளாகத்தில் அமையவுள்ள புதிய கட்டடத்திற்கான நிலப்பரப்பிற்குக் கடலோர ஒழுங்குமுறை மண்டலம் Coastal Regulation Zone, வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள், Development Control Rules மற்றும் பாரம்பரியத்தைக் காக்கும் கட்டுப்பாடுகள் Heritage norms ஆகியவை பொருந்துமா என்றும் தமிழக அரசால் பரிசீலிக்கப்பட்டது.

இந்த மூன்று நெறிமுறைகளின் அடிப்படையிலும், தற்போதுள்ள விதிகளின் அடிப்படையில், சிக்கல்கள் ஏதுமில்லாத காரணத்தால் இராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிய தலைமைச் செயலகக் கட்டடம் கட்டலாம் என்று தமிழக அரசு முடிவெடுத்துள்ளது



என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

இராணி மேரி கல்லூரி மாணவியர் எவ்வகையிலும் சிரமத்திற்கு உள்ளாகாத வகையில், இந்தக் கல்லூரி தற்போது இருக்கும் இடத்திற்கு மிக அருகில் விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி வளாகத்திலேயே எல்லா வசதிகளுடன் கூடிய ஒரு நவீன கட்டடத் தொகுப்பை உடனடியாகக் கட்டுவதற்கும் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி தற்போதைய இராணி மேரி கல்லூரி வளாகத்தை ஒட்டியே உள்ளது. அவ்வை சண்முகம் சாலைதான் இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையில் உள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த இடமாற்றம் உண்மையிலேயே இராணி மேரி கல்லூரிக்கு நன்மை அளிப்பதாக இருக்கும். புதிய இடத்தில் வருங்கால மாணவியர் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நவீன கல்வி முறைகளுக்குத் தேவையான நவீன வசதிகளுடன் கூடிய ஆய்வுக்கூடம், நூலகம், மற்றும் தங்கும் விடுதி ஆகியவை கொண்ட புதிய கட்டடம் கட்டப்படும். நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கூடுதல் வசதிகளுடன் கிடைக்கவிருப்பதால் இராணி மேரி கல்லூரியை விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி வளாகத்திற்கு மாற்றுவது எந்த வகையிலும் இக்கல்லூரியின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் குறைப்பதாக அமையாது. தற்போதுள்ள வசதிகளும், நலன்களும் இந்தச் சிறு இட மாற்றத்தால் எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டாது என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2004-2005 ஆம் கல்வி ஆண்டு முதல் இராணி மேரி கல்லூரி மாணவியர், இந்தப் புதிய கட்டடத்தில் தங்கள் படிப்பைத் தொடர்வதற்கு ஏதுவாக புதிய கட்டடங்கள் கட்டும் பணி ஓராண்டுக் காலத்திற்குள் முடிக்கப்படும். தற்போது பட்ட மேற்படிப்பு Post Graduate Courses பயிலும் மாணவியர் மற்றும் எம்.பில். M.Phil. பயிலும் மாணவியர் உட்பட இக்கல்லூரியின் மாணவியர் அனைவரும் விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி வளாகத்தில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்படும் வரையிலான இடைப்பட்ட காலத்தில் அவர்களுக்கு இடையூறு ஏதுமின்றி தங்களது கல்வியினைத் தொடர உயர் கல்வித் துறை வாயிலாக, சில ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் தமிழக அரசு கருதி உள்ளது. அறிவியல் பட்ட மேற்படிப்பு M.Sc., படிக்கும் மாணவியர், அறிவியல் மற்றும் கலையியல் பட்டப்படிப்பு B.Sc. and

B.A. பயிலும் மாணவியர், மாநிலக் கல்லூரியில் அதாவது Presidency College-ல் பிற்பகல் 1.15 மணிக்குத் தொடங்கி மாலை 5.45 மணி வரை நடைபெறும் மாலை நேர வகுப்புகளில் பயில்வார்கள். பட்ட மேற்படிப்பு (கலை) M.A. மாணவியர், சென்னை-5, திருவல்லிக்கேணியில் உள்ள விலிங்டன் சீமாட்டி உயர் கல்வி நிறுவனத்திலேயே சேர்க்கப்படுவார்கள். இந்த மாற்று ஏற்பாடுகள் இராணி மேரி கல்லூரி மாணவியர்க்கு மிகவும் வசதியானவை ஆகும். காரணம் மாநிலக் கல்லூரியும் அதாவது Presidency College-ம் விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி வளாகமும் தற்போதைய இராணி மேரி கல்லூரிக்கு மிக அருகிலேயே உள்ளன. இக்கல்வி நிறுவனங்களின் தாம் மற்றும் வசதிகள் இராணி மேரி கல்லூரி தாத்துக்கு சமமாகவும் இன்னும் சொல்லப்போனால் மேம்பட்டதாகவே இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இட மாற்றத்தால் இராணி மேரி கல்லூரி மாணவியருக்கு சிறிதளவு அசௌகரியமோ, சிரமமோகூட இருக்காது.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் பல்வேறு சிறந்த இந்திய மற்றும் சர்வதேச அளவிலான கட்டடக் கலை வல்லுநர்கள் ஆகியோருடன் கலந்து புதிய தலைமைச் செயலகக் கட்டடத்திற்கான வடிவமைப்பு, கட்டட முகப்பு முதலியவை தொடர்பான ஆரம்ப கட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது. தற்போதைய தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள அமைச்சரவைக் கூட்ட அறை, சட்டமன்றப் பேரவைக் கூடம், அமைச்சர்களின் அறைகள் மற்றும் முதலமைச்சரின் அறை ஆகியவற்றையும் பார்வையிடுமாறு கட்டடக் கலை வல்லுநர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன தலைமைச் செயலகக் கட்டடத்தினைக் கட்டுவதற்கு இராணி மேரி கல்லூரி வளாகம் மிகவும் பொருத்தமானது என்றும் கருத்து தெரிவித்துள்ளார்கள். இத்திட்டம் பெரிய அளவிலானது என்பதாலும் பல்வேறு சிறப்பு அம்சங்களை உள்ளடக்கி உள்ளதாலும் இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு C.M.D.A. அதாவது, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

ஆகவே நான் இதுவரை இப்பேரவைக்குத் தெரிவித்துள்ள பல்வேறு கருத்துகளின் அடிப்படையில் இராணி மேரி கல்லூரி வளாகத்தில்



சட்டமன்றப் பேரவைக் கூடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய தலைமைச் செயலக வளாகத்தினைக் கட்டுவதற்கு தமிழக அரசு முடிவெடுத்துள்ளது என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி வளாகத்தில் இராணி மேரி கல்லூரி செயல்படும் வகையில் ஒரு பட்ட மேற்படிப்பு நிலை கல்வி நிறுவனத்திற்குத் தேவையான அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஒரு புதிய கட்டடத் தொகுப்பு கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உரிய ஒப்பந்தப் புள்ளி நடைமுறை மூலம், கட்டட வல்லுநர்களைத் தேர்ந்தெடுப்பது, தலைமைச் செயலக வளாகம் மற்றும் புதிய இராணி மேரி கல்லூரி வளாகம் ஆகியவற்றைக் கட்டுவதற்கான முகமையைத் தேர்ந்தெடுப்பது, கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுவது, இத்திட்டத்துக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவது ஆகிய பணிகள் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம், அதாவது, C.M.D.A.-விடம் ஒப்படைக்கப்படும் என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி வளாகத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டு அதில் இராணி மேரி கல்லூரி இயங்க ஆரம்பிக்கும் வரையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் அந்தக் கல்லூரியில், பயிலும் மாணவியர் முழுமையான வசதிகளுடனும், இடையூறு ஏதுமின்றியும் கல்வி பயிலுவதற்கு ஏற்கெனவே தெரிவித்துள்ள சில இடைக்கால ஏற்பாடுகளை விரைந்து செய்யவும் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது என்பதையும் இப்பேரவை வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போதிய வசதியின்றி மிகவும் பழுதடைந்த நிலையில் இனி எத்தனை ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் என்ற கேள்விக்குறியுடன் உள்ள தற்போதைய தலைமைச் செயலகக் கட்டடங்கள் ஒரு புறம், மிகவும் பழுதடைந்து சிதிலமுற்ற நிலையில் இடிந்து விழக்கூடிய இராணி மேரி கல்லூரி கட்டடங்கள் மறுபுறம். ஆக இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் இவை தற்போதைய உடனடித் தேவைகள் என்பதால் கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும் தொலைநோக்குப் பார்வையோடு எடுக்கப்பட்ட

முடிவுகளான புதிய தலைமைச் செயலக வளாகத்தை இராணி மேரி கல்லூரி வளாகத்தில் கட்டுவது என்ற முடிவையும்; இராணி மேரி கல்லூரிக்கு, விலிங்டன் சீமாட்டிக் கல்லூரி வளாகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்களைக் கட்டித் தருவது என்ற இந்த அரசின் முடிவையும் அனைவரும் வரவேற்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். கல்லூரிக்குத் தேவையான கட்டடங்கள் கட்டும் காலத்தில் மாணவியர்களின் படிப்புக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் உரிய மாற்று ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யத் திட்டமிட்டுள்ளது.

நாடே போற்றும் அளவிற்கு சிறப்புகள் நிறையப் பெற்ற புதிய தலைமைச் செயலக வளாகமும், வசதிகள் மிகுந்த இராணி மேரி கல்லூரி வளாகமும் நமக்கு மிக விரைவிலேயே கிடைக்கும் என்பது உறுதி. "மாற்றம் என்பது வளர்ச்சிக்கான தோற்றம்" என்பதை மனதில் கொண்டு அனைத்துத் தரப்பினரும் அரசின் இந்த நல்ல முயற்சிக்கு தமது ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(ஆ) கோரிக்கை எண் 19-உயர் கல்வித் துறை**—தொடர்ச்சி

**(இ) கோரிக்கை எண் 37-பொதுத் துறை**—தொடர்ச்சி

**(ஈ) கோரிக்கை எண் 41-பள்ளிக் கல்வித் துறை**—தொடர்ச்சி

**(உ) கோரிக்கை எண் 44-தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி-பண்பாடு**—தொடர்ச்சி

**(ஊ) கோரிக்கை எண் 47-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.*

**டாக்டர் க. பொன்முடி:** Point of Order.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order. எல்லாம் கிடையாது. 110-வது விதியிலே விவாதம் கிடையாது. திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

*(திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று அனுமதி கோரினர்)*

***திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உலகெங்கும் உள்ள தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம், என்னுடைய குடும்பத்தின் குல தெய்வமான மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியில் படித்தது பற்றி விவாதம் கூடாது. உட்காருங்கள். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, பேசுங்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** தமிழ் கூறும் நல்லுலகத்தில் நல்லோர்களின் இதயங்கள் வாழ்த்த நல்லாட்சி நடத்திவரும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்கொண்டுவரும் கடும் சூறாவளியைச் சமாளித்து, சோதனைகளை எல்லாம் சாதனைகளாக்கி, சாதனைகளையெல்லாம் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வெற்றி மேல் வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மக்களுக்கு வழிகாட்டி, ஒளியூட்டி வரும் கலங்கரை விளக்காக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்திய நாட்டிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்குவேன் என்று மாண்புமிகு முதலமைச்சர், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறி அவர்கள் மேற்கொள்ளும் (மேசையைத் தட்டும் ஒலி) துணிவான முயற்சிகளுக்கு ஒன்று திரண்டு உறுதுணையாக நம்முடைய மக்கள் நிற்கிறார்கள் என்பதனை அண்மையில் நடைபெற்ற (குறுக்கீடு)....

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ் ஓர் அறிக்கையினை முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அது

தொடர்பான கருத்துகளை விவாதிப்பதற்கு அவை விதிகளிலே இடம் கிடையாது. அதுபற்றிப் பேசுவதற்கு இடம் கிடையாது. வேறு ஒரு நேரத்திலே, வேறு ஒரு வழியில் உங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். அதை வேறு ஒரு வகையிலே நீங்கள் கொண்டு வருவதற்கு எனக்கு மறுப்பு ஏதும் கிடையாது. இப்பொழுது 110-வது விதியில் முதலமைச்சர் அவர்கள் படித்த அந்தக் கருத்துகளின் அடிப்படையில் விவாதிப்பதற்கோ, அதிலே உள்ளே நுழைந்து கருத்துகளைச் சொல்வதற்கோ பேரவை விதிகளில் இடம் இல்லை. ஆகவே நான் இடம் அளிக்கத் தயாராக இல்லை.

***திரு. துரைமுருகன்:** தங்களுடைய தீர்ப்பிலோ, விதியிலோ நான் மாறுபட்டு இருக்கவில்லை, ஓர் அமைச்சரோ, முதலமைச்சரோ, 110-வது விதியின்கீழ் படித்தால், அதன்மீது உறுப்பினர்கள் கேள்வி கேட்க முடியாது என்பதிலே நான் மாறுபட்ட கருத்து உடையவன் அல்ல. அதிலே நான் கேள்வி கேட்க வரவில்லை. ஆனால் என்றைக்கோ கட்டி முடித்திருக்கிற, 1975 ஆம் ஆண்டு கட்டி முடித்த நாமக்கல் கவிஞர் மாளிகையைப் பழுதடைந்து இருக்கிறது என்று சொல்ல முதலமைச்சருக்கு உரிமை உண்டு. (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். ஆனால் அதில் எந்த ஆதாரமும் இல்லாமல், பொத்தாம் பொதுவாகச் சேற்றை வாரி இறைப்பதைப்போல, ஊழல் இருந்தது என்று சொல்வது, அது அவ்வளவு வரவேற்கத்தக்கதல்ல என்பது மட்டுமல்ல, கண்டிக்கத்தக்கது. ஆனால் அதேநேரத்தில் விதி 110-ன்கீழ் சொல்லிவிட்ட காரணத்தால், அதில் நாங்கள் கேள்வி கேட்க முடியாது என்றால் அதற்கப்புறம் பேசாமல் உட்கார்ந்திருக்கவும் முடியாது. ஆகையால் எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கின்ற வகையில் நாங்கள் இன்று வெளிநடப்புச் செய்கின்றோம்.

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**திருமதி. ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொள்ளும் துணிவான முயற்சிகளுக்கு ஒன்றுதிரண்டு உறுதுணையாக நம்முடைய தமிழ் மக்கள் நிற்கின்றார்கள் என்பதனை அண்மையில் நடைபெற்ற சாத்தான்குளம் இடைத் தேர்தலில் பெற்றுள்ள மகத்தான வெற்றி மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. தந்தை பெரியாரின் சிக்கனமும், தமிழ்த் தாயின் மூத்த மகன் பேறிஞர்



அண்ணாவின் சமத்துவமும், சத்துணவு தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் அவர்களின் வள்ளல் தன்மையும், பல்வேறு திட்டங்களில் இன்றைக்கு பளிச்சிட்டு விளங்குகின்ற வகையில் இருக்கின்றது. இம்மூவரின் வழி நடக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கல்வி மானியக் கோரிக்கையினை பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

கல்வி என்னும் செல்வம் மனிதனின் வாழ்க்கையை வளம்பெறச் செய்யவும், அறிவுத் திறன் உள்ள சமுதாயத்தை உருவாக்கவும் அடித்தளமாக அமைகின்றது. கல்வி வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் அரசு பல்வேறு கொள்கைகளை வகுத்துச் செயலாற்றி வருகிறது. அதில் முக்கியமாக பள்ளிகள் இல்லாமல் உள்ள அனைத்து சிற்றூர்களிலும் பள்ளி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது. இந்தக் கொள்கையினை கிராம மக்கள் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் 2003 ஆம் ஆண்டுக்குள் பள்ளியில் சேர்க்க வேண்டுமென்றும், பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும், பாடத்திட்டத்தின் தரத்தை உயர்த்த வேண்டுமென்றும், கிராமங்களில் நூல்நிலையங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும், பள்ளி மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும், பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கணினி கல்வி அளித்து, தமிழகத்தின் வருங்கால சமுதாயத்தை அறிவுத்திறன் சார்ந்த, கணினி அறிவு மிக்க சமுதாயமாக மாற்றுதல் போன்ற முக்கியக் கொள்கையால், கல்வி அறிவால் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திட மாண்புமிகு அம்மாவின் அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் ஏழையெளிய மாணவ, மாணவிகளின் வாழ்க்கையில் ஒளி ஊட்டவும், நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும், வேலை வாய்ப்புகளைப்

பெருக்குவதற்கும் வழிவகைகள் செய்யும் வகையில் அம்மாவின் அரசு செயலாற்றி வருகிறது. 'அனைவருக்கும் கல்வி' என்ற வகையில் 2001-2003 வரை 756 தொடக்கப் பள்ளிகளையும், 676 நடுநிலைப் பள்ளிகளையும் தொடங்கி தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிகளிலும் பள்ளிக்கூடம் ஒன்று அமையப்பெற வேண்டுமென்ற இலட்சிய நோக்கத்தோடு செயலாற்றி வருகின்றது.

பிற்பகல் 12-30

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகள் மட்டும் அல்லாமல் 2001-2003 வரை 220 உயர்நிலைப் பள்ளிகளையும், 260 மேல்நிலைப் பள்ளிகளையும் அம்மா அவர்களின் அரசு தொடங்கியுள்ளது. என்னுடைய தொகுதியில்கூட — நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு முன்பு ஆட்சியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் – ஏழை எளிய மாணவர்களுக்குத் தேவையான, அவர்கள் நலன் பெறுகின்ற வகையில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று அன்றையதினம் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மக்கள் வேண்டுகோளாக எடுத்து வைத்தார்கள். ஆனால் அன்றைக்கு ஆட்சியிலிருந்தவர்களுடைய காலத்தில் மக்களுடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. ஆனால், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் என்னுடைய தொகுதியில்கூட உடையார்ப்பட்டி என்ற இடத்திலுள்ள பள்ளியையும், திருமுலூர் என்ற இடத்திலுள்ள பள்ளியையும்—உயர்நிலைப் பள்ளியாக இருந்த பள்ளியை—மேல்நிலைப் பள்ளியாக அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல் நெய்க்காரன்பட்டி என்ற கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியையும், காரிப்பட்டி என்ற கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியையும் அம்மா அவர்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக என்னுடைய சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அதுமட்டுமல்லாமல் நம்முடைய அம்மா அவர்கள் இந்த ஆண்டு மாணவர்களுடைய நலனைக் கருதி 30 புதிய உயர்நிலைப் பள்ளிகளையும் 30 மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்கவிருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வசதிகளை நிலை உயர்த்துவதற்காக 80.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை மாணவர் சமுதாயமே வரவேற்று நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கணினிக் கல்வி அளிக்க அரசு காட்டியுள்ள முனைப்பும், எடுத்துக்கொண்டுள்ள முயற்சியும் கல்வித் துறையின் வரலாற்றில் போற்றிப் பாராட்டத்தக்க அம்சமாகும்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் வகுப்பு மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர உதவிடும் பொருட்டு, சிறப்புப் படிப்புதவி மானியத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

2003-2004 ஆம் ஆண்டில் 47.25 கோடி ரூபாய் செலவில் 150 புதிய மாணவர் இல்லங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ள, தாயுள்ளத்தோடு ஆணை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், சீர் மரபினர் ஆகியோர்களுக்கான பல சிறப்புத் திட்டங்களுக்காக ரூ.31.50 கோடி செலவில் 100 மாணவர் இல்லக் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்படும் என்று அறிவித்துள்ளது பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் மனதில் மனநிறைவை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினரால் அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்ற, ஆசிரியர் பயிற்சியை பாதியில் விட்டுத் தவித்த சுமார் 20,000 மாணவர்களில் 16,000 பேருக்கு மீண்டும் பயிற்சி அளிக்க ஆணையிட்டு 16,000 குடும்பங்களில் விளக்கேற்றிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, தொழிற் கல்வியைப் பொறுத்தவரை, தமிழகத்திலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைத்து கல்வித் தரத்தை உயர்த்திய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாணவர் சமுதாயமே நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றது.

ஆசிரியர் பயிற்சிச் சேர்க்கையின் ஒற்றைச் சாளர முறை கொண்டு வரப்பட்டதால் சுமார் 5,000 மாணவர்கள் குறைந்த செலவில் ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளதை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பொறியியல் கல்லூரிகள் பலவற்றில் மாணவர்கள் பயிலும்போதே, கல்லூரி வளாகத்திலேயே நடத்தப்படும் தேர்வு மையம் மூலம், நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் தகுதியான மாணவர்களைத் தேர்வு செய்து வேலைவாய்ப்பு அளிக்கும் முறை உள்ளது. தமிழகத்தில் ஒரு சில கல்லூரிகளில் எடுத்துக்காட்டாக சென்னையில் எத்திராஜ் கல்லூரி, மாநிலக் கல்லூரி, இராணி மேரி கல்லூரி மற்றும் லயோலா கல்லூரி ஆகியவற்றில் இம்முறை பின்பற்றப்படுவதாக அறிகிறேன். இம்முறை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அரசு கலைக் கல்லூரியில் பின்பற்றப்பட்டால் அரசு கலைக் கல்லூரியின் கல்வியின் தரம் உயரும் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவர்களும் மிகுந்த பயன் அடைவார்கள். பரீட்சார்த்த முறையில் இம்முறையை சேலம் அரசு கலைக் கல்லூரியில் நடைமுறைப்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

சேலம் மாவட்டத்தில் ஆசிரியர் படிப்பான பி.எட். பயில, தனியார் கல்லூரியான சாரதா கல்லூரியில் மட்டுமே பாடப் பிரிவு உள்ளது. இதனால் ஏழையெளிய, நடுத்தர மக்கள் பி.எட். பாடம் படிக்க முடியாமல் தவிக்கிறார்கள். அதனால் நடுத்தர மக்களின் மாணவர்களுடைய நலன் கருதி, சேலம் அரசு கலைக் கல்லூரியில் பி.எட். பாடப் பிரிவைத் தொடங்குவதற்கு கருணை உள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வழங்க வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



சேலம் மாவட்டத்தில் தொழிற் கல்வி பயில தனியார் பாலிடெக்னிக்குகள் மட்டுமே உள்ளன. இவற்றில் பெரிய அளவில் நன்கொடை வசூலிக்கிறார்கள். அதனால் ஏழையெளிய, நடுத்தர, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எல்லாம் தொழிற் கல்வி படிக்க முடியாமல் தவிப்பதால், அரசு பாலிடெக்னிக் ஒன்றை சேலம் மாவட்டத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பனமரத்துப்பட்டி தொகுதியில் ஜாரிகொண்டலாம்பட்டி மற்றும் மல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவியர்கள் 2 ஆயிரம் பேர் படிக்கின்றார்கள். இங்கு மாணவியர்களுக்கென்று தனியாகப் படிப்பதற்கு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளை அரசு அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதியில் மாசநாய்க்கன்பட்டி மற்றும் அம்மாபேட்டை, காமராசர் காலனி ஆகியவற்றில் நடுநிலைப் பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள பள்ளிகளில் எதிலும் ஆங்கில வழிக் கல்வி இல்லை. அதனால் ஆங்கில வழிக் கல்வி வேண்டுவோர் மாநகரத்திலுள்ள தனியார் பள்ளிகளை பெற்றோர்கள் நாடிச் செல்ல வேண்டியுள்ளது. அதனால் என்னுடைய தொகுதியில் உள்ள பனமரத்துப்பட்டி, ஜாரிகொண்டலாம்பட்டி, அயோத்திப்பட்டணம், வாழப்பாடி, தாசநாயக்கன்பட்டி போன்ற இடங்களில் உள்ள பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்விப் பிரிவைத் தொடங்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் உள்ள ஏழையெளிய பள்ளிக் குழந்தைகளுக்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செயலாற்றி வருகின்ற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் சட்டமன்றத்தில் எடுத்து வைத்திருக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றி என்னுடைய தொகுதியிலுள்ள மாணவர்களுடைய நலனைக் கருதி, அவர்கள் நலன் பெறுவதற்காக

இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொடுக்கும்படி இதய தெய்வம் தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொண்டு, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு, ஒரு சில கருத்துகளை எடுத்து வைக்க வாய்ப்பளித்தமைக்கு, மீண்டும் ஒரு முறை நம்முடைய அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொண்டு இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சமீபத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததாகச் சொல்லி ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே நமது தமிழ்நாட்டிலே தமிழ் பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் இருக்கிறது. ஆகையால் அறிவியல் தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டு வருவதாகச் சொல்கிறபோது, அறிவியல் தமிழ் என்று கொண்டு வருகிறபோது, பாட மொழியும், பயிற்சி மொழியும் தமிழகத்தில் பின்னுக்குப் போய்விடாதா. இப்படி ஒன்றைக் கொண்டு வருவதன் மூலமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, என்ன இது, நல்ல காரியத்தைப் போட்டுக் கெடுத்துவிடக்கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை. நல்ல காரியத்தைப் பற்றிச் சொல்லவில்லை. நீங்கள் கற்றறிந்தவர் என்பது எங்களுக்குத் தெரியும். அதில் ஒன்றும் பிரச்சினை கிடையாது. அதேநேரத்தில் இப்படி ஒரு அறிவியல் தமிழ் பயிற்சி மொழியாகத் தமிழகத்தில் கொண்டு வருகிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய பதில் உரையில் விளக்குவார். (குறுக்கீடு) அமைச்சருடைய பதில் உரையில் விளக்குவார். திரு. சோ. பாலகிருஷ்ணன்.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கல்வி மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக்கெழுத்தறி வித்தல்
இது பாரதியினுடைய பாடல்

இந்த நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களுக்காக கல்வி அறிவை முதன்முதலாக தமிழகத்திலே பரவலாக ஏற்படுத்திய பெருமை நம் அருமைத் தலைவர் காமராஜரைச் சாரும். நம்முடைய டாக்டர் வள்ளல் பெருமான்கூட அதையே முதலில் எடுத்துச் சொல்லி, இந்த நாட்டில் தலைவர் காமராஜர் அவர்கள் கல்விக்காக எவ்வளவு சேவை செய்தார்கள் என்பதைப் பற்றியெல்லாம் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். காமராஜருடைய நூற்றாண்டு விழா நடக்கின்ற இந்த நேரத்தில் அருமைத் தலைவர் காமராஜருக்கு நம்முடைய அரசு அவர்களுடைய நினைவாக, நூற்றாண்டு விழாவையொட்டி, பல நல்ல செயல்களைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கோரிக்கையாக வைக்கிறேன்.

தமிழக அரசு வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டு. திரு. ஞானசேகரன் அவர்களுடைய முதல் கோரிக்கை என்பதால் இதனை முதலில் நான் பாராட்டுகிறேன். இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு 6 மாதம் ஆகியும்கூட இன்னும் Syndicate, அமைக்கப்படவில்லை. Planning போடவில்லை. Board of Studies அமைக்கப்படவில்லை. Academic Council ஏற்படுத்தப் Board ஏற்படுத்தப்படவில்லை. Academic Council ஏற்படுத்தப்படவில்லை என்று ஞானசேகரன் அவர்கள் இங்கே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலே திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட இந்த மிகக் குறுகிய காலத்திலே அதற்கு துணை வேந்தர் நியமிக்கப்பட்டு, 50 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடும் செய்து, முதலிலே 25 இலட்சம் ரூபாயை விடுவிக்கவும் செய்து, இப்போது மீண்டும் 25 இலட்சம் ரூபாயை உறுப்பினர் சொன்ன பணிகளுக்காக விடுவித்திருக்கிறோம். அந்தப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு, விரைவில் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** Vice-Chancellor-ஐப் போட்டிருக்கிறீர்கள். பாராட்டுகள். ஆனால் Agricultural University-யிலே இருந்தவரைக் கொண்டு வந்து போட்டிருக்கிறீர்கள். Academic Qualification-ஏ இல்லாத ஒருவரைப் போட்டிருக்கிறீர்கள் என்று ஒரு குறை சொல்கிறார்கள். இந்தப் பல்கலைக்கழகம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால், 56 கல்லூரிகள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயன்படக்கூடிய அளவிற்கு ஏற்படுத்தப்பட்ட கல்லூரிகள் என்று அந்தச் சட்டத்திலேயே இருக்கிறது. ஆனால் இதைக் கருத்தில்கொள்ளாமல், எந்தவித knowledge-ம் இல்லாத ஒரு Vice-Chancellor-ஐப் போட்டிருப்பதைத்தான் நாங்கள் குறையாகச் சொல்கிறோமே தவிர வேறல்ல. ஒரு நல்ல ஆர்வம் மிக்க...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியமிக்கப்பட்ட துணை வேந்தர் தகுதி இல்லாதவர் அல்ல. அவர் எந்தக் கல்லூரியில் பணியாற்றினார் என்பது முக்கியமல்ல. அவர் Doctorate பெற்றவர். அனைத்துத் துறைகளிலும் திறமையானவர். திறமை மட்டுல்ல, துணை வேந்தர் பதவிக்குத் தகுதியானவர். அதுவும் ஒரு பெண் என்கிற வகையிலே, ஒரு பல்கலைக் கழகத்திற்கு ஒரு பெண் துணை வேந்தரை நியமித்த மிகப் பெரிய சிறப்பு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே தகுதியானவரை, தகுதியான இடத்திற்கு, தகுதியான பதவிக்குத்தான் அவர்கள் நியமித்திருக்கிறார்களே தவிர நீங்கள் சொன்னதைப்போல தகுதியானவர் அல்ல என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களே நேரடியாகப் பேசினால் இவற்றையெல்லாம் சொல்லமாட்டார். பின்னணி ஞானசேகரன்.





**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தமிழகத்தைப் பொறுத்தவரை இந்த ஆண்டு 5,50,000 மாணவர்கள் S.S.L.C. எழுதியிருக்கிறார்கள். பொறியியல் கல்லூரிகளிலிருந்து 70,000 மாணவர்கள் ஆண்டுதோறும் வெளி வருகிறார்கள். இவையெல்லாம் நம்முடைய நாட்டில் கல்வி வளர்ச்சி அதிகமாக இருக்கிறது என்பதைக் காண்பித்தாலும்கூட, இவர்களுக்கெல்லாம் எதிர்காலத்தை உருவாக்க வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை. ஆகவே 70,000 பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஆண்டுதோறும் வெளியில் வருகின்றபோது, அவர்களுக்கு எதிர்காலத்தைக் காட்ட வேண்டியது நம்முடைய கடமை என்கின்ற முறையில் தமிழக அரசு ஏதாவது ஒரு வகையில் வெளி நாடுகளில் அவர்களுக்கு வேலை கிடைக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற முறையில் ஓர் அமைப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

நம்முடைய அமைச்சர் அவர்கள் சுகாதாரத் துறை அமைச்சராகவும், கல்வி அமைச்சராகவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய 2 பொறுப்பினை வகித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பள்ளி மாணவர்களையெல்லாம் பரிசோதிப்பதற்காக C.E.O. பொறுப்பில் 2, 3 டாக்டர்கள் மாவட்டம்தோறும் இருப்பதாக நாம் அறிகிறோம். அவர்களுக்கு வெறும் 1,000/- ரூபாய், 1,500/- ரூபாய்தான் சம்பளம் கொடுக்கிறார்கள். இது டாக்டர்களையும் அவமதிப்பது மாதிரி இருக்கிறது. வேலையும் அவர்கள் செய்வது கிடையாது. அதனால் நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த டாக்டர்களை மாவட்ட மருத்துவமனையில் அமர்த்தி deputation மாதிரி கொடுத்தால் சரியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. சம்பளம் வெறும் 1,500/- ரூபாய், 2,000/- ரூபாய் என்பது சரியல்ல என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக பல கோரிக்கைகளுக்குப் போவதற்கு முன்பு, என்னுடைய தொகுதியைப் பற்றி கொஞ்சம் சொல்லிவிடலாம் என்று இருக்கிறேன். கடலாடி தொகுதியில் காவாகுளம் என்ற கிராமத்தில் இருக்கின்ற தொடக்கப் பள்ளியை உயர் தொடக்கப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டும். அடுத்ததாக ஆத்தனூர் என்ற கிராமத்தில் உள்ள

உயர் தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டும். அடுத்தது திருப்புல்லாணியில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றிக்கொடுக்க வேண்டும். இது என்னுடைய கோரிக்கைகள்.

பிறகு என்னுடைய தொகுதியில் மேலக்கிடாரம் என்ற இடத்தில் ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த மேல்நிலைப் பள்ளி ஏற்பட்டு 4 ஆண்டுகள் ஆயிற்று. ஒரு ஆசிரியர்கூட கிடையாது. ஆசிரியரே இல்லாத ஒரு பள்ளி நடக்கிறது என்றால் அது மேலக்கிடாரம் பள்ளிதான். அதன் காரணமாக ஒரு மாணவர்கூட பாஸ் பண்ணுவது கிடையாது.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உறுப்பினர் ஒருவேளை விடுமுறை நாளிலே சென்று பள்ளியைப் பார்த்தாரோ என்று தெரியவில்லை. இப்படி ஆசிரியரே இல்லாத பள்ளிகள் என்று நிச்சயமாக தமிழகத்தில் இல்லை. வேண்டுமானால் ஒன்றிரண்டு பிரிவுகளுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கலாம். அதை நிரப்புவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் முழுக்க முழுக்க ஆசிரியரே இல்லாத பள்ளிகள் என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நிலைமை இல்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நீங்கள் போய்ப் பாருங்கள். நான் போய்ப் பார்த்துவிட்டு வந்துதான் சொல்கிறேன்.

அடுத்ததாக பெரியபட்டணம் என்று ஒரு ஊர்; எல்லாமே மீனவர்கள், முஸ்லிம்கள் இருக்கின்ற ஊர். அங்கே மேல்நிலைப் பள்ளிக்கு ஒரே ஒரு கணக்கு ஆசிரியர்தான் இருக்கிறார். ப ஆசிரியர்கள் கிடையாது. ஆனால் அந்தப் பள்ளியிலே நல்ல ரிசல்ட் வருகிறது. காரணம் என்ன என்று சொன்னால், பக்கத்திலே இருக்கிற முத்துப்பேட்டை என்ற ஊரிலே உள்ள ஆர்.சி. மேனேஜ்மென்ட் பள்ளியுடன் ஒரு understanding வைத்து சாயந்திரம் class எல்லாம் எடுத்து நல்ல result வருகிறது. அதனாலே பெரியபட்டணத்திலே எல்லா ஆசிரியரையும் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாயல்குடி என்கின்ற ஊரில் ஏராளமான பெண்கள் இருக்கிறார்கள் என்பதற்காக பெண்களுக்கு என்று ஒரு தனி உயர்நிலைப் பள்ளியை அங்கே தொடங்கினார்கள். அதிலே ஆசிரியரும் கிடையாது, பள்ளிக் கட்டடமும் கிடையாது. அதையும் தயவுசெய்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிறகு ஏர்வாடி என்கின்ற ஊரில் — ஏர்வாடிக்கு அமைச்சரே போயிருக்கிறார்—450 மாணவர்கள் படிக்கிறார்கள். ஒரு Elementary School-ல்; கட்டடம் கிடையாது. இரண்டே இரண்டு ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். இந்த ஆசிரியர்கள் விகிதம் என்பதை 1:40 என்று வைத்திருக்கிறீர்கள். இது மாணவர்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய கேடு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய சர்க்காரிலே 85 சதவிகிதம் கொடுக்கிறார்கள், இந்த ஆரம்பப் பள்ளிக்கு (குறுக்கீடு) 75:25 என்று கொடுக்கிறார்கள். நீங்கள் அதிலே கஞ்சத்தனம் செய்ய வேண்டாம். அந்தப் பணத்தை வாங்கி நீங்கள் 1:20 என்று மாணவர்களை வைத்தால் இந்த நாட்டிலே இளம் மாணவர்களுக்கு நல்ல படிப்பைக் கொடுக்க முடியும். ஆகவே 1:40 என்பது சரியல்ல. அதை 1:20 ஆக ஆக்க வேண்டும்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 75:25 என்ற அந்த விகிதத்தில் மத்திய அரசிடமிருந்து 75 சதவிகிதப் பங்கு நிதி வருவது உண்மைதான். ஆனால் அந்த நிதியைக் கொண்டு ஆசிரியர்களை நியமனம் செய்தால், recurring expenditure-ஐ யார் meet செய்வது என்பதை தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே அந்தத் தொகையைக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அடிப்படைக் கட்டுமான வசதிகள், கட்டடங்கள், குடிதண்ணீர் வசதி, மின்சார இணைப்புகள், கழிப்பிட வசதிகள் இவற்றையெல்லாம் செய்வதற்குத்தான் நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

உங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்திலேயிருக்கிற அனைத்து ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் தேவையான அளவிற்கு நிச்சயமாகக் கட்டிக் கொடுக்கப்படும். அதிலே எந்தக் குறையும் இருக்காது. ஆனால் ஆசிரியர் நியமனம் என்கிறபோது, இந்தத் தொகையைக் கொண்டு ஆசிரியர்களை நியமிப்பது என்பது இயலாத காரியம். ஒரு வேளை மைய அரசு அது குறித்து எங்களுக்கு ஒரு தெளிவான வழிமுறையைச் சொல்லி, உத்தரவிட்டு, கொடுக்கிற நிதியிலேயிருந்து நீங்கள் ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம் என்று சொல்வார்களேயானால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, temporary teachers-ஐ சர்வ சிக்ஷா அபியான் திட்டத்திலே போட்டுக்கொள்ளலாம் என்றிருப்பதாக எனக்குத் தகவல். ஆகவே அமைச்சர் அவர்கள் இதுபற்றி தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை, இல்லை; ஆசிரியர்கள் இல்லை; பயிற்சி ஆசிரியர்கள், அதாவது ஏற்கெனவே நடுநிலைப் பள்ளிகளிலே, தொடக்கப் பள்ளிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், அவர்களுடைய அறிவை, ஆற்றலை இன்னும் மேம்படுத்துவதற்கு, அதன்மூலம் பள்ளி மாணவர்கள், பள்ளி மாணவிகள் இன்னும் சிறந்த கல்வியைப் பெறுவதற்கு, பயிற்சி பெறுவதற்கு ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பள்ளி ஆசிரியர்கள் அல்ல; பயிற்சி ஆசிரியர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்தது நீலகிரி மாவட்டத்திலே, சர்வ சிக்ஷா அபியான் திட்டம்; அதிலே 6.00 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் ஊட்டி தொகுதிக்கு அந்தப் பணம் வந்து சேரவில்லை என்று நம்முடைய எச்.எம். ராஜு அவர்கள் சொல்கிறார். என்ன காரணம் சொல்கிறார் என்றால், இந்தத் தொகுதியே தெரியவில்லை; மாவட்ட ஆட்சியருக்கே தெரியவில்லை; அதனாலே இந்தப் பணம் ஒழுங்காக வரவில்லை என்று சொல்கிறார். அதைக் கொஞ்சம் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார். பஸ்களுக்கெல்லாம் நிறைய வசூல் செய்கிறார்கள்; அதிலேதான் வரி போடுகிறோம் என்று சொன்னார். இப்படி வரி போடுவார்கள் என்று நினைக்கவில்லை. ஏனென்றால், ஒரு இருக்கைக்கு இப்போது நீங்கள் 150 ரூபாய் போடுகிறீர்கள் என்றால், ஒரு காலாண்டுக்கு கிட்டத்தட்ட எவ்வளவு வருகிறது? 9,000 ரூபாய் வருகிறது. ஒரு இருக்கைக்கு இவ்வளவு என்றால், 60 சீட்டுக்கு எவ்வளவு? ஒரு சீட்டுக்கு 150 ரூபாய் என்று கணக்குப் போட்டீர்கள் என்றால், கிட்டத்தட்ட 9,000 ரூபாய் வருகிறது ஒரு காலாண்டிற்கு. அப்புறம் ஒரு வருடத்திற்கு 36,000 ரூபாய் வருகிறது. 36,000 ரூபாய் கட்டி, அதற்கு, மேலே அவன் இலாபம் சம்பாத்தியம் பண்ணவேண்டும் என்றால், பள்ளிக்கூடமே நடக்காது. எனவே அதை நீங்கள் சீக்கிரம் consider பண்ணுங்கள். நிதியமைச்சர் அவர்கள்,



நம்முடைய முதலமைச்சருக்கு எண் 9 பிடிக்கும் என்பதாலே அப்படிப் பண்ணியிருப்பாரோ என்று எனக்கு ஒரு சந்தேகம்.

**•மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரிகளுடைய உரிமையாளர்களுக்காக வாதாடுகிறார்கள். மாணவர்களுக்காக வாதாடவில்லை. மாணவர்களிடமிருந்து அவர்கள் ஏற்கெனவே வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாணவருக்கும், quarterly fees இவ்வளவு, bus fare இவ்வளவு என்று வசூல் செய்கிறார்கள். ஒரு பஸ்ஸுக்கு கிட்டத்தட்ட 40 பேர், 50 பேர்களிடமிருந்து வசூல் செய்கிறார்கள். அளவுகடந்து வசூல் செய்து, அதிலே அவர்கள் மற்ற பேருந்துகளைப் போல அரசுக்கு வரியைச் செலுத்தாமல், அந்த இலாபத்தை எல்லாம், இந்த கல்லூரி பள்ளி நிர்வாகத்தினர் எடுத்துச் செல்கிறார்கள். அதைத்தான் நாங்கள் அரசுக்கு tax-ஆகப் போடுகிறோம் தற்போது. மாணவர்களிடம் புதிதாக அவர்கள் வரியை வசூல் செய்யவேண்டிய நிலை இல்லை. ஏற்கெனவே மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். மாணவர்களை அது ஒரு சிறிதும் பாதிக்காது. அரசுக்குப் பணம் தராமல் ஏமாற்றுகின்ற அந்த நிர்வாகத்தினர், அரசுக்குப் பணம் தரக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அந்த வரி—நான் என்ன சொல்கிறேன் என்றால்...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைச் சாக்காக வைத்துக்கொண்டு தனியார் கல்வி நிறுவனங்கள் மீண்டும் மாணவர்கள் மீது வரி போடாமல் இருக்க, மாண்புமிகு உறுப்பினர் தனியார் நிர்வாகிகளுக்கு ஆலோசனை சொன்னால் நன்றாக இருக்கும். ஏற்கெனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அதிகப்படியான நிதி, அதிகப்படியான தொகையை மாணவர்களிடமிருந்து, பெற்றோர்களிடமிருந்து வசூல் செய்கிறார்கள். அதிலே வரியை ஏமாற்றுகிற வகையில், குறைந்த அளவிலே நமக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் கூடுதலாக்கி இருக்கிறோம். எனவே மாணவர்களுக்கு, பெற்றோர்களுக்கு இதனால் பாதிப்பு ஏற்படாது; ஏற்படக்கூடாது என்பதுதான் அரசின் நோக்கம். இதைச் சாக்காக வைத்துக்கொண்டு, தனியார் கல்வி நிறுவனங்கள் மீண்டும் அந்தக் கட்டணத்தை ஏற்றாமல் இருப்பதற்கு நீங்கள் அறிவுரை சொல்லலாம் அவர்களுக்கு.

[2003 ஏப்ரல் 4

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இல்லை. அதாவது நம்முடைய அரசாங்கம், அவர்கள் கூடுதலாக வசூல் செய்கிறார்களா; இல்லையா என்பதைப் பார்க்கவேண்டுமே தவிர, அதற்காக வரியைக் கூடுதலாகப் போடுகிறோம் என்று சொல்வதில் நியாயமே கிடையாது. எனவே இதை நீங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஆசிரியர் பயிற்சிக்கு 18,000 ரூபாய் பணம் கட்டச்சொல்லி, நீங்களெல்லாம் உத்தரவு போட்டு...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தனியார் நிறுவனங்கள் அதை வியாபார நோக்கத்தோடு—கல்வி நிறுவனங்களாக இருந்தாலும்கூட வியாபார நோக்கத்தோடு—அங்கே கட்டணங்கள் வசூல் செய்யப்படுகின்றன. ஆகவேதான் அவர்கள் வாங்குகின்ற ஒரு பகுதியிலிருந்துதான் நாம் வரியைப் போட்டிருக்கிறோம். ஆகவே, கல்லூரி மாணவர்களையோ பள்ளி மாணவர்களையோ, அல்லது பெற்றோர்களையோ இது சிறிதளவும் பாதிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு ஒரு தகவலைக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு கல்லூரியிலே, பொறியியல் கல்லூரியிலே படிக்கின்ற ஒரு மாணவருக்கு பேருந்தில் செல்வதற்கு 2,000 ரூபாய் அல்லது 3,000 ரூபாய் வாங்கலாம். 10,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாய் கட்டணம் பெற்றால் அது எந்தவகையிலே நியாயம் என்பதை உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளுக்காக மட்டும் ரூ.10,000 வசூலிக்கின்ற கல்லூரி நிர்வாகத்திடமிருந்து நீங்கள் வரி வசூலிப்பதற்கு நாங்கள் தடையாக நிச்சயமாக இல்லை. ஆனால் ஒரு பேருந்துக்கு ஒரு இருக்கைக்கு வெறும் 50 ரூபாய் மாதத்திற்கு வாங்குகிற பள்ளிக்கூடங்கள்கூட இதே 50 ரூபாய் கட்டினால் அவர்கள் 100 ரூபாய் அல்லது 120 ரூபாய் சேர்த்து வசூலிக்க வேண்டிய நிலை வரும். எனவே அது கூடாது என்பதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். அதைத்தான் திரு. பாலகிருஷ்ணன் அவர்களும் சொல்கிறார்கள். நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது பஸ் கட்டணமாக 10,000 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வசூலிக்கின்ற எந்தக் கல்லூரி நிர்வாகமாக இருந்தாலும் சரி, அவர்களிடத்திலே நீங்கள் தாராளமாக 50 ரூபாய் வாங்கலாம், நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம். ஆனால் சாதாரணமாக சிறிய சிறிய தொடக்கப் பள்ளிகளிலிருந்தும் அனைத்து கல்லூரி நிறுவனங்களிடமிருந்தும் நீங்கள் வசூலிப்பது நிச்சயமாக ஏழை, நடுத்தர வர்க்கத்தின் இடுப்பை ஒடிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகள் செல்கின்ற பள்ளிகளில் எல்லாம் இப்படி பேருந்துகளை வைத்துக்கொண்டு அவர்கள் பள்ளிகளை நடத்தவில்லை என்பது நாடறிந்த உண்மை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மிகச் சாதாரணமான விவசாயத் தொழிலாளர் குடும்பங்களிலேகூட—இன்றையதினம் செல்லுகின்ற பள்ளிகளிலேகூட, பல பள்ளிகளை நீங்கள் பார்ப்பீர்களேயானால், பேருந்துகள் இருக்கின்றன—மாணவர்கள் பேருந்துகளிலே சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே நீங்கள் அப்படி நினைக்கக் கூடாது. சாதாரண மக்கள்கூட நல்ல தரமான உயர் கல்வி பெற வேண்டும் என்பதால் அவர்களே கல்லூரி பஸ்களை உபயோகப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே அருள்கூர்ந்து இப்படிச் சொல்வது சரியல்ல. இந்த 50 ரூபாய் என்பது மிக அதிகம். எந்தக் கல்லூரியிலே எந்தத் தொழில்நுட்பக் கல்லூரியிலே 10,000 ரூபாய் வாங்குகிறார்களோ அந்த 10,000 ரூபாய் வாங்குகிற கல்லூரிகளிலே நீங்கள் வசூல் செய்வதில் நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. சாதாரணமான கல்விக் கூடங்களிலே பஸ்களை வைத்துக்கொண்டு இருப்பவர்களிடம் • இந்தத் தொகை வேண்டாம் என்றுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகள் எல்லாம் இலவசமாக அரசு கொடுக்கின்ற free bus pass-ஐ வைத்துக் கொண்டு அரசுப் பேருந்துகளில் சென்று கொண்டிருக்கிறார்கள். இப்படி கான்வென்ட் பள்ளி நடத்துகிறவர்கள், இதுபோன்ற பள்ளிகள் நடத்துகிறவர்கள் எல்லாம்—பஸ் பெர்மிட் வாங்கி பஸ் ஓட்டுகிறவர்கள் ஒருபுறம்—இவர்கள் மறைமுகமாகக் கல்லூரிக்கு வேண்டிய பேருந்து, பள்ளிக்கு வேண்டிய பேருந்து என்று பஸ் பெர்மிட் வாங்காமல்—எப்படி பஸ் பெர்மிட் வாங்கிக் கொண்டு

பஸ் முதலாளிகள் சம்பாதிக்கிறார்களோ, அதைவிடப் பல மடங்கு அரசுக்குத் தர வேண்டிய Tax-ஐ தராமல் பல கல்லூரிகள், பல பொறியியல் கல்லூரிகள். பல கான்வென்ட்கள் நடைமுறையில் செய்து வருகின்றன. மாணவர் ஒருவருக்கு 100 ரூபாய், 150 ரூபாய் சார்ஜ் செய்கிறார்கள். அவர்கள் அரசுக்கு வரியைத் தராமல் இதன்மூலமாகவும் கொள்ளையடிக்கின்ற ஒரு முறை நடைமுறையில் இருந்து வருகிறது. இதுதான் உண்மை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ரூபாய் வசூல் செய்கின்ற கல்வி நிறுவனங்கள் மீது நீங்கள் மீண்டும் 50 ரூபாய் போட்டால், அந்த 50 ரூபாய்க்கு இன்னும் 20 ரூபாய் சேர்த்து 120 ரூபாயாக வசூல் செய்வார்களே தவிர அந்த 100 ரூபாயிலிருந்து நிச்சயமாக உங்களுக்கு 50 ரூபாய் கட்டப் போவதில்லை. எப்படியிருந்தாலும் நிச்சயமாக நடுத்தர வர்க்கம், சாதாரண ஏழை மக்கள், தொழிலாளிகள் அத்தனைபேரும் பாதிக்கப்படத்தான் செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலகிருஷ்ணன், இன்னும் மூன்று மணித் துளிகளுக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** முடித்து விடுகிறேன். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மனுக்கள் வாங்கி, 18,000 ரூபாய் பணம் கட்டி, சோதனையெல்லாம் நடத்தி இன்னும் N.O.C. கொடுக்கவில்லை என்று ரொம்பப் பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்ய வேண்டும். கோர்ட்டில்கூட உத்தரவு போட்டிருக்கிறார்களாம், சீக்கிரம் முடித்துக்கொடுங்கள் என்று. நீங்கள் அதைப்பற்றிக் கவலையேபடவில்லை என்று ரொம்ப வருத்தப்படுகிறார்கள். அதைக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கவலைப்படுகிறோமோ இல்லையோ மாண்புமிகு உறுப்பினர் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார். தெளிவாக நீதிமன்றம் எங்களுக்கு, நான்கு மாதத்திற்குள் நீங்கள் இதை முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்தவகையிலே, நான்கு மாதம் முடிவதற்கு இன்னும் மூன்று மாதத்திற்குமேல் இருக்கிறது. மீண்டும் அந்தப் பள்ளிகளில் கட்டுமான வசதிகள், அடிப்படை infrastructure இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்கு ஒரு குழு அமைத்திருக்கிறோம். காரணம் ஏற்கெனவே சென்றது என்ன ஆகிவிட்டது



என்று கேட்பீர்கள். சில பேரிடமிருந்து, அந்த அப்ளிகேஷன் போட்டவர்களிடமிருந்து எங்களுக்கு மனுக்கள் வந்திருக்கின்றன. இந்த இடைப்பட்ட காலத்தில் நாங்கள் சில தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கிறோம், எனவே மீண்டும் எங்களை ஆய்வு செய்து எங்களுக்கு உத்தரவு வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே, அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரிலே மீண்டும் ஆய்வு செய்வதற்கு குழு நியமிக்கப்பட்டு இப்போது குழு அந்த ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறது. நீதிமன்றம் சொல்லியிருக்கிற அந்த நான்கு மாதத்திற்குள் தகுதியானவர்களுக்கு, தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு முறையாக உத்தரவுகள் வழங்கப்படும்.

பிற்பகல் 1-00

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்தது நம்முடைய மாணவர்கள் பள்ளியிலே போய்ச் சேருவதற்கு இரண்டு சான்றிதழ்கள் வேண்டும். ஒன்று, வருமானச் சான்று; இன்னொன்று இருப்பிடச் சான்று. முன்பெல்லாம், வி.ஏ.ஓ.விடம் ஒரு சர்ட்டிஃபிகேட்டை வாங்கி தாசில்தாரிடம் கொடுத்தால், கொடுத்துவிடுவார். இப்போது என்ன பண்ணவேண்டும் என்றால், 20 ரூபாய்க்கு பேங்கிலே Challan கட்ட வேண்டும். அந்த Challan-ஐ வாங்கி, ஒரு மனு போட வேண்டும். அந்த மனுவிலே 12 ரூபாய்க்கு ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும். இவற்றையெல்லாம் கொண்டுபோய் தாசில்தாரிடம் கொடுப்பதற்கு இரண்டு நாள் ஆகிவிடுகிறது. இதில் கிட்டத்தட்ட 32 ரூபாய், ஒரு ஏழை மாணவன் செலவு பண்ணி சர்ட்டிஃபிகேட் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா, தெரியாதா என்று தெரியவில்லை. மாணவர்களெல்லாம் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது இராணி மேரி கல்லூரியைப் பற்றி இங்கே முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். இந்த நேரத்தில் இதெல்லாம் தேவையா என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும். ஏனென்றால், நாடு பூராவும் நாம் நிதி நெருக்கடி, நிதி நெருக்கடி என்று சொல்லி இருக்கிறவர்களையெல்லாம் வீட்டிற்குப் போகச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது, இப்படி ஒரு சூழ்நிலையிலே நீங்கள் பண்ணினீர்கள் என்றால், ஊரிலே நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதை–

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய நிலையில் தலைமைச் செயலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த 10 மாடி நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டடம் இடிந்து விழுகிற சூழ்நிலையில் இருக்கிறது. இன்னும் ஓரிரு ஆண்டு காலம்கூட அது தாங்குமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே இது வீண் செலவு அல்ல; ஆடம்பரச் செலவு அல்ல. இன்றையதினம் இது அரசாங்கத்திற்கு அவசர, அவசியத் தேவை. தலைமைச் செயலகம் செயல்படுவதற்கு ஒரு புதிய கட்டடம் மிக மிகத் தேவை. அதற்கான ஏற்பாட்டைத்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இது ஒரு **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் தங்களிடம் இந்தக் கோரிக்கையைக் கூறச் சொல்லி வற்புறுத்திக் கொண்டிருந்தார், என் காதில் விழக்கூடிய அளவிற்கு. நண்பர், மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள், புதிய நாமக்கல் கவிஞர் கட்டடத்திற்கு அடிக்கடி சென்று, அவைக்குக் கொண்டு வந்து பேசுவதற்காக தகவல் சேகரிக்கின்றார். அங்கு கட்டடம் இடிந்து விழுகிற நிலையிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் போன்று—அவரின் உயிரையும் பாதுகாக்க வேண்டும், அவருக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்ற ஒரு நிலை இருக்கிறது—இங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களின் உயிரையும் பாதுகாக்க வேண்டும். அடிக்கடி அந்தக் கட்டடத்திற்குச் சென்று வருகின்ற ஞானசேகரன் போன்றவர்களின் உயிரையும் பாதுகாக்க வேண்டும். அதற்காகத்தான் நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, இன்னுயிரைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை இன்றியமையாத நடவடிக்கை. எனவேதான் அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை முன் வைத்ததே அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் யசோதா அம்மையார் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே ஏன் இப்பொழுது அவர்களுக்குள்ளே முரண்பாடு இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை. கோரிக்கையை வைத்ததே அவர்களுடைய கட்சிதான். அந்தக் கோரிக்கையை எங்களுடைய தலைவி நிறைவேற்றி இருக்கிறார்கள். அவ்வளவுதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞானசேகரன் அடிக்கடி நாமக்கல் கவிஞர் மாளிகைக்குச் சென்று வருகிறார்; அந்தக் கட்டடம் இடிகின்ற நிலையிலே இருக்கிறது என்று அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கட்டடம் ஓரிரு ஆண்டுகளிலே இடிந்துவிடும் என்று சொல்கிறார். ஓரிரு ஆண்டுகளில் இடிந்துவிடும் என்று பொறியியல் வல்லுநர்கள் அறிக்கை ஏதும் சமர்ப்பித்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் வல்லுநர்கள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்னாலேயே 1994-லே தானாகவே இடிந்து விழுந்துவிட்டது. பால்கனியே இடிந்து விழுந்துவிட்டது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இதைப்பற்றி விரிவாக இங்கே விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை வாசித்தபோது, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பாதியில்தான் இந்த அவைக்குள் நுழைந்தார். நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏற்கெனவே 1994-ல் நாமக்கல் கவிஞர் மாளிகையில் மூன்றாவது தளத்தில் பால்கனி இடிந்து விழுந்துவிட்டது. மற்ற பால்கனிகளும் இடிந்து விழுகிற சூழ்நிலையில்தான் இருந்தன. அப்போது ஓர் அரசு ஊழியருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இந்த பால்கனிகளை மட்டும் பழுதுபார்ப்பதற்காக அன்றையதினம் 56 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. அதன் பிறகு, 1996-1997 ஆம் நிதியாண்டிலிருந்து, 2002-2003 ஆம் நிதியாண்டு வரை அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்ப்பதற்காக மட்டும் 7 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இது வீண் செலவு என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தோன்றவில்லையா? அதன்பிறகு, இன்றையதினம் பப்ளிக் டிபார்ட்மெண்டுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள பாலிசி நோட்டிலே, தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தற்போது, அந்தக் கட்டடத்தில் செயல்படவேண்டுமானால், உடனடியாகச் செய்ய

வேண்டிய பழுதுபார்க்கும் வேலைகளுக்காக, இந்த நிதி ஆண்டில், 2003-2004-ல் ஒரு கோடியே 16 இலட்சம் ரூபாய் மீண்டும் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இன்னும் எவ்வளவு செலவு செய்தாலும், அந்தக் கட்டடத்தைச் சரி செய்ய முடியாது. அது இடிந்து விழுகிறது. இடிந்து விழுந்துகொண்டேயிருக்கிறது. நீர்க் கசிவு ஏற்பட்டுள்ளது. கட்டடத்தில் எங்கே பார்த்தாலும் விரிசல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. மேல்தளத்தில் இருக்கின்ற கழிவறைகளிலிருந்து நீர் கசிந்து கீழ்தளத்தில் இருக்கின்ற ஊழியர்கள் மீது வந்து விழுகிறது. இதைவிட வேறு என்ன ஓர் அவலமான நிலைமை தேவை. அங்கே மனிதர்கள் அமர்ந்து பணியாற்ற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கட்டடமும் பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கிறது. ஆகவேதான் மனிதர்கள் அமர்ந்து பணியாற்ற முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளதால் உடனடியாக தலைமைச் செயலகத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளதால்தான் அரசு இந்த ஏற்பாட்டைச் செய்கிறது.

பிற்பகல் 1-05

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதை எடுத்தாலும் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. திரு. சோ. பாலகிருஷ்ணன் இன்னும் ஒரு மணித் துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்தது நம்முடைய பள்ளிக் கூடங்களிலே மார்க்கர் என்ற ஒரு பதவி இருக்கிறது. அதிலே ஏற்கெனவே பழைய அரசாங்கம் பாதிப் பேருக்கு வேலை கொடுத்து விட்டது. இன்னும் கொஞ்சம் பேர், 218 பேர் 150 ரூபாய் சம்பளம், 200 ரூபாய் சம்பளத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கும் 3,000 ரூபாயாக சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

இறுதியாக உலகப் கோப்பை விளையாட்டு நேரத்திலே பார்த்தீர்கள் என்றால், எல்லோருக்கும் மிகுந்த கவலை. தமிழன் ஒருவன்கூட உலகக் கோப்பை விளையாட்டிலே சேரவில்லையா, கிரிக்கெட்டிலே சேரவில்லையா என்று வருத்தப்பட்டார்கள். தமிழ்நாட்டிலே இதற்கென்று ஒரு தனி அமைச்சரைக்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தலாம். ஏனென்றால் இந்த விளையாட்டு உலகம் பூராவும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மிகவும் சிறப்பாக வந்து கொண்டு இருக்கிற நேரத்திலே ஒரு தமிழன்கூட உலகக் கோப்பைப் போட்டியில் கலந்து கொள்ளவில்லையென்ற ஆதங்கம் தமிழகம் முழுவதும் இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு சாத்தான்குளம் தேர்தலைப்பற்றிச் சொல்லவில்லையென்றால் சரியாக வராது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது கல்வி மானியத்திலே வராது. திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கல்வி அமைச்சர் இங்கே தெரிவித்த ஓர் அறிவிப்பைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள். அதற்கான விளக்கத்தை இங்கே தெரிவித்துவிடுவது அவசியம் என்று கருதுகிறேன். எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அறிவித்தார். இதற்கு மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி விளக்கம் கேட்டார். ஏற்கெனவே, தமிழ்நாட்டிலுள்ள பல பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியாகவும் சொல்லித் தரப்படுகிறது. தமிழ் பாடமாகவும் சொல்லித் தரப்படுகிறது. ஆனால் தற்போது தமிழகத்தில் மொத்தம் 872 பள்ளிகளில், 872 பள்ளிகளில் தமிழ் சொல்லித் தரப்படுவதேயில்லை. ஆகவே தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தர வேண்டும், கட்டாயமாகச் சொல்லித் தரவேண்டும் என்பதைச் சட்டமாக்கினால் இந்த 872 பள்ளிகளிலும் தமிழ் பாடமாகச் சொல்லித் தரப்படும். இதுவரை தமிழ் நுழையாத பள்ளிகளில் தமிழ் பயிற்றுவிப்பதற்கு இந்த அரசு வழிவகை செய்கிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் இளைஞர் நல விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகளிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு கல்வி மிக முக்கியமானது. ஆகவேதான் உலகப் பொதுமறையான திருக்குறளிலேகூட

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார்.

அதைப்போலவே

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

இப்படி எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறதோ அந்த முக்கியத்துவத்தை உணர்ந்து—இதற்கு முன்னாலே, கோத்தாரி கமிஷன் பற்றிக்கூட இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கோத்தாரி கமிஷனிலே சொல்லியிருப்பது 'இந்தியாவின் தலைவிதி அதன் வகுப்பறைகளில் தீர்மானிக்கப்படுகிறது' என்று. ஆகவே—அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த துறைக்கு அரசினுடைய மொத்த வருவாயிலே 6% நிதியொதுக்கம் செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-10*

ஆகவே இப்படிப்பட்ட கல்வி என்பது, மிக முக்கியமானது என்று கருதக்கூடிய நேரத்திலே, கல்வி என்பது, ஒரு மனிதனுடைய மனதுக்குள் புதைந்திருக்கக்கூடிய திறமையை, மனிதனுடைய அறிவை, சிந்தனையைத் தூண்டக்கூடிய வகையிலே, அவனை ஊக்குவித்து, அதனை வெளிப்படுத்தக்கூடிய மேம்பாடு அடையச் செய்யக்கூடிய ஒரு கருவி என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இப்படிப்பட்ட கருவியாக இருக்கக்கூடிய இந்தக் கல்வி, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத்துவும் வாய்ந்தது. அதே நேரத்தில் ஒரு தனி மனிதனுடைய முன்னேற்றத்திற்கும், ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும் மிகப் பெரிதும் பயன்படுவது. ஒரு நாடு முன்னேறியிருக்கிறது என்று சொன்னால், அந்த நாட்டிலே எல்லோரும் படித்தவர்களாக இருக்க வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட துறைக்கு இப்போது ஒதுக்கியிருக்கக்கூடிய நிதி என்பது குறைவாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பற்றிச் சொல்கிற நேரத்திலே, 14 வயது வரையிலே, கட்டாய இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்பது அரசமைப்புச் சட்டத்திலே, மனிதனுடைய அடிப்படை உரிமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அவ்வளவு உரிமையாக இருந்தாலும்கூட, நாம் எல்லோரும் இங்கே பேசுகிறோம் என்று சொன்னால், இந்த மன்றத்திலே வீற்றிருக்கிறோம் என்று சொன்னால்,



இந்த நேரத்திலே நான் நினைவுகூர்ந்து நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருப்பது, நமக்கெல்லாம் கல்விக் கண் வழங்கிய கர்மவீரர் காமராஜர் என்பதை இங்கே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காமராஜர் அவர்களுக்குப் பிறகு, இப்போது கல்வி, கடைச் சரக்காகிவிட்டது. இன்று கல்விக் கொள்கையைப் பற்றிப் பேசக்கூடிய நாம், கல்விக் கொள்ளையைப் பற்றி நாம் விவாதிக்கக்கூடிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இது எங்கு பார்த்தாலும் சரி, L.K.G., U.K.G.-யிலே இருந்து புற்றீசல்களைப்போல, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி வரை வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படி கல்விக் கொள்ளையைத் தடுப்பதற்கு, புற்றீசல்களைப்போல வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய கல்வி கடைச் சரக்காகி இருக்கக்கூடிய நிலையைத் தடுப்பதற்கு, அரசு மிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும்; கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சிலவற்றை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1991-1992-லே, உயர்நிலைப் பள்ளிகள், அதாவது, State Board 2,373; மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 684. ஆனால் இப்போது, 2002-2003-லே, State Board பள்ளிகள் 2,905; இவற்றிலே புதிய பள்ளிகள் 632. எவ்வளவு உயர்ந்திருக்கிறது? அதைப்போல மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 2,509. புதிதாகத் தொடங்கப்பட்ட பள்ளிகள் 1,375. இவற்றிலே மேல்நிலைப் பள்ளிகள், 1991-1992-லே 1,699. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 276. ஆனால் 2002-2003-லே, 2,600 பள்ளிகள். புதிதாகத் தொடங்கப்பட்டவை 1,003 பள்ளிகள். அதைப்போலவே மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 1,391. புதிதாகத் தொடங்கப்பட்ட பள்ளிகள் 1,115. பொறியியல் கல்லூரிகள் 1997-1998-ல் அரசுக் கல்லூரிகள் 10; தனியார் கல்லூரிகள் 76. ஆனால் 2002-2003-லே, அரசுக் கல்லூரிகள் 10; அப்படியேதான் இருக்கிறது. நாம் புதிதாகத் தொடங்கவில்லை. ஆனால் தனியார் கல்லூரிகள் இன்று 224 கல்லூரிகள். புதிதாகத் தொடங்கப்பட்டவை 148. அதிலே Deemed University 5; ஆக மொத்தம் 239. இப்படி தனியாருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அதேவேளையிலே...(குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அதிகப்படியாக தனியார் பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் உருவானதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார். ஏதோ தமிழக அரசு விரும்பி, இந்தத் தனியார் பொறியியல் கல்லூரிகளைத் தொடங்க அனுமதி வழங்கி

இருப்பதுபோல், மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். உண்மை நிலைமை அதுவல்ல. எத்தனையோ விண்ணப்பங்கள் மாநில அரசால் பெறப்படும்போது, மாநில அரசு, அத்தகைய தனியார் பொறியியல் கல்லூரிகள் தொடங்குவதற்கு No Objection Certificate வழங்குவதில்லை, அனுமதி வழங்குவதில்லை. ஆனால் அந்தத் தனியார் கல்லூரிகளின் நிறுவனங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று சாதகமான ஆணைகளைப் பெற்றுவிடுகிறார்கள். அல்லது நேராக A.I.C.T.E.-க்குச் சென்று, அங்கிருந்து ஆணைகளை அவர்கள் பெற்றுவிடுகிறார்கள். ஆகவே இதைப்பற்றி நான் ஏற்கெனவே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன்; மாண்புமிகு மத்திய கல்வியமைச்சர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளை மட்டும் சொல்லவில்லை. பொதுவாக கல்வித் துறையிலே தனியார் வருவதை நாம் வரவேற்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, முதலமைச்சர் சொல்வது, எல்லாக் கல்லூரிகளுக்கும் பொருந்தும்.

*பிற்பகல் 1-15*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாக வந்துவிட்டது என்று நான் குறை சொல்வதற்குக் காரணம் உள்ளது. பழைய காலத்தில், நாமெல்லாம் படிக்கின்ற காலத்தில்—இன்றுகூட இருக்கிறது. என்னைப்பற்றிச் சொல்வதற்காகச் சொல்லவில்லை, நாங்கள்கூட ஒரு துறையோடு சேர்ந்து ஸ்ரீஇராமகிருஷ்ணா குருகுலம் உயர்நிலைப் பள்ளி, ஸ்ரீசாரதா அநாதை மாணவர் இல்லம்—இப்படி சேவை நோக்கத்தோடு பள்ளிகளைத் தொடங்கி நடத்தி வந்தோம்; அநாதை மாணவர் விடுதிகள் எல்லாம் நடத்தி வந்தோம். இப்படி நிறைய பள்ளிகள் இருக்கின்றன. அப்படி ஆரம்ப காலங்களில் தொடங்கப்பட்டவை அல்லது மிகப் பெரிய தொழில் அதிபர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு கல்விச்சாலை வேண்டுமென்று சொல்லி தர்ம ஸ்தாபனங்களாக, தர்ம சிந்தனையோடு நடத்தினார்கள். ஆனால் இப்போது இருக்கக்கூடிய கல்வி நிறுவனங்கள் அப்படியல்ல. கொள்ளை அடிப்பதற்காக,



சுரண்டலையே மையமாக வைத்து இருக்கின்ற காரணத்தினாலேதான் இதை ஆய்வு செய்ய வேண்டிய நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அதற்காகச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. இப்போது நாம்கூட கல்வியிலே முன்னேறி இருக்கிறோம்; குறை சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்னது பொறியியல் கல்லூரிகளைப் பற்றி மட்டுமல்ல, எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் இது பொருந்தும். இன்னும் சொல்லப்போனால் அண்மையில் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு மாநில அரசிடமிருந்து அனுமதி கோரி, மாநில அரசு அதை மறுத்து, அவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று சாதகமான ஆணையைப் பெற்றுவிட்டதால், வேறு வழியின்றி உச்ச நீதிமன்றத்தின் ஆணையை மதித்து மாநில அரசு அவர்களுக்கு No Objection Certificate கொடுக்க வேண்டிய கட்டாயமும் நிர்பந்தமும் ஏற்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றாலும்கூட, அது தமிழ்நாட்டிலே இருக்கிறது; அதை வரைமுறைப்படுத்தி, இட ஒதுக்கீட்டை சாதாரண ஏழையெளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்று படிக்கவேண்டும்; அவர்களுக்குக் கல்வியைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நீதிமன்றத்திலே அவர்கள் பெற்ற தடையாணை அல்லது எந்த வழக்காக இருந்தாலும்கூட அரசு அக்கறையோடு செயல்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை; நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதும் அதேதான். (குறுக்கீடு) நான் பின்னாடி சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். உச்ச நீதிமன்றம் பொறியியல் கல்லூரி சம்பந்தமாக அளித்த தீர்ப்பில், கம்யூனல் ஜி.ஓ.-வை நாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றுகூட சொல்லவில்லை. உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை இட்டுவிட்ட பிறகு, மாநில அரசு மீறுகிறபோது that amounts to contempt. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 11 நீதிபதிகள் கொண்டிருக்கிற Bench தீர்ப்புக்கு மேலே, Full Bench, 13 பேர் இருக்கிற நீதிபதிகள் Bench-க்கு அப்பீல் செய்யலாம் என்று சொல்கிறார்கள்; அதிலே அதுமாதிரி செய்ய தமிழக அரசு நம்முடைய சட்ட ஆலோசகர்களை ஆலோசித்ததா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தப் பிரச்சினைக்கு வரவில்லை; பின்னாடி வருகிறேன். அதற்குண்டான ஆதாரங்களை எல்லாம்கூட வைத்து இருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரை பல நீதிபதிகள் அமர்கின்ற ஒரு Bench-சில் ஒரு தீர்ப்புக்கு, ஒரு முடிவுக்கு வர முடியாவிட்டால், அவர்களே அதைவிட பெரிய Constitution Bench-க்கு refer செய்ய வேண்டுமே தவிர, மனுதாரர் கேட்டுக்கொள்வதால் பெரிய Constitution Bench அமைக்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றப் பிரச்சினைக்குப் பின்னாடி வருகிறேன்: அதற்கு முன்னாலே ஒரு சின்ன செய்தி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** இல்லை, மணி, பின்னாடி என்ன; இன்னும் 3 நிமிடம்தான் பேச முடியும். பின்னாடி என்றால் என்றைக்கு?

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, குறுக்கீடுகள் கொஞ்சம் அதிகம். அடுத்து நாம் கல்வியில் முன்னேறி இருப்பதாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். 2002 ஆம் ஆண்டிலே தேர்ச்சி விகிதத்தை நாம் பார்க்க வேண்டும். பி.ஏ. வகுப்பில் தேர்வு எழுதிய மாணவ மாணவியர்கள் 25,635 பேர். இதிலே தேர்ச்சி பெற்றவர்கள் 11,684 பேர்தான். தேர்ச்சி விழுக்காடு என்பது 45.5 சதவீதம்; தேர்ச்சி விகிதத்தை நாம் பார்க்க வேண்டும். நிறைய கணக்குகள் இருக்கின்றன; நேரம் இல்லை; பி.எஸ்ஸி.-யிலே தேர்ச்சி விகிதம் 57.6 சதவீதம்; பி.காம். வகுப்பிலே 65 சதவீதம்; பி.பி.ஏ. வகுப்பிலே 74.2 சதவீதம்; எம்.ஏ. வகுப்பிலே 56.9 சதவீதம்; எம்.எஸ்ஸி.-யிலே 46.2 சதவீதம்; எம்.காம். வகுப்பிலே 43.6 சதவீதம். அரசாங்கப் புள்ளிவிவரங்கள் இப்படி இருக்கின்றன. இப்படி தேர்ச்சி



விகிதம் குறைந்து இருப்பதற்குக் காரணம், கல்லூரிகள், பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பது மிகப் பெரிய குறை. கட்டடங்கள் இல்லை, தளவாடங்கள் இல்லை; ஆய்வுக்கூடங்கள் இல்லை; ஏதோ கல்லூரிகள் இருக்கின்றன; பள்ளிகள் இருக்கின்றன என்று சொல்கிறோமே தவிர, அங்கே போதிய உள்கட்டமைப்புகள் இல்லாத காரணத்தால்தான், ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால்தான், இந்தத் தேர்ச்சி விகிதம் குறைந்து இருக்கிறது. இதற்கு அரசு என்ன முயற்சி எடுக்கப் போகிறது? தேர்ச்சி விகிதம் இவ்வளவு குறைந்து இருக்கிறது. எல்லோரும் படித்துவிட்டு ஒன்றும் இல்லாமல் போகிறார்கள். பாதிப் பேருக்கு மேல் fail ஆகிவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் எல்லாம் தேர்ச்சி பெறுவதற்கு அரசு எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சி என்ன என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

அடுத்து மாவட்டவாரியாக நம்முடைய அரசாங்கம் புள்ளிவிவரம் சொல்கிறது. தேர்ச்சி விகிதத்தை ஒவ்வொரு மாவட்டவாரியாகப் பார்க்கிறோம். ஆனால் தமிழ்நாட்டிலே மாவட்டவாரியாக நீங்கள் தேர்ச்சி விகிதத்தைக் கொடுக்கின்ற நோத்திலே மிகக் குறைந்த தேர்ச்சியைப் பெற்ற மாவட்டங்கள், தருமபுரி, பெரம்பலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை. நான்கூட தொடர்ந்து கடந்த ஆட்சியிலும் சரி, இப்போதும் சரி பேசிக் கொண்டுதான் இருக்கிறேன். குறை சொல்வதற்காக இல்லை. இப்படி இந்த மாவட்டங்கள் தொடர்ந்து தேர்ச்சி விகிதத்திலே பின்தங்கி இருக்கிறதே, இந்த மாவட்டங்களிலே கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு, தேர்ச்சி விகிதத்தை உயர்த்துவதற்கு அரசு ஏன் சிறப்புக் கவனம் செலுத்தவில்லை? சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமா? இல்லையா? இது யாருடைய கடமை? அரசமைப்புச் சட்டத்திலே சொல்கிறோம், கல்வி பெறுவது உரிமை என்று சொல்கிறோம். ஆகவே இதை நான் கடுமையாகவே, குற்றச்சாட்டாகவே இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இந்த இடைவிலகல். இடைவிலகல் கூடாது—drop-outs கூடாது, குழந்தைகள் படிக்க வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் 2002-2003 ஆம் ஆண்டிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே, drop-outs எவ்வளவு என்று சொன்னால், 75.81%; உயர்நிலைப் பள்ளிகளிலே

57.37%; நடுநிலைப் பள்ளிகளில் 32.10%; ஆக இடைவிலகல் எவ்வளவு என்பதை இங்கே நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 பேர் சேருகிறார்கள் என்றால், மேல்நிலைப் பள்ளிகளில் 75.81%, நீங்கள் drop-outs என்று சொல்கிறீர்கள். 100 பேர் சேருவதிலே, 75.81% drop-outs என்றால், அதற்கு source வேண்டும். நடைமுறையில் இது எப்படி இருக்க முடியும்? எந்த ஆதாரத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, source இருக்கிறது. நீங்கள் கொடுத்த புள்ளிவிவரத்திலே இருக்கிறது, பாருங்கள். Drop-outs இருக்கிறது. இதிலேதான் இருக்கிறது, கல்வி மானிய கொள்கை விளக்கக் குறிப்பில்தான் இருக்கிறது, கல்வி இன்னொன்றுகூட அதிலே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறது. விளக்கமாகச் சொல்லவில்லை, கொள்கை விளக்க வேண்டும்— என்னவென்றால், மேல்நிலைப் பள்ளிகள் என்று சொன்னால், 6-வது வகுப்பிலிருந்து 12-வது வகுப்பு வரைக்கும். பிளஸ் 1, பிளஸ் 2-விலே மட்டும் சொல்லவில்லை. இந்தப் புத்தகத்திலேகூட குறிப்பிட வில்லை. ஆனால் பொருள் அதுதான், 6-வது வகுப்பிலிருந்து 12-வது வகுப்பு வரையிலே, பிளஸ் 2 வகுப்பிலே 75.81 சதவிகிதம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் கொஞ்சம் நேரம்தான் இருக்கிறது. நான் முடித்து விடுகிறேன். இன்னும் 8 நிமிடங்கள்தானே. ஒன்றரை மணிக்கு முடிந்துவிடப் போகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இன்னும் பலர் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மதியம் பேரவைக் கூட்டம் இருக்கிறது, நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 6 பேர் பேச வேண்டும். பேசி, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.



**திரு. ஜி.கே. மணி:** தயவுசெய்து ஒன்றரை மணி வரைக்கும் கொடுத்து விடுங்கள். முடித்து விடுகிறேன். ஆக அப்படிப் பார்க்கின்றபோது, இப்போது கேரள மாநிலம் இந்தியாவிலேயே முதல் இடமாக இருக்கிறது. தமிழகம் 13-வது இடத்திலே இருக்கிறது. கல்வி பெற்றவர்கள் எண்ணிக்கை விகிதத்திலே 13-வது இடத்திலே இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். முதலமைச்சர் அவர்கள்கூட ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். நான் இதில் ஆழமாகப் போக விரும்பவில்லை. இருந்தாலும்கூட, இந்தியாவிலேயே முதன்முதலாக தொடங்கப்பட்ட பெண்கள் கல்லூரி இராணி மேரி கல்லூரி. வரலாற்றுச் சின்னமாக இருக்கக்கூடிய அந்தக் கல்லூரியை இடித்துத் தள்ளுவது என்பது-

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, இராணி மேரி கல்லூரி வரலாற்றுச் சின்னம் அல்ல. நீங்கள் குறிப்பிடுகிற அந்தக் கட்டடங்கள் இடிந்துவிழுகின்ற நிலையில்தான் இருக்கின்றன. இன்று இல்லாவிட்டால், நாளை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் உள்ள கட்டடங்களை இடித்து தரைமட்டமாக்கத்தான் வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, அங்கே 26 கட்டடங்கள் இருக்கின்றன. எல்லாமே பழுதுபார்க்க முடியாத நிலையில் இருக்கின்றன. Public Works Department-ல் தலைமைப் பொறியாளர்கூட, ஏற்கெனவே அறிக்கை தந்துவிட்டார். முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே, 2000 ஆம் ஆண்டில், அங்கே Capper House என்ற ஒரு கட்டடம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது, அதை இடித்துத் தள்ள வேண்டுமென்று இராணி மேரி கல்லூரி நிர்வாகத்தினரே மனு செய்து, அதை அன்றைய அரசு ஏற்றுக்கொண்டு அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. அதை இடித்துத் தள்ளுகின்ற வேலை தற்போது, பிப்ரவரி 2003-ல்தான் முடிக்கப்பட்டது. ஆகவே இராணி மேரி கல்லூரி மாணவியருக்கு எந்தவிதமான இடையூறும், சிரமம் ஏற்படாத வகையில் அருகிலேயே, பக்கத்திலேயே உள்ள லேடி விலிங்டன் காலேஜ் வளாகத்திலேயே அவர்களுக்குப் புத்தம் புதிய நவீன வசதிகளுடன் கூடிய கட்டடம் ஏற்படுத்தித் தரப்படும். அதற்கான மாற்று ஏற்பாடுகள் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் வரை அவர்களுக்கு, லேடி விலிங்டன் காலேஜிலும், பிரசிடன்சி காலேஜிலும் கல்வி பயில்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெளிவாக நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[2003 ஏப்ரல் 4

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் விளக்கி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட அது இந்தியாவினுடைய முதல் பெண்கள் கல்லூரி என்ற காரணத்தாலே அதை இடிப்பதற்கு பா.ம.க. சார்பிலே என்னுடைய ஆட்சேபனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, 5 நிமிடங்கள்தான் இருக்கின்றன. நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளியில் முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. 5 நிமிடங்கள் கொடுத்தீர்கள் என்றால் முடித்துவிடப் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயரிலே மணி என்று வைத்துக்கொண்டு, மணியைப் பார்க்காமல் இருந்தால் எப்படி? (சிரிப்பு)

*பிற்பகல் 1-25*

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரேமாதிரியான கல்வி இல்லை. ஏழைக்கு ஒரு மாதிரியான கல்வி. பணக்காரனுக்கு ஒரு மாதிரியான கல்வி, நடுத்தர வர்க்கத்திற்கு ஒரு மாதிரியான கல்வி. இதுதான் நிலைமை. Syllabus-கூட பார்த்தீர்கள் என்று சொன்னால், இங்கே State Board Syllabus இருக்கிறது, Anglo-Indian and Matriculation School Syllabus, அப்புறம் C.B.S.E. இப்படி பல்வேறு Syllabus இருக்கிறது. ஆனால் மேலைநாடுகளில் பார்த்தீர்கள் என்றால் ஒரே பாடத்திட்டம். அப்படிப்பட்ட நிலையை நம்முடைய அரசு கொண்டுவருமா? அதற்கு முயற்சிகள் எடுக்குமா?...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Education-கல்வி, என்பது Concurrent list-ல் உள்ளது. அது மத்திய அரசின் கட்டுப்பாட்டிலும் வருகிறது. மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் வருகிறது. ஆகவே ஒரேவிதமான கல்வி முறையை மாநில அரசு மட்டும் எப்படிக் கொண்டு வரமுடியும்.



2003 ஏப்ரல் 4]

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் அதைத்தான் சொல்கிறார்கள்; கோத்தாரி கமிஷன்கூட அதைத்தான் சொல்கிறார்கள். கல்வி என்பது மாநில அரசு மற்றும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட, இதற்கு முயற்சிகளை எடுத்து, நம்முடைய தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட பாடத் திட்டங்களை வைத்துக்கொள்கிறோம். மத்திய அரசு Syllabus கொடுக்கிறது என்று சொன்னாலும் அதற்கேற்ப நம்முடைய மாநில அரசின் பாடத் திட்டத்தை வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதுகூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், பாடத் திட்டத்தை புதிதாக வைத்திருக்கிறீர்கள். ஆக அந்த வகையில் கொண்டு வரலாம் என்பது என்னுடைய வேண்டுகோள். (மணியடிக்கப்பெற்றது) தலைவரே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரமோகன் (குறுக்கீடு) முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடியுங்கள், கடைசி வாக்கியத்தைச் சொல்லி நிறைவு பண்ணுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மிக முக்கியமான பிரச்சினை. பொறியியல் கல்லூரிப் பிரச்சினை. நான் ரொம்ப ஆழமாகப் போகவில்லை என்று சொன்னாலும்கூட, நீதிமன்றப் பிரச்சினை இருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பிலேகூட சொல்லியிருக்கிறார்கள். நான் பேசுவதற்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. முக்கியமான பிரச்சினை என்றால் முதலில் பேசி இருக்க வேண்டும் நீங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரமோகன், (குறுக்கீடு) ஒரு மணித்துளியில் முடியுங்கள். இல்லை, இல்லை. எல்லோருக்கும் ஒரே நியதிதான், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள், drop-out-ஐப் பற்றி, ஏதோ தமிழகத்திலே அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ஒரு புள்ளிவிவரத்தை நான் அவருக்குச் சொல்ல வேண்டும். Drop-outs-ஐப் பொறுத்தவரையில் *1* ஆம் வகுப்பு முதல் *10* ஆம் வகுப்பு வரை பள்ளிப் படிப்பு பாதியிலே நிறுத்துபவர்களின் எண்ணிக்கை, விகிதாச்சாரத்தைப் பார்க்கிறபோது, இந்தியாவிலேயே குறைவான விகிதத்திலே இருப்பது நம்முடைய மாநிலம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*1* ஆம் வகுப்பு முதல் *5* ஆம் வகுப்பு; வரை தமிழ்நாட்டிலே drop-outs *15.05*. ஆந்திரப் பிரதேசத்திலே; *45.74*; கர்நாடகாவிலே *33.48* மேற்கு வங்காளத்திலே *49.92*; *1* முதல் *5* ஆம் வகுப்பு வரை. இதைப் பார்த்தால்கூட நம்முடைய மாநிலத்தில்தான், *15.05*. மிகக் குறைந்த விகிதத்திலே drop-outs இருக்கிறது. (குறுக்கீடு). அதுவும் சொல்கிறேன். *1* முதல் *10* வகுப்பு முடிய, தமிழ்நாட்டிலே *58.01*. ஆனால் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மேற்கு வங்காளம் *82.73*; கர்நாடகம் *68.02*; ஆந்திரப் பிரதேசம் *74.44*, எனவே இதைப் பார்த்தால்கூட தமிழ்நாட்டில்தான் drop-outs மிக மிகக் குறைவு.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில் பிரச்சினை இருக்கிறது. வழக்கு இருக்கிற காரணத்தாலே, அந்த வழக்கிற்கு ஒரு நல்ல தீர்வு வரவேண்டும். நம் அரசாங்கம் மக்களுக்காகத்தான் இருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்களுக்காக அல்ல. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குழந்தைகளின் கல்வி நலன் கருதி, நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்புகள் எல்லாம் இதற்கு முன்னாலே வழங்கப்பட்டிருக்கின்றன. முன்னுதாரணங்கள் இருக்கின்றன. அந்த வகையிலே, உச்ச நீதிமன்றத்திலே நல்ல தீர்ப்பை வழங்கிய புகழ்பெற்ற, அதிலும் குறிப்பாக, மண்டல் குழு வழக்கிலே தீர்ப்பு வழங்கியவர். கல்வி சம்பந்தமாக உன்னி கிருஷ்ணன் வழக்கிலே தீர்ப்பு வழங்கிய தமிழகத்தைச் சேர்ந்த, புகழ்பெற்ற, ஓய்வு பெற்ற, மரியாதைக்குரிய மாண்புமிகு இரத்தினவேல் பாண்டியன். சமூக நீதியிலே அக்கறை உள்ளவர். அவரைப்போலவே, சமூக நீதியிலே அக்கறை உள்ள ஓய்வு பெற்ற நீதியரசர் ஜனார்தனம் போன்றவர்கள் எல்லாம் உதவி



செய்வதற்கு முன் வருகிறார்கள். அவர்களைப் போன்றவர்களை வைத்து ஒரு குழு அமைத்து, இதிலே ஒரு நல்ல தீர்வு காணவேண்டும் என்று அன்போடு சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு பள்ளிகளைப் பார்த்தால் ஆசிரியர் பற்றாக்குறை நிறைய இருக்கிறது. ஒன்றியப் பள்ளிகளிலே, மாநகராட்சிப் பள்ளிகளிலே, அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலே, ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. இவர்களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டும்.

தருமபுரி மாவட்டத்திலே, பெண்ணாகரம் தொகுதி, பின்தங்கிய பகுதி. Counselling வந்த காரணத்தால் எல்லோரும் மாறுதல் பெற்றுச் சென்றுவிட்டார்கள். ஒரு வருடமாக இந்தப் பள்ளிகளுக்கு யாரும் வருவது இல்லை. ஓராசிரியர் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கெல்லாம் உடனடியாக நல்ல தீர்வினை உருவாக்க வேண்டும்.

கட்டடங்களை கட்டித் தர நிதியில்லை என்று சொல்கிறோம். கோயில்கள் இருக்கின்றன. தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள், வருவாய் வரக்கூடிய கோயில்களிலிருந்து கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கலாம் என்று நீங்கள் ஆலோசிக்கலாம். அவர்களை அழைத்துப் பேசலாம். தென்னாப்பிரிக்காவிலேகூட நெல்சன் மண்டேலா..

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணியின் பேச்சு நிறைவு பெற்றது.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை *4-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-31* மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் *4-30* மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையின்மீது தொடர்ந்து விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டுக்கான கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன். வரலாறு காணாத நிதி நெருக்கடியிலும் ஆட்சிப் பொறுப்பேற்று, சிறப்பாக ஆட்சி புரிந்து, மிகப் பெரிய நிதி நெருக்கடியிலும் மக்களுக்காக மகத்தான பட்ஜெட்டை இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் அம்மா அவர்கள் ஏழை மக்களுக்காக அர்ப்பணித்திருக்கிறார்கள்.

*'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்'*

கண்ணின் பயன்பாடே கல்வி கற்பதுதான் என்று திருவள்ளுவர் கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானது அந்த நாட்டின் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கைதான். அதிலும் ஆரம்பக் கல்வி என்பது மக்களின் அடிப்படைத் தேவையாகும். இதைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் கல்விக்காக பல புதிய திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள்.

பள்ளியின் வேலை நேரத்தை அதிகப்படுத்தியும், கணினிக் கல்விக்காக முக்கியத்துவம் கொடுத்தும், மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்திருக்கிறார்கள். உலகத் தரத்திற்கான கல்வி, உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பக் கல்வி உருவாக்கும் நோக்கத்தில் உயர்ந்த தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள்.

நல்ல கல்வி இல்லாமல் நல்ல அரசியல், நல்ல சமூகம் காண இயலாது. நல்ல சிந்தனைகள் ஏற்படாது என்பதனால் சாதாரண மக்களும் கம்ப்யூட்டர் பயிற்சி மற்றும் ஆங்கிலம் கற்க பயிற்சி



அளித்து அவர்களின் எதிர்காலம் சிறக்கச் செய்வதே மாண்புமிகு அம்மா அவர்களின் கல்விக் கொள்கையாக இருப்பது அனைவரும் வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

அனைவருக்கும் கல்வி என்ற வகையில் *2001-2003*-க்கான கால அளவில் *756* தொடக்கப் பள்ளிகளையும், *676* நடுநிலைப் பள்ளிகளையும், *220* உயர்நிலைப் பள்ளிகளையும், *260* மேல்நிலைப் பள்ளிகளையும் ஏற்கெனவே இந்த அரசு தொடங்கியுள்ளது. புதியதாக *30* உயர்நிலைப் பள்ளிகளும், *30* மேல்நிலைப் பள்ளிகளும் *2003-2004*-ல் தொடங்கவுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனையாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் வசதிகளை நிலை உயர்த்துவதற்கான திட்டத்தின் இரண்டாவதுகட்டமாக வரும் நிதியாண்டில் ரூ.*80.64* கோடி திட்டச் செலவில் *19* மாவட்டங்களில் *250* பள்ளிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் உயர்நிலைப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளின் தர மேம்பாடு, கல்வி நிறுவனங்களில் அதிக அளவில் மாணவர்களை தக்க வைக்க வழி வகுத்துள்ளது. ஏழை மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இருக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மாணவர்களுக்கு தொழில் உலகில் இடம் பிடிக்க கம்ப்யூட்டர் பயிற்சி அவசியமாகிறது. தட்டெழுத்துப் பணிகளுக்குக்கூட கம்ப்யூட்டர் அறிவு உள்ளவர்களையே தேர்வு செய்யும் நிலை உருவாகி விட்டதால், பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கட்டாய கம்ப்யூட்டர் கல்வி பயிற்சியளிக்க, இந்த பட்ஜெட்டில் கொண்டு வந்த திட்டம் என்பது சாதாரண மக்களுக்குக்கூட சிறப்பான கல்வி வழங்க வேண்டும் என்று எந்த முதல்வரும் செய்யாத உதவியை மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திட்டத்தின் மூலம் செய்திருக்கிறார்கள்.

*200* மேல்நிலைப் பள்ளிகளை கம்ப்யூட்டர்மயமாக்கும் திட்டத்தின்கீழ் இந்த பட்ஜெட்டில் கொண்டு வந்துள்ளது தமிழ்நாட்டை அறிவுத் திறன் பெற்ற, கம்ப்யூட்டர் அறிவுமிக்க சமுதாயமாக மாற்ற வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் சாதனங்கள் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் புதிதாக உதயமாகும் துறைகளில் தக்க வேலைவாய்ப்புகளைப் பெற ஆங்கிலம் மிக இன்றியமையாத ஒன்றாக இருப்பதால் ஆங்கில மொழி கற்பதில் தனி முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் வரும் நிதியாண்டில் ரூ.1.69 கோடி செலவில் 300 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி கற்பிப்பு ஆய்வகங்கள் தொடங்கப்படவுள்ளன. இது மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பான ஒரு சாதனையாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மக்கட்தொகை 300-ம், ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் பள்ளிகள் இல்லாமல் இருந்தால் அந்தச் சிற்றூரில் புதிய பள்ளிகளைத் தொடங்குதல், கிராமத்திலுள்ள பள்ளிகளில் நூல் நிலையம் அமைத்தல் என்பது--867 கிராமப்புறங்களில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன—கிராமத்திலுள்ள பள்ளி மாணவர்களின் அறிவு வளர்ச்சியை கருத்தில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்துள்ளார்கள்.

பிற்பகல் 4-35

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் நடப்பாண்டில் 47,980 மிதிவண்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேல் நிலைப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் புதிதாக சேரும் மாணவியர்களுக்குப் பயனளிக்கும் வகையில் வரும் நிதியாண்டில் ரூ. 7.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது வரவேற்கத்தக்கது.

பிரதான எதிர்க் கட்சிக் கூடாரத்தின் குள்ளநரிச் செயல்களை, அந்தச் சதிகாரர்களின் சூழ்ச்சியினைத் தவிடு பொடியாக்கி ஆண்டிப்பட்டியில் வெற்றி பெற்று மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் அமர்ந்தவுடன் உறுதி அளித்தவாறு, வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.



பிரிவினரிடையே கல்வி அறிவு மேன்மேலும் ஒடுக்கப்பட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆழ்ந்த அக்கறையோடு, ஊக்குவிக்கப்பட உயரிய நோக்கத்தின் அடிப்படையில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பிரிவினரின் பொருளாதார, சமூக பெயரில் ஒடுக்கப்பட்ட முக்கிய நோக்கமாகக் கொண்டே திருவள்ளுவர் மேம்பாட்டை பல்கலைக்கழகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்து சாதனை புரிந்துள்ளார்கள்.

நடப்பு நிதியாண்டில் பணிகளைத் தொடங்கியுள்ள தமிழ்நாடு திறந்த வெளிப் பல்கலைக்கழகம், கல்வி கற்க இயலாத அனைவரும் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் அரசு தெளிவான கொள்கைகளை வகுத்துள்ளது. நம்முடைய அறிவியல் மனித ஆற்றல், உலக அளவில் விரும்பிக் கேட்கப்படும் வகையில் தொழில் நுட்பக் கல்லூரிகள் தங்களது கட்டமைப்பு வசதிகளையும், பயிற்சித் தரத்தையும் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழகத்திலுள்ள 240 பொறியியல் கல்லூரிகளை ஒரே இணைப்பின்கீழ் கொண்டு வர மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தேசித்துள்ளார்கள்.

அரசு பொறியியல் கல்லூரிகளில் கவுன்சிலிங்கும், இட ஒதுக்கீடும் தொடரும் என்று தமிழக அரசு தெளிவாகக் கூறியுள்ளது. இதன் மூலம் இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய கல்விக் கொள்கையை வெளியிட்டது வரவேற்கத் தக்கதாகும். இதனை குழப்பிக் கொண்டிருந்த மற்ற மாநில அரசுகளும், மாண்புமிகு அம்மா அவர்களின் முடிவினை ஒரு வழிகாட்டியாகக் கருதுகின்றனர். இது இந்தியாவிற்கே அம்மா அவர்களால் கிடைத்த சாதனை ஆகும்.

புரட்சித் தலைவர் அவர்களால் 1984 ஆம் ஆண்டு கொடைக்கானலில் தொடங்கப்பட்ட அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அரசு சென்னை நகருக்கு மாற்றி அதனைச் சீரழித்து நல்ல முறையில் செயல்படுத்தவிடாமல் செய்துள்ளனர்.

மகளிர் தமது வாழ்வில் சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றத்தை அடைய கல்வி மிகவும் அவசியம் என்பதால்,

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள உயர் கல்வி பயில்கின்ற மகளிர் எளிதாகத் தொடர்பு கொள்கின்ற வகையில், குறிப்பாக, தென் மாவட்டங்களுக்கு அருகில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மீண்டும் கொடைக்கானலில் அன்னை தெரசா பல்கலைக்கழகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறுவினார்கள்.

2 ஏக்கர் பரப்பில் சிறிய கட்டடத்தில் அமைந்துள்ள இப்பல்கலைக் கழகத்தை விரிவுபடுத்த 150 ஏக்கர் நிலம் கொடுத்ததும் இப்பல்கலைக் கழகத்தை சர்வேதச பல்கலைக் கழகங்களுக்கு இணையாக, மிகச் சிறந்த ஒரு உயர் கல்வி மையமாக மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் தமது உரிமையை நிலைநாட்டி அதிகாரப் பகிர்வினை மகளிர் அதிக அளவில் பெற்றிடவும் அவர்களுக்கு உயர்ந்த கல்வி மிகவும் தேவை என்பதை உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுவது குறித்து பெண்ணினமே போற்றிப் பெருமிதப்படுகிறது.

தமிழ்நாட்டின் வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிக் காக்க, தமிழை மைய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குமாறு, மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம் என்பதும்...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா பல்கலைக்கழகத்திற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அரசு 111 ஏக்கர் நிலத்தைக் கொடுத்துள்ளது. அதை விரிவுபடுத்துவதற்காக கிட்டத்தட்ட இருபது கோடி ரூபாய் அளவிற்கு நபார்டு வங்கியிலே நிதியுதவி பெற்று, அந்த விரிவாக்கப் பணியை நடத்துவதற்கு—விரிவாக்கப் பணியைத் தொடர்வதற்கு—நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிக் காக்க, தமிழை மைய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குமாறு, மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம் என்பதும் நம்முடைய வரலாற்றுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாக்க இந்த நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3.64 கோடி நிதி ஒதுக்கீடு



செய்யப்பட்டுள்ளதை அறிந்து அனைத்து மாணவர்களும், தமிழ்ச் சமுதாயமும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டிப் பெருமைப்படுகின்றனர்.

இந்தக் கல்வி மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்த வேளையில்' எனது சீர்காழி தொகுதியில் சில கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு தங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

சீர்காழி நகரில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்றும் சீர்காழி தொகுதியிலுள்ள மாதானம் ஆதி திராவிட நடுநிலைப் பள்ளியையும், காரைமேடு ஆதிதிராவிட நடுநிலைப் பள்ளியையும் இந்த ஆண்டிலேயே உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

சீர்காழி நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் தயார் நிலையில் இருந்தும் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. அந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நடைமுறைப்படுத்த வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழி தொகுதி, வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் கடல் நீர் மேலே ஏறி சீர்காழி நகரம் வரை, ஏறத்தாழ 15 கி.மீ. தூரம் ஆற்றில் கடல் நீர் வருவதால் சீர்காழி நகராட்சி மற்றும் சுமார் 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர் உப்புநீராவதைத் தடுக்க வெள்ளப்பள்ளம் கிராமத்தில் உப்பனாற்றில் ஒரு தடுப்பணை கட்டித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சீர்காழி தொகுதியில், கொள்ளிடம் ஆற்று வழியாகக் கடலில் கலக்கும் உபரி நீரைத் தேக்கம் செய்து, குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும், பயன்படுத்துவதற்கு வடரெங்கம் அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு ரெகுலேட்டர் கட்டிக் கொடுக்க வேண்டுமாறு மாண்புமிகு அம்மா அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

'மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள் என்பதைவிட, மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே நமது சிந்தனை' என்று அம்மா அவர்கள் கூறியதுபோல 'சாத்தியம் என்பது சொல் அல்ல செயல்' என்று தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்க சபதம் ஏற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏழை, எளியவர்களின் வாழ்வு வளம் பெறுவதற்காகவும் உழைக்கிற மக்களுக்காகவும் உருவாக்கப்பட்ட உன்னதமான, இந்தக் கல்வி மானிய விவாதத்தில் பேச இந்தத் தொண்டனுக்கும் வாய்ப்பு அளித்ததற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு இனிப்பான செய்தி. மாலைச் சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேவைப்பட்டவர்கள் போய் சாப்பிடலாம். சபை முடிந்து இரயிலைப் பிடிப்பதற்கு எல்லோரும் ஆவலாக இருப்பதால் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் ஐந்து, ஐந்து நிமிடத்திற்குள் முடித்துவிடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு இனிப்பான செய்தியைக் கொடுத்துவிட்டு ஒரு கசப்பான செய்தியையும் கொடுக்கிறீர்களே, என்ன இது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு காரமான செய்தி அங்கே இருக்கிறது. காரமும் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி, தமிழ் வளர்ச்சி குறித்து இந்த மன்றத்தின் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் கல்விக் கொள்கை சம்பந்தமாகக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசின் கீழ் உள்ள NCERT என்ற அந்த அமைப்பினுடைய 63-வது பேரவைக் கூட்டம் நடைபெற்றது. மாநில அரசினுடைய கல்வி உரிமையின் மீது மத்திய அரசு தலையிடுகிற காரணத்தினால் 16 கல்வி அமைச்சர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். ஆனால் தமிழகக் கல்வி அமைச்சர் வெளிநடப்புச் செய்யவில்லை என்பதை அறிகிறபோது



வேதனை அடைகிறோம். அதேபோல NCERT-யின் 6ஆம் வகுப்புப் பாடம் சிந்து சமவெளி நாகரிகம், திராவிட நாகரிகம் என்று—(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கூட்டம் எதிலும் நான் பொறுப்பேற்ற பிறகு கலந்துகொள்ளவில்லை. அதற்கு முன்னாலே இருந்த எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த அமைச்சர் மாண்புமிகு தம்பிதுரை அவர்களும் கலந்துகொள்ளவில்லை. எந்தக் கல்வி அமைச்சர் வெளிநடப்புச் செய்தார் என்று சொன்னால் சரியாக இருக்கும். (குறுக்கீடு) வெளிநடப்புச் செய்யவில்லை.

**திரு. என். நன்மாறன்:** பத்திரிகையில் வந்த செய்தி. நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இல்லை. வெளிநடப்புச் செய்யவில்லை.

**திரு. என். நன்மாறன்:** அதாவது 63-வது கூட்டம். அந்தக் கூட்டம் நடைபெற்ற தேதி கூட இருக்கிறது. அந்தக் கூட்டத்தில் தமிழக அமைச்சர் அவர்கள், கல்வி அமைச்சர் அதில் (குறுக்கீடு) இல்லை ஒன்றும் வேண்டாம். முக்கியமான விஷயம். (குறுக்கீடு) Correct என்னைக் கேட்டது நல்லது. Sorry தேதியை நான் எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.

NCERT-லே 6ஆம் வகுப்பு பாடத்தில் சிந்து சமவெளி நாகரிகம்—திராவிட நாகரிகம் என்பது உறுதியான ஒன்று-தற்போது அதனை மாற்றி--ஆரிய நாகரிகம் என்று குறித்து வைத்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 4-45*

அதேபோல மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட விவரம். அது ஒன்பதாம் வகுப்பு பாடத்தில் இல்லை. இப்போது 6 ஆம் வகுப்பிலிருந்து 7, 8 ஆம் வகுப்பு பாடத் திட்டம் மாற்றி அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. NCERT-யினுடைய இத்தகைய போக்கின் அடிப்படையில் நம்முடைய பாடத் திட்டமும் அமைந்துவிடக் கூடாது என்பதைத்தான் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தமிழகத்திலே அண்மையில 12 ஆம் வகுப்பு—

***திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன் அவர்கள் ஒரு பயங்கரமான செய்தியைத் தெரிவிக்கிறார். காரணம், நாகரிக வளர்ச்சியில் திராவிட நாகரிக்த்தின் தோன்றுதலாக இருக்கக்கூடியது மொகஞ்ஜோதாரோ, ஹரப்பா என்பதை இராஸ் பாதிரியாரும், மார்ஷல் அவர்களும் தெரிவித்து, பண்டித நேரு அவர்கள், Glimpses of World History-யில் பக்கம் பக்கமாக திராவிட நாகரிகம்தான் என்று எழுதியிருக்கிறார். ஆனால் இடையில் இப்போது சில பேர், இந்து பத்திரிகையிலேகூட மாறி மாறி, இல்லை, இல்லை அது ஆரிய நாகரிகம் என்று எழுதுகிறார்கள். ஆனால் ஹார்வெர்டு பல்கலைக்கழகத்திலே இருக்கக்கூடிய ஒரு வெள்ளைக்காரர், இல்லை, அது திராவிட நாகரிகம் தான் என்று எழுதியிருக்கிறார். எனவே மீண்டும் உறுதி செய்யப்பட்ட ஒன்றை இப்போது மாற்றி அமைத்து, வேறு நாகரிகம் என்று சொன்னால், அது தலைகீழாகப் போய்விடுகிறது. அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான செய்தியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது அந்தச் செய்தி நம்முடைய அரசுக்குத் தெரியுமா? ஆம் என்றால் அரசு அதன்மீது எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்திய நாட்டிலே அதற்கு பல முன்னுதாரணங்கள் உண்டு. வரலாற்றுப் பெட்டகம் புதைக்கப்பட்டபோது, மாண்புமிகு பாரதப் பிரதமர் இந்திரா அம்மையார் இருக்கிறபோது இந்திய வரலாற்றுப் பெட்டகம் பூமிக்கடியிலே புதைக்கப்பட்ட பிறகு, ஆட்சியாளர்கள் வந்தபோது அதை மீண்டும் எடுத்து சில மாற்றங்களைச் செய்தார்கள். எனவே நமக்கு ஒத்துவராத கொள்கை எதுவாக இருந்தாலும் மாற்றுவதிலே நமக்கு எந்தவித மாறுபாடும் கிடையாது. எங்களுக்கு அது உடன்பாடும் கிடையாது. பேரவையினுடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. கல்வியைப் பொறுத்தவரையிலே அது Concurrent list-ல் இருக்கிறது. அவர்கள் Central Board syllabus-ல் சேர்த்திருக்கிறார்கள். எனவே நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. நம்முடைய பாடத் திட்டத்திலே அதைப் போன்ற தவறுகள் நடக்காத அளவிற்கு நாங்கள் பார்த்துக்கொள்வோம். ஒருவேளை அது போன்ற கருத்துகள் என்னுடைய கவனத்திற்கு வந்தால், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த உணர்வை அவர்களுக்கு வெளிப்படுத்தலாம். அதை ஏற்று உரிய மாற்றம் செய்வார்களானால் அதையும் நாம் வரவேற்கலாம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு மிக்க நன்றி. நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய குறுக்கீடுக்கும் நன்றி. இங்கே குறுக்கிட்டதோடு டெல்லியிலும் உரிய கவனம் எடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு துணை நிற்க வேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கடந்த முறை தமிழகத்தில் 5 ஆம் வகுப்பு பாடத்தில், வ.உ.சி. அவர்களுடைய பாடம் நீக்கப்பட்டது குறித்து இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. மீண்டும் அந்தப் பாடம் இடம் பெறுவதற்கு தமிழக அரசு உரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிய கருத்து எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. மீண்டும் அதைப் பாடத் திட்டத்திலே சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். நன்மாறன்:** அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இந்த ஆண்டு 12 ஆம் வகுப்பு தேர்வு. வரலாறு குறித்த தேர்வு. ஏராளமான கேள்விகள். ஒரு கேள்விகூட தமிழ்நாடு குறித்து இல்லை. பாடங்கள் எல்லாம் உண்டு. அந்த வினாத்தாள் தயாரித்தவர்கள் குறித்து அரசு ஒரு விசாரணை நடத்தி எதிர்காலத்தில் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படாதவாறு தவிர்க்க வேண்டுமென்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புதிய பள்ளிகள் திறக்கப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் உள்ளது. தற்போது திண்டுக்கல் நகரத்தில் ஒரு பள்ளிக்கூடம். அரசினர் பள்ளி, சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கி ஒரு வருடமாகிறது. இன்னும் உரிய கட்டடம் கட்டப்படாத காரணத்தால் அந்த மாணவர்கள் வெளியில், வெயிலிலும் மழையிலும் பாடத்தைப் பயில வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே தலையீடு அரசுத் தரப்பிலே இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே சிவலோகம் என்கிற பகுதி, நீலகிரி மாவட்டத்திலே கூடலூர் என்கிற பகுதி; இங்கெல்லாம் மலையாள ஆசிரியர் தேவை என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. உரிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் கட்டாயம். அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு முறையாக நடத்தப்பட்டு நமக்குச் சாதகமான தீர்ப்பு வருவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே ஒன்று கிட்டத்தட்ட அரசு ஆணைதான் சரியில்லை என்று தீர்ப்பு. புதிய அரசு ஆணை போட முடிந்தால், அதைப் போடலாம்; அல்லது ஒரு தனிச் சட்டம் இயற்றலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4-50*

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்து ஆராய சிட்டிபாபு குழு போடப்பட்டது. அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதா? அது குறித்து அவைக்கு என்ன தகவல் இருக்கிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

S.S.A. அனைவருக்கும் கல்வி, அதாவது சர்வ சிக்ஷா அபியான். அதிலே முழு எழுத்தறிவுத் திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் நிதி எல்லாம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் நியமனம் என்பது இல்லை. அமைச்சர்கூட, காலையிலே சொன்னார்கள். காலியான ஆசிரியர் இடங்கள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் மாணவர்களுக்குக் கல்வி கிடைப்பதிலே ஒரு மிகப் பெரிய சிரமம் ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து I.T. —Information Technology. இப்போது முன்னுக்கு நிற்கிற கல்வி. 6 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்புக்குள்ளே இதுகுறித்து ஒரு அறிமுகக் கல்வியை நம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுப்பது உதவி செய்யும் என்பதையும் நான் வற்புறுத்துகிறேன்.

அதுபோல் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆசிரியர்களுடைய பிராவிடென்ட் பணப் பலன்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அரசு தலையிட வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வி என்பது ஒருகாலத்தில் பாவேந்தர் பாடினார்,

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை
சிலைபோல ஏனங்கு நின்றாய்?—நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?



என்று சொன்னார்கள். நான் சிறுவனாக இருந்தபோதுகூட பள்ளிக்கூடத்திற்கு பல பிள்ளைகள் வராது. இப்போது எல்லாப் பிள்ளைகளும் பெற்றோர்களை உசுப்புகிறது. அந்த அளவுக்கு தம்மில் தம் மக்கள் அறிவுடைமை என்று வளர்ந்தாகிவிட்டது. பெற்றோர்களும் பிள்ளையைப் படிக்கவைக்க விரும்புகிறார்கள். இப்போது கல்வி எட்டாக்கனியாக மாறுகிறது. அது ஒரு வியாபாரமாகிவிட்டது. குறிப்பாக கோவை மாவட்டத்திலே பலபேர் சொல்கிறார்கள். தொழில்நகரமாக முன்பு இருந்தது. இப்போது கல்வியைத் தொழிலாக ஆக்குகிற நகரமாக மாறியிருக்கிறது. எனவே இது இப்படியே போனால் ஒரு பெரிய ஆபத்து என்று சொல்கிறார்கள். ஆகவே சுயநிதிக் கல்லூரிகள் குறித்து அரசு கூடுதல் அக்கறை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள், அலுவலர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதேபோல் சுயநிதிக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை தமிழ்நாட்டில் இருக்கிற ஒரு தனிச் சிறப்பு; இடஒதுக்கீடு. அதற்கே சிரமம் உண்டாக்குகிற முறையிலே சுயநிதிக் கல்லூரிகள் செல்கின்றன. இது விசேஷமாக முயற்சிப்பது. அகில இந்திய அளவில் என்னதான் பல தீர்ப்புகள் வந்தாலும், தமிழ்நாட்டில் ஒரு தனிச் சட்டம் இயற்றி அரசினுடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரசுக் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களில் இணைத்தோம். அப்போது கட்டண உயர்வு இருக்காது என்று சொல்லப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் கூடுதல் கட்டணம் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி; அது மீண்டும் திறக்கப்பட்டு மாணவர்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கீகாரம் இல்லாத கல்லூரிகள் பெருகிவிட்டன; பார்மஸி கல்லூரிகள் உள்பட. திருச்சியில்கூட. ஆக, அதிலே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதையும் வேண்டிக்கொள்கிறேன்.

அதேபோல் கம்ப்யூட்டர் கல்வி. அதிலே ஒரு ஏற்பாடு. தமிழ்நாடு அரசு டைப்ரைட்டிங் படிக்கிற பிள்ளைகளுக்கெல்லாம் எந்தக்

கிராமத்தில் படித்தாலும், பொதுத் தேர்வை அரசே நடத்தும். ஆனால் கம்ப்யூட்டர் நிலையங்களில் பிள்ளைகளுக்குச் சான்றிதழ் என்பது அரசுத் தரப்பில் வழங்குவது இல்லை. அவர்களே தருகிறார்கள். அந்தப் படிப்பு எங்கே படித்தாலும், அதைப் பொறுத்து வேலைவாய்ப்பு இருக்கிறது. ஆகவே டைப்ரைட்டிங், ஷார்ட்ஹேண்டுக்கு அரசுத் தேர்வுத் துறை தேர்வு இருப்பதுபோல், கம்ப்யூட்டருக்கு ஒரு தேர்வு வைத்து சான்றிதழ்கள் வழங்குகிற முறையை தமிழகத்திலே கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் நலன். இளைஞன் நலன்களுக்கு Youth Welfare Board அமைப்பதற்கு அரசு முன்வா வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ் வளர்ச்சி. மத்திய அரசில் தமிழை ஆட்சிமொழியாக மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேசி இருக்கிறார்கள். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும் சொல்லியிருக்கிறார். இந்த அறிக்கையிலேகூட ரொம்ப அருமையாகத் துவங்குகிறார். "தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது என்பார் மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர்" என்று. நல்ல துவக்கம். இந்த மொழி செம்மொழியாக வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது குறித்து தமிழ்நாடு சட்டமன்றத்திலே ஒரு விசேஷ தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மத்திய அரசு (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுவார். 2 நிமிடத்தில் முடித்து விடுவார். (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** நான் பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடித்து விடுவார். 2 நிமிடத்தில் முடித்து விடுவார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் கடந்த முறை ஒவ்வொரு கூட்டத்தொடரிலேயும் தமிழ் செம்மொழி ஆக்கப்பட வேண்டுமென்பதற்குத் தீர்மானம் சட்டப்



பேரவையில் கொண்டுவர வேண்டுமென்று, தனி நபர் தீர்மானத்தைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இதுவரை எடுத்தபாடில்லை. கடந்த 2 ஆண்டு காலமாக. இந்தக் கூட்டத்தொடரிலே எடுத்துக்கொள்வீர்களா? நிச்சயமாக அக்கறையுள்ள அரசு நிறைவேற்ற முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுகிற அரசுக்கு அக்கறை இல்லையென்று சொன்னால் தனிநபர் தீர்மானத்தைக் கொண்டுவரலாம். சட்டசபையிலே தீர்மானத்தைக் கொண்டுவரலாம். விவாதம் நடத்தலாம். ஆனால் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன் அவர்கள் சொன்னதைப்போல் இரண்டு முறை நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நேரடியாக அவர்களே கைப்பட, கடிதம் எழுதியுள்ளார்கள். தொடர்ந்து நினைவுபடுத்தி வருகிறார். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நம் சட்டசபையில் விவாதிப்பதைவிட அல்லது தனித் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றுவதைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நம்முடைய இந்த மன்றத்திலே இருக்கிற அனைத்து உறுப்பினர்கள் சார்பிலேயும்—அவர்கள்தான் நமக்கு எல்லாம் தலைவர்; எனவே—அவரே இரண்டு முறை கடிதம் எழுதியிருக்கிறார். தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கிறார். எனவே இதற்காக தனித் தீர்மானமோ, தனி விவாதமோகூடத் தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

பிற்பகல் 4-55

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய Clarification கேட்க வேண்டியிருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மத்திய அரசு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மொத்தத்திலே யாரும் டிரெயினைப் பிடிக்க முடியாது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** சரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** சரி, முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.. உறுப்பினர் பேச்சை முடியுங்கள். பேசி, முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செம்மொழி குறித்து பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தவர்களிலே நானும் ஒருவன். அவரே அந்த மனுவை வாங்கினார். முதலிலேயே சொல்லிவிட்டார். It will be considered என்று சொல்லிவிட்டார்; இது பரிசீலிக்கப்படும் என்று சொல்லிவிட்டார். ஆகவே அதை மீண்டும் வலியுறுத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதை நான் தெரிவிக்கிறேன். தீர்மானம் தேவையில்லை என்கிற முடிவிற்கு வந்துவிட வேண்டாம். அவையில் இருக்கிற அனைத்து உறுப்பினர்களுடைய கவனத்தை எடுத்துக்கொண்டு, முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியிலே ஓலைச் சுவடிகள் பாதுகாப்பிற்கு என்று ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவிலே தமிழ்நாட்டின் பிரதிநிதிக்கு இடம் இல்லை. ஆகவே தமிழக அரசு அதன் மீது கவனம் செலுத்தி தமிழகத்தினுடைய ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இலக்கியப் பரிசு. இந்த அறிக்கையில் உண்டு. இந்த ஆண்டு வழங்கப்படவில்லை. அதையும் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும்.

தொல்பொருட்கள் பாதுகாப்பு. தொல்லியல் துறை; மன்னர் திருமலை நாயக்கர் மகால், ரொம்ப அருமையான இடம். அதேபோல் மதுரையில் மாரியம்மன் கோயில் தெப்பக் குளத்திலுள்ள மைய மண்டபம். இவை இரண்டும் தொன்மை சிறப்பு மிக்கவை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** இவற்றுக்கு உரிய நிதி வழங்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....



**திரு. என். நன்மாறன்:** நேரம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மைக் கொடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே உறுப்பினர் நன்மாறன் அவர்கள், யாரும் தொடாத, நினைக்காத அந்தப் பிரச்சினையை—ஆனால், அந்த முக்கியமான .பிரச்சினைகளை--எடுத்துப் பேசுகிற காரணத்தால், அருள்கூர்ந்து எதிர்க்கட்சிகள் சார்பிலே கேட்கிறேன். அவருக்கு 5 நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலேயே 5 நிமிடம் கொடுத்தாயிற்று.

**திரு. துரைமுருகன்:** நாங்கள் இந்தப் பிரச்சினைகளிலே யாரும் அதிகமாகப் பேசுவதே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலேயே 5 நிமிடம் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) சரி.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் கல்வித் துறை ஒரு பெரிய துறை. இதுவரையிலே தனி அமைச்சர் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அமைச்சர் உருவாக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுதான் முக்கியமான சப்ஜெக்டா? இரண்டு நிமிடத்திலே பேச்சை முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** இரண்டு பாயின்டுகள். பேச்சை முடித்துவிடுகிறேன். துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தத் துறைக்குப் பொறுப்பிலே இருப்பது மாண்புமிகு உறுப்பினர் நன்மாறனுக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால், அதற்காக இப்படி எல்லாம் பேசக்கூடாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கல்வி அமைச்சர் இருக்கிறார்.

[2003 ஏப்ரல் 4

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. அவர் வழக்கறிஞர் என்று அறிகிறேன். இருந்தாலும் மருத்துவத் துறையில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார். இன்னும் எத்தனை துறைகள் கொடுத்தாலும் பார்ப்பார். அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. கல்விக்கு என்று தனி அமைச்சர் தேவை என்பதை நான் கல்வித் துறையைச் சேர்ந்தவர்களுடைய கருத்தாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய ஆற்றல்மீது, திறமையின்மீது எனக்கு ஐயமில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்துகிறேன்.

அடுத்து உருது அகாடமி; அதைக் கேட்கிறார்கள். Re-constitute பண்ணப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். அதில் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறேன்.

அடுத்து ஆங்கிலத்திலே நம்முடைய 'தமிழ்நாடு அரசு' என்பதற்கு Government of Tamil Nadu என்று இருக்கிறது. அதை ஆங்கிலத்திலே சொல்கிறபோது Tamil Nadu என்று போடுகிறோம். நாடு என்பதற்கு Nadu என்று ஆங்கிலத்தில் போடுகிறோம். இதை மாற்றி தமிழ் என்பதற்கு, THAMIZH என்றும் நாடு என்பதற்கு NAADU என்றும் போட்டு எழுதியிருந்தால் பிற மாநிலத்தவர்கள் சரியாக தமிழை உச்சரிப்பதற்கு வழி ஏற்படும். அந்த அடிப்படையிலே THAMIZH NAADU எனப் போடுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆளுநர் உரை தமிழில் மொழி பெயர்க்கப்படாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதுவே தொடரக்கூடாது. (மணியடிக்கப்பெற்றது) வருங்காலத்தில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். கல்வித் துறை மானியக் கோரிக்கைமீது மட்டும் பேசுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** வருங்காலத்தில் ஆளுநர் வாசித்ததாகக் கருதி நாம் பதிவு செய்துவிடாமல், தமிழில் வாசிக்குமாறு மரபை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.



2003 ஏப்ரல் 4]

பிற்பகல் 5-00

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சோவியத் ரஷ்யா சோசியலிஸ்ட் நாடாக இருந்தபோது இந்தியாவிலிருந்து ஒரு தூதுக் குழு அங்கே பார்வையிடச் சென்றபோது இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு, எது அடிப்படையானது என்ற கேள்விக்கு நீங்கள் ஆரம்பக் கல்வியிலுள்ள மாணவர்களை அணுகிப் பாருங்கள் என்று சொன்னார்களாம். அங்கே சென்று 1ஆம் வகுப்பு படிக்கிற ஒரு பையனை அழைத்து ஒரு மூட்டை கோதுமை நூறு ரூபாய்க்கு வாங்கி 150 ரூபாய்க்கு விற்றால் என்ன கிடைக்கும் என்ற கேள்விக்கு அந்தப் பையன் சொன்னானாம் மூன்று மாதம்....(குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** அதாவது, தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரிடம் விவாதித்தோம். அப்போது அவர் சொன்ன கருத்து. அது நமக்கு ஒரு Input ஆக இருக்குமென்பதால் ஒரு Clarification-ஆகச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால் எங்கெல்லாம் ஒரு சிறந்த மொழி, மக்கள் வழக்கிலே இல்லாமல் இருக்கிறதோ அங்கு அதை classical language ஆக அறிவிக்கின்ற பழக்கம் இருக்கிறது. உதாரணமாக இங்கு சமஸ்கிருதம் செம்மையான மொழியாக இருந்தும் இன்று அது உபயோகத்தில் இல்லாத காரணத்தால் அதை classical language என்று அறிவித்திருக்கிறோம். ஹீப்ரு இங்கே classical language ஆக இருக்கிறது. ஆனால் இஸ்ரேலில் ஹீப்ரு வழக்கத்தில் இருப்பதால் classical language ஆக அறிவிப்பது இல்லை. ஆகவே ஒரு பழக்கம் வழக்கத்தில் இருக்கின்ற மொழியை classical language ஆக அறிவிப்பது இல்லை என்று இருக்கின்ற காரணத்தினால்தான் அதை அறிவிக்காமல் இருக்கிறோம் என்று அவர் சொன்னார்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செம்மையான, உலகத்தினுடைய முதல் மொழியாம் தமிழ் மொழி என்கிற இந்த மொழியை மத்திய அரசாங்கத்தினுடைய இந்த விருதைப் பெறுவதற்கு அல்லது இந்த பாராட்டைப் பெறுவதற்கு எங்களுடைய தாய்மொழியாம் தமிழை நாங்கள் அழிப்பதற்குத் தயாராக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அந்தப் பையன் சொன்னானாம் மூன்று மாதம் சிறைத் தண்டனை.....(சிரிப்பு)

இந்தியாவில் இருந்து ஒரு தூதுக் குழு சோவியத் ரஷ்யாவில் சென்று இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கு எது காரணம் என்ற ஒரு கேள்விக்கு ஆரம்பப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களை அணுகிப் பாருங்கள் என்று சொன்னார்களாம். அந்தத் தூதுக் குழு அந்தப் பள்ளியிலே சென்று 1ஆம் வகுப்பு படிக்கிற ஒரு பையனை அழைத்து நூறு ரூபாய்க்கு ஒரு மூட்டை கோதுமை வாங்கி 150 ரூபாய்க்கு விற்றால் என்ன கிடைக்கும் என்று கேட்டதற்கு, பையன், 'மூன்று மாதம் சிறைத் தண்டனையும், 500 ரூபிள் அபராதமும் கிடைக்கும்' என்று சொன்னானாம். நான் இதைச் சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால் கல்வி தமிழ்நாட்டினுடைய அடிப்படையான தேவைகளில் ஒன்றாக இருப்பதனால் மிக ஆழமாகப் பார்க்கவேண்டும்.

கல்வித் துறை என்பது மனிதவள மேம்பாட்டுத் துறையாக கருதப்படுகிறது. மனிதனின் ஆற்றலை, திறமையை வெளிப்படுத்துகிற அதே நேரத்தில் சிறந்த உழைப்பாளியாக, படைப்பாளியாக, பாட்டாளியாக, சிறந்த நற்பண்புகள் கொண்டவனாக ஒரு மனிதனை சமுதாயத்திலே உருவாக்குவதற்கு அடிப்படையாக இருப்பது கல்வி என்பதை நாம் இங்கே ஆழமாகப் பார்க்க வேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சியை, கல்வித் திறமையின் மூலம்தான் பார்க்க முடியும். இன்றைய முதலாளித்துவ சுரண்டல் உற்பத்தி முறையால் கிராமங்களிலும், நகரங்களிலும் இருக்கிற ஆரம்பக் கல்வி உட்பட மற்ற அரசாங்கக்கல்வி அனைத்தும் கலை இழந்து மறு புனரமைப்புக்காக ஏங்கிக் கிடக்கும் இந்த நேரத்தில் பாரதி சொன்ன ஒரு கவிதை நினைவிற்கு வருகிறது. அதாவது,

> ``மெல்லத் தமிழினிச் சாகும்-அந்த
> மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

என பாரதி சொன்னதற்கேற்ப இப்போது தமிழ் மெல்ல, மெல்ல அழிந்து ஆங்கிலக் கல்வி மேலோங்கி இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. இதைத் தமிழக அரசு ஆழமாகக் கவனத்தில் கொண்டு, இவற்றைப் போக்கி தமிழ்க் கல்வி மேலோங்கி வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கிராமப் பள்ளிகள் உள்ளிட்ட உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் வரையிலான அனைத்திற்கும் போதிய அளவு ஆசிரியர்கள் நியமனம் இல்லை. அதேபோன்று தொழிற் கல்வி ஆசிரியர்கள், விளையாட்டு ஆசிரியர்கள் போன்றவர்கள் எல்லாம் இல்லாமல் இருக்கிறது. மத்திய அரசு ஏறத்தாழ ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதாகச் சொல்கிறார்கள். மாநில அரசு 180 கோடி மட்டும் நிதி ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். இதிலே மாற்றம் கொண்டு வந்து அடிப்படையானத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

Counselling என்ற ஒரு முறையை தமிழக அரசு அறிவித்தது. ஆசிரியர்கள் மத்தியிலே ஒரு நல்ல வரவேற்பை அடைந்திருக்கிறது. இதில் லஞ்சம் ஒழிக்கப்பட்டு இருக்கிறது. விடுதலை கிடைத்ததாகவே ஆசிரியர்களெல்லாம் கருதுகிறார்கள். ஆனால் அதே நோத்தில் இந்த Counselling சென்றுவிட்ட இடங்கள் எல்லாம் இப்போது காலியாக இருக்கின்றன. ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு பள்ளியில் போதுமான ஆசிரியர்கள் இல்லை. அதுவும் ஆரம்பப் பள்ளியில் இரண்டு ஆண்டுகளாக ஆசிரியர்கள் இல்லை என்று சொன்னால் அந்தக் கண்மணிகளுடைய எதிர்காலம் என்ன ஆகும் என்பதை இன்று தமிழக அரசு ஆழமாக பார்க்கத் தவறி இருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதேபோல் Counselling முறையால் ஒரு ஆசிரியர் விடுபடுகிறார் என்று சொன்னால் வேறு ஒரு ஆசிரியரை நியமனம் செய்த பின்பு அவரை விடுவிக்க வேண்டும் என்கின்ற ஒரு முறையை இந்த அரசு கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 5-05

தமிழக அரசு போதிய அளவிலே கல்லூரிகளைத் துவக்குவதில் மிகப்பெரிய அளவில் தயக்கம் காட்டுகிறது. இது தமிழகத்தினுடைய கல்வி வளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வாட்ச்மேன் இடங்கள், இரவுக் காவலர் இடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதன் மூலமாக வேலைவாய்ப்பை உருவாக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக 8ஆம் வகுப்பு வரை

உள்ள பள்ளிகளில் அரசாணை எண் 79-ல் அரசாங்கம் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதாவது விஞ்ஞானம், தமிழ், வரலாறு போன்ற பாடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை நியமிக்கப்படவில்லை என்பதை' இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி உடனடியாக, அதாவது Higher Education பள்ளிகளுக்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறேன்.

கடந்த 10 ஆண்டுகளில் தனியார் பள்ளிகள் வளர்ந்து, புற்றீசல் போல் பெருகி விட்டன. தனியார் நிறுவனங்கள் அளவுக்கு அதிகமாகப் பெருகி இருக்கின்றன. அரசாங்கம் அறிவித்த அதிர்ச்சி தாத்தக்க அறிவிப்பு என்னவென்று சொன்னால் புதிதாக ஆசிரியர்கள் நியமனம் இல்லை என்கிற ஒரு செய்தியாகும். தொடக்கப் பள்ளிகளில் மட்டும் 40 ஆயிரம் இடங்கள் காலியாக இருக்கின்றன. பணிகள் நிரவல் திட்டம் என்ற அடிப்படையில் ஆசிரியர்களை இடமாற்றம் செய்த பின் அந்த' இடங்கள் எல்லாம் காலியாக இருக்கின்றன.

மத்திய அரசு 5 ஆம் வகுப்பு வரை தேர்வே இல்லாமல் கொண்டு வந்திருக்கிற திட்டம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மேலும் கீழே அழுத்துவதற்கான வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று 8ஆம் வகுப்பு வரையில் படிக்கின்ற மாணவர்களுக்கு தொழிற் கல்வியைக் கொண்டுவந்து அறிமுகப்படுத்தி இருப்பது மேலும் இதற்கு ஒரு சவுக்கடியாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி ஆண்டுக்கு 20 சதவீதம் குறைக்கப்படும் என்னும் எஸ். என். சின்ஹா அவர்களுடைய அறிவிப்பு மேலும் ஒரு படி மேலே செல்கிறது.

தமிழக அரசு கல்லூரிகளை பல்கலைக்கழகங்களுடன் இணைத்ததால் நிதிச்சுமை கூடுதலாக இருக்கும் என்று பல்கலைக்கழகங்கள் நினைக்கின்றன. எனவே சுயநிதி Course உருவாக்கப்பட்டு மாலை நேர வகுப்புகள் என்று சொல்லி 100 சதம் கட்டணம் வசூலிக்கப்படும் ஒரு நிலை இப்போது தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு 69 சதவிகித இட ஒதுக்கீட்டை கட்டாயம் பின்பற்றியே தீரவேண்டும். கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டுமே தவிர, பள்ளிகளுடைய மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோன்று அரசு நடத்தும் கல்வி முறை, கைநழுவி தனியார் மயம் ஆகும் என்கிற ஒரு முறை நாட்டில் இப்போது வளர்ந்து இருக்கிறது. இதனால் சிறந்த சிந்தனையாளர்கள், அறிவு ஜீவிகள், விஞ்ஞானிகள், வரலாற்று மேதைகள் உருவாகப் போவதில்லை. மாறாக பணம் படைத்தவர்கள் மட்டுமே இப்படிப்பட்ட நிலைக்கு வருகிற வாய்ப்பு உருவாகும் என்பதையும் ஆழமாகப் பார்க்கவேண்டும்.

ஏழைக்கு கல்வி கிடைக்க வேண்டும் என்பதில் அனைவருடைய கருத்தும் இருக்கிறது. ஆனால் இப்போது கல்வி மிக மோசமான நிலையில் சென்றுகொண்டிருப்பதை கற்றறிந்த அனைவரும் பெருமூச்சோடு பார்க்கிறார்கள்.

1994ஆம் ஆண்டு முதல் 69 சதவிகித இட ஒதுக்கீடு அமலில் இருக்கும் நேரத்தில் சென்னை உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறது. அதாவது கிராமப்புற மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இட ஒதுக்கீடு செல்லாது என்றும், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட்ட இடம் செல்லாது என்றும், அது சட்டத்திற்கு முரணானது என்றும் சொல்லி இதுவரை 9 ஆண்டுகள் தொழிற்கல்வி உள்ளிட்ட உயர்கல்வி நிலையங்களில் கூடுதல் இட ஒதுக்கீடு செய்து, தற்போதைய 69 சதவிகித இட ஒதுக்கீட்டை கேலிக்கூத்தாக்கி இருக்கிறது.

அதேபோன்று கர்நாடக மாநில மணிபால், டி.எம்.ஏ. அறக்கட்டளை தொடர்ந்த வழக்கில் கடந்த அக்டோபர் மாதம் வழங்கிய தீர்ப்பில்—இதுவரையில் செயின்ட் ஸ்டீபன்-உன்னிகிருஷ்ணன் ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட—மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் ஆகியவற்றிற்கு எதிராக வேட்டு வைத்திருக்கிற தீர்ப்பாக இது அமைந்திருக்கிறது. அதாவது தொழில் கல்லூரிகளில் இலவச இடங்கள், கட்டண இடங்கள் என்பதற்கு வழிவகுத்த உன்னிகிருஷ்ணன் தீர்ப்பு சட்டத்திற்குப் புறம்பானது என்றும் சிறுபான்மையோர் கல்வி உரிமை தொடர்பான செயின்ட் ஸ்டீபன் வழக்கு தீர்ப்புக்கு புதிய கோணத்தில் ஆராய்ந்து சொல்வதாகச் சொல்லி நாடு முழுவதும் இன்றைக்கு மிகப்பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இதனால் ஏழை எளிய மாணவர்களின் நன்மையையும் ஏற்கெனவே இடஒதுக்கீட்டு சலுகையை அனுபவித்து வந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் நலனையும் உரிமையையும் முழுமையாக கவனத்தில் எடுத்துக்கொள்ள மத்திய அரசு தவறிவிட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தாய் மொழியான சுந்தரத் தெலுங்கில் பேசினால் யாருக்கும் புரியாது. தமிழில் அவ்வளவு நன்றாகப் பேசத் தெரியாது என்றாலும், தமிழிலே பேசுகிறேன். தமிழ் Development-க்காக ஒரு மானியக் கோரிக்கை இருக்கிறது. எனக்கு 5 நிமிடம் extra கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். அதுவே தமிழ் மொழி வளர்ச்சி என்று நினைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு அடுத்து ஆங்கிலத்திலே பேச வருகிறார் ஓர் உறுப்பினர்.

**திரு. கே.வி. முரளிதரன்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான கல்வித் துறை மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பு கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு முன்பு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு எங்கள் தருமபுரி மாவட்டத்திற்கு ஒரு நல்ல கலெக்டர், ஒரு நல்ல Project Officer, ஒரு DFO, Forest Officer, மத்தகிரி ஆகியோர் இருப்பதால் இப்போது எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் corruption என்ற பேச்சுக்கே இடம் இல்லை. அந்த மாதிரி 3 ஆபீசர்களைப் போட்டதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) Education for all என்கிற Former Chief Minister காமராஜர் கனவை நனவு செய்கின்ற விதமாக அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் 2007-க்குள் அனைவருக்கும் கல்வி, Education for all என்ற திட்டத்தைக் கொண்டு வந்து காமராஜர் கனவை நனவாக்குகிற முறையில் இன்றைக்கு 1649 கோடியை sanction செய்திருக்கிறார்கள். மத்திய அரசிலே அது சர்வ சிக்ஷா அபியான் மூலமாக.

Education for all is the commitment of the Government. It is appreciable that 1,649 crores of rupees have been sanctioned by the Centre for the 10th Five Year Plan under Sarva Shiksha Abhiyan.

It is stated in the Policy Note that 9,229 posts of teachers have been identified in Panchayat Union, Municipal and Aided schools as surplus as per the Teacher— Pupil ratio of 1:40. But 1:25 is the ideal ratio. So, I request the



Government to take efforts to implement that ratio. Physical education plays an important role in keeping the body and mind in healthy condition. Compulsory physical exercise and training in Yoga should be part of the curriculum.

In this respect I would like to draw the attention of the Honourable Minister about the plight of the Markers numbering 218 who are paid between Rs.150 to Rs.200 only, though they have been in service for over 15 to 20 years.

பிற்பகல் 5-15

Since the schools are charging additional fees of Rs.3/- to Rs.9/- for sports, from every student there will be no additional financial burden to the Government if the Markers are regularised.

With regard to the Teacher Training Institutes, there is disparity with regard to Aided Teacher Training Institutes (Non-Minority) and Aided Teacher Training Institutes (Minority). There are only 7 non-minority Institutes against 35 minority Institutes. So, I request the Government to give permission to more non-minority institutions too.

When we go through the number of students passed in each discipline, it is noted that the percentage pass in case of girl students is 1-1/2 times more than that of boy students. Even, the number of students studying in higher education, the girl students outnumber the boy students.

It is really heartening to note that more number of girl students take higher education and pass. But what is the reason for so low pass percentage in the case of boys? For example the percentage of pass in B.A. Boys 31.9%, Girls 57.7%; B.Sc. Boys 46%, Girls 68%. Are the boys becoming irresponsible? not showing interest in studies?

The Government, parents and the teachers should ponder over this. If this trend continues, more social problems will come into force.

Mutual respect between religions is *sine-qua-non* for communal harmony. Hindu bashing cannot help promote secularism.

Minority Institutions trying to injure Hindu sentiments cannot be and should not be allowed.

Honourable Deputy Speaker Sir, in St. Arulappar Higher Secondary School of Avudayanoor in Tirunelveli District, questions insulting the Hindus have been asked in their 11th Std. final examinations.

In Question Nos.7 & 9, in "Rearrange the sentence"-ம், கடவுள்தான் கடவுள் உண்மையான எங்கள்; இந்து என் ஓடவில்லை உடம்பில் இரத்தம்". அதற்கு, that is, the students have to re-arrange and write as— வினா எண் 7-க்கு 'எங்கள் கடவுள்தான் உண்மையான கடவுள்' என்றும், வினா எண் 9-க்கு 'என் உடம்பில் இந்து இரத்தம் ஓடவில்லை' என்றும் எழுத வேண்டும். So, I request the Government to take action against that Institution which is putting venom into the minds of the young pupils.

B.J.P. welcomes the introduction of the new slogan "Tamil today and Tamil forever". I request the Government of Tamil Nadu to take serious efforts to see that the teaching of Tamil is made compulsory in the elementary education.

B.J.P. is against imposing anything on anybody. But people of Tamil Nadu due to their lack of knowledge in Hindi find it as a handicap in their business dealings outside Tamil Nadu. So, I request the State Government to introduce Hindi and Telugu as optional subjects.

நான் எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், எங்கள் தொகுதியில் நாங்கள் எல்லோரும் தெலுங்கு படியுங்கள், தெலுங்கு படியுங்கள் என்றுதான் சொல்லிக்கொண்டிருந்தோம். ஆனால் இங்கே வந்து அசெம்பளியிலே உட்கார்ந்தால்தான், தமிழ் தெரியாததனால் வருகின்ற இடைஞ்சல்கள் இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. அதனால் தமிழ்நாட்டிலே இந்தி மற்றும் தெலுங்கு ஆகியவற்றை optional language-ஆகச் செய்ய வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** தலைவர் அவர்களே.....

**திரு. கே.வி. முரளிதரன்:** நன்மாறன் அண்ணே, கொஞ்சம் உட்காருங்கள் Respected Minister Sir, கடந்த இரண்டு வருடங்களிலே nearly 7,000 teachers appointment செய்திருக்கிறீர்கள். இதிலே minority language—ஆன தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றில் ஒரு teacher post கூட நீங்கள் போடவில்லை. சர்வ



சிக்ஷா அபியான் என்ற திட்டம் என்பது Central Government announce செய்து, Central Government 85% State Government 15% என்ற அளவில் செலவு செய்கிறது. அதிலேயுள்ள guidelines என்ன சொல்கிறது என்றால், minority language-க்கு first preference கொடுக்க வேண்டுமென்று சொல்கிறது. ஆனால் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்திலே 3060 posts போட்டீர்கள். அவற்றில் தெலுங்கு மற்றும் கன்னட மொழி teachers ஒரு Posting கூட நீங்கள் போடவில்லை. கண்டிப்பாக நீங்கள் இதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதேமாதிரி, தமிழ்நாடு—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்து மூலமாகவே அந்தக் கோரிக்கையை ஏற்கெனவே என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். தெலுங்கு பயிலுகிற மாணவர்கள் பயனடைகிற வகையில் தெலுங்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அதனை முறையாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு துறைக்கு உங்களுடைய பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 5-20

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,—

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து இரத்தம் ஓடுவது என்பதெல்லாம் மோசமான கருத்து.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள் Continue your speech, please. (குறுக்கீடுகள்).

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே சபாநாயகரிடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. திருநெல்வேலியிலே ஆவுடையனூரிலே செயின்ட் அருளப்பர் பள்ளியிலே இரண்டு கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அதாவது வாக்கியத்தை சரியாக அமை என்று கொடுத்திருப்பதின்கீழ் 'எங்கள் கடவுள்தான் உண்மையான கடவுள்' என்று வருவதாகவும்.

'என் உடம்பில் இந்து இரத்தம் ஓடவில்லை' என்றும் 11 ஆம் வகுப்பு இறுதியாண்டுத் தேர்வில் இம்மாதிரியாக கேள்வித்தாள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது பற்றிய அந்த கேள்வித்தாளே பேரவைத் தலைவரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரியாக மதரீதியாக பள்ளிக்கூடங்களிலே குழந்தைகளின் நெஞ்சிலே நஞ்சை விதைப்பதைப் போல இருப்பதற்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இங்கே நான் வலியுறுத்துகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச்சொல்லியிருப்பதுபோல மத உணர்வையோ அல்லது ஜாதி உணர்வையோ தூண்டுகிற வகையில் எங்கேயாவது குறைபாடுகள் இருக்குமேயானால், எந்தப் பள்ளியிலாவது அதுபோன்ற நடைமுறைகள் இருக்குமேயானால் அரசு நிச்சயம் அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்காது. நிச்சயம் எடுக்கும்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஒரு பள்ளியிலே அவ்வாறு வினாத்தாள் தயாரிக்கப்பட்டதா என்கிற சந்தேகம் யாருக்கு வரும்? ஒரு enquiryகூட இல்லாமல், இவர்களே ஏன் ஒரு சிறுபான்மை அமைப்பைப் பற்றி இப்படி துஷ்பிரச்சாரம் பண்ணக் கூடாது? ஆகவே ஒரு விசாரணை என்பது வைக்கப்பட்டு ஒரு தீர்வு என்பது. உண்மைதான் அந்தப் பள்ளியிலே இப்படி நடந்தது உண்மைதான் என்பதைத் தெரிந்து, அதற்குப் பிறகு நீங்கள் சபாநாயகரிடம் கொடுத்துப் பேசுவது முறை. ஆனால் எதுவுமே இல்லாமல், நாங்கள் சபாநாயகரிடத்தில் கொடுத்தோம். இப்போது பேசுவோம் என்று பேசுவது சரியல்ல. தமிழ்நாட்டில் மத மோதல்களை உருவாக்குவதற்கான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதை நீங்கள் அவைக் குறிப்பிலே பதிந்து கொண்டே இருக்கிறீர்கள். எங்களைப் போன்ற இடதுசாரிக் கட்சிகள் பேசினால் எடுத்துவிடுவீர்கள். ஆனால் வகுப்புவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட கருத்தைப் பேசினால் பதிவீர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்விதாளே சபாநாயகரிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் இல்லாமல் பேசவில்லை. நாட்டை ஆளுகின்ற ஒரு தேசியக் கட்சியை வகுப்புவாத அமைப்பு என்று ஏதோ 1½ மாநிலத்திலே இருப்பவர்கள் பேசக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீணான விவாதத்திற்கு வித்திட்டு வருகிறார். (குறுக்கீடு) துணை சபாநாயகர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முரளிதரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே தமிழ்நாட்டு மக்களின் ஒற்றுமையில் அக்கறை அவருக்கு இருக்க வேண்டும் என்றால், சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கிறார், அந்தத் துறை இருக்கிறது. அதைப்பற்றி விசாரிக்கச் சொல்லி, உண்மை என்று நிரூபித்திருந்தால், அந்த ஸ்கூல் மேலே இப்படி பிரச்சாரம் பண்ணாமல் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதுதான் மக்களுடைய ஒற்றுமையிலே, பள்ளி மாணவர்கள் மீது இருக்கக்கூடிய அக்கறையிலிருந்து செய்யக்கூடிய நடவடிக்கை. ஆனால் உறுப்பினர் அவர்கள் அதைப் பிரச்சாரத்திற்காக பயன்படுத்துவதற்காகத்தான் இவ்வாறு செய்து கொண்டிருக்கிறார் என்பது என்னுடைய கருத்து. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முரளிதரன். (குறுக்கீடுகள்) உங்களுடைய கட்சிக்காரர்தான் பேசுகிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வினாத் தாள்களைப் பொறுத்தவரை நம்முடைய அரசு அங்கீகாரம் பெற்றுதான் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அரசுத் தரப்பிலே தனியார் பள்ளிகளிலே (குறுக்கீடுகள்) தனியாகவே அவர்கள் தயார் பண்ணிக்கொள்ள முடியுமா? அங்கீகாரம் பெற வேண்டியது இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முரளிதரன், நீங்கள் கல்வி மானியக் கோரிக்கையில் பேசுங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,—

**திரு. கே.வி. முரளிதரன்:** ஞானசேகரன் அண்ணே, உட்காருங்கள். கடைசியிலே பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முரளிதான் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) சரி, ஞானசேகரன் பேசுங்கள். அவருக்கு மைக் கொடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். 1½ மாநிலம் என்று சொல்கிறார். பி.ஜே.பி.யினுடைய இந்த ஆளுகையிலே எந்த மாநிலம் அரை மாநிலமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் சொன்னேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** பாராளுமன்றத்தை ஆளுகின்ற அந்தக் கட்சியும் 1¼ மாநிலத்தில்தான் ஆண்டு கொண்டு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன், பேசுங்கள்

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியிலும் பக்கத்தில் இருக்கிற ஓசூர் தொகுதியிலும் Higher Secondary-யில் தெலுங்கு medium இருக்கிறது. அங்கே Annual exams நடக்கும்போது ஆங்கிலத்திலேதான் கேள்வித்தாள் கொடுக்கிறார்கள். ஆங்கிலத்திலே கேள்வித்தாள் கொடுக்கிறபோது, தெலுங்கு மொழியிலே எப்படி examination எழுதுவது? இதை மினிஸ்டர் knowledge-க்குக் கொண்டுவந்துள்ளேன். கண்டிப்பாக இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

அதே மாதிரி தமிழ்நாட்டில் 6 சதவீதம் உருது பேசும் மக்கள் இருக்கிறார்கள்.

பிற்பகல் 5-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன், இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இன்னும் இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். உருது அகாடமி கொடுத்து இருக்கிறீர்கள்.



40 சதவீதம் தெலுங்கர்கள் இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் அவர்களுக்கும் தெலுங்கு அகாடமி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பக்கத்திலுள்ள கர்நாடகத்திலும், பிகாரிலும் minority language-களுக்கு ஒரு Director-ஐ நியமித்திருக்கிறார்கள். அதே மாதிரி தமிழ்நாட்டிலும் minority languages-களான கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது சிறுபான்மையின மக்களுக்காக ஒரு Minority Director-ஐ நியமிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் தருமபுரி மாவட்டத்திற்கு வந்தபோது தளி, கனி, புளி, கம்பளி என்று சொல்லியிருந்தார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் இன்றைக்கு வறட்சியினால், தளியில் களியில்லாமல் தளியே காலியாகிவிட்டது. எல்லோரும் கர்நாடக மாநிலத்திற்குச் சென்றுவிட்டார்கள். தளியே காலியாகிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், என்னுடைய தொகுதியில் வனப் பகுதி நிறைய இருக்கிறது. மழையில்லாத காரணத்தினால், வனப் பகுதியிலே தண்ணீர் இல்லாத காரணத்தினால், யானைகள் ஊருக்குள் புகுந்து பொது மக்களைத் தாக்கி இதுவரைக்கும் 7 பேர் செத்திருக்கிறார்கள். ஏற்கெனவே நாங்கள் இதுகுறித்துப் பேசி இருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். இதனாலே 3 பேர் காயம் அடைந்திருக்கிறார்கள். அதேபோல நக்சலைட்டுகளாக உருவாக்கப்பட்டு இருக்கிறார்கள். எப்படி என்றால், தெலுங்கு படித்தவர்களுக்கு தெலுங்கு ஆசிரியர்கள் பதவி கிடைப்பதில்லை. தமிழ்மொழி வாயிலாக தேர்வு ஆகவில்லை என்பதால் interviewவும் அனுப்புவதில்லை. அவர்கள் அங்கே போய் நக்சலைட்டுகளாக உருவாகிறார்கள். அதனால் தெலுங்கு படித்தவர்களை special caseஆக வைத்து, அவர்களுக்கு அரசு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சான்ட்ரா டான் க்ரவல்.

Hon'ble Speaker Sir, I thank
*** TMT. SANDRA DAWN GREWAL:** the Demand for School
you for the opportunity given to me to speak on our Hon. Chief Minister
Education. Among all the Chief Ministers in the country, State in the
is the only one who avowed to make Tamil Nadu the number one

country. Ever since this declaration, all her actions and steps towards achieving this target have been in this direction.

A State cannot become a number one State all of a sudden. Every Department has to progress and achieve equally. Among these, there are vital and important areas. One such area is education. To my knowledge Kerala is said to have obtained almost 100% literacy which is closely followed by Mizoram. As on 2001, Tamil Nadu has achieved a literacy level of about 73.47% and I am sure with the sincerity shown by our beloved leader to provide education to the poor and weaker sections of society, our Government will achieve 100% literacy. To enable this, the Government has already introduced "Education for All" Scheme and under this 756 Elementary Schools, 676 Middle Schools, 220 High Schools and 260 Higher Secondary Schools were opened during 2001-2003. This is laudable. Likewise in every other field the State will progress under the capable leadership of our Hon. Chief Minister to become the number one State in the country.

**(Hon. Deputy Speaker in the Chair)**

Hon'ble Sir, all here are aware that I am nominated in this House by the benevolence of our Chief Minister to represent the interests of the Anglo-Indian Community and to work for their welfare. This community has contributed a great deal in many areas for the development of the country and more significantly in the field of school education.

As far as Anglo-Indian Community is concerned, there are about 41 Anglo-Indian Schools functioning in the State. This is a healthy number and I do not seek for any increase in this. However some buildings of the existing Schools are too old and for want of funds they remain in bad condition. I am aware of the financial constraints the Government is facing. Therefore, as a one time assistance I request for allotment of some funds for these buildings.

Another important point I wish to mention with regard to Anglo-Indian Schools is that the State Board meeting of the Heads of these Schools has not been convened for an unduly long period. This blocks the enhancement of grants from the Government. For example, the Fees Compensation Grant which remains even today, as an insignificant amount of Rs.50/- per student per month for Standards 1 to 10 and Rs.100/- per student per month for Standards 11 and 12. Therefore, I very humbly request the Hon. Chief Minister to direct for convening the State Board Meeting of Anglo-Indian Heads of Schools.



Hon. Deputy Speaker Sir, I am fully aware that I am speaking on the Demand on School Education and it is certainly not my wish to deviate from the subject. However, as I am the only M.L.A. in the House representing the Anglo-Indian Community, I request your permission to put forward a couple of points in their interest. While there is a reservation in engineering admission, the same is not available for them in M.B.B.S. and hence I once again request for a reservation. I am specially grateful to our Hon.Chief Minister for having considered my recommendation for providing funds for a heart surgery under the Chief Minister's Relief Fund. Her assistance has saved the life of the breadwinner of a family.

நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வா. சந்தானம் அவர்கள்.

**திரு. வா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி, உயர் கல்வி, தமிழ்ப் பண்பாடு ஆகிய மானியங்களிலே என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாயத்திலே இருக்கின்ற அத்தனை ஏற்றத்தாழ்வுகளையும் போக்கி ஒரு மனிதனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருகின்ற ஒன்று கல்விதான் என்பதை நமது சங்க இலக்கியங்களிலேகூட,

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவன் அவன்கட் படுமே".

என்று சொன்னார்கள். கல்வி என்பதற்கு அத்தனை உயர்ந்த அந்தஸ்து இருக்கிறது. அதன் மூலமாகத்தான் ஒரு மனிதன் சமுதாயத்திலே உயர்ந்த புகழையும், நிலைத்த செல்வாக்கையும் பெறமுடியும் என்ற காரணத்தினால்தான் அந்தக் கல்விக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு சென்ற ஆண்டைக்காட்டிலும், இந்த ஆண்டிலே கல்வித் துறைக்கு ஏறக்குறைய 37.88 கோடி ரூபாய் அதிகமாக இந்த அரசு உயர்த்தி ஒதுக்கியிருக்கிறது.

அதுபோல சென்ற ஆண்டும் 324 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியிருக்கிறது. 479 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ஆக்கியிருக்கிறது. அதுபோல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கியிருக்கிறது. நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கியிருக்கிறது. இந்த ஆண்டும்கூட 372 தொடக்கப் பள்ளிகளைப் புதிதாக தொடங்க இருக்கிறது. 422 நடுநிலைப் பள்ளிகளை உருவாக்க இருக்கிறது. இப்படியெல்லாம் கல்விக் கூடங்களை, தொடக்கப் பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளாக, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தினாலும்கூட கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான் நம்முடைய தலையாய கோட்பாடாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு இங்கே பேசியவர்களெல்லாம் கல்வி என்பது ஒரு வியாபாரமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதிலே தனியார்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்பதையெல்லாம் சொன்னார்கள். இங்கே உறுப்பினர் ஒருவர் கூறுகின்றபோதுகூட, தனியாருக்கு மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு, உரிய அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்று தன்னுடைய ஆதங்கத்தைக் குறிப்பிட்டார். ஆனால் மற்றவர்கள் அதற்கு மாறுபாடாக கல்வியை ஒரு வியாபாரமாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். எனக்கும் அதிலே உடன்பாடு இல்லைதான். அரசாங்கத்திலே இத்தனை தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்ற நேரத்தில் இவ்வளவு கல்விக்கூடங்களை தனியார் உருவாக்குவதினுடைய காரணம் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்றைக்கு ஒரு கடையிலே நல்ல வியாபாரம் நடக்கிறது என்று சொன்னால் அந்தக் கடையினுடைய வியாபாரத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சொன்னால், அடுத்து உருவாக்கப்படுகின்ற கடையிலே உயர்ந்த, தரமான பொருள்களை குறைந்த விலைக்குக் கொடுக்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்தக் கடையினுடைய வியாபாரத்தைத் தடுத்து, இந்தக் கடையினுடைய வியாபாரத்தை அதிகமாக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்கின்ற நிலையில், இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னால், நமது அரசப் பள்ளிகளிலே இருக்கின்ற கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும்.



பிற்பகல் 5-35

இங்கு பேசியவர்கள் எல்லாம்கூடச் சொன்னார்கள். இன்றைக்கு
அரசினுடைய கொள்கை, ஓர் ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்பது இந்த
கொள்கைக் குறிப்பிலே கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அரசுப் பள்ளிகள்,
ஆசிரியர்கள் எண்ணிக்கையைக் கணக்குப் பார்க்கும்போது, ஆரம்பப்
பள்ளிகள், அரசுப் பள்ளிகள் 1,598 என்று இருக்கிறது. அதிலே இருக்கின்ற
பிள்ளைகளின் எண்ணிக்கை 1.93 இலட்சம்தான். இதற்கு இருக்கின்ற
ஆசிரியர்கள் 6,820. இதை கணக்குப் பார்க்கும்போது ஏறக்குறைய 25
பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியர் என்கின்ற நிலைதான் இப்போது இருக்கிறது.

அதுபோல மாநகராட்சி, நகராட்சிப் பள்ளிகள் 1,015 இருக்கின்றன.
அதிலே இருக்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 1.90 இலட்சம்தான்.
ஆனால் ஆசிரியர்களின் எண்ணிக்கை 6,831 இருக்கிறது. ஊராட்சி ஒன்றியப்
பள்ளிகளை எடுத்துக் கொண்டாலும்கூட 28,813 பள்ளிகளில் 25.20 இலட்சம்
பிள்ளைகள்தான் இருக்கிறார்கள்; 77,948 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால்
தனியார் பள்ளிகளில் மட்டும்தான், தனியார் பள்ளிகள் மற்றும் அரசு
உதவியோடு நடத்தப்படுகின்ற 5,252 பள்ளிகளிலே 11.80 இலட்சம் பிள்ளைகள்
சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்; 11 இலட்சத்து, 80 ஆயிரம் பிள்ளைகள் அதிலே
இருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் எண்ணிக்கை 28,925 என்றுதான்
இருக்கிறது. ஆக அரசுப் பள்ளிகளில் எல்லாம் ஏறக்குறைய 25 பிள்ளைகளுக்கு
ஓர் ஆசிரியர் என்றுதான் உங்களுடைய கணக்கிலே இருக்கிறது. ஆனால்
இங்கு சொல்கின்றவர்கள் எல்லாம் எல்லாப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள்
இல்லை; போதுமான ஆசிரியர்களை அரசு நியமிக்கவில்லை என்கின்ற ஒரு
கோரிக்கையினை இங்கே முன்வைத்திருக்கிறார்கள். இந்தப் புள்ளிவிவரம்
உண்மையாக இருக்குமேயானால், போதிய ஆசிரியர்கள் இருக்கிறார்கள்
என்றுதான் பொருள்படுகிறது.

இன்றைக்குத் தேர்வு விகிதத்தை எடுத்துப் பார்க்கின்றபோது, ப்ளஸ்
2 தேர்விலே 84.50 சதவிகிதம்தான் இருக்கிறது. அதுபோல எஸ்.எஸ்.எல்.சி.
தேர்விலே 76.58 சதவிகிதம்தான் இருக்கிறது. இதிலே நீங்கள் தனியார்
பள்ளிகளினுடைய பிள்ளைகளையும், அரசுப் பள்ளிகளிலே படிக்கின்ற
பிள்ளைகளையும் தனியாக கணக்கெடுத்திருக்க வேண்டும். ஆனால்
மொத்தத்தில் எழுதுகின்ற ப்ளஸ் 2 மாணவர்களையும், மொத்தத்திலே
எழுதுகின்ற எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களுடைய எண்ணிக்கையை
மட்டும் குறித்து வைத்து அதிலே இந்த விகிதாச்சாரத்தைக்
கொடுத்திருக்கிறீர்கள். நிச்சயமாக அரசுப் பள்ளிகளை மட்டும்
கணக்கெடுத்து, தனியாக அவர்களுடைய வெற்றி சதவிகிதம் என்ன

என்று நாம் பார்ப்போமேயானால், நிச்சயமாக இதைக்காட்டிலும் மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கமுடியும். நமது அரசுப் பள்ளிகளிலே நம் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது. அரசு இன்றைக்கு மத்திய அரசுக்கு இணையாக சம்பளத்தை அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆசிரியர்கள் கல்வியைப் பற்றிச் சொல்லும்போதுகூடச் சொல்வார்கள்:

*"இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்,*
*தம்மை வளர்க்குமால், தாமுளராக் கேடின்றால்,*
*எம்மை உலகத்தில் யாம்காணோம் கல்விபோல்*
*மம்ம ரறுக்கு மருந்து."*

என்று சொல்வார்கள். கொடுக்கக் கொடுக்க குறையாத ஒரு செல்வம் எது என்று சொன்னால், அது கல்விச் செல்வம்தான்.

நம் பாக்கெட்டிலே இருக்கின்ற பணத்தை எடுத்து, ஒரு 100 ரூபாய் இருந்தால், அதிலே 50 ரூபாயை ஒருவருக்குக் கொடுத்துவிட்டால், 50 ரூபாய்தான் நமது பையிலே இருக்கும். ஆனால், கல்வியைப் பொறுத்தளவிலே,

*'செந்தமிழும் நாப்பழக்கம்,*
*சித்திரமும் கைப்பழக்கம்'*

என்பதைப்போல, சொல்லிக் கொடுக்கக் கொடுக்க, அது வளர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு செல்வமாக இருக்கின்ற நிலையில், நமது அரசுப் பள்ளிகளிலே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே, தொடக்கப் பள்ளிகளிலே, நடுநிலைப் பள்ளிகளிலே பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள், அந்த எண்ணத்தோடு தங்களுடைய பணிகளைச் செய்வார்களேயானால், வியாபாரமாக நடத்துகின்ற பள்ளிகளுக்கு ஏன் மாணவர்களை பெற்றோர்கள் கொண்டு செல்கிறார்கள். இதை நாம் அனைவரும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே பள்ளிகளினுடைய நிலையை உயர்த்துவதைக் காட்டிலும், கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து, அதிலே இருக்கின்ற அதிகாரிகளும், கல்வித் துறையைச் சேர்ந்தவர்களும் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-40*

உயர் கல்வியைப் பொறுத்தளவிலே இப்போதும் தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 6 சதவீதம்தான் உயர் கல்வி கற்றவர்கள் இருக்கிறார்கள். உயர்



கல்வி கற்றவர்கள் 6 சதவீதம் பேர்கள்தான். அந்தக் குறையைப் போக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி, அந்தப் பல்கலைக்கழகத்தின் மூலமாக ஒவ்வொரு கிராமப்புறங்களிலும், ஒவ்வொரு இல்லங்களிலும் உயர் கல்வி சென்றடைய வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு இப்போது அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் திறந்தவெளிப் பல்கலைக்கழகமானது ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும், ஏன் ஒவ்வொரு கிராமத்திலும் தன்னுடைய முத்திரையைப் பதிக்க வேண்டும் என்கிற நிலையை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு கிராமப்புறங்களிலே ஒவ்வொரு கிராமத்திலும்கூட மகளிர் சுய வேலைவாய்ப்புக் குழு என்று அமைத்து, அதன் மூலமாக அவர்கள் அமர்ந்து பேசுவதற்குக்கூட கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து இருக்கிறது இந்த அரசாங்கம். அதன்மூலமாக சுய வேலைவாய்ப்புக் குழுக்களிலே திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தினுடைய செயல்பாடு சென்றடைய வேண்டும். இன்றைக்கு தேசிய அளவில், இந்திரா காந்தி அவர்களுடைய பெயரிலே இயங்குகிற திறந்தவெளிப் பல்கலைக்கழகம் எவ்வாறு சிறப்பாகச் செயல்பட்டு எல்லா மக்களும் — பல்வேறு மாநிலங்களில் 50 சதவீதம்— உயர் கல்வியைப் பெறுகின்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறதோ அதைப்போல தமிழகத்திலே இருக்கிற இந்தத் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் 6 விழுக்காடாக இருக்கின்ற உயர் கல்வி படித்தவர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

உயர் கல்வியைப் பொறுத்தளவிலே சில விரும்பத்தகாத, வேண்டாத பாடங்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன இன்றைக்கும். M.Phil. என்று சொல்கிறார்களே Master of Philosophy; அதற்கு அர்த்தம் கேட்கும்போது Philosophy என்று சொன்னால், அதற்குப் பொருள் என்ன என்று கேட்டால் A blind man searching a black cat in a dark room என்று சொல்வார்கள். ஒரு குருடன் இருட்டறையிலே கருப்புப் பூனையைத் தேடுவதற்கு ஒப்பாகும் என்று சொல்வார்கள். ஒரு காலத்திலே கல்லூரியிலே விரிவுரையாளராவதற்கு வாய்ப்பளிக்கின்ற ஒரு கல்வியாக அது இருந்தது. இப்போது பல்கலைக்கழகத்தினுடைய வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு அந்த M.Phil. பட்டம் உதவாது என்கிற ஒரு நிலை வந்திருக்கின்ற காரணத்தால் அப்படிப்பட்ட பட்டப்படிப்புகளை எடுத்துவிட்டு ஆக்கப்பூர்வமாக மக்களுக்குப் பயன்படுகிற சில கல்வித் திட்டங்களை உயர் கல்வியிலே புகுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஐந்து மானியக் கோரிக்கைகள் மீதும் 10 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன நல்ல ஆலோசனைகளுக்கு உள்ளபடியே நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்களும் தனியார் கல்வி நிலையங்கள் பொருள் ஈட்டுகிற வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். உள்ளபடியே இன்றைக்கு கல்வி என்பது ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு. மனிதகுலத்தினுடைய வளர்ச்சிக்கு எவ்வளவு அடிப்படையாக இருக்கிறது என்பதை நாமெல்லாம் நன்றாக அறிவோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பொதுவாக பெற்றோர்களேகூட தங்களுடைய குழந்தைகளுக்கு சொத்தாக எதையாவது வழங்கவேண்டுமென்று சொன்னால் அல்லது விரும்பினால் அதைக் கல்வியாக வழங்குவதுதான் அவர்களுக்கு மிகப் பெரிய சொத்தாக அது நிச்சயமாக அமையும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துகளோடு நானும் இணைந்து. பொதுவாக, இப்படி கல்வித் துறையிலே ஆர்வம் கொண்டு கல்விப் பணியாற்ற வருகிறவர்கள் புண்ணியம் தேடுபவர்கள் பங்கு ஏற்கும் துறையாக கல்வி இருக்க வேண்டும என்ற வகையிலே அவர்கள் செயல்பட வேண்டும். பொருள் தேடுபவர்கள் ஈடுபடும் துறையாக இந்தத் துறையை மாற்றிவிடக்கூடாது என்பதையும் நான் மெத்தப் பணிவன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 5-15

நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னைப் பல்கலைக்கழக 134-வது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரையின்போது, அவர்கள்



சொல்கிறபோது,
ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அவர் கல்வியைப் பற்றிச் சொல்கிறபோது, 'Education is a continuing or unceasing phenomenon and that education means self-improvement. There is need for competitiveness. But that should be of a constructive kind' என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்தவகையிலே கல்வி, எப்படிப்பட்ட சிறப்பிற்கு உள்ளானது என்பதை அவர்தம் பொன்னான வாக்கியங்களிலிருந்து நம்மாலே தெரிந்துகொள்ள முடிகிறது. அந்த வகையில்தான் இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கல்வித் துறைக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.4,942 கோடியே 38 இலட்சம் ஆகும். இந்த ஒதுக்கீட்டை கடந்த கால ஒதுக்கீட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இது கூடுதலாக இருக்கிறது. குறிப்பாக தொடக்கப் பள்ளித் துறை, மேல்நிலைக் கல்வித் துறை என்று தனித்தனித் துறையாக எடுத்துக்கொண்டாலும்கூட, அதனுடைய ஒதுக்கீடு சதவிகிதம் முறையே 11.25, 18.18 என்ற வகையிலே அந்த ஒதுக்கீடு கூடியிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படி இந்த அரசு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதிக நிதியை ஒதுக்குவதற்குக் காரணம், கோத்தாரி கமிஷன் தன்னுடைய அறிக்கையிலே சொன்னதற்கு ஏற்ப, The destiny of India is now being shaped in our class rooms. இன்றைக்கு கல்விக்காக இந்த அரசு மிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் மணி போன்றவர்களெல்லாம் சுய நிதி பொறியியல் கல்லூரிகளைப் பற்றி, அதிலே மாணவர்கள் சேர்க்கையைப் பற்றிய கொள்கை முடிவுகளை, வழிகாட்டுதலையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மிகத் தெளிவாக இருக்கிறது, இட ஒதுக்கீடு பிரச்சினையிலே. அதேபோல Single Window System என்ற அந்த வகையிலே மாணவர்களை சேர்ப்பதிலே மிகத் தெளிவாக நாங்கள் இருக்கிறோம். எனவே அந்த வகையிலே சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை எவ்விதம் அமைய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பிலே கூறியுள்ளது. இந்தத் தீர்ப்பின்படி இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் தங்களது கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைவிட முதன்முதலாக

இப்பிரச்சினையில் கவனம் செலுத்தி ஒரு தெளிவான கொள்கை முடிவினை அறிவித்தது நம்முடைய தமிழகம் மட்டும்தான். இந்தக் கொள்கை முடிவு பற்றி பல உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டிப பேசினார்கள். இதில் ஒரு முக்கியமான கருத்தை நான் மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களுக்காகவே சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு தமிழக அரசு பின்பற்றிய கொள்கையின்படி, மொத்தமுள்ள 22,235 இடங்களில் 70 சதவிகிதம் இடங்களை அரசு ஒற்றைச் சாளர முறையில் நிரப்பியது. தற்போது நாம் அறிவித்துள்ள கொள்கையின்படி சுயநிதிக் கல்லூரிகளில் தாங்கள் நிரப்பும் இடங்கள் போக, மீதியை ஒற்றைச் சாளர முறையின் மூலம் நிரப்புவதற்கு அரசுக்குக் கொடுத்து விடலாம்; சரண்டர் செய்து விடலாம் என்று நாங்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு, சுயநிதிக் கல்லூரிகளிடமிருந்து தரப்பட்டுள்ள சரண்டர் செய்த இடங்களையும்--மார்ச் 31ஆம் தேதி கடைசித் தேதியாகக் கொடுத்திருந்தோம். அந்தத் தேதி வரை கொடுத்த, சரண்டர் செய்து கொடுத்த இடங்கள்--நாம் நிரப்புகின்ற இடங்களையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால், சுமார் 20 சதவிகிதம் இடங்களுக்கு மேலாக இந்த ஆண்டும் கூடுதலாக நமக்குக் கிடைத்திருக்கிறது. எனவே கடந்த ஆண்டு கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைக்கும் நாம் இந்த ஆண்டு அறிவித்த கொள்கைக்கும் பெரிய வித்தியாசமே இல்லை. நமக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே இந்த புதிய கொள்கை அறிவிப்பினால், மாணவர்கள் யாரும் பாதிப்பிற்கு உள்ளாகமாட்டார்கள். நிச்சயமாக பாதிக்காத அளவிற்கு இந்த அரசு பார்த்துக்கொள்ளும்.

அதுபோல இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பொறியியல் கல்லூரிகள் மிக அதிகமாக இருக்கின்றன. இங்கு மாணவர்கள் அதிக அளவில் உயர் கல்வி வாய்ப்பினைப் பெறுவதற்குரிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இது தமிழ்நாட்டிற்கு மிகவும் பெருமை சேர்க்கக்கூடியதாக இருக்கிறது என்பதையும், இந்தச் சூழ்நிலையில் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பொறியியல் கல்லூரிகளின் செயல்பாடுகளைத் தீவிரமாகக் கண்காணித்து, மாணவர்களின் நலனைப் பாதுகாக்கும் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான பொறியியல் கல்லூரிகளில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு, தரம் வாய்ந்த கல்வியினை வழங்கி வருவதை நாம் மறுக்க முடியாது. பொறியியல் கல்லூரிகளில் அதிக இடங்கள்



கிடைக்காது என்ற இருப்பதால், மாணவர்கள் யாருக்கும் இடம் கிடைக்காது என்ற பேச்சுக்கே இடமில்லை.

பிற்பகல் 5-50

அதேபோன்று கடந்த ஆண்டு கட்டண அடிப்படையிலே 49,500
ரூபாயை மாணவர்கள் கல்விக் கட்டணமாகச் செலுத்தி வந்தார்கள்.
இதன் காரணமாக, போன ஆண்டில் சுமார் 15 ஆயிரம் இடங்கள்
பொறியியல் கல்லூரிகளில் காலியாக இருந்தன. அப்படி கல்விக்
கட்டணம் அதிகமாக இருந்த காரணத்தினால்தான் அந்த இடங்களிலே
ஏழையெளிய மாணவர்கள் சேராத அளவிற்கு 15 ஆயிரம் இடங்கள்
காலியாக இருந்தன, ஒட்டுமொத்தமாக, பொறியியல் கல்லூரிகளிலே
மட்டும். எனவே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, தற்போது இலவச
இருக்கை என்றோ, கட்டண இருக்கை என்றோ எதுவும் கூடாது என்று
சொன்னதன் அடிப்படையில் மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு
ஒற்றைச் சாளர முறை மூலம் வரும் மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரமும்,
மற்ற மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாயும் கல்விக் கட்டணமாக
வசூலிக்கலாம் என்று சுயநிதிக் கல்லூரிகளுக்கு அரசு அறிவுரை
வழங்கியது. கடந்த ஆண்டு இருந்த கட்டணத்தோடு ஒப்பிடும்போது,
இப்போது வசூலிக்கவிருக்கும் கட்டணம் விகிதம் கூட அதிகம் என்று
கூறிவிட முடியாது. கடந்த ஆண்டு சுமார் 25 ஆயிரம் மாணவர்கள்
ரூ.49,500 கட்டணம் செலுத்தி பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்தார்கள்
என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து திருச்சிராப்பள்ளியிலேயுள்ள மண்டல பொறியியல்
கல்லூரியினை தேசிய தொழில்நுட்ப நிறுவனமாக மாற்றுவதற்கான
மத்திய அரசின் செயற்குறிப்பினை இந்த அரசு ஏற்றுக் கொள்ள முடிவு
செய்துள்ளது என்பதனையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாற்றத்தின் பயனாக, திருச்சிராப்பள்ளி
மண்டல பொறியியல் கல்லூரி, இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு
இணையான ஓர் அந்தஸ்தைப் பெறும். எனவே கல்வித் தாம் உயரும்.
அதிலும் நம்முடைய நிபந்தனையை ஏற்று, நம்முடைய மாணவர்களுக்கு
50% இடம் ஒதுக்கீடு செய்கிறோம் என்று அவர்கள்
ஒத்துக்கொண்டபிறகுதான், நாங்களும் இதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறோம்.
எனவே நம்முடைய மாணவர்களுக்கு நிறைய இடம் கிடைப்பதற்கு
இதிலே வாய்ப்பு இருக்கிறது.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் போன்றவர்கள், தேர்ச்சி விகிதத்தைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் பேசுகின்றபோது கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் தேர்ச்சி விகிதம் குறைவாக உள்ளது பற்றி மிகவும் வருத்தம் தெரிவித்தார்கள். உரிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாததுதான் இதற்குக் காரணமா என்றுகூட கேட்டார்கள். ஆனால் நான் அவர்களுக்குப் பணிவோடு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து கலைக் கல்லூரிகளும், பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு அவற்றின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் இப்போது கொண்டு வரப்பட்டுள்ளன. இதன்காரணமாக, போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவும், மாணவர்களுக்கு தரமிக்க கல்வியினை அளிக்கவும் எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே எதிர்காலத்தில் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் சிறப்பாக அமையும் என்பதை மன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வதோடு, அதன் தொடக்கமாக, பல்வேறு நிலைகளில் கல்லூரிகளுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

முதற்கட்டமாக இராமநாதபுரத்திலுள்ள கலைக் கல்லூரியில் ஆய்வகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.50 இலட்சம் அனுமதியளித்துள்ளது என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அரசுக் கல்லூரிகளிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு தவறாது மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி உயர் கல்வியைப் பொறுத்த வரையில், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சில அறிவிப்புகளை அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியோடு அந்த அறிவிப்புகளை வெளியிடுவதிலே நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

(1) பள்ளிக் கல்வியை வெவ்வேறு நிலைகளில், இடையில் நிறுத்தி விடும் இளைஞர்களின் நலனை முன்னிறுத்தி பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் குறுகிய காலப் பயிற்சி மற்றும் உற்பத்தி மையங்களைத் துவக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது. மேற்காண் திட்டம், முதற்கட்டமாக 100 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு பல்தொழில்நுட்பக் கல்லூரியும் ஐந்து பாடங்களில், ஒவ்வொன்றிலும், 25 மாணவர்களைக் கொண்டு, 3 மாத கால அளவில் பாட வகுப்புகள்



நடத்தும். இத்திட்டத்தினால், ஓராண்டில் சுமார் 50 ஆயிரம் பேர் பயன்பெறுவார்கள். இது ஒரு சுயநிதித் திட்டமாகும்.

(2) இந்தியாவிலுள்ள பொறியியல் கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக, ரூ.1,550 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் நலன்களை பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக ரூ.200 கோடி திட்ட மதிப்பீட்டில் திட்டக் கருத்துருக்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்ப தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(3) நமது மாநிலத்தின் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் கணினிக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் 22 அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் ரூ.100 இலட்சம் செலவில் கணினிகள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(4) மின்னணுத் துறையில் உலகளவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் முன்னேற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில், பர்கூர் அரசினர் பொறியியற் கல்லூரியில் டிஜிட்டல் சிக்னல் பிராசசிங் ஆய்வகத்தை சுமார் ரூ.30 இலட்சம் செலவில் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாணவர்களின் மனவளத்தினை மேம்படுத்தி அவர்களுக்கு எளிதாக வேலை கிடைக்க உதவும்.

(5) பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏதுவாக, அரசுக் கல்லூரிகளில் 2003-2004 ஆம் கல்வியாண்டு முதல் சோதனை முறையில் பின்வரும் குறுகியகால பட்டய வகுப்புகளைத் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

1. அழகுக் கலை மற்றும் ஆடை வடிவமைப்பு
2. அலங்கார உள்வடிவமைப்பு
3. உணவக ஊட்ட நெறிமுறை

பிற்பகல் 5-55

(6) தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள நூல்கள், அகர வரிசை அட்டை பராமரிப்பு முறை மூலம் பராமரிக்கப்படுகின்றன. இதனை உலகத் தரத்துக்கு ஈடாக்கும் வகையில், முதற்கண் அரிய புத்தகங்களைக் கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(7) கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஏற்கெனவே கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கணினி தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு ஏதுவாக மாணவர்களைத் தயார்படுத்துவதற்காக, கணினிக் கல்வியைக கட்டாயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(8) இந்தியாவில் தலைசிறந்த முதல் 10 கல்வி நிறுவனங்கள் நடத்தும் மேலாண்மை வகுப்புகளில், பாரதிதாசன் பல்கலைக்கழகம் நடத்தும் வகுப்புகளும் அடங்கும். தற்போது, பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் மேலாண்மை பாட வகுப்புகளையும், பாரதிதாசன் மேலாண்மைப் பள்ளி அல்லது ஏனைய தேசிய அளவிலான மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் தரத்துக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(9) இராமநாதபுரம் பெண்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், ரூ.50 இலட்சம் செலவில் பல்வேறு ஆய்வக வசதிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(10) மாநிலத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், தற்போது உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசு முடிவு செய்து, அதற்கான நிதி ஆதாரத்திற்காக தேசிய ஊரக வளர்ச்சி வங்கியை—நபார்டு வங்கியை—அணுகியுள்ளது.

(11) அரசு நிதி உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீட்டு முறையைச் செயலாக்குவது குறித்து நெறிமுறைகள் ஏற்கெனவே அரசால் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் இட ஒதுக்கீட்டு முறை சரிவர பின்பற்றப்படவில்லை. அந்தத் திட்டத்தைத் தவறாது செயல்படுத்துவதற்காக அரசு தக்கதொரு நடைமுறையை வடிவமைக்க உள்ளது. இந்த நடைமுறையைச் செயல்படுத்தும்போது, அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டு முறை முழுவதுமாக கடைப்பிடிக்கப்படும்.

(12) திறந்தநிலைப் பல்கலைக்கழக—Open University— நோக்கத்தின் வழியில், மகளிர் மேம்பாட்டிற்கென புதுமையான பயன்தரும் பின்வரும் சான்றிதழ்/பட்ட வகுப்புகளை நடத்த, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளது:—



துவக்கப்பட இருக்கிற சான்றிதழ் வகுப்புகளாவன:—

1. உணவு மற்றும் ஊட்ட நெறிமுறை
2. தோல் தொழில்நுட்பம்
3. வாழ்க்கைமுறைக் கல்வி

பட்டய வகுப்புகள்— ஆரம்பகால குழந்தை வளர்ப்பு மற்றும் கல்வி.

பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் (பி.எட். மற்றும் எம்.எட் வகுப்புகள்) :— தன்னார்வக் குழுக்களின் உதவியுடன் இப்பாட வகுப்புகள் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்படும்.

(13) உலகத் தரம் வாய்ந்த மேலாண்மைப் பள்ளியினை நிறுவ அரசு எண்ணியுள்ளது. தொழில்நுட்பவியலில் தற்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் இன்றைய தேவையினைக் கருத்தில்கொண்டு, குறிப்பாக M.B.A. படிப்பினை நடத்தும்பொருட்டு, உலகத் தரம் வாய்ந்த மேலாண்மைப் பள்ளியினை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் கல்வி பயின்ற மாணவர்கள், உலகெங்கும் எளிதாக வேலைவாய்ப்பினைப் பெறவும், துறைசார்ந்த தேவைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளும் வகையிலும் இன்றைய தகவல் தொழில்நுட்பம் மற்றும் இதர துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் அடிப்படையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்படும்.

(14) அன்னை தெரசா பல்கலைக்கழகம்: அன்னை தெரசா பல்கலைக்கழகம் இதுவரை இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வந்தது. இப்பல்கலைக்கழகத்தின் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிக்காக தற்போதைய அரசு, 111 ஏக்கர் நிலப்பரப்பினை மேற்காண் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கியுள்ளது. நபார்டு வங்கியின் மூலம் கடனுதவி பெற்று, இப்பல்கலைக்கழகத்திற்குக் கட்டடங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(15) திருச்சிராப்பள்ளி மண்டலப் பொறியியல் கல்லூரியினை தேசிய தொழில்நுட்ப நிறுவனமாக மாற்றுவதற்கான மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் செயற்குறிப்பினை ஏற்க, மாநில அரசு முடிவு செய்துள்ளது. இம்மாற்றத்தின் பயனாக, திருச்சிராப்பளளி மண்டல பொறியியல் கல்லூரி, இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (I.I.T.) இணையான உயர்நிலையை அடையும். இது தரம் மிக்க

பொறியாளர்களை உருவாக்கவும், தமிழ்நாட்டிலுள்ள மாணவர்களின் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தவும் உதவும் உலகெங்கும் உள்ள பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெறவும் இது பேருதவியாக இருக்கும்.

(16) 2003-2004ஆம் ஆண்டில், ரூ.200 இலட்சம் செலவில், கோவை அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் மகளிருக்காக விடுதிகள் கட்ட அரசு முடிவு செய்துள்ளது. சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி மகளிர் விடுதி ரூ.120 இலட்சம் செலவிலும், கோவை அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி மகளிர் விடுதி ரூ.80 இலட்சம் செலவிலும் கட்டப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக பொதுத் துறையைப் பொறுத்தவரையில் முன்னாள் இராணுவ வீரர்களுடைய நலனுக்காக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான இந்த அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்தியத் திருநாட்டின் பாதுகாப்புக்காக அரும்பாடுபட்டு போர்முனையில் தம் இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்களின் சடலம், அவரின் சொந்த ஊருக்குத் திரும்பும்போது ஓர் அமைச்சரை அனுப்பி, மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோருடன் அஞ்சலி செலுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளார் நமது முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-00

இந்தத் துறையின் சார்பில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில அறிவிப்புகளை சொல்லச் சொல்லி இருக்கிறார்கள், அந்த அறிவிப்புகளாவன:

(1) மாநிலத்தில் தற்போது 1.51 இலட்சம் முன்னாள் படைவீரர்களும், போரில் மரணமடைந்த 199 வீரர்களின் மனைவியரும், போரில் ஊனமுற்ற 69 படைவீரர்களும் உள்ளனர். இவர்களின் மறுவாழ்வு மற்றும் புனரமைப்புக்கு மட்டுமல்லாது, இவர்களைச் சார்ந்தோருக்கு நிதியுதவி மற்றும் பிற சலுகைகளை அளிப்பதும் முன்னாள் படைவீரர் நல இயக்கத்தின் தலையாய குறிக்கோளாகும்.



போரில் மரணமடைந்த வீரர்களின் மனைவியர்களுக்கும், போரில் படுகாயமுற்று ஊனமடைந்தோருக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் பல கோடி ரூபாய் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான சேவையின் தரத்தினை மேம்படுத்திட முன்னாள் படைவீரர்கள் நல அலுவலகங்களைக் கணினிமயமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்போது 25 மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக 10 மாவட்ட அலுவலகங்களையும் சென்னையிலுள்ள மாநில இயக்ககத்தையும் ரூ.10.00 இலட்சம் செலவில் கணினிமயமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

(2) தமிழகத்திற்கு வருகை தரும் முக்கியப் பிரமுகர்களை உபசரிப்பதிலும், அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தருவதிலும் தமிழகம் சிறந்து விளங்குவது யாவரும் நன்கு அறிந்ததே. தமிழகத்திற்கு வருகைதரும் விருந்தினர்கள் பொதுவாக சென்னை சேப்பாக்கத்தில் உள்ள விருந்தினர் மாளிகையில் தங்கவைக்கப்படுகின்றனர். இவ்விருந்தினர் மாளிகை பழுதுபார்த்து புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்தவும் அவசியமாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு தற்போது இயங்கிவரும் மின்தூக்கிக்கு பதிலாக ஒரு புதிய மின்தூக்கியினை அமைக்கவும், புதியதாக அறைகலன்கள், வெளிப்புறத்தில் பொருத்தக்கூடிய சீர்வளி சாதனங்கள் Split Airconditioners வாங்கவும், தற்போதுள்ள சமையலறையினை நவீனப்படுத்தும் வகையில் புதியதாக பாத்திரங்கள் கழுவும் சாதனம் அமைக்கவும், புதியவகை சமையல் எரிவாயு சாதனங்கள், தண்ணீர் குளிரூட்டு சாதனங்கள் மற்றும் குளிர்பதனப் பெட்டிகள் வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை ரூ.24.50 இலட்சம் செலவில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

(3) முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தால் நிர்வகிக்கப்படும் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து இராணுவத்தினர் இல்லங்கள் கட்டப்படுகின்றன. தற்போது 9 இராணுவத்தினர் இல்லங்களும் 2 இராணுவ அங்காடிகளும் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. அரசு அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ரூ.27 இலட்சம் வருவாய் ஈட்டப்படுகிறது.

இந்த நிதியாண்டில் ஈரோடு மாவட்டத்தில் ரூ.205 இலட்சம் செலவினத்தில் தரைத்தளம் மற்றும் மூன்று அடுக்குடன் கூடிய ஒரு இராணுவத்தினர் இல்லம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக ஆண்டொன்றுக்கு ரூ.25 இலட்சம் வருமானம் ஈட்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

(4) தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டடம் 1781 ஆம் ஆண்டு சுண்ணாம்புக் கலவையிலான செங்கற்களைக் கொண்டு சென்னை மேற்கூரை அமைப்பில் கட்டப்பட்டது. நாமக்கல் கவிஞர் மாளிகை 1975 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கட்டடங்களின் உட்புறத்தில் விரிசல்கள் உள்ளன. பல இடங்களில் நீர்க்கசிவும் ஏற்பட்டுள்ளது. இதிலுள்ள கழிப்பிடங்கள் சுகாதார வசதியின்றி பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இல்லை. பொதுப் பணித் துறையின் தலைமைப் பொறியாளர் இவற்றுள் அவசரமாக சீர் செய்ய வேண்டிய குறைகளைக் கண்டறிந்து இவற்றை உடனடியாக சரி செய்வதற்கு ரூ.116 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்துள்ளார்கள். 2003-2004 ஆம் ஆண்டில் இப்பணிகளை ரூ.116 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

(5) தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் நீண்டநாள் தேவைகளை நிறைவேற்றும் வகையில் ரூ.13.60 இலட்சம் செலவில் வசதிகளை மேம்படுத்திக் கொடுக்க இவ்வரசு உத்தேசித்துள்ளது. இந்நிதியிலிருந்து அவர்களுக்குத் தேவையான சுடுநீர் சாதனங்கள், குளிர்பதனப்பெட்டிகள், ஒரு கூடுதல் உணவு அறை மற்றும் குடிநீர் உபயோகத்திற்காக தனியாக ஒரு தண்ணீர்த் தொட்டி ஆகியவை அமைக்கப்படும். மேலும் 11 உணவு அறைகளை பழுதுபார்த்து மேம்படுத்தவும் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்து பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 756 தொடக்கப் பள்ளிகள், 676 நடுநிலைப் பள்ளிகள் 220 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 260 மேல்நிலைப் பள்ளிகள், ஆக மொத்தம் 1,912 பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.



2003-2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட உள்ள 372 தொடக்கப் பள்ளிகள், 422 நடுநிலைப் பள்ளிகள், 30 உயர்நிலை மற்றும் 30 மேல்நிலைப் பள்ளிகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் இந்த 3 ஆண்டு காலத்தில் மட்டும் 1,128 தொடக்கப் பள்ளிகள், 1,098 நடுநிலைப் பள்ளிகள், 250 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 290 மேல்நிலைப் பள்ளிகள், ஆக மொத்தம் 2,766 பள்ளிகள் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தொடங்கப்பட்டுள்ளன. சென்ற 5 ஆண்டுக்கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 5 ஆண்டுகளிலும்—அதாவது அமைத்த பள்ளிகளின் கணக்கெடுப்பின்படி—2,218 பள்ளிகள்தான் தொடங்கப்பட்டு இருக்கின்றன. அதைவிட 3 ஆண்டுக்காலத்தில் இன்னும் கூடுதலான பள்ளிகளை நாம் தொடங்கி இருக்கிறோம் என்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் தற்போது பள்ளி செல்லும் வயதில் 6 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளில் 98.93 சதவீதத்தினர் பள்ளிகளில் சேர்க்கை செய்யப்பட்டு பள்ளிக்கூடம் செல்கின்றனர். 1997-98-ல் தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:40 ஆக இருந்தது. தற்போது அது 1:36 ஆகக் குறைந்துள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல மக்கள்தொகை 300-ம், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளும் பள்ளிகளே இல்லாமல் இருந்தால் அங்கு தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு தொடங்கப்பட்டதில் தென் மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் பயனடையும் மக்கள் சதவிகித கண்ணோட்டத்தைப் பார்க்கிறபோது இதிலேயும் தமிழ்நாடுதான் முதன்மையாக இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையினை 2001-2002 முதல் ஒற்றைச் சாளர முறைக்குக் கொண்டுவந்து கலந்தாய்வு முறையில், மாணவர்கள் ஒளிவு மறைவற்ற, வெளிப்படையான சேர்க்கை செய்யப்பட்டு, அனைவரது பாராட்டுதலையும் இந்த ஆட்சி பெற்றுள்ளது என்பதை நான் சுட்டிக்காட்டுவதிலே மகிழ்ச்சியடைகிறேன். அதோடு

அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களது, 10 வருட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த அந்தப் பிரச்சினைகள், இப்போது தீர்க்கபபட்டு, தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தினுடைய ஒப்புதலுடன் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 15,670 கூடுதல் சேர்க்கை இடங்கள் ஏற்படுத்தப்பட்டு, தகுதியுள்ள மாணவர்களுக்கு தற்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள தகுதியுள்ள மாணவர்களுக்கும் 2003-ல் பயிற்சி அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நோத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது, ஆசிரியர்களின் பொது மாறுதல்கள் கலந்தாலோசனை மூலம் வழங்குகிறபோது—நன்மாறன் அவர்களும் அதே கருத்தைத்தான் சொன்னார் என்று கருதுகிறேன்—ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தபட்சம் அதாவது ஆசிரியர்கள் மாற்றப்படுகிறபோது—சில பள்ளிகளிலிருந்து முழுமையாக ஆசிரியர்கள் வெளியேறி விடுவதாலே அங்கே ஆசிரியர்கள் சில பள்ளிகளிலே இல்லாத நிலைமை ஏற்படுகிறது என்று இங்கே சுட்டிக்காட்டப்பட்டது. அதைக் கருத்திற்கொண்டு பொது மாறுதல்கள் கலந்தாலோசனை மூலம் வழங்கும்போது ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்காவது ஆசிரியர்கள் பள்ளியில் பணி புரியவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் இனிமேல் பொது மாறுதல்கள் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இந்த நிபந்தனையோடு மாறுதல் செய்யப்படுகிறபோது, அந்தப் பள்ளியிலே கிட்டத்தட்ட மூன்றிலே இரண்டு பங்கு ஆசிரியர்கள் நிச்சயமாக இருப்பார்கள். அவர்களுக்கு மாறுதல் கொடுக்கப்படமாட்டாது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் சேர்க்கை பற்றியெல்லாம் இங்கே பேசப்பட்டது. நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே மட்டும் உயர்நிலை, மேல்நிலை, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலே இடைநிலை ஆசிரியர்கள் உள்பட 9,520 ஆசிரியர்கள்—முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் இவர்கள் எல்லாம் சேர்த்து மொத்தம் 9,520



ஆசிரியர்கள்—நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தவகையிலே இன்றைக்கு மீதமுள்ள காலி இடங்களையும் முடிந்த அளவுக்கு நிரப்புவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே காலையிலே மெட்ரிகுலேஷன் பள்ளிகளைப் பற்றியெல்லாம் கருத்துகள் எடுத்து வைக்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டு மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் நிதித் தொகுப்பில் பள்ளிகளுக்குத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய விகிதங்கள், மாணாக்கர்களிடமிருந்து கட்டணங்கள் வசூலித்தல் சார்பாக பரிசீலித்து, அரசுக்குப் பரிந்துரை செய்ய முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. சை.வே. சிட்டிபாபு அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, மிக விரைவிலே அறிக்கையை இந்த அரசுக்கு அளிக்க இருக்கிறது. அந்த அறிக்கையைப் பரிசீலித்து அது குறித்து தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-10

இன்றைக்கு இயங்கி வருகிற பள்ளிகள்போக, தமிழ்நாட்டிலே அனைத்து மாவட்டங்களிலும், முழு எழுத்தறிவுத் திட்டம் தொடங்கப்பட்டு 1991 முதல் 1999 முடிய ரூ.53.98 கோடி செலவிலே நடைமுறைப்படுத்தப்பட்டு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் சிறப்பாகச் செயல்பட்டு, அதன் மூலமாக 79.70 இலட்சம் பேர் பயன் அடைந்துள்ளார்கள்.

அடுத்த கட்டமாக தொடர் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டு ரூ.27.34 கோடி செலவிலே இந்தத் திட்டத்திலே பயன் பெற்றவர்கள் 65.10 இலட்சம் பேர். 3 ஆம் கட்டமாக வளர் கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டு அதன் மூலமாக 18 மாவட்டங்களில் ரூ. 27.93 கோடி செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மீதம் உள்ள 11 மாவட்டங்களில் 33.38 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு தேர்வுத் துறையைப் பொறுத்தவரையில் தேர்வு நடக்கிறபோது எந்த முறைகேடுகளும் நடக்கக்கூடாது என்கிற வகையிலே பறக்கும் படை எல்லாம் அமைக்கப்பட்டு, கண்காணிப்போடு, தேர்வு நடப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்கு அறிவார்கள். அதற்குப்

பிறகு பள்ளியிலும் கல்லூரியிலும் மேல் படிப்பிற்குச் சேருகிறபோது வெளியிலிருந்து போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரியிலும்கூட சேருகிற நிலைமை இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கிறபோது, 4,5 ஆண்டுகள் படித்து முடித்த பிறகுகூட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை எல்லாம் ஏற்படுகிறது. எனவே இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்காக, போலிச் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுவதை முழுவதும் தடுப்பதற்காக, இனி எதிர்காலத்திலே, இந்த ஆண்டிலிருந்து அப்படி சான்றிதழ்களைத் தயாரிக்கிறபோது, இரகசிய குறியீட்டு முறைகள்—இப்போது நம்முடைய ரூபாய் நோட்டிலே இருப்பதைப் போல, போலிச் சான்றிதழ்கள் தயாரிக்காத வகையிலே இரகசிய குறியீட்டு முறைகள்—சான்றிதழில் பொறித்து, போலிச் சான்றிதழை அறவே தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எடுப்பதற்கு அரசு உத்தேசித்து உள்ளது.

நூலகத் துறையைப் பொறுத்தவரையிலே இந்த ஆண்டு 867 கிராமப்புற நூலகங்களைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க, மாவட்ட மைய நூலகங்களில் புத்தகக் கண்காட்சி தனியார் புத்தகப் பதிப்பாளர்கள் ஒத்துழைப்புடன் அரசின் சார்பிலே நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது. மேலும் சென்னையில் நிரந்தர புத்தகக் கண்காட்சி ஒன்றை அமைக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கடாரம் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஆசிரியர்களே இல்லை என்று சொன்னார். உடனடியாக நான் அந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டேன். 3 ஆசிரியர்கள் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், ஒரு ஆசிரியர் பணியிடம் மட்டுமே காலியாக இருக்கிறது, அதுவும் விரைவில் நிரப்பப்படும் என்பதையும் அவருக்குப் பதிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் நீலகிரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ராஜு சார்பிலே ஒரு கோரிக்கை வைத்தார்கள். அந்தக் குறைபாடுகளை நான் ஊட்டிக்குச் செல்கிறபோது நேரிலே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகள் நிச்சயமாக களையப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்னொன்று. திரு. ஜி.கே. மணி, மற்றும் உறுப்பினர்கள் எல்லாம்
பேசினார்கள். தமிழ்நாட்டில் வடமாவட்டங்களில்—ஏன் வட
மாவட்டங்களில் அதிக அக்கறை கொண்டு இருக்கிறார்கள் என்று
தெரியவில்லை. அந்த வட மாவட்டங்களில்— மாணவர்களின் தேர்ச்சி
விழுக்காடு, 10-வது மற்றும் 11-வது பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி
விழுக்காடு குறைவாக உள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்டினார்கள்.
அதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து
உள்ளது. இதற்காக அந்தப் பகுதி மாணவர்களுக்காக மாலையில்
பள்ளி முடிந்த பிறகு 1 மணி நேரம் சிறப்பு வகுப்புகள் நடத்தி, கற்றலில்
பின்தங்கிய மாணவர்களுக்குத் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.
இத்தகைய மாணவர்களுக்கு தனித் தேர்வுகள் நடத்தி அவர்களின்
கற்றல் அடைவுகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வித் துறையின் சார்பில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி
அம்மா அவர்கள் சில அறிவிப்புகளை செய்யச் சொல்லியிருக்கிறார்கள்:

(1) எந்த ஒரு குழந்தையும் தமிழ் மொழி கற்காமல் பள்ளியைவிட்டு
வெளியேறக்கூடாது என்பதை உணர்ந்து அனைத்துப் பள்ளிகளிலும்
தமிழ்மொழியை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டும் என இவ்வரசு
உறுதி பூண்டுள்ளது. எனவே 2003-2004 ஆம் கல்வி ஆண்டு முதல்
அனைத்து வகைப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்புகளில் பகுதி
'இ'-ல் கணிதம், அறிவியல், சமூகவியல் பாடங்களுடன், அறிவியல்
தமிழ், Scientific Tamil, என்ற பாடத்தைக் கற்பிக்க முடிவு
செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2003-2004-ல் அனைத்து வகைப்
பள்ளிகளிலும், அனைத்துக் குழந்தைகளும் முதலாம் வகுப்பில் அறிவியல்
தமிழை ஒரு பாடமாகக் கற்பர். அதற்கடுத்த ஆண்டுகளில் மீதியுள்ள
வகுப்புகளிலும் ஐந்தாம் வகுப்புவரை படிப்படியாக அறிவியல் தமிழ்
கற்பிக்கப்படும்.

பிற்பகல் 6-15

(2) பள்ளிகளில் தற்போது ஆங்கில மொழியானது மூன்றாம்
வகுப்பிலிருந்து கட்டாய மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமான அறிவிப்பு, கை தட்டாமல் இருக்கிறீர்களே,

(மாண்புமிகு உறுப்பினர்கள் மேசையைத் தட்டி ஒலி எழுப்பினார்கள்)

**திரு. துரைமுருகன்:** நாகேஷ் ஒரு படத்தில் சொல்வார், 'இந்த இடத்தில் கை தட்டணும் என்று. அப்படிச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இரண்டாவது அறிவிப்பு. பள்ளிகளில் தற்போது ஆங்கில மொழியானது மூன்றாம் வகுப்பிலிருந்து கட்டாய மொழியாக இருந்து வருகிறது. ஆங்கிலம் தற்போது உலகெங்கும் பரவலாகப் பயன்படுத்தப்படும் மொழியாக உள்ளது. கணினி, தகவல் தொடர்பு போன்ற பல பிரிவுகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு அடிப்படை ஆங்கில அறிவு இன்றியமையாததாக இருக்கிறது. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தொடக்கத்திலிருந்தே ஆங்கிலம் பயில்வது நன்மை பயக்கும் என்று கருதப்படுகிறது. ஆகவே நர்சரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் உள்ளதுபோல அரசுப் பள்ளிகளிலும் முதல் வகுப்பு முதல் மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்க வாய்ப்பு ஏற்படுத்தப்படும். 2003-2004 முதல் மாநிலப் பாடத் திட்டத்தில் ஆங்கில மொழி முதலாம் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) அனைவருக்கும் கல்வித் திட்டத்தினை தொடர்ந்து தீவிரப்படுத்த 2003-2004-ல் சுமார் ரூ. 340.31 கோடி செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தின்கீழ் 372 தொடக்கப் பள்ளிகள், 422 நடுநிலைப் பள்ளிகள், ஆசிரியர் பணியிடங்கள், பள்ளிகளுக்குப் பராமரிப்பு மானியம், வட்டார வள மையங்கள், வகுப்பறைக் கட்டடங்கள், ஆசிரியர்களுக்குப் பயிற்சி, கிராமக் கல்வி, உறுப்பினர்களுக்குப் பயிற்சி போன்ற பல்வேறு செயல்பாடுகள் செயல்படுத்தப்படும்.

(4) ரூபாய் 434.61 இலட்சம் செலவில் 30 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 30 மேல்நிலைப் பள்ளிகள் துவங்கப்படும்.

(5) ரூபாய் 225 இலட்சம் செலவில் 300 உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி செயல்முறைக் கூடங்கள் அமைக்கப்படும்.

(6) ரூபாய் 698.28 இலட்சம் செலவில் 200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்படும்.



(7) மாநில திறந்தவெளிப் பள்ளியானது தற்போது 10ஆம் வகுப்புத் தேர்வினை நடத்தி வருகிறது. இந்த முறையினை விரிவாக்கி, தேசிய திறந்தவெளிப் பள்ளி நிறுவனத்தின் உதவியுடன், 8 மற்றும் Plus Two தேர்வுகள் நடத்தப்படும்.

(8) நபார்டு வங்கியிடமிருந்து கடன் பெற்று ரூ.83 கோடி செலவிலே 325 உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

(9) அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ், அனைத்து ஆசிரியர்களுக்கும் குறிப்பாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கிலம், கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டபடி மாணவர்களுடைய கல்வித் தரம் உயரவேண்டுமென்று சொன்னால் ஆசிரியர்களுடைய கல்வித் தரமும் உயரவேண்டும். எனவே அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுவதன் மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பெறுகிற அந்தப் பயிற்சியின் மூலமாக மாணவர்களுடைய கல்வித் தரம் உயர்த்தப்படும் என்ற வகையிலே இந்த சிறப்புப் பயிற்சி அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

(10) அடுத்து ஆசிரியர்கள் பணி நிரவலின் மூலம் தற்போது உள்ள 139 ஓராசிரியர் பள்ளிகளுக்கு மேலும் ஒரு கூடுதல் ஆசிரியர் பணியிடம் வழங்கப்படும். இங்கேகூட நிறையபேர் சொன்னார்கள் ஓராசிரியர் பள்ளி இருக்கிறது என்று. தமிழகத்திலேயே மொத்தம் 139 ஓராசிரியர் பள்ளிகள்தான் இப்போது இருக்கின்றன. அந்த 139 ஓராசிரியர் பள்ளிகளுக்கும் கூடுதலாக ஓர் ஆசிரியர் பணியிடம் வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(11) அடுத்து நூறாண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட தமிழ்நாடு கல்வி விதிகள் மற்றும் விதிமுறைகள் கையேடு Tamil Nadu Educational Rules and Tamil Nadu Educational Manual நடைமுறைக்கு உகந்ததாக இல்லாததால் புதிய விதிகளை நிர்ணயிக்க முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. ஏ. முத்துகிருஷ்ணன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினுடைய அறிக்கை கிடைத்தவுடன் அவை ஆராயப்பட்டு நடப்புக் கல்வி ஆண்டிலேயே அது செயல்முறைக்குக் கொண்டுவரப்படும்.

(12) அடுத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் குறைந்த அளவு கட்டமைப்பு வசதிகள், கட்டண விகிதம், ஆசிரியர்களுக்கு ஊதியம் ஆகியவற்றைக் குறித்து ஆராய்ந்து அளிக்கப்படும் திரு. சை.வே. சிட்டிபாபு தலைமையிலான குழுவின் அறிக்கையின்மீது விரைவில் அரசாணை பிறப்பிக்கப்படும்.

(13) அடுத்து அரசுப் பள்ளிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சார்ந்த நடவடிக்கைகள் ஆகியவற்றில் வியத்தகு பணிகளைச் செய்யும் பள்ளிகளைத் தரம் பிரித்து அவற்றிற்கு 'நட்சத்திர அந்தஸ்து' வழங்கப்படும். தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளுக்கு விருதுகள் வழங்கப்படும். இதுபோன்று வழங்கப்படுவதால் மற்ற பள்ளிகள் ஊக்கம் பெறுவதற்கு இது வாய்ப்பாக இருக்கும்.

(14) அடுத்து ரூ.33.38 கோடி செலவில், மைய அரசின் வளர் கல்வி மைய திட்டத்தின்கீழ், கடலூர், நீலகிரி, கோயம்புத்தூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்கள் கொண்டு வரப்படும்.

பிற்பகல் 6-20

(15) அடுத்து துறைத் தலைவர்களின் அலுவலகங்களுடன் மாவட்ட கள அலுவலகங்கள் கணினி மூலம் இணைக்கப்படும். இதற்கென அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது 4 கணினிகள் வழங்கப்படும்.

(16) அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் புத்தகக் கண்காட்சி நடத்தப்படும். சென்னையில் தனியார் பதிப்பாளர்களின் உதவியோடு நிரந்தர புத்தகக் கண்காட்சி ஒன்று ஏற்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே, ஏதோ வடமாவட்டங்களில் மட்டும் தேர்ச்சி விகிதத்தைக் கூடுதலாக்கப் போவதாக நான் சொன்னதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதுவல்ல. நான் சில மாவட்டங்களைக் குறிப்பிட்டு, அந்த மாவட்டங்களில் மட்டும் தேர்ச்சி விகிதம், குறைவாக இருக்கிறது என்று சொன்னேன். இதை நான் சொல்லவில்லை, அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. அந்த மாவட்டங்களை மட்டும் படித்துக் காட்டினேன். புதுக்கோட்டையைப் பற்றிக்கூடச்



ஆகவே அதுதானே தவிர, வட சொல்லப்பட்டிருக்கிறது. முன்னுரிமை மாவட்டங்களுக்கு மட்டும் ஒரு முக்கியத்துவம் கொடுத்து, வடமாவட்டங்களில்தான் கொடுத்து சொல்லப்பட்டதாக அல்ல. என்று அந்த தேர்ச்சி விகிதம் குறைவாக இருக்கிறது கொள்கை விளக்கக் மாவட்டத்தினுடைய புள்ளி விவரங்கள் குறிப்பிலே இருந்ததை எடுத்துச் சொன்னேனே தவிர வேறல்ல என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதைப்போல தேர்ச்சி விகிதம் குறைவாக உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தேர்ச்சி விகிதத்தை அதிகப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

அடுத்து தமிழ் வளர்ச்சி—பண்பாடு.

"தூய உள்ளம், தொண்டுள்ளம் அன்பு உள்ளம்,
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தன்னுலகமன்றோ இன்பம்"

என்னும் பாவேந்தரின் இலக்கியத்திற்கு இலக்கணமாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் மகத்தானவை.

உலகில் மிகத் தொன்மையானது நம் தமிழ் மொழி. தமிழ் மொழியை செம்மொழியாக அறிவிக்கவும், மைய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழியைக் கொண்டு வரவும் தொடர்ந்து மைய அரசை இவ்வரசு வலியுறுத்தி வருகிறது. மேலும் அரசுப் பணியாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த அவ்வப்போது ஆட்சி மொழிக் கருத்தரங்குகள், ஆய்வுகள் மாவட்டந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆட்சி மொழிச் செயலாக்கத்திற்கு உறுதுணையாக ஆட்சிச் சொல்லகராதியை புதுப்பிக்கும் பணியும், அச்சிடும் பணியும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மொழி வளர்ச்சியில் நூல்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் தமிழ் மொழியில் சிறந்த நூல்கள் வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கப்படும். அவற்றைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் சிறந்த தமிழ் நூலுக்குப் பரிசும், அவற்றை வெளியிடும் பதிப்பகத்தாருக்குப்

பரிசும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் கொடுக்கப்பட்டு வருகின்றன. தமிழுக்குச் சிறப்பாகத் தொண்டாற்றிய அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு திங்கள்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டமும் செயல்பட்டு வருகிறது. மேலும் திருவள்ளுவர் விருது, திரு.வி.க. விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது மற்றும் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகியவை இவ்வரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தொல்லியல் துறை தமிழகத்திலுள்ள வரலாற்றுச் சின்னங்களையும், நினைவுச் சின்னங்களையும் சீரமைத்து, பாதுகாத்து, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு போன்ற அரும்பணிகளைச் செய்து வருகிறது. நாட்டிலுள்ள மாநில அருங்காட்சியகங்களில் பெரியதும், பழமையும், பெருமையும் வாய்ந்த சென்னை அருங்காட்சியகம் தொடர்ந்து 150 ஆண்டுகள் சீரிய பணியாற்றியதைக் கருத்தில் கொண்டு அருங்காட்சியகப் பணிகளை மேம்படுத்தவும், பண்பாட்டு பாரம்பரியமிக்க கட்டடங்களைப் பாதுகாக்கவும், தற்போது புனரமைப்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு எடுத்து வருகிறது.

1991ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கலை பண்பாட்டு இயக்ககம், கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், நலிந்த பண்புகளை மேம்படுத்துதல், தமிழ்நாட்டில் கலைப் பாரம்பரிய பண்பாடு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மாவட்ட கலை மன்றம் இயல், இசை, நாடக மன்றம் மற்றும் கல்லூரிகள் மூலம் சீரிய முறையில் செய்து வருகின்றது. இவ்வாறு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுப் பணிகளில் தொடர்ந்து ஈடுபாட்டுடனும், முனைப்புடனும் இத்துறை ஆற்றிவரும் பணிகளுக்கு அவ்வப்போது அறிவுரை வழங்கியும் வழிகாட்டியும் வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய வெற்றிப் பயணம் தொடர்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, 2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை இந்த அவையில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.



**அறிவிப்பு:** (1) நாவலர் பண்டித நா.மு. வேங்கடசாமி நாட்டார், படைப்பாளரும், திறனாய்வாளருமான திரு. க.நா. சுப்பிரமணியம் மற்றும் நவீன தமிழிலக்கிய முன்னோடி திரு. ந. பிச்சைமூர்த்தி ஆகியோரின் இலக்கிய நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும். அவர்களது மரபுரிமையாளர்களுக்கு பரிவுத் தொகை மொத்தம் ரூ.15.00 இலட்சம் வழங்கப்படும். (ஒவ்வொருவருக்கும் ரூ.5.00 இலட்சம் வீதம்) அவர்களது குடும்பத்திலுள்ள மரபுரிமையாளர்களுக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-25

(2) 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று சொன்ன வடலூர் வள்ளலாரைப் பெருமைப்படுத்துகிற வகையில், வள்ளலார் அவர்கள் சென்னையில் வாழ்ந்த ஏழு கிணறுப்பகுதியில் உள்ள இல்லம் நினைவிடமாக ஆக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) ஆண்டுதோறும் மார்ச் திங்கள் 8 ஆம் நாள் "உலக மகளிர் தினம்" நாளன்று சென்னை மெரீனா கடற்கரையிலே அமைந்துள்ள ஒளவைப் பெருமாட்டியார் சிலைக்கு தமிழக அரசின் சார்பில் ரூபாய் 20 ஆயிரம் செலவில் மாலை அணிவித்து சிறப்பு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெண் புலவருக்கு இந்த அரசு செய்கிற முதல் மரியாதை.

(4) எழுத்தாளர் திரு. மணிக்கொடி ஸ்ரீநிவாசன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு சார்பில் 75 ஆயிரம் ரூபாய் செலவில் இவ்வாண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) மாவட்ட அளவில் நடத்தப்படும் பேச்சு, கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகை உயர்த்தப்படும். மேலும் மாநில அளவிலும் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்படும். இதற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.1.50 இலட்சம் ஆகும்.

(6) மதுரை திருமலை நாயக்கர் மஹால், இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் நாயக்கர் தர்பார்

ஹால், காஞ்சிபுரம் அருகிலுள்ள திருலோக்கியநாத ஜீனசுவாமி கோயில், தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை மற்றும் நாகர்கோவில் உதயகிரி கோட்டை ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணி ரூ.240.17 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

*(7)* இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனைக் கட்டடத்தின் சுவர்கள் மற்றும் கூரைகளில் தீட்டப்பட்டுள்ள பண்டைய வண்ண ஓவியங்கள் மற்றும் காஞ்சிபுரம் அருகிலுள்ள திருலோக்கியநாத ஜீனசுவாமி கோயில் சுவர்கள் மற்றும் கூரைகளில் தீட்டப்பட்டுள்ள பண்டைய வண்ண ஓவியங்களை, பழமை மாறாமல் புதுப்பித்துப் பாதுகாக்கும் பணிகள் ரூ.20.01 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

*(8)* தஞ்சாவூர் சர்ஜா மாடிக் கட்டடத்தினை தொல்லியல் துறையின் மரபுரிமை அருங்காட்சியகமாக ரூ.12.20 இலட்சம் செலவில் மாற்றி அமைக்கப்படும்.

*(9)* கடந்த ஆண்டைப் போல நலிந்த கலைஞர் நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சம் செலவில் 500 கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

*(10)* தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்கு தமிழ்நாட்டின் பங்காக கூடுதலாக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சமும், 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.50.00 இலட்சம் நிதி வழங்கப்படும்.

*(11)* தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூல நிதியிலிருந்து புகழ்பெற்ற கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்கு இதுகாறும் வழங்கி வந்த குடும்பப் பராமரிப்புத் தொகை ரூ.5000/-லிருந்து ரூ.6000/- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. கடைசி மானியக் கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு குறிப்பாக நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தலைசிறந்த விளையாட்டு



வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகிறார்கள். அந்த வகையிலே முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு தலா ஒரு இலட்சம் பண முடிப்பும் மற்றும் பாராட்டுப் பத்திரமும் அரசு பரிசாக வழங்கி வருகிறது. சர்வதேசப் போட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்த 12 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களை எல்லாம் ஊக்குவிக்க வேண்டுமென்று காலையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே இந்த அரசு, பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோதே விளையாட்டு வீரர்களாக இருப்பவர்களுடைய திறனைத் தெரிந்து, அறிந்து அவர்களை ஊக்குவிக்கிற வகையில் அவர்களுக்குத் தனியாக அரசு செலவில் Coaching Camp நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கிற வகையில்—ஒலிம்பிக் விளையாட்டிலே பங்கேற்று யாரும் தமிழ்நாட்டிலே இருந்து அப்படிப்பட்ட விருதுகளைப் பெறவில்லை என்றெல்லாம்கூட இங்கே சொன்னார்கள். எனவே அவர்களை ஊக்கப்படுத்துகிற வகையிலே--மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒலிம்பிக் விளையாட்டிலே வெற்றி பெறுகிற ஒரு விளையாட்டு வீரருக்கு தங்கப் பதக்கம் பெற்றால் அவருக்கு ஒரு கோடி ரூபாய் பரிசளிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல வெள்ளிப் பதக்கம்...

பிற்பகல் *6-30*

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் ஒலிம்பிக் விளையாட்டுகளில் இந்தியாவிலே தங்கப் பதக்கம் பெற்றது என்பது ஹாக்கி விளையாட்டிலே மட்டும்தான். 1942 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலே அன்றைய சென்னை இராஜதானியிலிருந்து, சென்னை மாநிலத்திலேயிருந்து அன்றைய கல்லூரி மாணவர் ரெபெல்லோ அவர்கள் Hop step and jump-ல் தங்கம் வாங்குவார் என்று எதிர்பார்த்தார்கள். அவர் பயிற்சி பெறுகிற நேரத்திலேயே கால்

சுளுக்கு ஏற்பட்டு அவராலே அதில் பங்கு பெறவே இயலவில்லை. அதற்குப் பிறகு Bronze Medal-ஐ தாண்டி வாங்குவது என்பதே மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆக குதிரைக் கொம்பைக் கொண்டு வந்தால் 1 கோடி ரூபாய் என்று சொல்கிறீர்கள். அந்தக் குதிரைக் கொம்பை எப்படிக் கொண்டு வருவது? இன்னும் சொல்லப்போனால் காலையிலே பாலகிருஷ்ணன் ஒன்றை எழுப்பினார், பாதியிலேயே நிறுத்திவிட்டார். World cup. World cup உலகக் கோப்பை கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி நடந்தது. அதில் தமிழ்நாட்டிலேயிருந்து ஒருவர்கூட இடம்பெறவில்லை என்று பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள். ஆனால் விளையாடுவதற்குத் திறமை இல்லையா என்றால் திறமையானவர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக இன்றையதினம்கூட World cup-லே இடம்பெற்ற 3 தலைசிறந்த பேட்ஸ்மென்கள், அடுத்து டாக்காவிற்குப் போகிற டீமிலே இல்லை. அதுபோல இன்னொரு 4 பேர் இல்லை. நான்கு தலைசிறந்த பேட்ஸ்மென்கள், விளையாடாமல் எடுக்கிற டீமிலேகூட தமிழ்நாட்டிலே இருந்து ஒரு பேட்ஸ்மெனைக்கூட அவர்களாலே எடுக்க முடியவில்லை. (குறுக்கீடு) அப்படித் திறமையானவர்கள் இல்லையா என்றால் நிச்சயமாக உண்டு. நானே பெயர் சொல்கிறேன். ஸ்ரீதான் ஸ்ரீராம். இந்த சீசனில் மட்டும் he has scored more than 4 centuries. He is among the runs now. அதற்கு முன்னாலே இதேமாதிரி தலைசிறந்த பேட்ஸ்மென் ஒருவர் இருந்தார். இன்னும் விளையாடிக் கொண்டிருக்கிறார். This season, he is not among the runs. ஸ்ரீதான் ஸ்ரீராம். இன்று வரைக்கும் யாருமே எடுக்கவில்லை. ஒரு நல்ல பௌலர் ஒருவர், he is among the wickets now. இந்த சீசனிலே மட்டும் 3 மேட்சிலும் 30,31 விக்கட்ஸ் எடுத்ததாக எனக்கு ஞாபகம். அவர் வெஸ்ட் இண்டீசுக்கு நமது 'ஏ' டீமிலே போயிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்? என்ன செய்ய வேண்டும்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது முக்கியமான விஷயம். அவரை எடுத்துக் கொண்டு போனார்கள். Whether he was among the wickets or not. ஒரு மேட்ச்சோ, இரண்டு மேட்ச்சோ, அவர் எத்தனை ஆடினார், அவர் எத்தனை விக்கட் எடுத்தார் என்பது அப்புறம் வரவில்லை. கடைசியாக இப்போது அந்த டீமிலே இருந்து ஒரு பௌலர் எடுத்திருக்கிறார்கள். He took 31 wickets என்று ஒரு Report



வந்தது. இரண்டாவது 28 விக்கட்ஸ் என்று வந்தது. He has been selected. He deserves. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் தமிழ்நாட்டிலேயிருந்து ஏன் ஒருவர்கூட இல்லை. இத்தனைக்கும் அந்தக் கிரிக்கெட் சங்கத்தினுடைய தலைவர் யார் என்றால் தமிழ்நாட்டுக்காரர். இதில் ஏதோ கோளாறு இருக்கிறது. அதனால் தேர்ச்சியிலே, தேர்வு செய்வதில் கோளாறு இருக்கிறது. பயிற்சி தருவது மிக முக்கியம். அதில் கொஞ்சம் நாமும் அக்கறை காட்டலாம். அதற்கு அமைச்சர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்கொள்வாரா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய பேச்சு விளையாட்டு வீரர்களை discourage செய்வதாக அமைந்து விடக்கூடாது.

**THIRU S.R. BALASUBRAMONIYAN:** I am not discouraging them. I am encouraging them. I want sportsmen from Tamil Nadu to represent our Country. I want players from Tamil Nadu to represent our Country. But they are all deserving players who have been left out. That is what I mean.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. சொல்வதைப் போலத்தான், அவர்களை encourage செய்வதற்காகத்தான் இப்படி பரிசுத் தொகைகளை நாங்கள் அறிவித்திருக்கிறோம். இப்போது ஒலிம்பிக் விளையாட்டிலே தங்கப் பதக்கம் பெறவில்லை என்று சொன்னாலும், வெண்கலப் பதக்கம் பெறுகிற அளவுக்கு நாம் முன்னேறி இருக்கிறோம். எனவே அந்த வகையிலே தங்கப் பதக்கம் பெறுகிறவர்களுக்கு 1 கோடி ரூபாயும்...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கப் பதக்கம் பெற்றால் 1 கோடி ரூபாய் என்று சொன்னார். தங்கம் பதக்கம் பெறுகிற Team game-லே அவர் இடம்பெற்றிருந்தால் அவருக்கு அதே 1 கோடி ரூபாய் கிடைக்குமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுப் போட்டியில் விளையாடி தங்கப் பதக்கம் பெறும் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் 1 கோடி ரூபாய் தரப்படும்.

அதைப்போல ஒலிம்பிக் போட்டியிலே வெள்ளிப் பதக்கம் பெற்றால் 50 இலட்சம் ரூபாய்; அதே மாதிரி வெண்கலப் பதக்கம் பெற்றால் 25 இலட்சம ரூபாய். அடுத்து காமன்வெல்த், ஏஷியன் கேம்ஸிலே முதல் பரிசு பெறுபவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய்; இரண்டாவது பரிசு பெறுபவர்களுக்கு 15 இலட்சம் ரூபாய்; மூன்றாவது பரிசு பெறுபவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய். அந்த வகையிலே அவர் சொன்னதைப்போல இதுபோன்ற வெற்றி பெறுகிற வீரர்களை coach செய்பவர்களுக்கும் அதிலே 15% பங்குத் தொகை அளிக்கப்படுகிறது. பெறுகிற அந்தப் பரிசுத் தொகையிலே 15% தொகை அந்த coach-களுக்கும் அளிக்கப்படுகிறது. அந்த வகையிலே விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதற்கும் இந்த அரசு நல்ல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதையும் இந்த நோத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-35

Honourable Speaker Sir, Our Honourable nominated Member has mentioned here that the State Board meeting of Anglo-Indian Schools have not been convened so far. Now only we came to know about this. Certainly we will take necessary action to convene the Board meeting immediately.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுக்குத் தமிழே நன்றாகத் தெரியும். புரிந்துகொள்வார்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** எனவே இந்த ஐந்து மானியக் கோரிக்கைகள் மீதும் கருத்துகள் சொன்ன . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இளைஞர்கள் நலன், புதிய அறிவிப்புகள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்காகத் தனியாக அறிவிப்பு கொடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுக்கப்பட்டிருக்கிறது.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** என்னிடம் இல்லை. (குறுக்கீடு) சுருக்கமாகத்தான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றாகத்தான் படித்துக் கொண்டிருந்தார். எஸ்.ஆர்.பி. அமைச்சரைக் குழப்பிவிட்டார் என்று நினைக்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பாக புதிய அறிவிப்புகளை அறிவிப்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அறிவிப்பு 1. Beach Volley Ball சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் மணற்பாங்கான தளத்தில், Beach Volley Ball விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளது. மேலும் கடலோர மாவட்டங்களில் பள்ளிகளுக்கிடையேயான Beach Volley Ball போட்டிகள் நடத்த அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு 2. பளுதூக்கும் விளையாட்டுக் கூடம். சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் பளு தூக்கும் விளையாட்டுக் கூடம் ஒன்று ஏற்படுத்த அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 3. திருவண்ணாமலை மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் முதலிய வசதிகள் அடங்கிய மாவட்ட விளையாட்டு வளாகம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

அடுத்த அறிவிப்பு 4. தேனி மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், 15 ஏக்கர் நிலப்பரப்பில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் முதலிய வசதிகள் அடங்கிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த அறிவிப்பு 5. விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளின் திறனை வளர்க்க உயரமான மலைப்பிரதேசங்களில் பயிற்சியளிப்பது நடைமுறையிலுள்ளது. அவ்வாறு மலைப்பிரதேசங்களில் பயிற்சியளிக்கும் பயிற்சி மையத்தை உதகையில் அண்ணா விளையாட்டு அரங்க வளாகத்தில் உதகை மலைப்பிரதேச மேம்பாட்டுத் திட்டத்தின் நிதி உதவியுடன் ஆண்கள்/பெண்கள் தங்குவதற்காக 30 படுக்கைகள் கொண்ட விடுதி ஒன்று அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த அறிவிப்பு 6. திறமையான விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளத்தக்க வகையில் பயிற்சி அளிப்பதற்காக சிறப்பு விளையாட்டு அகாடமிகள் படிப்படியாக தமிழ்நாட்டில் நிறுவப்பட உள்ளன. இத்திட்டத்தில் தனியார் துறை மற்றும் பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் மதுரையில் தாண்டுதல் மற்றும் குறுந்தூர ஓட்டம் தொடர்பான விளையாட்டிற்காக ஒரு விளையாட்டு அகாடமி நிறுவப்பட உள்ளது.

சென்னையில் நலிந்த பிரிவு சமுதாயத்தினரிடையே மேசைப் பந்து விளையாட்டை மேம்படுத்தும் வகையில் தனியார் நிறுவனத்தின் கூட்டாண்மையுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடுத்த அறிவிப்பு 7. மண்டல அளவிலான தடகளம் மற்றும் நீச்சல் தர விளையாட்டுப் போட்டிகள், கோவை, சேலம், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு காலாண்டிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடுத்த அறிவிப்பு 8. பள்ளி மாணவர்களுக்கிடையே வாள் சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ், குத்துச் சண்டை மற்றும் ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுகளில் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் மாணவ, மாணவியரிடையே போட்டி மனப்பான்மையை மேம்படுத்தவும் மற்றும் அவர்களின் திறமைகளை வெளிக் கொணரவும் இயலும். இதன்படி தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அறிவியல்பூர்வமான பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் உயர்மட்டப் போட்டிகளில் பங்கேற்க இது ஏதுவாகும்.



அடுத்த அறிவிப்பு 9. தருமபுரி மாவட்ட இளைஞர்கள் சட்ட விரோதச் செயல்களைத் தவிர்த்து விளையாட்டில் ஈடுபட ஏதுவாக அம்மாவட்டத்தில் பல விளையாட்டு மையங்களை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை அரசு உருவாக்கி வருகிறது.

அடுத்த அறிவிப்பு 10. தங்களிடமுள்ள விளையாட்டுத் திறமைகளை மெய்ப்பிக்கும் வகையில் மிகத் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் இரண்டு பயிற்சியாளர்களுக்கு ஆண்டுதோறும் முதலமைச்சர் விருது வழங்கப்படும். இதுபோன்று உடற்பயிற்சிக் கல்வியில் சிறந்து விளங்கும் இரண்டு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் இவ்விருது வழங்கப்படும். முதலமைச்சர் விருதிற்காக தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் பணமுடிப்பும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த அறிவிப்பு 11. சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கத்தில் Basket Ball (குறுக்கீடு) Hockey-வளைகோல் பந்து விளையாட்டரங்கத்தில் ... மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி தான். சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் ரூ.1 கோடி செலவில் மின் ஒளி அமைப்பை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இவ்வசதி சென்னையில் சர்வதேச அளவில் ஹாக்கி பந்து விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குக் கவரும் வகையில் இது அமையும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இந்த மைதானத்தில் இனி சர்வதேச அளவில் ஹாக்கி போட்டிகள் நடைபெறும்.

இந்த 5 மானியக் கோரிக்கைகள் மீது தங்களுடைய கருத்துகளைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 5 மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த அத்தனை உறுப்பினர்களுடைய கேள்விகளுக்கும் துறையினராலே பதில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தக் கோரிக்கைகள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இறுதியாகத் தெரிவித்து இந்த 5 மானியக் கோரிக்கைகளையும் மாமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

பிற்பகல் 6-40

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டாக அல்ல. ஆனால் அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவிக்க வேண்டும் என்பதற்காக நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக தேர்தல் நடக்கிற காலத்தில், முன்னாள் கல்வியமைச்சராக இருந்த மாண்புமிகு தம்பிதுரை அவர்களும் இன்றைக்கு இருக்கிற அமைச்சர் மாண்புமிகு செம்மலை அவர்களும் examination hall-க்குள் சென்று பார்க்கிறார்கள்; சென்று வருகிறார்கள். நான் அவருடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். அமைச்சர் அவர்களுடைய கடமையுணர்வை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவர்களும் examination எழுதியவர்கள்தான். தங்களுக்கும் தெரியும். மாணவன் உட்கார்ந்து எழுதிக் கொண்டு இருக்கும்போது அங்கே இருக்கிற Supervisor பின்னால் நின்று என்ன எழுதுகிறார்கள் என்று படித்தால்கூட அவனுக்கு எழுத ஓடாது. இது psychological effect. ஆனால் ஒரு அமைச்சர் தேர்வு நடக்கிற காலத்திலே, உள்ளே போய் வருகிறபோது— மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதுகிறபோது, அதுவும் ஒரு தேர்வுதான். தேர்வு நடக்கிற காலத்தில் உள்ளே போய் வருகிறபோது— அவர்கள் மத்தியில் ஒரு பரபரப்பு ஏற்படுகிறது. தேர்வு எழுதுகிறபோது அது அவர்களை பாதிக்கும் என்பதை தேர்வு எழுதியவர்களாகிய நாமும் உணர்வோம். ஆகையால் ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். செம்மையாக நடைபெற வேண்டுமென்ற தங்கள் உணர்வை நான் பாராட்டுகிறேன். ஆனால் அது ஒரு மாதிரியான feeling-ஐ ஏற்படுத்துகிறது என்கிற செய்தி எனக்குக் கிடைத்தது. அதைத் தங்களுக்குத் தெரிவித்தேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மாணவர்களுக்கு பாதிப்பு, பதட்டம் ஏற்படுமானால் எதிர்காலத்திலே அதைத் தவிர்த்துவிடலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் பாலிடெக்னிக் குறித்து இப்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேர்தல் குறித்த பொருள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைச் சார்ந்தது என்பதால் இதுகுறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்.



***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 37, "தேர்தல்கள்" என்ற தலைப்பின்கீழ் 2003-2004ஆம் நிதியாண்டின் செலவுக்காக 20 கோடியே 34 இலட்சத்து 21 ஆயிரம் நிதி தேவைப்படுகிறது. இது சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகளுக்காக 5 கோடியே, 4 இலட்சத்து 62 ஆயிரமும், சட்டப் பேரவைத் தொகுதிகளுக்காக 9 கோடியே 49 இலட்சத்து 11 ஆயிரமும், மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தலுக்காக 18 இலட்சத்து 49 ஆயிரமும், இடைத் தேர்தலுக்காக 18 ஆயிரமும், மக்களவைத் தேர்தலுக்காக 24 ஆயிரமும் மாநில சட்டப்பேரவைக்காக 6 இலட்சத்து 22 ஆயிரமும் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்காக 5,55,34,000-மும் மற்றும் இதரச் செலவுகளுக்காகவும் சேர்த்து 20 கோடியே 34 இலட்சத்து 21 ஆயிரமும் ஒட்டுமொத்தமாக இதில் தேவைப்படுகின்றது. 1-1-2003-ஐ, qualifying date, அந்த வாக்காளர்களைச் சேர்க்கின்ற இறுதி நாளாக வைத்து, அதன் அடிப்படையில் 17-1-2003 அன்று வெளியிடப்பட்ட Electoral Rolls அடிப்படையில் ஒட்டுமொத்தமாக 2,42,01,042 ஆண்களும், 2,50,34,660 பெண்களும், ஆக ஒட்டுமொத்தம் 4 கோடியே 92 இலட்சத்து 35 ஆயிரத்து 702 வாக்காளர்கள் வாக்களிக்கும் தகுதியினைப் பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தற்போது இந்த வாக்காளர் புகைப்பட அட்டையைப் பொறுத்தவரைக்கும், ஒட்டுமொத்தமாக 3 கோடியே 28 இலட்சம் பேருக்குத் தரப்பட்டுவிட்டது. 1 கோடியே 64 இலட்சம் பேருக்குத் தரவேண்டிய பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. ஒட்டுமொத்தமாக இந்த 4 கோடியே 92 இலட்சம் பேருக்கும் வர இருக்கின்ற பொதுத் தேர்தலுக்குமுன் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 6-45

அதைப்போலவே தற்போது இருக்கின்ற ஒட்டுமொத்தத் தொகுதிகளான 234 சட்டமன்றத் தொகுதிகளினையும், 39 நாடாளுமன்றத் தொகுதிகளினையும் 2026 ஆம் ஆண்டுவரை இதனுடைய எண்ணிக்கையை மாற்றக்கூடாது என்ற ஒரு முடிவினை சட்டரீதியாக மைய அரசு எடுத்திருக்கிறது.

அதைப்போலவே தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்ற, தற்போது இருக்கின்ற ஒட்டுமொத்தத் தொகுதிகளான 42, அதை 45ஆக உயர்த்துவதற்கு தற்போது ஒரு கொள்கை முடிவு தேர்தல் ஆணையத்திலே எடுக்கப்பட்டிருக்கிறது. Scheduled Tribes-ஐப் பொறுத்தவரைக்கும் தற்போது 3ஆக இருப்பது 2ஆகக் குறைக்கப்படக்கூடிய ஒரு நிலை

இருக்கிறது. வர இருக்கின்ற 17-4-2003 அன்று a meeting of Delimitation Commission with its associate Members is to take place at Delhi. அதிலே அவர்கள் முடிவினை எடுக்க இருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, 2001-ஐ ஒட்டிய மக்கள் தொகையினுடைய கணக்கை அடிப்படையாகக் கொண்டு தேர்தலை நடத்த வேண்டும் என்று பல மாநிலங்கள் வற்புறுத்தியிருக்கின்றன. ஆனால் தற்போது 1991 ஆம் ஆண்டு சென்சஸ் அடிப்படையில்தான் தேர்தலை நடத்த வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். தொகுதிகளினுடைய எண்ணிக்கை, மக்களுடைய, வாக்காளர்களுடைய எண்ணிக்கையையொட்டி சில தொகுதிகள் ஆங்காங்கு realignment செய்யப்பட வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். உதாரணமாக வில்லிவாக்கம் தொகுதியை எடுத்தால், 8,83,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். சேப்பாக்கம் தொகுதியை எடுத்தால் ஒரு இலட்சம் வாக்காளர்கள்தான் இருக்கிறார்கள். எனவே இந்த வாக்காளர்களுடைய எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பல தொகுதிகளில், நடக்க இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்னால் மாற்ற வேண்டும் என்ற ஒரு முடிவை மேற்கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே Polling Station -ஐப் பொறுத்தவரைக்கும், இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலே இருந்தால் அவர்களுக்கு இன்னும் கூடுதல் வாக்குச்சாவடி தர வேண்டும் என்ற கொள்கை முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவும் கிட்டத்தட்ட இந்த டிசம்பர் 2003 வாக்கில்—the delimitation process would be over by the end of this year—முடிகின்ற நிலையில் இருக்கிறது. அந்த நேரத்திற்குள் இந்தப் பணியை மேற்கொண்டுவிடலாம் என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் இதற்கான பணிகளுக்காகத்தான் மாநிலத்தினுடைய பொறுப்பாக இந்த மானியக் கோரிக்கை ஒதுக்கீட்டை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் தந்திருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரைக்கும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ஒரு வெட்டுத் தீர்மானக் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் பதில் சொல்ல வேண்டும் என்றால் நேரம் இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று வேண்டுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 19 – உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 19, உயர் கல்வித் துறை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆர்.கிருஷ்ணன் இருக்கையில் இல்லை. திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன் இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. மகேந்திரன் இருக்கையில் இல்லை. திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம் இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு.



**திரு. எ.வ. வேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எம். ராம்குமார் இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால் இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. பாரமலை இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ. அசோகன் இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சோ. இராசேந்திரன் இருக்கையில் இல்லை. திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

**"உயர் கல்வித் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 736,83,69,000/- மூலதனக் கணக்கில் ரூ.173,07,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ. 50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.**

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



## (இ) கோரிக்கை எண் 37–பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37, பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மே.பா. காமராஜ் இருக்கையில் இல்லை. திரு. மே.பா. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன் இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ. இரா. மலையப்பசாமி இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம் இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.



**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். சக்ரபாணி இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. [illegible]களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் [illegible] பெறப்படுகிறது.

184530
சென்னை-600 009
நூலகம்

திரு. கா. கந்தசாமி இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால் இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எம். ராம்குமார் இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பொதுத் துறை பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.82,04,30,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஈ) கோரிக்கை எண் 41—பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41-பள்ளிக் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ. இரா. மலையப்பசாமி இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆர். கிருஷ்ணன் இருக்கையில் இல்லை. திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன் இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம் இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு.



**திரு. எ.வ. வேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச். எம். ராஜு.

**திரு. எச். எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

செல்வி க. பாலபாரதி இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு ஆர். சக்ரபாணி இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ. அசோகன் இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ் இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. பாரமலை இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜெ. அன்பழகன் இருக்கையில் இல்லை. திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ராம்குமார் இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால் இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சோ. இராசேந்திரன் இருக்கையில் இல்லை. திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.41,80,79,95,000/- மூலதனக் கணக்கில் ரூ.22,91,85,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.9,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (உ) கோரிக்கை எண் 44—தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி–பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44—தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி-பண்பாடு துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன் இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எம். ராம்குமார் இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால் இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



செல்வி க. பாலபாரதி இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாக கருதப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம் இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சோ. இராசேந்திரன் இருக்கையில் இல்லை. திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். சக்ரபாணி இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய 44ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 41,47,42,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஊ). கோரிக்கை எண் 47–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ் இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன் இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை இருக்கையில் இல்லை திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. மகேந்திரன் இருக்கையில் இல்லை. திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

செல்வி க. பாலபாரதி இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ. அசோகன் இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால் இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ராம்குமார் இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். சக்ரபாணி இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. கா. கந்தசாமி இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம் இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

பிற்பகல் *6-55*

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,16,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.111,20,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 7-4-2003 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6-58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்
-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

105. மானியக் கோரிக்கை எண் 44—தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

106. மானியக் கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003—2004. (தமிழ், ஆங்கிலம்)

107. மானியக் கோரிக்கை எண் 41 — பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003—2004. (தமிழ், ஆங்கிலம்)

108. மானியக் கோரிக்கை எண் 47 — இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003—2004. (தமிழ், ஆங்கிலம்)

109. மானியக் கோரிக்கை எண் 37 — பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003—2004. (தமிழ், ஆங்கிலம்)

110. மானியக் கோரிக்கை எண் 37—தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்.)

111. பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புக்கான திருத்தம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

112. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (பன்னிரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

113. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் பதிமூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)





## இணைப்பு I

(365 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 19—உயர் கல்வித் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

### முன்னுரை

"இளைஞர்களின் உயர் கல்வியில்தான் நாட்டின் அடித்தளம் அமைந்துள்ளது" என்று "தலைசிறந்த தத்துவஞானிகளின் வாழ்க்கை" எனும் தனது நூலில் தத்துவஞானி டயோஜீன் குறிப்பிட்டுள்ளார். 21 ஆம் நூற்றாண்டின் சவால்களைச் சந்திக்கவும், தனித்தியங்கும் அறிவாற்றல் பெறவும், பொருளாதாரம், சமூகம், பண்பாடு, அரசியல் ஆகிய துறைகளில் முன்னேறத் தேவையான பொறுப்பு மிக்க அறிவார்ந்த சிறப்புத் திறமைகள் பெற்றவர்களை உருவாக்கவும், தற்போது நிலவிவரும் உயர் கல்வியைச் சீரமைக்க வேண்டியுள்ளது. எனவேதான், இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் உலகெங்கிலும் உயர் கல்வியை மேம்படுத்துவது நாட்டின் தேவைகளில் ஒன்றாக விளங்கி வருகிறது. அதற்கிணங்க உயர் கல்வியை மேம்படுத்துவதே மாநிலத்தின் முக்கியமான முதன்மைத் தேவைகளில் ஒன்றாக தமிழக அரசு கருதுகிறது. உயர் கல்வித் துறைகளில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாகத் திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அவாவிற்கேற்ப உயர் கல்விக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

1.2 கோரிக்கை எண் 19—உயர் கல்வியின்கீழ் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.738.57 கோடிகளாகும். பொறியியற் கல்லூரிகளிலும், தொழில் நுட்பப் பயிலகங்களிலும் கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வசதி கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 72,235 ஆகும். தொழில் நுட்பப் பயிலகங்களில் மாணவர் சேர்க்கை 50,309 ஆகும்.

1.3 புதிய கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை வெறுமனே உயர்த்துவதைவிட, இருக்கின்ற நிறுவனங்களில் உள்ள வசதிகளை ஒன்று திரட்டி அவற்றின் தரத்தை உயர்த்துவதே இவ்வரசின் கொள்கையாக உள்ளது. இக்கொள்கையையொட்டி ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அண்ணா

பல்கலைக்கழகத்தை ஓர் இணைப்புவகைப் பல்கலைக்கழகமாக அரசு மாற்றியமைத்துள்ளது. புதிய தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலும், சந்தைகளின் தேவைக்கேற்பவும் பொறியியற் கல்வி பாடத் திட்டத்தை மேம்படுத்த இப்பல்கலைக்கழகம் முனையும். தொழில் நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் ஒன்றுக்கொன்று பயன்பெறும் வகையில் கலந்து செயலாற்ற பெரிதும் ஊக்கம் அளிக்கப்படும். இணைக்கப்பட்ட 234 பொறியியற் கல்லூரிகளையும் திறம்பட நிர்வகிக்க அண்ணா பல்கலைக்கழகம் தற்போதைய நவீன மின்னணுவியல் (E. Governance) உத்திகளைக் கையாண்டு வருகிறது.

*1.4* தொழில்நுட்பக் கல்வியைப் பொறுத்தவரை, பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர முறையை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. பொறியியற் கல்லூரி சேர்க்கைக்கான கலந்தாய்வினை, கூடுதல் மையங்களில் நடத்துவதோடு, இவ்வாண்டு விண்ணப்பங்களை ஆய்வு செய்து நுழைவுச்சீட்டு அளிப்பதற்கு வலைசார் முறையும் (Web enabled system) பின்பற்றப்படுகிறது. தற்போது தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் பொறியியற் கல்லூரிகளில் சேர்வதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் குறைக்கப்பட்டுள்ளதால் கூடுதல் மாணவர்கள் பயில்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. பொறியியற் கல்வி கற்க விரும்பும் தகுதி வாய்ந்த ஏழை மாணவர்களுக்கு நிதியுதவியினை தனித்தனியாக அவரவர் தகுதியின் அடிப்படையில் ஆய்வு செய்து அரசு அளிக்கிறது.

*1.5* சிறப்பு விடுதிகளில் உள்ளவர்கள், உடல் ஊனமுற்றோர், காதுகேளாதோர் மற்றும் மொரிஷியஸ் நாட்டைச் சேர்ந்த இந்தியர்கள் ஆகியோருக்கு தமிழ்நாட்டில் உள்ள பொறியியற் கல்லூரிகளில் சிறப்பு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் (முன்னாள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்) வேலை வாய்ப்புள்ள பாடப்பிரிவுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

*1.6* இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக எண்ணிக்கையில் தரமதிப்பீடு பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன. பல்கலைக்கழகங்கள் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகள் தேசிய மதிப்பீடு மற்றும் ஏற்பளிப்புக் குழுவின் (NAAC) தரமதிப்பீட்டைப் பெறவும், தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் தேசிய ஏற்பளிப்புக் குழுவின் (NBA) தரமதிப்பீட்டைப் பெறவும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிப்பதை அரசு தன் கொள்கையாகக் கொண்டுள்ளது



பாடத்திட்டங்களை மேம்படுத்தவும், கல்வி பயிற்றுவித்தல், பயிலுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்தவும் கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

*1.7* இளநிலை தட்டச்சுக்கான தட்டச்சுத் தேர்வில் கலந்து கொள்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி குறைக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே முதன்முறையாக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் பணியிட மாறுதலுக்கான வெளிப்படையான கொள்கையினை அறிமுகப்படுத்தியதை பொதுவாக அனைவரும், குறிப்பாக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களும் வரவேற்றுள்ளனர். அரசு அனுமதி பெறாத கட்டடங்களை தடுக்கவும், முறையின்றி வகைப்படுத்திய நிலங்களில் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் அமைப்பதைத் தடுக்கவும் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

*1.8* அண்மைக் காலத்தில், இளநிலை, முதுநிலை பட்டப் படிப்புகளிலும், பொறியியல் மற்றும் நிர்வாகப் படிப்புகளிலும் மகளிர் கூடுதலாக சேர்ந்து வருவது காணப்படுகிறது. ஆதிதிராவிட பழங்குடியின மகளிரை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் முதுநிலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அகில இந்திய அளவில் நடைபெறும் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். தேர்வுகளில் பெண்கள் சிறப்பாகப் பங்குபெறும் பொருட்டு சென்னை மற்றும் மதுரையில் இரு இலவச பயிற்சி மையங்கள் 2002-2003-ஆம் ஆண்டில் அரசால் தொடங்கப்பட்டுள்ளன.

*1.9* உலகம் முழுவதும் கொண்டாடப்படும் மகளிர் தினத்தை முன்னிட்டு, அன்னை தெரசா பல்கலைக்கழகத்துடன் அப்பகுதியில் உள்ள மகளிர் கல்லூரிகளை இணைத்து அப்பல்கலைக்கழகம் இணைப்பு வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டாண்டுகளில் அப்பல்கலைக்கழகத்தின் உள்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*1.10* திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள பிரிவினர் அதிக அளவில் கல்வித் தகுதி பெறுவதற்கான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தலைசிறந்த புலவரான "திருவள்ளுவர்" பெயரால், புதியதாக பல்கலைக்கழகம், 2002-2003 ஆம் ஆண்டில் வேலூரில் துவக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 4

1.11. அனைத்துத் தரப்பு மக்களும், குறிப்பாக இதுவரை பயனேதும் பெறாத பகுதியினர் (disadvantaged groups) உயர் கல்வி பெறத்தக்க வகையில் சென்னையில் "தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்", 2002-2003 ஆம் ஆண்டு துவக்கப்பட்டுள்ளது.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை—19, உயர் கல்வித் துறை என்ற தலைப்பின்கீழ் மொத்தச் செலவினத் தொகை ரூ. 738.57 கோடி ஆகும். இதில் ரூ. 14.19 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ. 724.38 கோடி, திட்டத்தில் சேராத செலவினமாகும்.

## நிதி ஒதுக்கீடு—2003-2004

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2059 | பொதுப் பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | .. | 563.40 | 563.40 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 181.05 | 58965.97 | 59147.02 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 208.65 | 12368.12 | 12576.77 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும் | 627.53 | .. | 627.53 |
| 2205 | கலையும் பண்பாடும் | | | |
| 104 | ஆவணக் காப்பகங்கள் | 6.95 | 328.88 | 335.53 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | .. | 18.93 | 18.93 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூக நலப்பணிகள் | .. | 163.97 | 163.97 |
| 2551 | மலைப்பகுதிகள் | 34.65 | .. | 34.65 |
| 3425 | இதர அறிவியல் ஆராய்ச்சி | 186.79 | .. | 186.79 |



2003 ஏப்ரல் 4]

| | | | | |
|---|---|---|---|---|
| 3454 | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரம் | | | |
| 110 | விவரச் சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் | .. | 28.80 | 28.80 |
| 2402 | கல்வி, போட்டி, விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 173.06 | 0.01 | 173.07 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | .. | 0..50. | 0..50 |
| | மொத்தம் | 1418.68 | 72438.58 | 73857.26 |

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டப்பணிகள்

| வ.எண் | திட்டப்பணிகளின் விவரம் | இறுதிநிலை செலவு | 2003-04-ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | **கல்லூரிக் கல்வி இயக்ககம்** | | |
| 1. | கல்லூரிக் கல்வி இயக்ககத்தை இயந்திரமயமாக்குதல் | 15.91 | 15.91 |
| 2. | பார்வைத் திறனற்ற மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி அளித்தல் | 17.61 | 17.61 |
| 3. | கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் | 3.00 | 3.00 |
| 4. | தற்போதுள்ள தொலைபேசி இணைப்பகத்தை மாற்றி புதிய இணைப்பகம் அமைத்து 4 புதிய இணைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 1.50 | 1.50 |
| | **தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்** | | |
| 5. | 22 அரசு பல்தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரிகளுக்கு கணினிகள் வாங்குதல் | 100.00 | 100.00 |
| 6. | சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பல்தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியில் மகளிர் விடுதி கட்டுதல் | 120.00 | 48.00 |

| | | |
|---|---|---|
| 7. கோயமுத்தூர் அரசு மகளிர் பல்தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரியில் மகளிர் விடுதி ஏற்படுத்துதல் | 80.00 | 32.00 |
| 8. பர்கூர் அரசு பொறியியற் கல்லூரியில் டிஜிட்டல் சிக்னல் பிராசசிங் ஆய்வகத்தை ஏற்படுத்துதல் | 30.50 | 28.34 |
| **அறிவியல் நகரம்** | | |
| 9. அறிவியல் நகரத்திலும் மாநில அளவிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆதாரங்கள் குறித்த அடிப்படைத் தகவல் தொகுப்பைத் தயாரித்தல். | 2.00 | 2.00 |
| 10. அறிவியல் நகரம் ஆராய்ச்சி ஆதரவு ஊதியம் வழங்குவது | 3.00 | 3.00 |
| **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்** | | |
| 11. அறிவாற்றல் உரிமை நாட்டும் உரிமப் பதிவு | | |
| 12. தொழில்நுட்பவியல் புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் பரவலாக்குதல் | 1.50<br>3.50 | 1.50<br>3.50 |
| **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்** | | |
| 13. X-Y மேடை போன்ற கூடுதல் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 26.00 | 26.00 |
| **தமிழ்நாடு ஆவணக் காப்பகம்** | | |
| 14. எழுதுபொருள் பிரிவிற்கும் முடிவுற்ற கோப்புகள் பிரிவிற்கும் தனியாகக் கட்டடம் கட்டுதல் | 4.00 | 4.00 |
| 15. தமிழ்நாடு ஆவணக் காப்பக வளாகத்தில் பாரம்பரியம் வாய்ந்த கட்டடங்களில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள் | 10.00 | 10.00 |
| மொத்தம் | 418.52 | 296.36 |

## 2. கல்லூரிக் கல்வி

உயர் கல்வியைத் தனியாக நிர்வகித்து, நவீன உத்திகளைப் பின்பற்றி வளர்ச்சி காணும் பொருட்டு முன்னர் இருந்த பொதுக் கல்வி இயக்ககத்திலிருந்து 1965 ஆம் ஆண்டு கல்லூரிக் கல்வி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. அண்மைக் காலமாக உயர் கல்வித் துறையில் உறுதியான மற்றும் வளர்ச்சிக்கான மாற்றங்கள் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல முன்னேறிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களால் உயர் கல்வித் துறையில் மிகவும் முன்னேற்றமடைந்த மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்கிறது. ஏற்பட்டுள்ளன. தமிழக



**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், கல்வியியல் கல்லூரிகளையும் சார்ந்த பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றுதல்**

2.2 அரசுக் கல்லூரிகளில் தரமான உயர் கல்வியை அளிக்கும் நோக்கத்துடன் அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும் கல்வியியல் கல்லூரிகளையும் அவை இணைவு பெற்ற பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக அரசு மாற்றியுள்ளது. இவ்வாறு உறுப்புக் கல்லூரிகள் ஆனதின் பயனாக இக்கல்லூரிகள் பல்கலைக்கழக மானியக் குழு, அறிவியல் தொழில் நுட்பத் துறை போன்ற மைய அரசு மற்றும் முகமைகளிடமிருந்து கணிசமான நிதி உதவி பெற்று கல்லூரி வளாகத்திலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஆய்வகங்களுக்கு நவீன உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் போதனை உபகரணங்கள் வாங்கவும், நூலக வசதிகளை மேம்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும்.

2.3 அரசு கல்லூரிகளை பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றிய இந்த அரசின் நடவடிக்கை உயர் கல்வி வளர்ச்சிக்கான காரணகாரியத் தொடர்புடைய நடவடிக்கை என்பதுடன் இதன் மூலம் இக்கல்லூரிகளுக்கு ஓர் உயர் நிலைத்தகுதியும் கிடைக்கின்றது. மேலும் அரசின் இந்த நடவடிக்கையின் காரணமாக பல்கலைக்கழகங்களில் உள்ள அறிஞர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதுடன், மைய அரசு சார்ந்த பல முகமைகளிடமிருந்து கூடுதலாக மானியம் பெறுவதற்கும் வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்கிறது. உலகமயமாக்குதலின் சவால்களைச் சந்திக்கும் விதத்தில் இக்கல்லூரிகளை மேம்படுத்தவும் வகை செய்யும். அரசின் இந்த நடவடிக்கை பல்கலைக் கழகங்களை சிற்றூர்களுக்குக் கொண்டு செல்வதுடன், அங்குள்ள மாணவர்களும் பல்கலைக்கழங்களில் உள்ள வசதிகளைப் பெறுவதற்கு வழிவகுக்கும். காலப்போக்கில் இந்த உறுப்புக் கல்லூரிகள் உலகமயமாதலின் சவால்களைச் சந்திக்கும் விதத்தில், தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு தரமான உயர் கல்வியை வழங்கும் முன்மாதிரிக் கல்வி நிறுவனங்களாக வளர்ச்சியடையும்.

2.4 அண்மையில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கல்லூரிகளின் செயல்பாட்டினையும், பல்கலைக்கழகங்களின் கல்லூரி தேவையினையும் ஆய்வு செய்தது. மேம்பாட்டுக்குழுத் தலைவர்கள் உறுப்புக் கல்லூரிகளின் முதல்வர்களோடு ஒருங்கிணைந்து இக்குழுவினிடம் உரிய முறையில் இதுகுறித்து

எடுத்துரைத்தனர். இதன் பயனாக இந்த ஐந்தாண்டு திட்டக் காலத்தில் [2003 ஏப்ரல் 4
உறுப்புக் கல்லூரிகள் ரூ. 20.00 முதல் ரூ. 35.00 இலட்சங்கள் வரை
நல்கை பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. முதல் தவணை
பல்கலைக்கழக மானியக் குழுவால் விரைவில் அளிக்கப்படும்.
பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு மற்றும் பிற முகமைகளிலிருந்து
கல்லூரிகள் இன்னும் பல வகைகளில் உதவிபெற இயலும். எனவே
பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு மற்றும் பிற முகமைகளுடன்
இணைந்து மேலும் நிதியுதவி பெறத் தகுதியான துறைகளைக் கண்டறிந்து
வருகிறார்கள்.

## புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல்

2.5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல்
கல்லூரிகளை அவை சார்ந்த பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக
மாற்றியதன் நோக்கம், அக்கல்லூரிகளில் புதிய வேலைவாய்ப்புள்ள
பாடப்பிரிவுகளைத் தொடங்குவதாகும். இதன் அடிப்படையில்,
2003-2004 கல்வியாண்டில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பில் வேலை
வாய்ப்புள்ள பாடப்பிரிவுகளைத் தொடங்க குறைந்தபட்சம் பத்து புதிய
பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கான கருத்துருக்களை அளிக்குமாறு
அனைத்து முதல்வர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒளிக்காட்சி
(Videography), வரவு-செலவுத் திட்டம் தயாரித்தல், வரிமதிப்பீடு செய்தல்,
நீர்வாழினக் காட்சியகம் அமைத்தல் போன்ற வேலைவாய்ப்பு
பாடப்பிரிவுகளைத் தொடங்க சில கல்லூரிகள் முயற்சிகள் எடுத்துள்ளன.

## தமிழ்நாட்டில் கல்லூரிகளின் தர நிர்ணயம் (NAAC)

2.6 அனைத்துக் கல்லூரிகளும், டிசம்பர் 2003 இறுதிக்குள் தேசிய
தகுதி மற்றும் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்படவேண்டும்
என பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு நிர்ணயம் செய்துள்ளது.
தமிழ்நாட்டில், அதிக எண்ணிக்கையில், கல்வி நிறுவனங்கள் தேசிய
தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள
நிலையில், நாட்டிலேயே தர நிர்ணயம் செய்யப்பட்ட அதிக
கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு
பெற்றுள்ளது. இன்றைய தேதியில் தமிழ்நாட்டில் 68 கல்லூரிகள் தேசிய
தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவால், தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.
இதில் 26 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், 42 அரசு உதவிபெறும்
கல்லூரிகளும் அடங்கும். பல்கலைக்கழக மானியக் குழுவால்
நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தர நிர்ணயம் செய்யப்படாத
பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளையும், மதிப்பீட்டிற்கு உட்படுத்த
தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசுக் கல்லூரிகள் உறுப்புக்



2003 ஏப்ரல் 4]
கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளதால் இம்முயற்சி துரிதப்படுத்தப்படும்
வாய்ப்புள்ளது.

## மாநிலத்தில் தன்னாட்சிக் கல்லூரிகளின் பங்கு

2.7 கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு
முன்னிலை வகிக்கிறது. நாடு முழுவதும் சுயாட்சி வழங்கப்பட்ட 131
கல்லூரிகளில், 44 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அது மொத்தத்தில்
33.58 சதவிகிதம் ஆகும். தமிழ்நாட்டில் 1978-79 முதல் கல்லூரிகளுக்கு
தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் தமிழ்நாட்டில்
8 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கும், 36 அரசு உதவி பெறும்
கல்லூரிகளுக்கும் தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டுள்ளது. கல்வித்
தரத்தை மேம்படுத்தும் விதத்தில் கல்வித் திட்டத்தில் புதுமையையும்,
ஆக்கபூர்வமான புதிய முயற்சிகளையும் மேற்கொள்ள தன்னாட்சித்
தகுதி, இக்கல்வி நிறுவனங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறது. கல்லூரிகளுக்கு
தன்னாட்சி வழங்குதல், தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச்
செயல்படுத்தப்பட்டுள்ளது. அதிக அளவிலான கல்லூரிகள் தன்னாட்சி
பெற அரசு தொடர்ந்து தன்னாட்சி முறைக்கு ஆதரவு அளித்து வரும்.
மானியத் தொகைகளை உயர்த்துமாறும், தகுந்த நேரத்தில் அவற்றை
வழங்குமாறும், பல்கலைக்கழக மானியக் குழுவினை அரசு
கேட்டுக்கொண்டுள்ளது.

## கலந்தாலோசித்தல் முறையில் ஆசிரிய/ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கான பொது மாறுதல்

2.8 அரசின் கொள்கை முடிவின்படி, ஆசிரிய பணியாளர்களின்
பொதுமாறுதல் 2002-2003-ஆம் ஆண்டிலும் கலந்தாலோசித்தல்
திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தினால் 134 கல்லூரி
ஆசிரியர்களும், 32 முதல்வர்களும் பயன்பெற்றனர்.

## வேலைவாய்ப்பு மையம் மற்றும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டல்

2.9 அரசின் முடிவுக்கு ஏற்ப வேலைவாய்ப்பு வழங்கும் மற்றும்
ஆலோசனை வழங்கும் மையங்கள் அனைத்து உறுப்புக் கல்லூரிகள்
மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில் இதற்கென வகுக்கப்பட்ட
வழிகாட்டி நெறிமுறைகளின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.
2002-2003-ஆம் ஆண்டில் இம்மையங்கள் திறம்படச் செயல்பட்டு
வருகின்றன. எடுத்துக்காட்டாக, எத்திராஜ் கல்லூரி, மாநிலக் கல்லூரி,

இராணி மேரி கல்லூரி மற்றும் லயோலா கல்லூரி ஆகியவற்றில் மாணவர்களை வேலையில் அமர்த்தும் பிரிவுகள் திறம்படச் செயல்படுகின்றன. 40 நிறுவனங்கள்/தொழிற்சாலைகளினால் கல்லூரி வளாகத் தேர்வு மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

**மழை நீர் சேகரிப்புத் திட்டம்**

2.10 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மழைநீர் சேகரிப்பு தொடர்பாக நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள அரசுக் கட்டடங்களில், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை உடனடியாக உருவாக்க முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் அனைத்து பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில், பொதுப் பணி மற்றும் நகராட்சி நிர்வாகத் துறையின் ஒத்துழைப்புடன் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை நிர்மாணிக்க அறிவுறுத்தப்பட்டது. 2002-2003 ஆண்டில் இத்திட்டம் சுவீகரிக்கப்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இந்திய ஆட்சிப் பணி/இந்திய காவல் பணித் தேர்வுகளில் பங்குபெற பெண்களுக்கான பிரத்தியேக இலவசப் பயிற்சி**

2.11 அனைத்திந்திய பணியின்கீழ் வரும் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். தேர்வுகளில் பெண்கள் சிறப்பாகப் பங்கு பெறும் பொருட்டு, சென்னை, இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி) மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் (தன்னாட்சி) கல்லூரியில் இரு பயிற்சி மையங்கள் அரசால் நிறுவப்பட்டு, பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு பயிற்சி மையத்தில் 60 மாணவிகள் வீதம் இத்திட்டத்தினால் பயன் பெறுவர்.

**தமிழ் வழி பயிலும் மாணவர்/மாணவியர்க்கு ஊக்கத் தொகை**

2.12 இத்திட்டத்தின்கீழ் இளங்கலை/இளமறிவியல் பாடங்களை தமிழ் வழியில் பயிலும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் (முன்னாள் அரசுக் கல்லூரிகள்) மற்றும் நிதியுதவி பெறும் கல்லூரிகளின் மாணவ/மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.400 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை தமிழ் வழிப் பாட வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் அவர்களுடைய இனம், ஜாதி, மதம் மற்றும் பெற்றோர் ஊதியத்தைக் கணக்கில் கொள்ளாமல் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2002-2003 ஆம்



ஆண்டில் 32,662 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.1,30,64,800 செலவு செய்யப்பட்டுள்ளது.

**ஏழை மாணவிகளுக்கு இலவசப் படிப்பு (பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவச படிப்புத் திட்டம்)**

2.13. இந்நலத் திட்டத்தின்கீழ் இளநிலை பட்டப்படிப்பு பயிலும் ஏழை மாணவிகளின் சாதி, இனம் போன்றவற்றைக் கணக்கில் கொள்ளாமல் பெற்றோருடைய ஆண்டு வருமான வரம்பு ரூ.24,000/-க்கு மிகாமலிருந்தால் அவர்கள் பயிற்றுவிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.65.00 இலட்சத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**மாநில ஆங்கில நிறுவனம் (தன்னாட்சி)**

2.14 மாநில ஆங்கில நிறுவனம், கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கு பயிற்சித் திட்டங்களை அவ்வப்போது நடத்துகிறது. மேலும் பட்டவகுப்பு மற்றும் முதுகலைப் பட்டவகுப்புகளில் ஆங்கில இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்**

2.15 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் (முன்னாள் அரசுக் கல்லூரிகள்) பயிலும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களில் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவர்கள் மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காக வகுப்பு நேரம் முடிந்த பிறகும், வார இறுதி நாட்களிலும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

[2003 ஏப்ரல் 4

## ஆசிரியர் பயிற்சிக் கல்வியை (பி.எட்.) ஊக்குவித்தல்

2.16 தமிழ்நாட்டில் தற்பொழுது 22 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் 7 கல்லூரிகள் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாகும். இவற்றுடன் 14 அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், ஒரு சுய நிதி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. 7 பல்கலைக்கழக உறுப்புக் கல்வியியல் கல்லூரிகளில், 2 கல்லூரிகள் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன. ஆசிரியர் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் தமிழக அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. 1998 ஆம் ஆண்டிலிருந்து பி.எட். பட்ட வகுப்பில் சேருவதற்கான பொது நுழைவுத் தேர்வு ஒன்றினை தமிழக அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. 2002-2003 ஆம் கல்வியாண்டில் 32,135 மாணவ மாணவியர் இந்த பொது நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டனர். அரசு கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தேசிய ஆசிரியர் கல்விக்கழகம் (N.C.T.E.) அமைப்பிலிருந்து 2003-2004 ஆம் ஆண்டில் அதிக அளவில் நிதி உதவி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.17 ஆசிரியர் பயிற்சிக் கல்விக்கான பாடங்கள் வெகு காலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. பல்கலைக்கழகங்கள் வழியாக ஆசிரியர் பயிற்சிக் கல்விக்கான பாடங்களைத் திருத்தியமைக்க அரசு நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.

## கல்லூரி ஆசிரியர்கள் வினைத்திறம் மேம்பாட்டுச் செயல்முறைத் திட்டம்

2.18 கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஆய்வுத் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும், அவர்களை தற்கால வளர்ச்சி நிலைக்கு ஆயத்தம் செய்யும் வகையிலும் பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் எம்.பில்/பி.எச்டி. பட்டப் படிப்புகள் படித்திட ஆசிரியர்களை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. நான்கு கல்லூரி ஆசிரியர்களுக்கு இதுவரையில் தடையில்லாச் சான்று அரசினால் அளிக்கப்பட்டு அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று தங்களுடைய ஆய்வுகளை வெளியிடவும் அரசு வழிவகை செய்துள்ளது.



2003 ஏப்ரல் 4]

## இடஒதுக்கீட்டுக் கொள்கையினைக் கடைப்பிடித்தல்

2.19 பல்வேறு நிலைகளில் தமிழகத்தில் இயங்கிவரும் நிதியுதவி பெறும் கல்லூரிகள் இடஒதுக்கீட்டுக் கொள்கையை மாணவர்கள் சேர்க்கையின்போது கடைப்பிடிக்காதது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பல்வேறு இன மாணவர்களுக்கு சமூக நீதியினை வழங்கிடும் பொருட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்த அரசு முனைப்புடன் உள்ளது. இதன் நோக்கமாக மிகவும் பிற்படுத்தப்பட்ட (மற்றும்) சீர்மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை அவர்கள் அடைந்திடும் வகையில், தக்கதொரு நிர்வாக வழிமுறை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

## இராமநாதபுரம் மகளிர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கு நிதியுதவி

2.20 இராமநாதபுரத்திலுள்ள பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் உள்ள நிர்வாக மற்றும் கல்விக்கூடப் பகுதியில், வேதியியல் மற்றும் உணவு அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வகங்கள் கட்ட ரூ.50.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு இக்கல்லூரிக்கு மேம்பாட்டு நிதி அளிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

2.21 மேலும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் நபார்டு வங்கி மூலம் கடன் பெற்று மேம்படுத்தப்படும்.

2.22 கீழ்க்கண்ட ஆறு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் (முன்னாள் அரசுக் கல்லூரிகள்) ரூ.75.00 இலட்சம் செலவில் எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. பாடவகுப்புகள் 2003-2004 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்படும்.

## எம்.பி.ஏ. பாடப்பிரிவு

1. அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி, மதுரை
2. அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி
3. முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி, வேலூர்.

[2003 ஏப்ரல் 4

**எம்.சி.ஏ. பாடப்பிரிவு**

4. காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக் கல்லூரி, சென்னை.

5. அரசு ஆடவர் கலைக் கல்லூரி, சேலம்-7.

6. அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம்.

(அரசுக் கல்லூரிகள்—தற்போது பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்.)

2.23. கணினி பாடம் பயிலாத மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை, 60 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்பட தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தை அரசு நியமித்துள்ளது.

2.24. வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில், கணினிப் பயிற்சி பாடத் திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையும், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களை வேலைவாய்ப்புக்காக அங்கீகரித்துள்ளது.

2.25. பார்வையற்ற மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு ரூ.17.61 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

2.26. கல்லூரிக் கல்வி இயக்ககத்தை இயந்திரமயமாக்குதலுக்கு ரூ.15.91 இலட்சமும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூ.3.00 இலட்சமும், தற்போதுள்ள தொலைபேசி இணைப்பகத்தை மாற்றி புதிய இணைப்பகம் அமைத்து, 4 புதிய இணைப்பு வசதிகள் பெற ரூ.1.50 இலட்சமும் 2003-2004 ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.27. உயர் கல்விக்குச் செய்யும் முதலீட்டினை மனிதவள மேம்பாட்டுக்குச் செய்யும் முதலீடு என்பதை இவ்வரசு முழுமையாக உணர்ந்துள்ளது. இம்முதலீடு காலப்போக்கில் நற்பயன் நல்கும். மேலும் உலகளாவிய அளவில் இந்தியத் தொழில் துறையினைப் பங்கேற்கச் செய்வதற்கான சரியானதொரு பின்புலமாக அமையும்.



2003 ஏப்ரல் 4]

**பெண்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய பாட வகுப்புகள் துவங்குதல்**

2.28. பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏதுவாக அரசுக் கல்லூரிகளில் 2003-2004 ஆம் கல்வியாண்டு முதல், சோதனை முறையில் அழகுக் கலை மற்றும் ஆடை வடிவமைப்பு, அலங்கார உள்வடிவமைப்பு மற்றும் உணவக ஊட்ட நெறிமுறை போன்ற குறுகிய காலப் பட்டய வகுப்புகளைத் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3. பல்கலைக்கழகக் கல்வி**

உயர் கல்வித் துறையின் ஆளுகையில் கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்கள் செயல்படுகின்றன:—

1. அண்ணா பல்கலைக்கழகம்
2. சென்னைப் பல்கலைக்கழகம்
3. அண்ணாமலை பல்கலைக்கழகம்
4. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
5. பாரதியார் பல்கலைக்கழகம்
6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
7. அழகப்பா பல்கலைக்கழகம்
8. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
9. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
10. பெரியார் பல்கலைக்கழகம்
11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
13. அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

**சென்னைப் பல்கலைக்கழகம்**

3.2. 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் உயர் கல்வித் துறையில் மிகப்பெரிய பணியை ஆற்றியுள்ளது. சமுதாயத் தேவைகளுக்கேற்றபடி புதிய பாடப் பிரிவுகளைப் புகுத்துவதில் அது ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருந்து வந்துள்ளது. புதுமையானதும் உயர்நோக்கங்களைக் கொண்டதுமான பாடப் பிரிவுகளைப் புகுத்தி உயர் கல்வித் துறையின் முன்னோடியாக

விளங்கும் சென்னைப் பல்கலைக்கழகம் இந்தியாவின் உயர் கல்வி வரைபடத்தில் முன் வரிசையில் இடம் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லை சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் என்ற மூன்று மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

**பாடங்களை மாற்றியமைத்தல், வேலைவாய்ப்பிற்கான பாடப்பிரிவுகள் போன்ற கல்வி சார்ந்த திட்டங்கள்**

*3.3.* சமுதாயத் தொடர்புடையதும், பயனுடையதுமான உயர் நிலைக் கல்வித் திட்டம் என்ற இரு நோக்கக் கல்வியை சென்னைப் பல்கலைக்கழகம் 2003-20004-ஆம் கல்வியாண்டில் முதுநிலை மூலக்கூறு அறிவியல், முதுநிலை வணிகவியல் பன்னாட்டு வணிகம், முதுநிலை வணிக ஆட்சி இயல் (முழு நேர, மாலை நேரத் திட்டம்), முதுநிலை மூளை நரம்பியல் ஆகிய நான்கு பிரிவுகளை, தற்சார்புப் பாடப் பிரிவுகளாக அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்து இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புப் பிரிவுகளும் வேலைவாய்ப்பை அளிக்கக் கூடியவைகளாக மாற்றி அமைக்கப்படுகின்றன. மேலும் அவை 2003-2004 கல்வியாண்டிலிருந்து தகவெண் முறையில் பருவப் படிப்புகளாக நவீனப்படுத்தப்படுகின்றன. 2003-2004-லிருந்து இணைக்கப்பட்ட கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத் துறைகளிலும் சான்றிதழ், பட்டயம், பட்ட மேற்படிப்புப் பட்டயம், இளநிலைப் பட்டம் மற்றும் முதுநிலைப் பட்டம் ஆகிய நிலைகளில் 54 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலே கூறப்பட்ட அனைத்துப் புதிய பாடப் பிரிவுகளும் தகவெண் அடிப்படைப் புள்ளித் திட்டத்தின்கீழ் வழங்குவதோடு பல்கலைக்கழக அனைத்துத் துறைகளும் முதுநிலைப் படிப்பினை மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்யும் வகையில் அத்திட்டத்தினை வழங்குகின்றன.

*3.4.* சென்னைப் பல்கலைக்கழகம், அஞ்சல்வழிக் கல்வி மூலமாக காவல் துறை ஆட்சியியலில் ஒரு புதிய சான்றிதழ்ப் படிப்பையும், பட்டயப் படிப்பையும் 2003-2004-ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தி இருக்கிறது. இணைப்புக் கல்லூரிகளில் வழங்கப்படும் அனைத்துப் பாடப் பிரிவுகளும் அஞ்சல்வழிக் கல்விக்கும் பொருந்தும்.

*3.5.* நுண்ணுயிரியல், உயிர்வேதியியல் மற்றும் மூலக்கூறு உயிரியல், மருத்துவ உயிர்வேதியியல், அகச்சுரப்பி இயல், விலங்கியல், தாவரவியல், மரபணுவியல், கனிம வேதியியல், பயன்பாட்டு நிலவியல்,



நிலவியல், படிகவியல் மற்றும் உயிர் இயற்பியல், புவியியல் ஆகிய துறைகளுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நவீனத் தளவாடங்களையும் பயன்படு பொருள்களையும் வாங்குவதற்கு நிதியளிக்கப்பட்டுள்ளது. வெளிப்படையான பல்கலைக்கழகத் தேர்வு முறையைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மறுமதிப்பீடு மூலமும், விடைத்தாள்களின் ஒளி நகலினைப் பெறுவதன் மூலமும் மாணவர்கள் தங்களது செயலாக்கம் குறித்த மதிப்பீட்டு முறையினைத் தெரிந்துகொள்ளும் உரிமையைப் பெறுவார்கள்.

*3.6.* பல்கலைக்கழக மானியக் குழு மிகச்சிறந்த தகுதியுடைய பல்கலைக்கழகம் என்ற தகுதியை சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு அளித்து, இத்திட்டத்தின்கீழ் முதன்மை சிறப்புத் தகுதியாக பல்கலைக்கழகத்தால் முன்னேற்றம் செய்ய வேண்டிய முக்கியப் பகுதியாக மூலிகை அறிவியல் பாடத்தைத் தேர்வுசெய்து, இதற்கென ஐந்து வருட காலத்திற்கு ரூ.30.00 கோடி வழங்கியுள்ளது. மேலும் ஒரு குழுவின் மூலம் ஆய்வு செய்த பின்னர், நிதி ஒதுக்கீட்டினை 70 சதவீதமான ரூ.21.00 கோடியை ஒட்டுமொத்த பல்கலைக்கழக வளர்ச்சிக்கும், 30 சதவீதமான ரூ.9.00 கோடியை மூலிகை அறிவியல் போன்ற தேர்ந்தெடுத்த முக்கிய பகுதிக்கும் மாற்றியமைத்திட பல்கலைக்கழக மானியக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

*3.7.* நீண்டநாள் எதிர்பார்ப்பான செனட் ஹவுஸின் புனர் நிர்மாண வேலைகள் துவக்கப்பட்டுள்ளன. ஆங்கிலோ சார்சானிக் முறையில், பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்ட மாநிலத்திலேயே முதன்மையான இந்நினைவுச்சின்னம் பழுதடைந்த நிலையில் உள்ளது. இந்நிலையை மாற்ற பொதுமக்கள், உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக நிதி ஆகியவை மூலம் செனட் ஹவுஸின் புனர் நிர்மாணத்திற்காக பல்கலைக்கழக நிர்வாகம் ரூ.3.25 கோடியை நிதியாகத் திரட்டியுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம் வேலைவாய்ப்புத் திறன் கொண்ட பல்வேறு பாடங்களை வழங்கி வருகிறது. அஞ்சல் வழிக் கல்வி முறை மூலம் 2003-2004ஆம் கல்வியாண்டில் வழங்கப்படும் நான்கு முதுகலை பாடப்பிரிவுகளில், மூன்று முதுகலை பாடப்பிரிவுகள் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு துவக்கப்பட உள்ளன. மத்திய அரசின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பல்கலைக்கழகத் துறைகள் பல்வேறு

பாடப்பிரிவுகளுக்கு வெளிநாட்டு மாணவர்களைச் சேர்ப்பது குறித்த வழிமுறையை பல்கலைக்கழக மானியக் குழு வகுத்துள்ளது. இந்திய கலாச்சாரத் தொடர்பு மன்றம் மற்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் நடைமுறையில் உள்ள விதிகளைப் பின்பற்றி பல்வேறு பாடப்பிரிவுகளுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். வெளிநாட்டு மாணவர்களின் பொருளாதார நிலை மற்றும் சார்ந்த நாடு அடிப்படையில் குறிப்பாக SAARC மாணவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு படிப்புக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

3.8. "டயாக்யூர்" எனும் மூலிகை மருந்தின் சர்க்கரை நோய் எதிர்ப்புத் தன்மை குறித்து (மருந்தியல் மற்றும் சுற்றுப்புற நச்சியல்) துறை தயாரித்த சோதனை அறிக்கையைப் பயன்படுத்துவதற்கான பங்குவிகித உரிமைக்காக (Royalty) பல்கலைக்கழகம் அம்ருதாஞ்சன் தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் இணைப்பு வகைக் கல்லூரிகளில் பருவமுறைப் பாடத் திட்டமும் பல்கலைக்கழகத் துறைகளில் விருப்பு அடிப்படையிலான பாடப்பிரிவினைத் தேர்ந்தெடுக்கும் நவீன திட்டத்தை அறிமுகப்படுத்த இப்பல்கலைக்கழகம் முனைந்துள்ளது. பல்கலைக்கழகத் துறைகளில் சுயசார்பு பாடத் திட்டங்களை அறிமுகப்படுத்துவது ஒரு திருப்பு முனையான முடிவாகும். இதன் மூலம் பெரிதும் உகந்த அளவில் இந்த பாடத் திட்டங்களை நடத்துவதற்கான நிதியைப் பெற முடியும். மேலும் சமூகம், வாணிபம் மற்றும் தொழிற்துறை ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களின் உட்பொருளை நவீனமயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

3.9 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதன் தோற்றத்திற்கும், சீர்மிகு வளர்ச்சிக்கும் செட்டிநாடு அரசர் பெருந்தகை டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் தொலைநோக்கும், நுண்மதியும், கருணை உள்ளமுமே மூலகாரணங்களாகும். தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரக் குழுவினால் தரமதிப்பீடு செய்யப்பட்டு, நான்கு நட்சத்திரத் தகுதியினைப் பெற்றுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, நிறைவான உள்ளுறை வசதிகளுடன்,



உடனுறை பல்கலைக்கழகமாக ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நாட்டிலேயே மூன்றாவது பெரிய பல்கலைக்கழகமாக வளர்ந்தோங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் 48 துறைகள் இயங்கி வருகின்றன. இப்பல்கலைக்கழகம் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பட்டப் படிப்புகளை 2002-2003 ஆம் கல்வியாண்டில், 27 பாடத்திட்டங்களில் தொடங்கியுள்ளது. இவற்றில் சேர மாணவ மாணவியர் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

3.10. தெரிந்தெடு நன்மதிப்பீட்டு முறைத்திட்டத்தில், மூலாதாரப் பாடங்களும், விருப்பப்படி தேர்வு செய்துகொள்ளும் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இதனால், இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ மாணவியர் புதிய நூற்றாண்டின் அறைகூவலை எதிர்கொள்ள இயலும். மேலும் இப்பல்கலைக்கழகத்தின் அனைத்துப் புலங்களின் பாடத்திட்டங்களிலும் கணினி பற்றிய பாடங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. மேலும் பல புதிய பட்ட மற்றும் பட்டய வகுப்புகளான எம்.பார்ம் தரக்காப்புறுதி, எம்.எஸ்ஸி-கடல் உயிர் தொழில்நுட்பம், எம்.எஸ்ஸி-தாதியியல், எம்.இ.-கணினி இயல் மற்றும் தொழில்நுட்பம், யோகா மற்றும் தியான பட்டயப்படிப்பு, பல்மருத்துவத்தில் சான்றிதழ் படிப்பு ஆகியன தொடங்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் பொறியியல் புலத்தில், மாணவர்களின் திறமையையும், அவர்தம் தொழிலுக்குத் தேவையான சிறப்புத் தகுதிகளையும் மேம்படுத்தும் வகையில், வேலையமர்வு மற்றும் பயிற்சிப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு, மாணவர்களின் தொழிற் தேர்வுக்கும், மேற்படிப்பிற்கும் உதவி வருகின்றது. மேலும் பருவகால விடுப்பின்போது, உடனுறைப் பயிற்சிக்கும், வளாக நேர்காணல் மூலம் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும் மாணவர்கட்கு உதவுகின்றது. கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் பணிக்கு வழிகாட்டும் ஆலோசனைகளையும் நடத்துகின்றது.

3.11. சமுதாயத்தில் நலிவடைந்தோரின் உயர்விற்கான பல்வேறு திட்டங்களை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள, கிராம முன்னேற்ற மற்றும் நலிவடைந்தோர் உயர்வு மையம் செயல்படுத்தி வருகின்றது. விவசாயிகளின் சந்திப்பு, நிலச்சார்பற்ற பிரிவினருக்குப் பயிற்சி, செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், ஊராட்சி ஒன்றியத்தின் உதவியுடன் பயிற்சியளித்தல், சிறு கட்டட நிர்மாணங்களை மேற்கொள்ளுதல், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தின் பயிற்சி மற்றும் கிராமங்களில் சாலை அமைத்தல், தரிசுநில மேம்பாடு, வேலைவாய்ப்பை

உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் ஆகியவை இந்த மையத்தின் திட்டங்களில் அடங்கும். பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆஸ்திரேலியாவில், சிட்னி நகரில் அமைந்துள்ள தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயலாற்ற ஒப்பந்தமிடப்பட்டுள்ளது. கடல் உயிரியல் துறையும் கடல் ஆராய்ச்சியில் துரித முன்னேற்றம் அடைந்து, தனது சாதனைகளால், உலக வரைபடத்தில் இடம் பிடித்துள்ளது.

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

*3.12.* *1966* ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் 7 மாலை நேரக் கல்லூரிகள் உள்ளிட்ட 109 கல்லூரிகள் (9 தன்னாட்சிக் கல்லூரிகள்) இணைக்கப்பெற்றுள்ளன. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் (UGC) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் உயிரியல் புலம் மரபுத் தொகுவியல் உயராய்வு மையமாக (Centre for Excellence in Genomics) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் ஆய்வு மற்றும் கல்வித் திறன்கள் மாநிலத்தின் பொருளாதார மற்றும் சமூக நலத்தின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் வழி நடத்தப்படுகின்றன. இந்த இலக்கை எட்டுவதற்காகப் பல்கலைக்கழகத் துறைகளில் வலுவான ஆய்வு அடித்தளம் உருவாக்கப்படுகிறது. உலகமயமாக்கும் கொள்கை முன்வைக்கும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் பல்துறை சார்ந்த ஆய்வு விரைவுபடுத்தப்படுகின்றது. பல்கலைக்கழகத்தின் அனைத்து முதுகலைப் படிப்புகளும் விருப்ப அடிப்படையிலான பாட மதிப்பெண் முறையின்கீழ் நடத்தப்படுகின்றன. இம்முறையில் மாணவர்கள் ஒரு புலத்திலிருந்து வேறு புலத்திற்குச் சென்று தமக்கு விருப்பமான பாடங்களைத் தேர்ந்து பயின்று தமது தனிப்பட்ட வேலை வாய்ப்புத் திறனை வளர்த்துக்கொள்ள முடிகிறது. முதுகலை மரபுத் தொகுவியல், கருவியியல் ஆகிய இரண்டு புதிய படிப்புகள் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

*3.13.* கிராமப்புற இளைஞர்களின், குறிப்பாகப் பெண்களின் நலன்களை முன்னிறுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சார்பாக ஆண்டிப்பட்டியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு



புதிய கல்லூரி துவங்கப்பட்டுள்ளது. மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பு கணினி பயன்பாடுடன் கூடிய வணிகவியல், வர்த்தக பொருளியல் மற்றும் கணிதம் ஆகிய நான்கு இளநிலை வகுப்புகளில் 321 மாணவர்கள் பயில்கின்றனர். இப்பகுதியிலுள்ள மக்கள் நலன்களை மேம்படுத்தும் வகையில் நாட்டு நலப் பணித் திட்டம், வயது வந்தோர் கல்வித் திட்டம், இளைஞர் நலத் துறை ஆகியவற்றைப் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயக்கி வருகிறது. வயது வந்தோர் கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் பல வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 314 மாணவர்கள் இப்பயிற்சிகளின் மூலம் பயன் பெற்றுள்ளனர். பல்கலைக்கழக இளைஞர் நலத் துறை, இந்திய ஆட்சிப் பணி (IAS) மற்றும் பிற போட்டித் தேர்வுகளில் பங்கேற்பதற்காகச் சிறுபான்மையினருக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறது. இதேபோல ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கும் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வகுப்புகளை இத்துறை நடத்தியுள்ளது.

*3.14.* பல்கலைக்கழகத்திலுள்ள ஆசிரியப் பணியாளர் கல்லூரி, 187 கல்லூரி ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்துள்ளது. தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் இச்சூழலில் அதற்கேற்ற அறிவாற்றம், திறனும் பெற்று பல்கலைக்கழகம் அளித்துவரும் கல்விச் சேவையின் தரத்தை உயர்த்துவதற்காக தென் மாவட்ட பல்கலைக்கழக நிர்வாகப் பணியாளர்களுக்கு புதுமையான ஒரு பயிற்சி அளிக்கப்பட்டது. மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையிலும், தனது ஆராய்ச்சியினையும், கல்வி மேன்மையினையும் முழுமையான அளவில் பயன்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் முனைந்துள்ளது. தற்போது 19 தேசிய மற்றும் சர்வதேச முகமைகளின் ரூ.11.7 கோடி நிதியுதவியோடு 76 ஆராய்ச்சித் திட்டங்களை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது. கற்பித்தலிலும், ஆராய்ச்சியிலும் பல்கலைக்கழகம் புரிந்துள்ள சாதனைகளின் அடிப்படையில் தனிச்சிறப்பு மையம் என்று பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு ரூ.5.00 கோடி நிதியை நல்கியுள்ளது. மேலும் வேதியியல், உயிரியல், உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் இயற்பியல் பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை ரூ.2.2 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

### எதிர்காலத் திட்டங்கள்

3.15. உலகளாவிய அளவில் போட்டியிடுவதற்கு தன்னிடமுள்ள நிதியாதாரங்களை தகுந்த முறையில் பயன்படுத்தி கீழ்க்கண்ட செயல்பாடுகளில் பல்கலைக்கழகம் முனைப்புடன் செயலாற்ற உள்ளது:-

**கற்பித்தல்**

கணினி வலைய வழிக் கல்வி, பல்துறைசார்ந்த கல்வி, முறையான மற்றும் தொழில் சார்ந்த கல்வியினை வலுப்படுத்துதல்.

**ஆராய்ச்சி**

தொழில் துறை பல்கலைக்கழகத் தொடர்பினை வலுப்படுத்துதல், நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், முனைப்பான ஆய்வு மற்றும் மரபுசார் உயிரியியல், உயிரியியல்-தகவல் தொழில்நுட்பம், மருந்து வடிவம், நுண்ணணு தொழில்நுட்பம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி.

**விரிவாக்க செயல்பாடுகள்**

மகளிர் ஆற்றல் மேன்மை சார்ந்த மற்றும் சமுதாயத்தில் ஊனமுற்றோருக்கான தொழிற் பயிற்சி மற்றும் ஆலோசனைகள்.

### பாரதியார் பல்கலைக்கழகம்

3.16. பாரதியார் பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசால் 1982ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் கோயம்புத்தூரில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பில் கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்கள் உள்ளன. பாரதியார் பல்கலைக்கழகம் 85 இணைப்புக் கல்லூரிகளைக் கொண்டுள்ளது. அதில் இரண்டு கல்வியியல் கல்லூரிகளையும், எழுபத்துமூன்று கலை அறிவியல் கல்லூரிகளையும், எட்டு மேலாண்மைக் கல்லூரிகளையும் ஒரு விமானப்படை நிர்வாகக் கல்லூரி மற்றும் ஓர் உடற்கல்விக் கல்லூரியையும் கொண்டுள்ளது. மேலும் பத்தொன்பது அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களையும் கொண்டுள்ளது.



### பல்கலைக்கழகச் சாதனைகள்

3.17.

- பாரதியார் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளிலும், நிறுவனங்களிலும் தரமான கல்வியினை மட்டுமே மாணவர்களுக்கு வழங்க அறிவுறுத்தி வருகிறது. மேலும் ஏழை மாணவர்களுக்கு உதவித்தொகைகளை வழங்கி வருகிறது.
- பல்கலைக்கழகத் துறைகளில் பத்து புதிய பாடப் பிரிவுகள் துவக்கப்பட்டன.
- மூன்று புதிய துறைகள் புதிதாகத் தொடங்கப்பட்டன.
- நாற்பத்திரண்டு புதிய பாடப் பிரிவுகளை இணைப்புக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தி உள்ளது.
- மாணவர் விருப்ப அடிப்படையிலான பாட மதிப்பெண்முறை (CBCS) தகுதிநிறைக் கல்வித் திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.
- பாரதியார் பல்கலைக்கழகம், கல்லூரி விரிவுரையாளர் நியமனத்திற்கான மாநில அளவுத் தகுதித் தேர்வு (SLET) நடத்துவதற்காக ஒருங்கிணைப்பிற்குரிய முகமையாக (Nodal Agency) தேர்ந்தெடுக்கப்பட்டு, 2000-2001-ல் முதன்முறையாக சிறப்பாகத் தேர்வு நடத்தியுள்ளது.

3.18. பல்கலைக்கழகத் துறைகளில் 2002-2003 ஆம் ஆண்டு எம்.எஸ்.சி. உயிர்நுட்பவியல், எம்.எஸ்.சி., மருத்துவ இயற்பியல், எம்.எஸ்.சி., மின்னணுத் தொடர்பு ஊடகவியல் போன்ற புதிய பாடங்கள் துவங்கப்பட்டுள்ளன. வங்கித் துறை, நிதித் துறை, காப்பீட்டுத் துறை, மென்பொருள் உருவாக்கும் துறை, ஆய்வுக்கூடங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், சுகாதாரத் துறை, தொழிற்சாலை போன்றவற்றில் சீரிய வகையில் பணிவாய்ப்புகளை மாணவர்களுக்கு உருவாக்கித் தருவதே புதிய பாடத்தின் முக்கிய குறிக்கோளாகும். புது முறையிலான கல்வியை அளிப்பதில் கணிப்பொறிகளும், இணைய தளங்களும், மென்பொருள்களும், நவீன ஆய்வகங்களும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தொழில்சார் கல்விமயமாக்கலைக் கருத்தில் கொண்டு இப்பாடத்தின் அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் கணிப்பொறி பயனாக்க செய்முறைகள் நடத்தப்பெறுகின்றன.

**மாணவர் நலன்**

*3.19*

* பாரதியார் ஆலோசனை மையம், பல்கலைக்கழக மாணவர்கள் தம் கல்வி, தொழில், தனிமனித வளம் சார்ந்த திறன்களை வளர்க்க உதவும் ஆலோசனைகளைத் தருகிறது. மாணவர்களின் எதிர்கால தொழில் வளர்ச்சிக்கான திட்டமிடுதலும், அவர்களது மனநலனை மேம்படுத்துவதிலும் உதவுவதுதான் இந்த மையத்தின் குறிக்கோளாகும்.
* பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின்படி "பெண்கள் அநீதி ஒழிப்புக் குழு" ஏற்படுத்தப்பட்டுள்ளது.
* சுயநிதிப் பாடப்பிரிவுகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தில் 50 விழுக்காடு சலுகை வழங்கப்படுகிறது. ஏழை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை காலதாமதமின்றி வழங்கப்படுகிறது.

**தேர்வுப் பிரிவு**

*3.20.* பல்கலைக்கழகங்களின் தேர்வு முடிவுகளை வெளியிடுவதிலும், மதிப்பெண் சான்றிதழ்கள், பட்டங்கள் ஆகியவற்றை வழங்குவதிலும் பல்கலைக்கழகம் சிறந்து விளங்குகிறது. இவை மட்டுமல்லாது, தேர்வு முறையில் உள்ள குறைகளை நிவர்த்திக்கும் விதத்தில் தேர்வுத் தாள்களின் நகல்களை விரும்பும் மாணவர்களுக்குக் கொடுத்திட வழிவகை செய்ததன் மூலம் தேர்வு மதிப்பீடு முறைகளில் ஒளிவுமறைவற்ற தன்மை கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் மறுகூட்டுதல், மறுமதிப்பீடு செய்தல் போன்றனவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாரதியார் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் மேலாண்மை நிறுவனம் தேசிய அளவிலான நிறுவனத்திற்கு இணையாக இயங்குவதற்கு தக்கவாறு தரம் உயர்த்தப்படும். மகளிர் தொழில் முனைவர்களாக தகுதி பெறத்தக்க மகளிர் பாடத்திட்டங்களில் புதிய பாடத்திட்டங்களைக் கண்டறிய ஆற்றல் பல்கலைக்கழகம் முனைப்பு காட்டும்.

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

*3.21.* பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி நகரில் 1982ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் கணிதம்,



விலங்கறிவியல், உயிர் இயற்பியல், வேதியியல், பயிர் அறிவியல், நுண்ணுயிரியல் ஆகிய துறைகள் அடங்கிய உயிர் தொழில் நுட்பவியல், நுண்ணுயிரியல், புவியியல், புவியமைப்பியல், ஆங்கிலம், தமிழ், அறிவியல் பள்ளி, புவியியல், புவியமைப்பியல், ஆங்கிலம், தமிழ், பொருளியல், தேசிய கடல்சார் நீலநிற நுண்ணுயிரி ஆய்வு வசதி மையம், விசையிக்கவியியல் மையம், வரலாறு மையம், வயதுவந்தோர் தொடர்கல்வி மற்றும் விரிவாக்கம் ஆகிய துறைகளும் நிரலற்ற கணினி மையம் ஆகியவை இயங்கி வருகின்றன. மத்திய தமிழகத்தில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளியைச் சுற்றி அமைந்திருக்கும் சிற்றூர்களில் வாழ்கின்ற வசதியற்ற, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உயர்தரமான பொறியியற் தொழில்நுட்பக் கல்வி வழங்க வேண்டுமென்ற உயரிய குறிக்கோளுடன் பொறியியற் தொழில்நுட்பப் பள்ளியை பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைத்துள்ளது. இப்பகுதி மக்களுக்கு வெறும் கனவாக இருந்த உயர் கல்வி நனவாகி விட்டது. இப்பள்ளி இப்பகுதியில் வாழும் மக்களின் நெடுநாளைய கனவான உயர் தொழில் நுட்பக் கல்வியினை நிறைவேற்றியுள்ளது. இப்பள்ளி தொழில் நுட்பக் கல்வியியல் இளநிலை பட்டப்படிப்புக்கான தகவல் தொழில் நுட்ப வகுப்பு, உயிரி தொழில்நுட்ப வகுப்பு, பெட்ரோல் மற்றும் இரசாயன பொறியியல் வகுப்பு மற்றும் மருத்துவ பொறியியல் ஆகிய பாடப்பிரிவுகளைத் தொடங்கியுள்ளது.

*3.22.* பாரதிதாசன் மேலாண்மை நிறுவனம் திருவெரம்பூரில் உள்ள பாரத மின் நிறுவன வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் முதல் தர மேலாண்மைக் கல்வியினையும் மற்றும் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தில் இணைந்து பணியாற்றும் அலுவலர்களுக்கான மேலாண்மைக் கல்வியையும் அளித்து வருகிறது. நாட்டிலுள்ள தலைசிறந்த 10 மேலாண்மை நிறுவனங்களுள், பாரதிதாசன் மேலாண்மை நிறுவனமும் ஒன்றாகும். தற்போது பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் மேலாண்மைப் பாட வகுப்புகளையும் பாரதிதாசன் மேலாண்மைப் பள்ளி அல்லது ஏனைய தேசிய அளவிலான மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் தரத்துக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் பணியமர்த்துதல் திறன் நூறு சதவீதம் முழுமையானதாகும். ஏனென்றால் அனைத்து மாணவர்களும் தக்க விதத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகம் முதுநிலை பட்டப் படிப்புகளான பயிர் அறிவியல், விலங்கியல் அறிவியல், நுண்ணுயிரியல், வேதியியல், இயற்பியல்,

[2003 ஏப்ரல் 4
கணிதவியல், பயன்பாட்டு புவியியல், மண்ணியல், தொலையுணர்வு
மற்றும் எரிசக்தி சேமிப்பு மற்றும் மேலாண்மையியல் போன்ற
அறிவியல் பாடங்களை வழங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம்
முதுநிலை பட்டப்படிப்புகளில் தமிழ், சமூகவியல், சமூகப்பணி,
பொருளியியல், வரலாறு, கல்வியியல் மற்றும் ஊரக
தொழில்நுட்பவியல், ஆங்கிலம் போன்ற கலையியல் பாடங்களை
விருப்ப அடிப்படையிலான பாட மதிப்பெண் முறையின்கீழ் வழங்கி
வருகிறது.

*3.23.* இவற்றுடன் இப்பல்கலைக்கழகம் ஆய்வியல் நிறைஞர் மற்றும்
முனைவர் ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றினையும் வழங்கி வருகிறது.
மேலும், காணொலி ஒளிக்காட்சி இயல் (videography), யோகா கல்வி,
ஆய்வகக் கண்ணாடி உபகரண தயாரிப்பியல் மற்றும் இயந்திர
இயக்கவியல் ஆகிய பிரிவுகளில் பட்டயப் படிப்புகளும்
பயிற்றுவிக்கப்படுகின்றன. இப்பல்கலைக்கழகம் 99 கல்லூரிகளுக்கு
இணைவு வழங்கியுள்ளது. இதனில் 75 கலை அறிவியல் கல்லூரிகளும்,
2 கல்வியியல் கல்லூரிகளும், 3 நுண்கலை கல்லூரிகளும், 18
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களும் மற்றும் ஒருதுறை கல்லூரி ஒன்றும்
அடங்கும். இவற்றில் 42 சுயநிதிக் கல்லூரிகளும், 19 அரசு உதவி
பெறும் கல்லூரிகளும் மற்றும் 14 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும்
அடங்கும். இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த எரிசக்தித் துறை, எரிசக்தி
சேமிப்பு மற்றும் மேலாண்மையியல் முதுநிலை பட்டப்படிப்பு வழங்கி
வருகிறது. மேலும் இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த சமுதாயக் கல்லூரி,
கணினியியல் முதுநிலை கணினி பட்டய வகுப்புகளை நடத்தி
வருகிறது. தொலையுணர்வு மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறைகள்
அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. மேலும்
சிறப்பு தகுதி மையம் என்ற நிலைக்கு அவை உயர்ந்து வருகின்றன.
இவற்றோடு தொலைதூரக்கல்வி மையம் வாயிலாக 21 பாடப் பிரிவுகள்
பயிற்றுவிக்கப்படுகின்றன. இவற்றுடன் 8 இளநிலை பாடப் பிரிவுகளும்,
6 முதுநிலை பாடப் பிரிவுகளும், 1 பட்டயப் பாடப் பிரிவு மற்றும்
6 தொழில்சார்ந்த பாடப் பிரிவுகளும் அடங்கும்.

## அழகப்பா பல்கலைக்கழகம்

*3.24.* அழகப்பா பல்கலைக்கழகம் குறுகிய காலத்தில் கற்பித்தல்,
ஆய்வை மேம்படச் செய்தல், கல்வியறிவைப் பரவலாக்குதல் மற்றும்



2003 ஏப்ரல் 4]
சமுதாயத்தோடு தொடர்புடைய கல்வி போன்ற செயல்பாடுகளில்
"செயலிற் செம்மை" என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு 1985 ஆம்
ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு 2002 ஆம்
ஆண்டில் கொணர்ந்த தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டம்,
அழகப்பா பல்கலைக்கழகத்தினை இணைப்புக் கல்லூரிகள் கொண்ட
பல்கலைக்கழகமாக மாற்றி அதன் செயல்பாட்டினை
விரிவுபடுத்தியுள்ளது. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம்
ம்ாவட்டங்களில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அழகப்பா
பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் அதன் இணைப்புக்
கல்லூரிகளாகின்றன. மேலும் ஏழு அரசுக் கல்லூரிகள்
பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாகின்றன. உயிர் தொழில்
நுட்பவியல், இயற்பியல், தொழில் வேதியியல், கணிதவியல்,
கணினியியல், வணிக மேலாண்மை இயல், வங்கி மேலாண்மையியல்,
பன்னாட்டு வணிகவியல், தமிழ், மகளிரியல், கல்வியியல்,
உடற்கல்வியியல், ஆழ்கடலியல் மற்றும் கடற்கரைவியல், நிறுவனச்
செயலரியல், படிகவியல் ஆகிய துறைகளில் முதுகலை, ஆய்வு நிறைஞர்
மற்றும் முனைவர் பட்டங்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.
அழகப்பா பல்கலைக்கழகத்தில் புதியதாக அமைக்கப் பெற்றுள்ள
உயிரி தொழில்நுட்பத் துறை 2002-2003-ஆம் கல்வியாண்டு முதல்
செயல்பட்டு வருகிறது. முதுகலை மற்றும் ஆய்வு நிலைகளில் உயிரி
தொழில்நுட்பத் துறையில் வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

*3.25.* மகளிரியல் துறை சார்பில், நுண்கலை மையம் ஒன்று
நிறுவப்பெற்று இசை, நாட்டியம், நாடகம் ஆகிய துறைகளில் பட்ட
வகுப்புகள் 2002-2003 கல்வியாண்டில் நடைபெற்று வருகின்றன.
திருப்பூரில் உள்ள பின்னலாடை நிறுவனத்துடன் (NIFT-TEA Knit
Wear) இணைந்து ஆடை ஒப்பனையில் புதிய பாங்கின் மேலாண்மை
என்ற பட்டப் படிப்புகளும் (B.S. in Fashion Apparel Management and
Apparel Fashion Design), கோவிலூர் மடத்துடன் சேர்ந்து நாதசுவரம்,
தவில் ஆகியவற்றில் பட்டயப்படிப்பும், மதுரையில் உள்ள பென்
வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செவிலியியல் பட்டயப்படிப்பும்,
2002-2003-ஆம் ஆண்டில் புறவளாகத் திட்டத்தின்கீழ் தொடங்கப்
பெற்றுள்ளன. தமிழ்நாடு அரசு காவல் துறையின் அனைத்துப்
பிரிவினருக்கும் ஏற்பாடு செய்த பாலின நிகர் நிலைப் பயிற்சியில்,
மகளிரியல் துறை மிகுந்த ஈடுபாட்டு உணர்வுடன் பங்கேற்றது.
புதுதில்லியில் உள்ள முன்னாள் இராணுவத்தினருக்கான இயக்ககம்

சார்பாக, அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வித் துறை, உடற்கல்வி ஆசிரியர்களாகப் பணியாற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு, மறுபுத்தாக்கப் பயிற்சியினை ஏற்று நடத்துகிறது.

### அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

3.26. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மகளிரியல் கல்வியை மேம்படுத்துதல், மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிர் மேம்பாடு குறித்த திட்டங்களுக்கு ஆலோசனை நல்குதல் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றை செயல்படுத்த 1984 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் குறிக்கோளான "சமன்மையை நோக்கி" என்பது வாழ்வின் எல்லாத் தளங்களிலும், நிலைகளிலும் ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானமாகப் பங்கேற்று முழுமையான வாழ்வினை வாழ்வதற்கு ஆவன செய்தலைக் குறிக்கும். இளநிலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகள், பகுதி நேர ஆய்வு/முழு நேர ஆய்வு, பல்கலைக்கழக மானியக் குழு நிதிநல்கை ஆய்வு ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. பெண் சிசுக்கொலை, விறகு தலைச்சுமை தூக்கிகள், கல் உடைப்போர், பாடநூல்களில் பாலியல் வேறுபாடு, மகளிரும் பொருளாதாரமும் விழுமியக் கல்வி போன்ற பல்வேறு ஆய்வுகள் முற்றுப் பெற்றுள்ளன. பெண்களின் வாழ்வு நிலையை உயர்த்தும்படி பிறரைச் சார்ந்த நிலையினின்று விடுபட்டு சுதந்திரத் தன்மையை வாழ்வில் அடைவதற்கு உதவும் வகையாக பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட விரிவாக்கப் பணிகளைச் செயற்படுத்தி வருகிறது:

1. குடிசைவாழ் பகுதியை தத்தெடுத்தல் (கல்வி, நலவாழ்வு, பொருளியல் தற்சார்பு, குறைநீக்குக் கல்வி முதலியன குறித்து)
2. சுயதொழில் பயிற்சித் திட்டங்கள் (சமூகப் பொருளாதாரத் தளத்தில் அடிமட்டத்தில் உள்ள மகளிருக்கான மரபோடு ஒட்டிய தொழிற்பயிற்சிகளும், நவீனத் தொழில்நுட்பங்களும்)
3. கருத்தரங்குகள் / பணிமனைகள் / பயிலரங்குகள் (குறிப்பிடத்தக்க கருத்துக்கள் தலைமைப்பணி, நிர்வாகவியல், மகளிர் மேம்பாடு மகளிரியல் ஆய்வு முறைகள், முறைசாராக் கல்வி முதலியன)



4. விழிப்புணர்வுத் திட்டங்கள் (மகளிர் உரிமை, மகப்பேறு உடல்நலம், தொடர்பு சாதனத் துறை, மகளிர்க்கெதிரான வன்முறை போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்)
5. பெண்களின் அதிகாரப் பகிர்விற்கான கூட்டுமுயற்சியாக ஆய்வு மற்றும் செயல்பாட்டுத் திட்டங்களை பல்கலைக்கழக மானியக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மையத்தின் வாயிலாகவும் மற்றும் பல்கலைக்கழகம், கல்லூரி, தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தி வருதல்.
6. பெண்களுக்கான அரசாங்கச் சலுகைகள் மற்றும் வருமானத்தினை ஊக்குவிக்கும் திட்டங்கள், உடல்நலம் ஆகியவற்றைக் கணித்து மதிப்பிடுதல்.
7. நூலகம், ஆவணச்சான்று வழக்காட்சி, புத்தக வெளியீடு போன்றவற்றை ஏற்படுத்துதல்/ஒன்று திரட்டுதல்.
8. உடல்நலம், சட்டம், குடும்பம், கல்வி போன்றவைகளுக்கு ஆலோசனை மையங்களை ஏற்படுத்தி ஆதரித்து வருதல்.
9. பெண்களுக்கான அரசாங்கத் திட்டங்கள் மற்றும் பெண்ணியக்கங்கள் பற்றிய செயல்பாடுகளை ஆங்கில மொழியிலிருந்து மண்டல மொழிக்கு (தமிழ்) மொழி பெயர்த்தல்.

3.27. பாடத்திட்ட உருவாக்கம், கல்வியியல் நிர்வாகம், கல்வியியல் தொழில்நுட்பம் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல், பங்களிப்புப் பரிசிலனை போன்றவற்றில் பல்வேறு நிலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி நல்கும் வகையில் சிறப்புப் பாட வகுப்புகளும் கல்வித் துறையால் நடத்தப்படுகின்றன. இந்தப் பல்கலைக்கழகம் மகளிர் கல்வித் துறையில் சிறப்பு தகுதி மையமாக வளர்வதை அரசு உறுதி செய்யும். கொடைக்கானல், சென்னை, மதுரை போன்ற இடங்களில் சமூகம், சட்டம் சார்ந்த பொருள்களில் பெண்களுக்கு அறிவுரை வழங்க இலவச மையம் தொடங்க உள்ளது. பழங்குடியினரின் நலத் திட்டம், சுற்றுப்புறச் சூழல், இனவேறுபாடு, இயற்கை வள பாதுகாப்புத் திட்டம் மற்றும் பல துறைகளில் கொடைக்கானலில் புதிய பல திட்டங்கள் தொடங்க வாய்ப்பு உள்ளது என்பது கருத்தில் கொள்ளப்படும். மேலும் பல்கலைக்கழக மாணவிகளுக்கு, இத்தகைய இடங்களில் தொடர்பு கொள்ள ஊக்கப்படுத்துவதன் மூலம் ஒருவருக்கொருவர் பயனடைய வாய்ப்புகள் ஏராளம் உள்ளன. அன்னை தெரசா மகளிர்

பல்கலைக்கழகத்தின் தொலைதூரக்கல்வி பள்ளியின் குறிக்கோள், உயர்கல்வி வாய்ப்புக்காக ஏங்கும் பெண்களின் கல்வித் திறனையும், வேலைவாய்ப்பினையும் சமுதாய ஒருங்கிணைப்பை உயர்த்தும் பொருட்டு கல்வி வாய்ப்பினை வழங்குவதே ஆகும். இந்த குறிக்கோளினை கருத்தில் கொண்டு, இந்தக் கல்வியாண்டில் பெரிய நகரங்களில் மட்டுமின்றி, சிற்றூர்களிலும் 13 கல்வி மையங்களும், மருத்துவம் சார்ந்த படிப்பினை வழங்கும் நான்கு மையங்களும் திறக்கப்பட்டுள்ளன. மேலும் எம்.பி.ஏ. போன்ற புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. குறுகிய காலத் திறனை வளர்க்கும் வேலை சார்ந்த சான்றிதழ், பட்டயப் படிப்புகளும் இவ்வாண்டு துவங்க உள்ளன. இந்தப் படிப்பு வாய்ப்புகள் கல்லூரி மாணவியர் தங்கள் பட்டப் படிப்போடு, தங்கள் கல்வித் திறனையும் வேலைவாய்ப்பினையும் அதிகரிக்கும் பட்டயப் படிப்புகளையும் தொடரலாம். எம்.ஃபில்., எம்.பி.ஏ., எம்.சி.ஏ., போன்ற பாடத்திட்டங்களுக்குப் புதிய பாடநூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

3.28. மேலும் திறந்தநிலைப் பல்கலைக்கழகத் திட்டம் இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பள்ளி வகுப்புகள் நான்கு சுவர்களையும் கடந்து நெகிழ்வுத் தன்மையுள்ள தூரம், நேரம், பாடங்கள் வாயிலாக பெண்களின் கல்விக் கனவுகளை நிறைவேற்ற வழிவகுக்கும். தாங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே தங்களுக்கு ஏற்ற வேகத்தில் பாடங்களைப் படிக்க இயலும். முதுகலைப் பட்ட இசை, மகளிரியல் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. திறந்தநிலை இளங்கலைப் பட்டப் படிப்புகளுக்கும், பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. கொடைக்கானலில் தற்போதுள்ள சுமார் இரண்டு ஏக்கர் பரப்பிலான பல்கலைக்கழக வளாகத்துடன், கொடைக்கானல் பகுதியைச் சார்ந்த அட்டுவம்பட்டியில் ஏறக்குறைய 21.07 ஹெக்டேர் நிலம் மற்றும் வில்லுப்பட்டியில் உள்ள ரைப்பில் ரேஞ்ச் பகுதியில் 23.44 ஹெக்டேர் நிலம், ஆக மொத்தம் 44.50 ஹெக்டேர் (111 ஏக்கர்) நிலம் இப்பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நபார்டு கடன் உதவியுடன் அதில் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் வருகைக்குழு தனது சமீபத்திய வருகையின்போது, பல்கலைக்கழகத்தின் சாதனைகளையும், தேவைகளையும் மதிப்பீடு செய்து, பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்குப் போதிய மானியம் வழங்க பரிந்துரை செய்துள்ளது. மூலிகை அறிவியல் மற்றும்



பாடங்களில் உதவி பாடத் திட்டங்களை வேலைவாய்ப்புப் இப்பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது.

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990-ஆம் ஆண்டு 3.29 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்குக் முதல் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்குக் கல்விப்பணி ஆற்றி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தோடு 58 கலை, அறிவியல் கல்லூரிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 33 சமுதாயக் கல்லூரிகளும் இணைந்திருக்கின்றன. இவற்றில் பல கல்லூரிகள் உயர்கல்விக்காக அரிய சேவைகள் புரிந்துள்ளன. இவற்றில் ஆறு கல்லூரிகள் ஒரு நூற்றாண்டை கடந்தவையாகும். கடந்த மூன்றாண்டுகளாக இளைஞர் நலத் துறை போட்டித் தேர்வுகள் மற்றும் செயல்திற மேம்பாட்டு மையம் என்ற மையத்தினை நடத்தி வருகிறது. போட்டித் தேர்வுகள் எழுத விரும்புவோருக்கு இந்த மையம் வழிகாட்டுதலும், பயிற்சியும் கொடுக்கிறது. இதற்கான செயல் திட்டத்தை முதலில் 1998-ஆம் ஆண்டில் யு.ஜி.சி. /சிஎஸ்ஐஆர் நடத்தும் தேசிய தகுதி ஆய்வுத் தேர்வுக்கு, 40 மாணவர்களைக் கொண்டு பயிற்சியளிக்கும் திட்டத்தோடு தொடங்கியது. அதில் பயிற்சி பெற்றவர்களில் நான்குபேர், தேசியத்தகுதி ஆய்வுத்தேர்வில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இந்திய அரசுப் பணியாளர் தேர்வாணையமும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும் நடத்தும் அரசுப் பணியாளர் தேர்வுகளுக்கு, மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்தையும் தொடங்கியது. இத்திட்டத்தில் சிறப்பு விரிவுரைகள், விவாதங்கள், புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல் என்பவற்றின் மூலமாக மாணவர்களுக்கு அரசுப் பணியாளர் தேர்வுகள் எழுதப் பயிற்சி தரப்படுகிறது. அத்துடன் அடிக்கடி படிப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. அவ்வப்பொழுது தமிழ்நாடு அரசின் ஸ்லெட் (SLET) தேர்வுகள், ரெயில்வே பணியாளர் சேர்ப்பு வாரியம், வங்கி ஊழியர்கள் தேர்வுக் குழுமம், தமிழ்நாடு ஆசிரியர் சேர்ப்பு வாரியம் ஆகிய அமைப்புகள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கும் இந்த மையம் வழிகாட்டுதலும், பயிற்சியும் கொடுத்து வருகிறது.

3.30. மாணவர்களில் வேலை தேடுபவர்களையும், அவர்களுக்கு வேலை தருபவர்களையும் சந்திக்க வைக்கும் இடமாக, பணிவாய்ப்பு மையம் ஒன்றை பல்கலைக்கழகம் ஏற்படுத்தியுள்ளது. இம்மையம் வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டு, அதற்கான தகுதியுடையவர்களைத் தேடும் தொழில் முனைவோர்களை அழைத்து

வந்து, இப்பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்களையும், மேற்படிப்பின் இறுதியாண்டு மாணவர்களையும் சந்தித்து உரையாடச் செய்து வருகிறது. மக்களுடைய வேலைத் திறமை மற்றும் தகுதியை மேம்படுத்த, இப்பல்கலைக்கழகம் விரிவாக்கக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 13 மையங்கள் இயங்கி வருகின்றன. இவை 7 ஓராண்டு, அல்பருவமுறைப் பட்டய வகுப்புகளையும், 2 ஆறு மாத காலச் சான்றிதழ் வகுப்புகளையும் நடத்துகின்றன. சமூக நீதியை வலியுறுத்தும் நோக்குடன் அதன் தீவிர முக்கியத்துவத்தை உணர்ந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்புப்பிரிவு பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் மத்திய-மாநில அரசுகளின் ஆலோசனைப்படி பல்கலைக்கழகத்தால் தொடங்கப்பட்டுள்ளது. பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகளைப் பரிந்துரைத்து, பல்கலைக்கழகத்தில் சிறந்த கல்விச்சூழல் நிலவுமாறு பார்த்துக்கொள்ள, இந்தப்பிரிவு உதவுகிறது. சீரமைப்பதும், ஒழுங்குபடுத்துவதும் தொடர்ச்சியான நடவடிக்கைகள். பல்கலைக்கழகம் இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. புகார்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இரண்டு குறைதீர் மையங்கள் உருவாக்கப்பட்டு அவை குறைகளைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. நேரடியாக நிறுவனங்களில் இணைந்து பயிலும் மாணவர்களுக்கும் தொலைநெறிக் கல்வி இயக்ககம் மூலம் பயிலும் மாணவர்களுக்கும் எனத் தனித்தனியாக இரண்டு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையத்தின் மூலம் மனுக்கள் பெறப்பட்டு அவற்றின்மீது இரண்டு வார காலத்திற்குள் தீர்வு காணவேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தீர்வு காண இயலாத சூழல்களில், அம்மனுவின்மேல் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை, மனுதாரர் அறிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையத்தால் மாணவர்கள் நிறைவினையும், பெற்றோர்கள் நிம்மதியையும் பெற்று வருகின்றனர்.

*3.31.* தமிழகத்தின் மத்திய சிறைச்சாலைகளில் உள்ள சிறை வாழுநர்களுக்கான சிறப்பு கல்வித்திட்டத்தை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 328 சிறை வாழுநர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டதில், 28 மாணவர்கள் எம்.ஏ., தேர்ச்சி பெற்றுள்ளனர். தமிழ்ப் புத்தாண்டை ஒட்டி, பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, ரொக்கப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு



ஊக்குவிக்கப்பட்டனர். மகளிர்க்கு எதிரான திறமையாளர்கள் கொடுமைகளைக் களைய, இப்பல்கலைக்கழகத்தில் மனோ பெண்கள் மையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. ஆய்வு மாணவர்களின் ஆய்வுநிலையை வலுப்படுத்தவும், வளர்க்கவும் உதவும் வகையில், பல்கலைக்கழகம் பல்கலைக்கழக ஆய்வு உதவித் தொகையினை வழங்கி வருகிறது. ஒவ்வொரு துறையிலிருந்தும் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் மாணாக்கருக்கு மாதந்தோறும் ரூ.1500 வழங்குவதோடு, ஆண்டு ஒன்றுக்கு இதரவகைச் செலவினங்களுக்காக ரூ.3000 வழங்கப்படுகிறது.

*3.32.* பல்கலைக்கழகத்தில் நடைமுறையில் உள்ள பல்வேறுவிதமான கல்விசார் செயல்பாடுகளும், பொதுச்சொற்பொழிவு மேடையும் ஒன்று. இதன் செயல்பாடுகள் பல்கலைக்கழக ஆசிரியர்கள் இருவரை ஒருங்கிணைப்புக் குழுவாகக் கொண்டு நடைபெறுகின்றது. இந்த மேடையின் மூலம் பல்துறை சார்ந்த சிந்தனைப் போக்குகளும், கருத்தமைவுகளும், விரிவுரைகளாகவும், சொற்பொழிவுகளாகவும் அரங்கேறி வருகின்றன. பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் பார்வையாளர்களாகவும், பங்கேற்பாளர்களாகவும் உள்ளனர். இதுவரையிலான அரங்குகளில் மனித உரிமைகள், பொருளாதாரப் போக்குகள், சமுதாயவியல் சிக்கல்கள், பண்பாட்டுப் பிரச்சினைகள் போன்றன பேசப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில், மாறிவரும் அரசியல், பொருளியல் சூழல், ஊடகம் சார்ந்த பொழுதுபோக்கு அம்சங்கள், பாலினம் சார்ந்த வேறுபாட்டுப் பிரச்சினைகள் போன்றன பேசப்பட உள்ளன. தனது எல்லைக்குட்பட்ட பகுதியின் தேவைகளை உணர்ந்துள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், மனோ கல்லூரிகள் என்ற புதுவகைக் கல்லூரிகளை நடத்தி வருகிறது. இக்கல்லூரிகளில் வழக்கமான பட்டவகுப்புகளுக்குப் பதிலாக, வேலை வாய்ப்புள்ள இளநிலைப் பட்டவகுப்புகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

*3.33.* தொலைதூரக் கல்வி மூலம் வழங்கப்படும் குற்றவியல் மற்றும் காவல் துறை அறிவியல் ஆகியவற்றில் முதுகலை பட்டப் படிப்புகள் மேதகு தமிழக ஆளுநரால் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் சாத்தான்குளத்தில் ஒரு பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அப்பகுதி பெண்களின் முன்னேற்றத்திற்காக தொடங்கியுள்ளது. இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 2003-2004-ஆம் கல்வி ஆண்டில், கணிதம், வணிகவியல் மற்றும்

மின்னணுவியல் ஆகிய பாடங்களில் இளநிலை பட்டப்படிப்பை வழங்கவுள்ளது. இக்கல்லூரி, ஆரம்பத்தில் சாத்தான்குளம் கல்வியியல் கழக வளாகத்தில் செயல்படும். இக்கல்லூரிக்கென கட்டடம் விரைவில் கட்டப்படும். இக்கல்லூரி தொடங்குவதற்கான தொகையாக ரூ.15.00 இலட்சம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதைய தேவை மற்றும் மாணவர்களுக்கான விருப்பப் பாடங்கள் குறித்து, பல்கலைக்கழக மானியககுழு தெரிவித்துள்ள கருத்துகளின் அடிப்படையில், முதுநிலை பட்டப் படிப்புகளின் பாடத்திட்டங்கள் 2002-2003 கல்வியாண்டு முதல் திருத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்கள், ரூ.2.00 கோடி அளவில் வெளி நிறுவனங்களால் நிதியுதவி செய்யப்பட்டு, பல்வேறு துறையைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சியாளர்களால் சுமார் 800 ஆராய்ச்சி கட்டுரைகள், உள் மற்றும் வெளிநாடு இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றை வழங்குவது மற்றும் அவற்றில் உயர் நிலையை எய்துவதை, குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் தன்கீழ் உள்ள சில துறைகளை உயர்நிலை மையங்கள் என்கிற நிலையை அடைய, நடவடிக்கை எடுத்து வருகிறது. கனடாவில் உள்ள தமிழ் கலை மற்றும் தொழில்நுட்பக் கழகமானது, 2003-2004ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்ப் பாடத்தில், முதுநிலைப் பட்டத்தை தொடங்க அனுமதி கோரி இருந்தது. அதற்கு பல்கலைக்கழக ஆட்சிக்குழு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.

**பெரியார் பல்கலைக்கழகம்**

3.34. பெரியார் பல்கலைக்கழகமானது பெரியார் என அழைக்கப்படும் சிறந்த சமூக சீர்திருத்தவாதியும் புரட்சியாளருமான ஈ.வே. ராமசாமி என்பாரின் பெயரில் 1997-ல் தொடங்கப்பட்டது. நாட்டின் தொழில்நுட்ப அறிவியல், சமூகம் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான அறிவாற்றல், புதிய சிந்தனைகள், புதிய திறன்களை இளைஞர்களிடம் உருவாக்க இப்பல்கலைக்கழகம் பாடுபடுகிறது. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2 கல்வியியல் கல்லூரிகளும் மற்றும் ஓர் உடற்கல்வி கல்லூரியும் இணைவு பெற்றுள்ளன. இக்கல்லூரிகள் சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அமைந்து உள்ளன.

3.35. தற்பொழுது பெரியார் பல்கலைக்கழகம் 109 பாடப்பிரிவுகளில் இணைவு பெற்ற கல்லூரிகளிலும், கணிதம், வணிகவியல், எம்.சி.ஏ.





உயிர்-தகவலியல், உயிர்-தொழில்நுட்பம், செயல்முறை தாவரவியல் (மருத்துவ தாவரம்) மற்றும் சுற்றுப்புறச் சூழல் அறிவியல் ஆகிய 7 பாடங்களில் முதுநிலை பட்டப் படிப்புகளை பல்கலைக்கழகத்தின் துறைகளும் வழங்குகின்றன. இப்பாடப் பிரிவுகள் அனைத்தும் விருப்ப அடிப்படையிலான பாட மதிப்பெண் முறையின்கீழ் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு இரண்டாம் பருவம் முதல் ஆராய்ச்சித் திட்டங்களும் அளிக்கப்படுகின்றன. தேர்ச்சித்திறன் மேம்பாட்டு பாடத்திட்டம் ஒன்று 2002-2003-ஆம் ஆண்டிலிருந்து வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பிரிவினர் முன்னேற்றத்திற்காகவும், கல்லூரியில் பயில முடியாதவர்களுக்காகவும் ஒரு வருட பட்டயப்படிப்பு பல்வேறு பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பாடத்திட்டங்களும், வரைமுறைகளும் பணி அமர்த்துவோர் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டுள்ளது. அவையாவன—கணினி, விவசாயம், மருத்துவச் செடிகள், மேலாண்மை, பதப்படுத்துதல், நெசவு, உடல்நலம், நூலகம் மற்றும் ஆசிரியப் படிப்பு போன்ற பட்டயப்படிப்புகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

3.36. இப்பல்கலைக்கழகம் 2001-2002-ஆம் கல்வியாண்டு முதல் பாடத்திட்டங்களை, தொலைதூரக் கல்வி மூலம் வழங்கி வருகிறது. இதற்கென 33 நேரடித் தொடர்பு மையங்கள் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளன. தொலைதூரக் கல்வித் திட்டத்தில் எம்.பி.ஏ. பாடமும் இக்கல்வியாண்டு முதல் கற்பிக்கப்படுகிறது. இதற்கு முழுநேர பாடத் திட்டத்திற்கான வினாத்தாள்களே பொருந்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. விரிவாக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் பணி புரியும் இடங்களில் வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சியினை வழங்கும் பொருட்டு யோகாசன அறிவியல், வர்மம் மற்றும் மசாஜ் அறிவியல் ஆகியவற்றில் பட்டயப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களின் நலன் கருதி வேலைவாய்ப்பு ஆலோசனை தகவல் மையம் தொடங்கப்பட்டு, அம்மையம் அகில இந்திய குடிமைத் தேர்வுகளை அவர்கள் வெற்றிகரமாக எதிர்கொள்ள பயிற்சியளிக்கிறது. பல்கலைக்கழக தேர்வு முறைகள் வெளிப்படையானதாக இருக்கும்படி திட்டமிடப்பட்டுள்ளது. தேர்வு முறைகள் வினா தாள்களின் மாதிரிகள், கல்வியாண்டில் தேர்வுகள் தொடங்க இருக்கும் தேதிகள், தேர்வு மையங்கள், தேர்வு முடிவுகள் வெளியிடப்படக்கூடிய தேதிகள் மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் முறைகள் பற்றிய விவரங்கள் ஆகியவை மாணவர்களுக்கு முன்பே தெரிவிக்கப்படும்படி திட்டமிடப்பட்டுள்ளது.

3.37. கட்டட வசதிகளைப் பெருக்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிமுறைகளின் அடிப்படையில், புதிய விரிவுரையாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே வெகுவிரைவில் இப்பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியக்குழுவிடமிருந்து மானியத்தைப் பெறும் நிலையில் உள்ளது. மருத்துவத் தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியலில் ஆராய்ச்சித் திட்டங்களை வழங்குவதை இப்பல்கலைக்கழகம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

3.38. வேலூர், விழுப்புரம், கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களை உள்ளடக்கி, அங்குள்ள ஒடுக்கப்பட்ட மக்களாகிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்தும் வகையில், வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் என்ற ஒரு புதிய பல்கலைக்கழகம் 2002-2003-ல் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. சமூக மாற்றம், சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவை குறித்த புதிய ஆராய்ச்சிக்காக துவக்கப்பட்டுள்ளது.

3.39. சென்னைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையம் செயல்பட்டு வந்த வேலூர்கோட்டை வளாகத்தில், தற்பொழுது இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கான கட்டடங்கள் தகுந்த இடத்தில் பல்கலைக்கழக மானியக்குழு, மத்திய அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குழு மற்றும் நபார்டு ஆகியவற்றிடமிருந்து மானியம் பெற்று விரைவில் கட்டப்படும்.

3.40. தற்போதைய கல்வியாண்டில் சமூக சீர்திருத்தம், சமூகப் பொருளாதார முன்னேற்றம், சுற்றுச்சூழல் மேலாண்மை, கல்வி ஆகிய பாடங்களில் புதிய பாடத் திட்டங்களை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம், 2002 நடைமுறைக்கு வந்ததன் விளைவாக, சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றிருந்த 50 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தற்பொழுது திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் ஆரம்ப கட்டமாக நிதி அலுவலர் உட்பட குறைந்தபட்ச ஆசிரியரல்லாத பணியாளர்கள் மற்றும் சார்பு



அன்றாட அலுவல்கள் நடந்து வருகின்றன. பணியாளர்களால் இப்பல்கலைக்கழகத்திற்கான செலவுகளுக்காக ரூ.50.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

3.41. தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகச் சட்டம் 2002-ல் இயற்றப்பட்டு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. கிராமப்புறங்களில் வசிக்கின்ற உழைக்கும் மக்கள், மகளிர் ஆகியோர் பல்வேறு துறைகளில் கல்வியறிவு பெறவும், அறிவினை மேம்படுத்திக்கொள்ளவும் வழிவகை செய்வதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும். மேலும் மாநிலத்தில் தற்போதுள்ள தொலைதூரக் கல்வி, திறந்தநிலைக் கல்வி ஆகியவற்றை ஒருங்கிணைப்பதும், தர நிர்ணயம் செய்வதும் இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோளாகும். வேலைவாய்ப்புக்கு ஏற்ற கல்வி அளித்து மாணவர்கள் உடனடி வேலைவாய்ப்பு பெறச் செய்வது இப்பல்கலைக்கழகத்தின் தலையாய குறிக்கோளாகும். இப்பல்கலைக்கழகம் தற்போது தொழில்நுட்பக் கல்வி இயக்கக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. முதலில் தமிழ்நாட்டின் பேரூர்களில், வட்டார மையங்கள் அமைக்கவும், மாவட்டத் தலைநகரங்களில் கல்விமையம் அமைக்கவும், பின்னர் வட்ட அளவில் அவற்றை விரிவுபடுத்தவும் கருதப்பட்டுள்ளது.

3.42. கிராம மக்கள், குறிப்பாக மகளிரது பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்கத்துடன் சுயஉதவி வழியாக மகளிர் வலிமைபெறுதல், உணவு, சத்துணவு, தோல்பதனிடும் தொழிலாளர்களுக்குத் தொழிற்கல்வி ஆகிய சான்றிதழ் படிப்புகளும், குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியியல் பட்டயப்படிப்பு வழங்கவும் கருதப்பட்டுள்ளது. மேலும், பி.எட். மற்றும் எம்.எட். படிப்பு வழங்கவும் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன படிப்புகள், வலையக்கல்வி (Web education) வானொலி வழியாக வழங்கப்படுவதோடு பாடங்கள் அச்சிட்டும் தரப்படும்.

3.43. முறையான மற்றும் அஞ்சல் வழிக் கல்வி வாயிலாக, இளநிலை மற்றும் முதுகலைப்பட்டம் பெற அடிப்படைக் கல்வி தேவை என்ற வரைமுறை தளர்த்தப்பட வேண்டும் என்பதே திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும். எனினும், அடிப்படைக் கல்வியினை ஈடுசெய்யும் வகையில் இணைப்புக் கல்வி (Bridge Course) இளநிலையிலும் உயர்நிலையிலும் வழங்கப்படும். இதனால் இப்பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவோர், இதர பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுபவர்களுக்கு இணையாகக் கருதப்படுவர்.

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)**

3.44. கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் 1988-ல் நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றது. தொழிற்கல்வி படிக்கும் இளநிலைப் பட்டப்படிப்பு மாணவிகள் பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின்படி முதல் மற்றும் இரண்டாமாண்டு இறுதியில் ஒருமாதம் தொழில் பயிற்சியை பெரிய புகழ்பெற்ற தொழிற்சாலைகள், ஆராய்ச்சி ஆய்வுக் கூடங்கள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களிலும் மேற்கொள்கின்றனர். இத்தொழில் பயிற்சி முதுநிலைப் பட்டப்படிப்பில் உயிர் வேதியியல், செயல்முறை வேதியியல் போன்ற பாடப் பிரிவுகளிலும், இளநிலையில் உயிர்நுட்பவியல் பாடப்பிரிவுகளிலும் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. நமது தேசம் முழுவதிலும் உள்ள அனைவரும் பயன்பெறும் வகையில், பல்கலைக்கழக மானியக் குழுவால் தேர்வு செய்யப்பட்ட ஒலி, ஒளி முறையில் இளநிலைப் பட்டயப்படிப்பிற்குரிய பாடங்களைத் தயாரித்து வழங்கும் 15 மையங்களுள் இப்பல்கலைக்கழகமும் ஒன்றாகும். இதுவரை 220 பாடங்கள், 25-30 நிமிடங்கள் நடத்த ஏதுவாக மனையியல் சார்ந்த பாடங்களில் தயாரித்து கல்வி நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடங்கள் இந்த வளாகத்திலுள்ள இளநிலைப் பட்டயப்படிப்புப் பாடப்பிரிவுகளில் பயிற்றுவிக்கப்படுகிறது. சென்னைத் தொலைக்காட்சியிலும் இந்தப் பாடங்கள் தேசிய அலைவரிசையில் குறிப்பிட்ட நாட்களில் ஒளிபரப்பப்படுகிறது.

3.45. பார்வையற்ற மாணவிகளுக்கான ஒருங்கிணைந்த பாடத்திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கியத்துவம் என்னவென்றால் மற்றவர்களுக்குச் சமமாக நடந்துகொள்வது பற்றி ஊனமுற்ற மாணவிகளுக்கு பயிற்சியளித்தல், தன்னம்பிக்கையை ஊக்குவித்தல், வயதான காலத்தில் வாழப்போகும் வாழ்க்கைக்கான அனுபவ அறிவு கொடுத்தல், பொதுமக்களின் அனுதாபத்தைக் களைதல், ஊனமுற்ற மாணவிகளின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்கு அவர்களுடைய பெற்றோர்களின் பொறுப்பினை புரிய வைப்பது போன்ற அனைத்து வகையான பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**வேலைவாய்ப்பு மையம்**

3.46. பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு மையம் நிர்வாகப்புலத்தின் உதவியோடு பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வை



இம்மையம் படித்து முடிக்கும் மாணவிகளுக்கு நடத்தி வருகிறது. வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருகின்றது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மையம்**

3.47. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மையம் இந்நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் வேலைவாய்ப்பு, மாணவியர்களின் சேர்க்கை மற்றும் அவர்களுக்கென்று அரசால் அளிக்கப்படும் சலுகைகள் சரியான முறையில் அமல்படுத்த இம்மையம் செயல்படுகிறது.

**சமுதாய மேம்பாட்டுத் திட்டம்**

3.48. மனையியல் புலத்தின்கீழ் இயங்கும் விரிவாக்கத் துறை, பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மாணவிகள் மூலம் சிறந்த செயல்திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

**மகளிர் மையம்**

3.49. மகளிர் முன்னேற்றம் சம்பந்தப்பட்ட செயல்திட்டங்களை, இம்மையம் ஒருங்கிணைக்கிறது. கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் மூலம் பெண்கள் முன்னேற்றத்திற்கு, அனைத்து நிலையங்களிலும், குறிப்பாக குடும்ப மற்றும் அந்தஸ்து கிடைக்க உறுதுணை புரிகிறது.

**பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் அவற்றின் செயல்பாடுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வழங்கும் மேம்பாட்டு நிதி**

3.50. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு அண்மையில் தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் வருகை தந்து, பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளையும், தேவைகளையும் மதிப்பீடு செய்து, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாட்டு நிதி அளிக்க பரிந்துரை செய்துள்ளது. அதனடிப்படையில் முன்நல்கையாக பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு 2002-2003-ல் நிதி வழங்கியுள்ளது. இதுபோல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் ஒவ்வோர் ஆண்டிலும் நிதி வழங்கப்படும்.

## 4. தொழில்நுட்பக் கல்வி

அகில இந்திய அளவில், பொறியியற் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்திய தொழிற்சாலைக் கூட்டமைப்பின் சமீபத்திய கூட்டத்தில் தமிழகப் பொறியாளர்களின் தரம் மிகவும் பாராட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைப் போலவே, 2002-2003 ஆம் ஆண்டிலும் தொழில்நுட்பக் கல்வி கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. 2001-2002 ஆம் கல்வியாண்டில் 5 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 222 பொறியியற் கல்லூரிகளும், 203 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளும், தொழில்நுட்பக் கல்வித் துறையின்கீழ் இயங்கி வந்தன. தற்போது 2002-2003 ஆம் கல்வியாண்டில், 5 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 239 பொறியியற் கல்லூரிகளும், 203 பல் தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. 2001-2002 ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை பொறியியற் கல்லூரிகளில் 63,515 ஆகவும், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 50,409 ஆகவும் இருந்தது. தற்போது (2002-2003) மாணவர் சேர்க்கை எண்ணிக்கை பொறியியற் கல்லூரிகளில் 72,235 ஆகவும், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 50,309 ஆகவும் உள்ளன.

### பொறியியற் கல்லூரிகளுக்கு அண்ணா பல்கலைக்கழக இணைப்பு

4.2. 31-12-2001 அன்று நடைமுறைக்கு வந்த திருத்தப்பட்ட அண்ணா பல்கலைக்கழக சட்டத்தின்படி, நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் நீங்கலாக தமிழகத்தில் உள்ள அனைத்து பொறியியற் கல்லூரிகளும், 2002-2003 ஆம் கல்வியாண்டு முதல் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டன.

### பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு பரவலாக்கப்பட்ட ஒற்றைச் சாளர முறை

4.3. ஒற்றைச் சாளர முறையில் பொறியியற் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கை 2000-2001 வரை, சென்னையில் மட்டும் நடைபெற்று வந்தது. 2001-2002 ஆம் கல்வியாண்டில், இது சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்று வந்தது. 2002-2003 ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் குறிப்பாக கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வசதியாக இருக்கும்வகையில், மேற்காணும் முறை சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும்



கோயம்புத்தூரில் நடைபெற்றது. இந்த வகையில் 2002-2003 ஆம் கல்வியாண்டில், 43,567 மாணவர்களுக்கு பொறியியற் கல்லூரிகளில் சேர்க்கை அளிக்கப்பட்டுள்ளது.

### 2003-2004-ஆம் ஆண்டு முதல் தொழிற்கல்வி கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறித்த தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவுகள்

4.4. இந்திய உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சட்டக்குழாம் அண்மையில் அளித்த சிறப்புமிக்கதொரு தீர்ப்பின் அடிப்படையில் அரசு வெளியிட்டுள்ள ஆணைகளின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:—

(i) உதவி பெறாத சிறுபான்மை அல்லாத தொழிற்கல்வி கல்லூரிகளில் 50 விழுக்காடு இருக்கைகள், நிர்வாகத்தால் நிரப்பப்படலாம். இதற்கு அவர்கள் வெளிப்படையான நேர்மையான சேர்க்கை முறையினை பின்பற்ற வேண்டும்.

(ii) உதவி பெறாத சிறுபான்மை தொழிற்கல்வி கல்லூரிகளில் 70 விழுக்காடு இருக்கைகள் நேர்மையான, வெளிப்படையான சேர்க்கை முறையினை பின்பற்றி, சிறுபான்மை நிர்வாகத்தால் நிரப்பப்படலாம்.

(iii) உதவி பெறாத சிறுபான்மை அல்லாத மற்றும் உதவி பெறாத சிறுபான்மை தொழிற்கல்வி கல்லூரிகளில் மீதியுள்ள இருக்கைகள் ஒற்றைச் சாளர முறையில் அரசால் நிரப்பப்படும்.

(iv) இருப்பினும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு, 50 விழுக்காடு மற்றும் 30 விழுக்காட்டிற்கு மேலான இடங்களை ஒற்றைச் சாளர முறை மூலம் நிரப்பும்பொருட்டு அரசுக்கு ஒப்பளிப்பு செய்ய விரும்பும் சுயநிதிக் கல்லூரி நிர்வாகங்கள் அவ்வாறு ஒப்பளிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டு உள்ளன.

(v) 2002-2003 ஆம் கல்வி ஆண்டுவரையில், மாணவர்கள் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை மூலம், அதுவும், இலவச இருக்கை வகையில் செய்யப்படும் மாணவர் சேர்க்கைக்கு மட்டும், இடஒதுக்கீடு விதி பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் தற்போது உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி இலவச இருக்கை, கட்டண இருக்கை என்ற இருவகை இருக்கைகள் கிடையாது. ஆகவே, ஒரே மாதிரியான கட்டணமாக ரூ.30,000 புதிய கட்டணமாக நிர்ணயிக்கலாம் என சுயநிதி நிறுவனங்களுக்கு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது. மேற்காண் கட்டண நிர்ணயம்

ஏழை மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். ஏனெனில், இம்மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் கட்டண இருக்கையில்தான் பெரும்பாலும் சேர்க்கை செய்யப்பட்டு வந்தனர். கட்டண இருக்கைக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் ரூ.49,500 ஆகும். ஒற்றைச் சாளர முறை மூலம் சேர்க்கை பெறும் திறமையான, ஏழை மாணவர்களுக்கு உதவிடும் நோக்கில், அவர்கள் கல்விக் கட்டணத்தில் ரூ.5,000 வரை சலுகை வழங்குமாறு சுயநிதிக் கல்லூரி நிர்வாகங்களுக்கு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது.

(vi) சுயநிதி சிறுபான்மை மற்றும் சிறுபான்மை அல்லாத நிர்வாகங்கள் மற்றும் ஒற்றைச் சாளர முறை மூலம் செய்யப்படும் மாணவர் சேர்க்கையில், இடஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றுமாறு 13-2-2003 அன்று அரசால் வெளியிடப்பட்ட ஆணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாணை தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

(vii) (i) மாணவர்களிடம் அதிகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்கவும்

(ii) நிர்வாகங்கள் அதிக இலாபம் ஈட்டுவதைத் தடுக்கவும்

(iii) மாணவர்கள் நிர்வாகத்தினரால் எவ்விதத்திலும் துன்பப்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு ஏதுவாகவும்,

தக்கதொரு நடைமுறையை அரசு வகுத்து வருகிறது.

4.5. தொழிற்கல்வி கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறித்த மாநில அரசின், மேற்காண் கொள்கை முடிவுகள் 2003-2004 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்படும்.

**பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கு நிதியுதவி**

4.6. மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து குறைந்த வருவாய்ப் பிரிவில் இருக்கும் தகுதி பெற்ற முதன்மையான மாணவர்களுக்கு அவர்கள் உயர் கல்வி பெறும் வகையில் ரூ.25,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.



**பொறியியல் மற்றும் பட்டய வகுப்புகளில் மாணவர் சேர்க்கைக்கு மதிப்பெண் தகுதி**

4.7. பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில், மிக அதிக அளவு நிரப்பப்படாத இடங்கள் இருந்ததாலும், கூடுதலான மாணவர்களை பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாகவும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு சேர்க்கைக்கு தகுதி படைத்தவர் ஆவர் என அரசு ஆணையிட்டுள்ளது. இதேபோல் 2002-2003 ஆம் ஆண்டு முதல், மேல்நிலைப் பள்ளியில் செயல்முறை சாராக் கல்வி மற்றும் தொழில் கல்வி (Academic and Vocational) தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களும், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் நேரிடையாக இரண்டாமாண்டு வகுப்புகளில் சேர்வதற்கு தகுதி பெற்றவர் ஆவர் என அரசு ஆணையிட்டுள்ளது.

4.8. தமிழ்நாட்டில் உள்ள பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச கல்வித் தகுதியை 2002-2003-ஆம் கல்வியாண்டு முதல் பின்வருமாறு திருத்தி அரசு ஆணையிட்டுள்ளது—

| இனம் | கல்வித் தகுதிகள் மேல்நிலைக் கல்வி (Academic)/ தொழில் கல்வி (Vocational)/ பட்டயக் கல்வி (Diploma) |
|---|---|
| பொதுப்பிரிவினர் (O.C.) | சராசரி 60 விழுக்காடு மதிப்பெண்கள் |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (B.C.) | சராசரி 55 விழுக்காடு மதிப்பெண்கள் |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC/DNC) | சராசரி 50 விழுக்காடு மதிப்பெண்கள் |
| அட்டவணைப் பிரிவினர் SC/ST | தேர்ச்சி பெற்றிருத்தல் போதுமானது |

**மொரிசியஸ் மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு**

4.9. மொரிசியஸ் குடியரசு நாட்டைச் சார்ந்த மாணவர்களுக்கு பொறியியற் கல்லூரிகளில் 15 இடங்களும், பல்தொழில்நுட்பக்

கல்லூரிகளில் 30 இடங்களும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் மற்றும் ஓட்டல் மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சேர்ந்து 45 இடங்களும், 2002-2003 ஆம் ஆண்டு முதல் ஐந்து வருடங்களுக்கு ஒதுக்கீடு செய்து தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

**அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் உள்ள தமிழ் வம்சா வழியினருக்கு சிறப்பு ஒதுக்கீடு**

4.10. தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் உள்ள தமிழ் வம்சா வழியினருக்கு உள்ள சிறப்பு ஒதுக்கீட்டினை 2-லிருந்து 5 இருக்கைகளாக உயர்த்தியும், எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. பாடங்களில் ஒவ்வொரு இடமும் ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஒதுக்கீடுகள் ஒப்பளிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை எண்ணிக்கைக்குக் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**கனடா-இந்திய பயிலக கூட்டுறவுத் திட்டம்**

4.11. இந்திய அரசுக்கும் கனடா அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலமாக 1991-ல் தொடங்கப்பட்ட கனடா-இந்தியா நிறுவன கூட்டுறவுத் திட்டம் ஒரு சிறந்த மனிதவள மேம்பாட்டுத் திட்டமாகும். மனிதவள உள்ளாற்றலின் அளவை உயர்த்தும் வகையிலும் மற்றும் அதன் தரத்தை அதிகரிக்கும் வகையிலும் தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி ஆசிரியர்களுக்கு உகந்த பயிற்சியை அளிப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1992-1996-ல் ஐந்து தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகளில் இத்திட்டம் முதற்படி நிலையாக செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம்படி நிலை நான்கு புதிய தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகளில் செயற்படுத்தப்பட்டது. 31-3-1999-ல் இத்திட்டம் முடிவுக்கு வந்த பின்பு, இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிட மாநில திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டது. கனடா-இந்திய நிறுவன கூட்டுறவுத் திட்டத்தின் செயல்பாடுகளை, அரசுக்கு எந்தவித செலவினமும் இல்லாத வகையில் 31-3-2007 வரை மாநில அரசு நீட்டித்துள்ளது. இத்திட்டத்தினால் அளிக்கப்பெறும் குறைந்த செலவிலான, தேவை அடிப்படையிலான பயிற்சித் திட்டங்களினால் மாணவர்களும், ஏழை மக்களும் அதிக அளவில் பயன்பெறுவதோடு, தொடர்கல்வி செயல்முறைத் திட்டங்களினால் தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகளும்



பயனடைகின்றன. இத்திட்டத்தின் ஆதரவால் தமிழகத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகள் கனடா சமுதாயக் கல்லூரிகளுடன் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்பட்டு வருகின்றன. இவ்விணைப்புத் திட்டத்தின் பயனாக உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்கிக்கொள்ளவும், ஆசிரியர்களுக்கு சிறப்பு வாய்ந்த துறைகளில் பயிற்சி அளிக்கவும் உரிய நிதியினை கனடா சமுதாயக் கல்லூரிகளிலிருந்து தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள் பெறுகின்றன. இதன்மூலம் பெற்ற பயிற்சியினால் ஆசிரியர் சமுதாயத்தின் தன்னம்பிக்கையும், ஒழுங்குணர்வும் அதிக அளவில் உயர்ந்துள்ளன. மேலும் இத்திட்டத்தின் செயல்பாடுகள் மிகவும் நிறுவனமயமானதும் மற்றும் உலகமயமானதும் ஆகும். முன்னர் தெரிவிக்கப்பட்டதைப் போன்று இத்திட்டம் மாணவர் மற்றும் ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக 31-3-2007 வரை செயல்படும்.

**புதிய திட்டங்கள்**

**(i) 22 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கணினி வாங்குதல்**

தமிழ்நாட்டிலுள்ள 22 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு பாடம் நடத்துவதற்குப் போதுமான கணினி வசதிகள் இல்லை. எனவே ரூ.1.00 கோடி செலவில் 22 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் கணினி வசதிகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென 2003-2004 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

**(ii) சென்னை, டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பல்தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் கோவை அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் மகளிர் விடுதி கட்டுதல்**

சென்னை, டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கோவை அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய இரண்டு பயிலகங்களும் கடந்த 35 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றன. மேற்காண் இரண்டு பயிலகங்களிலும் மகளிர் விடுதி வசதி ஏற்படுத்தும் நோக்கில் முறையே ரூ.120.00 இலட்சம் மற்றும் ரூ.80.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மகளிர் விடுதிகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென 2003-2004 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 4

**(iii) பர்கூர் அரசினர் பொறியியற் கல்லூரியில் டிஜிட்டல் சிக்னல் பிராசஸிங் ஆய்வகம் அமைத்தல்**

பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரிகளுக்கான பாடத் திட்டத்தில் டிஜிட்டல் சிக்னல் பிராசஸிங் பிரிவும் அடங்கும். மாணவர்களுக்கு மேற்காண் பாடத்தில் போதிய அனுபவ அறிவு இருப்பின் அது அவர்களின் வேலைவாய்ப்பிற்கு மிகவும் உதவும் என்பதால் ரூ.30.00 இலட்சம் செலவில் மேற்காண் பொறியியற் கல்லூரியில் 2003-2004 ஆம் ஆண்டில் டிஜிட்டல் சிக்னல் பிராசஸிங் ஆய்வகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென 2003-2004 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

**தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம்**

4.12. இந்தியாவிலுள்ள பொறியியற் கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக, ரூ.1550 கோடி திட்ட மதிப்பீட்டில், தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் உள்ள இடைநிலை மற்றும் உயர்கல்வித் துறை அறிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் பின்வரும் முக்கியப் பிரிவுகளை உள்ளடக்கியிருக்கும்:—

(1) ஆய்வகம் மற்றும் பட்டறைகளை மேம்படுத்துதல்

(2) ஆசிரியர் மற்றும் பணியாளர் மேம்பாடு

(3) பாடத்திட்ட வளர்ச்சி

(4) இணக்கமான பாடப்பிரிவு

(5) தொழிற்சாலைகளுடன் தொடர்பு

(6) ஆய்வு

(7) மேலாண்மைத்திறன் வளர்ச்சி

(8) உயர்தனிச் சிறப்பு மையங்கள்

(9) மேல்நோக்கு வளர்ச்சி (Bottom up approach)

(10) தகுதி அடிப்படைத் தேர்வு

(11) இயங்கி வரும் நிறுவனங்களை மேம்படுத்துதல்



2003 ஏப்ரல் 4]

தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தில் பங்கு கொள்ள
4.13. தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தில் பங்கு கொள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் மைய அரசின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நிறுவனங்களின் தயார் நிலையைப் பொறுத்து விருப்புரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் நலன்களை பயன்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக ரூ.200.00 கோடி திட்ட மதிப்பீட்டில், திட்டக் கருத்துருக்கள் தயார் செய்யப்படுகின்றன. இக்கருத்துருக்கள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். மேற்காண் திட்டத்தின் நலன்களைப் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் நம் மாநிலம் தொழில்நுட்பக் கல்வித் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பெறும்.

**புதிய தொழில்நுட்ப தொலைக்காட்சி அலைவரிசை**

4.14. இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் "ஏக்லாவியா" (Eklavya) என்ற பெயரில் புதிய தொழில்நுட்ப தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இவ்வலைவரிசையை இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (Indian Institutes of Technology) மற்றும் இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணையுடன் டெல்லியிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் ஒருங்கிணைந்து நடத்துகின்றது. இவ்வலைவரிசை முற்றிலும் தொழில் நுட்பக் கல்விக்காகவே நடத்தப்படுகின்றது. இவ்வலைவரிசையின் அனைத்து நிகழ்ச்சிகளும், இந்தியாவிலுள்ள தொழில்நுட்பக் கழகங்களால் தயாரிக்கப்படுகின்றன. இப்புதிய அலைவரிசை நாடு முழுவதும் தொழில் நுட்பக் கல்வியினைப் பரப்புவதில், ஒரு புது யுகத்தைத் தொடங்கி வைத்துள்ளது. பொறியியற் கல்வியின் அறிவின் மூலமும் சிறப்பு அறிவுத்திறன் மூலமும் பொறியியற் கல்வியில் ஓர் உண்மையான சமத்துவத்தை நாடு முழுவதும் ஏற்படுத்தும் நோக்குடன், இப்புதிய அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்வலைவரிசை நாளொன்றுக்கு 16 மணி நேரம் சேவை செய்கின்றது.

4.15. வருங்காலங்களில் 24 மணி நேரமும் சேவை செய்யும். இதன் மூலம் இந்தியாவிலுள்ள 1200 தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் சுமார் 10 இலட்சம் மாணவர்கள் பயனடைவார்கள். இவ்வலைவரிசையில் வருகின்ற அனைத்து நிகழ்ச்சிகளும் இளங்கலை பொறியியற் கல்வி மாணவர்களின் பாடத்திட்டத்தின்படி புகழ்பெற்ற இந்தியத் தொழில் நுட்பக் கழகங்களில் பணியாற்றும் வல்லுநர்களால் வழங்கப்படுகின்றது.

## இந்திய தேசிய டிஜிட்டல் நூலக அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டமைப்பு [2003 ஏப்ரல் 4

4.16. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தினால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கூட்டமைப்பின் அடிப்படையில் இந்திய தொழில்நுட்பக் கல்வி முறைக்குத் தேவையான மின்னணு ஆதாரங்களைத் திரட்டும் அமைப்பு ஒன்றினை மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் நிறுவியுள்ளது. இவ்வமைப்புக்கு "இந்திய தேசிய டிஜிட்டல் நூலக அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டமைப்பு" என பெயரிடப்பட்டுள்ளது.

4.17. கூட்டமைப்பு அடிப்படையில் பங்களிப்பு அல்லது கூட்டுப் பங்களிப்பு மூலம் டிஜிட்டல் நூலக அமைப்பு வழியே அனைத்து நிறுவனங்களும் மின்னணுவியல் விவரத்தினை குறைந்த செலவில் பெற முடியும். தற்போதுள்ள உலகளாவிய தொழில்நுட்ப இணையத்தின் துணை கொண்டு சீரிய முறையில் விரைவாகவும், குறைந்த செலவிலும், மின்னணுத் தகவல் ஆதாரங்களை அணுகிட ஏதுவாக உலகெங்கும் உள்ள நூலகங்கள் அனைத்தும் "கூட்டமைப்பினை" அமைத்து வருகின்றன.

4.18. தினந்தோறும் தொழில்நுட்பவியல் துறையில் ஏற்படும் மாறுதல்கள் மற்றும் வளர்ச்சி குறித்த தகவல்களைப் பரபுவதற்கு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப இந்திய தேசிய டிஜிட்டல் நூலகம் மிகவும் பயன்படும் என்பதால் தமிழ்நாட்டிலுள்ள பொறியியல் கல்லூரிகள் அனைத்தும் மேற்காண் டிஜிட்டல் நூலகத்தின் மூலம் கிடைக்கக்கூடிய வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளன. மாணவர் சமுதாயத்தின் நலன் கருதி அனைத்து நிலையங்களும் மேற்காண் தொழில்நுட்ப நூலக வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என நம்பப்படுகிறது.

### குறுகிய கால பயிற்சி மற்றும் உற்பத்தி மையங்கள்

4.19. பள்ளிக் கல்வியை வெவ்வேறு நிலைகளில் இடையில் நிறுத்திவிடும் இளைஞர்களின் நலனை முன்னிறுத்தி பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் குறுகிய காலப் பயிற்சி மற்றும் உற்பத்தி மையங்களைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்காண் திட்டம், முதற்கட்டமாக, 100 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு பல்தொழில்நுட்பக் கல்லூரியும் ஐந்து பாடங்களில், ஒவ்வொன்றிலும்



2003 ஏப்ரல் 4]

இருபத்தைந்து மாணவர்களைக் கொண்டு மூன்று மாத கால அளவில் பாட வகுப்புகள் நடத்தும். இத்திட்டத்தினால் ஓராண்டில் சுமார் 50,000 பேர் பயன்பெறுவார்கள். இது ஒரு சுயநிதித் திட்டமாகும்.

### உலகத்தரம் வாய்ந்த மேலாண்மைப் பள்ளி நிறுவுதல்

4.20. உலகத் தரம் வாய்ந்த மேலாண்மைப் பள்ளியினை நிறுவ அரசு எண்ணியுள்ளது. தொழில்நுட்பவியலில் தற்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் இன்றைய தேவையினைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக எம்.பி.ஏ. படிப்பினை நடத்தும்பொருட்டு, உலகத்தரம் வாய்ந்த மேலாண்மைப் பள்ளியினை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் கல்வி பயின்ற மாணவர்கள் உலகெங்கும் எளிதாக வேலைவாய்ப்பினைப் பெறவும், துறைசார்ந்த தேவைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளும் வகையிலும் இன்றைய தகவல் தொழில்நுட்பம் மற்றும் இதர துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் அடிப்படையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்படும்.

## 5. அண்ணா பல்கலைக்கழகம்

அண்ணா பல்கலைக்கழகம் 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 2001 முதல் உறுப்புடைய பல்கலைக்கழகமாக மாறி தன்னகத்தே 224 சுயநிதிக் கல்லூரிகளையும், 4 அரசு உதவி பெறும் கல்லூரிகளையும் கொண்டுள்ளது. இத்துடன் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 6 உள்ளுறுப்பு கல்லூரிகள் (6 constitutent colleges) உள்ளன.

5.2. இப்பல்கலைக்கழகம் 58 இளநிலை பாடத் திட்டங்களையும் (18 சுய ஆதரவு பகுதிநேர பாடத்திட்டங்களும் அடங்கியவை), 100 முதுநிலை பாடத்திட்டங்களையும் (34 சுய ஆதரவு, பகுதிநேர பாடத்திட்டங்களும் அடங்கியவை) மற்றும் 5 முனைவர் முன்னிலை பாடத் திட்டங்களையும் அளிக்கிறது. முனைவர் பட்டத்திற்கான 36 சிறப்பு களங்களில் மிக வளர்ச்சியடைந்த நிலையில் ஆராய்ச்சி வசதிகளும் உள்ளன.

5.3. இத்திட்டங்கள் தவிர பல்கலைக்கழகம், குறுகிய கால வகுப்புகள், மாலை வகுப்புகள், கோடை அல்லது குளிர்கால பள்ளிகள் போன்ற தொடர்கல்வியையும் வழங்குகிறது. நாட்டின் வளர்ச்சிப் பணிகளின் தேவைகளுக்குப் பொருத்தமாக அண்மை சூழலுக்கேற்ப பொருள்களின் கருத்தரங்குகளையும், விவாத அரங்குகளையும் நடத்துகிறது.

5.4. ஆலோசனை சேவைகள், ஏற்பாதரவு ஆராய்ச்சி, பயிற்சி திட்டங்கள் மற்றும் சோதனை செய்முறை இவை மூலமாக தொழிற்சாலை கல்வி நிறுவன ஒட்டுறவை பல்கலைக்கழகம் சிறப்பாக வலியுறுத்தி வருகிறது. தேசிய முன்னுரிமையில் முன்னேறி வரும் துறைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.5. பாரத ரத்னா திரு. A.P.J. அப்துல் கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்குமுன் தொழில்நுட்ப மற்றும் சமூக உருமாற்றப் பேராசிரியராக இங்கு பணிபுரிந்தார். அவருடைய குறுகியகாலப் பணிகளில், கீழ்க்கண்ட முக்கிய துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ள ஆர்வமுள்ள வல்லுநர்கள் கொண்ட திறமையான குழுவை உருவாக்கினார்:—

* அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள தொழில் நுட்பங்களையும் வளமைகளையும் ஒருமுனைப்படுத்துவதின் மூலம் மூளை குறைபாடுள்ள குழந்தைகளை இயல்பு வாழ்க்கைக்குட்படுத்த மூளை ஆராய்ச்சி மையத்தை நிறுவுவது.
* பழங்கால ஏட்டுச் சுவடிகளிலுள்ள பாரம்பரிய அறிவினைப் பாதுகாத்து தேவைக்கேற்ப மாற்றி அவற்றை கணிப்பொறியில் சேமித்து இணையம் மூலமாக அனைவருக்கும் பகிர்ந்தளிப்பது.
* மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் இவற்றைப் பயன்படுத்தி உணர்வழிந்த காதுகேளா மற்றும் ஊமைக் குழந்தைகளுக்குத் தேவையானவற்றை அளிக்கும் வளர்ச்சியுற்ற தொழில்நுட்பத்தை இந்தியாவில் ஆக்குவது.

5.6. அண்ணா பல்கலைக்கழகம் ஐந்து அமெரிக்கக் காப்புரிமைகளை, புற்றுநோய் நீரிழிவு நோய், செயலறு நிலை இவற்றைத் தடுக்கும் மூலிகை மூலக்கூறுகளில் பெற்றுள்ளது. குறிப்பிட்ட திசு இலக்குகளும், மூலக்கூறுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் ஐந்து மூலக்கூறுகள் காப்புரிமை பெற ஆயத்த நிலையில் உள்ளன.

5.7. மாண்புமிகு முதலமைச்சர் காட்டிய திட்டவழிப்படி, ஒவ்வொரு குடிமகனையும் கணிப்பொறித் தொழில்நுட்பசார் குடிமகனாகவும், ஒவ்வொரு சேவையையும் கணிப்பொறி தொழிற்நுட்பசார் சேவையாகவும் மாற்ற, தமிழகத்திலுள்ள 239 பொறியியற் கல்லூரிகளையும், இணைய வலைப்பின்னலில் இணைப்பதற்கும்,



கணிப்பொறி விழிப்புணர்வையும் கணிப்பொறிசார் தகவல் தொழில் நுட்பப் பயிற்சியையும் தமிழ்நாடு காவல் துறைக்கு அளிக்கும் திட்டத்தையும் நிறைவேற்ற முன்வந்துள்ளது.

5.8. 2002-2003 தமிழ்நாடு தொழிற்படிப்பு நுழைவுத் தேர்வுக்காக ஒன்றரை இலட்சம் மாணவர்களுக்கு விண்ணப்பங்களையும், தேர்வு அனுமதி சீட்டு வழங்குதலையும் உடன் நிகழ் கணிப்பொறி முறைமை மூலமாக தமிழக அரசிற்காக அண்ணா பல்கலைக்கழகம் வெற்றிகரமாக செய்து முடித்தது.

5.9. பொறியியற் கல்லூரிகளுடன் அறிவுசார் இணைவுத் திறனை இந்திய குடியரசுத் தலைவர் 14-12-2002-ல் தொடங்கி வைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் தொலை-மருத்துவ வசதியை அதே நாளிலே தொடங்கி வைத்தார்.

* மாணவர்களிடம் பொதிந்து கிடக்கும் ஆற்றலை வெளிக் கொணரவும் அவர்களின் தகவல் தொடர்பு மற்றும் ஆளுமைத் திறனை மேம்படுத்தவும் வேண்டி மாணவர் மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.
* அண்ணா பல்கலைக்கழகம் 6 உறுப்புக் கல்லூரிகளையும், 228 இணைப்புக் கல்லூரிகளையும், அவற்றில் பணிபுரியும் 6000 ஆசிரியர்களையும், கல்வி பயிலும் 75000 மாணவர்களையும் கொண்டுள்ள ஒரு பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக இருப்பதால் வளர்ந்து வரும் தொழில்நுட்பவியல் பிரிவுகளில் குறுகிய கால மற்றும் நீண்டகால பயிற்சித் திட்டங்களை அளிக்க வேண்டி ஆசிரியர்களுக்கான வினைத்திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.
* தொழில் முனைவோருக்கான வாய்ப்பு பற்றிய புள்ளியியல் விவர தளம் அமைப்பது இன்றியமையாத உடனடித் தேவையாக உள்ளது. உலகமயமாகி தாராளமயமாக்கப்பட்ட இந்தியப் பொருளாதாரச் சந்தையில் திறனோடு போட்டியிடுவதற்கு பொருளாதாரச் சந்தையின் தேவைகள், தொழில் அறிவு, உள்கட்டமைப்பு மற்றும் நிதி பற்றிய அறிவினை மகளிர் பெற்றிருக்க வேண்டும். இக்குறிக்கோளினை அடைவதற்கு நூறு ஆசிரியைகளையும் 230 ஆராய்ச்சி மாணவியர்களையும் கொண்ட மகளிர் ஆற்றல் மேம்பாட்டு மையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

* சமுதாயத்தின் வளம், வெற்றி, இடையறாத போட்டி மனப்பான்மை, ஆகியவற்றிற்கு அடிப்படையான தொழில் முனைப்புத்திறனை வளர்க்கும் நோக்கத்துடன் தொழில முனைவோர் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
* 228 இணைப்புக் கல்லூரிகளிலும் வெற்றிகரமான தேர்வு நடத்துதல்.
* தேர்வு நடத்தவும், விடைத்தாள் திருத்தவும், ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடவும் 11 வட்டார மையங்களை ஏற்படுத்துதல்.
* தமிழகமெங்குமுள்ள இணைப்புக் கல்லூரி மாணவர்களுக்கு உதவும் பொருட்டு மாநில அளவிலான வேலைவாய்ப்பு வழி காட்டு மையமொன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
* பாரிசிலுள்ள சர்வதேச நிறுவனமான இன்ஸ்டிடியூட் நேஷனல் டிலோ ரிசர்ச் அக்ராமிக்குடனும் மற்றும் இந்திய நிறுவனங்களான சென்னையிலுள்ள தேசிய வேளாண் நிறுவனத்துடனும், திருச்சியிலுள்ள பாரத கனமின் நிறுவனத்துடனும் அண்ணா பல்கலைக்கழகம் ஒப்பந்தம் செய்துள்ளது.

**எதிர்கால திட்டங்கள்**

* அயல்நாட்டிலுள்ள மையங்களில் ஆராய்ச்சி திட்டங்களையும் கல்வி செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்காக சர்வதேச மையங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் சர்வதேச துறையினாலும், ஆட்சிமன்றக் குழுவின் வழிகாட்டுதல் அடிப்படையிலும் இம்மையங்கள் நிர்வகிக்கப்படும்.
* தொழில் துறையின் தரம் மற்றும் தேவைகளுக்கேற்ற வகையில் அமைக்கப்பட்ட பாடத் திட்டத்தைக் கொண்ட எம்.பி.ஏ. பட்டப்படிப்பு வழங்குவதற்காக சர்வதேச தரம் வாய்ந்த மேலாண்மைக் கல்வி நிறுவனம் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.
* அண்ணா பல்கலைக்கழக வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் பகுதியாக ஒரு இலட்சம் சதுரஅடி பரப்பளவுள்ள அறிவு நிர்வாகக் கட்டடம் என்ற பெயரில் நிர்வாகக் கட்டடம் குறிப்பாக இணைப்புக் கல்லூரிகளின் நிர்வாக அலுவல்களை



மேற்கொள்வதற்கு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சர்வதேச தரங்களை உடைய சிறப்பான உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய சிறப்பான கட்டடமாக விளங்கும்.

* சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள், பொருட்காட்சிகள் நடத்துவதற்கேற்ற வகையில் 3000 பேர் அமரும் வண்ணம் உள்ள பல்நோக்கு அரங்கமொன்று கட்டப்படவுள்ளது.
* தொடர்பு மையமொன்று அமைக்கக் கருதப்பட்டுள்ளது. அதன் செயல்பாடுகள் பின்வருமாறு:—
  (i) மாணவர்கள் பயன்பாட்டிற்காக smart card அறிமுகம் செய்தல்.
  (ii) பல்கலைக்கழக மாணவர் ஆசிரியர் பயன்பாட்டிற்கான தகவல் அளித்தல்.
  (iii) மாணவர்களுக்கு 6 மாத கட்டாய தொழிற் பயிற்சி அளித்தல்.
* கீழ்க்காணும் சிறப்பு பாடப்பிரிவுகளை வரும் கல்வி ஆண்டிலிருந்து தொடங்கக் கருதப்பட்டுள்ளது:—
  (i) தொழில் நெறிமுறைகள் மற்றும் விழுமங்கள்
  (ii) இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் சமுதாயம்
  (iii) தர மேலாண்மை
  (iv) அறிவாற்றல் உரிமை
  (v) சுற்றுப்புற அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலின் கோட்பாடுகள்.

**6. மண்டலப் பொறியியற் கல்லூரி**

மண்டலப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளியில் 1964-65 ஆம் ஆண்டு மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சியால் துவககப்பட்டு தற்போது இந்தியாவில் உள்ள தலைசிறந்த பொறியியற் கல்லூரிகளில் இக்கல்லூரியும் ஒன்றாகத் திகழ்கிறது. இக்கல்லூரியில் 3,200 மாணவர்கள் (2500 ஆண்கள், 700 பெண்கள்) பயிலுகின்றனர். மற்றும் 560

பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். இக்கல்லூரியில் 15 துறைகளில் 11 இளங்கலை பொறியியல் பட்டப்படிப்புகளும் (B.E./B.Tech/ B.Arch) தகவல் தொழில் நுட்பத்தில் பட்டயப்படிப்பு 23 முதுகலை பட்டப் படிப்புகளும் (M.E./M.Tech.) பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்புக்கு தமிழக மாணவர்கள் 50 சதவீதத்தினர் நுழைவுத்தேர்வு மூலமாகவும், எஞ்சிய 50 சதவீதத்தினர் மற்ற மாநில மண்டலப் பொறியியற் கல்லூரிகள் மூலமாகவும் தேர்வு செய்யப்படுகின்றனர். அனைத்துத் துறைகளிலும் முதுகலை பட்டப்படிப்பிற்கு இந்திய அளவில் நுழைவுத்தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் தகவல் தொழில்நுட்பத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்டு கல்வி கற்பிக்கப்படுகிறது.

6.2. மேலும் அனைத்துத் துறைகளிலும் எம்.பில். மற்றும் பி.எச்.டி. பகுதிநேர/முழுநேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பகுதி நேர இளங்கலை பட்டப்படிப்பு அனைத்துத் துறைகளிலும் நடத்தப்படுகின்றது. மாணவர்களின் பாடத்திட்ட முறைகளும் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு உலகத் தேவைக்கேற்ப பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன.

6.3. இந்திய பிரிட்டிஷ் அரசுகள் உதவியளிக்கும் எரிசக்தி மையத்திட்டத்தின்கீழ் (Indo-UK- Rec Project) காற்றிலிருந்து மின்சக்தி தயாரித்தல், சூரிய ஒளியில் இருந்து மின் சக்தி தயாரித்தல் மற்றும் இதர பொருட்களில் இருந்து மின்சக்தி தயாரித்தல் பொருட்டு ரூ.183.00 இலட்சம் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்களுக்கு ரூ.179.96 இலட்சம் செலவிலான உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்கூடங்கள் பல்வேறு பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

**இக்கல்லூரியின் சிறப்பு விவரங்கள்**

6.4. தொடர்ந்து உயர்ந்த அளவிலான வேலைவாய்ப்பினை பெற்றுத் தருவதால் இந்தியாவில் அனைத்துத் தர மாணாக்கர்களின் முதன்மை தேர்வாக இந்நிறுவனம் திகழ்கிறது. எம்.பி.ஏ. பாடத் திட்டம் தொடங்கிய நாள்முதல் பயின்று வரும் மாணவர்கள் அனைவருக்கும் முழுமையாக வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் பெருமையினை, மண்டலப் பொறியியல் கல்லூரி பெற்றுள்ளது.



**மண்டலப் பொறியியல் கல்லூரியை, தேசிய தொழில்நுட்ப நிறுவனமாக மாற்றுதல்**

6.5. திருச்சிராப்பள்ளி மண்டலப் பொறியியல் கல்லூரியினை தேசிய தொழில்நுட்ப நிறுவனமாக மாற்றுவதற்கான மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் செயற்குறிப்பினை ஏற்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இம்மாற்றத்தின் பயனாக திருச்சிராப்பள்ளி மண்டலப் பொறியியல் கல்லூரி இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (I.I.T.) இணையான உயர் நிலையை அடையும். இது தரம் மிக்க பொறியாளர்களை உருவாக்கவும், தமிழ்நாட்டிலுள்ள மாணவர்களின் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தவும் உதவும். உலகெங்கும் உள்ள பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெறவும் இது பேருதவியாக இருக்கும்.

## 7. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், நகர மற்றும் கிராமப்புற மக்களிடையே, குறிப்பாக மாணவ சமுதாயத்தினரிடையே அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

7.2. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் எட்டுவிதமான அறிவியல் தலைப்புகளில் காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டு, 600 நேர்முகமாகப் பழகும் காட்சிப் பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளன.

7.3. நகர்ப்புற வளர்ச்சிக்கூடம் எனும் புதிய காட்சிக்கூடம், நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய காட்சிப் பொருட்கள், விரைந்து பெருகிவரும் துறைகளான வீடு கட்டமைப்பு, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், வடிகால் மற்றும் சுகாதாரம், மாசுக் கட்டுப்பாடு, எதிர்கால சென்னையை திட்டமிடுதல் ஆகியவற்றில் அமைக்கப்பட்டு வருகின்றன.

7.4. மேலும் கருத்தரங்கம், பயிலரங்கம், மாணவர்களுக்கான வினாடி வினா போட்டி மற்றும் முக்கிய வானியல் நிகழ்வுகளின்போது அவை குறித்த விளக்கம் செய்யும் முகாம்கள், சிறப்புத் தொலைநோக்கி மூலம் வானினை நோக்குதல் ஆகியவற்றை இம்மையம் சிறப்பாக நடத்தி வருகிறது.

7.5. மண்டல அறிவியல் மையம் "அண்ணா அறிவியல் மையம்" என பெயரிடப்பட்டு முதற்கட்டமாக கோளரங்கம் ரூ.128.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, இயங்கி வருகிறது. இதைத்தவிர, அரசு ரூ.39.00 இலட்சத்தை கோளரங்கக் கருவி கணினி தொடர்புக்காக மானியமாக வழங்கியுள்ளது. இக்கோளரங்கத்தில் உள்ள படக்கருவி மற்றும் இதர சாதனங்கள் ரூ.150.00 இலட்சம் மதிப்பிற்கு "இந்திய-சப்பானியப் பண்பாட்டு உறவின்" அடிப்படையில் சப்பான் அரசிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. இம்மையத்தில், ரூ.30.00 இலட்சம் செலவில் காட்சிக்கூடம் கட்டவும், அதில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காட்சிப் பொருட்கள் அமைக்கவும் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த அறிவியல் மையத்தில் இந்தியன் ஆயில் நிறுவனத்தினர், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் மூலம் அளிக்கப்பட இருக்கும் ரூ.30.00 இலட்சத்தில் "சுற்றுச்சூழல் காட்சிக்கூடம்" ஒன்று அமைக்கப்பட உள்ளது. இந்தக் காட்சிக் கூடங்கள் 2003-2004 ஆம் நிதியாண்டில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. மேலும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.140.00 இலட்சம் செலவில் காட்சிக் கூடங்கள் காட்சிப் பொருட்களுடன் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

7.6. கோயம்புத்தூரில், மண்டல அறிவியல் மையம் கோளரங்கத்துடன் அமைத்திட அந்நகரின் அருகே உள்ள விளாங்குறிச்சி கிராமத்தில் 5.91 ஏக்கர் நிலத்தினை மையம் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளது. கோளரங்கத்திற்கான படக் கருவிகள் மற்றும் இதர சாதனங்களை ரூ.600.00 இலட்சம் செலவில் வெளிநாட்டிலிருந்து பெற்றிட உயர் மட்ட "நிதி திரட்டும் குழு" ஒன்றும் அரசால் அமைக்கப்பட உள்ளது. கோளரங்கக் கட்டடம் ரூ.300.00 இலட்சம் அளவில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.140.00 இலட்சம் செலவில் காட்சிக்கூடங்கள் காட்சிப் பொருட்களுடன் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அரசால் அனுமதிக்கப்பட்ட ரூ.10.00 இலட்சம் மானியத் தொகையினைக் கொண்டு கையகப்படுத்தப்பட்ட நிலத்தினைப் பாதுகாக்க சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

7.7. வேலூரில், மாவட்ட அறிவியல் மையம் அமைத்திட அனுமதி அளிக்கப்பட்டு. அதற்கான 0.30.5 ஹெக்டேர் நிலம் சத்துவாச்சாரி என்ற இடத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 4 அறிவியல் காட்சிக்கூடங்கள் ரூ.230 இலட்சம் செலவில் பத்தாவது ஐந்தாண்டுத்



திட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரசால் மானியமாக அனுமதிக்கப்பட்ட ரூ.5.00 இலட்சத்தில் உத்தேச இடத்தை பாதுகாக்க வேலி அமைக்கப்பட்டுள்ளது.

7.8. தமிழ்நாட்டில் உள்ள 25 மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.10.00 கோடி அளவில் மொத்தம் ரூ.250.00 கோடி செலவில் மாவட்ட அறிவியல் மையங்கள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிதியுதவி பெற, வளர்ச்சி அடைந்த நாடுகள் மற்றும் பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்கள், கொடை வள்ளல்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களான UNICEF, WHO, UNESCO ஆகியவற்றுக்கு நிதியுதவி கோரி அரசு மூலமாக திட்ட வரையறைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

7.9. சென்னையில் பி.எம். பிர்லா கோளரங்கம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அதன் பங்கு, பணிகள் மூலம் கல்வி நிறுவனங்களின் மத்தியில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. சென்னையிலுள்ள பி.எம். பிர்லா கோளரங்கத்தை இந்தியாவிலும் பிற நாடுகளிலும் உலகத்தரம் வாய்ந்த கோளரங்கங்களின் வரிசையில் உயர்த்துவதற்கு X-Y மேடை அமைப்பை அங்கு நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் பேருதவியாக அமையும். சப்பானிய நாட்டில் தயாரிக்கப்படுகின்ற X-Y மேடையின் விலை சுமார் ரூ.26.00 இலட்சமாகும். எனவே, ரூ.26.00 இலட்சம் 2003-2004 ஆம் நிதியாண்டின் பகுதி 2 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

நமது மாநிலத்தின் வளர்ச்சி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் முன்னேற்றத்தின் மூலம் ஏற்பட முடியும் என்பதை உணர்ந்து தமிழக அரசு, பலவிதமான ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது. அரசின் அறிவியல் திட்டங்களை உருவாக்கவும், அறிவியல் தொழில்நுட்பத்தை பரப்பவும் இளைஞர்களிடையே அறிவியல் உணர்வை ஊக்குவிப்பதற்கும், வெவ்வேறு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அமைப்புகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் செயல்களை ஒருங்கிணைப்பதற்காகவும் அறிவியல் தொழில்நுட்ப செயல்களை மத்திய அரசுடன் சேர்ந்து செயல்படுத்துவதற்காகவும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் தமிழக அரசால் நிறுவப்பட்டது.

[2003 ஏப்ரல் 4

**அறிவியல் தொழில்நுட்ப திட்டங்கள்**

8.2. நம் மாநிலத்திலுள்ள தகுதி வாய்ந்த, அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நமது மாநிலத்திற்கு உபயோகமுள்ள, முக்கியமான, சமூக சம்பந்தமான திட்டங்களில் ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை ஆராய்ச்சி செய்வதற்கு ரூ.5.00 இலட்சங்கள் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

**மாணவர் ஆராய்ச்சித் திட்டம்**

8.3. மாணவர்களிடையே வெளிப்படாமல் இருக்கும் திறமைகளை அறிவியல் தொழில்நுட்பத்திற்கு பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், அறிவியல் தொழில்நுட்பவியல், மருத்துவயியல், வேளாண்மையியல், கால்நடையியல், சமூகவியல், உயிரியியல் போன்ற துறைகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கு சமூக சம்பந்தமுள்ள ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு அதிகபட்சமாக ரூ.10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

**கருத்தரங்கு, சூழியம், அறிவியல் மாநாடு நடத்துவதற்கு ஓரளவு நிதியுதவி அளித்தல்**

8.4. இத்திட்டம் அறிவியலறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டு கருத்தரங்குகள், சூழியங்கள், அறிவியல் முகாம்கள் நடத்தி அறிவியல் அறிவுப் பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள அமைப்புகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதி உதவி அளித்தல்**

8.5. இத்திட்டத்தின்கீழ், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகள் / ஆராய்ச்சி மையங்களில் பணிபுரிந்து வரும் 40 வயதுக்குட்பட்ட வளர்ந்து வரும் இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு மாநாடுகளில் கலந்துகொண்டு தங்களுடைய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிக்க செல்லுவதற்குத் தேவையான பயணத் தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய உள்நாட்டு மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு 100 விழுக்காடு ரயில் பயணக்கட்டணமும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது.



2003 ஏப்ரல் 4]

**இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்**

8.6. 35 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக் கொள்வதற்காக, அவர்களை வெளிமாநிலத்திலுள்ள, பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஏதாவது ஒன்றில் ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும் நுண் கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் ஊக்கப்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி அவர்களுக்கு தாங்கள் பணிபுரியும் தாயக நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக மாதம் ரூ.3000/- ஆதரவு ஊதியமாக இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். மேலும் அவர்கள் தேர்வு செய்யப்பட்ட இடத்திற்குச் சென்று வருவதற்கு ஆகும் பயணச் செலவும் அரசு விதிமுறைப்படி ஈடு செய்யப்படும்.

**தமிழக அறிவியலறிஞர்கள் விருது**

8.7. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் i) வேளாண்மை, ii) உயிரியல், iii) வேதியியல், iv) பொறியியல் தொழில்நுட்பம், v) சுற்றுப்புறச் சூழலியல், vi) மருத்துவம், vii) கணிதவியல், viii) இயற்பியல், ix) சமூகவியல், x) கால்நடை மருத்துவயியல் போன்ற 10 துறைகளைச் சார்ந்த சிறந்த அறிவியலறிஞர்களுக்கு தமிழக அறிவியலறிஞர்கள் என்ற பெயரில் விருதுகள் அவர்களை ஊக்குவித்து பெருமைப்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றன. இந்த விருதுக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய துறையில் அவர்களுடைய செயல்திறமை, மற்றும் ஆராய்ச்சியின் வாயிலாக தமிழகத்தின் அறிவியல் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக முக்கியப் பங்கு வகித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியலறிஞர்களுக்கு ரூ.10,000/- ரொக்கமும், தாமிரப் பட்டயமும், சான்றிதழும் வழங்கப்படும்.

**அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்**

8.8. அறிவியல் தொழில்நுட்பம் பற்றிய தகவல்களை பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே பரப்புவதற்காக குறிப்பாக அரசிதழ் பதிவுபெறாத அமைப்புகள் வெளிக்கொணரும் தமிழில் வெளிவரும் அறிவியல் வெளியீடுகளுக்கு, ஓரளவு நிதி உதவி வழங்குவதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

**அறிவியல் தொழில் நுட்பத்தைப் பரப்புதல்**

8.9. அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொது மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொண்டு நிறுவனங்கள் போன்ற அமைப்புகள் அறிவியல் கண்காட்சிகள், ஆசிரியர் பயிற்சி முகாம்கள், பொது விரிவுரைகள், காணொளி-ஒளிக்காட்சி காட்சிவில்லைகள், வினாடி வினாப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்**

8.10. நமது மாநிலத்தில் எட்டாவது வகுப்பு பயின்று வரும் அறிவியலில் திறமை வாய்ந்த இளம் மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி போதனை செய்து அவர்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்பை தேர்ந்தெடுப்பதற்குரிய ஆர்வத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கு நுழைவுத் தேர்வு மூலம் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாணவர்களுக்கு அவர்கள் பத்தாவது வகுப்பு முடிக்கும் வரை, பெயர் பெற்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் மே திங்களில் ஒரு மாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஏனைய செயல் திட்டங்கள்.**

8.11. ஆய்வின் இறுதி நிலையில் உள்ள சில திட்டங்களைக் கண்டறிந்து அதை அறிவியல் அறிஞர்கள் ஆய்வகத்திலிருந்து, சமுதாயத்திற்குச் சென்றடையும் வகையில் செயல்படுத்த ஏதுவாக ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் சில திட்டங்களைத் தொடங்கவும், அதை மக்களிடையே பரப்பவும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் உத்தேசித்து உள்ளது. இதற்காக 2003-2004 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

8.12. புதிய அறிவாற்றலுடன் வரும் விஞ்ஞானிகளுக்கு, அவர்களது அறிவாற்றல் உரிமையை பதிவு செய்வதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும், தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப மன்றம்



மூலமாக அறிவாற்றல் உரிமை நாட்டும் விழிப்புணர்வுக் குழுமம் ஒன்றை ரூ.1.50 இலட்சம் செலவில் ஏற்படுத்துவதற்கு தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப மன்றம் உத்தேசித்துள்ளது. இதற்காக 2003-2004-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**9. அறிவியல் நகரம்**

சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் அமைந்துள்ள மத்திய மற்றும் மாநில அரசினைச் சேர்ந்த இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், அண்ணா பல்கலைக்கழகம், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அறிவியல் மையம் போன்ற சுமார் 60 ஆராய்ச்சி நிறுவனங்களை உள்ளடக்கிய இவ்வளாகத்தை "அறிவியல் நகரம்" என அழைக்கிறோம். இவ்வறிவியல் நகரத்தின் நோக்கம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வளர்ப்பதாகும். இந்த அறிவியல் நகரத்தில் அமைந்துள்ள நிறுவனங்கள் அறிவியல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த சுமார் 1500-க்கும் மேற்பட்ட முனைவர் பட்டம் பெற்றவர்களையும், 3500 ஆராய்ச்சியாளர்களையும் மற்றும் 1500 ஆராய்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கியதாகும். அறிவியல் நகரத்தில் உள்ள நிறுவனங்களில், சுமார் ரூ.500.00 கோடிக்கு மேல் மதிப்புள்ள அறிவியல் தொழில்நுட்பப் பரிசோதனை உபகரணங்களும் கருவிகளும் உள்ளன.

9.2. அறிவியல் நகரத்தில் கீழ்க்கண்ட செயல் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன:-

**புள்ளி விவரங்களைக் கொண்ட அடிப்படைத் தளங்களை உருவாக்குதல்**

1) அறிவியல் அறிவினைச் சார்ந்த அடிப்படைத் தளங்களை சேகரித்து வைத்தல். இந்த அடிப்படைத் தளமானது அரசு சார்ந்த மற்றும் சாரா தன்னார்வமிக்க நிறுவனங்களுக்கு அறிவியலறிஞர்களை இனம் காண உதவும். இந்த அடிப்படைத் தளத்தில் அறிவியலாளர்களை இனம் காண சில முக்கிய வழிவகைகளான இணையம் மூலம் பெயரையோ, துறையையோ மையமாக வைத்துத் தேடுவதற்கு வழிவகை செய்யப்படும். இச்செயலின் முக்கியத்துவத்தைக் கருதி இதை தமிழ்நாடு முழுவதும் செயல்முறைப்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 4

2) அறிவியல் நகரத்தில் ரூ.300 கோடி மதிப்பிற்கு ஆய்வு வசதிகள் உள்ளன. ஆய்வு வசதிகளின் புள்ளிவிவரங்களை சேகரித்து தொகுத்து இணைய தளத்தின் மூலமாக எல்லோரும் அறிய வழிவகுக்கப்படுகிறது.

3) அறிவியல் நகரத்தைச் சுற்றியுள்ள பல்வேறு நிறுவனங்களில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மனித ஆற்றல் குறித்து விவரம் சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2003-2004-ஆம் ஆண்டிற்கு ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**செய்தி மடல் மற்றும் புகைப்படம்**

9.3. அறிவியல் நகரத்தின் செய்தி மடலில் உலகம் முழுதும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொகுத்து வழங்கப்படுகின்றன. இச்செய்தி மடலில் தலைசிறந்த அறிவியல் நிபுணர்களின் பொதுமக்களுக்கான செய்தியும் மற்றும் இந்நிபுணர்கள் எழுதும், சமீப காலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய கட்டுரைகளும் இடம் பெறும். மேதகு ஜனாதிபதி முனைவர் A.P.J. அப்துல் கலாம் அவர்கள் இச்செய்தி மடலைப் படித்து தனது பாராட்டினைத் தெரிவித்துள்ளார்கள். இச்செய்தி மடல் அனைத்து அறிவியல் நகர உறுப்பினர் நிறுவனங்களில் உள்ள நூலகங்களுக்கும், ஆய்வுக் கட்டுரை எழுதிய நிபுணர்களுக்கும் மற்றும் அறிவியல் நகரத்தில் உள்ள தலைசிறந்த நிபுணர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

9.4. அறிவியல் நகரம் பலவகையான அறிவியல் சார்ந்த செயல்களில் ஈடுபட்டு வருகிறது. இச்செயல்களைப் பற்றி ஆதாரங்கள் மற்றும் செய்தி மடலில் தொகுப்பதற்கும் புகைப்படங்கள் தேவைப்படுவதால் ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன.

**அறிவியலை பிரபலப்படுத்துதல்**

9.5. அறிவியல் நகரத்தின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாக அறிவியலை பிரபலப்படுத்துதல் இடம் பெறுகிறது. இச்செயலில் அறிவியல் சார்ந்த தலைசிறந்த விரிவுரைகள், பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் நிபுணர்களைச் சந்தித்தல் மற்றும் இணைய தளத்தின் மூலம் வினாடி வினா நிகழ்ச்சி, அறிவியல் நகர உறுப்பினர் நிறுவனங்களுடன் சேர்ந்து அறிவியல் கூட்டங்கள் நடத்துதல், அறிவியல் கண்காட்சிகள்,



2003 ஏப்ரல் 4]

அறிவியல் முகாம் நடத்துதல், பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் விருதுகள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. தலை சிறந்த அறிவியல் ஆய்வுத் திட்டங்கள், அறிவியல் செயல்பாடுகள் செய்த பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் விருதுகள் ஒவ்வொரு வருடமும் தேசிய அறிவியல் தினத்தன்று வழங்கப்படுகிறது.

**பெண்கள் முன்னேற்றப் பிரிவு (Gender Cell)**

9.6. பெண்களின் முன்னேற்றம் தமிழக அரசின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாகும். இதை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் நகரமும் EDP மற்றும் EAP நிகழ்ச்சிகள் மூலம் பெண்களினிடையே உள்ள செயல்திறன்களை வெளிக்கொணர்ந்து, சுயமாக செயல்பட்டு அவர்கள் தங்களது சொந்தக் கால்களில் நிற்பதற்கு வழிவகுக்கிறது. பெண் அறிவியல் நிபுணர்களின் நிலையைக் கண்டறிய, அறிவியல் நகரம் நாடு முழுவதும் உள்ள பெண் நிபுணர்களின் புள்ளி விவரங்களைச் சேகரிக்கிறது. இப்புள்ளிவிவரங்கள் இணையதளத்தின் மூலம் எல்லோருக்கும் கிடைக்க வழி வகுக்கப்பட்டு வருகிறது. பெண் அறிவியல் நிபுணர்களை ஊக்குவிப்பதற்காக, அறிவியல் நகரம் இளம்பெண் விஞ்ஞானி விருது மற்றும் வாழ்நாள் பெண் சாதனையாளர் விருது ஆகிய விருதுகளையும் வழங்குகிறது.

**நூலகங்களை இணைத்தல்**

9.7. நூலகங்கள் அறிவின் வளர்ச்சிக்கு மூலகாரணங்களாகத் திகழ்கின்றன. நூலகங்களின் முக்கியத்துவத்தைக் கருதி அறிவியல் நகரத்தில் உள்ள 40 நூலகங்களையும் இணைக்க அறிவியல் நகரம் முனைந்துள்ளது. அறிவியல் நகரத்தில் உள்ள அனைத்து நூலகங்களிலும் உள்ள புத்தகங்களைப் பற்றிய கணக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவை அல்லாது எல்லா நூலகங்களையும் இணைக்க முதல் கட்டமாக கணினி மயமாக்கப்படுகின்றன. கணினிமயமாக்கப்பட்ட நூலகங்களின் ஒரு பிரதி அறிவியல் நகரத்திற்கு அந்தந்த நூலகங்களின் மின் தகடு மூலம் வழங்கப்படும்.

நூலகங்களில் உள்ள புத்தகங்களைப் பற்றி, உலகில் எந்த மூலையில் இருந்தும் அறிய, இணைய தளத்தின் மூலம் வழிவகுக்கப்படுகிறது. அறிவியல் நகரம் நூலக அட்டைகளை உறுப்பினர் நிறுவனங்களுக்கு வழங்கும். இவ்வட்டைகள் மேற்கூறிய நாற்பது நூலகங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### சுற்றுச்சூழல் சார்ந்த செயல்பாடுகள்

[2003 ஏப்ரல் 4

9.8. இன்றைய சுற்றுச்சூழல் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போல் இல்லை. சென்னை மாநகரம் மாசு படியும் அளவைக் காணும்பொழுது நம்மை அச்சுறுத்துகிறது. தென்சென்னை சுற்றுப்புறம் மற்ற இடங்களை விட சிறந்து விளங்குகிறது. இந்நிலையை தக்க வைத்துக் கொள்ளவும், இப்பகுதி மேலும் மாசுபடாமல் பாதுகாத்துக் கொள்ளவும், உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழக அரசு அறிவியல் நகரத்தின் கொள்கையினை வழிவகுக்கும்போது சுற்றுச்சூழல் மேம்படுத்துதலை முக்கியமான செயல்பாடாக வரையறுத்துள்ளது. அறிவியல் நகரத்தை தூய்மையான நகரமாக மாற்றுவதற்காக கீழ்க்கண்டுள்ள செயல்பாடுகளை அரசு நிர்ணயித்துள்ளது:—

1) தூய்மையான சுற்றுச்சூழலை பராமரித்தல்
2) அறிவியல் நகரத்தை மாசற்ற நகரமாக மாற்றுதல்
3) புகை பிடிக்காத இடமாக மாற்றுதல்
4) பசுமைச் சூழலை ஏற்படுத்துதல்
5) மின்கல ஊர்திகளைப் பயன்படுத்துதல்
6) அறிவியல் நகரத்தை குப்பையில்லா நகரமாக மாற்றுவதற்காக மண்புழு தொழில்நுட்பத்தைப் பின்பற்றுதல்

9.9. அறிவியல் நகரத்தை குப்பையில்லா நகரமாக மாற்றுவதற்காக மண்புழு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு மண்புழு தொட்டிகள் உறுப்பினர் நிறுவனங்களில் கட்டப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி மழைநீர் சேகரித்தல் தொழில்நுட்பமும் எல்லா உறுப்பினர் நிறுவனங்களிலும் கட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு செய்வதால் சென்னை முழுவதுமாக நீர்மட்டம் அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

### தகவல் மையம் ஏற்படுத்துதல்

9.10. அறிவியல் நகரத்தின் தகவல் மையத்தில் கீழ்க்கண்டவை இடம்பெறும்:—

1. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஹோட்டல் மேனேஜ்மென்ட் கல்லூரிகள் பற்றிய தகவல்கள் இணைய தளத்தில் சேகரித்து வைத்தல்.



2003 ஏப்ரல் 4]

2. தனி உரிமைச் சான்றிதழ் வழங்க அறிவுரை மற்றும் சேவை செய்தல்.
3. மேற்கூறிய விவரங்கள் தவிர அறிவியல் சார்ந்த திட்டங்களுக்கு உலகளாவிய நிதியுதவி செய்யும் நிறுவனங்களின் தகவல்களும் இந்த மையத்தில் அமைந்திருக்கின்றது. இது தவிர உலகம் முழுவதும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் இந்தத் தகவல் மையம் மூலம் தெரிந்து கொள்ள இயலும். இந்தத் தகவல் மையத்தில் அறிவியல் நகரத்தின் செயல்பாடுகள், நடக்கவுள்ள திட்டங்கள், உறுப்பு நிறுவனங்களின் செயல்பாடுகள் ஆகியவையும் அடங்கி இருக்கும்.

### அறிவியல் நகரத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்டுதல்

9.11. தரமணியில் உள்ள "அறிவியல் நகரத்திற்கு" அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காக அரசு ஏற்கனெவே வழிவகை செய்துள்ளது. மேற்காண் கட்டடம் சென்னை கோட்டூர்புரத்திலுள்ள பிர்லா கோளரங்க வளாகத்தில் கட்டப்பட்டு வருகிறது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூ.106.80 இலட்சம் ஆகும். கட்டுமானப் பணிகள் முடிவடைந்தபின் இக்கட்டடம் அறிவியல் நகரம், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்ற அலுவலகங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

## 10. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

ஆவணங்களின் பாதுகாப்பிற்காக நவீன தொழில்நுட்ப உத்திகள் புகுத்தப்பட்டு தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 21-ஆம் நூற்றாண்டில் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. மைக்ரோ பிலிம் ப்ராஸஸர் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மைக்ரோ பிலிம் ரோல்கள் பாதுகாத்திடும் அறையில் குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 350 ஆண்டுகளுக்கு முந்தைய டச்சு ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. 1657 முதல் 1825 ஆம் ஆண்டுகளைச் சார்ந்த இத்தகு ஆவணங்களை நெதர்லாண்டு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பாதுகாக்கும் செயற்குறிப்பு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியானது தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஆவணங்களை பாதுகாப்பு முறைப்படி நெதர்லாண்டு நாட்டின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

*10.2.* ஆவணக் காப்பகத்தில், சிப்பாய்க் கலகத்திற்கு முந்தைய காலத்தைச் சார்ந்த ஆவணங்கள் மிகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றிற்கு பொருள் விவர அட்டவணை முழுமையாக இல்லை. பழைய முறையிலான அட்டவணைகளைக்கொண்டு ஆவணங்கன.ள ஆய்வு செய்வதில் சிரமமும், காலதாமதமும் ஏற்படுகின்றது. எனவே ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவும் பொருட்டு, முதற்கட்டமாக பொருள் விவர அட்டவணைகளைக் கணினிப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது.

*10.3.* தலைமைச் செயலக அரசாணைகள் இடைநிலை ஆவணக் காப்பகத்தில் பெறப்பட்டு பாதுகாக்கப்பட்டு தலைமைச் செயலக நிர்வாகத் தேவைக்கேற்ப அவ்வப்போது வழங்கப்படுகின்றன. தலைமைச் செயலகத்திலிருந்து பெறப்படும் ஆவணங்களை சிறந்த முறையில் பராமரிக்கும் பொருட்டு *2003-2004*ஆம் ஆண்டில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட உள்ளது. பாரம்பரியமிக்க தமிழ்நாடு ஆவணக் காப்பக கட்டடத்தினை பழுதுபார்க்கவும், எழுதுபொருள் பிரிவிற்காகவும் அலுவலக ஆவண அறைக்காகவும் ஆவணக் காப்பக வளாகத்தில் தனியாக கட்டடம் ஒன்று கட்டுவதற்காக 2003-2004 ஆம் நிதியாண்டில் ரூ.14.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால வைப்பிடத்தில் உள்ள ஏழு இலட்சம் ஆவணங்களை கணினியில் பதிவு செய்யவேண்டும். இதனால் தேடுகிற நேரம் குறைவதோடு பொருள்வாரியாக ஆவணங்களைத் தேடுவதற்கும் பயன்படும். தற்போதுள்ள ஆவணங்களைப் பற்றிய விவரதளம் உருவாக்கும் திட்டம் மூன்றாண்டுக் காலத்தில் நிறைவேறும்.

• *10.4.* ஆவணக் காப்பக நூலகத்தில் புத்தக அட்டவணை (Card Catalogue) முறையில் பராமரிக்கப்படுகின்றன. இதனைச் சர்வதேச தரத்திற்கு மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளது. முதற்கட்டமாக அரிய புத்தகங்கள் கணினிப்படுத்தப்பட உள்ளன.

## 11. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

மாநில அளவிலான உயர்கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர்கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் உதவும் வகையில், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் உருவாக்கப்பட்டது. உயர் கல்வியினை மேம்படுத்த இம்மன்றம் அரசுக்கு அறிவுரை வழங்கும் செயல்பாடுகள் குறித்து,



வரையறுக்கப்பட்டுள்ளது. பல்கலைக் 1992 ஆம் ஆண்டு சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களுக்கு மொத்த மானியம் வழங்குவது மற்றும் படிப்புக் கட்டண அமைப்பினை நிர்ணயம் செய்வதற்கான நெறிமுறைகள் குறித்து இம்மன்றம் அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

*11.2.* அண்மையில் உயர்கல்வியில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அண்ணா பல்கலைக்கழகம் தற்போது இணைப்பு பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகமும் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகமும், இணைப்புப் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டுள்ளன. வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் சென்னையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆகியவை புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. இதுதவிர, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அனைத்தும் அவை அமைந்திருக்கும் பகுதியைச் சார்ந்த பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக ஆக்கப்பட்டுள்ளன.

*11.3.* புதிய பல்கலைக்கழகங்கள் இரண்டும் விரைவாக வளர்ச்சி பெற சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது. பல்கலைக்கழக நிதிநல்கைச் சட்டத்தின் பிரிவு 12(பி)-ன்கீழ் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதி உதவிகளைப் பெறுவதற்கு ஏதுவாக, பெரியார் பல்கலைக்கழகத்துடன் மேற்சொன்ன இரு பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளையும் முடுக்கிவிட வேண்டும். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், இந்திரா காந்தி திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் வழியில் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும். இதர பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் முன்னேற்றம் பெறவேண்டும். இதன் பின்னணியில், பல்கலைக்கழக மானியங்களைப் பெறவும், அதை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும் பல்கலைக்கழகங்களுக்கு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தக்க அறிவுரைகளை வழங்குகிறது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதி உதவிகளை முழுமையாகப் பெறுவதற்கும், பல்கலைக்கழகம், கல்லூரிகள் மற்றும் அரசுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் செயல்படும். நிதிநெருக்கடி மிகுந்த இக்காலத்தில் நிதி ஆதாரங்களை உருவாக்கவும் அதனை பெருக்கிக்கொள்வதற்கும் பல்கலைக்கழகங்களுக்கு அறிவுரை வழங்கும் பொறுப்பினை தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் ஏற்றுள்ளது. பெரும் பொறுப்புகளை சுமப்பதற்கேற்றவாறு இம்மன்றத்தினை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

[2003 ஏப்ரல் 4

## இணைப்பு -1

மாநிலத்திலுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை (2002-2003)

| வருடம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1997-1998 | 21 | 35 | 112 | 168 |
| 1998-1999 | 21 | 35 | 143 | 199 |
| 1999-2000 | 22 | 35 | 145 | 202 |
| 2000-2001 | 22 | 35 | 148 | 205 |
| 2001-2002 | 22 | 35 | 146 | 203 |
| 2002-2003 | 22 | 35 | 146 | 203 |

## இணைப்பு -2

மாநிலத்திலுள்ள பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை (2002-2003)

| வருடம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | நிகர்நிலை பல்கலைக் கழகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1997-1998 | 7* | 3 | 76 | - | 86 |
| 1998-1999 | 7* | 3 | 106 | - | 116 |
| 1999-2000 | 7* | 3 | 113 | - | 123 |
| 2000-2001 | 7* | 3 | 143 | - | 153 |
| 2001-2002 | 7* | 3 | 207 | 5 | 222 |
| 2002-2003 | 7* | 3 | 224 | 5 | 239 |

*திருச்சி மண்டல பொறியியற் கல்லூரி உள்ளடக்கியது.



2003 ஏப்ரல் 4]

## இணைப்பு -3

மாவட்டவாரியாக மாநிலத்திலுள்ள மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் (2002-2003)

| வஎண் | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01. | சென்னை | 1 | - | - | 1 |
| 02. | திருவண்ணாமலை | - | - | 1 | 1 |
| 03. | கோயம்புத்தூர் | 1 | 1 | - | 2 |
| 04. | திருச்சிராப்பள்ளி | - | 1 | - | 1 |
| 05. | நாகப்பட்டினம் | - | 1 | - | 1 |
| 06. | திண்டுக்கல் | - | 1 | - | 1 |
| 07. | மதுரை | 1 | - | - | 1 |
| 08. | விருதுநகர் | - | 1 | - | 1 |
| 09. | தூத்துக்குடி | 1 | - | - | 1 |
| | மொத்தம் | 4 | 5 | 1 | 10 |

## இணைப்பு-4

மாவட்டவாரியாக மாநிலத்திலுள்ள மகளிர் பொறியியற் கல்லூரிகள் (2002-2003)

| வஎண் | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01. | தஞ்சாவூர் | - | - | 1 | 1 |
| 02. | வேலூர் | - | - | 1 | 1 |
| 03. | நாமக்கல் | - | - | 1 | 1 |
| 04. | விழுப்புரம் | - | - | 1 | 1 |
| | மொத்தம் | - | - | 4 | 4 |

## தொழில்நுட்பக் கல்வி

### இணைப்பு-5

மாவட்டவாரியாக மாநிலத்திலுள்ள பொறியியல் கல்லூரிகள் (2002-2003)

| வ. எண் | மாவட்டம் | அரசு | ஆர்.இ.சி. | அரசு மானியம் | நிகர்நிலை பல்கலைக் கழகம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | சென்னை | - | - | - | - | 2 | 2 |
| 02. | திருவள்ளூர் | - | - | - | - | 27 | 27 |
| 03. | காஞ்சிபுரம் | - | - | - | 2 | 56 | 58 |
| 04. | கடலூர் | - | - | - | - | 4 | 4 |
| 05. | விழுப்புரம் | - | - | - | - | 6 | 6 |
| 06. | வேலூர் | 1 | - | - | 1 | 10 | 12 |
| 07. | திருவண்ணாமலை. | - | - | - | - | 6 | 6 |
| 08. | தருமபுரி | 1 | - | - | - | 4 | 5 |
| 09. | சேலம் | 1 | - | - | - | 2 | 3 |
| 10. | நாமக்கல் | - | - | - | - | 10 | 10 |
| 11. | ஈரோடு | - | - | - | - | 9 | 9 |
| 12. | கோயம்புத்தூர் | 1 | - | 2 | 1 | 16 | 20 |
| 13. | நீலகிரி | - | - | - | - | 1 | 1 |
| 14. | திருச்சிராப்பள்ளி. | - | 1 | - | - | 9 | 10 |
| 15. | கரூர் | - | - | - | - | 1 | 1 |
| 16. | பெரம்பலூர் | - | - | - | - | 2 | 2 |
| 17. | தஞ்சாவூர் | - | - | - | 1 | 3 | 4 |
| 18. | நாகப்பட்டினம் | - | - | - | - | 2 | 2 |
| 19. | திருவாரூர் | - | - | - | - | 2 | 2 |



| வ. எண் | மாவட்டம் | அரசு | ஆர்.இ.சி. | அரசு மானியம் | நிகர்நிலை பல்கலைக் கழகம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 20. | புதுக்கோட்டை | - | - | - | - | 8 | 8 |
| 21. | திண்டுக்கல் | - | - | - | - | 5 | 5 |
| 22. | மதுரை | - | - | 1 | - | 4 | 5 |
| 23. | தேனி | - | - | - | - | 2 | 2 |
| 24. | சிவகங்கை | 1 | - | - | - | 5 | 6 |
| 25. | இராமநாதபுரம் | - | - | - | - | 2 | 2 |
| 26. | விருதுநகர் | - | - | - | - | 5 | 5 |
| 27. | திருநெல்வேலி | 1 | - | - | - | 10 | 11 |
| 28. | தூத்துக்குடி | - | - | - | - | 4 | 4 |
| 29. | கன்னியாகுமரி | - | - | - | - | 7 | 7 |
| | **மொத்தம்** | 6 | 1 | 3 | 5 | 224 | 239 |

### இணைப்பு-6

மாவட்டவாரியாக மாநிலத்திலுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் (2002-2003)

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01. | சென்னை | 8 | 2 | 1 | 11 |
| 02. | திருவள்ளூர் | - | 2 | 14 | 16 |
| 03. | காஞ்சிபுரம் | - | 1 | 15 | 16 |
| 04. | கடலூர் | - | 1 | 6 | 7 |
| 05. | விழுப்புரம் | - | - | 5 | 5 |
| 06. | வேலூர் | 1 | 1 | 8 | 10 |
| 07. | திருவண்ணாமலை | - | - | 8 | 8 |
| 08. | தருமபுரி | 1 | - | 7 | 8 |

[2003 ஏப்ரல் 4

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 09. | சேலம் | - | 1 | 7 | 8 |
| 10. | நாமக்கல் | - | 1 | 8 | 9 |
| 11. | ஈரோடு | - | 2 | 7 | 9 |
| 12. | கோயம்புத்தூர் | 2 | 6 | 10 | 18 |
| 13. | நீலகிரி | 1 | 1 | - | 2 |
| 14. | திருச்சிராப்பள்ளி | 1 | 2 | 4 | 7 |
| 15. | கரூர் | - | - | 1 | 1 |
| 16. | பெரம்பலூர் | - | - | 3 | 3 |
| 17. | தஞ்சாவூர் | - | 2 | 2 | 4 |
| 18. | நாகப்பட்டினம் | 1 | 2 | 2 | 5 |
| 19. | திருவாரூர் | - | - | - | - |
| 20. | புதுக்கோட்டை | 1 | - | 3 | 4 |
| 21. | திண்டுக்கல் | - | 2 | 4 | 6 |
| 22. | மதுரை | 2 | 1 | 5 | 8 |
| 23. | தேனி | - | - | 1 | 1 |
| 24. | சிவகங்கை | 1 | 1 | 2 | 4 |
| 25. | இராமநாதபுரம் | - | 1 | 1 | 2 |
| 26. | விருதுநகர் | - | 4 | 4 | 8 |
| 27. | திருநெல்வேலி | - | 1 | 8 | 9 |
| 28. | தூத்துக்குடி | 2 | - | 4 | 6 |
| 29. | கன்னியாகுமரி | 1 | 1 | 6 | 8 |
| | **மொத்தம்** | **22** | **35** | **146** | **203** |



2003 ஏப்ரல் 4]

## கல்லூரிக் கல்வி

### இணைப்பு-7

**கல்லூரிகளின் எண்ணிக்கை விவரம் 2002-2003 (இனவாரியாக)**

| வ. எண் | கல்லூரிகளின் வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | அரசுக் கல்லூரிகள் | உதவிபெறும் கல்லூரிகள் | சுயநிதிக் கல்லூரிகள் | மொத்தம் |
| 1. | கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 60 | 134 | 247 | 441 |
| 2. | கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 1 | 22 |
| 3. | உடற்கல்வியியல் கல்லூரிகள் | .. | 3 | 1 | 4 |
| 4. | கீழ்திசை மொழிக் கல்லூரிகள் | .. | 9 | .. | 9 |
| 5. | சமூகப் பணி பள்ளிகள் | .. | 2 | .. | 2 |
| | **மொத்தம்** | **67** | **162** | **249** | **478** |

### இணைப்பு - 8

**கல்லூரிகளின் எண்ணிக்கை விவரம் 2002-2003 (இனவாரியாக)**

| கல்லூரிகளின் வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 60 |
| உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 134 |
| சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 247 |
| அரசு கல்வியியல் கல்லூரிகள் | 7 |
| உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள் | 14 |
| சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் | 1 |
| உதவிபெறும் கீழ்திசை மொழிக் கல்லூரிகள் | 9 |
| உதவிபெறும் உடற்கல்வியியல் கல்லூரிகள் | 3 |
| சுயநிதி உடற்கல்வியியல் கல்லூரிகள் | 1 |
| உதவிபெறும் சமூகப் பணி பள்ளிகள் | 2 |
| **மொத்தம்** | **478** |

## இணைப்பு - 9

### 2002-2003 ஆம் கல்வியாண்டில் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை விவரம்

| பாடங்களின் பெயர் | அரசுக் கல்லூரிகள் | | உதவிபெறும் கல்லூரிகள் | | சுயநிதிக் கல்லூரிகள் | | மொத்த எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் |
| **இளநிலை பட்ட வகுப்புகள்** | | | | | | | | |
| பி.ஏ. | 1,440 | 19,626 | 24,524 | 29,156 | 1,348 | 2,361 | 40,312 | 51,143 |
| பி.எஸ்சி. | 19,085 | 23,627 | 37,695 | 43,779 | 19,126 | 18,767 | 75,906 | 86,173 |
| பி.சி.ஏ. | | | 1,282 | 909 | 33,912 | 3,052 | 5,194 | 3,961 |
| பி.இ.எஸ். | | | | | 410 | 205 | 410 | 205 |
| பி.காம். | 5,122 | 4,909 | 19,451 | 16,063 | 11,296 | 9,633 | 35,869 | 30,605 |
| பி.பி.ஏ. | 224 | 423 | 1,820 | 885 | 3,349 | 2,595 | 5,393 | 3,903 |
| பி.பி.எம். | 0 | 0 | 839 | 1,217 | 1,776 | 925 | 2,615 | 2,142 |
| பி.லிட். | 0 | 0 | 311 | 1,193 | | | 311 | 1,193 |
| பி.சி.எஸ். | .. | .. | .. | .. | 880 | 441 | 880 | 441 |
| **முதுநிலை பட்ட வகுப்புகள்** | | | | | | | | |
| எம்.ஏ | 768 | 1,345 | 3,627 | 4,919 | 116 | 240 | 4,511 | 6,504 |
| எம்.எஸ்.சி. | 1,187 | 1,585 | 5,465 | 7,637 | 3,855 | 3,504 | 10,507 | 12,728 |
| எம்.காம். | 279 | 232 | 1,972 | 1,896 | 306 | 541 | 2,557 | 2,669 |
| எம்.சி.ஏ. | 103 | 162 | 2,087 | 1,527 | 2,178 | 1,600 | 4,368 | 3,289 |
| எம்.பி.ஏ. | 0 | 0 | 463 | 253 | 1,384 | 680 | 1,847 | 933 |
| பி.ஜி.டி.சி.ஏ. | 10 | 31 | 215 | 365 | 43 | 83 | 268 | 479 |
| **ஆராய்ச்சி பட்ட வகுப்புகள்** | | | | | | | | |
| எம்.பில். | 277 | 307 | 788 | 1,153 | 45 | 171 | 1,110 | 1631 |
| பி.எச்.டி. | 118 | 83 | 278 | 190 | 0 | 0 | 396 | 273 |
| டிப்ளமோ வகுப்புகள் | 0 | 0 | 498 | 234 | 0 | 0 | 498 | 234 |
| பி.எட்./பி.ப்பி.எட். | 492 | 485 | 595 | 1,293 | 23 | 74 | 1,110 | 1,852 |
| எம்.ப்பி.எட். | 0 | 0 | 110 | 129 | 0 | 0 | 110 | 129 |
| இதர வகுப்புகள் | 61 | 97 | 17 | 34 | 508 | 368 | 586 | 499 |
| மொத்தம் .. | 42,166 | 52,912 | 1,02,037 | 1,12,832 | 50,555 | 45,240 | 1,94,758 | 2,10,984 |
| ஒட்டு மொத்தம் | 95,078 | | 2,14,869 | | 95795 | | 4,05,742 | |



## இணைப்பு - 10

### 2002 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்கள், தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் விவரம் (பாடவாரியாக)

| பாடங்கள் | தேர்வு எழுதியவர்கள் | | | தேர்ச்சி அடைந்தோர் (பட்டம் பெறுவோர்) விவரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | மொத்தம் | ஆடவர் | மகளிர் | மொத்தம் |
| பி.ஏ. | 12,207 | 13,428 | 25,635 | 3,897 | 7,757 | 11,654 |
| பி.எஸ்.சி. | 22,620 | 23,679 | 46,299 | 10,469 | 16,192 | 26,661 |
| பி.காம். | 12,724 | 10,456 | 23,180 | 7,002 | 8,064 | 15,066 |
| பிபிஏ. | 3,108 | 2,166 | 5,274 | 2,052 | 1,861 | 3,913 |
| பிபிஎம். | 274 | 332 | 606 | 164 | 286 | 450 |
| பி.லிட். | 57 | 244 | 301 | 53 | 215 | 268 |
| பி.எஸ்சி. மனையியல் | .. | 50 | 50 | .. | 31 | 31 |
| பி.எஸ்சி. கணினி இயல் | 4,079 | 3,038 | 7,117 | 2,764 | 2735 | 5,499 |
| எம்.ஏ. | 1,902 | 2,095 | 3,997 | 870 | 1403 | 2,273 |
| எம்.எஸ்சி. | 4,790 | 5,018 | 9,808 | 1,981 | 2,551 | 4,532 |
| எம்.காம் | 1,071 | 818 | 1,883 | 389 | 432 | 821 |
| எம்.எஸ்சி. கணினி இயல் | 332 | 187 | 519 | 293 | 182 | 475 |
| பி.எட். | 983 | 1,508 | 249 | 966 | 1,498 | 2,464 |
| எம்.எட். | 29 | 16 | 45 | 23 | 12 | 35 |
| எம்.பி.ஏ. | 3,650 | 1,153 | 4,803 | 2,497 | 970 | 3,467 |
| எம்.சி.ஏ. | 5,226 | 2,400 | 7,626 | 4,234 | 2,011 | 6,245 |
| எம்.பில். | 125 | 153 | 278 | 336 | 300 | 636 |
| பி.எச்.டி. | | | | 149 | 60 | 209 |
| எம்.எல்.ஐ.எஸ். | 15 | 9 | 24 | 13 | 9 | 22 |
| பிசிஏ. | 850 | 515 | 1,365 | 582 | 462 | 1,044 |
| டிப்ளமோ வகுப்புகள் | 105 | 43 | 148 | 51 | 39 | 90 |
| சர்டிபிகேட் வகுப்புகள் | 550 | 555 | 1,105 | 273 | 386 | 659 |
| எம்.எஸ்.டபில்யு. | 22 | 49 | 71 | 14 | 43 | 57 |
| எம்.பி.எம். | 5 | 9 | 14 | 4 | 8 | 12 |
| பி.இ.எஸ். | 292 | 320 | 612 | 191 | 157 | 348 |
| பி.ப்பி.எட். | | 40 | 40 | | 40 | 40 |
| எம்.ப்பி.எட். | 82 | 51 | 133 | 40 | 34 | 74 |
| எம்.எப்.சி. | 38 | 8 | 46 | 29 | 7 | 36 |
| மொத்தம் | 75,136 | 68,334 | 1,43,470 | 39,336 | 47,745 | 87,081 |

[2003 ஏப்ரல் 4

# இணைப்பு II

(365 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 37

## பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

**பொதுத் துறை**

பொதுத் துறை, பொது நிர்வாகம் தொடர்பான சில முக்கியமான பணிகளை கவனித்து வருகிறது. தலைமைச் செயலரின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் பொதுத் துறையில் கவனிக்கப்பட்டு வரும் சில முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

* மரபுப் பணி
* அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் நலன்
* சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் அளித்தல்
* முதலமைச்சரின் தனிப் பிரிவு
* முன்னாள் படைவீரர்களின் நலன் மற்றும் முன்னாள் படைவீரர் கழகத்தினை நிர்வகித்தல்
* புதுடில்லி, சென்னை மற்றும் உதகமண்டலத்தில் உள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிர்வகித்தல்
* சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்த பணிகள்
* இந்திய ஆட்சிப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் குறித்த பணிகள்
* தேர்தல்கள் நடத்துதல்
* தலைமைச் செயலக வளாகத்திலுள்ள கட்டடங்களின் பராமரிப்பு
* மாநிலங்களுக்கிடையேயான மற்றும் தென் மண்டலக் குழுக்கள் சம்பந்தப்பட்ட அலுவல்கள்



2. மேற்கண்ட பணிகள் தவிர, மானியக் கோரிக்கை எண் 2-ல் சேர்க்கப்பட்டுள்ள மேதகு ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட பணிகளையும் பொதுத் துறை கவனிக்கிறது. இந்திய குடியரசுத் தலைவர், இந்திய பிரதமர், மத்திய அரசு அமைச்சர்கள் போன்ற சீர்மக்கள் வருகையின்போதும், ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த சீர்மக்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருகையின் போதும், அவை தொடர்பான பணிகளையும் இத்துறையில் உள்ள மரபுச் சீர்முறைப் பிரிவு கவனிக்கிறது. பொதுத் துறையின் மற்றொரு பிரிவு, முன்னாள் படைவீரர், போரில் மரணம் எய்திய வீரர்களின் மனைவியர், முன்னாள் படைவீரர்தம் குடும்பங்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஆகியோர் நலன் குறித்த பணிகளைக் கவனிக்கிறது. தலைமைச் செயலக வளாகத்துக்குள் கட்டுமானப் பணிகள், மேற்பார்வை மற்றும் சுற்றுப்புற பராமரிப்பு ஆகியவையும் இத்துறையைச் சார்ந்ததே ஆகும். இத்துறை மத்திய அரசின் பாதுகாப்புத் துறை, உள் துறை, வெளி விவகாரத் துறை ஆகிய துறைகளுடன் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொதுவான பொருட்கள் குறித்து அவ்வப்போது தொடர்பு கொண்டு வருகிறது. மேலும் அமைச்சர்களின் அலுவலகப் பணியாளர்கள் தொடர்பான அனைத்து நிர்வாகப் பணிகளையும், அவர்களுக்கு மோட்டார் வண்டிகள், கணினி, தொலைபேசி மற்றும் இதர அலுவலகச் சாதனங்கள் ஆகியவை வழங்குவது குறித்த பணிகளையும் இத்துறை கவனிக்கிறது.

3. சட்டம் ஒழுங்கு மற்றும் கூர்உணர்வுடைய பொருள்கள் தொடர்பாக 1952ஆம் ஆண்டின் விசாரணை ஆணையச் சட்டத்தின் கீழ் அரசால் நியமிக்கப்படும் விசாரணை ஆணையங்கள் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றின் பணியாளர் பற்றிய விஷயங்களை இத்துறை கவனித்து வருகிறது. மேற்காணும் தகைசால் பெருமக்களுக்குத் தேவையான அலுவலக அறைகள் ஒதுக்குதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல், அறைகலன்கள், தொலைபேசி வசதி, சீருந்து முதலியவற்றை வரையறைப்படி வழங்குதல் போன்ற பணிகளை இத்துறை செய்து வருகிறது.

4. தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டடம் 1781 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போதுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை 27 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள பிரதான கட்டடம் மற்றும் நாமக்கல் கவிஞர் மாளிகை ஆகியவை தலைமைச் செயலகத்தில் பணியாற்றி வரும்

அதிக அளவிலான பணியாளர்களுக்கும் அவர்களின் அதிகரித்து வரும் தேவைகளுக்கும் ஏற்ப போதிய இடவசதி கொண்டதாக இல்லை. தற்போதுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டப்படும்போது நவீன வசதிகளுடன், எதிர்கால தேவைக்கேற்ற கூடுதல் இடவசதிகளைக் கொண்டு கட்டப்படவில்லை. கட்டடங்களின் உட்புறத்தில் பல இடங்களில் விரிசல்கள் மற்றும் நீர்க்கசிவு ஏற்பட்டு கட்டடம் பாதுகாப்பில்லாமல் உள்ளது. இக்கட்டடங்களில் உள்ள கழிப்பிட வசதிகள் போதுமானவையாக இல்லாததோடு, அவை உபயோகிப்பதற்குத் தகுதியற்றவையாகவும் உள்ளன. புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் கூடுதலாகக் கட்டடம் கட்டுவதற்குப் போதிய நிலம் இல்லாமை மற்றும் இங்கு புதியதாக கட்டடங்கள் கட்டுவதற்கு தொல்பொருள் ஆய்வுத் துறை விதிக்கக்கூடிய கட்டுப்பாடுகள் போன்றவற்றால் புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்துக்குள் கூடுதலாக தலைமைச் செயலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறு இல்லை. இவை காரணமாக, புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்திற்கு வெளியே, குறிப்பாக மெரினா கடற்கரைக்கு எதிரில் காமராசர் சாலையில் புதியதாக முழு வசதியுடன் கூடிய ஒரு தலைமைச் செயலகக் கட்டடம் கட்டுவதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

## 1. அகதிகள் மறுவாழ்வு

### அகதிகள் வருகை

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக 1983 ஆம் ஆண்டுமுதல் இந்தியாவிற்கு இலங்கைத் தமிழ் அகதிகள் வருகை பெருமளவில் இருந்தது. அகதிகள் வருகையின் எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டுவரை மிக அதிகமாக இருந்தது. ஆனால் 2001 ஆம் ஆண்டுமுதல் தமிழ் நாட்டிற்கு வரும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது. 1987-91 மற்றும் 1992-95 ஆகிய இரு கால கட்டங்களில் பெருமளவில் இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் சுமார் 1.93 இலட்சம் இலங்கை அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். தற்பொழுது, செங்கல்பட்டிலுள்ள ஒரு சிறப்பு முகாம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் உள்ள 104 அகதிகள் முகாம்களில் 16,335 குடும்பங்களைச் சேர்ந்த 62,717 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த அகதிகளுக்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவில்



பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அகதிகளின் பராமரிப்பிற்கான அனைத்துச் செலவினங்களும் முதலில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மைய அரசினால் உதவி மானியமாக ஈடுசெய்யப்பட்டு வருகின்றன.

### இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள்

**(1) பணக்கொடை**

தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளவாறு கீழ்க்கண்ட விகிதங்களில் பணக்கொடை அளிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | மாதமொன்றுக்கு ரூபாய் 200 |
| 2. | 12 வயதும் அதற்கு மேலுமுள்ள ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 144 |
| 3. | முதல் குழந்தை (12 வயதுக்குக் குறைவான) | மாதமொன்றுக்கு ரூபாய் 90 |
| 4. | அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 45 |

முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு இவ்வாறு பணக்கொடை வழங்குவதன் மூலம் ஆண்டுக்கு சுமார் ரூபாய் ஒரு கோடி செலவாகிறது.

**(2) மலிவு விலையில் அரிசி**

அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மலிவு விலையில் அரிசி கிலோ ஒன்றிற்கு 57 பைசா வீதம் மைய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி கீழ்க்கண்ட அளவுகளில் வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| அ. | பெரியவர்கள் | 400 கிராம் நாளொன்றுக்கு |
| ஆ. | குழந்தைகள் (8 வயதிற்குட்பட்டவர்கள்) | 200 கிராம் நாளொன்றுக்கு |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நியாயவிலைக் கடைகள் மூலமாக இம்மலிவு விலை அரிசியை வழங்கிவருகிறது. அரிசியின் மலிவு விலைக்கும், கொள்முதல் விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை இக்கழகம் அரசிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் சற்றொப்ப ரூ.5.30 கோடி செலவிடப்படுகிறது.

**(3) துணிமணிகள் மற்றும் பாத்திரங்கள்.**

மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளின் குடும்பங்களுக்கு துணிமணிகள் மற்றும் பாய்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இரண்டாண்டிற்கொரு முறை கம்பளிகள் மற்றும் பாத்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வகையில் ஆண்டொன்றுக்கு மொத்தம் சுமார் ரூ.2.10 கோடிவரை செலவாகிறது.

**(4) மருத்துவ உதவி.**

முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு அருகில் உள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவச மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

**(5) கல்வி வசதிகள்.**

இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு கல்வி வசதி வழங்குதலில் தமிழ்நாடு அரசு தாராளமான போக்கைக் கடைப்பிடிக்கின்றது. அகதிகளின் குழந்தைகள் இலங்கையில் படித்தமைக்கான பள்ளி மாற்றுச் சான்றிதழ்கள் இல்லாமலேயே தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், கல்லூரிவரை அவர்களது கல்வி தொடரவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்குச் சீருடைகள், மதிய உணவு, பயணச்சீட்டுகள், பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. அகதிகளின் குழந்தைகள் தமிழ்நாட்டில் எங்குவேண்டுமென்றாலும் தங்கி படிப்பைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். அம்மாணவர்களுக்கான பணக்கொடை மற்றும் இதர நிவாரண உதவிகள் முகாம்களில் தங்கியிருக்கும் அவர்களின் பெற்றோர்களிடம் வழங்கப்படுகின்றன.





இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு தொழிற் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன:

| வ.எண் | பாடப் பிரிவுகள் | இடங்கள் |
|---|---|---|
| 1 | மருத்துவப் படிப்பு | 20 |
| 2 | பொறியியல் படிப்பு | 25 |
| 3 | வேளாண்மை பொறியியல் படிப்பு | 3 |
| 4 | கால்நடை மருத்துவப் படிப்பு/மீன்வளப் படிப்பு | 1 |
| 5 | வேளாண்மைப் படிப்பு | 7 |
| 6 | பல்தொழில்நுட்பப் படிப்பு | 30 |

**(6) அகதிகளை அவர்களின் தாயகத்திற்கு மீள அனுப்புதல்.**

இலங்கையில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலை காரணமாக, தற்போது முகாம்களிலுள்ள அகதிகளிடம் இலங்கைக்கு திரும்பிச் செல்ல விரும்பும் ஒரு நிலை காணப்படுகிறது. மாநில அரசு இந்நிலைமையைக் கூர்மையுடன் கவனித்து வருவதுடன், எதிர்காலத்தில் பெருமளவில் அகதிகளைத் திரும்ப அனுப்புவதற்கான முன்நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்கிடையில், சொந்தச் செலவில் தன்விருப்பத்தின் பேரில் தங்களது தாய்நாட்டிற்கோ அல்லது தாங்கள் விரும்பும் வேறு நாட்டிற்கோ செல்ல விரும்பும் அகதிகளுக்கு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இந்தியாவை விட்டுச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

**2. முன்னாள் படைவீரர் நலத் துறை.**

நமது மாநிலத்திலுள்ள முன்னாள் படைவீரர்கள் அவர்களைச் சார்ந்தோர் மற்றும் தற்போது படைப் பணியில் உள்ளோர் குடும்பங்களின் நலன்களைக் கவனிக்கும் பொறுப்பு முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தினைச் சார்ந்ததாகும். அனைத்து நலப் பணிகளும் இந்த இயக்ககத்தின் 25 மாவட்ட அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 28-02-2003 அன்றுள்ள நிலவரப்படி 1,51,337 முன்னாள் படைவீரர்/விதவையர் மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.

2. இத்துறையின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்வருமாறு:—

(1) அரசு மற்றும் அரசுசார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளித்தல்

(2) சுயவேலைவாய்ப்பு வழங்குதல்

(3) பயிற்சி வசதிகள்

(4) நலத்திட்ட உதவிகள்

3. போரில் இறந்துவிட்ட வீரர்களின் குடும்பங்களுக்கும், போரில் ஊனமுற்றவர்களுக்கும் அரசு கருணைத் தொகை வழங்குகிறது. மேலும் வீரப் பதக்கங்கள், சிறப்புப் பணிக்கான பதக்கங்கள் மற்றும் மகன்கள்/ மகள்களைப் படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோர்க்கு ஊக்க மானியம் ஆகியவை தமிழக அரசால் வழங்கப்படுகின்றன. இத்துறையின் மொத்த நிர்வாகச் செலவில் 50 விழுக்காட்டுத் தொகையினை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது.

4. கீழ்க்கண்ட இரண்டு நிதிகள் முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தால் நிர்வகிக்கப்படுகிறது:—

(1) தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

(2) தொகுப்பு நிதி

2002-2003 ஆம் நிதியாண்டில், 16,929 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு ரூ.6.83 கோடி நிதி உதவி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது. தொகுப்பு நிதியிலிருந்து 1,040 முன்னாள் படைவீரர்/சார்ந்தோர்களுக்கு ரூ.25.45 இலட்சங்கள் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாட்டில் முதன் முறையாக, வீர விருது பெற்ற இராணுவ வீரர்களுக்கு நிலக் கொடைக்குப் பதிலாக மத்திய அரசு நிர்ணயித்துள்ள தொகைக்கு இணையாக ரொக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நாட்டிற்காக எல்லைப்புறத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்கள்/எல்லையோர பாதுகாப்புப் படைவீரர்களின் தியாகத்தினை அங்கீகரிக்கும் வகையில் வீரமரணமடைந்த வீரர்களுக்கு உரிய இறுதி மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது. இறுதிச் சடங்கில் வீர மரணமெய்திய இராணுவ வீரரின் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்,



மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு இறுதி மரியாதை அளிக்கும்படி அரசு ஆணையிட்டுள்ளது. வீர மரணமெய்திய இராணுவ மற்றும் எல்லையோர பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பங்களுக்கு ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுகிறது. மேலும் வாரிசுதாரர் ஒருவருக்கு அவருடைய தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் எதிரிப்படைகள், தீவிரவாதிகள் மற்றும் ஊடுருவல்களுக்கெதிரான நடவடிக்கைகளில் வீர மரணமெய்திய இராணுவ வீரர்களின் மற்றும் எல்லையோர பாதுகாப்புப் படை வீரர்களின் 27 குடும்பங்களுக்கு உதவித் தொகை கார்கில் இராணுவ வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில் 26 குடும்பங்களுக்கு கருணைத் தொகையாக ரூ.126 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஊனமடைந்த இராணுவ வீரர் ஒருவரின் குடும்பத்திற்கு ரூ.3 இலட்சம் கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

6. அரசு இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் பணியில் உள்ள வீரர்களின் பிள்ளைகளுக்கு இடங்களை ஒதுக்கியுள்ளது. பொறியியல் பட்டப் படிப்புக்கு அண்ணா பல்கலைக் கழகத்தில் 6 இடங்களும் மற்ற பொறியியல் கல்லூரிகளில் 100 இடங்களும், மருத்துவ பட்டப் படிப்புக்கு 6 இடங்களும், செவிலியர் பயிற்சி படிப்புக்கு 60 இடங்களும், பல்தொழில் பயிலகங்களில் பட்டயப் படிப்புக்கு 100 இடங்களும், ஒவ்வொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புக்கு 6 இடங்களும் மற்றும் சட்டப் படிப்புப் பிரிவில் 5 விழுக்காடு இடங்களும் இவற்றில் அடங்கும். முதன் முறையாக, அரசுப் பணிகளில் 'சி' பிரிவில் முன்னாள் படைவீரர்களுக்கு 5 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து 29-8-2002 அன்று, அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2002ஆம் கல்வியாண்டு முதல் ஆசிரியர் பயிற்சி படிப்புக்கான இடங்கள் 67-லிருந்து 132 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை காவலர்கள் தேர்வுக்குத் தேவையான உடல் மற்றும் அறிவுத் திறன் தேர்வுகளை முன்னாள் படை வீரர்களுக்குச் சாதகமாக இந்த அரசு இரத்து செய்துள்ளது. காவலர்கள் தேர்வுக்குப் போட்டியிடும் முன்னாள் படைவீரர்களைப் பொறுத்தவரை வயது உச்சவரம்பு 45ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 4

7. முன்னாள் படைவீரரைச் சார்ந்தோருக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சிப் படிப்புக்கு ஓர் இடமும், முன்னாள் படைவீரர்களுக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள் வரை உள்ள கல்லூரிகளில் இரண்டு இடங்களும், இரண்டுக்கு மேல் பாடப் பிரிவுகள் உள்ள கல்லூரிகளில் மூன்று இடங்களும் அரசு ஒதுக்கியுள்ளது.

**ஆலயப் பாதுகாப்புப் படை.**

1992ஆம் ஆண்டில், கோயில்களைப் பாதுகாக்கவும் அங்குள்ள சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் முதலியன களவாடப்படுவதைத் தடுப்பதற்காகவும் முன்னாள் படைவீரர்களைத் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தி கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இதுவரை 2,668 படைவீரர்கள் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு மாதம் ரூ.1,500 தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**கொடிநாள் வசூல்.**

தமிழ்நாடு கொடிநாள் நிதி வசூலில் 1985 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நாட்டில் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டு வருகிறது. 2001ஆம் ஆண்டுக்குக் கொடிநாள் நிதி வசூல் இலக்காக ரூ.4.41 கோடி நிர்ணயிக்கப்பட்டபோதிலும் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 6.44 கோடியாகும். 2002 ஆம் ஆண்டுக்கு (7-12-2002 முதல் 6-12-2003 வரையிலான காலத்திற்கு) நிர்ணயிக்கப்பட்ட கொடிநாள் நிதி வசூல் இலக்கு ரூ.4.60 கோடி ஆகும். இதில் 20-2-2003 அன்றுவரை ரூ.0.90 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் (TEXCO).**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (**TEXCO**) கம்பெனிகள் சட்டத்தின்படி 28-1-1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது நிதியளவில் சுய ஆதரவுள்ள, இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். இதன் உரிமைபெற்ற மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூபாய் 50 இலட்சம் மற்றும் ரூ. 22.91 இலட்சம் ஆகும்.



**இக்கழகத்தின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்வருமாறு:—**

* தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நலத்திற்கு ஏற்றவகையில் பல திட்டங்களைத் திட்டமிடுதல், உருவாக்குதல், அவற்றைச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் தக்க உதவிகளை அளிப்பது.
* நிறுவனம் என்ற அளவில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவது.

பதிவுபெற்ற முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் மைய அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசு நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புப் பணிக்கென அமர்த்தப்படுகின்றனர். இவ்வாறு பாதுகாப்புப் பணிக்கு அனுப்பப்படும் முன்னாள் படைவீரர்களுக்கான ஊதியம், பாதுகாப்பு அமைச்சகத்தின் மறுபுனரமைப்பு தலைமை இயக்குநரால் நிர்ணயம் செய்யப்படுகிறது. இப்பணிகளுக்கென 12 முதல் 14 விழுக்காடு வரை பணிக் கட்டணமாக மேற்கண்ட அரசு நிறுவனங்களிடமிருந்து டெக்ஸ்கோ வசூலிக்கிறது. இக்கழகம் தென்னக இரயில்வே, மதுரை பிரிவில் 20-04-2002 அன்று முதல் வாகனங்களை நிறுத்தும் முறையை மேற்கொண்டது. இம்முறையில் வசூலிக்கப்படும் கட்டணத் தொகை இருவரும் 50:50 விழுக்காடு முறையில் பகிர்ந்துகொள்ளலாம் என இக்கழகம் முடிவெடுத்துள்ளது.

தமிழ்நாடு அரசின் 412 “பெல்” ஹெலிகாப்டர் மற்றும் “செஸ்னா” விமானத்தைப் பராமரித்து நிர்வகிக்கும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பராமரித்து நிர்வகித்துவரும் செலவை இக்கழகம் முதலில் ஏற்றுக்கொண்டு, பின்னர், இத்தொகையை தமிழ்நாடு அரசிடமிருந்து திரும்பப் பெறுகிறது. இதற்கென 2 விழுக்காடு பணிக் கட்டணம் இக்கழகத்திற்கு வழங்கப்படுகிறது.

**3. முதலமைச்சரின் தனிப் பிரிவு.**

பொது மக்களின் குறைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட முதலமைச்சரின் தனிப் பிரிவு துயருடன் வந்த மனுதாரர்களுக்கு கடந்த 2 ஆண்டுகளில் மிகச் சிறந்த முறையில் சேவை புரிந்துள்ளது. இப்பிரிவின் நோக்கத்தை எய்தும் வகையில், இப்பிரிவின் தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி அலுவலருக்கு வழக்கமான அலுவலகாரியான

தொடர்பு முறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டு, மாநில அரசின் எந்தத் துறையின் எந்த நிலையிலுள்ள அலுவலர்களிடமும் அவர் நேரடியாகத் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சென்னையிலும் மற்றும் சுற்றுப்பயணத்தின்போது தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் அளிக்கப்படும் மனுக்கள் உடனடி நடவடிக்கைக்காக, தலைமைச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கும், துறைத் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கும் கணினியில் பதிவு செய்த பின் அனுப்பப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு வருகை தரும் அனைத்து நாட்களிலும், இதர அலுவலகப் பணி நிலைமையைப்பொறுத்து, பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணிக்குள்ளாக பொது மக்களை நேரடியாகச் சந்தித்து மனுக்களைப் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். பொது மக்கள், தனிப் பிரிவில், தனி அலுவலரிடம் நேரடியாக அனைத்து வேலை நாட்களிலும் மனுக்கள் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதோடு, தபால், நிகரி மற்றும் மின் அஞ்சல் மூலமாகவும் அனுப்பித் தீர்வு காண வகை செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு 24-05-2002 முதல் 10 சமூக நல சேவகர்கள்/ஆலோசகர்கள் பணியிடங்களை உருவாக்கி அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி நியமிக்கப்பட்ட தகுதி மிக்க ஆலோசகர்கள், துயருடன் வரும் மனுதாரர்களின் கோரிக்கைகளை நேரடியாகக் கேட்டு அவர்களுக்கு அரசின் நலத் திட்டங்களைப் பற்றியும், அதனைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பற்றியும் விரிவான ஆலோசனை வழங்குகிறார்கள். முதலமைச்சர் தனிப் பிரிவில் இயங்கி வரும் விசாரணை மையத்தில் பொது மக்களின் மனுக்களின் மீதான தற்போதைய நிலவரம் கணினியில் சரிபார்த்து மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மனுக்களின்மீது முறையான நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தொடர்ந்து கண்காணித்து விரைவுபடுத்துவது குறை தீர்ப்பு அமைப்பின் மிக முக்கிய பங்காகும். இதனை நிறைவு செய்யும் வகையில் தலைமைச் செயலகம் மற்றும் துறைத் தலைவர்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) மற்றும் மக்கள் குறை தீர்ப்பு தனித் துணை



ஆட்சியர்களுடன் அவ்வப்பொழுது ஆய்வுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படுகின்றன. 2002ஆம் ஆண்டில் மட்டும் 4,13,235 மனுக்கள் தனிப் பிரிவில் பெறப்பட்டு அதில் 3,96,679 (96%) மனுக்கள் தீர்வு காணப்பட்டன.

மனுக்களின் மீது விரைவாகவும், மனுதாரர்களுக்கு நிறைவு அளிக்கும் வகையிலும் தீர்வு கண்டு, சிறப்பாகப் பணியாற்றிய 3 சிறப்பு துணை ஆட்சியர்களுக்கு (மக்கள் குறை தீர்க்கும் பிரிவு) ஆண்டுதோறும் பரிசுகள் சிறு சேமிப்புச் சான்றிதழ்களாக வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| முதல் பரிசு | தகுதிச் சான்றிதழுடன் 10,000 ரூபாய்க்கான இந்திர விகாஸ் பத்திரம்/தேசிய சேமிப்புப் பத்திரம். |
| இரண்டாம் பரிசு | தகுதிச் சான்றிதழுடன் 7,500 ரூபாய்க்கான இந்திர விகாஸ் பத்திரம்/தேசிய சேமிப்புப் பத்திரம். |
| மூன்றாம் பரிசு | தகுதிச் சான்றிதழுடன் 5,000 ரூபாய்க்கான இந்திர விகாஸ் பத்திரம்/தேசிய சேமிப்புப் பத்திரம். |

முதலமைச்சரின் தனிப் பிரிவு மனுக்களின் மீது விரைவாகவும், மனுதாரர்களுக்கு நிறைவளிக்கும் வகையிலும் தீர்வு கண்டு சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்களை அங்கீகரித்துப் பாராட்டும் வகையில், நவம்பர், 2002-ல் சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்கள் மாநாட்டின்போது மாண்புமிகு 'முதலமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கி சிறப்பித்தார்கள். முதலமைச்சர் தனிப் பிரிவு மனுக்களில் அதிக எண்ணிக்கையில் விரைவாக தீர்வு கண்ட வகையில் சேலம் மாவட்ட ஆட்சியருக்கு (96%) முதல் பரிசும், நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு (95%) இரண்டாவது பரிசும், தேனி மாவட்ட ஆட்சியருக்கு (93%) மூன்றாவது பரிசும் வழங்கப்பட்டது. முதலமைச்சர் தனிப் பிரிவு மனுக்களில் அதிக எண்ணிக்கையில் மனுதாரர்களுக்கு நிறைவளிக்கும் வகையில் தீர்வு கண்டதற்காக சென்னை மாவட்ட ஆட்சியருக்கு (68%) முதல் பரிசும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு (65%) இரண்டாவது பரிசும், சேலம் மாவட்ட ஆட்சியருக்கு (59%) மூன்றாவது பரிசும் வழங்கப்பட்டது.

1993ஆம் ஆண்டு மார்ச் மாதம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் முதலமைச்சரின் தனிப் பிரிவு கணினிமயம் ஆக்கப்பட்டது. அதன் பின்னர் தற்போதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மீண்டும் ரூ.23 இலட்சம் அனுமதிக்கப்பட்டு புதிய கணினிகள் மற்றும் மென்பொருட்கள்

பெறப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளது. தேசிய தகவல் மைய அலுவலர்கள் நவீனமயப்படுத்தப்பட்ட கணினிப் பிரிவில் புதிய மென்பொருட்களைக் கையாண்டு 'இணைய அடிப்படையிலான குறை தீர்ப்பு முறை' ஒன்றை உருவாக்க பரீட்சார்த்த முறையில் சோதனை செய்து வருகிறார்கள். இதனைச் செயல்படுத்தும்போது மனுதாரர்கள் தங்கள் குறை தீர்ப்பு மனுக்களுக்கான பதிலைப் பெறுவதற்காக தபாலை எதிர்பார்த்துக் காத்திருப்பதற்குப் பதிலாக, அவர்களாகவே தங்கள் பகுதியிலிருக்கும் கணினி மூலமாக துறை அளித்துள்ள பதிலை விரைவில் தெரிந்துகொள்ள இயலும். இதன்மூலம் முதலமைச்சர் தனிப் பிரிவிற்கும், மனுதாரர்களுக்கும், அரசுத் துறைகளுக்கும் இடையே கணினி வாயிலான நேரிடைத் தொடர்பு நிலைப்படுத்தப்படும்.

**முதலமைச்சர் தனிப் பிரிவின் சாதனைகள்.**

(அ) 11,235 நேர்வுகளில் முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், சுதந்திரப் போராட்ட தியாகிகள், மொழிப்போர் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 1,049 ஏழை எளிய மக்களின் உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்கென முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2,60,70,335 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

(இ) தொழிற் கல்வி பயில்வதற்கு மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டும் வசதி இல்லாத காரணத்தால் சேர இயலாமல் தவித்த 234 மாணவர்களுக்கு ரூ.59 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

(ஈ) பல்வேறு வகையில் நிதியுதவி கோரிய 331 நபர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ. 76,29,914 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

(உ) நிலம் சம்பந்தப்பட்ட 5,644 நேர்வுகளில் தீர்வு காணப்பட்டுள்ளது.



(ஊ) ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கென 5,163 ஊனமுற்றோருக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ.54,86,906 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

(எ) குடிநீர், கழிவுநீர், சாலை வசதி, மின்சாரம், தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதி கோரி வரப்பெற்ற 9,786 மனுக்கள் மீது சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**கோரிக்கைகளின் விவரம் மற்றும் கோரப்பட்ட நிதி 2003-2004.**

| வரிசை எண் | இனம் | கோரிக்கையின் தன்மை | தொகை (ரூபாய் ஆயிரத்தில்) | மொத்தம் (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 3701 தலைமைச் செயலகம். | சாட்டியது<br>அனுமதித்தது | 6.53<br>27,21.75 | 6,53<br>27,21.75 |
| 2 | 3702 தேர்தல்கள். | அனுமதித்தது | 20.34.21 | 20,34,21 |
| 3 | 3703 முன்னாள் படைவீரர். | அனுமதித்தது | 4.87.25 | 4.87,25 |
| 4 | 3704 மறுவாழ்வு. | அனுமதித்தது | 25.17.93 | 25,17.93 |
| 5 | 3705 புது தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம். | அனுமதித்தது | 3.30.27 | 3.30,27 |
| 6 | 3706 மாநில மனித உரிமைகள் ஆணையம். | அனுமதித்தது | 1,12.89 | 1,12,89 |
| | மொத்தம் | சாட்டியது<br>அனுமதித்தது | 6,53<br>82,04,30 | 6,53<br>82,04,30 |

[2003 ஏப்ரல் 4

## இணைப்பு III

*(365 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 37—தேர்தல்கள்

**பொது (தேர்தல்கள்) துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004**

கோரிக்கை எண் 37—"தேர்தல்கள்" என்ற தலைப்பின்கீழ் 2003-2004ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ.20,34,21,000 நிதி தேவைப்படுகிறது. இம்மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்படும் நிதியில் 01-01-2004-ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்வதற்கும், தகுதிபெற்ற வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைபபட அடையாள அட்டை வழங்குவதற்கும், தேர்தல் நிர்வாகத்திலுள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் போன்ற பிற செலவினங்களுக்கும் தேவைப்படுகிறது.

13-வது மக்களவைக்கு 1999ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. தற்போதைய மக்களவையின் பதவிக்காலம் 2004 அக்டோபர் திங்களில் முடிவடைகிறது. தற்போதைய மக்களவையில் இம்மாநிலத்திலிருந்து உறுப்பினர் இடம் ஏதும் காலியில்லை.

தமிழக சட்டமன்றப் பேரவைக்கு 10-05-2001-ல் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இதையடுத்து 12-வது தமிழக சட்டமன்றம் 14-05-2001 அன்று முறையாக அமைக்கப்பட்டது. தற்போது தமிழக சட்டமன்றப் பேரவையில் காலியிடம் ஏதும் இல்லை.

தேர்தல்கள் என்பதன்கீழ் மானியக் கோரிக்கை எண் 37-இல் 2003-2004ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ.20,34,21,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.



2003 ஏப்ரல் 4]

**2015. தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது).**

**102. தேர்தல் அதிகாரிகள்**

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் ரூ.5,04,62,000

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள் ரூ.9,49,11,000

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் ரூ.18,49,000

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. இடைத் தேர்தல்கள் ரூ.18,000 (அடையாள ஒதுக்கீடு)

எபி. மக்களவைக்குத் தேர்தல் ரூ.24,000 (அடையாள ஒதுக்கீடு)

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மாநில சட்டப் பேரவை ரூ.6,22,000

**108. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்**

எஎ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் ரூ.5,55,34,000

கூட்டுக: திருப்பி வசூலிப்பவை ரூ.1,000

மொத்தம் ரூ.20,34,21,000

மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விவரமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்கான செலவு மேற்கொள்வதற்காக தேவைப்படுகின்றது.

**102. தேர்தல் அதிகாரிகள்**

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்

மதிப்பீடு — ரூ.5,04,62,000

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒவ்வொரு

மாநிலத்திலும் தலைமைத் தேர்தல் அதிகாரி உள்ளார். தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவி புரிய இணைச் செயலர் மற்றும் இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் உள்ளனர். முன்னதாக இந்தத் துறையில் மூன்று இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் இருந்தனர். தேர்தல் பணிகளை கணினிமயமாக்கும் பணிக்காக மட்டுமே 1997 ஆம் ஆண்டு ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினி) பதவி ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பதவி தற்போது சார்நிலை அலுவலர் பதவிகளுடன் தொடர்ந்து இருந்து வருகிறது. மற்றுமொரு இணைச் செயலர் மற்றும் இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி, தேர்தல் தொடர்பான பணிகளையும், தொகுதி எல்லை மறுவரையறை பணிகளையும் கவனித்து வருகிறார். செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும்பொருட்டு மற்றுமொரு இந்திய ஆட்சிப் பணி அந்தஸ்தில் இருந்த இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி பதவி சார்நிலை அலுவலர் பதவிகளுடன், தற்காலிகமாக ஜுன் 2001 முதல் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் 1998 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு பிரிவு 01-10-2001 அன்று ஒப்படைப்பு செய்யப்பட்டது. தற்போது இரண்டு சார்புச் செயலாளர்கள் மற்றும் ஆறு நிரந்தரப் பிரிவுகள் பொது (தேர்தல்) துறையில் உள்ளன. பொதுத் தேர்தல்கள் அறிவிக்கப்படின், கூடுதல் பணிகளைக் கவனிக்க தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும், மாவட்டங்களிலும் கூடுதலாக தற்காலிகப் பணியாளர்கள் நியமிக்கப்படுவர். அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் சம்பந்தமான பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிய அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய மாநராட்சி ஆணையாளர்கள் வாக்குப் பதிவு அலுவலர்களாகவும், வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் உதவி வாக்குப் பதிவு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரில் உள்ள அனைத்து மண்டல அதிகாரிகளும் வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும், உதவி வருவாய் அதிகாரிகள் உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பணிகளை கவனிக்க மதுரை, கோயம்புத்தூர்,



சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களில் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகப் பணியிடமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் நிரந்தரமாகத் தோற்றுவிக்கப்பட்டு, சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனித்து வருகின்றனர்.

தேர்தல் பணிக்காகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலக செவினம், இதர செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் இக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கின்றது.

## 103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

**எ. சட்டப் பேரவைத் தொகுதிகள்:**

**மதிப்பீடு - ரூ.9,49,11,000**

1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21ஆவது பிரிவின்படி, மக்களவை அல்லது மாநிலச் சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் காலியான இடத்தை நிரப்புவதற்காக நடத்தப்படும் இடைத்தேர்தலுக்கு முன்னரும் வாக்காளர் பட்டியல்கள் திருத்தி அமைக்கப்படலாம். ஆனால் ஆண்டுதோறும் நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் அடுத்து வரும் ஆண்டின் ஜனவரி ஒன்றாம் தேதியைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைக்க வேண்டுமென்று தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளது. வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கும் மற்றும் திருத்தும் பணிகளுக்கான அதிகாரம் வாக்காளர் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ள வருவாய்க் கோட்டாட்சி அதிகாரி/சார்பு ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு உதவி புரிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள்

[2003 ஏப்ரல் 4

நியமிக்கப்பட்டு வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. மாவட்டங்களில், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணிக்கும் அதிகாரம் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாவட்ட ஆட்சியர் தேர்தல்களை கவனிக்கும் பொறுப்பில் இருந்தாலும், மாநகராட்சியின் மண்டல அதிகாரிகள் அவர்கள் பணி புரியும் அந்தந்த மண்டல வரம்பிற்குள் வரும் சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பதிவு அதிகாரிகளாக செயல்படுவதால், சென்னை மாநகராட்சி ஆணையாளர் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிகளுக்கு ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பணிகள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் நேரடி மேற்பார்வை, அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

*01-01-2003*ஆம் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்புச் சுருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ளவேண்டுமென்று கடந்த செப்டம்பர் *2002*-ல் இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்தது. தேர்தல் ஆணையத்தின் கால அட்டவணையின்படி வரைவு வாக்காளர் பட்டியல்கள் *14-11-2002* அன்று வெளியிடப்பட்டன. நவம்பர் திங்கள் *16,17,23* மற்றும் *24* ஆகிய நாட்களில் தகுதிபெற்ற வாக்காளர்கள் பெயர்களைச் சேர்ப்பதற்கு ஏதுவாக வாக்குச் சாவடிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இறுதி வாக்காளர் பட்டியல்கள் *17-01-2003* அன்று வெளியிடப்பட்டன.

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும், இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படித்தொகைகள், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்காக நிரந்தரப் பணியிடத்திலுள்ள ஒரு உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் ஊதியம் மற்றும் படித்தொகை செலவினங்களுக்கும் இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

**கணினி உள்கட்டமைப்பு**

இந்தியத் தேர்தல் ஆணையம், கடந்த சில வருடங்களாக தகவல் தொழில்நுட்ப மற்றும் மென்பொருள் மற்றும் அதனைச் சார்ந்த தீர்வுகள்



2003 ஏப்ரல் 4]

மூலம் தேர்தல் புள்ளி விவரங்களைச் சிறந்த முறையில் நிர்வகித்து வருகின்றது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்திலும் *5* கணினி முடிச்சுகள் மற்றும் *1* சர்வர்-உடன் கணினி உள்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் கணினி தொடர்பான பணிகளைக் கையாள்வதற்கு *1* சர்வர் மற்றும் *10* கணினி முடிச்சுகள் கொண்ட அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க மாநில அளவில் கணினி சம்பந்தமான தொழில் நுட்பப் பணிகளை நிர்வகிப்பதற்காக, ஒப்பந்த அடிப்படையில் சி.எம்.சி. நிறுவனம் நியமிக்கப்பட்டு கணினி சம்பந்தப்பட்ட தேர்தல் பணிகள் அனைத்தும் இந்த நிறுவனத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும் கணினி சம்பந்தப்பட்ட பணிகளைக் கையாள்வதற்கு போதுமான பணியாளர்களை இந்நிறுவனமே நியமித்துள்ளது. சி.எம்.சி. லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஊதியச் செலவினம் மற்றும் கணினி உள்கட்டமைப்புகளைப் பராமரிக்க ஆகும் செலவினங்கள் யாவும் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

இந்த துணைக் கணக்குத் தலைப்பின்கீழ், வாக்காளர் வரைவு மற்றும் இறுதிப் பட்டியல் அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதிவுசெய்தல், பணியாளர் ஊதியம், பயணப்படிகள் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இதற்கென *2003-2004*ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் ரூ.*9,49,11,000* ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செலவினத்தின் *50* விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்து கொள்ளும்.

### 104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

### எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்

**மதிப்பீடு - ரூ.18,48,000**

மக்களவைக்கும் மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்தத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. தொடர் செலவினமாக தேர்தல் பொருட்கள் மற்றும் மின்னணு இயந்திரங்களை வைப்பதற்கான

கட்டடங்களின் வாடகை, வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், வாகன எரிபொருள் செலவினங்கள் மற்றும் பொதுத் (தேர்தல்கள்) துறையின் வாகனங்களின் பராமரிப்புச் செலவுகள் ஆகியவையும் இந்தத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் தேர்தல் பொருட்கள், வேலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள தனியார் கிடங்குகளிலும், விழுப்புரம், மதுராந்தகம் மற்றும் விருத்தாசலத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இதற்கான வாடகை செலவினம் மற்றும் இதர தேர்தல் சம்பந்தமான பொருட்களின் செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. இடைத் தேர்தல்கள்**

**மதிப்பீடு - ரூ.18,000 (அடையாள ஒதுக்கீடு)**

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தில் தமிழகத்திலுள்ள தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லாததால் இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்**

**மதிப்பீடு - ரூ.24,000 (அடையாள ஒதுக்கீடு)**

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசிடமிருந்து பெறப்படும். 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 13-வது மக்களவைக்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதன் காலம் 2004 ஆம் ஆண்டு முடிவுறும். எனவே இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டும்





செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. மாநில சட்டப் பேரவை**

**மதிப்பீடு - ரூ.6,22,000**

12 ஆவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு 10-05-2001 அன்று பொதுத் தேர்தல்கள் நடைபெற்று, புதிய சட்டப் பேரவை 14-05-2001 அன்று அமைக்கப்பட்டது. மாநில சட்டமன்றப் பேரவைக்கு மட்டும் பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் மேற்கொள்ளப்படும். வாக்குப் பதிவு/வாக்குகள் எண்ணுகை அலுவலர்களுக்கான மற்றும் அரசு ஊர்திகளின் ஓட்டுநர்கள் ஊதியம், தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மற்றும் மாவட்டங்களிலும் தேர்தல் நடத்துவதற்காக அனுமதி அளிக்கப்படும் சிறப்புப் பணி அலுவலர்களுக்கான ஊதியம், தேர்தல் பார்வையாளர்களுக்கான செலவினங்கள், வாக்குகள் எண்ணும் இடங்களில் தடை அரண்கள் அமைப்பதற்கான செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள் இதன்கீழ் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காலியிடங்கள் ஏதும் தற்பொழுது இல்லை. பொதுத் (தேர்தல்கள்) துறையில் மின் தட்டச்சுகள், இரண்டு போட்டோ நகல் எடுக்கும் கருவிகள் மற்றும் இரண்டு தொலை அச்சுக் கருவிகள் ஆகியவை உள்ளன. இவற்றின் பராமரிப்பு மற்றும் இதர செலவினங்களுக்காக இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்கிறது.

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மறுவரையறை**

2001 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 84-வது திருத்தத்தின்படி (21-02-2002-ல் அறிவிக்கப்பட்டது) அரசமைப்புச் சட்டத்தின் 81, 82, 170, 330 மற்றும் 332-வது ஷரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இதன்படி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின்

எண்ணிக்கை 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு நடைபெறவுள்ள முதல் மக்கள் தொகை கணக்கெடுப்புவரை மாற்றம் எதுவுமின்றி நீடிக்கும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காக நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு ஒதுக்கப்படவுள்ள தொகுதி ஒதுக்கீடு 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு மாநிலத்திலுள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மாற்றி மறுவரையறை செய்யப்படும். இவ்வாறு மறுவரையறை செய்யப்பட்ட நாடாளுமன்ற/சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் 2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு நடைபெறவுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வரை மாற்றம் செய்யப்படாமல் நீடிக்கும். 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மாற்றம் செய்யப்படவுள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் மக்கள் தொகை முடிந்தவரை மாநிலம் முழுவதும் ஒரே விகிதத்தில் இருக்குமாறு எல்லைகள் மறுவரையறை செய்யப்படும். 01-08-2002 அன்றுள்ள நிர்வாக அலகுகளின் அடிப்படையில் எல்லை மறுவரையறை செய்யப்படும். இதற்கு ஏதுவாக 01-08-2002 அன்றுள்ள நிர்வாக அலகுகளை மறு எல்லை வரையறை முடியும்வரை மாற்றம் ஏதும் மேற்கொள்ளக் கூடாது என்று எல்லை வரையறை ஆணையம் அனைத்து மாநில அரசுகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட மேற்கண்ட திருத்தங்களுக்கேற்ப, எல்லை மறுவரையறை சட்டம், 2002. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 3ஆவது பிரிவிற்கேற்ப எல்லை மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டு மேற்கண்ட பணி அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. குல்தீப் சிங் அவர்களின் தலைமையில் 04-07-2002 முதல் எல்லை மறுவரையறை ஆணையம் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தில் இந்தியத் தேர்தல் ஆணையர், திரு. பி.பி. தாண்டன் அவர்களும், அந்தந்த மாநில தேர்தல் ஆணையர்களும் அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆவர். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும், அம்மாநில சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருங்கிணைப்பு உறுப்பினர்களாக (Associate Members)



நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஒருங்கிணைப்பு உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமையில்லை. தற்பொழுது தமிழ்நாட்டிலிருந்து நாடாளுமன்றத்திற்கு 39 தொகுதிகளும், மாநில சட்டமன்றத்திற்கு 234 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போதைய எல்லை மறுவரையறை பணிகள் முடிந்த பின்னும், தொகுதிகளின் எண்ணிக்கை மாற்றம் செய்யப்படாமல் இருக்கும். எல்லை மறுவரையறை சட்டம், 2002-ன்கீழ் உள்ள பிரிவு 9-ன் வரைமுறைகளின்படி, மாநிலத்திலுள்ள மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்றவாறு, தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் மக்கள் தொகை விழுக்காடு அதிகமாகவுள்ள தொகுதிகளைக் கருத்திற்கொண்டு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காக தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படும். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பெறப்பட்ட மக்கள் தொகை விவரம் மற்றும் வரைபடங்களின் அடிப்படையில் எல்லை மறுவரையறை ஆணையம், வரைவு எல்லை மறுவரையறை கருத்துருக்களை தயாரித்துக் கொண்டிருக்கிறது. இதன்பிறகு ஒருங்கிணைப்பு உறுப்பினர்களுடன் கலந்தாய்வு செய்ய எல்லை மறுவரையறை ஆணையம் முடிவு செய்துள்ளது. எல்லை மறுவரையறை ஆணையத்தால் தயாரித்து ஒப்புதலளிக்கப்படும் வரைவு மறுவரையறை கருத்துரு இந்திய/மாநில அரசிதழ்களில் வெளியிடப்படும். அதன்மீது பொது மக்களிடமிருந்து எதிர்ப்புரைகளும் ஆலோசனைகளும் வரவேற்கப்படும். இதன்பிறகு எல்லை மறுவரையறை ஆணையம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஓரிடத்திலோ அல்லது வெவ்வேறு இடங்களிலோ பொது மக்களின் கருத்துகளை நேரில் கேட்டறியும். இந்நேர்காணல் முடிவுற்றவுடன் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மறுவரையறை பற்றிய இறுதி ஆணைகளை ஆணையம் வெளியிடும். நாடாளுமன்றத்திற்கு நடைபெற உள்ள அடுத்த பொதுத் தேர்தல்கள், தற்பொழுது நடைபெற்று வரும் எல்லை மறுவரையறை ஆணையத்தின் ஆணைக்கேற்ப இருக்குமென்று மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை கூறியுள்ளது.

எல்லை மறுவரையறை தொடர்புடைய பணிகளுக்கான எழுதுபொருள், அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கான போக்குவரத்துச் செலவு, மாவட்ட/வட்ட வரைபடங்கள் தயாரிப்பிற்கான செலவு, எல்லை மறுவரையறை ஆணையம் பொது மக்களை நேர்காணல் பற்றிய விளம்பர வெளியீடுகள் முதலிய செலவினங்கள் மாநில அரசின் இந்தக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

[2003 ஏப்ரல் 4

**108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**எள. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்**

**மதிப்பீடு - ரூ.5,55,34,000**

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அட்டைகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படவேண்டிய கணினி மென்பொருள் மற்றும் வாக்காளர் விவரங்கள் அடங்கிய பட்டியல்கள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் விரிவான வழிமுறைகளை இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இந்த விரிவான வழிமுறைகள் 1999ஆம் ஆண்டு வரப்பெற்றது. இதற்கு முன்னால், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைமூலம் வாக்காளர் தங்கள் அடையாளத்தை உறுதி செய்ய வேண்டுமென்று இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிட்ட பிறகு இத்திட்டத்தின் முதல் கட்டம் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் (Elcot) 1995 முதல் 1998 வரை நடத்தப்பெற்றது. முதல் கட்டப் பணியின்போது நிர்ணயிக்கப்பட்ட புகைப்பட மையங்களில் வாக்காளர் புகைப்படம் எடுக்கும் பணி நடத்தப்பட்டு பின்னர் அட்டைகள் தயாரிக்கப்பட்டு மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மூலம் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்தியத் தேர்தல் ஆணையத்திடமிருந்து பின்னர் பெறப்பட்ட விரிவான வழிமுறைகளின்படி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணி 2000-2001 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. அதன்பின்னர் 1-1-2003-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு 2002-2003-ல் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு சுருக்குமுறைத் திருத்தத்திற்குப் பின்னர் தற்போது தமிழ்நாட்டின் வாக்காளர்களின் எண்ணிக்கை 4.92 கோடியாக உள்ளது. இதில், இதுவரை நடைபெற்றுள்ள அனைத்துக் கட்டங்களையும் சேர்த்து 3.28 கோடி வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 1.64 கோடி வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தல் சம்பந்தமான முதனிலை ஏற்பாடுகள் முழு வீச்சில் துவங்குவதற்குமுன் அடுத்த 6-8 மாதங்களுக்குள் வழங்க வேண்டியுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக ஏற்படும் செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இந்தச் செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக் கொள்கிறது.





# இணைப்பு IV

(365 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 41

## பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

தெய்வப்புலவர் திருவள்ளுவர், அவருடைய ஒப்பற்ற படைப்பான திருக்குறளில்

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்று கல்வியின் சிறப்பையும், மாண்பையும் என்றும் பொருந்தும் வண்ணம் எடுத்தோதியுள்ளார்.

கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதனின் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அறிவுத் திறனுள்ள சமுதாயத்தை உருவாக்கவும் அடித்தளமாக அமைகின்றது. கல்வி வளர்ச்சிக்கு செய்யப்படும் முதலீடு பொருளாதார மாற்றங்களுக்கும், அனைத்து குடிமக்களுக்கும் உற்பத்தித் திறனுடன்கூடிய வாழ்க்கையை உறுதி செய்வதற்கும் இன்றியமையாதது என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது.

கல்வி வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனைக்கேற்ப பள்ளிக் கல்வித் துறை கீழ்க்காணும் கொள்கைகளை வகுத்து செயலாற்றவுள்ளது:

* மக்கட்தொகை 300-ம், ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் பள்ளிகள் இல்லாமலும் உள்ள அனைத்து சிற்றூர்களில் பள்ளி வசதியை ஏற்படுத்துதல்
* பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் 2003ஆம் ஆண்டுக்குள் பள்ளியில் சேர்த்தல்

[2003 ஏப்ரல் 4

* 2007-க்குள் அனைத்து குழந்தைகளுக்கும் ஐந்து ஆண்டு கல்வியை அளிக்கச் செய்தல்.
* 2010-க்குள் அனைத்து குழந்தைகளுக்கும் எட்டு ஆண்டு கல்வியை அளிக்கச் செய்தல்
* 2010-க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே ஒழித்தல்
* பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
* பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துதல்
* பள்ளிகளில் பாலர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை தரம் உயர்த்துதல்
* குறைந்தபட்ச கல்வி கற்றலை உறுதி செய்தல்
* ஆசிரியர்களுக்கு புத்தறிவு பயிற்சி அளித்தல்
* கல்லாமையை இல்லாமை ஆக்குதல்
* பள்ளித் தேர்வுகளில் மறைபொருள் தன்மையை காத்து குறைபாடுகளற்ற முறையில் தேர்வு முடிவுகளை வெளியிடுதல்
* எழுத்துத் தேர்வு மூலம் தரமான ஆசிரியர்களை இனவாரிமுறைக்குட்பட்டு தேர்ந்தெடுத்தல்
* தரமான பாடநூல்களை குறைந்த விலையில் உரிய காலத்தில் விநியோகம் செய்தல்
* கிராமங்களில் நூல் நிலையங்களை ஏற்படுத்துதல்
* பள்ளி மாணவர்களின் வாழ்க்கைத் தொழில் பயிற்சிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்
* பள்ளிகளில் உடல் நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்



2003 ஏப்ரல் 4]

* பள்ளிகளின் நிருவாகத்தில் பெற்றோர்களையும், உள்ளாட்சி அமைப்புகளையும் பெருமளவு ஈடுபடச் செய்தல்
* பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கணினிக் கல்வி அளித்து தமிழகத்தின் வருங்கால சமுதாயத்தை அறிவுத் திறன் சார்ந்த கணினி அறிவு மிக்க சமுதாயமாக மாற்றுதல்.

இக்கொள்கைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், மாவட்டத் தொடக்கக் கல்வி மற்றும் அனைவர்க்கும் கல்விக்கான மாநில திட்ட இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், பள்ளிசாராக் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகம், அரசு தேர்வுகள் இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டு பாடநூல் கழகம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் தத்தம் பணியில் சிறப்பாக ஈடுபட்டு, கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திட இத்துறை முனைந்து செயல்படும்.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 41-பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2003-2004 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.4203.81 கோடி ஆகும். இது சென்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டைவிட ரூ.37.88 கோடி அதிகமாகும். இதில் ரூ.257.37 கோடி திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கான இந்த ஒதுக்கீடு நிதிநிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டுள்ள வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவான ரூ.26599.37 கோடியில் 15.80 விழுக்காடு ஆகும். அனைவருக்கும் கல்வி என்ற இவ்வரசின் கொள்கைக்கு இது சான்றாகும்.

## 2003-2004 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | | ரூபாய் இலட்சத்தில் | |
| 2059 பொதுப்பணிகள் - அரசுப் பள்ளிகள் கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | .. | 976.74 | 976.74 |
| 2202 பொதுக் கல்வி | | | |
| 01 தொடக்கக் கல்வி | 14632.54 | 205033.53 | 219666.07 |
| 02 இடைநிலைக் கல்வி | 5567.28 | 185466.59 | 191033.87 |
| 04 முதியோர் கல்வி | 0.01 | 63.84 | 63.85 |
| 05 மொழி வளர்ச்சி | 2.49 | 341.17 | 343.66 |
| 80 பொதுவானவை - ஏனைய செலவு | - | - | - |
| மொத்தம் .. .. | 20202.32 | 390905.13 | 411107.45 |
| 2204. போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப்பணிகளும் | 132.32 | 109.32 | 241.64 |
| 2205 கலையும் பண்பாடும் - பொது நூலகங்கள் | .. | 2189.09 | 2189.09 |
| 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப் பட்டோர் நலன் | 1795.91 | 25.14 | 1821.05 |
| 2235 சமூகப் பாதுகாப்பும், நலனும் | - | 200.76 | 200.76 |
| 2251 தலைமைச் செயலகம் - சமூகப் பணிகள் | - | 228.89 | 228.89 |
| 2505 ஊரக வேலைவாய்ப்பு | 1314.36 | .. | 1314.36 |
| 4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 2291.85 | .. | 2291.85 |
| 7610. அரசுப் பணியாளர் முதலியோருக்கு கடன்கள் | .. | 5.00 | 5.00 |
| 7615 பல்வகைக் கடன்கள் | .. | 4.50 | 4.50 |
| சேர்க்க - திருப்பி வசூலிக்கப்பட்டவை | .. | .. | .. |
| பெருமொத்தம் .. .. | 25736.76 | 394644.57 | 420381.33 |



## 2003-2004-க் பகுதி II புதிய திட்டங்கள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் இலட்சத்தில் திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது |
|---|---|---|---|
| 1 | 175 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடங்களுக்கு பராமரிப்புப் பணி | 100.00 | |
| 2 | 50 உயர்நிலை மற்றும் 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் அளித்தல் | 60.00 | |
| 3 | 100 உயர்நிலை மற்றும் 50 மேல்நிலைப் பள்ளிகளுக்கு கற்பிப்பு சாதனங்கள் அளித்தல் | 23.63 | |
| 4 | 300 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் மொழி பயிற்றுவிக்கும் ஆய்வகம் அமைத்தல் | 168.75 | |
| 5 | 30 அரசு/ஊராட்சி ஒன்றிய நகராட்சி/ மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | 180.75 | |
| 6 | 30 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | | 253.85 |
| 7 | 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி கல்வி அறிமுகப்படுத்துதல் | 698.28 | |
| 8 | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தொலைபேசி வசதியுடன் வரவேற்புக் கூடம் கட்டுதல் | 6.00 | |
| 9 | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தலைமை அலுவலகத்தில் தனியாக டிரான்ஸ்பார்மர் அமைத்தல் | 5.00 | |
| 10 | மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதி மற்றும் நிகரி (Fax) வசதி அளித்தல் | 3.08 | |
| | மொத்தம் .. .. | 1246.09 | 253.86 |
| | பெருமொத்தம் .. .. | | 1499.95 |

## 2001-2003-ல் முக்கிய சாதனைகள்



* தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் 6 முதல் 14 வயதுவரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி வழங்கிட ஒரு பெரும் இயக்கமாக "அனைவருக்கும் கல்வித் திட்டம்" 2001-2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2010 வரை செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ.1649 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அளவில் திட்ட அறிக்கை முடிவு செய்த முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

* அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2001-2003 ஆண்டுகளில் ரூ.184.22 கோடி செலவில் புதிய பள்ளிகள் தொடங்குதல். பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், வட்டார, கள ஆய்வு மையங்கள் கட்டுதல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல், பள்ளிகளுக்குக் குடிநீர், கழிப்பிட மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்குதல் போன்ற பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* 2001-2003-ல் 756 தொடக்கப் பள்ளிகள், 676 நடுநிலைப் பள்ளிகள், 220 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 260 மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன.

* முதல் முறையாக கல்வித் துறைக்காக நபார்டு வங்கியிடம் கடன் பெற்று இரண்டு கட்டமாக 346 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.99.00 கோடி செலவில் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

* தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.96.06 கோடி செலவில் நிதிக் குழு மானியம், அனைவர்க்கும் கல்வி இயக்கம், மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் போன்றவற்றின் மூலம் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 4661 தரம் வாய்ந்த மாணவர்கள் குறைந்த செலவில் ஆசிரியர் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



* ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள இடங்கள் உயர்த்தப்பட்டு ஒற்றைச் சாளர முறையில் மாணவர்கள் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1560 நபர்கள் கூடுதலாகப் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட சுமார் 20,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது 15,670 மாணவர்கள் முதலாண்டு பயிற்சி பெற்று வருகிறார்கள்.

* பள்ளி ஆண்டுத் தேர்வில் 6-12 வகுப்புகளில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறு தேர்வு நடத்தப்பட்டு 10ஆம் வகுப்பு மற்றும் +2 தேர்வுகளில் மட்டும் 56,063 மாணவர்கள் 2002ஆம் ஆண்டில் பயன் பெற்றார்கள்.

* ஆசிரியர் இட மாற்றலில் வெளிப்படையான கலந்தாய்வு முறை பின்பற்றப்பட்டு சுமுகமான முறையில் ஆசிரியர்கள் இடமாறுதல் நடைபெறுகிறது.

* பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த 6,7,8, வகுப்புகளில் பி.எட். தகுதி பெற்ற பட்டதாரி இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்படுள்ளது.

* பள்ளிகளில் 10,178 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

* பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

* மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டு மேற்கண்ட பள்ளிகள் குறைந்தபட்ச வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* 867 கிராமப்புற நூலகங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. [2003 ஏப்ரல் 4
தமிழகத்தின் பொது நூலகங்களுக்கு 7,362 தலைப்புகளில் தமிழ்ப் புத்தகங்களும், 3,160 தலைப்புகளில் ஆங்கிலப் புத்தகங்களும் ரூ.1474 இலட்சம் செலவில் இவ்விரு ஆண்டுகளில் வாங்கப்பட்டுள்ளன.

* இசை, கலை, பேச்சுத்திறன் போன்றவற்றில் மாணவர்கள் தத்தம் திறமைகளை வெளிக்கொணர இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

## கொள்கை விளக்கம் மற்றும் திட்டங்கள்

### 1. தொடக்கக் கல்வி

14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளை கொள்கையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு 1994-95ஆம் ஆண்டிலேயே கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டத்தை நிறைவேற்றியது. தீவிரமான செயல் ஊக்கத்துடன், தரமான தொடக்கக் கல்வியை அனைவருக்கும் அளிப்பதற்கு அரசு சில கொள்கைகளை வகுத்து செயலாற்றி வருகிறது. அனைவருக்கும் கல்வி அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகக் கருதப்படுகிறது.

### 1.1 குறிக்கோள்

* பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்.

* பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் அனைவரையும் இடையில் நின்று விடாமல் 8ஆவது வகுப்பு வரையாவது தொடர்ந்து தக்க வைத்து நிறைவுறச் செய்தல்.

* பள்ளிகளில் பயிலும் அனைத்து குழந்தைகளும் குறைந்த பட்சக் கற்றல் திறன்கள் அடையும் வகையில் தரமான கல்வியை வழங்குதல்.

* குழந்தைகளின் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியை உறுதி செய்தல்.



2003 ஏப்ரல் 4]

* நுண்ணிய அளவில் பரவலான திட்டங்களைத் (Micro level decentralised planning) திட்டமிடுதலிலும் செயல்படுத்துவதிலும் சமுதாயத்தைப் பங்கேற்கச் செய்தல்.

### 1.2 கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டம், 1994

பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளிக்கு பெற்றோர்கள் கட்டாயம் அனுப்ப வேண்டும் என்பது இச்சட்டத்தின் நோக்கமாகும். சமுதாயத்திலுள்ள உள்ளூர் ஆர்வலர்கள், பெற்றோர், இளைஞர்கள் மற்றும் ஆசிரியர்களது கூட்டு முயற்சியால் மாணவர் சேர்க்கையில் விழிப்புணர்வை ஏற்படுத்த சமுதாயத்தோடு இணைந்த கூட்டு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மாநில அரசின் தொடர் முயற்சியின் விளைவால் 98.93% ஆரம்ப நிலை பள்ளி வயதுக் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பள்ளி செல்லாத, மீதமுள்ள 1.07% பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளிகளில் 2003-ல் சேர்க்க சமுதாயத்தின் ஒத்துழைப்போடு பல முயற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1.3 புதிய பள்ளிகள் தொடங்குதல்

வீட்டுக்கு அருகில் பள்ளி அமைந்திருத்தல் நூறு விழுக்காடு சேர்க்கையை உறுதிப்படுத்துகிறது. ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் பள்ளிகள் இல்லாமலும், மக்கள் தொகை 300-ம் அதற்கு மேற்பட்ட சிற்றூர்களிலும் தொடக்கப் பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்பதை அரசு முதன்மைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. அதே போன்று இரண்டு ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒரு நடுநிலைப் பள்ளி தேவையுள்ள இடங்களில் அமைய வேண்டுமென்பதும் அரசின் நோக்கமாகும்.

அதன்படி 2002-2003-ல் 304 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 479 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 2003-2004-ல் 372 தொடக்கப் பள்ளிகளும் 422 நடுநிலைப் பள்ளிகளும் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 1.4 தனியார் பள்ளிகள்

மிகுந்த தரம் வாய்ந்த பள்ளிகளை ஆரம்பித்து சிறப்பாகக் கல்வி அளிப்பதில் தனியார் பங்கு மிகவும் போற்றுதற்குரியது. அரசின் நிதி உதவி எப்போதும் கோரமாட்டோம் என்ற உறுதிமொழிக்கு

உட்பட்டு: ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தொடங்க 1-6-1991 முதல் அனுமதி வழங்கப்படுகிறது.

### 1.5 உபரி ஆசிரியர்கள் பணிநிரவல்

ஆசிரியர் மாணவர் விகிதமான 1:40-படி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும், நிதி உதவிபெறும் பள்ளிகளிலும் உள்ள அதிகப்படியான ஆசிரியர்களின் எண்ணிக்கை கண்டறியப்பட்டு தேவையான பள்ளிகளுக்கு 9,229 பணியிடங்கள் பணிநிரவல் செய்யப்பட்டன. இப்பணிநிரவலின் விளைவாக ஆசிரியர் பற்றாக்குறை உள்ள அநேக பள்ளிகளில் இருந்த காலிப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 1.6 மழலையர் பள்ளிகள்

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் "Code of Regulations for Approved Nursery and Primary Schools, 1991" என்ற விதிமுறைகளின் அடிப்படையில் இயங்கி வருகின்றன. இந்த விதிமுறைகளின்கீழ் மாநிலத்தில் சுமார் 3,216 பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 1.7 நடுநிலைப் பள்ளிகளில் கல்வியின் தரத்தினை மேம்படுத்துதல்

திருத்தி அமைக்கப்பட்டுள்ள தரமான பாடத் திட்டத்திற்கேற்ப ஆங்கிலம், அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களைக் கையாள 6,7,8 வகுப்புகளுக்கு பி.எட். கல்வித் தகுதி பெற்ற பட்டதாரி இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க 2002 ஆம் ஆண்டில் அரசு உத்தரவிட்டுள்ளது.

அரசு உதவிபெறும் பள்ளிகளில், இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில், 1995-1998 ஆண்டுகளில் நியமனம் செய்யப்பட்ட பி.எட். ஆசிரியர்களின் பணியினை மனிதாபிமான அடிப்படையில் முறைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டதில் சுமார் 1,300 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

### 1.8 நடமாடும் நூலகங்கள்

நடுநிலைப் பள்ளிகளில் மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த 29 கல்வி மாவட்டங்களில், தற்போது செயல்படும் நடமாடும் அறிவியல் ஊர்திகள் மூலம் நூலகப் புத்தகங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.





### 1.9 அடிப்படை வசதிகள்

முழுமையான சேர்க்கையையும், தக்கவைத்தலையும் அடைய ஒரு பள்ளி அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்றிருக்க வேண்டியது அவசியம். மைய அரசின் உதவியோடு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் (ம) அனைவர்க்கும் கல்வித் திட்டத்தின் (சர்வ சிக்ஷா அபியான்) கீழ் செய்து தரப்படும் வசதிகள் மட்டுமல்லாமல் பல்வேறு திட்டங்களின் மூலம் 2001-2003-ல் கீழ்க்கண்டவாறு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன:—

| திட்டம் | பள்ளிக் கட்டடங்கள் | கழிப்பிட வசதிகள் | குடிநீர் வசதிகள் | மின் வசதி | நிதி ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| பதினோராவது நிதிக் குழு (முதல் கட்டம்) | 15 | 435 | 1500 | 350 | 479.43 |
| பதினோராவது நிதிக் குழு (இரண்டாம் கட்டம்) | 35 | 463 | 1000 | 350 | 479.45 |
| கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் பகுதிக்கான முனைப்புத் திட்டம் | 18 | 18 | 18 | 18 | 150.12 |
| பிரதம மந்திரியின் கிராம வளர்ச்சித் திட்டம்" | 213 | 1431 | 1431 | .. | 1452.80 |
| மொத்தம் | 281 | 2347 | 3949 | 718 | 2561.80 |

### 1.10 நலத் திட்டங்கள்

பள்ளிகளில் மாணவ, மாணவிகளை அதிகப்படியாக சேர்ப்பதற்கும் இடைநிற்றலைக் குறைப்பதற்கும் பல்வேறு அரசு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 1982ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மதிய உணவுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கு 1985-86 முதல் 1-8 வகுப்பு வரை இலவசச் சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1986-லிருந்து 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து குழந்தைகளுக்கும், 6 முதல் 8 வகுப்பு வரை சத்துணவுத் திட்டத்தில்

[2003 ஏப்ரல் 4

பயன்பெறும் மாணவர்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2002-2003ஆம் கல்வியாண்டில், அரசின் நலத்திட்டங்கள் மூலமாக பயனடைந்தோர் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| நலத்திட்டங்கள் | பயன்பெறுவோர் எண்ணிக்கை | செலவிடப்படும் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| இலவசப் பாடப் புத்தகங்கள் | 58,86,125 | 25.31 |
| இலவச சீருடை | 33,70,390 | 41.51 |

### 1.11 ஸ்வஜல்தாரா திட்டம்

கிராமப்பகுதிகளில் குடிநீர் வழங்கும் மைய அரசின் இத்திட்டத்தின்படி, மாநில அரசின் பங்காக செலவினம் ஏதும் இல்லை. ஆனால் இக்குடிநீர்த் திட்டத்தில் பயனடையும் பள்ளியின் பெற்றோர்-ஆசிரியர் கழகமோ அல்லது பொதுமக்களோ ஆரம்பச் செலவினத்தில் 10 சதவிகிதத்தை பங்காக அளிப்பதோடு, பராமரிப்புச் செலவினத்தையும் ஏற்க வேண்டும். இதுவரை 522 கிராமப்புற பள்ளிகளுக்குக் குடிநீர்வசதி பெற கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் மீதமுள்ள பள்ளிகளும் பயன்பெறும்.

### 1.12 மழை நீர் சேகரிப்பு - "நீர் வளமே எதிர் காலம்"

நிலத்தடி நீரை வளப்படுத்த வேண்டுமெனக் கருதி "மழைநீர் சேமிப்போம்" என்ற அறைகூவலுக்கிணங்க அனைத்துப் பள்ளிகளிலும் மழைநீர் சேகரிப்பு குறித்து பள்ளி மாணவர்களுக்கு நன்முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பள்ளிகளிலும் மழைநீர் சேமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 1.13 கற்றலில் இனிமை

குழந்தையே கல்வியின் மையப் பொருள் ஆகும். எனவே குழந்தையை மையமாகக் கொண்ட கல்வி மட்டுமே சிறந்த பயனுள்ள முடிவுகளை அளிக்க முடியும். கற்றல், கற்பித்தல் அனுபவம் கற்பவருக்கும், கற்பிப்பவருக்கும் இனிமையானதாக இருக்க வேண்டும். குழந்தைகள்,



2003 ஏப்ரல் 4]

இயற்கையாகவே விரும்பி ஏற்கின்ற ஆடல், பாடல், கதைகள், நாடகங்கள் போன்ற முறைகளின் மூலம் கற்பதே கற்றலின் இனிமை ஆகும். இதற்கென 'யுனிசெப்' நிதியுதவியுடன் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி, ஆசிரியர்கள்-மாணவர்களிடையே மிகச் சிறந்த கற்றல் விளைவுகளை உருவாக்கியுள்ளது. இம்முறையானது, குழந்தைகளின் கவனத்தைத் தொடர்ந்து ஈடுபடச் செய்வதோடு, சுயமாகக் கற்றலுக்கும் வழிவகுக்கிறது.

### 1.14 மாதிரிப் பள்ளிகள்

இத்திட்டத்தில் 838 பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, ஒரு பள்ளிக்கு ஒரு அலுவலர் வீதம் 838 அலுவலர்கள் கண்காணிப்பில், இப்பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் தரமான கல்வியானது மேம்பட்ட சூழலில் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 1.15 சிறந்த பள்ளிகளுக்கு விருது வழங்குதல்

கூடுதல் சேர்க்கை விகிதம், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களைச் சேர்த்தல், இடைநிற்றலைக் குறைத்து தக்கவைத்து நிறைவுறச் செய்தல், பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் செயல்பாடுகள், பள்ளி வளர்ச்சிக்கான பொதுமக்கள் பங்கு போன்ற செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் பள்ளிகளை முன்னேற்ற ஊக்குவிக்கும்பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த மூன்று பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் ஆசிரியர் தினத்தன்று கேடயங்களாக விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 1.16 அனைவர்க்கும் கல்வி இயக்கம்

அனைவரும் ஆரம்பக் கல்வியை கட்டாயம் பெற வேண்டுமென இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. இதற்கென மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் முதற்கட்டமாக 1994-95-ல் நான்கு மாவட்டங்களிலும், இரண்டாம் கட்டமாக 1997-98-ல் மூன்று மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது 1-5 வகுப்புகளில் செயல்படுத்தப்பட்டது. அவ்வாறு செயல்படுத்தப்பட்டதில், பள்ளிகளில் மாணவர் சேர்க்கை, மாணவர்களைத் தக்க வைத்தல், ஆரம்பக் கல்வியை முடித்தல், ஆண்-பெண் பாகுபாடின்றி சமச்சீரான ஆரம்பக் கல்வி ஆகியவற்றில் வியத்தகு முன்னேற்றம் காணப்பட்டது. இத்திட்டமானது

30-6-2003-ல் முடிவுறுகிறது. இத்திட்டத்தினால் அடைந்த முன்னேற்றத்தினைத் தொடர்ந்து தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் (மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்ட மாவட்டங்கள் உட்பட) அனைத்துப் பள்ளிகளிலும் 1-8 வகுப்புகளில் 2001 முதல் 2010 வரை 10 ஆண்டு காலத்திற்கு "அனைவர்க்கும் கல்வி இயக்கம்" (சர்வ சிக்ஷா அபியான்) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002 முதல் 2007 வரையிலான காலம்) ரூ.1,649 கோடி அளவுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இச்செலவினத்தை மைய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கும்.

**1.17 அனைவர்க்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோள்கள்**

* அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் 2003ஆம் ஆண்டிற்குள் பள்ளியில் சேர்த்தல்;
* ஐந்தாண்டு தொடக்கக் கல்வியை 2007-ல் முடித்தல்;
* அனைத்துக் குழந்தைகளும் எட்டாண்டு ஆரம்பக் கல்வியை 2010-க்குள் முடித்தல்;
* வாழ்க்கைக் கல்வியை மையமாகக் கொண்ட தரமான ஆரம்பக் கல்வியை வழங்குவதில் கவனம் செலுத்துதல்;
* ஆண் பெண் பேதம் / சமூக ஏற்றத்தாழ்வு பாகுபாடின்றி சமச்சீரான ஆரம்ப நிலையை 2007-க்குள் அடைதல்; 2010-க்குள் ஆரம்பக் கல்வியை அடைதல்;
* 2010-ல் அனைவரையும் பள்ளிகளில் தக்க வைத்தல்.

**1.18 இத்திட்டத்தின்கீழ் 2001-2003 ஆம் ஆண்டுகளில் ரூ.184.22 கோடி செலவில் அனுமதிக்கப்பட்ட பணி விவரங்கள் வருமாறு:**

* 756 தொடக்கப் பள்ளிகள்; 1,512 ஆசிரியர் பணியிடங்கள்
* 676 நடுநிலைப் பள்ளிகள்; 873 ஆசிரியர் பணியிடங்கள்
* 385 வட்டார வள மையங்கள்; 3,296 வட்டார வள மைய ஆசிரியர்கள்



* 4087 கருத்தாய்வு மையங்கள்
* பள்ளி அளவில் 29,175 கிராமக் கல்விக் குழுக்கள்
* 21,954 தொடக்கப் பள்ளிகளுக்கு தளவாடச் சாமான்கள் வாங்க பள்ளி மானியமாக ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.2,000/-
* பள்ளிகளில் 1-8 வகுப்புகளில் பணியாற்றும் 98,786 ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் கற்றல், கற்பித்தல் துணைக் கருவிகள் வாங்கிட ரூ.500 மானியம்
* 756 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு கற்றல், கற்பித்தல் கருவி வாங்கிட மானியம் ரூ.10,000/-
* 676 புதிய நடுநிலைப் பள்ளிகளுக்கு கற்றல், கற்பித்தல் கருவிகள் வாங்க மானியம் ரூ,50,000/-
* 20,540 அரசுப் பள்ளிகளுக்கு ரூ.5,000/- வீதம் பள்ளிக் கட்டடப் பராமரிப்பிற்கென மானியம்
* 87 வட்டார வள மையக் கட்டடங்கள் (ஒவ்வொரு கட்டடமும் ரூ.6.00 இலட்சம் செலவில்)
* 234 பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையக் கட்டடங்கள் (ஒவ்வொன்றும் ரூ.2.00 இலட்சம் செலவில்)
* 964 இரு வகுப்பறைக் கட்டடங்கள் (ஒவ்வொன்றும் ரூ.3.00 இலட்சம் செலவில்)
* 716 மூன்று வகுப்பறைக் கட்டடங்கள் (ஒவ்வொன்றும் ரூ.4.50 இலட்சம் செலவில்)
* 2,749 பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதி (ஒவ்வொன்றுக்கும் ரூ.20,000/ செலவில்)
* 2,536 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி (ஒவ்வொன்றுக்கும் ரூ.15,000/- செலவில்)
* வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்குப் பள்ளிசார் பயிற்சி அளித்தல்.

[2003 ஏப்ரல் 4

* பயிற்சித் திட்டங்களுக்குக் கட்டகங்கள் தயாரிக்கப்பட்டு கருத்தாளர்கள் பயிற்சி அளித்தல்
* 359 கல்வி உறுதியளிப்பு மையங்கள் 9,046 குழந்தைகளுடன் செயல்படுதல், 1,190 இணைப்பு வகுப்புகள் 21,110 குழந்தைகளுடன் நடத்துதல்.
* 62 தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் கண்டறியப்பட்டு மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான பணி ஒப்படைக்கப்பட்டு 58,099 குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்த்தல், ஒவ்வொரு குழந்தைக்கும் வருடந்தோறும் ரூ.1,200 வழங்குதல்.
* மேற்கண்ட மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளைக் கண்டறிந்து விழிப்புணர்வு முகாம்கள், மருத்துவ முகாம்கள் நடத்தி அடையாள அட்டை வழங்கப்பட்டு குறைபாடுடைய குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்குதல்.
* பள்ளி முன்பருவக் கல்வி மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல் மற்றும் அங்கன்வாடி, பால்வாடி பணியாளர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி வழங்குதல்.
* 6,7,8, வகுப்புக் குழந்தைகளுக்கு கணினிக் கல்வியில் அறிமுகப் பயிற்சி அளித்தல்.
* மாவட்ட அளவில் சிறப்புமிக்க கணினி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு கணினிப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
* பெண்கல்வி, தாழ்த்தப்பட்ட பழங்குடியினக் குழந்தைகளுக்கு புதிய முயற்சியாக தையல், பின்னலாடை, சோப்பு தயாரித்தல் பிற பகுதிக்கேற்ற குடிசைத் தொழில்கள் போன்றவற்றில் கல்வியளிக்க திட்டமிடல்.
* தாழ்த்தப்பட்ட / பழங்குடியினக் குழந்தைகளுக்கும், மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கும் பிற குழந்தைகளுக்குச் சமமான தேர்ச்சி பெறும் வகையில் 9,200 தனிப் பயிற்சி வகுப்புகள்.



2003 ஏப்ரல் 4]

* ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்காக ஆண்டுக்கு குறைந்தது 20 நாட்கள் அவர்களுக்குப் பயிற்சி வழங்குதல்.

**1.19 2003-2004-க்கு சுமார் ரூ.340.31 கோடி அளவுக்கு திட்டங்கள் தீட்டப்பட்டு அதன்மூலம் உத்தேசமாக மற்ற வழக்கமான மானியங்களுடன் செயல்படுத்தப்படவுள்ள முக்கியப் பணிகள் விவரம் வருமாறு:**

* 372 புதிய தொடக்கப் பள்ளிகள்; 744 ஆசிரியர் பணியிடங்கள்
* 422 நடுநிலைப் பள்ளிகள்; 422 ஆசிரியர் பணியிடங்கள்
* 55 வட்டார வள மைய கட்டடங்கள்.
* 398 கருத்தாய்வு மைய கட்டடங்கள்
* 1136 இரு வகுப்பறைக் கட்டடங்கள்
* 809 மூன்று வகுப்பறைக் கட்டடங்கள்
* 3,445 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி
* 4,887 பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதி
* 5,800 முன் பருவக் கல்வி மையங்கள்
* 8,750 உறைவிடப் பள்ளி முகாம்கள்
* 10,400 இணைப்பு மையங்கள்
* 2.07 இலட்சம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி
* 53,340 வட்டார வள மைய, கருத்தாய்வு மைய, கிராமக் கல்வி உறுப்பினர்களுக்குப் பயிற்சி.

**1.20 அனைவர்க்கும் கல்வி இயக்கக் குழுக்கள்**

அனைவர்க்கும் கல்வி இயக்கப் பணிகளை செவ்வனே செயல்படுத்த மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் கிராம அளவில், குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி குறிக்கோள் [2003 ஏப்ரல் 4

* ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலைக் கல்வி பெறச் செய்தல்
* இடைநிலைக் கல்வி பெற சேர்ந்த அனைவரும் தொடர்ந்து படித்தல்
* பல்வேறு நற்பண்புகளின் அடிப்படையில் தரமான கல்வியை வழங்குதல்
* பெற்றோர் மற்றும் சமுதாயத்தினை முழு அளவு பங்கேற்கச் செய்தல்

### 2.1 புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

ஐந்து கி.மீக்குள் உயர்நிலைப் பள்ளிகள் எதுவுமே இல்லாமல் இருந்து, அந்த எல்லைக்குள் செயல்படும் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் 50 மாணவர்கள் கல்வி பயின்று வருவார்களாயின் அத்தகைய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும், எட்டு கி.மீ. சுற்றளவில் எந்த ஒரு மேல்நிலைப் பள்ளியும் இல்லாமல் இருந்து, அந்த எல்லைக்குள் செயல்படும் அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் 100 மாணவர்கள் கல்வி பயிலும் பட்சத்தில் அத்தகைய உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதுமே அரசின் கொள்கையாகும். 2003-2004ஆம் ஆண்டில் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளும், 30 அரசு மேல்நிலைப் பள்ளிகளும் துவக்கப்படும்.

### 2.2 தனியார் நிர்வாகத்தின்கீழ் சுயநிதி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

அரசிடமிருந்து நிதியுதவி கோர மாட்டோம் என்ற அடிப்படையில் 1-6-1991 லிருந்து தனியார் நிர்வாகத்தின்கீழ் சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் துவக்க அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. 2002-2003-ல் 84 உயர்நிலைப் பள்ளிகளும், 32 மேல்நிலைப் பள்ளிகளும் துவங்கப்பட்டுள்ளன. மத்திய அரசால் நடத்தப்பெறும் 5 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மாநில பாடத் திட்டத்தின்படி மேல்நிலைப்பள்ளி பிரிவுகள் துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 4]

### 2.3 மாணவர்கள் சேர்க்கைக்கு சிறப்புத் திட்டங்கள்

பள்ளிகளில் மாணவர்களை அதிகப்படியாக சேர்ப்பதற்கும், பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து படிப்பதற்கும் அனைவர்க்கும் கல்வி இயக்கம் முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இலவசச் சீருடை, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசக் குறிப்பேடுகள், இலவச மதிய உணவு, இலவசப் பேருந்து பயணச் சலுகை, +1 வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச இரு சக்கர மிதி வண்டி மற்றும் உதவித் தொகை அளிப்பது போன்ற நன்மை பயக்கும் திட்டங்கள் சமுதாயத்தில் நலிந்த பிரிவினைச் சார்ந்த மாணவர்கள் தொடர்ந்து பள்ளிகளில் முழு அளவில் படிக்க செயல்படுத்தப்படுகின்றன. மேலும் 6-9 மற்றும் +1 வகுப்புகளில் மாவட்ட அளவிலான ஆண்டுத் தேர்வில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடித் தேர்வும் நடத்தப்பட்டு பள்ளிகளில் இடைநிற்றல் குறைக்கப்படுகிறது.

### 2.4 புதிய பாடத் திட்டம்

தேசிய கல்விக் கொள்கை அறிமுகம் செய்தபின் 1988-89-லும், 1995-96-லும் தமிழ்நாட்டில் பாடத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு புதிய பாடநூல்கள் தயார் செய்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பாடத் திட்டத்தை திருத்தியமைப்பதற்காக மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் அமைக்கப்பட்ட கல்வியாளர்கள் அடங்கிய குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் புதிய பாடத் திட்டம் 2003-2004ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்டவாறு அறிமுகப்படுத்தப்படவுள்ளது:

| ஆண்டு | வகுப்புகள் |
|---|---|
| 2003-2004 | 6,9 அனைத்துப் பாடங்கள், 10ஆம் வகுப்பு தமிழ் பாடம் மட்டும். |
| 2004-2005 | 7, +1 அனைத்துப் பாடங்கள்; 10ஆம் வகுப்பு தமிழ் பாடம் தவிர மற்ற பாடங்கள் அனைத்தும். |
| 2005-2006 | 8, +2 அனைத்துப் பாடங்களும் |

[2003 ஏப்ரல் 4

## 2.5 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

தமிழ்நாட்டை அறிவுத் திறனும் கணினி அறிவும் மிக்க சமுதாயமாக மாற்ற வேண்டுமென்று இவ்வரசு கருதுகிறது. இதற்கேற்ப பள்ளி மாணவர்கள் அனைவர்க்கும் கட்டாயக் கணினிக் கல்வி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. தற்போது 1197 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2003-2004ஆம் ஆண்டில் மேலும் 200 பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்படும்.

## 2.6. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி

1978-ல் 10, +2 +3 முறை ஏற்றுக்கொண்டபொழுது மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தபின் வேலையில் சேரும்பொருட்டு அல்லது சுயவேலைவாய்ப்புக்கு வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு. செயல்திறன் அடங்கிய தொழிற்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி 1,506 பள்ளிகளில் 7 வகையான தொழிற் பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன. அவற்றில் பயிலும் மாணவ, மாணவியர் விவரம்:-

| பாடப்பிரிவு | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| வேளாண்மை | 7162 | 2175 | 9337 |
| மனையியல் | 564 | 3817 | 4381 |
| வணிகவியல் | 22487 | 21713 | 44200 |
| பொறியியல் | 14385 | 2013 | 16398 |
| சுகாதாரம் | 214 | 4120 | 4334 |
| கணினிக் கல்வி | 25232 | 18985 | 44217 |
| இதர பிரிவுகள் | 11866 | 11506 | 23372 |
| மொத்தம் | 81910 | 64329 | 146239 |

தொழிற் படிப்புக்கு மேலும் முன்னுரிமை அளிக்க வேண்டுமெனக் கருதி மாவட்டந்தோறும் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கலாமென கடந்த ஆண்டில் கருதப்பட்டது. ஆனால் தற்போது மைய அரசு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடெங்கும் புதிய மாற்று தொழிற் கல்வியை பள்ளிகளில் 9ஆம் வகுப்பிலிருந்து அறிமுகப்படுத்தும் நோக்குடன் வரைவுத் திட்டம் ஒன்றினைத் தயார் செய்து வருகிறது.



2003 ஏப்ரல் 4]

அந்தத் திட்டத்தின்படி தமிழ்நாட்டிலும் புதிய செயல்திறன் கொண்ட தொழிற் கல்வியை வரும் ஆண்டுகளில் அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டு வருகிறது.

## 2.7 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப கட்டமைப்பு வசதிகளான வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் செய்துதர இவ்வரசு உறுதி கொண்டுள்ளது. இதற்கென திட்டங்கள் தீட்டப்பட்டு முதன் முறையாக "நபார்டு வங்கி" மூலம் கடன் பெற்று முதல் கட்டமாக ரூ.18.36 கோடி செலவில் 9 மாவட்டங்களில் 96 பள்ளிகளில் இப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இரண்டாவது கட்டமாக ரூ.80.64 கோடி செலவில் 19 மாவட்டங்களில் 250 பள்ளிகளில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மூன்றாம் கட்டமாக தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம் போன்ற வட மாவட்டங்களில் உள்ள 325 பள்ளிகளில் அடிப்படை வசதிகளுக்கென ரூ.83 கோடி அளவுக்குத் தனித் திட்டம் வகுத்து நபார்டு வங்கிக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 2.8 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்

தேசியக் கல்விக் கொள்கையில் அறிவியல் கல்வி என்பது அடிப்படைக் கலைத் திட்டத்தில் ஓர் அம்சம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆய்வக வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது ஆசிரியர்களின் திறமையை மட்டும் வளர்க்காமல் மாணவர்களையும் ஆக்கபூர்வமாக சிந்திக்கத் தூண்டுவதாகும். அவ்வகை ஆய்வுக் கூட வசதிகள் இல்லாத பள்ளிகளில் அத்தகைய வசதிகளை ஏற்படுத்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 155 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 91 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கு நபார்டு வங்கி அனுமதித்துள்ள கடன் தொகையிலிருந்து அனுமதிக்கப்படவுள்ளது. நபார்டு வங்கியின்கீழ் பயன்பெறாத சுமார் 241 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் சுமார் 253 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தமிழ்நாடு பாடநூல் கழக நிதியுதவியுடன் ஆய்வுக்கூட வசதிகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர 2002-2004-ல் 50 உயர்நிலைப்

பள்ளிகளுக்கும், 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் சாதனங்கள் ரூ. 60.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 2.9 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்துதல்

கல்வி கற்றல் என்பது ஒரு தொடர் நிகழ்வாகும். வாழ்நாள் முழுவதும் கற்பதற்கு அவசியமுள்ளது. வகுப்பறைகளில் பாடநூல்கள் மூலம் கற்பதோடு, நூலகப் படிப்பு மாணவர்களின் அறிவாற்றலை மேலும் வளர்த்துக் கொள்ள உறுதுணையாக விளங்குகிறது. அனைத்து உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலும் தரமுள்ள நூல்களை உள்ளடக்கிய பள்ளி நூலகம் அமைத்திட அரசு இணை மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முறையில் நூலகத்திற்கு வாங்கும் புத்தகச் செலவில் 50 சதவிகிதத்தை அரசும், 50 சதவிகிதத்தை பெற்றோர்-ஆசிரியர் கழகம் அல்லது பொதுமக்களின் நன்கொடையிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. மேலும், அந்தந்தப் பகுதியில் உள்ள பொது நூலகங்களையும் பள்ளிகளுடன் இணைத்து மாணவர்களுக்குத் தரமான நூல்கள் வழங்கப்படுகின்றன.

## 2.10 பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்

ஆசிரியர்கள் தங்களது திறமை மற்றும் அறிவினை பெருக்கிக்கொள்ளும் பொருட்டு, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், பாட ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோருக்கும் அனைவர்க்கும் கல்வித்திட்டத்தின்கீழ் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

புதியதாக உதயமாகும் துறைகளில் (sunrise sectors) தக்க வேலைவாய்ப்புகளைப் பெற ஆங்கிலம் மிக இன்றியமையாத ஒன்றாக இருப்பதால் ஆங்கில மொழியில் பேசும் திறன் மற்றும் தகவல் தொடர்புத் திறன் நோக்குடன் 300 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.225 இலட்சம் செலவில் ஆங்கில மொழி கற்பிப்பு ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படும். இத்தொகையில் அரசு 75 விழுக்காடும், பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள் 25 விழுக்காடும் ஏற்கும்.







## 2.11 அறிவியல் கண்காட்சிகள்

அறிவியல் கல்வியை மேம்படுத்தவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் இவற்றைச் சார்ந்த மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமையை வெளிக் கொணரவும் மாவட்ட மற்றும் மாநில அளவில் அறிவியல் கருத்தரங்கும், கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி திருச்சியில் ஜனவரி 2003-ல் நடத்தப்பட்டது. இது தவிர, தென்னிந்திய அறிவியல் கண்காட்சியும் பெங்களூர் விஸ்வேஸ்வரய்யா தொழில் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகத்தால் 2003-ல் சேலம் மாநகரில் நடத்தப்பட்டது.

## 2.12 விளையாட்டுகளும் விளையாட்டுப் போட்டிகளும்

பள்ளிகளில் உடற்கல்விப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. விளையாட்டிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வத்தை உண்டாக்கவும், அவர்களிடம் மறைந்திருக்கும் திறமையை உரிய நேரத்தில் தெரிந்து கொள்ளவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை உதவியுடன் திறமை கண்டுபிடிப்பு திட்டம் செயல்பட்டு வருகிறது. இது தவிர, மாவட்ட, மாநில அளவிலும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன. மாநில அளவிலான குடியரசு தின விழாப் போட்டிகள் விருதுநகரிலும், பாரதியார் தின விழா விளையாட்டுப் போட்டிகள் விழுப்புரத்திலும் நடத்தப்பட்டன.

## 2.13 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி

8-ஆம் வகுப்பு முதல் +2 வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் போன்ற குறிப்பிட்ட பாடங்களிலும், மேல்நிலைப் பள்ளி பாடங்களான இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், வணிகவியல் மற்றும் கணக்குப் பதிவியல் போன்ற பாடங்களிலும் சிறப்புப் பயிற்சி நடத்தப்படுகிறது. சுமார் 1000 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதம் முதல் பிப்ரவரி மாதம் முடிய இத்தகைய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களை பள்ளிகளில் அதிகப்படியாகச் சேர்த்து அவர்களைத் தொடர்ந்து படிக்கச் செய்யும் தலைமையாசிரியர்களில் மாவட்டத்தில் மூன்று தலைமையாசிரியர்களுக்கு பரிசுத் தொகை (முதல் நிலை ரூ.500/- இரண்டாம் நிலை ரூ.300/- மூன்றாம் நிலை ரூ.200/-) வழங்கப்படுகிறது.

## 2.14 பள்ளி சிறார் நல வாழ்வுத் திட்டம் [2003 ஏப்ரல் 4

பள்ளி மாணவ, மாணவியரின் உடல் நலனைக் கண்காணிப்பது பெற்றோர், ஆசிரியர் மற்றும் அரசின் தலையாய கடமையாகும். சிறு வயதில் ஏற்படும் சில நோய்கள் ஆரம்ப நிலையில் கண்டறியப்படாவிடின், பள்ளிப் படிப்பில் பாதிப்பு ஏற்படுத்துவதோடல்லாமல், பெரும் நோய்களாகவும், ஊனங்களாகவும் உருவாகும் ஆபத்துடையன. ஆகவே பள்ளிகளில் வியாழக்கிழமைதோறும் பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்ட நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றையதினம் இந்தப் பணியினை அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மாணவர்களைப் பரிசோதித்து, தேவையானவர்களுக்குத் தகுந்த சிகிச்சைகளை அளிக்கின்றனர். 2002-2003-ல் (பிப்ரவரி முடிய) சுமார் 70.58 இலட்சம் மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டு அதில் 43.16 இலட்சம் மாணவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேல் சிகிச்சை தேவைப்படும் மாணவர்கள் தாலுகா மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். பள்ளி சுகாதார சிறப்பு முகாம்கள் பல மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. தனியார் மருத்துவமனைகளை ஈடுபடுத்தி கிழிந்த உதடு பிளவு அறுவைச் சிகிச்சை மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை, கரூர் போன்ற மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எய்ட்ஸ் கல்வி உட்பட சுகாதாரக் கல்வி மீது இவ்வரசின் முழுக்கவனம் தொடரும்.

## 2.15 மாணவர்களுக்கு கல்விச் சலுகைகள்

திறமையுள்ள மாணவர்கள் தங்களது மேல் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் பொருட்டு கல்விச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் 10 ஆம் வகுப்பு (SSLC) பொதுத் தேர்வில் முதல் 3 நிலை பெறுபவர்களுக்கும், மாவட்ட அளவில் அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் முதல் நிலை பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் தலா ரூ. 1500/- ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது. அதேபோன்று +2 வகுப்பு பொதுத் தேர்விற்குப் பின்னரும், மாநில அளவில் முதல் மூன்று நிலையைப் பெறுவோர்களுடைய உயர் கல்விச் செலவையும், மாவட்ட அளவில் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகளில் படித்து மேல்நிலைத் தேர்வில் முதல்நிலையைப் பெறும்



2003 ஏப்ரல் 4]

ஒவ்வொரு மாணவருக்கும் உயர் கல்விச் செலவினையும் மாநில அரசே ஏற்று வருகிறது. மேற்கண்ட திட்டங்களின் மூலம் 2002ஆம் ஆண்டில் 208 மாணவர்கள் பயன் பெற்றனர். செலவிடப்பட்ட தொகை ரூ.65.63 இலட்சம்.

## 2.16 தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம், சாரணர் - சாரணியர் இயக்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்

* பள்ளி அளவில் தேசிய மாணவர் படையில் விமான, கப்பல் மற்றும் தரைப் படைப் பிரிவுகள் அடங்கிய 718 இளநிலைப் பிரிவுகள் செயல்படுகின்றன. பெண்களுக்கென ஒரு தனிப் பிரிவு உள்ளது.

* தலைமை ஏற்று நடத்தும் ஆற்றல், தன்னம்பிக்கை, தேசப்பற்று, தானாக நாட்டு நலனில் அக்கறை கொள்ளுதல், சமூகசேவை செய்யும் மனப்பான்மை போன்ற அரிய பண்புகளை மாணவர்கள் அடைய துணை செய்வதே நாட்டு நலப் பணித் திட்டத்தின் நோக்கமாகும். மாநிலத்தில் தற்சமயம் 1,300 பிரிவுகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

* கோயில்களைச் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல், போக்குவரத்தைச் சீர்படுத்துதல், முதலுதவி போன்ற சமூக நலச் செயல்பாடுகளை சாரணர் இயக்கம் செய்து வருகிறது. மாநிலத்தில் 4,553 பள்ளிகளில் சாரணர் இயக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த சாரணர்களுக்கு ஒப்பற்ற ராஜ்ய புரஸ்கார் என்ற விருது வழங்கப்பட்டு வருகிறது.

* தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பள்ளிகளில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டுக் கொண் டிருக்கிறது. மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் மாவட்டத்தின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலர் ஆவார்.

## 2.17 ஆசிரியர் இல்லம்

சென்னை சைதாப்பேட்டையில் ஆசிரியர்களின் நலனுக்காக ஒரு ஆசிரியர் இல்லம் செயல்படுகிறது. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஆசிரியர் இல்லங்களை உருவாக்கும் திட்டத்தின்

முதல் கட்டமாக நடப்பாண்டில் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர், கடலூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் ஆசிரியர் இல்லங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

## 2.18 தமிழ்நாடு கல்வி விதிகள்

பள்ளிக் கல்வித் துறையில் தற்போது பின்பற்றப்பட்டு வரும் சட்ட வரையில்லாத பல்வேறு விதிமுறைகளான, சென்னை கல்வி விதிகள (ஆங்கிலேயர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது), மானிய நிதியுதவி விதிகள், கல்வி நிறுவனங்கள் ஆய்வு விதிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் விதிகள் போன்ற விதிகள் தற்போது காலமுறைக்கு உகந்ததாக இல்லாததோடு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் கல்வி நிறுவனங்களின் அன்றாட தேவைக்கேற்றவாறும் அமையாததால், அவற்றை ஒருங்கிணைத்து தமிழ்நாடு கல்வி விதிகள் (Tamil Nadu Educational Rules) மற்றும் விதிமுறைகள் கையேடு (The Educational Manual for Tamil Nadu) ஆகியவற்றை முடிவு செய்ய முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. ஏ. முத்துகிருஷ்ணன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு அடுத்த கல்வியாண்டில் இவ் விதிமுறைகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

## 2.19 ஆசிரியர்களுக்கான மாநில விருது

1960-லிருந்து நல்லாசிரியர்களுக்கு ஆண்டுதோறும் 'டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது' எனும் நல்லாசிரியர் விருதுகள் செப்டம்பர் 5 ஆம் தேதியன்று ஆசிரியர் தின விழாவில் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் தொடக்க/நடுநிலைப பள்ளிகளைச் சார்ந்த 3 ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 2 ஆசிரியர்கள் வீதமும் (189+126) மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலிருந்து 6 ஆசிரியர்களும், ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் இருந்து 2 ஆசிரியர்களும் ஆக மொத்தம் 323 நபர்களைத் தேர்ந்தெடுத்து விருது வழங்கப்படுகிறது. இது தவிர, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் (17 பேர்) நலலாசிரியர் விருது வழங்கப்படுகிறது.



## 2.20 ஆசிரியர்களுக்கான தேசிய விருது

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை, நாடு முழுவதுமுள்ள ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தேசிய விருது வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள துவக்கப் பள்ளி ஆசிரியர்களில் 15 நபர்களும் சிறப்பு வகை துவக்கப் பள்ளி (ஊனமுற்ற பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் ஊனமுற்ற ஆசிரியர்கள்) ஆசிரியர்களில 2 நபர்களும், இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களில் 7 நபர்களும், அவர்களில் சிறப்பு வகையைச் சார்ந்த 1 நபர் ஆக 25 நபர்களுக்கு விருது வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 2.21 தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

ஆசிரியர் நலனுக்காக தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன:

- கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மருத்துவச் செலவினை ஈடுகட்டும் தொகையாக அதிகபட்சம் ரூ.50,000/- அல்லது செலவு செய்த தொகையில் 75 சதவிகிதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை.
- பணியில் இருக்கும்போது இயற்கை எய்திடும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு அவர்கள் படிப்பினை முடிக்க உதவியாக ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ.6000/-
- ஆசிரியர்களின் உடல் ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிறுதொழில் தொடங்க பயன்படும் தொழிற்கல்வி பெற திரும்பச் செலுத்தப்படா உதவித் தொகையாக ஒரு நபருக்கு மட்டும் ரூ.10,000/-
- ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு படிக்க ரூ.50,000/- கடன்; கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்கு ரூ.10,000/- கடன்.
- தொழிற் பட்டப் படிப்பிற்கு ஆண்டுக்கு ரூ.5000/- மற்றும் பட்டயப் படிப்பிற்கு ரூ.2500/-

## 2.22 பெற்றோர் - ஆசிரியர் கழகங்கள் [2003 ஏப்ரல் 4

பெற்றோர்-ஆசிரியரிடையே தொடர்பு மற்றும் கூட்டுறவு, பள்ளியின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. பள்ளி வயது எய்திய அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல், மாணவர் இடைநிற்றலைத் தவிர்த்தல் போன்ற பணிகளில் பெற்றோர் - ஆசிரியர் கழகம் ஆசிரியர்களுடன் இணைந்து அனைத்துவகைப் பள்ளிகளிலும் செயல்படுகிறது. பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டு பொது மக்களிடமிருந்து அசையும் மற்றும அசையாச் சொத்துக்களை நன்கொடையாக பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள் பெறலாம். பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும் தொழிற்கல்வி படிப்பு நுழைவுத் தேர்வுக்காக ஆண்டுதோறும் 102 மையங்களில் ரூ10 இலட்சம் செலவில் நடத்தப்படும் இலவச சிறப்புப் பயிற்சியினால் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏறத்தாழ 20,000 மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர்.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி புரவலர் திட்டத்தின்கீழ் பொதுமக்களிடம் குறைந்தது ரூ.1,000/- வசூல் செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து பள்ளிக்குத் தேவையான வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

## 2.23 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்

தமிழகத்திலுள்ள அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்வி மேம்படுவதற்குத் தேவைப்படும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்ய பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தும் திட்டம் வழி செய்கிறது. இதற்கென மக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் 2000-2001 வரை பள்ளி சீரமைப்பு மாநாடு நடத்தியதன் மூலம் கீழ்க்கண்டவாறு தொகை கிடைத்துள்ளது:

| [illegible] | தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு | உயர்நிலை மற்றும மேல்நிலைப் பள்ளிகளுக்கு |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| அசையும சொத்து | 77.82 | 47.20 |
| அசையாச் சொத்து | 34.53 | 246.39 |
| மொத்தம் | 112.35 | 293.59 |



2003 ஏப்ரல் 4]

2003-2004-ல் பத்து மாவட்டங்களில் இப்பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படும்.

## 2.24 கல்வி மேலாண்மை தகவல் முறை

உலக அளவில் தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் துறையில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ள அனைத்து துறைத் தலைவர்களின் மாநில அலுவலகங்கள் கணிப்பொறி மூலம் இணைக்கப்பட்டு தகவல் மற்றும் புள்ளி விவரங்களை அறிய அலுவலகங்களுடன் மாவட்ட அளவிலான அலுவலகங்கள் கணிப்பொறி இணையதளத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு பள்ளிக் கல்வித் துறை அலுவலகங்களிடையேயான பரிமாற்றம் விரைவுபடுத்தப்படும்.

## 3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

தனியார் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சென்னை பல்கலைக்கழகம் மற்றும் மதுரை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றிருந்தன. இவை யாவும் ஆங்கில பயிற்று மொழி சுயநிதிப் பள்ளிகள் ஆகும். இப்பள்ளிகளின் செயல்பாடுகளை நன்கு கவனிக்கும் பொருட்டு மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கென தனி இயக்குநரகம் தோற்றுவிக்கப்பட்டு, 4-12-2001 முதல் செயல்பட்டு வருகிறது. மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பாடத் திட்டம், தேர்வு முறை வகுத்தல், செயல்பாடுகள் குறித்து ஆலோசனை நல்குவதற்கென மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின்கீழ் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது 2,059 மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளிகளும் (10 ஆம் வகுப்பு வரை), 1,391 மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளும் (+2 வகுப்பு வரை) ஆக மொத்தம் 3,450 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உள்ளன. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நாளுக்குநாள் பெருகி வரும் நிலையில், அப்பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகள், பள்ளிக் கட்டணம், ஆசிரியர், ஆசிரியரல்லாதவர்க்கு ஊதிய விகிதம் போன்றவை குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்கும்படி முனைவர் எஸ்.வி. சிட்டிபாபு தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் தற்போதுள்ள பாடத் திட்டங்களை மாற்றியமைக்க பாண்டிச்சேரி மைய பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் எ. ஞானம் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## 4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

நல்ல தரமான ஆசிரியர்களை உருவாக்குவதும், அவர்கள் பணியில் சேர்ந்தபின் நவீன கற்பித்தல் முறைக்கேற்ப பணியிடைப் பயிற்சி அளிப்பதும், பாடம் தொடர்பான விளக்கம் தரக்கூடிய ஒலி-ஒளி நாடாக்கள் தயாரிப்பதுமே இந்த இயக்ககத்தின் நோக்கமாகும்.

### 4.1 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்

இவ்வியக்ககத்தின்கீழ் செயல்பட்டு வரும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் (மைய அரசு முழு நிதியுதவியுடன் செயல்படும் நிறுவனம்) | 29 |
| அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 9 |
| அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 7 |
| அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 3.5 |
| அரசு நிதியுதவி பெறாத சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 2 |
| ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 1 |

இந்நிறுவனங்களில் ஆண்டொன்றுக்கு மாணவர் சேர்க்கை சுமார் 6,250 ஆகும்.

ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் களையும்பொருட்டு 2001-2002 ஆம் கல்வியாண்டு முதல், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையானது ஒற்றைச் சாளர முறையில் நிரப்பப்பட்டு வருகிறது.

1993-ல் அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் நிகழ்வில் மனிதாபிமானத்துடன், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் ஒப்புதலுடன் 15,670 மாணவர்களுக்குக் கூடுதல் சேர்க்கை இடமளிக்கப்பட்டு முதலாமாண்டு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள தகுதியுள்ள மாணவர்களுக்கு 2003-ல் பயிற்சி அளிக்கப்படும்.



### 4.2 கல்வியின் தரம் உயர்த்துதல்

தரமான கல்வி வழங்குவதற்கு ஏதுவாக, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககமும், 29 மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களும் இணைந்து, ஆசிரியர் பயிற்சியாளர்கட்கும், ஆசிரியர்களுக்கும் கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகளை அளிக்கின்றன:

- குறைந்தபட்ச கற்றல் பயிற்சி
- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமத்தின் நிதியுதவியுடன் சிறப்பு புத்தறிவுப் பயிற்சி
- யுனிசெப் நிதியுதவியுடன் கற்றலில் இனிமைப் பயிற்சி
- மைய அரசின் நிதியுதவியுடன் மழலையர் குழந்தைகள் பயிற்சி
- ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி
- தீவிர கல்வித் திட்டப் பயிற்சி
- யுனிபா நிதியுதவியுடன் மக்கள் தொகை கல்விப் பயிற்சி
- மைய அரசின் நிதியுதவியுடன் பணியிடைப் பயிற்சி
- மைய அரசின் நிதியுதவியுடன் தானே கற்றல் என்ற புதிய அணுகுமுறைப் பயிற்சி

### 4.3 அனைவர்க்கும் கல்வி இயக்கம்

தமிழகத்தில் தற்போது அனைவர்க்கும் கல்வி இயக்கமானது அனைத்து மாவட்டங்களிலும் 2001-2002 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி புதுமை முறையில் கல்வியை அளிப்பதும் ஒரு நோக்கமாகும். அந்நோக்கத்தினை அடைய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கற்றல், கற்பித்தல் சாதனங்கள் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கான பொறுப்பு ஆசிரியர் கல்வி இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கென ஒன்றியம்தோறும் வட்டார வள மைய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மூலம் 1-8 வகுப்புகளுக்குப் போதிக்கும் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கிராமம்தோறும் கிராமக் கல்விக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அக்குழுவின் உறுப்பினர்களுக்கு அனைவர்க்கும் கல்வி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 4.4 மாநில திறந்தவெளிப் பள்ளி நிறுவனம்

பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நிறுத்தி விட்டவர்கள் தொடர்ந்து படித்து, கல்வித்தகுதியைப் பெறுவதற்கு வழி செய்வதற்கென தமிழ்நாடு திறந்தவெளிப் பள்ளித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்ட அனைவரும் சேர்ந்து பயன் பெறுவர் எனக் கருதப்பட்டது. ஆனால் காலப்போக்கில் பணியில் இருப்பவர்கள் பதவி உயர்வுக்காக காத்திருப்போர் மட்டுமே இப்பள்ளியில் சேர்ந்து வருகின்றனர். பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்ட குழந்தைகள் மேலும் கல்வியைத் தொடர "தேசிய திறந்தவெளிப் பள்ளி நிறுவனம்" என்ற ஒரு அமைப்பு தேசிய அளவில் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று மாநில அளவிலும் "மாநில திறந்தவெளிப் பள்ளி நிறுவனம்" என்ற அமைப்பை உருவாக்க மைய அரசின் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இதன்படி 10-ஆம் வகுப்பு தேர்வு நடத்துவதோடு, 8-ஆம் வகுப்பு, +2 வகுப்பு அளவில் மாநில திறந்தவெளிப் பள்ளி நிறுவனம் மூலம் தேர்வுகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4.5 கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம்

பாடங்கள் தொடர்பான விளக்கம் தரக்கூடிய ஒலி-ஒளி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதே கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும். தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஒளி நாடாக்கள் தயாரிக்கப்பட்டு சென்னைத் தொலைக்காட்சியின் 'காண்போம்-கற்போம்', கல்வி நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. மேலும் இதன் ஒளிநாடாக்கள் 29 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களிலும் மற்றும் வட்டார வள ஆதார மையங்கள் மூலமாகவும் ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சியின் போதும் பயன்படுத்தப்படுகிறது.

தேசியக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கல்வித் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் மாநிலக் அமைப்புகள் தயாரித்துள்ள ஒலி/ஒளி நிகழ்ச்சிகளையும் பெற்று நமது தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்படுகிறது.



### 5. பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

வயதுவந்தோரிடையே (15-35) எழுத்தறிவின்மையைப் போக்கி எழுத்தறிவு பெற்றவர்களாக்குவதே வயதுவந்தோர் கல்வி இயக்ககத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கென மாநில அளவில் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின்கீழ் மாவட்ட எழுத்தறிவு குழுமமானது செயல்பட்டு வருகிறது.

### 5.1 எழுத்தறிவு விகிதம்

2001-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, எழுத்தறிவு விகிதத்தை அகில இந்திய அளவுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தின் நிலை வருமாறு:—

| | ஆண் | பெண் | சராசரி |
|---|---|---|---|
| இந்திய அளவில் | 75.85 | 54.16 | 65.38 |
| தமிழகம் | 82.33 | 64.55 | 73.47 |

### 5.2 வளர் கல்வித் திட்டம்

தமிழகத்தில் முழு எழுத்தறிவு இயக்கம் அனைத்து மாவட்டங்களிலும் 1991-ல் தொடங்கப்பட்டு, 1999 வரை செயல்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தொடர்கல்வி இயக்கம் தொடங்கப்பட்டு 2001-ல் முடிவடைந்துள்ளது. இவ்விரு திட்டங்கள் மூலம் முறையே 79.70 இலட்சம் மற்றும் 65.10 இலட்சம் கல்லாதவர்கள் கல்வியறிவு பெற்றனர். முழு எழுத்தறிவு மற்றும் தொடர் கல்வி பெற்றவர்கள் கற்றலினை நிலை நிறுத்துவதற்கென மைய அரசின் உதவியுடன் வளர் கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் எஞ்சிய கல்லாதவர்களுக்கு கற்பிப்பதோடல்லாமல், சுய முன்னேற்றம் மற்றும் சுய சம்பாத்தியத்துக்கு வழிவகுக்கும் மையங்களாகவும் செயல்படுகின்றன.

1998-ஆம் ஆண்டு முதல், ரூ.6.53 கோடி செலவில் 9 மாவட்டங்களிலும் (கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, தேனி, இராமநாதபுரம் மற்றும் வேலூர்) 2002-ஆம் ஆண்டு முதல், முதல் தவணையாக ரூ.16.09 கோடி செலவில் 9 மாவட்டங்களிலும் (ஈரோடு, சேலம், நாமக்கல், திண்டுக்கல்,

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், தருமபுரி மற்றும் சென்னை) செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2003-ல் காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் முதல் தவணையாக ரூ.5.31 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. மீதியுள்ள 9 மாவட்டங்களுக்கான (கோயம்புத்தூர், திருவண்ணாமலை, கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், நீலகிரி, தூத்துக்குடி மற்றும் விழுப்புரம்) ரூ 33.38 கோடி நிதியுதவி கோரி மைய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது

## 6. அரசுத் தேர்வுகள்

பள்ளிக் கல்வி சார்ந்த அரசுத் தேர்வுகள் நடத்துவதற்கென தனி இயக்ககம் 1975-ல் ஏற்படுத்தப்பட்டது. மறைபொருள் தன்மையைக் காத்து உரிய நேரத்தில் தேர்வுகளை நடத்தி தேர்வு முடிவுகளை வெளியிட்டு சான்றிதழ்களை வழங்குவதே அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் நோக்கமாகும். அரசுத் தேர்வு இயக்ககத்தால் 44 வகையான அரசுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இடைநிலைப் பள்ளி பொதுத் தேர்வானது 1911ஆம் ஆண்டிலிருந்தும், மேல்நிலைப் பள்ளி பொதுத் தேர்வானது 1980-ஆம் ஆண்டிலிருந்தும் நடத்தப்பட்டு வருகிறது

இவ்வியக்ககமானது ஆங்கிலோ-இந்தியன், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் பொதுத் தேர்வு, ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் ஓவியம், இசை, தையல் ஆகிய தொழில் தொடர்பான தேர்வுகளையும் நடத்துகின்றது. 2002ஆம் ஆண்டிலிருந்து பள்ளி பொதுத் தேர்வில் (10, +2) ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடித் தேர்வும் நடத்தப்படுகிறது. இத்தேர்வின் மூலம் 56,063 மாணவர்கள் ஒரு முழு கல்வி ஆண்டு வீணாக்காமல், அந்தக் கல்வியாண்டிலேயே மேல்படிப்பினைத் தொடர்ந்து பயன் அடைந்துள்ளார்கள்.



### 6-1-2002ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்வுகளின் ஆய்வு

| தேர்வின் விவரம் | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றவர்கள் | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|
| +2 வகுப்பு | 427243 | 361202 | 84.50 |
| எஸ்எஸ்எல்சி. | 612140 | 468794 | 76.58 |
| மெட்ரிகுலேஷன் | 813.52 | 70924 | 87.18 |
| ஆங்கிலோ-இந்தியன் | 5123 | 4760 | 92.91 |
| இ.எஸ்.எல்.சி | | | |
| அனைத்துப் பாடம் | 5708 | 4897 | 85.91 |
| பகுதி முறைப்பாடம் | 2632 | 2415 | .. |

### ஜூன்/ஜூலை 2002 உடனடி பொதுத் தேர்வு

| தேர்வின் விவரம் | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றவர்கள் | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|
| +2 வகுப்பு | 42793 | 21562 | 50.39 |
| எஸ்எஸ்எல்சி | 78622 | 32131 | 40.90 |
| மெட்ரிகுலேஷன் | 5570 | 2326 | 41.76 |
| ஆங்கிலோ-இந்தியன் | 168 | 44 | 26.19 |

### 6.2 பள்ளிப் பொதுத் தேர்வுகளில் மறைத் தன்மையைக் காக்கவும், திருத்தும் பணிகள் நடைபெறவும் ஒளிவுமறைவு ஏதுமின்றி கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

- மைய மதிப்பீடு முறை செயலாக்குதல்
- மேல்நிலைப் பள்ளித் தேர்வில் இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், கணிதம், வணிகவியல், கணக்குப் பதிவியல் பாடங்களுக்கும் தொழிற் பாடங்களில் பொறியியல் தொடர்புடைய பாடங்களுக்கும் மாற்று எண் (Dummy Numbers) வழங்கப்படுதல்.
- பள்ளிப் பொதுத் தேர்வில் மாணவர்கள், தங்களது விடைத் தாள்களின் மதிப்பீடு குறித்து மறு கூட்டலுக்கு

விண்ணப்பித்தல், மேல்நிலைப் பள்ளித் தேர்வில் இயற்பியல், வேதியியல், கணிதம் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களில் மாணவர்கள் எழுதிய விடைத்தாள்களுக்கான நகல்கள் பெறுதல், ஐயப்பாடு ஏற்படும்போது, அவர்கள் விரும்பினால் உரிய கட்டணத்தைச் செலுத்தி மறு மதிப்பீடு கோருதல், 2002-ல் மறு மதிப்பீடு அறிமுகப்படுத்தப்பட்ட பின் 34,000 மாணவர்கள் இதன் மூலம் பயன் பெற்றுள்ளனர்

### 6.3 போலிச் சான்றிதழ் தவிர்த்தல்

தேர்வர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்களில் போலிச் சான்றிதழ்களை தயாரிப்பதைத் தடுக்க நவீன லேசர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அச்சமுத்தம் செய்யப்பட்ட இரகசியக் குறியீடுகள் சான்றிதழ்களில் புகுத்தும் முறை 2003-ல் செயல்படுத்தப்படவுள்ளது.

### 6.4 இயக்கக இணையதளம்

அரசுத் தேர்வு இயக்ககம் நடத்தும் பள்ளித் தேர்வுகளின் விவரங்கள் 2003முதல் அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் கொண்டு வரப்படும். இவ்விணையதளமானது தேர்வு முடிவுகள், மதிப்பெண்கள், தேர்வுகால அறிக்கைகள், அட்டவணைகள் ஆகியவற்றை அளிக்கும். மேலும் மாதிரி விண்ணப்பங்கள், கட்டண விகிதங்கள், இரண்டாம்படி சான்றிதழ் மற்றும் சான்றிட்ட மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விதிமுறைகள், முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள் போன்றவற்றையும் அளிக்கும்.

### 6.5 திறனாய்வு தேர்வு நடத்துதல்

9ஆம் வகுப்பு மாணவர்களிடையே அகில இந்திய அளவிலான தேசிய திறனாய்வு முதலாம் கட்டத் தேர்வு ஒன்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் நடத்தி, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் இரண்டாம் நிலைத் தேர்வு எழுத மாணவர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறது. 2002ஆம் ஆண்டு 290 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளது. தமிழக அரசின் ஊரகப் பகுதிகளில் மாணவர்களின் அறிவாற்றலைக் கண்டறிதல் என்னும் திட்டத்தின்கீழ், 8ஆம் வகுப்பு மாணவர்களிடையே திறனாய்வுத்தேர்வினை நடத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள், 50 மாணவிகள் ஆக 100 மாணவர்களைத் தேர்ந்தெடுத்தும் வருகிறது. தேர்ந்தெடுக்கும்



+2 படிக்கும் வரை மாணவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.1000/- அளிக்கப்படுகிறது.

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, சட்டக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியர்/விரிவுரையாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்ய 1988ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது. தகுதியும், திறமையும், பணியில் அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர்களை வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும் பணியே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் பொறுப்பாகும்.

### 7.1 எழுத்துத் தேர்வு

வேலைவாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்று ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் முறை கைவிடப்பட்டு, ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் பொதுவான போட்டி எழுத்துத் தேர்வு மூலமாக இனவாரி முறைக்குட்பட்டு ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் முறை செப்டம்பர் 2001 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 7.2 2001-2002 மற்றும் 2002-2003 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு ஆசிரியர்களின் விவரம் பின்வருமாறு:—

| | ஆண்டு | |
|---|---|---|
| | 2001-2002 | 2002-2003 |
| பள்ளி உதவி ஆசிரியர், மொழி ஆசிரியர் | 773 | 809 |
| வட்டார வள ஆசிரியர்கள் | | 3480 |
| முதுகலை ஆசிரியர்கள் | 611 | 488 |
| தொழிற்பயிற்சி ஆசிரியர்கள் (வேளாண்மை) | 100 | |
| ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்: | | |
| முதுநிலை விரிவுரையாளர் | | |
| விரிவுரையாளர் | | |
| இளநிலை விரிவுரையாளர் / உடற்கல்வி ஆசிரியர் | | 444 |
| மொத்தம் | 1484 | 5221 |

[2003 ஏப்ரல் 4

### 7.3 தேர்வு முறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த புதுமைகள்

தற்போதைய கணினி யுகத்தின் வளர்ச்சிக்கேற்ப தேர்வினுடைய அனைத்து நிலைகளிலும் ஆசிரியர் தேர்வு வாரியம் கணினியினைப் பயன்படுத்தி வருகிறது. குறியீடுகளைப் பகுத்துணரும் தன்மையுள்ள (Intelligent Character Recognisation System) விண்ணப்பப் படிவங்கள் பயன்படுத்துவதன் மூலமாக விவரங்கள் பகுத்துணரவும் சரி பார்க்கப்படுவதன் மூலம் வெளிப்படையாகவும், விரைவாகவும் விவரங்கள் சரிபார்க்கப்படுவதற்கும், தொகுப்பதற்கும் ஏதுவாகிறது. தேர்வுகளை சரியாகவும், துல்லியமாகவும், மதிப்பீடு செய்ய ஏதுவாக ஆசிரியர் தேர்வு வாரியம் கொள் குறியீட்டு முறையில் விடையளிக்கத் தக்க வினாக்களையும், விடைகளைக் குறிப்பதற்கு ஒளி பகுத்துணரும் (O.M.R) தன்மையுள்ள விடைத்தாள்களையும் பயன்படுத்தி வருகிறது. மிகச் சிறப்பான முறையாக தேர்வு முடிவு பெற்றவுடன் மனுதாரர்கள் தாங்கள் விடையளித்த (O.M.R.) விடைத்தாளின் நகல்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மனுதாரர்கள் தாங்கள் அளித்த விடைகளை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தின் மூலம் வெளியிடப்படும் விடைக் குறிப்புகளிலிருந்து சரிபார்க்க இயலும். இத்தகைய புதிய முறை தேர்வு முறைகளை வெளிப்படையாகவும், துல்லியமாகவும், நம்பிக்கைக்கு உகந்த வகையிலும் பொறுப்பான முறையில் வெளியிடுவதற்கு ஏற்றமுறையில் உருவாக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் சான்றிதழ் சரிபார்த்தலுக்குப் பின் வெளியிடப்படும் இறுதித் தேர்வர் பட்டியல் ஆகியவை இணையதளத்தின் மூலம் வெளியிடப்படுவதன் மூலம் தேர்வினுடைய ஒவ்வொரு நிலையையும் பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாகிறது.

## 8. தமிழ்நாடு பாடநூல் கழகம்

கல்விக்கு உற்ற கருவியாக விளங்கும் பாடநூல்கள் தனியார் மூலமாக வெளியிடப்பட்ட கால கட்டங்களில் செயற்கைக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு அதன்மூலம் அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்த காரணத்தாலும், பல்வேறு வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டதால் ஒழுங்கின்றியும், அமையப்பெற்றது. இந்த அவலநிலையை நீக்கி மாணவர்களுக்கு உரிய காலத்தில், நியாய விலையில், தரமான பாடநூல்களை வழங்கும்பொருட்டு 1970-ல் தமிழ்நாடு பாடநூல் கழகம் நிறுவப்பட்டது.



2003 ஏப்ரல் 4]

### 8.1 பாடநூல்கள் அச்சடிப்பு

தமிழ்நாடு பாடநூல் கழகம் கீழ்க்குறிப்பிட்ட பாட நூல்கள் மற்றும் கையேடுகளை அச்சடித்து வழங்கி வருகிறது:—

* மாநில கல்வி வாரிய பள்ளிகளில் 1-12 வகுப்புகளுக்கான பாடநூல்கள்
* மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ-இந்திய பள்ளிகளுக்கான 10ஆம் வகுப்பு பாடநூல்கள்
* சிறுபான்மை மொழி பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடநூல்கள்; +1, +2, மாணவர்களுக்கு மொழி நூல்கள்
* ஆதி திராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறைகள் மூலம் நடத்தப்பெறும் பள்ளிகளில் 10 மற்றும் +2 வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள்
* ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கு வள நூல்கள்
* தொழிற்படிப்பு நுழைவுத் தேர்வுக்கு வினா வங்கி, மாதிரி வினா ஏடு, கையேடு.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் அச்சகத்தார் தேர்வு செய்யப்படுவதால் புதிய அச்சகத்தார் சேர்க்கப்படுகின்றனர். புத்தக அச்சடித்தலில் தரத்தினை மேம்படுத்த தனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 8.2 பாடநூல்களின் விநியோகம்

விற்பனைப் பிரதிகளைப் பொறுத்தமட்டில், தமிழ்நாட்டிலுள்ள 42 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பாடநூல்கள் 21 வட்டார அலுவலகங்களிலிருந்து பெற்று 1828 தனியார் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்கின்றன.

[2003 ஏப்ரல் 4

**2002-2003 ஆம் கல்வியாண்டில் விற்பனை செய்யப்பட்ட பாடநூல்கள் விவரம்:**

| பள்ளிகள் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை 324 தலைப்புகள் | 108.00 | 1193.00 |
| மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 10 ஆம் வகுப்பு (10 தலைப்புகள்) | 5.27 | 141.00 |
| ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் 10ஆம் வகுப்பு (8 தலைப்புகள்) | 0.28 | 5.50 |
| ஆசிரியர் பட்டயப் பயிற்சி வள நூல்கள் (11 தலைப்புகள்) | 1.16 | 56.30 |
| மொத்தம் | 114.71 | 1395.80 |

### 8.3. இலவசப் பாடநூல்கள்

அரசுப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், 6, 7, 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மதிய உணவு உண்ணும் மாணவர்களுக்கும் தேவையான இலவசப் பாடநூல்களை பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்கி வருகிறது. இதற்குண்டான செலவினை. கழகத்திற்கு மாநில அரசு ஈடு செய்கிறது.

2003-2004 ஆம் கல்வியாண்டிற்கு 419.33 இலட்சம் பிரதிகள் ரூ.3468 இலட்சம் மதிப்பில் கீழ்க்கண்ட விவரப்படி மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

| துறைகள் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|
| உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் மூலமாக (1 முதல் 8 வரை) | 348.00 | 2528.00 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாக (1 முதல் 10 வரை) | 34.74 | 448.00 |
| பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மை நலம் (6 முதல் 10 வரை) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சமூக நலத் துறை மற்றும் மறுவாழ்வுத் துறை மூலமாக | 36.59 | 492.00 |
| மொத்தம் | 419.33 | 3468.00 |



2003 ஏப்ரல் 4]

### 8.4. குறிப்பேடுகள்

பாடநூல்களைப் போலவே குறிப்பேடுகளும் கல்விக்கு உற்ற துணைக் கருவியாக கருதப்படுகின்றன. தமிழ்நாடு பாடநூல் கழகம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2002-2003ஆம் கல்வியாண்டுக்கு ரூ.854/- இலட்சம் மதிப்புள்ள குறிப்பேடுகள் வழங்கியுள்ளது. மேலும், ரூ.147 இலட்சம் மதிப்புள்ள குறிப்பேடுகள் வெளிச் சந்தையில் விற்கப்பட்டுள்ளன.

### 8.5. வட்டார அலுவலகங்களுக்குக் கட்டடம்

நான்கு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் உள்ளது. தஞ்சாவூரிலும், வேலூரிலும் உள்ள கிடங்குகளுக்கு ரூ.1.00 கோடி வீதம் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

### 8.6. நவீனமயமாக்கல்

பாடநூல் கழக நிர்வாக அலுவலகம் மற்றும் அனைத்து வட்டார அலுவலகங்களிலும் கணினி நிறுவப்பட்டு அதை இயக்குவதற்கான சிறப்புப் பயிற்சிகளும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அச்சாணை வழங்குதல், அச்சுப் பொருட்கள் வழங்குதல், அச்சகத்தாரின் பட்டியல்கள் வருடாந்திர கணக்கு தயாரித்தல், சம்பளப் பட்டியல் தயாரித்தல், பொது சேம நல நிதி ஆகிய அனைத்தும் கணினி மூலமாக நிர்வாக அலுவலகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2003 ஏப்ரல் 4

## 9. பொது நூலகங்கள்

**"குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்கு சிறந்த படிப்பு" இதுவே பொது நூலகத் துறையின் குறிக்கோளாகும்**

**"நாடு நலம் பெற வீட்டுக்கொரு நூலகம் தேவை"**

### 9.1. புதிய நூலகங்கள் திறத்தல்

மக்கள் தொகை 5000-க்கு அதிகம் உள்ள கிராமங்களில் பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய கிளை நூலகங்களைத் துவக்குவதும், மக்கள் தொகை குறைவாக உள்ள கிராமங்களில் அப்பகுதி மக்களின் உதவியோடு, கிராமப்புற மற்றும் பகுதிநேர நூலகங்களைத் துவக்குவதுமே அரசின் கொள்கையாகும்.

### 9.2. கிராமப்புற நூலகங்கள்

நூலகப் பயன்களை கிராமப் புறங்களுக்கும் நீட்டித்து அம்மக்களும் பயனடையும் வகையில் 625 கிராமப்புற நூலகங்கள் திறக்க (மக்கள் தொகை 1000-5000) அனுமதியளிக்கப்பட்டு அவை நன்முறையில் இயங்கி வருகின்றன. இது தவிர 649 பகுதி நேர நூலகங்களும் (மக்கள் தொகை 1000-க்கு கீழ்) செயல்பட்டு வருகின்றன. 2002-2003-ல், 867 கிராமப்புற நூல் நிலையங்கள் நூலக ஆணைக்குழுவின் நிதியிலிருந்து துவக்க ஆணையிடப்பட்டு மேற்கண்ட நூல் நிலையங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன.

### 9.3. நடமாடும் நூலகங்கள்

நூலக வசதி இல்லாத பகுதிகளில் நூலகப் பணியினை செயல்படுத்த கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் வசதி செய்து தரப்பட்டுள்ளன.

**தமிழகத்தில் நூலகங்கள்**

| | எண்ணிக்கை | வாசகர்களின் வருகை | உறுப்பினர்கள் எண்ணிக்கை | மொத்தம் உள்ள புத்தகங்கள் |
|---|---|---|---|---|
| மாநில மைய நூலகம் | 1 | 578030 | 738.53 | 314640 |
| மாவட்ட மைய நூலகங்கள் | 29 | 5800000 | 275510 | 4420000 |
| கிளை நூலகங்கள் | 1568 | 17058120 | 2347061 | 27653130 |
| நடமாடும் நூலகங்கள் | 12 | 30000 | 2700 | 102000 |
| கிராமப்புற நூலகங்கள் | 625 | 1562500 | 156255 | 7437500 |
| பகுதி நேர நூலகங்கள் | 649 | 194700 | 129805 | 4413200 |
| மொத்தம் | 2884 | 25223350 | 2985184 | 44340470 |



2003 ஏப்ரல் 4]

இது தவிர அரசு உதவி பெறும் நூலகங்களும் (உ.வே.சாமிநாத ஐயர் நூலகம், சென்னை, சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர் மற்றும் மறைமலையடிகள் நூலகம், சென்னை) செயல்படுகின்றன.

### 9.4. கன்னிமாரா நூலகம்

சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ ஏடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியை இலவசமாகப் பெறும் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் இந்நூலகமும் ஒன்றாகும். 1956 முதல் இது "யுனெஸ்கோ" நிறுவன தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது. கன்னிமாரா பொது நூலகமானது, விவரம் அறிதல், பாடநூல்கள், பருவ ஏடுகள், நூற் தொகைகள், இந்திய மொழி நூல்கள் மற்றும் ஆங்கில நூல்கள் என தனித் தனி பிரிவாகப் பிரிக்கப்பட்டு பயனுள்ள நூலகப் பணியாற்றி வருகிறது.

### 9.5. மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்

நூலகப் பணியினை செம்மையுடன் செயல்படுத்த மாவட்டந்தோறும் நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து நூலக வரியினை வசூலிக்கும் பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கும் சொத்து வரியில் ரூபாய்க்கு 10 பைசா வீதம் நூலக வரி வசூல் செய்யப்படுகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட நூலக வரி வசூல் விவரம் வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| ஆண்டு | : | 2005.81 |
| 1997-1998 | : | 1163.69 |
| 1998-1999 | : | 1140.14 |
| 1999-2000 | : | 2001.12 |
| 2000-2001 | : | 1630.61 |
| 2001-2002 | | 2248.00 |
| 2002-2003-ல் (பிப்ரவரி 2003 வரை) | | |

[2003 ஏப்ரல் 4

## 9.6. நூல்கள் வாங்குதல்

நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றத்தின் பயனை அடையவும் மக்களின் தேவையை நிறைவு செய்யவும் சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் ஆண்டுதோறும் வாங்கப்பட்டு நூலகங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. நூலக வரியில் சுமார் 25 விழுக்காடு தொகையானது நூல்கள் வாங்க செலவு செய்யப்படுகிறது. இது தவிர மைய அரசின் 11-வது நிதிக்குழுவின் மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூ.6.80 கோடி வைப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூலக வரி வசூல் குறைவாக உள்ள மாவட்டங்களில் நூலக வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருக்க பொது நிதியம், 2002-2003-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் வாங்கப்பட்ட தமிழ் / ஆங்கில நூல்களின் எண்ணிக்கை மற்றும் படிகள் பற்றிய விவரம் வருமாறு:

| ஆண்டு | வாங்கப் பட்ட தமிழ் நூல்களின் எண்ணிக்கை | படிகள் | செலவினம் இலட்சத்தில் | வாங்கப் பட்ட ஆங்கில நூல்களின் எண்ணிக்கை | படிகள் | செலவினம் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 1993-94 | 1394 | 500 | 90 | 470 | 29 | 18 |
| 1994-95 | 1883 | 500 | 140 | 589 | 29 | 27 |
| 1995-96 | 1471 | 500 | 127 | 918 | 29 | 39 |
| 1996-97 | 1936 | 500 | 154 | 611 | 29 | 30 |
| 1997-98 | 1527 | 500 | 172 | 419 | 29 | 32 |
| 1998-99 | 1269 | 600 | 210 | 356 | 29 | 40 |
| 1999-2000 | 1873 | 850 | 320 | 823 | 29 | 92 |
| 2000-01 | 2818 | 850 | 420 | 1868 | 29 | 170 |
| 2001-02 | 3224 | 850 | 475 | 1169 | 29 | 100 |
| 2002-03 | 4138 | 600 | 679 | 1991 | 29 | 220 |

## 9.7. புத்தகக் கண்காட்சி

சென்னையில் ஆண்டுதோறும் புத்தகக் கண்காட்சி புத்தக வெளியீட்டாளர்களால் நடத்தப்படுகிறது. மாவட்ட மைய



2003 ஏப்ரல் 4]

நூலகங்களில் இதுபோன்ற புத்தகக் கண்காட்சி தனியார் புத்தக பதிப்பாளர்கள் ஒத்துழைப்போடு அரசு சார்பில் நடத்தப்படும். சென்னையில் நிரந்தர புத்தகக் கண்காட்சி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 9.8. நூலகங்களைப் பள்ளிகளுடன் இணைத்தல்

மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை அதிகரிக்க நூலகங்களைப் பள்ளிகளுடன் இணைக்கும் திட்டம் (Linkage with Schools) செயல்படுத்தப்படுகிறது. பள்ளி மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை மனதில் ஊன்றச் செய்யும் வண்ணம் செயல்படும் இந்தத் திட்டத்தின்கீழ் நூலகப் பணியாளர் ஒருவர் 15 நாட்களுக்கு ஒரு முறை இணைக்கப்பட்டுள்ள பள்ளிக்குச் சென்று புத்தகங்கள் வழங்குவார். இத்திட்டத்தின்கீழ் 2618 பள்ளிகள் உட்படுத்தப்பட்டுள்ளன.

## 9.9. குடிமைப் பணி கல்வி மையங்கள்

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, வங்கிகள், இரயில்வே தேர்வாணையம், மத்திய தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழுமம் ஆகியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பங்கு கொள்ளும் வகையில் "குடிமைப் பணி கல்வி மையங்கள்" கன்னிமாரா பொது நூலகத்திலும், மாவட்ட மைய நூலகங்களிலும் மற்றும் நகராட்சிப் பகுதி நூலகங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

## 9.10. நூலகக் கட்டடங்கள் கட்டுதல்

நூலகங்களுக்கு படிக்க வரும் வாசகர்கள் காற்றோட்டமான, பரந்த இடவசதியுடன் கூடிய கட்டடங்களில் அமர்ந்து படிக்க ஏதுவாக வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1175 நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது 54 இடங்களில் ரூ.4.35 கோடி செலவில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 9.11 செய்தி மடல்

பொது நூலகத் துறை சார்பாக "பொது நூலகச் செய்திமடல்" என்ற காலாண்டு இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் பொது

நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகளும் பொது நூலக இயக்ககம் சம்பந்தப்பட்ட பல்வேறு சிறந்த செய்திகளும் இடம் பெற்று வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### 9.12 வாசகர் வட்டம்

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள் நூலக உறுப்பினர்கள் உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் சிந்தனையாளர் ஆகியோரைக் கொண்டு "வாசகர் வட்டம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாசகர் வட்டம் மூலம் நூல்கள் அறிமுகம், கவியரங்கம், இலக்கியக் கூட்டம் முதலிய பல பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 9.13 கணிப்பொறி வசதிகள்

கன்னிமாரா பொது நூலகத்தில் கணினி வசதி மற்றும் இண்டர்நெட் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஆகிய மாவட்ட மைய நூலகங்களிலும் கணினி வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வாசகர்களின் பயன்பாட்டிற்காக ஒளிப்பட வசதி மற்றும் தொலைக்காட்சி வசதி மாவட்ட மைய நூலகங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

### 9.14 இராசா இராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி பெறுதல்

கொல்கத்தாவில் உள்ள இராசா இராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொது நூலக வளர்ச்சிக்கு இணை மானியம் அளித்து வருகிறது. 2002-2003-ல் ரூ.1.50 கோடி அளவில் இணை மானியம் அளித்துள்ளது. இந்நிதியிலிருந்து ஒரு மைய நூலகத்திற்கு ரூ.5 இலட்சம் வீதம் 10 மாவட்ட மைய நூலகங்களுக்கு கணினிகள் அளிக்கப்படும்.



### புள்ளி விவரம்

1 பள்ளி வயது சிறார்கள் மற்றும் சேர்க்கை விவரம் 2002-2003
2 பல்வகைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை-2002-2003
3 பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை-2002-2003 (நிர்வாக வகைப்படி)
4 பள்ளிப்படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)
5 பள்ளிகளின் எண்ணிக்கை
6 ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம்
7 உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) (1991-1992 முதல் 2002-2003)
8 மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) (1991-92 முதல் 2002-2003)
9 உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி) (1991-1992 முதல் 2002-2003)
10 மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி) (1991-1992 முதல் 2002-2003)
11 எஸ்.எஸ்.எல்.சி., +2 தேர்ச்சி விழுக்காடு ஏப்ரல் 2002 (மாவட்ட வாரியாக)
12 மார்ச்/ஏப்ரல் 2002-மாணவ/மாணவியர்கள் தேர்ச்சி விகிதம்
13 பள்ளிக்கூட மாணவர்களின் தேர்ச்சி விவரம் (மார்ச் தேர்வு)
14 எழுத்தறிவு விகிதம் 1991 முதல் 2001
15 எழுத்தறிவு விகிதம் - 2001 - மாவட்டங்களின் நிலை

## அட்டவணை 1.

### பள்ளி வயது சிறார்கள் மற்றும் சேர்க்கை விவரம் 2002-2003

| வயது தொகுதி | இனம் | பள்ளி வயது சிறார்கள் | பள்ளிகளில் மாணவர் சேர்க்கை (இலட்சத்தில்) | சேர்க்கை விழுக்காடு |
|---|---|---|---|---|
| 6-11 | ஆண் | 32.85 | 32.51 | 98.96 |
| | பெண் | 30.75 | 30.41 | 98.89 |
| | மொத்தம் | 63.60 | 62.92 | 98.93 |
| 11-14 | ஆண் | 19.25 | 18.54 | 96.31 |
| | பெண் | 18.33 | 17.31 | 94.43 |
| | மொத்தம் | 37.58 | 35.85 | 95.40 |
| 14-16 | ஆண் | 12.61 | 8.84 | 70.10 |
| | பெண் | 12.08 | 8.43 | 69.78 |
| | மொத்தம் | 24.69 | 17.27 | 69.95 |
| 16-18 | ஆண் | 12.21 | 4.85 | 39.72 |
| | பெண் | 12.26 | 4.74 | 38.66 |
| | மொத்தம் | 24.47 | 9.59 | 39.19 |
| 6-18 | ஆண் | 76.92 | 64.74 | 84.17 |
| | பெண் | 73.42 | 60.89 | 82.93 |
| | மொத்தம் | 150.34 | 125.63 | 83.56 |



## அட்டவணை 2.

### பல்வகைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை 2002-2003 (இலட்சத்தில்)

| வகுப்பு | இனம் | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் | மேல்நிலைப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1-5 | ஆண் | 20.94 | 6.70 | 2.00 | 2.87 | 32.51 |
| | பெண் | 19.89 | 6.49 | 1.62 | 2.41 | 30.41 |
| | மொத்தம் | 40.83 | 13.19 | 3.62 | 5.28 | 62.92 |
| 6-8 | ஆண் | 0.00 | 4.52 | 4.92 | 9.10 | 18.54 |
| | பெண் | 0.00 | 4.16 | 5.13 | 7.72 | 17.31 |
| | மொத்தம் | 0.00 | 8.98 | 10.05 | 16.82 | 35.85 |
| 9-10 | ஆண் | 0.00 | 0.00 | 2.47 | 6.37 | 8.84 |
| | பெண் | 0.00 | 0.00 | 2.82 | 5.61 | 8.43 |
| | மொத்தம் | 0.00 | 0.00 | 5.29 | 11.98 | 17.27 |
| 11-12 | ஆண் | 0.00 | 0.00 | 0.00 | 4.85 | 4.85 |
| | பெண் | 0.00 | 0.00 | 0.00 | 4.74 | 4.74 |
| | மொத்தம் | 0.00 | 0.00 | 0.00 | 9.59 | 9.59 |
| 1 முதல் 12 | ஆண் | 20.94 | 11.22 | 9.39 | 23.19 | 64.74 |
| | பெண் | 19.89 | 10.95 | 9.57 | 20.48 | 60.89 |
| | மொத்தம் | 40.83 | 22.17 | 18.96 | 43.67 | 125.63 |

# அட்டவணை 3.

## பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை 2002-2003 (நிர்வாக வகைப்படி)

| பள்ளிகளின் வகைகள் | நிர்வாக வகை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை (இலட் சத்தில்) | ஆசிரியர்களின் எண்ணிக்கை | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | அரசு | 1598 | 1.93 | 6820 | | |
| | நகராட்சி/மாநகராட்சி | 1015 | 1.90 | 6831 | | |
| | ஊராட்சி ஒன்றியம் | 23813 | 25.20 | 77948 | 43389 | 7735 |
| | தனியார் | 5252 | 11.80 | 28925 | | |
| | மொத்தம் | 31678 | 40.83 | 120524 | | |
| நடுநிலைப் பள்ளிகள் | அரசு | 317 | 1.10 | 2683 | | |
| | நகராட்சி/மாநகராட்சி | 398 | 2.27 | 5203 | | |
| | ஊராட்சி ஒன்றியம் | 3863 | 10.26 | 29152 | 21069 | 38611 |
| | தனியார் | 1805 | 8.54 | 22642 | | |
| | மொத்தம் | 6383 | 22.17 | 59680 | | |
| உயர்நிலைப் பள்ளிகள் | அரசு | 1964 | 9.14 | 23261 | | |
| | நகராட்சி/மாநகராட்சி | 109 | 0.50 | 1539 | | |
| | உதவிபெறுபவை (தனியார்), | 646 | 3.86 | 7822 | | |
| | உதவி பெறாதவை (தனியார்) | 186 | 0.50 | 817 | 29963 | 27658 |
| | ஆங்கிலோ இந்தியன் | 12 | 0.11 | 272 | | |
| | மெட்ரிகுலேஷன் | 2059 | 4.73 | 22800 | | |
| | மைய அரசு | 52 | 0.32 | 1110 | | |
| | மொத்தம் | 5028 | 18.96 | 57621 | | |
| மேல்நிலைப் பள்ளிகள் | அரசு | 1507 | 17.11 | 42756 | | |
| | நகராட்சி/மாநகராட்சி | 92 | 1.31 | 4128 | | |
| | உதவி பெறுபவை (தனியார்) | 909 | 13.66 | 33630 | | |
| | உதவி பெறாதவை (தனியார்) | 94 | 0.54 | 1440 | 62651 | 60194 |
| | ஆங்கிலோ-இந்தியன் | 29 | 0.43 | 1211 | | |
| | மெட்ரிகுலேஷன் | 1391 | 9.78 | 36160 | | |
| | மைய அரசு | 87 | 0.84 | 3520 | | |
| | **மொத்தம்** | **4109** | **43.67** | **122845** | | |
| மொத்தப் பள்ளிகள் | அரசு | 5386 | 29.28 | 75520 | | |
| | நகராட்சி/மாநகராட்சி | 1614 | 5.98 | 17701 | | |
| | ஊராட்சி ஒன்றியம் | 27676 | 35.46 | 107100 | | |
| | தனியார் | 8892 | 38.70 | 95276 | 157072 | 203698 |
| | ஆங்கிலோ-இந்தியன் | 41 | 0.54 | 1483 | | |
| | மெட்ரிகுலேஷன் | 3450 | 14.51 | 58960 | | |
| | மைய அரசு | 139 | 1.16 | 4630 | | |
| | **பெரு மொத்தம்** | **47198** | **125.63** | **360670** | | |
| | மாணவர்கள் | 6474182 | | | | |
| | மாணவிகள் | 6089386 | | | | |
| | மொத்தம் | 12563568 | | | | |

## அட்டவணை 4

### பள்ளிப்படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)

| ஆண்டு | தொடக்கப் பள்ளிகள் | | | நடுநிலைப் பள்ளிகள் | | | உயர்நிலைப் பள்ளிகள் | | | மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1991-92 | 17.71 | 21.16 | 19.31 | 37.48 | 46.50 | 41.67 | 64.45 | 71.93 | 67.94 | 83.92 | 86.07 | 84.90 |
| 1992-93 | 17.11 | 19.62 | 18.27 | 34.75 | 43.54 | 38.85 | 63.65 | 71.02 | 67.08 | 82.94 | 85.39 | 84.08 |
| 1993-94 | 16.39 | 18.35 | 17.30 | 32.16 | 41.20 | 36.85 | 62.98 | 69.85 | 66.17 | 81.89 | 84.28 | 83.00 |
| 1994-95 | 15.58 | 17.65 | 16.54 | 30.75 | 39.36 | 34.74 | 61.46 | 69.15 | 65.05 | 80.59 | 84.19 | 82.26 |
| 1995-96 | 14.88 | 16.97 | 15.85 | 28.60 | 37.11 | 32.54 | 60.14 | 68.20 | 63.87 | 79.45 | 83.65 | 81.40 |
| 1996-97 | 14.05 | 16.20 | 15.06 | 26.38 | 34.78 | 30.27 | 58.63 | 67.05 | 62.53 | 78.21 | 83.09 | 80.48 |
| 1997-98 | 13.99 | 16.18 | 15.05 | 25.94 | 34.64 | 29.99 | 57.04 | 65.74 | 61.06 | 77.54 | 82.54 | 79.86 |
| 1998-99 | 12.98 | 16.15 | 14.52 | 38.85 | 33.37 | 35.23 | 57.72 | 58.35 | 58.01 | 82.10 | 80.61 | 81.49 |
| 1999-2000 | 12.93 | 16.07 | 14.41 | 36.03 | 34.74 | 35.43 | 57.97 | 57.85 | 57.92 | 83.43 | 80.92 | 82.27 |
| 2000-2001 | 12.86 | 16.03 | 14.40 | 36.00 | 35.15 | 35.59 | 57.86 | 57.91 | 57.89 | 82.15 | 82.40 | 82.30 |
| 2001-2002 | 12.73 | 15.95 | 14.31 | 35.46 | 34.53 | 35.07 | 57.34 | 57.79 | 57.55 | 79.69 | 79.32 | 79.51 |
| 2002-2003 | 12.20 | 15.50 | 13.85 | 34.30 | 29.99 | 32.10 | 57.24 | 57.51 | 57.37 | 77.20 | 74.22 | 85.81 |



அட்டவணை 5.

### பள்ளிகளின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 30844 | 31052 | 31142 | 31488 | 31678 |
| நடுநிலைப் பள்ளிகள் | 5538 | 5640 | 5703 | 5809 | 6383 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 4208 | 4551 | 4500 | 4836 | 5028 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 3149 | 3292 | 3439 | 3473 | 4109 |
| மொத்தம் | 43739 | 44535 | 44784 | 45606 | 47198 |

## அட்டவணை-6

### ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம்

| பள்ளிகளின் வகை | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 40 | 38 | 35 | 33 | 36 | 36 |
| நடுநிலைப் பள்ளிகள் | 40 | 36 | 40 | 38 | 37 | 37 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 45 | 43 | 38 | 37 | * | * |
| மேல்நிலைப் பள்ளிகள் | 39 | 40 | 36 | 35 | * | * |

| | 2001-2002 | | 2002-2003 | |
|---|---|---|---|---|
| | 6 முதல் 8 (இநிப) | 9 முதல் 10 (பட்டதாரி) | 6 முதல் 8 (இநிப) | 9 முதல் 10 (பட்டதாரி) |
| உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் (6 முதல் 10)* | 63 | 58 | 63 | 56 |



## அட்டவணை-7.

### உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) (1991-1992 முதல் 2002-2003)

| ஆண்டு | அரசு | மாநில வாரியப் பள்ளிகள் | | | மொத்தம் | மெட்ரி-குலேஷன் | ஆங்கிலோ இந்தியன் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் உதவி பெறுபவை | தனியார் உதவி பெறாதவை | | | | | | |
| 1991-92 | 1872 | 83 | 352 | 66 | 2373 | 684 | 13 | 93 | 790 | 3163 |
| 1992-93 | 1883 | 83 | 346 | 84 | 2396 | 709 | 13 | 85 | 807 | 3203 |
| 1993-94 | 1889 | 83 | 346 | 94 | 2412 | 759 | 13 | 86 | 858 | 3270 |
| 1994-95 | 1902 | 83 | 332 | 121 | 2438 | 806 | 13 | 83 | 902 | 3340 |
| 1995-96 | 1915 | 87 | 304 | 139 | 2445 | 885 | 12 | 75 | 972 | 3417 |
| 1996-97 | 1932 | 88 | 304 | 140 | 2464 | 1032 | 12 | 66 | 1110 | 3574 |
| 1997-98 | 1917 | 94 | 294 | 144 | 2449 | 1245 | 12 | 59 | 1316 | 3765 |
| 1998-99 | 1986 | 94 | 626 | 96 | 2802 | 1335 | 12 | 59 | 1406 | 4208 |
| 1999-2000 | 2006 | 103 | 626 | 104 | 2839 | 1641 | 12 | 59 | 1712 | 4551 |
| 2000-2001 | 2002 | 112 | 610 | 135 | 2859 | 1564 | 12 | 65 | 1641 | 4500 |
| 2001-2002 | 1981 | 108 | 646 | 179 | 2914 | 1910 | 12 | 67 | 1989 | 4903 |
| 2002-2003 | 1964 | 109 | 646 | 186 | 2905 | 2059 | 12 | 52 | 2123 | 5028 |

## அட்டவணை-8.

### மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) 1991-92 முதல் 2002-2003.

| ஆண்டு | அரசு | மாநில வாரியப் பள்ளிகள் நகராட்சி/ மாநகராட்சி | தனியார் உதவி பெறுபவை | தனியார் உதவி பெறாதவை | மொத்தம் | மெட்ரிகுலேஷன் | ஆங்கிலோ இந்தியன் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1991-92 | 869 | 68 | 674 | 88 | 1699 | 276 | 28 | 81 | 385 | 2084 |
| 1992-93 | 879 | 68 | 674 | 94 | 1715 | 338 | 28 | 84 | 450 | 2165 |
| 1993-94 | 891 | 68 | 674 | 98 | 1731 | 373 | 28 | 89 | 490 | 2221 |
| 1994-95 | 903 | 68 | 674 | 112 | 1757 | 440 | 28 | 93 | 561 | 2318 |
| 1995-96 | 932 | 69 | 674 | 140 | 1815 | 540 | 29 | 106 | 675 | 2490 |
| 1996-97 | 1012 | 70 | 674 | 155 | 1911 | 668 | 29 | 126 | 823 | 2734 |
| 1997-98 | 1087 | 75 | 674 | 183 | 2019 | 792 | 29 | 135 | 956 | 2975 |
| 1998-99 | 1157 | 78 | 869 | 29 | 2133 | 852 | 29 | 135 | 1016 | 3149 |
| 1999-2000 | 1206 | 80 | 884 | 46 | 2216 | 912 | 29 | 135 | 1076 | 3292 |
| 2000-2001 | 1258 | 81 | 909 | 68 | 2316 | 959 | 29 | 135 | 1123 | 3439 |
| 2001-2002 | 1374 | 90 | 909 | 74 | 2447 | 997 | 29 | 135 | 1161 | 3608 |
| 2002-2003 | 1507 | 92 | 909 | 94 | 2602 | 1391 | 29 | 87 | 1507 | 4109 |



## அட்டவணை-9.

### உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம்-நிர்வாக வகைப்படி (1991-92 முதல் 2002-2003)

| ஆண்டு | அரசு | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் உதவி பெறுபவை | தனியார் உதவி பெறாதவை | மெட்ரிகுலேஷன் | ஆங்கிலோ இந்தியன் | மைய அரசு | பெருமொத்தம் ஆண் | பெருமொத்தம் பெண் | பெருமொத்தம் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1991-92 | 973280 | 64844 | 326122 | 43193 | 179240 | 11907 | 49981 | 917226 | 731341 | 1648567 |
| 1992-93 | 1040346 | 68492 | 320942 | 52697 | 196001 | 12948 | 46061 | 961884 | 775603 | 1737487 |
| 1993-94 | 991113 | 72654 | 350297 | 57168 | 257796 | 13464 | 45664 | 999350 | 788806 | 1788156 |
| 1994-95 | 1074851 | 77106 | 345784 | 78964 | 271205 | 14033 | 46163 | 1043600 | 864506 | 1908106 |
| 1995-96 | 1113752 | 78993 | 331829 | 89367 | 337050 | 13309 | 48138 | 1094272 | 918165 | 2012437 |
| 1996-97 | 1141026 | 80972 | 340934 | 91555 | 351841 | 13374 | 48136 | 1121458 | 946380 | 2067838 |
| 1997-98 | 1128451 | 80097 | 337279 | 90559 | 226108 | 13910 | 49015 | 1126388 | 799031 | 1925419 |
| 1998-99 | 879479 | 64204 | 314213 | 234441 | 478527 | 11189 | 49804 | 1011712 | 1020145 | 2031857 |
| 1999-2000 | 923868 | 42813 | 319797 | 71063 | 436869 | 10235 | 51020 | 933317 | 922348 | 1855665 |
| 2000-2001 | 963629 | 49583 | 336548 | 30632 | 455849 | 10271 | 39975 | 974529 | 911958 | 1886487 |
| 2001-2002 | 978461 | 46605 | 339244 | 32059 | 149894 | 10414 | 30759 | 755119 | 832317 | 1587436 |
| 2002-2003 | 913858 | 50572 | 365904 | 49689 | 473471 | 10503 | 32039 | 939151 | 956885 | 1896036 |

[2003 ஏப்ரல் 4

## அட்டவணை 10

### மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம்-நிர்வாக வகைப்படி (1991-92 முதல் 2002-2003)

| ஆண்டு | அரசு | நகராட்சி/ மாநகராட்சி | தனியார் உதவி பெறுபவை | தனியார் உதவி பெறாதவை | மெட்ரிகுலேஷன் | ஆங்கிலோ இந்தியன் | மைய அரசு | பெருமொத்தம் ஆண் | பெருமொத்தம் பெண் | பெருமொத்தம் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1991-92 | 1069193 | 170013 | 956608 | 48200 | 145411 | 38634 | 88231 | 1499929 | 1016361 | 2516290 |
| 1992-93 | 1144217 | 171422 | 967155 | 60531 | 169619 | 43429 | 91128 | 1556369 | 1091132 | 2647501 |
| 1993-94 | 1106472 | 185283 | 1000736 | 66155 | 137686 | 43539 | 96678 | 1612519 | 1024030 | 2636549 |
| 1994-95 | 1191341 | 193536 | 1028350 | 82780 | 247277 | 43849 | 97768 | 1695027 | 1189874 | 2884901 |
| 1995-96 | 1233872 | 193932 | 1037863 | 101575 | 330685 | 44212 | 110164 | 1780958 | 1271345 | 3052303 |
| 1996-97 | 1276876 | 200686 | 1074010 | 105113 | 345836 | 46040 | 115192 | 1842336 | 1321417 | 3163753 |
| 1997-98 | 1324146 | 208259 | 1114704 | 109083 | 397936 | 46970 | 118712 | 1920279 | 1399531 | 3319810 |
| 1998-99 | 1272105 | 83038 | 1197539 | 91965 | 528778 | 46719 | 143356 | 1834079 | 1529421 | 3363500 |
| 1999-2000 | 1416047 | 130522 | 1110242 | 24658 | 423308 | 45005 | 171847 | 1792763 | 1528866 | 3321629 |
| 2000-2001 | 1422532 | 88264 | 1212171 | 40311 | 466477 | 42432 | 106480 | 1807000 | 1571667 | 3378667 |
| 2001-2002 | 1509743 | 119407 | 1298688 | 45186 | 330562 | 43562 | 101846 | 1918046 | 1530948 | 3448994 |
| 2002-2003 | 1711340 | 130551 | 1365786 | 54541 | 978051 | 42763 | 84423 | 2319412 | 2048043 | 4367455 |





2003 ஏப்ரல் 4]

## அட்டவணை-11.

### எஸ்.எஸ்.எல்.சி, +2 தேர்ச்சி விழுக்காடு ஏப்ரல் 2002 (மாவட்ட வாரியாக)

| வ.எண் | மாவட்டம் | உயர்நிலைப் பள்ளி ஆண் | உயர்நிலைப் பள்ளி பெண் | உயர்நிலைப் பள்ளி மொத்தம் | மேல்நிலைப் பள்ளி ஆண் | மேல்நிலைப் பள்ளி பெண் | மேல்நிலைப் பள்ளி மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | 84.3 | 88.4 | 86.5 | 80.8 | 86.3 | 83.9 |
| 2. | திருநெல்வேலி | 90.3 | 91.6 | 91.0 | 91.7 | 95.2 | 93.5 |
| 3 | தூத்துக்குடி | 91.1 | 93.9 | 92.6 | 92.7 | 95.8 | 94.4 |
| 4. | இராமநாதபுரம் | 78.7 | 75.1 | 76.9 | 86.2 | 90.3 | 88.1 |
| 5. | சிவகங்கை | 81.9 | 81.8 | 81.8 | 90.1 | 93.4 | 91.8 |
| 6. | விருதுநகர் | 92.1 | 94.4 | 93.2 | 95.3 | 97.3 | 96.2 |
| 7. | தேனி | 86.6 | 89.7 | 87.7 | 92.8 | 95.4 | 93.9 |
| 8. | மதுரை | 85.6 | 90.7 | 88.2 | 89.1 | 93.9 | 91.5 |
| 9. | திண்டுக்கல் | 86.1 | 90.0 | 88.0 | 89.6 | 93.7 | 91.6 |
| 10. | நீலகிரி | 77.4 | 83.8 | 80.8 | 79.5 | 85.4 | 82.7 |
| 11. | கோயம்புத்தூர் | 85.8 | 91.1 | 88.5 | 90.1 | 92.9 | 91.6 |
| 12. | ஈரோடு | 84.2 | 90.0 | 87.1 | 90.2 | 94.0 | 92.1 |
| 13. | சேலம் | 70.5 | 77.2 | 73.7 | 82.6 | 87.8 | 85.0 |
| 14 | நாமக்கல் | 83.9 | 87.8 | 85.7 | 85.8 | 90.0 | 87.8 |
| 15 | தருமபுரி | 68.0 | 68.0 | 68.0 | 69.8 | 73.1 | 71.2 |
| 16 | புதுக்கோட்டை | 66.4 | 65.0 | 65.7 | 69.4 | 78.4 | 73.7 |
| 17 | கரூர் | 74.4 | 81.7 | 77.9 | 81.1 | 90.4 | 85.9 |
| 18 | பெரம்பலூர் | 71.2 | 69.8 | 70.6 | 76.3 | 81.8 | 78.6 |
| 19 | திருச்சிராப்பள்ளி | 85.3 | 88.1 | 86.7 | 87.9 | 91.3 | 89.7 |
| 20 | நாகப்பட்டினம் | 78.3 | 76.6 | 77.4 | 76.4 | 84.1 | 80.3 |
| 21 | திருவாரூர் | 72.1 | 75.0 | 73.7 | 72.2 | 79.4 | 75.9 |
| 22 | தஞ்சாவூர் | 72.2 | 75.4 | 73.9 | 79.9 | 85.3 | 82.7 |
| 23 | விழுப்புரம் | 61.0 | 56.6 | 58.9 | 70.2 | 71.5 | 70.7 |
| 24 | கடலூர் | 59.6 | 60.6 | 60.1 | 70.2 | 74.3 | 72.1 |
| 25 | திருவண்ணாமலை | 62.1 | 58.9 | 60.6 | 75.2 | 80.0 | 77.2 |
| 26 | வேலூர் | 68.1 | 71.3 | 69.7 | 75.2 | 80.5 | 77.7 |
| 27 | காஞ்சிபுரம் | 66.3 | 71.5 | 68.9 | 79.7 | 85.9 | 82.8 |
| 28 | திருவள்ளூர் | 61.7 | 66.5 | 64.1 | 80.5 | 86.2 | 83.3 |
| 29 | சென்னை | 66.5 | 79.1 | 73.2 | 86.3 | 91.2 | 89.0 |

## அட்டவணை 12

### மார்ச்/ஏப்ரல் - 2002-மாணவ/மாணவியர்கள் தேர்ச்சி விகிதம்

| பள்ளிகளின் வகைகள் | எஸ்.எஸ்.எல்.சி. | +2 |
|---|---|---|
| | சதவீதத்தில் | |
| அரசுப் பள்ளிகள் | 67.4 | 75.1 |
| மாநகராட்சிப் பள்ளிகள் | 68.0 | 81.0 |
| நகராட்சிப் பள்ளிகள் | 68.3 | 76.8 |
| ஆதிதிராவிடர் பள்ளிகள் | 65.3 | 68.1 |
| கள்ளர் பளளிகள் | 80.0 | 82.5 |
| சிறப்புப பள்ளிகள் | 22.9 | .. |
| தனியார் பள்ளிகள் | 88.1 | 92.0 |

## அட்டவணை 13

### பள்ளிக்கூட மாணவர்களின் தேர்ச்சி விவரம் (மார்ச் பருவம்)

| ஆண்டு | எஸ்.எஸ்.எல்.சி. | | | +2 | | |
|---|---|---|---|---|---|---|
| | தேர்வு எழுதியவர்கள் | தேர்வு பெற்றோர் | சதவீதம் | தேர்வு எழுதியவர்கள் | தேர்வு பெற்றோர் | சதவீதம் |
| 1998 | 505620 | 328656 | 65.00 | 301017 | 251167 | 83.44 |
| 1999 | 520759 | 353574 | 67.90 | 329127 | 262173 | 79.66 |
| 2000 | 561651 | 393155 | 70.00 | 343798 | 287826 | 83.72 |
| 2001 | 591817 | 418415 | 70.70 | 389443 | 324389 | 83.30 |
| 2002 | 620798 | 468702 | 75.50 | 427243 | 361202 | 84.54 |



## அட்டவணை - 14

### எழுத்தறிவு விகிதம் 1901 முதல் 2001

| ஆண்டு | அகில இந்திய விகிதம் (சதவீதத்தில்) | | | தமிழ்நாடு விகிதம் (சதவீதத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | நபர் | ஆண் | பெண் | நபர் |
| 1901 | 9.80 | 0.60 | 5.30 | 14.10 | 1.00 | 7.60 |
| 1911 | 10.60 | 1.10 | 5.90 | 17.10 | 1.50 | 9.20 |
| 1921 | 12.20 | 1.80 | 7.20 | 18.60 | 2.40 | 10.40 |
| 1931 | 15.60 | 2.90 | 9.50 | 20.00 | 2.90 | 11.30 |
| 1941 | 24.90 | 7.30 | 16.10 | 25.60 | 6.90 | 16.20 |
| 1951 | 27.16 | 8.86 | 18.33 | 31.70 | 10.10 | 20.80 |
| 1961 | 40.40 | 15.34 | 28.31 | 51.59 | 21.06 | 36.39 |
| 1971 | 45.95 | 21.97 | 34.45 | 59.54 | 30.92 | 45.40 |
| 1981 | 56.37 | 29.75 | 43.56 | 68.05 | 40.43 | 54.39 |
| 1991 | 64.13 | 39.29 | 52.21 | 73.75 | 51.33 | 62.66 |
| 2001 | 79.56 | 54.28 | 65.38 | 82.33 | 64.55 | 73.47 |

குறிப்பு—1961 மற்றும் 1971 விகிதமானது, 5 வயது அதற்கு மேற்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்புக்கு உட்பட்டதாகும். 1981-லிருந்து 2001 வரையிலான விகிதமானது, 7 வயது அதற்கு மேற்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்புக்கு உட்பட்டதாகும்.

ஆதாரம்: அகில இந்திய மக்கட்தொகை கணக்கெடுபபு அறிக்கை.-2001

6



[2003 ஏப்ரல் 4

## அட்டவணை - 15
## எழுத்தறிவு விகிதம்-2001
## (மாவட்டங்களின் நிலை)

| | மாவட்டம் | எழுத்தறிவு விகிதம் நபர் | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| | மாநில எழுத்தறிவு விகிதம் | 73.47 | 82.33 | 64.55 |
| 1 | கன்னியாகுமரி | 88.11 | 90.88 | 85.38 |
| 2 | தூத்துக்குடி | 81.96 | 88.66 | 75.64 |
| 3 | சென்னை | 80.14 | 84.71 | 75.32 |
| 4 | நீலகிரி | 81.44 | 89.63 | 73.39 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 79.16 | 87.16 | 71.19 |
| 6 | காஞ்சிபுரம் | 77.61 | 84.82 | 70.21 |
| 7 | மதுரை | 78.65 | 87.24 | 69.93 |
| 8 | கோயம்புத்தூர் | 76.95 | 83.82 | 69.80 |
| 9 | திருநெல்வேலி | 76.97 | 85.89 | 68.50 |
| 10 | திருவாரூர் | 76.90 | 85.59 | 68.36 |
| 11 | நாகப்பட்டினம் | 76.89 | 85.61 | 68.35 |
| 12 | திருவள்ளூர் | 76.54 | 84.62 | 68.23 |
| 13 | தஞ்சாவூர் | 76.07 | 85.45 | 66.95 |
| 14 | விருதுநகர் | 74.23 | 84.56 | 64.09 |
| 15 | இராமநாதபுரம் | 73.05 | 82.96 | 63.55 |
| 16 | வேலூர் | 73.07 | 82.67 | 63.53 |
| 17 | சிவகங்கை | 72.66 | 83.70 | 62.12 |
| 18 | தேனி | 72.01 | 82.50 | 61.41 |
| 19 | புதுக்கோட்டை | 71.96 | 83.22 | 60.94 |
| 20 | கடலூர் | 71.85 | 82.76 | 60.85 |
| 21 | திண்டுக்கல் | 69.83 | 80.29 | 59.30 |
| 22 | கரூர் | 68.74 | 80.42 | 57.30 |
| 23 | நாமக்கல் | 67.66 | 78.02 | 57.04 |
| 24 | திருவண்ணாமலை | 68.22 | 80.14 | 56.31 |
| 25 | சேலம் | 65.72 | 75.25 | 55.61 |
| 26 | ஈரோடு | 65.51 | 75.49 | 55.26 |
| 27 | பெரம்பலூர் | 65.88 | 77.68 | 54.26 |
| 28 | விழுப்புரம் | 64.68 | 76.02 | 53.16 |
| 29 | தருமபுரி | 59.23 | 68.82 | 49.10 |



2003 ஏப்ரல் 4]




2. மாணவர் சேர்க்கை - 2002-2003
29.28
5.98
0.54
35.46
14.51
38.70
1.16




3 பள்ளிகளின் விவரம் - 2002-2003
5386
1614
41
27676
3450
8892
139

[2003 ஏப்ரல் 4






2003 ஏப்ரல் 4]




6. எஸ்.எஸ்.எல்.சி மற்றும் +2 தேர்வு விவரம்
(சதவிகிதத்தில் - அட்டவணை - 13ன்படி)
சதவீதம்
100.00
80.00
60.00
40.00
20.00
0.00
1998 1999 2000 2001 2002
எஸ்.எஸ்.எல்.சி 65.00 67.90 70.00 70.70 75.50
+2 83.44 79.66 83.72 83.30 84.54






7. எழுத்தறிவு விகிதம் (இந்தியா மற்றும் தமிழ்நாடு)
(அட்டவணை - 14ன்படி)
80.00
70.00
60.00
50.00
40.00
30.00
20.00
10.00
0.00
1901 1911 1921 1931 1941 1951 1961 1971 1981 1991 2001
இந்தியா 5.30 5.90 7.20 9.50 16.10 18.33 28.31 34.45 43.56 52.21 65.38
தமிழ்நாடு 7.60 9.20 10.40 11.30 16.20 20.80 36.39 45.40 54.40 62.70 73.47

[2003 ஏப்ரல் 4

# இணைப்பு V

(365 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக்காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 44

## தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும்

## அறநிலையத் துறை—

## தமிழ் வளர்ச்சி-பண்பாடு

## கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்*
*இனிதாவது எங்கும் காணோம்"*

**-பாரதியார்**

தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது என்பார் மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர். இத்தகு பெருமையுடைய தமிழின் வளர்ச்சியில் இவ்வரசு மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டு வருகிறது.

மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட கலை வடிவமே மொழியாகும். பிற உயிர்களிடமிருந்து மனித குலத்தை வேறுபடுத்திக் காட்டுவது மனித குலம் பெற்றிருக்கும் மொழியாற்றல் உணர்வேயாகும். மொழி வழியாகவே கருத்துப் புலப்பாடும் கடமை வெளிப்பாடும் நிகழ்கின்றன. மொழி, மனித குல வரலாற்றுச் சிந்தனைத் தொட்டில்; சிந்தனை வளம் பொதிந்த அறிவின் முதிர்ச்சி; அறிவின் வழி நடத்தும் ஆற்றல்; ஆற்றலால் அடைகின்ற வளர்ச்சி; மலர்ச்சி. இவ்வகையில் மனித குலத்தின் வாழ்வும் வளர்ச்சியும் மொழியின் வாழ்வையும் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன.

தமிழ், வளர்ந்த மொழி, வளமை, பழமை, பொதுமை, செம்மை, நடுவுநிலைமை, நிலைபேறு, அனைவராலும் ஏற்கப்படும் தன்மை எனும் தகுதிகளைத் தன்னகத்தே கொண்ட உயர்தனிச் செம்மொழி. மொழி



2003 ஏப்ரல் 4]

வளர்ச்சி என்பது அதன் சமுதாயப் பயன்பாட்டு எல்லைகளாலும், மொழி வழியாக வளரும் கலை, இலக்கியம், நாகரிகம், பண்பாடு முதலியவற்றாலும் அதன் கொள் கொடை உறவுகளாலும் அறியக்கூடியதாகும். தமிழ் மொழி, பயன்பாட்டில் முழுநிறைவெய்தவும், தமிழ் வழி வளரும் கலை, இலக்கியம், நாகரிக, பண்பாட்டுக் கூறுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கும் நோக்கிலும் தமிழுக்கென 1984 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தோற்றுவிக்கப்பட்டது.

உலகியலில் ஏற்படும் பல்வேறு மாற்றங்கட்கு ஈடு கொடுக்கும் வகையில் மொழி தன்னை வளப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கீழ்க்காணும் முழக்கத்தை வெளியிட்டார்கள்:—

> *"புதிய மாற்றங்களை ஒரு மொழியினால் ஏற்க முடியாமல் போனால் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் அந்த மொழியின் வலிமையைக் குறைத்துவிடும். வளமார்ந்த மொழியாக, வழக்கில் என்றென்றும் இருக்கும் மொழியாக மாறவேண்டுமென்றால் நிலைத்த பழமையும், வளரும் புதுமையும் இரண்டறக் கலந்து இரண்டின் தன்மைகளையும் உள்ளடக்கியதாக அந்த மொழி வளர்ந்து வர வேண்டும்."*

> *"1981 ஆம் ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதியில் முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'எங்கும் தமிழ்' 'எதிலும் தமிழ்' என்று முழங்கினார்கள். சீரிய முறையில் நடைபெற்ற இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாகத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புதிய பரிமாணத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதை நிரந்தரமாக்கிடவும், 'அறிவியலில் தமிழ் அனைத்திலும் தமிழ்' என்பதை உணர்த்திடவும், 'இன்றும் தமிழ் என்றும் தமிழ்' என்ற புதிய முழக்கத்தை இந்த மாநாட்டின் எழுச்சி முழக்கமாக அறிவிப்பதில் நான் பெருமிதமும் பேருவுவகையும் அடைகிறேன்"*

இவ்வகையில் காலத்தால் வரும் மாற்றங்களுக்கு ஈடு கொடுத்துத் தமிழ் வளர்ந்து வருகிறது. ஆக்கமளிக்கும் மாற்றங்களை ஏற்று இன்றைய நிலையில் இல்லம் தொடங்கி இணையதளங்கள் வரையில் உலகளாவிய நிலையில் தொடர்ந்து இயங்காற்றல் கொண்டிருக்கும் உயர்மொழியாகத் தமிழ் இலங்குகிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய சிந்தனையைச் செயற்படுத்தும் வகையில் தமிழ் மொழி-பண்பாட்டு வளர்ச்சியில் தமிழ் மக்களின் வளர்ச்சி உள்ளது எனும் கோட்பாட்டுடன் அறிவியல் தமிழ் வளர்ச்சியிலும் தனி அக்கறை கொண்டு தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தன் பயணத்தைத் தொடர்கிறது. இத்துறையின் கீழ் இயங்கும் அலுவலகங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் முதலியன தமிழ் மொழி-பண்பாட்டின் பன்னோக்கு வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.

**தமிழ் நலம் பேணுவன**

1. தமிழ் வளர்ச்சி இயக்ககம்
2. மொழி பெயர்ப்புப் பிரிவு
3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
4. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
5. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

**தொன் மரபு காப்பன**

6. தொல்லியல் துறை
7. அருங்காட்சியகங்கள்

**வளர்கலை ஊக்குவன**

8. கலை-பண்பாட்டு இயக்ககம்
9. மண்டலப் பண்பாட்டு மையங்கள்
10. அரசு இசைக் கல்லூரிகள், இசைப் பள்ளிகள்
11. அரசு கவின் கலைக் கல்லூரிகள்
12. அரசு கட்டட, சிற்பக் கலைக் கல்லூரி
13. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு
14. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்
15. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்



**2003-2004 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| | வருவாய்ப் பகுதி | | | |
| 2059 | பொதுப்பணிகள் | | | |
| 01 | அலுவலகக் கட்டடங்கள் | | | |
| 0.53 | பராமரித்தலும் செப்பனிடுதலும் | - | 33,60 | 33,60 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | | | |
| 102 | பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | - | 4,28,91 | 4,28,91 |
| 0.5 | மொழி வளர்ச்சி | | | |
| 001 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 14.70 | 2.66,82 | 2.81,52 |
| 102 | இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 1 | 53,00 | 53,01 |
| 800 | ஏனைய செலவு | 10,12 | 9,01,50 | 9,11,62 |
| 2205 | 00 கலையும் பண்பாடும் | | | |
| 001 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 2,00 | 63,84 | 65,84 |
| 101 | நுண்கலைக் கல்வி | 2,00,69 | 4,11,38 | 6,12,07 |
| 102 | கலை-பண்பாட்டை வளர்த்தல் | 57,85 | 2,65,35 | 3,23,20 |
| 103 | தொல் பொருளியல் ஆய்வு | 3,33,03 | 3,08,65 | 6,41,68 |
| 105 | பொது நூலகங்கள் | - | 37,00 | 37,00 |
| 107 | அருங்காட்சியகங்கள் | 50,00 | 4,76,41 | 5,26,41 |
| 800 | ஏனைய செலவு | | | |
| 2251.00 | தலைமைச் செயலகம்-சமூகப் பணிகள் | | | |
| 090 | தலைமைச் செயலகம் | - | 2,32,56 | 2,32,56 |
| | மொத்தம் நிகரக் கோரிக்கை | | | |
| | கூட்டுக-திருப்பி வசூலிப்பவை | | | |
| | மானியக் கோரிக்கை எண்.44 | 6,68,40 | 34,79,02 | 41,47,42 |

[2003 ஏப்ரல் 4

## 2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகள்

| வரிசை எண் | திட்டப் பணிகள் விவரம் | இறுதி நிலைச் செலவு | | |
|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | **தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை** | | | |
| | **தமிழ் வளர்ச்சி இயக்ககம்** | | | |
| 1. | நிர்வாகத் துறைக்கு கணினி மற்றும் உதிரி பாகங்கள வாங்குதல். | 0.00 | 3.52 | 3.52 |
| 2. | தமிழ் வளர்ச்சி இயக்ககத்தினைக் கணினி மயமாக்குதல் | 0.00 | 2.40 | 2.40 |
| 3. | ஆட்சி மொழித் திட்டச் சிறப்பாய்வு | 0.20 | 0.00 | 0.20 |
| 4. | தமிழிலக்கியச் சொல்லடைவு (சங்க காலம் முதல் பாரதிதாசன் காலம் வரை) | 3.50 | 0.00 | 3.50 |
| 5. | தொழில் நுட்பத் தன்மை வாய்ந்த, சொற்கள் குறித்துக் கலைச் சொற்களஞ்சியம் வெளியிடல் | 4.00 | 0.00 | 4.00 |
| | **தொல்லியல் துறை** | | | |
| 6. | மரக்காணத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளுதல் | 0.00 | 3.50 | 3.50 |
| 7. | தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் பற்றிய நிழற்படங்கள் மற்றும் குறிப்புகளைக் கணினி மற்றும் குறுந்தட்டில் பதிவு செய்தல் | 0.00 | 4.00 | 4.00 |
| | **கலை-பண்பாட்டு இயக்ககம்** | | | |
| 8. | மாமல்லபுரம் அரசு சிற்பக் கலைக் கல்லூரியில் கணினி வழிப் பாடம் நடத்த கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். | 0.75 | 2.25 | 3.00 |
| 9. | மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், இசைக் கல்லூரிகளுக்கு இசைக் கருவிகள், ஒலி ஒளிச் சாதனங்கள், திரைப்பட ஒளியிருப்புப் படிவக் கருவிகள் மற்றும் நிழற்படக் கருவிகள் வாங்குதல் | 0.00 | 5.00 | 5.00 |
| 10. | அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் இசைக் கல்லூரிகளுக்கு அறைகலன்கள், தரைவிரிப்புகள், குடிநீர் வடிகலன்கள் வாங்குதல் | 0.00 | 5.00 | 5.00 |
| 11. | கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு . வரை பொருட்கள் வாங்குதல் | 2.65 | 0.00 | 2.65 |
| 12. | ஒளியச்சு இயந்திரம் வாங்குதல் | 0.50 | 1.50 | 2.00 |
| 13. | புத்தாக்கப் பயிற்சி, கோடை காலப் பயிற்சி முகாம் மற்றும் இளைஞர் களுக்குப் பயிற்சி அளித்தல் | 0.00 | 10.00 | 10.00 |
| 14. | கலை விழாக்கள்/நிகழ்ச்சிகள் நடத்துதல், பிற மாநிலங்களுக்குக் கலைக் குழுக்களை அனுப்புதல், மேடை நாடகங்கள்/ கலைப்போட்டிகள்/சமூக விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல் | 10.00 | 0.00 | 10.00 |
| 15. | இசைப் பள்ளிகளுக்கு/ கல்லூரிகளுக்கு இசை இலக்கணம், வர்ணம் பற்றிப் பாடப் புத்தகங்கள் அச்சிடுதல் | 1.00 | 0.00 | 1.00 |
| | **அருங்காட்சியகம்** | | | |
| 16. | புவியியல் கூடத்தைப் புதுப்பித்தல் | 0.00 | 10.00 | 10.00 |
| | **அகரமுதலித் திட்ட இயக்ககம்** | | | |
| 17. | அகரமுதலி அகராதியில் 6 பகுதிகள் வெளியிடுதல் | 0.00 | 12.00 | 12.00 |
| 18. | அகரமுதலி 6 பகுதிகள் தொகுப்பு மற்றும் கணினியச்சு குறித்து 57 நாட்கள் பயிலரங்கம் நடத்துதல் | 0.00 | 2.00 | 2.00 |
| 19. | அறைகலன்கள் வாங்குதல் | 0.00 | 0.30 | 0.30 |
| 20. | கணிப்பொறிக் கூடத்தில் இணைய வசதி அமைத்தல் | 0.00 | 0.20 | 0.20 |
| 21. | திட்டப் பயன்பாட்டிற்கு நூல்கள் வாங்குதல் | 0.00 | 0.20 | 0.20 |
| | **மொத்தம்** | **22.60** | **61.87** | **84.47** |

**தமிழ் வளர்ச்சி இயக்ககம்** [2003 ஏப்ரல் 4

தமிழ் மொழியின் பயன்பாட்டை அனைத்து வகையிலும் மேம்படுத்த
இவ்வரசு ஆர்வம் கொண்டுள்ளது. ஆட்சிமொழிக் குழுவாக 1957-இல்
உருவாகி, பின்னர் தமிழ் வளர்ச்சி இயக்ககமாக மாறியுள்ள இத்துறையின்
தலையாய பணி ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கமும், தமிழ் மொழி
வளர்ச்சி தொடர்பான பல்வேறு பணிகளை ஆற்றுவதும் ஆகும்.

**ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்**

**ஆய்வு**

அரசு அலுவலகங்களில் தமிழ் மொழியின் பயன்பாட்டை அதிகரிக்க
தமிழ் வளர்ச்சித் துறை பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை
மேற்கொண்டு வருகிறது. அரசு அலுவலகங்கள் ஆட்சிமொழிச்
செயலாக்கம் குறித்து ஆய்வு செய்யப்படுகின்றன. தலைமைச் செயலகத்
துறைகள், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசுச்
செயலாளர் அவர்களாலும், துறைத் தலைமை அலுவலகங்கள்- மாவட்ட
ஆட்சியர் அலுவலகங்கள்-தன்னாட்சி நிறுவனத் தலைமை
அலுவலகங்கள் ஆகியவை தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களாலும்,
மாவட்டங்களிலுள்ள மண்டல நிலை, மாவட்ட நிலை, சார்நிலை
அலுவலகங்கள், மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள்
ஆகியோராலும் ஆய்வு செய்யப்பெறுகின்றன.

**ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்**

ஆட்சிமொழித் திட்டத்தின் நோக்கம், செயற்பாடு ஆகியன குறித்து
அரசு அலுவலர்கள்/பணியாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும்
இத்திட்டம் நிறைவேற்றப்படுவதனை ஊக்குவிக்கும் நோக்கிலும்
மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன.
2002-2003 ஆம் ஆண்டில் 8 மாவட்டங்களில் இத்தகைய கருத்தரங்குகள்
நடத்தப்பட்டன.

**ஆட்சிச் சொல்லகராதி, சிறப்புச் சொல்லகராதிகள்**

ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்குப் பெரிதும் பயன்படுவன
ஆட்சிச்சொல் அகராதிகளாகும். எனவே இதுவரை ஆட்சிச் சொல்
அகராதிகள் ஆறு பதிப்புகள் வெளியிடப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு
வழங்கப்பட்டுள்ளன. ஆட்சிச் சொல்லகராதியை புதுப்பிக்கும் பணியும்,



2003 ஏப்ரல் 4]

சிறப்புச் சொல்லகராதியைத் தொகுத்து அச்சிடும் பணியும் இப்போது
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மொழிபெயர்ப்புப் பணிகள்**

அரசு அலுவலகங்களில் தமிழ்மொழி முழுமையாகப் பயன்
படுத்தப்படுவதற்குத் துணை புரியும் வகையில் தேவையான மொழி
பெயர்ப்புகள் செய்தளிக்கப்படுகின்றன. படிவங்கள், பதிவேடுகள், விதிகள்,
விதித்தொகுப்புகள், நடைமுறை நூல்கள் முதலியன தமிழில் மொழி
பெயர்த்து அளிக்கப்படுகின்றன.

**தமிழ் வளர்ச்சிப் பணிகள்**

**நூல் வெளியிட நிதியுதவி**

மொழி வளர்ச்சியில் நூல்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. எனவே
தமிழ்மொழியில் நூல்கள் வெளிவருவதற்குத் துணைபுரியும் வகையில்
நிதியுதவி வழங்கப்படுகிறது. நிதியுதவி வழங்கத் தெரிவு செய்யப்படும்
ஒவ்வொரு நூலிற்கும் பெரும் அளவாக நூலாக்கச் செலவில் 60%
அல்லது ரூ.25,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக
அளிக்கப்படுகிறது.

**சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு**

தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும்
வகையில் 30 தலைப்புகளில் ஒவ்வொரு தலைப்பின்கீழ் சிறந்த
நூலொன்றுக்கு ரூ.10,000/- வீதம் 30 நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள்
வழங்கப்படுகின்றன. பரிசு பெறும் நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தார்
ஒவ்வொருவருக்கும் ரூ.2000/- வீதம் பரிசு வழங்கப்படுகிறது. 2001 ஆம்
ஆண்டில் வெளிவந்த சிறந்த இருபத்தேழு நூல்களுக்கும் மற்றும்
அவற்றைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் பரிசு வழங்குவதற்கான
ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி**

தமிழுக்குத் தொண்டாற்றிய அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள்
இத்திட்டத்தின் மூலம் உதவி பெறுகின்றனர். திங்கள் வருமானம்
ரூ.400/-க்கு மேற்படாத தகுதியுடைய 58 அகவை முடிந்த
தமிழறிஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் ரூ.500/- வீதம்
வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்கப்பெற்று வருகிறது. 2002-2003
ஆம் ஆண்டில் ஒன்பது தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க
ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### தமிழ்மொழி/ எல்லைக் காவலர் நிதியுதவி

தமிழ்மொழி-பண்பாட்டைப் பேணி வளர்க்கச் சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்குத் திங்கள்தோறும் நிதியுதவியாக ரூ.3,000/- மற்றும் மருத்துவப்படியாக ரூ.15/-(ஆக மொத்தம் ரூ.3,015/-) மரபுரிமையருக்கு நிதியுதவியாக ரூ.1500/- மற்றும் மருத்துவப்படியாக ரூ.15/-(ஆக மொத்தம் ரூ.1515/- ஆகவும்) வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருவதோடு இலவசப் பேருந்துப் பயணச்சலுகையும் வழங்கப்படுகிறது. மேலும் இத்தகைய தொண்டாற்றிய சிலருக்கு ஒட்டுமொத்த மானியமாக ரூ. 10,000 மற்றும் மரபுரிமையருக்கு ஒட்டுமொத்த மானியமாக ரூ.5000 வழங்கப்பட்டுள்ளது.

### குறள் பரிசு

திருக்குறள் முற்றோதல் செய்த 23 மாணவச் செல்வங்களுக்குத் திங்கள்தோறும் ரூ.1000/- 'குறள் பரிசு' வழங்கப்பட்டு வருகிறது. அவர்களின் வாழ்நாள் முழுவதும் இத்தொகை வழங்கப்பெறும். திருக்குறள் முற்றோதல் செய்த செல்வி சிவராஜி மற்றும் செல்வி இரா. அருள்ஜோதி ஆகியோருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/- வீதம் முறையே 11-06-2001 மற்றும் 04-07-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## விருதுகள்

### திருவள்ளுவர் விருது

திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில், திருவள்ளுவர் விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருது ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும கொண்டதாகும்.

### பாவேந்தர் பாரதிதாசன் விருது

தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றிய கவிஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து இவ்விருது வழங்கப் பெறுகிறது. இவ்விருது பெறுபவர் ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் பெறுவார்.

### திரு.வி.க. விருது

சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் பெயரால் விருது வழங்கப்பெறுகிறது. விருது பெறுபவருக்கு ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகிறது.



### பாரதியார் விருது

பாரதி நெறி பரப்பும் தகைமையாளர் ஒருவரைத் தெரிவு செய்து விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகிறது.

### கி.ஆ.பெ. விசுவநாதம் விருது

தமிழ் மொழியின் மேம்பாட்டிற்குத் தொண்டாற்றும் பெருந்தகையாளர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது. ஒரு சவரன் தங்கப் பதக்கத்துடன் ரூபாய் ஒரு இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்பெறுகிறது.

### பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவற்றிற்கு நல்கைகள்/நிதியுதவிகள்

தமிழ் மொழியைப் பரப்புதல், தமிழ் வளர்ச்சி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பின்வருமாறு நல்கைகள், நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

(1) பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல்/ பட்டய வகுப்பு நடத்துதல் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மானியம்/ நிதியுதவி

தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றைப் பரப்பிடவும், பிற மாநிலங்களிலுள்ள மக்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டும் பிற மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழிருக்கை நிறுவுவதற்கும் தமிழில் பட்டய வகுப்பு நடத்துவதற்கும் மானியம்/நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

### (2) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நல்கை

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடனும், தமிழியல் துறைகளுடனும் இணைந்து தமிழாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வது இந்த அமைப்பினுடைய முதன்மை நோக்கமாகும். இந்நிறுவனத்திற்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக அரசு நல்கையாக ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

[2003 ஏப்ரல் 4

### (3) தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நல்கை

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நடப்புச் செலவினங்களுக்கும், குறிப்பிட்ட திட்டப்பணிகளுக்குமெனத் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக நல்கை வழங்கப்படுகிறது.

### விழாக்கள் மற்றும் நூற்றாண்டு விழாக்கள்

தமிழுக்குத் தொண்டாற்றியுள்ள பெருமக்களைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழா, உ.வே. சாமிநாதய்யர் பிறந்த நாள் விழா முதலியன கொண்டாடப்பெறுகின்றன. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழாவை அவர் பிறந்து வளர்ந்த திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலிலும், கோமதி முத்துப்புரத்திலும், அவர் தமிழ் வளர்த்த சென்னையிலும் அரசு கொண்டாடியது. எழுத்தாளர் கு.பா.ரா. அவர்களின் நூற்றாண்டு விழாவை 4.12.2002-இல் சென்னையில் அரசு கொண்டாடியது.

### நூல்கள் வெளியிடுதல்

#### தமிழ்நாட்டு வரலாறு

தமிழ்நாட்டு வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் அதனை முறைப்படித் தொகுத்து ஏழு தொகுதிகளாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஐந்து தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளையும், தமிழ்நாட்டு வரலாறு முழுவதும் அடங்கிய ஒரு தொகுதியையும் தயாரித்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### இ.ஆ.ப. தேர்வுக் கருவி நூல்

இ.ஆ.ப. தேர்வினைத் தமிழில் எழுதுவோருக்குத் துணைபுரியும் வகையில் தமிழில் கருவி நூல்கள் தயாரிக்கும் திட்டத்தின்கீழ், தமிழ் மொழி வரலாறு எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. வரலாறு, புவியியல்-கருவி நூல்கள் தயாரிப்புப் பணி நடைபெற்று வருகிறது.

#### தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் தேவையைக் கருதி, இத்துறையின் வாயிலாக அவ்வப்போது தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் அச்சிட்டு



2003 ஏப்ரல் 4]

வெளியிடப்பட்டு வருகிறது. இதன் ஐந்தாம் பதிப்பினை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### புதிய தமிழ் இலக்கிய வரலாறு

இதுவரை பலராலும் வெளியிடப்பட்டுள்ள தமிழ் இலக்கிய வரலாறு தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியங்களைச் சார்ந்ததாக உள்ளது. இந்நிலையை மாற்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளின் தமிழ் இலக்கிய வரலாறுகளையும் ஒருங்கிணைத்துப் புதிய தமிழ் இலக்கிய வரலாற்று நூல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக உருவாக்கப்பட்டு வருகிறது.

#### தமிழ் நூல் விவர அட்டவணை

தமிழ்நாட்டில் வெளிவந்து பதிவு செய்யப்பெற்று ஆவணக் காப்பகத்தில் உள்ள நூல்களுக்கு விவர அட்டவணை நூல்கள் தயாரிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 1935ஆம் ஆண்டு வரையிலான நூல்களுக்குரிய விவர அட்டவணை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையிலான நூல்களுக்குரிய விவரங்கள் தயாரிக்கப்பட்டு கணினியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1946 ஆம் ஆண்டு முதல் உரிய நூல்களுக்கு விவரத் தொகுப்புப் பணி நடைபெற்று வருகிறது. தமிழ் நூல் விவரங்களை இணையத்தின் வழி பரவலாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்துகொள்ள ஏதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### சொல் வங்கி

தமிழில் வழங்கிவரும் பிறமொழிச் சொற்களுக்கு நிகராகத் தமிழ்ச் சொற்களை ஆக்கிக்கொள்ளவும், பழைய தமிழ்ச் சொற்களை இன்றைய தேவைக்கேற்ப புதுப்பித்துக்கொள்ளவும், மக்களிடையே புழக்கத்தில் உள்ள சொற்களைத் தேவைக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளவும் உரிய ஓர் அமைப்பாக சொல்வங்கி எனும் இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது. திங்கள்தோறும் பல்துறை வல்லுநர்கள் கூடி, புதிய புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்குகின்றனர். இச்சொற்களை அனைவரும் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2003 ஏப்ரல் 4

### மும்பைப் பள்ளி மாணவர்களுக்குப் பாடநூல்கள்

மும்பை மாநகராட்சிப் பகுதிகளில் படிக்கும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 43,025/- மதிப்புள்ள 2,700 பாடநூல்கள் 3.10.2002 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இலவசமாக வழங்கப்பட்டன.

### நூல்கள் நாட்டுடைமையாக்கம்

புகழமிக்க தமிழறிஞர்களின் படைப்புகள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்னும் நோக்கத்தில் அரசு அவ்வப்போது தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி வருகிறது. இவ்வகையில் எழுத்தாளர் புதுமைப்பித்தன் மற்றும் திருமதி கு.ப.சேது அம்மாள் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு 3.10.2002 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் அவர்தம் குடும்பத்தாருக்கு ரூ. 5.00 இலட்சம் வீதம் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டன.

### அரசு அறிவிப்புப் பலகைகளில் திருக்குறள்

தலைமைச் செயலகத் துறைகளிலும், துறைத் தலைமை அலுவலகங்களிலும், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள், இணையங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களிலும் ஆட்சிச் சொல் அகராதியில் உள்ள சொற்களில் நாள்தோறும் ஓர் ஆங்கிலச் சொல்லையும், அதற்குரிய தமிழ்ச் சொல்லையும் எழுதி வைப்பதுடன் ஒரு திருக்குறளையும் பொருளுடன் எழுதி வைக்கவேண்டுமென ஆணையிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### தமிழ் மன்றம்

மாணவர்களின் தமிழ்ப் படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும் வளர்க்கும் வண்ணம் 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க மாவட்டந்தோறும் தமிழ் மன்றங்கள் அமைக்கப்பட்டன.

இதற்கென 2002-2003 ஆம் ஆண்டில் அரசு ரூ.2,10,250/-நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு முழுவதும் 29 மாவட்டங்களைச் சார்ந்த 175 மாணவ மாணவியர் பரிசுகள் பெற்றனர்.



2003 ஏப்ரல் 4]

### உலகத் தமிழ்ச் சங்கம்

1981 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்படும் என அப்போதைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு 14-4-86-இல் இச்சங்கம் தொடங்கி வைக்கப்பட்டது. உலகத் தமிழ் சங்கத்திற்கெனத் தனி அலுவலர் நியமிக்கப்பட்டார். 1982 ஆம் ஆண்டில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு 14.15 ஏக்கர் நிலத்தை வழங்கி அரசு ஆணையிட்டது. 1995 ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நிறைவு விழாப் பேருரை நிகழ்த்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலகத் தமிழ்ச் சங்கம் மீண்டும், மதுரையில் புதுப்பொலிவோடும், சிறப்போடும் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். பின்னர் 2001, அக்டோபரில் திருநெல்வேலி மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் பொறுப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார். உலகத் தமிழ்ச் சங்கப் பணிகளை மேலும் சிறப்பாகவும் விரைவாகவும் மேற்கொள்ள இயலும் வகையில், இச்சங்கம் தொடர்பான பணிகளை தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்து தற்போது அரசு ஆணையிட்டுள்ளது. உலகத் தமிழ்ச் சங்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சுற்றுச் சுவர் கட்டுதல், பதிவுச் சங்க விதிகளின் படி இச்சங்கத்தை பதிவு செய்தல், சங்கம் மேற்கொள்ள வேண்டிய பணிகளை வரையறை செய்தல். நிலத்தைக் கையகப்படுத்துதல் முதலிய பணிகளை தமிழ்ப் பல்கலைக்கழகம் இனி மேற்கொள்ளும்.

### புதிய திட்டங்கள்

2003-2004 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தினைக் கணினி மயமாக்கல், ஆட்சி மொழித் திட்ட ஆய்வு/சிறப்பாய்வு மேற்கொள்ளுதல், சங்க காலம் முதல் பாரதிதாசன் காலம் வரை தமிழ் இலக்கிய சொல்லடைவு தயாரித்தல் மற்றும் தொழில்நுட்பத் தன்மை வாய்ந்த சொற்கள் குறித்து கலைச் சொற்களஞ்சியம் வெளியிடுதல் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

## மொழி பெயர்ப்புப் பிரிவு

தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின்கீழ் செயல்படும் மொழி பெயர்ப்புப் பிரிவு, அறிவிக்கைகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், பொதுக் கணக்குக் குழு அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழு அறிக்கைகள், மாநில ஆட்சி அறிக்கை, காவல் துறை

[2003 ஏப்ரல் 4

மற்றும் சிறைத் துறைப் பதக்கம் பெறுவோர் தகுதியுரைகள், பொதுத் துறையிலிருந்து வரப்பெறும் கமுக்கக் கோப்புகள், விசாரணை ஆணைய அறிக்கைகள், அரசு அலுவல்கள் தொடர்பான விழிப்புக் கண்காணிப்புக் குழு அறிக்கைகள், நிதிக் குழு அறிக்கைகள், காபிபோசா சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகள், அரசு ஆணைகள், அமைச்சரவைக் குறிப்புகள், அமைச்சர் பெருமக்களின் உரைகள், செய்திகள், சுற்றோட்டக் குறிப்புகள், சில அத்தியாவசியமான கோப்புகள் ஆகியவற்றின் மொழியாக்கப் பணிகளை மேற்கொள்கிறது.

தவிரவும், தலைமைச் செயலகத் துறைகளிடமிருந்து வரப்பெறுகின்ற இந்தி மொழியாக்கப் பணிகளையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. மேலும் கடந்த ஆண்டில் இரண்டு தொகுதிகளைக் கொண்ட 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும், உதவிப் பிரிவு அலுவலர் ஒருவர், சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர் சட்டமன்றம் தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை உயர் அதிகாரிகள் மாநாடு தொடர்பான மொழியாக்கப் பணிகளைக் கவனிப்பதற்கென்று பொதுத் துறைக்கு ஒரு குழு அனுப்பப்படுகிறது. மேலும் ஒவ்வோராண்டும், நிதித் துறைக்கு உதவி இயக்குநர் ஒருவர் தலைமையில், பிரிவு அலுவலர் ஒருவர், உதவிப் பிரிவு அலுவலர்கள் மூவர் அடங்கிய மொழி பெயர்ப்புக் குழு ஒன்று வேற்றுப் பணியில் அனுப்பப்படுகிறது. இக்குழு ஆளுநர் உரை, வரவு-செலவுத் திட்ட உரை, வரவு-செலவுத் திட்டம் தொடர்பான ஆவணங்கள், துணை மானியக் கோரிக்கைகள் ஆகியவற்றை மொழி பெயர்க்கிறது. மாநில நிதி ஆணையத்தின் அறிக்கையைத் தமிழாக்கம் செய்வதற்காக ஒரு குழு அனுப்பப்படுகிறது.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்விற்காக 1970 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் இலக்கியம் சுவடிப்புலம், அயல் நாட்டுத் தமிழர் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம்,



2003 ஏப்ரல் 4]

தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம் என்ற நான்கு புலங்கள் இப்போது உள்ளன. நிறுவனத்தில் தமிழியல் தொடர்பான திட்டப்பணிகள், நூல் வெளியிடுதல், தமிழ்மொழி, சுவடியியல், மொழிபெயர்ப்பியல் வகுப்புகள் நடத்துதல், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல், வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் மொழி பயிற்றுவித்தல், செய்திக்கதிர், 'தமிழியல் ஆய்விதழ்' எனும் இதழ் வெளியிடுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிறுவன கல்விசார் அலுவலர்கள் பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் செய்து வருகின்றனர். இவை இலக்கியம், மொழியியல், மொழி கற்பித்தல், வரலாறு, சமூகவியல், பண்பாடு, நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பு தொடர்பானவை என அமைகின்றன. தமிழியல் ஆவணம் என்ற திட்டப் பணி மூலம் தமிழியல் தொடர்பாக இதுவரையிலும் வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவை யாவும் சிறு விளக்கக் குறிப்புடன் தொகுக்கப்பட்டு கணினியில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. பின்னர் அவை இணையம் (Internet) வாயிலாக உலகத்தினர் அனைவரும் தமிழியல் செய்திகளைப் பெறும் வகையில் உள்ளீடு செய்யப்படும். இதன்வழி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழியலுக்கான ஒரு தகவல் தொடர்பு மையமாக இயங்கவும் இத்திட்டப்பணி வழிவகுக்கும். தமிழ் மொழியைப் பிற மொழியினர்/பிறநாட்டினர் கற்கத் துணையாகும் வண்ணம் 'தமிழுலகம்' எனும் பெயரில் இரண்டு குறுவட்டுகளில் (C.D.) தமிழ் எனும் திட்டப்பணியாகக் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது. தற்போது இந்த குறுவட்டுகள் விற்பனையில் உள்ளன. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தமிழ் இலக்கிய வரலாற்றினை உள்ளடக்கிய உலகத் தமிழ் இலக்கிய வரலாறு எனும் திட்டப்பணி முடிவுற்று நான்கு தொகுதிகள் அச்சுப்பணிக்காக தயாராகவுள்ளன. மேலும் இரண்டு தொகுதிகளுக்கான இறுதிக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிறுவனம் இதுவரையில் 445 நூல்களை வெளியிட்டுள்ளது இவை இங்குள்ள கல்விசார் அலுவலர் திட்டப் பணிகள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், பிற தமிழறிஞர்கள் எழுதியவை ஆகியவற்றைக் கொண்ட வெளியீடுகளாக அமைகின்றன. 2002 ஆம் ஆண்டில் 28 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

இந்நிறுவனம் தனியாகவும், பிற நிறுவனங்களோடு இணைந்தும் ப கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. நிறுவனத்தில் இப்போது 2

அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. இவ்வறக்கட்டளைப் பொறுப்புகள் கல்விசார் அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு அறக்கட்டளைப் பொழிவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் இதுவரை 15 பொழிவுகள் நடைபெற்றுள்ளன. இந்நிறுவனத்தில் நன்கொடை மூலம் கீழ்க்கண்ட நான்கு புதிய அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன:-

1. தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறக்கட்டளை
2. பெரியார் நாகம்மை அறக்கட்டளை
3. பெரியார் மணியம்மை அறக்கட்டளை
4. முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அறக்கட்டளை

தற்போது இந்நிறுவனத்தில் உள்ள நூலகத்தில் 71,000 நூல்கள் உள்ளன. 25,000 நூல்களைக் கணினி மூலம் அட்டவணை இடும் பணி டெல்லியில் உள்ள டெல்நெட் (Delnet) என்ற நிறுவனத்துடன் இணைந்து செய்து முடிக்கப்பட்டுள்ளது. தொடர் நிகழ்வாகச் சென்னை அறிவியல் நகரம் சிறப்பு நல்கையாக வழங்கிய ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் தொகை மூலம் இந்நிறுவன நூலகத்திலுள்ள மேலும் 25,000 நூல்களைக் கணினியில் உள்ளீடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1971 ஆம் ஆண்டு முதல் 'தமிழியல்' (அரையாண்டு இதழ்) இதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இறுதியாக வந்த இதழ் 62 ஆகும். நடப்புப் பருவத்தில் இரண்டு இதழ்கள் வெளிவந்துள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1987 ஆம் ஆண்டு முதல் 'செய்திக் கதிர்' எனும் காலாண்டிதழைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் வழி நிறுவனத்தின் நடப்புகளை உலகறியச் செய்யும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழ்நாடு அரசு சட்டம் 9/1982-இன்படி உருவாக்கப்பெற்ற தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் மொழி, பண்பாடு, வரலாறு முதலிய தமிழ் சார்ந்த பொருண்மைக்கு உயரிய ஆய்வு மையமாக விளங்குகின்றது. பல்வேறு திட்டங்களின் மூலமும், ஆய்வுகளின் மூலமும் தமிழ் ஆய்வியலை வளர்ச்சி பெறச் செய்து, தமிழ் மொழியைப் பல்துறை ஆய்வுகட்குப் பயன்படுத்துதற்கேற்பச் செம்மைப்படுத்துதலும் இதன்



நோக்கங்களாக அமையும். இப்பல்கலைக்கழகமானது கலை, பண்பாடு, கூத்து, சிற்பம், கட்டடவியல், இலக்கியம், இலக்கணம், மொழியியல், வரலாறு, சமயம், நில அறிவியல், சித்த மருத்துவம் போன்ற துறைகளில் பல அரிய ஆராய்ச்சிப் பணிகளைச் செய்து வருகின்றது.

இப்பல்கலைக்கழகம் ஐந்து புலங்களையும், அவற்றின் கீழான 22 தனித் துறைகளையும், தனியே செயல்படும் அச்சகம், பதிப்புத் துறை, நூலகம், அருங்காட்சியகம் மற்றும் களஞ்சியம், அகராதி ஆகிய திட்டங்களையும் உள்ளடக்கிச் செயல்பட்டு வருகிறது.

டிடிபி ஆப்செட் அச்சு போன்ற நவீன வசதிகளுடன் கூடிய அச்சகம் ஒன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் 2002-2003ஆம் ஆண்டில் மொத்தம் 25 நூல்கள் வெளியிடப்பட்டு ரூ.29,35,097/- மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2003-2004ஆம் ஆண்டில் 25 நூல்கள் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

செய்தி சேகரிப்பிலும், செய்தி மீட்டுருவாக்கத்திலும் பயன்படத்தக்க அதிநவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம், உயர்நிலை நூலகங்களில் ஒன்றாக வைத்து எண்ணத்தக்கதாகும். நகலெடுத்தல், இணையதள அமைப்பு, கணினி வசதி போன்றவையும் நூலகத்தில் உள்ளன. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக மானியக் குழு ரூ.20.00 இலட்சம் நிதியைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு வழங்கியது. இந்நிதியிலிருந்து இக்கல்வியாண்டில் 10,657 புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன.

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து ரூ.53.00 இலட்சமும், தமிழ்நாடு அரசின் பங்காக ரூ.17.66 இலட்சமும் மகளிர் விடுதி, கலைப்புலம் மற்றும் அறிவியல் புலக் கட்டடங்கள் கட்ட, கட்டட நல்கையாகப் பெறப்பட்டுள்ளது. மகளிர் விடுதி மற்றும் அறிவியல் கட்டடத்தின் முதல் தளம் கட்டப்பட்டுப் பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வியின் அங்கமாக இணைய பல்கலைக் கழகம் விளங்குகிறது.

பல்கலைக்கழக நல்கைக் குழு மற்றும் பிற நல்கை நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏறக்குறைய 22 ஆய்வுத் திட்டங்கள் ரூ.51,33,100/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு இப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

2002-2003ஆம் ஆண்டில் கல்லூரி, பல்கலைக்கழகங்களின் ஆசிரியர்கட்கான புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நான்கு துறைகளால் நடத்தப்பட்டன. மேலும் இவ்வாண்டில் இரண்டு வகுப்புகள் நடத்தப் பெறவுள்ளன.

இந்தியப் புவியியல் கழகமும், தொழில் மற்றும் நில அறிவியல் துறையும் இணைந்து உலகளாவிய அறிஞர்களைக் கொண்டு உலகமயமாதல் என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்றை 23-8-2002 முதல் 25-8-2002 வரை நடத்தியது.

சித்த மருத்துவத் துறையும், தொழில் மற்றும் நில அறிவியல் துறையும் இணைந்து மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நிதி உதவியுடன் சித்த மருத்துவம் என்னும் பொருண்மையில் கருத்தரங்கம் ஒன்றை 9-12-2002 மற்றும் 10-12-2002 ஆகிய நாட்களில் நடத்தியது.

பல்கலைக்கழகத்தில் 45 அறக்கட்டளைகள் ரூ.93.41 இலட்சம் மதிப்பீட்டில் இயங்கி வருகின்றன. இவ்வாண்டில் மூன்று அறக்கட்டளைகள் ரூ. 3.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டன. இத்தொகை மூலம் வரும் வட்டியைக் கொண்டு சொற்பொழிவுகள், மாநாடுகள் போன்றவை தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. மகாகவி பாரதியார் மற்றும் திரு. ஏ.டி. பன்னீர்செல்வம் அறக்கட்டளைகளின் வாயிலாகக் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஆய்வியல் நிறைஞர்/முனைவர் பட்ட மாணவர்களுக்கு ஆய்வு உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில், ஆய்வு நோக்கில் பிற துறை ஆய்வுகளை அகலப்படுத்துதல் எனும் அணுகுமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. 113 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். வரும் ஆண்டில் மாணவர்கள் சேர்க்கை மேலும் உயரும். முனைவர் பட்டப்படிப்பில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

பின்வரும் 5 துறைகளில் முதுகலைப் பட்டப் படிப்பு 2002-2003 ஆம் கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது:

1. இலக்கியம்
2. தத்துவம்
3. சிற்பம்
4. மொழியியல்
5. ஓலைச்சுவடி (சுவடிப்புலம்)



126 மாணவர்கள் மேற்கூறிய ஐந்து துறைகளிலும் சேர்ந்துள்ளனர். 22-1-2003 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 36 முனைவர் பட்ட ஆய்வாளர்களும், 63 ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்களும் பட்டங்களைப் பெற்றனர்.

இப்பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள் துறை தமிழ் மொழிப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. இவ்வாண்டு இ.ஆ.ப. அலுவலர்களுக்கு ஒரு தமிழ்ப் பயிற்சி வகுப்பும், உலகத் தமிழாசிரியர்கட்கு மற்றொரு பயிற்சி வகுப்பும் நடத்தப்பெற்றன.

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

தமிழ் மொழி வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் அடிப்படையான பணிகளில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி தொகுத்து வெளியிடுதலும் சிறந்ததொரு பணியாகும். அவ்வகையில், விரிவான சொற்பிறப்பியல் பேரகரமுதலியைப் பன்மடலங்களில் வெளியிடுவது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் ஆக்கமும் நோக்கமும் ஆகும். இருமொழிப் பேரகரமுதலியான இதில் ஒவ்வொரு சொல்லுக்கும் எடுத்துக்காட்டுகளுடன் உரிய விளக்கமும், செந்தமிழ்ச் சொல்லாட்சியும், வேரும் வரலாறும் அளிக்கப்படுதலால், தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயனளிக்கும் சிறந்த கருவி நூலாகவும், எல்லோருக்கும் பயன்படும் பொது வகை அகராதியாகவும் அமைந்திருப்பது இதன் தனிச் சிறப்பாகும். தமிழ் மொழி வளத்தை உலகிற்குக் காட்டுவதோடு மட்டுமின்றி தனித்தமிழார்வலர்களுக்குப் பயன்படும் வகையிலும் இப்பேரகரமுதலியில் தமிழ்ச் சொற்களும், அயற் சொற்களும் பிரித்துக் காட்டப்படுகின்றன. தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், இலக்கணம் மற்றும் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களும் சான்றுகளும் தேவையான இடங்களில் பட விளக்கங்களும் இடம்பெற்றிருப்பது இப் பேரகரமுதலிக்கு அணி சேர்க்கும் சிறப்புக்கூறுகளுள் சிலவாகும்.

இந்திய மொழிகளிலேயே 31 பகுதிகளைக் கொண்ட விரிவானதும் தனிச் சிறப்பு வாய்ந்ததுமான சொற்பிறப்பியல் பேரகரமுதலி இவ்வியக்ககத்தால் வெளியிடப்பெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் உயிரெழுத்துகள் வரிசையில் 3 பகுதிகளும், உயிர்மெய்யெழுத்துகள் வரிசையில் 3 பகுதிகளும் வெளிவந்துள்ளன. எஞ்சிய 25 பகுதிகளையும் நான்காண்டுகால வரம்பெல்லைக்குள் தொகுத்து வெளியிடும்பொருட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பணி

முடுக்கிவிடப்பட்டுள்ளது. அதன் விளைவாய் 6 பகுதிகளை ஒரு சேர வெளியிடும் நோக்கில் தொகுப்புப் பணி முடிக்கப் பெற்று தற்போது வல்லுநர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது.

**புதிய திட்டங்கள்**

2003-2004 ஆம் ஆண்டில் உயிர்மெய்யெழுத்துகள் வரிசையில் மேலும் 6 பகுதிகளைத் தொகுத்து முடித்து வெளியிடுதல், பேரகாமுதலி 6 பகுதிகள் தொகுத்தல், கணியச்சு 57 நாட்கள் பணிப்பட்டறை நடத்துதல், அறைகலன்கள் வாங்குதல், திட்டப் பயன்பாட்டிற்கு நூல்கள் வாங்குதல் மற்றும் இணைய வசதி அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## தொல்லியல் துறை

தமிழகத்திலுள்ள நினைவுச் சின்னங்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் சீரமைத்துப் பாதுகாப்பதையும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசால், தொல்லியல் துறையானது 1961 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. பின்னர் இத்துறையின் செயல்பாடானது கல்வெட்டுகளைப் படியெடுத்து, அச்சிட்டு, நூல் வடிவில் வெளிக்கொணர்தல், மாவட்ட அகழ்வைப்பகங்கள் அமைத்தல், தொன்மை வாய்ந்த கலைப் பொருட்களை வேதியியல் முறையில் பாதுகாக்க வேதியியல் கூடம் அமைத்தல், தொன்மையான சிறப்பு வாய்ந்த கலைப் பொருட்களைப் பதிவு செய்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்ளும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சமயஞ்சாராத கட்டடங்கள் உட்பட 86 வரலாற்று நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. பதினோராவது நிதிக் குழு ஒதுக்கீட்டில் புராதனக் கட்டடங்கள் பாதுகாப்பிற்கென ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புராதனக் கட்டடங்கள் பாதுகாப்பிற்காக 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.15.58 இலட்சமும், 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.170.00 இலட்சமும் தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துறையானது வரலாற்றுச் சிறப்புமிக்க 25 இடங்களில் அகழாய்வுப் பணி மேற்கொண்டுள்ளது.



பன்மொழிகளில் பல்வேறு எழுத்துகளில் அமைந்த கல்வெட்டுகளில் சுமார் 8000 கல்வெட்டுகள் இதுகாறும் கல்வெட்டுப் பிரிவால் படியெடுக்கப்பட்டு, அவற்றுள் 2000 கல்வெட்டுகள் 19 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. ஆணையரகத்தில் செயல்பட்டுவரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்களுக்குக் கல்வெட்டு மற்றும் தொல்லியல் முதுநிலைப் பட்டயப் பயிற்சி அளித்து வருகிறது. மாணவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.500/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், திருவாங்கூர் மற்றும் புதுக்கோட்டை கல்வெட்டுத் தொகுதிகள் ஆகியவற்றில் காணப்பெறும் உயிரெழுத்துகளில் தொடங்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய பொருள் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இத்துறையின்கீழ் இரண்டு வேதியியல் பிரிவுகள், ஒன்று சென்னையிலும், மற்றொன்று மதுரையிலும் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகளில் அகழாய்வுகளில் கிடைக்கும் தொல்பொருட்களை வேதியியல் முறையில் சுத்தம் செய்து பாதுகாக்கும் பணியும் மற்றும் அகழ்வைப்பகங்களிலுள்ள தொல்பொருட்களைச் சுத்தம் செய்யும் பணியும் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் மருத்துவம், கணிதம், சோதிடம், இயல் மற்றும் இலக்கியம் தொடர்பான 72,300-க்கும் மேற்பட்டவான ஓலைச்சுவடிகள் மற்றும் இதாச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

'பழம்பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் பதிவுச் சட்டம், 1972'-ன் படி மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் இத்துறையின் கட்டுப்பாட்டில் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இரு பதிவு அலுவலர் அலுவலகங்கள் பழம்பொருட்களைப் பதிவு செய்வதற்காகச் செயல்பட்டு வருகின்றன. இங்கு நூறாண்டுகளுக்கு மேற்பட்ட கலைப்பொருட்கள் மற்றும் தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க

பஞ்சலோகச் சிலைகள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்படாமல் பாதுகாப்பதற்கும் ஏற்ற வகையில் கலைப் பொருட்களைப் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப் பெறுகின்றன.

**புதிய திட்டங்கள்**

*2003-2004* ஆம் ஆண்டில் தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் பற்றிய நிழற்படங்கள் மற்றும் குறிப்புகளை ரூ.4.00 இலட்சம் செலவில் கணினி மற்றும் குறுந்தகடுகளில் மாற்றிப் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் வரலாற்றுச் சிறப்பு மிக்க மரக்காணத்தில் ரூ.3.50 இலட்சம் செலவில் அகழாய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## அருங்காட்சியகங்கள்

சென்னை அரசு அருங்காட்சியகம், நாட்டிலுள்ள மாநில அருங்காட்சியகங்களுள் பழமை வாய்ந்த பெரிய அருங்காட்சியகமாகும். கலையியல், தொல்லியல், மானிடவியல், இயற்கை அறிவியல், புவியியல் மற்றும் சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக் கூடங்களோடு சுட்டுப் பொருட்களைத் திரட்டுவதிலும் இவ்வருங்காட்சியகம் புகழ் பெற்றுத் திகழ்கிறது. தேசிய மாபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக இது அமைந்துள்ளதோடு தொல் பழங்காலப் பொருட்களையும் பேணிக்காக்கிறது. சென்னை அருங்காட்சியகம் துவக்கப்பட்டு 150 ஆண்டுகள் 2001 ஆம் ஆண்டில் நிறைவடைந்தது. நிறைவு விழாவின் ஒரு பகுதியாக 2001, டிசம்பர் திங்கள் 18 முதல் 20 ஆம் தேதி வரை 'கல்லாலான கலைப் பொருள்கள் பாதுகாப்பு குறிப்பாக சுண்ணாம்புக் கல்லாலான கலைப் பொருள்கள் பாதுகாப்பு' என்ற பொருளில் பன்னாட்டறிஞர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கு நடத்தப்பட்டது. 150 ஆண்டுகளில் நடத்தப்பட்ட முதல் பன்னாட்டுக் கருத்தரங்கு இதுவேயாகும்.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்**

தற்பொழுது 20 மாவட்ட அருங்காட்சியகங்கள் புதுக்கோட்டை, சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, உதகமண்டலம், கடலூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருட்டிணகிரி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய நகரங்களில்



இயங்கிவருகின்றன. அனைத்து மாவட்ட அருங்காட்சியகங்களும் பல்நோக்கு கொண்ட அருங்காட்சியகங்களாகத் திகழ்கின்றன.

பதினோராவது நிதிக்குழு ஒதுக்கீட்டில் பண்பாட்டுப் பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாக்க ரூ.4.60 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டது. பண்பாட்டுக் கட்டடங்களைப் பாதுகாக்கவும், வளாக நிலத்தைச் செம்மைப்படுத்தி அமைக்கவும், அருங்காட்சியகக் காட்சிப் பொருட்களை நவீன பன்னாட்டுக் காட்சியமைப்பு முறையில் காட்சிப்படுத்தவும் தேவையான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை அரசு அருங்காட்சியகத்தின் 151 ஆம் ஆண்டு விழாக் கொண்டாட்டம் தொடர்பாகப் பண்பாட்டுப் பாரம்பரியக் கட்டடங்களைப் பாதுகாத்தல் மற்றும் அருங்காட்சியகத்தை மேம்படுத்துதல் தொடர்பாகப் பின்வரும் பணிகள் முழுவீச்சில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன:—

1) தமிழ்நாட்டில் கைவினைத் தொழில்கள் மற்றும் தொழில்கள் முன்னேற்றம் பற்றிய காட்சிக் கூடம் அமைத்தல்.

2) படிமக் கூடம், நாணயவியல் கூடம், வேதியியல் பாதுகாப்புக் கூடம் ஆகியவற்றைப் புத்தாக்கம் செய்தல் மற்றும் முப்பரிமாண முழுப்படக் காட்சிக்கூடம் அமைப்பதற்கான அடிப்படைப பணிகளை நிறைவேற்றுதல்.

3) அருங்காட்சியக வளாக நிலத்தைச் செம்மைப்படுத்தி அமைத்தல்.

4) அருங்காட்சியகத்திற்கு முன்புள்ள சுற்றுச்சுவரைத் தொல்லியல் முறை நுட்பத்துடன் புதுப்பித்தல்.

5) மின்னணு முறையில் கண்காணிப்பு வளையம் அமைத்தல்.

*2002-2003* ஆம் ஆண்டில் திங்கள் சொற்பொழிவுகளும், பன்னாட்டு மகளிர் அமைப்பு நல்கைச் சொற்பொழிவும், பல குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன. பன்னாட்டு உலோகக் கலைப் பொருட்கள் பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றது.

**புதிய திட்டங்கள்**

*2003-2004* ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் சென்னை அருங்காட்சியக புவியியல் கூடம் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

[2003 ஏப்ரல் 4

## கலை—பண்பாட்டு இயக்ககம்

கலை—பண்பாட்டு இயக்ககம் எனும் தனி இயக்ககம் டிசம்பர், 1991-ல் அரசால் கலைக்கல்வி நிறுவனங்களையும், கலை அமைப்புகளையும் தனியே ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து உருவாக்கப்பட்டது. கலை வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்துவது இதன் நோக்கமாகும். இவ்வியக்கக அமைப்பைப் பணியாட்சி அலுவலகங்கள், கலைக்கல்வி நிறுவனங்கள், கலை வளர்ச்சி நிறுவனங்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். பணியாட்சி அலுவலகங்களான கலை—பண்பாட்டு இயக்ககம் சென்னையிலும், மண்டலக் கலை—பண்பாட்டு மையங்கள் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களிலும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் கலைப் பணிகளை மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து அரசின் கொள்கைகளை நிறைவேற்ற துணை செய்கின்றன. கலைக் கல்வி நிறுவனங்கள் இசை, நாட்டியம், கருவியிசை, நாட்டுப்புறக்கலை, சிற்பக் கலை, பிற கவின்கலைகளைக் கற்பிக்கும் வகையில் அரசு இசைக் கல்லூரிகள் நான்கு இடங்களிலும், மாலைநேர இசைக் கல்லூரி சென்னையில் நான்கு மையங்களிலும் மதுரையில் ஒரு மையத்திலும், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 17 இடங்களிலும், அரசு கவின்கலைக் கல்லூரிகள் சென்னை, கும்பகோணம் ஆகிய இடங்களிலும், அரசு கட்டட—சிற்பக் கலைக் கல்லூரி மாமல்லபுரத்திலும் இயங்கி வருகின்றன. கலை வளர்ச்சி நிறுவனங்களான தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக குழு ஆகியவை சென்னையிலும், தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்கள் மாநிலத்தில் 35 இடங்களிலும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்களும் செயல்படுகின்றன.

### மண்டலக் கலை - பண்பாட்டு மையங்கள்

தமிழ்நாட்டில் மண்டலக் கலை—பண்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் இயங்கி வருகின்றன. கலை—பண்பாட்டு மையங்கள் மாவட்ட அளவில் உள்ள மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட இசைப் பள்ளிகள் மற்றும் சவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றின் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து, வழிகாட்டி, ஆய்வு செய்து அரசின் கொள்கைகளை நிறைவேற்றி வருகின்றன. மண்டலக்



2003 ஏப்ரல் 4]

கலை—பண்பாட்டு உதவி இயக்குநர்களைத் தலைமை அலுவலர்களாகக் கொண்டு இயங்கும் இம்மையங்கள் கலை—பண்பாட்டுத் துறை சார்பில் தனித்தும், மாவட்டக் கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் தலைமையில் இயங்கும் தென்னகப் பண்பாட்டு மையம் மற்றும் தனியார் கலை அமைப்புகளுடன் இணைந்தும் கலை விழாக்களையும், கலைப் பயிற்சிகளையும் அளிக்கின்றன. தமிழ்நாட்டின் பாரம்பரியப் பண்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆர்வத்தைப் பெருக்குதல், தெரு நாடகங்கள் உள்ளிட்ட பண்பாட்டு மரபுகளுக்குப் புத்துயிர் ஊட்டுதல் ஆகிய பணிகளை கலை—பண்பாட்டு மையங்கள் மாவட்டக் கலை மன்றங்கள் மூலமும், இதர கலை அமைப்புகளுடன் இணைந்தும் செயல்படுத்தி வருகின்றன. இப்பணிக்காக அரசானது 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.66.00 இலட்சம் நிதியை ஒப்பளித்துள்ளது.

மாவட்டங்களில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களைத் தெரிவு செய்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப் பெறுவதற்காக அரசானது 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.3.625 இலட்சம் தொகை வழங்கியுள்ளது.

மாவட்டந்தோறும் பல்வேறு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் 2002-2003 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதற்கான பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் இயங்கும் மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## கலைக்கல்வி நிறுவனங்கள்

### இசைக் கல்லூரிகள்

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய நான்கு இடங்களில் அரசு இசைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. சென்னையில் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசைவாக்கம் ஆகிய நான்கு இடங்களிலும், மதுரையில் ஓர் இடத்திலும் மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு இசைக் கல்லூரிகளில் மூன்று ஆண்டுப் பட்டயப் படிப்புகள் நடைபெறுகின்றன. திருவையாறு அரசு இசைக்கல்லூரியில் மட்டும் பட்டயப் படிப்புடன் மூன்று ஆண்டு இளங்கலை இசை பட்டப்

படிப்பும் நடைபெறுகின்றன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிகளில் மட்டும் ஓர் ஆண்டு இசை ஆசிரியர் பயிற்சிப் பட்டயப் படிப்பு உள்ளது. மாலை நேர இசைக் கல்லூரி மையங்களில் ஈராண்டுப் படிப்பு முடித்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**இசைப் பள்ளிகள்**

மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை, சேலம், திருவாரூர், விழுப்புரம், கடலூர், கரூர், பெரம்பலூர், தூத்துக்குடி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருட்டிணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய 17 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, பரத நாட்டியம், நாதசுரம், தவில் மற்றும் தேவாரம் ஆகிய பாடப்பிரிவுகளில் மூன்று ஆண்டுச் சான்றிதழ் படிப்புகள் நடைபெறுகின்றன.

**கவின் கலைக் கல்லூரிகள்**

சென்னை, கும்பகோணம் ஆகிய இடங்களில் அரசு கவின்கலைக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை கவின்கலைக் கல்லூரியில் சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு, துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு, காட்சித் தொடர்பு வடிவமைப்பு, வண்ணக்கலை, சிற்பக்கலை, பதிப்போவியம் ஆகிய பிரிவுகளில் நான்கு ஆண்டு கால இளங்கலைப் பட்டப்படிப்பும், வண்ணக்கலை, காட்சித் தொடர்பு வடிவமைப்பு, சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு, துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு ஆகிய பிரிவுகளில் இரண்டு ஆண்டுகால முதுகலைப் பட்டப்படிப்பும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் சேர்வதற்கான கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும். இக்கல்லூரி 152 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பெருமைக்குரியது. இக்கல்லூரியின் பாடத் திட்டங்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும். கும்பகோணம் கவின்கலைக் கல்லூரியில் வண்ணக்கலை, காட்சித் தொடர்பு வடிவமைப்பு, சிற்பக்கலை ஆகிய மூன்று பிரிவுகளில் ஐந்தாண்டுப் பட்டப்படிப்பும், வண்ணக்கலை, சிற்பக்கலை ஆகிய பிரிவுகளில் இரண்டு ஆண்டு முதுகலைப் பட்டப்படிப்பும் வழங்கப்படுகின்றன. இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் சேர்வதற்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி



ஆகும். இப்பாடத்திட்டங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும்.

**கட்டட - சிற்பக் கலைக் கல்லூரி**

மாமல்லபுரத்தில் அரசு கட்டட — சிற்பக் கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் 2000—2001 ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுப் பட்டப்படிப்பு தொடங்கப்பெற்று நடைபெற்று வருகின்றது. மரபு கட்டடக் கலைப் பிரிவில் தொழில்நுட்பவியல் இளங்கலைப் பட்டமும், மரபு சிற்பக்கலை, மரபு ஓவியக்கலை—வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின்கலை இளங்கலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன.

**திருச்சிராப்பள்ளி, கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அரசு நிதியுதவி பெறும் கல்லூரியாகும். இக்கல்லூரியின் நிருவாகம் கலை—பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உளளது. இக்கல்லூரிக்கான நிதியுதவி கல்லூரிக் கல்வி இயக்ககத்தால் வழங்கப்படுகிறது. இக்கல்லூரியில் பின்வரும் பாடபுலங்களில் மூன்று ஆண்டுப் பட்டப்படிப்பு நடத்தப்பட்டு வருகின்றது:—

1. பரதநாட்டியம்
2. குரலிசை
3. வயலின்
4. வீணை
5. மிருதங்கம்

**தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு**

கவின்கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், பரப்பவும இக்கலைகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களை ஊக்குவிக்கவும், புதுடில்லி லலித்கலா அகாதெமியுடன் ஒருங்கிணைந்து செயல்படவும் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு அரசால் 1975-ல் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் மாநில அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துகிறது.

[2003 ஏப்ரல் 4

மரபு வழி, புதுப்பாணி கலைப்பிரிவுகளைச் சார்ந்த புகழ் பெற்ற ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்கள் அவரவர்கள் துறைகளில் புரிந்துவரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் "கலைச்செம்மல்" விருதுகள் வழங்கப்படுகின்றன. விருதாளர் ஒவ்வொருவருக்கும் பாராட்டிதழுடன் ரூ.20,000/- விருதுத் தொகையாக வழங்கப்படுகிறது. மரபு வழிப் பிரிவில் 5 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும், புதுபபாணிப் பிரிவில் 30 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருது இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் மரபு வழி, புதுப் பாணி கலைக்காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, ஓவிய சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான கலைக்காட்சி விருதுகளாக, மரபு வழிப் பிரிவில் ரூ.5,000/- வீதமும், புதுப பாணிப் பிரிவில் 30 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுமுடைய மூத்த கலைஞர்கள் பங்கு கொள்ளும் பிரிவில் ரூ.15,000/- வீதமும், 30 வயதுக்குட்பட்ட இளங்கலைஞர்கள் பங்கு கொள்ளும் பிரிவில் ரூ.5,000/- வீதமும் வழங்கப்படுகிறது. மரபு வழிக் கலைக்காட்சிகளில் 43 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கும், புதுப் பாணிக் கலைக்காட்சிகளில் 234 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கும் கலைக்காட்சி விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்கள் அவரவர்களது கலைப்படைப்புகளடங்கிய கலைக்காட்சிகளைத் தனியாகவோ அல்லது குழுவாக இணைந்தோ நடத்திட, கலைக்காட்சி ஒன்றுக்கு ரூ.5,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. 111 கலைஞர்கள் தனிநபர் கலைக்காட்சி நடத்துவதற்காகவும், 10 குழுக்கள் கூட்டுக் கலைக்காட்சி நடத்துவதற்காகவும் இதுவரை நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் மேலும் 16 ஓவிய, சிற்பக் கலைஞர்கள் அவரவர்களது தனிநபர் கலைக்காட்சி நடத்திட நிதியுதவி வழங்கப்படுவதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நுண்கலை பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் முதுகலை மற்றும் இளங்கலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணாக்கர்களுக்கு முறையே ரூ.5,000/- வீதமும் ரூ.3,000/- வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 378 இளங்கலை மாணாக்கர்களுக்கும், 28 முதுகலை மாணாக்கர்களுக்கும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 4]

ஓவிய நுண்கலைக் குழுவின் கலைக்கூடம் உதகமண்டலத்திலும் மற்றொன்று மதுரை கலை-பண்பாட்டு மண்டல மைய உதவி இயக்குநர் அலுவலகத்திலும் இயங்கி வருகின்றன. அக்கலைக்கூடங்களில், தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களின் படைப்புகள் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

"நுண்கலை" என்னும் கலையிதழ் ஓவியநுண்கலைக் குழுவால் வெளியிடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் நுண்கலைச் சிறப்புகளை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் கொண்ட இப்பதிப்பின் 22 இதழ்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

மாவட்டங்களிலுள்ள கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் 6 கலை-பண்பாட்டுத் துறை மண்டல மையங்களுடன் இணைந்து கலைக்காட்சிகள் நடத்திட மண்டலத்திற்கு ரூ.10,000/- வீதம் தொகை வழங்கப்பட்டுள்ளது.

நுண்கலை பயில ஆர்வமுள்ளோருக்காக, "நுண்கலை" பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆர்வலர்கள் இப்பயிற்சி வகுப்பில் மாதம் ரூ.100/- கட்டணம் செலுத்தி சேர்ந்து பயன் பெறலாம். 2002-2003 ஆம் ஆண்டில் இப்பயிற்சி வகுப்பில் 154 ஆர்வலர்கள் சேர்ந்துள்ளனர்.

## தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் 1979 ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப் பெற்று, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஐந்து வயதிலிருந்து பதினாறு வயதுக்குட்பட்ட சிறார்களுக்குக் கலைப் பயிற்சி அளிப்பதும், கலைத்திறமைகளை மேம்படுத்துவதும் இதன் நோக்கங்களாகும்.

தமிழ்நாட்டில் 35 இடங்களில் சவகர் சிறுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. 23 இடங்களில் மாவட்டச் சவகர் சிறுவர் மன்றங்கள் எனவும், 10 இடங்களில் சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் எனவும், இரு இடங்களில் சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் எனவும் இவை இயங்கி வருகின்றன. இம்மன்றங்கள் அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன.

சவகர் சிறுவர் மன்றங்களில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், [2003 ஏப்ரல் 4
கைவினை, குரலிசை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா,
கராத்தே, கணினி, ஆர்மோனியம்-கீபோர்டு, வீணை, அயல்முரசு
(டிரம்ஸ்), அயல்முழவு (பேண்ட்ஸ்), தையல், ஓவியம், திரை அச்சு,
புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பம் ஆகிய இருபது கலைகளில்
கீழ்க்கண்டவாறு பகுதி நேரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னையில்
16 கலைகளில் வாரம் ஆறு நாட்களிலும், மாவட்டச் சவகர் சிறுவர்
மன்றங்கள், விரிவாக்க மையங்களில் ஏதேனும் நான்கு கலைகளில்
வாரத்தில் மூன்று நாட்களிலும், ஊரக மையங்களில் இரண்டு
கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும் மாலை நேரத்தில்
பயிற்சியளிக்கப்படுகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்துச் சிறுவர்
மன்றங்களிலும் மொத்தம் 8000 சிறுவர் சிறுமியர் பயிற்சி பெற்று
வருகின்றனர். இரு ஊரக மையங்கள் நீங்கலாக 33 சவகர் சிறுவர்
மன்றங்களில் சிறுவர் நூலகங்கள் செயல்படுகின்றன.

2002-2003 ஆம் ஆண்டில் சென்னை சவகர் சிறுவர் மன்றத்தில்
நடத்தப்பட்ட கோடைக்கால இலவசப் பயிற்சியில் 1412 சிறார்கள்
பயன் பெற்றனர். மாநில அளவில் உதகமண்டலம் நகரில் 100
சிறார்களுக்கு 2002, மே திங்களில் எட்டு நாட்கள் கோடைக்காலச்
சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தஞ்சாவூர் சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த மூன்று வறிய
நிலையிலுள்ள சிறார்களுக்கு 2002 மே திங்களில் அரசின் செலவிலேயே
இலவசமாக ஆடல் அரங்கேற்றம் நடத்தப்பட்டது. 2002, ஜூன் திங்களில்
ஐதராபாத்தில் நடத்தப்பெற்ற கலை பரிமாற்ற நிகழ்ச்சியில்
தமிழ்நாட்டிலிருந்து ஆறு சிறார்களும், புதுதில்லியில் 2002 நவம்பர்
திங்களில் நடத்தப்பெற்ற தேசிய குழந்தைகள் முகாமில் தமிழ்நாட்டைச்
சேர்ந்த 48 சிறார்களும் கலந்து கொண்டனர். 2002 ஆகஸ்டு திங்களில்
கோயம்புத்தூரில் நடத்தப்பட்ட மாநில அளவிலான உடல்திறன்
போட்டியில் 16 சிறார்கள் கலந்துகொண்டு இரு கேடயங்கள் வென்று
வந்தனர். 200.!, நவம்பர் திங்களில் ஐதராபாத், குர்தாஸ்பூர் ஆகிய
நகரங்களில் நடத்தப்பெற்ற தேசிய அளவிலான உடல்திறன்
போட்டிகளில் சவகர் சிறுவர் மன்ற சிறார்கள் 12 பேர் கலந்து
கொண்டனர். மேதகு குடியரசுத் தலைவரின் இளந்திரு விருதுக்குத்
(Balshree Award) தமிழகத்தைச் சேர்ந்த 56 சிறார்கள் 2002, அக்டோபர்
திங்களில் திருவனந்தபுரத்தில் நடத்தப்பட்ட தென் மண்டலப்
போட்டியிலும், அவர்களில் தெரிவு செய்யப்பட்ட 6 சிறார்கள்



2003 ஏப்ரல் 4]
புதுதில்லியில 2002 டிசம்பர் திங்களில் நடத்தப்பட்ட தேசிய
அளவிலான தெரிவிலும் கலந்து கொண்டனர். புதுதில்லியில் 2002
டிசம்பர் திங்களில் நடத்தப்பெற்ற தேசிய சுற்றுச்சூழல் மாநாட்டில்
தமிழ்நாடு சிறுவர் மன்றங்களிலிருந்து 14 சிறார்கள் கலந்து கொண்டு
தங்கள் அறிவியல் திறமையை வெளிப்படுத்தினர். ஆவடியில் 2002
டிசம்பர் திங்களில் நடத்தப்பெற்ற மாநிலச் சிலம்பம் போட்டியில்
சென்னை சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 16 சிறார்கள்
கலந்துகொண்டு 15 பரிசுகளை வென்று வந்தனர். ஜனவரி 2003-இல்
இராஜபாளையம் நகரில் நடத்தப்பட்ட மாநிலச் சிலம்பம் போட்டியில்
சென்னை சவகர் சிறுவர் மன்றத்திலிருந்து 8 சிறார்கள் கலந்து
கொண்டனர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

இந்திய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாதெமியின்
நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்துவதற்காகவும், தொன்மை
வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும் தமிழக
அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு சங்கீத
நாடக சங்கம், 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக
மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. இந்நிறுவனம்
மாநில அரசு வழங்கும் மானியத்தொகை மூலம் பல்வேறு
திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் மாநிலங்களுக்கிடையே
கலைக்குழுக்களைப் பரிவர்த்தனை செய்தல், நலிந்த நிலையில் வாழும்
புகழ்பெற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த
கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதி வழங்குதல்,
தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின் மூலம் கலை
நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து, அதன் மூலம் திறமைமிக்க
புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவு அளித்தல், கலைத்துறையின் மேம்பட்ட
வளர்ச்சிக்குச் சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்குக் "கலைமாமணி"
என்ற மாநில விருது வழங்கிச் சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச்
சித்தரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும்
தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை
வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நூல் வெளியீட்டு
நல்கை வழங்குதல், கலைப் பெருமேதைகளின் நினைவு விழாக்களை
நடத்தும் தொண்டு கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல்,
மறைந்துவரும் தொன்மைச் சிறப்புமிக்க கலை அம்சங்களை வருங்காலச்

சந்ததியினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழிக் கிராமியக் கலைகள் மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய முக்கியப் பணிகளை இயல் இசை நாடக மன்றம் செம்மையுறச் செய்து வருகின்றது.

கலைத் துறையில் செயற்கரிய சேவை செய்து புகழ்பெற்ற கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பு செய்யும் முகத்தான் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கலைமாமணி விருது வழங்குகிறது. இதுவரை 1170 கலைஞர்களுக்குக் "கலைமாமணி" விருது வழங்கப்பட்டுள்ளது. கலைமாமணி விருது வழங்கும் விழாவில் இதுகாறும் 256 மறைந்த புகழ்பெற்ற கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. "கலைமாமணி" விருது வழங்கும் விழாக்களில் ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற நலிந்த நிலையில் வாழும் 181 கலைஞர்களுக்கு பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் 1974-75 ஆம் ஆண்டு முதல் 1986-87 ஆம் ஆண்டு முடிய ரூ.1,000/- வீதம் 147 கலைஞர்களுக்கும், 1990-91 ஆம் ஆண்டு முதல் 1993-94 ஆம் ஆண்டு முடிய ரூ.5,000/- வீதம் 17 கலைஞர்களுக்கும், 1994-95 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு முடிய ரூ.10,000/- வீதம் 13 கலைஞர்களுக்கும், 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.15,000/- வீதம் 4 கலைஞர்களுக்கும் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும், மாநிலங்களுக்கிடையே கலை—பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் இந்திய அரசின் சார்பில் புதுதில்லி, சங்கீத நாடக அகாதெமியும், தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் இணைந்து மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை தமிழகத்திற்கு 79 வெளி மாநிலக் கலைக்குழுக்கள் வருகை புரிந்துள்ளன. 81 தமிழகக் கலைக்குழுக்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்றுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் தமிழகக் கலைக்குழுக்களை இலட்சத்தீவுக்கு அனுப்பி கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும் அஸ்ஸாம் மாநில கலைக்குழுவை வரவேற்றுத் தமிழ்நாட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.



வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/- நிதியுதவியாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 498 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதோடு, இதுவரை 6063 கலைஞர்கள் நிதியுதவி பெறும் வகையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்கும் குடும்பப் பராமரிப்பு நிதி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 1986 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையில் ரூ.2,000/- வீதம் வழங்கிய வகையில் 88 குடும்பங்களும், 1992 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரையில் ரூ.3,000/- வீதம் வழங்கிய வகையில் 77 குடும்பங்களும், 1998 ஆம் ஆண்டு முதல் நாளது வரையில் ரூ.5,000/- வீதம் வழங்கிய வகையில் 75 குடும்பங்களும் பயன்பெற்றுள்ளன. இதுவரை மொத்தம் 240 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

வாய்ப்பாட்டு மற்றும் கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைத்துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கி வரும் கலை நிறுவனங்களுக்கு மன்றம் தேவையான நிதியுதவி செய்து அதன் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் விளைவாக 34 கலைஞர்கள் அதற்கென அமைக்கப்பெற்ற வல்லுநர் குழுக்களால் தேர்வு செய்யப்பெற்றுத் தமிழகத்தில் நன்கு இயங்கும் 14 கலை நிறுவனங்களின் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 1631 இளம் கலைஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

கலை நூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 103 நூல்கள் மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் உருவாக்கி மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன;

ஊரகக் கலைஞர்களுக்கும், கலைக்குழுக்களுக்கும் இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கும் ரூ.750/- தொகையும், ஒவ்வொரு கலைக்குழுவிற்கும் ரூ.2,500/- தொகையும் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை 1425 ஊரகக் கலைஞர்களும்/ கலைக்குழுக்களும் பயன் துய்த்துள்ளனர்.

மறைந்து வரும் நம் மரபு வழிச் சிறப்புமிக்க ஊரகக் கலைகளின் சிறப்பினை தற்போதைய தலைமுறையினர் கண்டுணரும் வண்ணமும், தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வரும் ஊரகக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும் வண்ணமும், மன்றம் ஊரகக் கலை விழாக்களை நடத்தி வருகின்றது. சேலம் மாநகரில் 21-12-2002 அன்று கிராமியக் கலைவிழா மிகச்சிறப்பாக நடத்தப்பெற்றது. அவ்வகையில் சுமார் 100 கிராமியக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 8-2-2003 அன்று நாடகக் கலைமேதைகளின் நினைவு போற்றும் விழா புதுக்கோட்டையில் நடத்தப்பட்டது. சென்னையில் 17-2-2003 முதல் 21-2-2003 வரை முப்பெரும் கலைவிழாவும், 26-3-2003 முதல் 28-3-2003 வரை சலங்கை விழாவும் நடத்தப்பட்டன.

நட்டுவாங்கக் கலைஞர்களை உருவாக்கும் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் 6 பாதநாட்டிய மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு சிறந்த பாதநாட்டிய வல்லுநர் மூலம் மன்ற வளாகத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற மாணவிகள் ஒவ்வொருவருக்கும் படிப்புதவித் தொகையாகத் திங்கள்தோறும் ரூ.250/- வீதமும், ஆசிரியருக்குத் திங்கள்தோறும் மதிப்பூதியமாக ரூ.3,000/- வீதமும் வழங்கப்பட்டது.

நாதசுரம், தவில் கலைப்பிரிவுகளில் இளங்கலைஞர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கும் திட்டத்தின்கீழ் 10 நாதசுவரக் கலைஞர்களும், 1 தவில் கலைஞர்களும் தேர்வு செய்யப்பட்டுக் கலை வல்லுநர்களால் மன்ற வளாகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற நாதசுரம், தவில் கலைஞர்களுக்குப் படிப்புதவித் தொகையாகத் திங்கள்தோறும் ரூ.350/- வீதமும், நாதசுரம், தவில் ஆசிரியர்களுக்குத் திங்கள்தோறும் மதிப்பூதியமாக ரூ.3,000/- வீதமும் வழங்கி இத்திட்டம் கடந்த ஆண்டு செயற்படுத்தப்பட்டது.



2002-2003 ஆம் ஆண்டில் 5 வயது முதல் 15 வயது வரையிலான இசைத் துறையைச் சார்ந்த 22 குழந்தைக் கலைஞர்களும், பரதநாட்டியத் துறையைச் சார்ந்த 20 குழந்தைக் கலைஞர்களும் தேர்வு செய்யப்பட்டு அந்தந்தத் துறையில் தத்தமது திறனை வளர்த்துக்கொள்ள ஊக்குவிக்கும் பொருட்டு இசைத் துறை குழந்தைக் கலைஞர்களுக்கு ஆண்டிற்கு, ஒவ்வொருவருக்கும் ரூ.1,600/- வீதமும், பரதநாட்டியத் துறை குழந்தைக் கலைஞர்களுக்கு ஆண்டிற்கு ஒவ்வொருவருக்கும் ரூ.2,400/- வீதமும் உதவித்தொகை வழங்கப்பட்டது. பல்வேறு கலைப்பணிகளுக்காகத் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மன்றம் நல்கை அவ்வப்போது வழங்கி வருகின்றது.

இயல், இசை நாடக மன்றம் கலை மேதைகளின் நினைவு விழா, நாட்டுப்புறக் கலைவிழா, நாடக விழா, நாட்டிய விழா ஆகிய விழாக்களையும், குற்றாலத்தில் சாரல் விழா போன்ற விழாக்களையும் பல்வேறு அரசுத் துறைகளுடன் இணைந்து நடத்தி வருகின்றது.

### இராக ஆராய்ச்சி மையம்

இராக ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பு தமிழக அரசால் இசையின் வளர்ச்சிகளைப் பற்றிய நுணுக்கமான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற 1992 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இம்மையத்திற்கு ஏற்கெனவே மொத்தம் ரூ.12.00 இலட்சம் நல்கையாக அரசு வழங்கியுள்ளது. 2002—2003 ஆம் ஆண்டில் அரசு ரூ.5.00 இலட்சம் நல்கையாக வழங்கி இராக ஆராய்ச்சி மையத்தை ஊக்குவித்துள்ளது.

கலை—பண்பாட்டு இயக்ககமானது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த 15 அம்சத் திட்டத்தில் தெரிவித்துள்ளபடி தமிழ்நாட்டின் பாரம்பரியப் பண்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆர்வத்தைப் பெருக்குதல் ஆகிய பணியை முனைப்புடன் செயல்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

### புதிய திட்டங்கள்

கணினி வழிப் பாடம் நடத்தக் கணினிகள், இசைக் கருவிகள், அறைகலன்கள், ஒளி அச்சுப் பொறி ஆகியவைகளைப் பல்வேறு நிறுவனங்களுக்கு வாங்குதல், மாணவர்களுக்கு இலவச வரைபொருட்கள் வாங்குதல், பல கலைகளில் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல், அரசு இசைக் கல்லூரி, இசைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி

வழங்குதல், கலை விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களை அனுப்பி கலைபரிவர்த்தனை மேற்கொள்ளுதல், மேடை நாடகங்கள் நடத்தப் பெற்றுச் சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், அரசு இசைக் கல்லூரி, இசைப் பள்ளி மாணவர்களுக்குப் பாடத்திட்டத்தை ஒட்டிய பாடப்புத்தகங்களை அச்சிட்டு வழங்குதல் ஆகியவை 2003—2004ஆம் ஆண்டின் புதிய திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும்.

மேற்கூறப்பட்டுள்ள பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் செம்மையுற நடைமுறைப்படுத்தி தமிழ் மக்களுடைய நாகரிகம், பண்பாடு செழித்தோங்கவும், தமிழ் மொழி தொய்வின்றி வளர்ச்சி பெறவும் இத்துறை இடையறாது பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



# இணைப்பு VI

*(365 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 47

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்க குறிப்பு 2003-2004

### அத்தியாயம்-1

### முன்னுரை

*1.1* உடல் ஆரோக்கியமே பெருஞ்செல்வம். ஆரோக்கியமான உடலில் மட்டுமே தூய உள்ளம் அமையும். ஒரு நாட்டின் மேன்மை அந்நாட்டு மக்களின் அறிவுத்திறனாலும் உடல் ஆரோக்கியத்தாலும் அறியப்படுகிறது. உடல் ஆரோக்கியமற்ற அறிவு சிறிதளவே பயன்தரும். நல்ல ஆரோக்கியமும் அறிவுத்திறனும் இருப்பினும் ஒழுக்கம் இல்லையேல் அது அழிவைத் தரும். ஒருவருக்கு ஆரோக்கியம் என்பது இயற்கையாகவே உடல் ஆரோக்கியத்தையும், உள்ள ஆரோக்கியத்தையும் குறிக்கும். விளையாட்டு ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும், நேர்மையாக செயல்படும் பக்குவத்தையும் கற்றுத் தருவதுடன், வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய மனத் திண்மையையும் அளிக்கிறது. ஒரு முன்னேறிய சமுதாயத்தின் அளவுகோல் சமூக சேவையின் அடிப்படையில் அமையும். பள்ளிப் படிப்பில் சிறப்பு, விளையாட்டு மற்றும் போட்டிகளில் திறமை, மனித நேயத்துடன் சமுதாயத் தொண்டாற்றும் மனநிலை, இரக்க மனப்பான்மை ஒரு மாணவனை முழுமையாக்கும். விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டு, தேசிய மாணவர் படை, நாட்டுநலப் பணித் தொண்டர் இயக்கம். சாரண சாரணியர் இயக்கம் ஆகியவை மேற்கூறிய நற்பண்புகளை இளைஞர்களுக்குப் புகட்டி அவர்களை நாளைய பொறுப்புள்ள குடிமகனாக மலரச் செய்கிறது. விளையாட்டு மேம்பாட்டிற்குச் சமீப காலத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

**மேம்பாட்டு ஆணையம் - தோற்றம்**

**1.2 தமிழ்நாடு விளையாட்டு** ஒருமுகப்படுத்தும்

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன். தமிழக அரசு, அரசாணை எண் 641 கல்வி (ஒய்1)

துறை, நாள் 18-7-92-ல், அதற்கு முன்பு இயங்கி வந்த இளைஞர் மற்றும்
விளையாட்டு பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு
வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு
விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை
உருவாக்கியது. இவ்வமைப்பு, இந்திய விளையாட்டுக் குழும அமைப்பிற்கு
ஒப்பானதாகும். மாண்புமிகு முதல்வர், இவ்வாணையத்தின் தலைவர்
ஆவார்.

தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு
ஆணையம், தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப்
பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி
வருகிறது.

**1.3 குறிக்கோள்களும், இலக்குகளும்**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கியக் குறிக்கோள்கள்:**

1. மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.

2. திறமை மிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி வாகை பெறச் செய்தல்.

3. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.

4. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்.

5. இளைஞர்களிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.



6. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

7. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும் உத்வேகத்தையும் மலரச்செய்தல்.

1.4 தமிழ்நாடு கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு
அளவில் குழுப்போட்டிகளிலும், தனித்திறன் போட்டிகளிலும்,
முன்னிலை வகித்து வந்தது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட
விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப்
போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு
அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

## நிதி ஒதுக்கீடு

2003—2004 ஆம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை - 47-ன்கீழ் நிதி
ஒதுக்கீடு ரூ.27.27 கோடி ஆகும். இதில் ரூ.1.19 கோடி திட்டப்
பணிகளுக்கானதாகும்.

## அத்தியாயம் - 2

## 2. விளையாட்டு வசதிகள் கட்டமைப்பு

**2.1 சென்னையிலுள்ள நவீன விளையாட்டரங்கங்கள்**

விளையாட்டின் முன்னேற்றத்திற்கு கட்டமைப்பு வசதிகளின்
முக்கியத்துவத்தை உணர்ந்து சென்னையில் தடகளம் மற்றும் கால்பந்து
விளையாட்டிற்கென கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட ஜவஹர்லால்
நேரு விளையாட்டரங்கம் 1992-93 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.
இதனைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டு ஏழாவது தெற்காசிய
விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக சர்வதேசத் தரத்திலான
செயற்கை புல்தரை கொண்ட ஹாக்கி விளையாட்டரங்கம், செயற்கை
விளையாட்டு தளத்தைக் கொண்ட டென்னிஸ் விளையாட்டரங்கம்.
பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், நீச்சல் குள வளாகம் ஆகிய

விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இவை நவீனமானதாகவும், சர்வதேசத் தரம் வாய்ந்ததாகவும் உள்ளன. இதன் விவரம் பின்வருமாறு:-

1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை - இவ்விளையாட்டரங்கம் சுமார் 40,000 பார்வையாளர்கள் அமரும் வசதியைக் கொண்டு கட்டப்பட்டது. மேலும் கால்பந்து ஆடுகளம் (புல்வெ..ரியுடன்), தடகள ஓடுகளம் (400 மீ. 8 ஓடுகளப் பாதையுடன் செயற்கை இழை ஓடுகளம்), மூன்று கையுந்து பந்து ஆடுகளங்கள் - மின்னொளி அமைப்பு மற்றும் மின்னணு கணக்கியல் கருவி ஆகிய வசதிகளைக் கொண்டது.

2. பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், பெரியமேடு, சென்னை- 8,000 பார்வையாளர்கள் அமரும் வசதியைக் கொண்ட இவ்விளையாட்டரங்கம் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, சிறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுக்கான வசதிகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடியது.

3. வளைகோல்பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை — இவ்விளையாட்டரங்கம் 4,000 பார்வையாளர்கள் அமரும் வசதியுடன் செயற்கை புல்வெளி (-ஆஸ்ட்ரோ டர்ப்) வளைகோல்பந்து ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.

4. நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை - இவ்விளையாட்டரங்கம் 4,000 பார்வையாளர்கள் அமரும் வசதியுடன் ஒரு போட்டி குளம் — (50 x 25மீ.), ஒரு பாய்ச்சல் குளம் — (18 x 25 மீ.) மற்றும் ஒரு பயிற்சி குளம் —(20 x 25 மீ.) ஆகிய வசதிகளுடையது.

5. டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை — இவ்விளையாட்டரங்கத்தில் மத்திய ஆடுகளத்தில் 5,000 பார்வையாளர்களும் மற்றும் 6 பயிற்சி ஆடுகளங்களில் 2,000 பார்வையாளர்களும் அமரும் வசதியுடன் உள்ளது. இந்த செயற்கை இழை ஆடுகளங்கள் சர்வ தேச அளவிலுள்ள ஆடுகளங்களுக்கு இணையாகவும், மின்னொளி அமைப்புடன கூடியதாகவும் உள்ளது.



மேற்கண்ட நவீன விளையாட்டரங்கங்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுக்களை சென்னையில் நடத்திட, உரிய பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்பொழுது சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் உள்ள செயற்கை புல்வெளி உபயோகமற்றதாகிவிட்டது. எனவே புதிய செயற்கை புல்வெளியுடன் அதனை மாற்றியமைக்க சுமார் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

## இதர விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

1. **ஷெனாய் நகர் தீச்சல் குளம், சென்னை** — இங்கு 33 x 21 மீ. அளவு கொண்ட நீச்சல் குளமும், கையுந்துபந்து மற்றும் சிறகுப்பந்து ஆடுகளமும் உள்ளது.

2. **நேரு பூங்கா விளையாட்டு வளாகம், சென்னை** — இங்கு கால்பந்து ஆடுகளம்—1, 400 மீ ஓடுபாதை—1, கூடைப்பந்து ஆடுகளங்கள்—2, கபாடி ஆடுகளங்கள்—2, டென்னிஸ் ஆடுகளங்கள்—2, கையுந்து பந்து ஆடுகளங்கள்—2 மற்றும் 8 ஸ்குவாஷ் ஆடுகளங்களைக் கொண்ட உள்ளரங்க ஸ்குவாஷ் அகாடமி அமைந்துள்ளது. இந்த ஸ்குவாஷ் அகாடமி, இணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

3. **அண்ணா தீச்சல் குளம், மெரினா, சென்னை** — இந்நீச்சல் குளம் சீரமைக்கப்பட்டு, தற்போது நீச்சல் பயிற்சிக்காகவும் பொது மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

4. **சதுரங்க விளையாட்டுக் கூடம்** — ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் சதுரங்க விளையாட்டுக் கூடம், சதுரங்க விளையாட்டு வீரர்களுக்காகவும், சதுரங்க விளையாட்டுக் குழுக்களுக்காகவும் துவங்கப்பட்டுள்ளது.

5. **ஜிம்னாஸ்டிக் விளையாட்டுக் கூடம்** — ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீரர்களை இளம் வயதிலேயே பயிற்சி அளிப்பதற்காக சென்னை நீச்சல் குள வளாகத்தில் ஜிம்னாஸ்டிக் விளையாட்டுக் கூடம் நிறுவப்பட்டுள்ளது.

6. வாள் பயிற்சி விளையாட்டுக் கூடம் — உள் விளையாட்டரங்கம், சென்னை — தமிழ்நாட்டில் வாள் பயிற்சி விளையாட்டு முன்னேறி வருகிறது. எனவே சென்னை உள் விளையாட்டு அரங்கில் வாள் பயிற்சிக் கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

7. சிமெண்ட் கூடைப்பந்து ஆடுகளம் — சென்னை உள் விளையாட்டு அரங்கில், இரண்டு சிமெண்ட் கூடைப்பந்து ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

8. திறந்த வெளி குத்துச் சண்டை ஆடுகளம் — சென்னை உள் விளையாட்டு அரங்கில், ஒரு திறந்த வெளி குத்துச் சண்டை ஆடுகளம் அமைக்கப்பட்டு வருகிறது.

**2.2 மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ஏற்படுத்துதல்**

மாவட்டத் தலைநகரங்களில், மாவட்ட விளையாட்டு வளாகத்தை ஏற்படுத்த மைய அரசு மானியம் தந்து உதவி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், மைய அரசு 50 சதவிகிதம், உச்ச வரம்பு மானியமாக ஒரு கோடி ரூபாய் தருகின்றது. மலைப் பாங்கு மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு 75 சதவிகிதம், உச்ச வரம்பு மானியமாக 1.50 கோடி ரூபாய் தருகின்றது. தமிழ்நாட்டில், கோவை, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் இந்த சிறப்புச் சலுகையின்கீழ். அதிக மானியம் பெற தகுதி பெற்றுள்ளன.

மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் நீச்சல் குளம் கட்டுமானப் பணிகளுக்காகும் செலவினப் பங்கீடு விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 1. மைய அரசின் பங்கீடு | - 50 விழுக்காடு |
| 2. மாநில அரசின் பங்கீடு | - 25 விழுக்காடு |
| 3. விளையாட்டரங்க குழு பங்கீடு (பொதுமக்களின் நன்கொடைகள்) | - 25 விழுக்காடு |



மாவட்ட விளையாட்டு அரங்குகளில் பின்வரும் வசதிகளை ஏற்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன:—

| வ. எண் | விளையாட்டு வசதிகள் | பரிந்துரைக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டரங்கம் 8 ஓடுகளப் பாதைகளைக் கொண்ட 400 மீ. ஓடுகளம், கால்பந்து, வளைகோல்பந்து மைதானங்கள் மற்றும் மாணவ, மாணவியர்க்கென தனித்தனியே உடை மாற்றும் அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள். | 36 |
| 2. | திறந்தவெளி விளையாட்டு மைதானங்கள், கையுந்துபந்து, கூடைப்பந்து மற்றும் ஒன்று அல்லது இரண்டு மரபுவழி விளையாட்டுக்கள், கோ—கோ, கபாடி அல்லது உள்ளூரில் விளையாடும் பிரபலமான விளையாட்டு. | 10 |
| 3. | பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கும் அறை. | 10 |
| 4. | 6 நீச்சல் பாதைகளுடன் நீர் சுத்திகரிப்புக் கருவியுடன் கூடிய 25 மீ. x 13 மீ. அளவிலான நீச்சல் குளம். | 50 |
| 5. | மரத்தாலான ஆடுகளத்தைக் கொண்ட — 35 மீ. x 19 மீ. x 12.5 மீ. அளவு குறையாமல் மாணவ, மாணவியர்க்கென உடைமாற்று அறைகள் மற்றும் கழிப்பிட வசதிகள் கொண்ட உள் விளையாட்டரங்கம். | 90 |
| 6. | மொத்தத்தில் 80 படுக்கைகளைக் கொண்ட விடுதியில், குறைந்தபட்சம் மாணவியர்க்கென 30 படுக்கைகள். | 60 |
| | **மொத்தம்** | **256** |

மைய அரசு, உச்சவரம்பு மானியத் தொகை ரூபாய் 1 கோடி (பழங்குடியினர், மலைவாழ்ப் பகுதியினர் நீங்கலாக) என நிர்ணயித்துள்ளதால், குறைந்தபட்ச வசதிகளைக் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகங்களை மேம்படுத்துவதென தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான பங்கீட்டுத் தொகை பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விளையாட்டு வசதிகள் | உத்தேச மதிப்பீடு | மைய அரசின் உச்ச வரம்பு மானியம் | மாநில அரசின் பங்கீடு | பொது மக்களிடமிருந்து பெறும் நன்கொடை |
|---|---|---|---|---|---|
| 1. | திறந்தவெளி விளையாட்டரங்கம் 8 ஓடுகளப் பாதைகளைக் கொண்ட 400 மீ. ஓடுகளம், கால்பந்து வளைகோல்பந்து மைதானங்கள் மற்றும் மாணவ, மாணவியர்க்கென தனித்தனியே உடை மாற்றும் அறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள். | 36 | 18 | 9 | 9 |
| 2. | திறந்தவெளி விளையாட்டு மைதானங்கள், கையுந்துபந்து, கூடைப்பந்து மற்றும் ஒன்று அல்லது இரண்டு யாபுவழி விளையாட்டுக்கள், கோ—கோ, கபாடி அல்லது உள்ளூரில் விளையாடும் பிரபலமான விளையாட்டு. | 10 | 5 | 2.50 | 2.50 |
| 3. | பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளு தூக்கும் கருவி வைக்கக் கூடிய அறை. | 10 | 5 | 2.50 | 2.50 |



| வ.எண் | விளையாட்டு வசதிகள் | உத்தேச மதிப்பீடு | மைய அரசின் உச்ச வரம்பு மானியம் | மாநில அரசின் பங்கீடு | பொது மக்களிடமிருந்து பெறும் நன்கொடை |
|---|---|---|---|---|---|
| 4. | 6 நீச்சல் பாதைகளுடன் நீர் சுத்திகரிப்புக் கருவியுடன் கூடிய 25 மீ x 13 மீ. அளவிலான நீச்சல் குளம் | 50 | 25 | 12.50 | 12.50 |
| 5. | மரத்தாலான ஆடுகளத்தைக் கொண்ட — 35 மீ. x 19 மீ. x 12.5 மீ. அளவு குறையாமல் மாணவ, மாணவியர்க்கென உடைமாற்று அறைகள் மற்றும் கழிப்பிட வசதிகள் கொண்ட உள் விளையாட்டரங்கம். | 90 | 45 | 22.50 | 22.50 |
| | மொத்தம் .. .. | 196 | 98 | 49.00 | 49.00 |

மேற்கண்ட 5 வசதிகளையுடைய மாவட்ட விளையாட்டு வளாகம் ஏற்படுத்திட மாநில அரசின் பங்கீட்டுத் தொகை ரூ. 49 இலட்சம் ஆகும்.

## 2.3 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு வசதிகள் கட்டமைப்பு

| வ. எண். | மாவட்டம் | வெளி விளையாட்டு அரங்கம்: 400 மீ. தடகள ஓடுபாதையுடன்/ கால்பந்து வளைகோல் பந்து ஆடுகளம். | வெளி விளையாட்டு மைதானம் | ஜிம் | நீச்சல் குளம் | உள் விளையாட்டு அரங்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 2. | தருமபுரி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | நீலகிரி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு |
| 4. | ஈரோடு | உண்டு | உண்டு | உண்டு | கட்டடப் பணி முன்னேறி வருகிறது. ஜூலை 2003-க்குள் முடிவடையும். | இல்லை |
| 5. | சேலம் | உண்டு | உண்டு | உண்டு | கட்டடப் பணி முன்னேறி வருகிறது ஜூலை 2003-க்குள் முடிவடையும். | உண்டு |
| 6. | மதுரை | உண்டு | உண்டு | உண்டு | கட்டடப் பணி முன்னேறி வருகிறது. | உண்டு |
| 7. | திருச்சி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | மைய அரசின் ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. பொது மக்களின் நன்கொடை பெறப்பட உள்ளது. |
| 8. | கன்னியாகுமரி | உண்டு | உண்டு | உண்டு | கட்டடப் பணி முன்னேறி வருகிறது. | இல்லை |
| 9. | இராமநாதபுரம் | உண்டு | உண்டு | உண்டு | கட்டடப் பணி முன்னேறி வருகிறது. | இல்லை |
| 10. | விருதுநகர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11. | திருநெல்வேலி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 12. | தூத்துக்குடி | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 13. | காஞ்சிபுரம் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 14. | கடலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 15. | வேலூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 16. | கோயம்புத்தூர் | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 17. | புதுக்கோட்டை | உண்டு | வெளி விளையாட்டு மைதானங்கள் பணி நடைபெற்று வருகிறது. | பணி நடைபெற்று வருகிறது. | | |

## கட்டமைப்புப் பணி நடைபெறும் மற்றும் ஆரம்பிக்கப்பட வேண்டிய இடங்கள்

வெளி விளையாட்டு அரங்கம்

| வ. எண் | மாவட்டம் | 400மீ. தடகள ஓடுபாதையுடன் கால்பந்து/வளைகோல் பந்து ஆடுகளம். | வெளி விளையாட்டு மைதானம் | ஜிம் | நீச்சல் குளம் | உள் விளையாட்டு அரங்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |
| 2. | திண்டுக்கல் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | விழுப்புரம் மைய அரசின் 18—11—2002-ஆம் தேதியிட்ட கடிதத்தில் மைய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது. தடகள ஓடுபாதை மற்றும் வெளி விளையாட்டு களங்கள் நிறுவப்பட வேண்டும். | உண்டு | வெளி அடுகளங்கள் அமைக்கப்பட வேண்டும் | பல் நோக்கு உடற்பயிற்சிக் கருவிகள் வைக்கும் அறை மேம்படுத்தப் பட உள்ளது. | இல்லை | இல்லை |
| 4. | பெரம்பலூர் இ அரியலூர் மைய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது. பணிகள் துவக்கப்பட வேண்டும். | நிறுவப்பட உளது | நிறுவப்பட உள்ளது | நிறுவப்பட உள்ளது | இல்லை | இல்லை |
| 5. | சிவகங்கை மைய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது. பணிகள் துவக்கப்பட வேண்டும். | நிறுவப்பட உளது | நிறுவப்பட உளது | நிறுவப்பட உள்ளது | இல்லை | இல்லை |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | சிவகங்கை மைய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது. பணிகள் துவக்கப்பட வேண்டும். | நிறுவப்பட உள்ளது | நிறுவப்பட உள்ளது | நிறுவப்பட உள்ளது | இல்லை | நிறுவப்பட உள்ளது |

### 2.4 விளையாட்டில் தனியார் பிரிவுகள் பங்கேற்பு / கூட்டாண்மை

விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்துவதற்கு மட்டுமே கடந்த காலத்தில் தனியார் ஆதரவு கிடைக்கப்பெற்று வந்தது. இது ஒரு தற்காலிகமான ஏற்பாடாகவே அமைகிறது. விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்று நடத்தும் வழக்கமான பணியுடன், விளையாட்டில் திறமையைக் கண்டறிதல், விளையாட்டை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தனியார் கூட்டாண்மையை ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சாதனைப் பட்டியலில் தமிழ்நாட்டினை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்ல, அனைத்து வழிவகைகளும் பயன்படுத்தப்படும். தனியார் கூட்டாண்மை மூலமாக உலகத்தரம் வாய்ந்த செயற்கை விளையாட்டுத் தளங்கள் ஏற்படுத்தப்படும். இதன்படி, தனியார் பங்கேற்புடன் சிறகுப்பந்து அகாடமி, நீச்சல் அகாடமி சென்னையிலும், வளைகோல்பந்து அகாடமி விருதுநகரிலும், கைப்பந்து அகாடமி திண்டுக்கல்லிலும் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஸ்குவாஷ் விளையாட்டிற்கென சர்வதேசத் தரத்திலான உள் விளையாட்டரங்கம் ஒன்று நிறுவபபட்டு தனியார் கூட்டுமுயற்சி அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருவதுடன் ஸ்குவாஷ் அகாடமி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

### 2.5 தர வரிசைப்படுத்தும் முறை

மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு பள்ளிகளையும் அவற்றில் உள்ள விளையாட்டு வசதிகளைப் பொறுத்து வரிசைப்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எல்லா விளையாட்டு வசதிகளையும் கொண்ட பள்ளிக்கூடம் 'A' வரிசையில் இடம் பெறும். எந்தவிதமான விளையாட்டு வசதிகளையும் கொண்டிராத பள்ளிகள் 'ஊ' வரிசையில் இடம் பெறும். ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள விளையாட்டு

வசதிகளுக்கேற்ப, அவைகள் 'B' யிலிருந்து 'E' வரை உள்ள வரிசையில் இடம் பெறும். ஒவ்வொரு பள்ளியின் முகப்பில் உள்ள பெயர்ப் பலகையில், அப்பள்ளி எந்த வரிசையில் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடப்படும். இதனை அமல்படுத்தும் வகையில், மாநில அரசு அரசாணை எண் 32, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 13—06—2002-ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது. இவ்வரசாணை, எல்லா மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## அத்தியாயம்—3

### பயிற்சித் திட்டங்கள்

முறையான பயிற்சி என்பது முறைப்படி திறமைவாய்ந்த விளையாட்டு வீரர்களின் திறனை அதிகப்படுத்துவதற்கும், சாதனைகளை ஏற்படுத்துவதற்கும் ஒரு திறவுகோலாகும். இதனைக் கருத்திற்கொண்டு, தமிழக அரசு, பல்வேறு வயது பிரிவுகளைக் கொண்ட விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் ஒட்டுமொத்த பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

### 3.1 விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும், நான்கு விளையாட்டு விடுதிகளையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

| வ. எண் | விளையாட்டுப் பள்ளியின் பெயர் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை. | தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல். |
| 2. | சுவாமி சிவானந்தா மேல்நிலை விளையாட்டுப் பள்ளி, பெரிய நாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |
| 3. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி. | தடகளம், கிரிக்கெட், கால்பந்து |



| வ. எண் | விளையாட்டு விடுதி அமைந்துள்ள இடம் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து |
| 2. | மதுரை | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து |
| 3. | திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து |
| 4. | ஈரோடு (மாணவியருக்கு மட்டும்) | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து |

தேர்வுமுறை : தேர்வுகள் இரண்டு அடுக்கு முறையில், அதாவது மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவு : உடற்கூறுதிறன் தேர்வுகள் நடத்தப் படுகின்றன.

மாநில அளவு : குழு விளையாட்டுக்களில் விளையாட்டுத்திறன் மற்றும் நுட்பம் குறித்தும், தனியாள் விளையாட்டுக்களில் திறமை குறித்தும் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8-ஆம் வகுப்பு, 9-ஆம் வகுப்பு மற்றும் 11-வது வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு, அரசு, உணவிற்காகவும், மற்ற தலைப்புகளிலும் கீழ்க்கண்டவாறு மானியம் அளிக்கிறது:—

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | .. | 710 |
| மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை (10 மாதங்களுக்கு மட்டும்) | .. | ரூ.720 |
| சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | .. | ரூ.700 |

ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க படி - ரூ.250

**ஒரு மாணவனுக்கு ஓர் ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித் தொகை**

அ) விளையாட்டுப் பள்ளி — ரூ.400

ஆ) விளையாட்டு விடுதி — ரூ.300

விளையாட்டு விடுதிகள், நேரிடையாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு, அதற்கென்று தனி அலுவலரும் அதாவது விளையாட்டு விடுதிக் காப்பாளரும், பயிற்றுநர்கள் மற்றும் சமையல்காரர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

**3.2 சிறப்பு விளையாட்டு விடுதி**

கல்லூரி செல்லும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில், 1994-95ஆம் ஆண்டில் செயல்படுத்திட அரசு அனுமதித்துள்ளது. இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (1) தடகளம் (2) கூடைப்பந்து (3) குத்துச்சண்டை (4) நீச்சல் மற்றும் (5) கையுந்துபந்து. இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களைத் தந்துள்ளது.

அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை .. 50

மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை (10 மாதங்களுக்கு மட்டும்) .. ரூ.1,500

சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு - ரூ.3,000

ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் - ரூ.1,500



**3.3 வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள், நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும் பெற்றுத் தந்துள்ள காரணத்தினால், அங்கு பளுதூக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டது. தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்கு (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 360 நாட்களுக்கு அங்கு பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/- வீதம் சிற்றுண்டித் தொகையாகவும், விளையாட்டு உபகரணப் படியாக ஒவ்வொருவருக்கும் ரூ.2,400/- (ஆண்டொன்றுக்கு) வழங்கப்பட்டு வருகிறது.

**3.4 கோவையில் கூடைப் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 2ம வயதுக்குட்பட்ட மாணவர்களின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க விளையாட்டு சிறப்பு மேம்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு கோவை நேரு விளையாட்டரங்கில் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு விளையாட்டு உபகரணப் படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.3,200/-ம் வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்வதற்கு போக்குவரத்துச் செலவினமாக தினம் ஒன்றுக்கு ரூ. 10/-ம், மற்றும் ஒரு மாணவனுக்குச் சிற்றுண்டிச் செலவினமாக நாள் ஒன்றுக்கு ரூ.10/-ம், ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

**3.5 திருநெல்வேலியில் வளைகோல் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல் பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல் பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த பயிற்றுநர்களால் 30

மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.3,600/- விளையாட்டு உபகரணப் படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 300 நாட்களுக்கு வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து போக போக்குவரத்துச் செலவினமாக நாளொன்றுக்கு ரூ.10/-ம் மற்றும் சிற்றுண்டிச் செலவினமாக நாளொன்றுக்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ.10/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

### 3.6 கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடி பெருமை சேர்த்திடும் வகையில் அரசு, அந்தந்தக் கல்லூரிகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பயன்படுத்த, கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், குறைந்தபட்ச தகுதியை நிர்ணயித்தும், கல்லூரி நிர்வாகமே மாணவர்களைத் தேர்வு செய்யவும் அரசு இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. கல்லூரிகளின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | கல்லூரியின் பெயர் | விளையாட்டுகள் | பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | **ஆண்கள் கல்லூரி** | | |
| 1. | லயோலா கல்லூரி, சென்னை-34 | கால்பந்து | 16 |
| | | தடகளம் | 10 |
| | | கூடைப் பந்து | 12 |
| 2. | சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னை-45 | தடகளம் | 10 |
| 3. | பி.எஸ்.ஜி.ஆர். கலைக் கல்லூரி, கோவை. | கூடைப் பந்து | 12 |
| 4. | பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30. | வளைகோல் பந்து | 16 |



| வ.எண் | கல்லூரியின் பெயர் | விளையாட்டுகள் | பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 5. | ஜமால் முகமது கல்லூரி, திருச்சி. | கையுந்துபந்து | 12 |
| 6. | தூய வளனார் கல்லூரி, திருச்சி. | தடகளம் | 10 |
| | | கூடைப்பந்து | 12 |
| | | கால்பந்து | 16 |
| 7. | எம்எஸ்எஸ். வக்ப் போர்டு கல்லூரி, மதுரை. | தடகளம் | 10 |
| | **பெண்கள் கல்லூரி** | | |
| 1. | எத்திராஜ் கல்லூரி, சென்னை. | தடகளம் | 10 |
| | | கூடைப் பந்து | 12 |
| | | கையுந்துபந்து | 12 |
| 2. | எஸ்டிஎன்பி. வைஷ்ணவா கல்லூரி, சென்னை. | தடகளம் | 10 |
| | | வளைகோல் பந்து | 16 |
| 3. | வி.வி.வி. கல்லூரி, விருதுநகர். | தடகளம் | 10 |
| 4. | ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, பெரியகுளம். | கையுந்துபந்து | 12 |
| 5. | நிர்மலா கல்லூரி, கோவை. | கூடைப் பந்து | 12 |

மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த மிகத் திறமைவாய்ந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு கீழ்க்காணும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது:

மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுப் படி (10 மாதங்களுக்கு) .. ரூ.600/-

ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு .. ரூ.500/-	[2003 ஏப்ரல் 4

பயிற்சி: அந்தந்தக் கல்லூரி நிர்வாகமே தனது சொந்த பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சியளிபபதற்கு பொறுப்பாகும்.

## 3.7 இந்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையங்கள்

இந்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையங்களை தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் துவக்க, விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை தமிழக அரசு அளித்துள்ளது:

| இடம் | திட்டம் | விளையாட்டு |
|---|---|---|
| சென்னை | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவர்கள்) | வளைகோல் பந்து, கால் பந்து கபாடி |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவர்கள்) | வளைகோல் பந்து, கபாடி, குத்துச்சண்டை. |
| | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவியர்கள்) | வளைகோல் பந்து, கையுந்து பந்து, கபாடி. |
| சேலம் | இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் (மாணவர்கள்) | தடகளம், கூடைப் பந்து, கையுந்து பந்து. |
| | டே போர்டர் பயிற்சித் திட்டம் (மாணவர்கள்) | தடகளம், கூடைப் பந்து, கையுந்து பந்து. |
| நாகர்கோவில் | இந்திய விளையாட்டு ஆணைய சிறப்பு விளையாட்டு டே போர்டர் திட்டம் | தடகளம், கராத்தே. |

## 3.8 இந்திய விளையாட்டு ஆணைய துணை மையம்

தமிழக அரசு, ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வாம் வட்டம், நீண்டகரை கிராமத்தில் கடலோரத்தில் இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை மையம் அமைப்பதற்காக 5.10 ஹெக்டேர் நிலத்தினை அளித்துள்ளது. மேலும் 15.875 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## 3.9 உடல் நலத் தகுதி மையங்கள்

உடல் நலத் தகுதிக்குண்டான வாழ்க்கை முறையை மேமபடுத்த. தமிழ்நாட்டிலுள்ள 10 விளையாட்டரங்கங்களில் உடல் நலத் தகுதி மையங்கள் படிப்படியாக நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 3.10 கோடை காலப் பயிற்சி முகாம்கள்

ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத் தலைநகரங்களில், 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாத ஆண், பெண் இருபாலருக்கும் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் - தடகளம், கூடைப் பந்து, கால் பந்து, வளைகோல் பந்து, கையுந்து பந்து மற்றும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள பிரபலமான விளையாட்டுகளில் நடத்தபபடுகின்றன.

## 3.11 இளவயதில் கண்டறிந்து, அவர்களுக்கென சிறப்புப் பயிற்சி முகாம்கள்

ஒவ்வொரு ஆண்டும் தடகளம், கூடைப் பந்து, கால் பந்து, வளைகோல் பந்து, கையுந்து பந்து மற்றும் நீச்சல் ஆகிய ஆறு விளையாட்டுகளில், 14 வயதிற்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமியருக்கென நடத்தப்படுகின்ற விளையாட்டுப் போட்டிகளில் இளமையில் தெரிந்தெடுக்கும் திறமைமிக்க விளையாட்டு வீரர், தேர்ந்தெடுக்கப்படுகின்ற திறமைமிக்க விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்புப் பயிற்சி முகாம்களை நடத்த தமிழக அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒலிம்பியன்/சர்வதேச விளையாட்டு வீரர், மாநில விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், பயிற்றுநர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு, திறமைமிக்க விளையாட்டு வீரர்களை இப்பயிற்சி முகாமிற்குத் தேர்வு செய்கிறது. இத்திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சி முகாமில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி முகாமின் கால அளவு 21 நாட்களாகும்.

## 3.12 சிறப்புப் பயிற்சித் திட்டம்

### அ) நீச்சல் பயிற்சித் திட்டம்

ஒவ்வொரு வருடமும் கோடைகால விடுமுறையில் "நீச்சல் பயிற்சி" திட்டம் நீச்சல் அனுபவமற்றவர்களுக்கு அரசின் நீச்சல் வளாகங்களான வேளச்சேரியிலும், ஷெனாய் நகரிலும் பல்வேறு பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகிறது.

[2003 ஏப்ரல் 4

### ஆ டென்னிஸ் பயிற்சித் திட்டம்

அரசின் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் "டென்னிஸ் பயிற்சி" திட்டம் டென்னிஸ் அனுபவமற்றவர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.13 கட்டாய உடல் நலத் தகுதி மற்றும் விளையாட்டுத் திறமை அறிக்கை அட்டை

மாநிலத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள 6-வது, 7-வது மற்றும் 8-வது வகுப்புகளுக்கு கட்டாய உடல் நலத் தகுதி மற்றும் விளையாட்டுத் திறமை அறிக்கை அட்டை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு பள்ளியிலும், ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் உடற்திறன் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். இதனடிப்படையிலான திறமை அறிக்கை அட்டை சம்பந்தப்பட்ட பள்ளிகளால் அனைத்துப் பெற்றோர்களுக்கும் அனுப்பப்படும். இவ்வறிக்கையில் மாணவ, மாணவியரின் உடற்திறன் மற்றும் விளையாட்டுத் திறமைகள் தெரிவிக்கப்படும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இதற்கான படிவத்தை வடிவமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் இத்திட்டத்தின்படி வெளிக்கொணரப்படும் திறமைமிக்கவர்களைக் கண்டறிந்து, அது ஒருங்கிணைந்த ஒரு பள்ளிவிவர அமைப்பின் மூலம் கண்காணிக்கப்படுகிறது.

### 3.14 தரம் வாய்ந்த மேன்மையான பயிற்சி வசதிகள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், தமிழ்நாடு கால் பந்துக் கழகமும் இணைந்து, கால் பந்து பயிற்றுநர்கள் மற்றும் கால் பந்து வல்லுநர்களுக்கு "சி" லைசென்ஸ் என்னும் தரம் வாய்ந்த மேன்மையான பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. ஆசிய கால் பந்து கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி இயக்குநரின் உதவியுடன், கால் பந்து விளையாட்டின் சமீபத்திய உத்திகள் மற்றும் செயல்திறனை மேம்படுத்திட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.



2003 ஏப்ரல் 4]

## அத்தியாயம்-4

## விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

அரசுத் துறைகளிலும் மற்றும் பல்வேறு நிறுவனங்களிலும் விளையாட்டு மற்றும் விளையாட்டுப் போட்டிக் குழுக்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இந்திய விளையாட்டு ஆணையமும் விளையாட்டு வீரர்கள் அவரவர்களுக்குரிய பல்வேறு வயதுப் பிரிவுகளில் உள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன.

### I. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்

### 4.1 மாநில விளையாட்டுப் போட்டிகள்

மாநில விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்ட 14 விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன: (1) தடகளம் (2) டிரையத்லான் (3) சிறகுப் பந்து (4) நீச்சல் (5) டென்னிஸ் (6) மேசைப் பந்து (7) பளுதூக்குதல் (8) சிலம்பம் (9) கூடைப் பந்து (10) கால் பந்து (11) வளைகோல் பந்து (12) கபடி (13) கோ-கோ மற்றும் (14) கையுந்து பந்து. மேற்கண்ட விளையாட்டுகளில் மாணவ, மாணவியர், மாணவரல்லாதோர் பெருமளவில் கலந்து கொள்கின்றனர். இப்போட்டிகளில் கலந்து கொள்ள வயது வரம்பு ஏதுமில்லை. இப்போட்டிகள் மண்டல அளவில், மண்டலங்களுக்கிடையேயான அளவில் மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன.

### 4.2 விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதிகள் இதர போட்டிகளில் பங்கேற்றல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மூன்று விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் நான்கு விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் பல்வேறு போட்டிகளில் விளையாட்டுப் பள்ளிகள்/விளையாட்டு விடுதிகள் பங்கு பெறுகின்றன.

### 4.3 இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகள்

பள்ளியில் பயிலும் 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியரிடையே உள்ள விளையாட்டுத் திறனைக் கண்டறிய, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இளமையில் தேர்ந்தெடுத்தல் போட்டிகளை ஒவ்வொரு ஆண்டும் பின்வரும் விளையாட்டுகளில் நடத்துகிறது: (1) தடகளம் (2) கூடைப் பந்து (3) கால் பந்து (4) வளைகோல் பந்து (5) நீச்சல் மற்றும் (6) கையுந்துப் பந்து.

### 4.4 அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வொரு ஆண்டும் சுற்றுமுறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

### 4.5 அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்

தமிழ்நாட்டைச் சார்ந்த அரசுப் பணியாளர்கள் அணி வெவ்வேறு மாநிலங்களில் சுற்று முறையில் நடத்தப்படும் தேசிய அளவிலான அரசுப் பணியாளர்கள் போட்டியில் பங்கேற்று வருகிறது.

### 4.6 சென்னை மராத்தான்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், ரோட்டரி இண்டர்நேஷனல் கழகமும் இணைந்து, சென்னையில் 12-1-2003 அன்று "சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தய போட்டியை, லண்டன் மராத்தான் மற்றும் பாஸ்டன் மராத்தான் போட்டிகளுக்கு இணையாக சிறப்பாக நடத்தியது. இந்த மராத்தான் ஓட்டம், உலக அமைதியைக் கருதி ஆண்களுக்கு 42 கி.மீட்டரும், பெண்களுக்கு 21 கி.மீட்டர் தூரமும் கொண்டதாக அமைந்தது. இப்போட்டிகளில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து சுமார் 400 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டார்கள்.



### 4.7 மாநில விளையாட்டு தரம் அறியும் போட்டிகள்

ஒவ்வொரு மாதமும், தடகளம் மற்றும் நீச்சல் ஆகிய விளையாட்டுகளில், விளையாட்டு தர நிர்ணயம் அறியும் போட்டிகள் பல்வேறு வயதுப் பிரிவினருக்காக நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள், அவர்களது போட்டித் திறனை வளப்படுத்தவும், திறமைகள் மேம்படுத்த, ஊக்கப்படுத்துவதற்காகவும் நடத்தப்பட்டு வருகின்றன.

### 4.8 விளையாட்டு வரைபடம்

கீழ்க்கண்டவற்றை குறிப்பிட்டுக் காட்டும் வகையில் விளையாட்டிற்கான மாநில வரைபடம் தயாரிக்கப்படும்:

(அ) குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள பிரபலமான விளையாட்டுகள்.

(ஆ) அதிக எண்ணிக்கையில் விளையாட்டு வீரர்கள் உள்ள விளையாட்டு மற்றும் மேம்படுத்த வேண்டிய திறமைகள்.

இதனால் ஒரு மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விளையாட்டின் மீது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தனிக்கவனம் செலுத்த இயலும்.

## II. இந்திய விளையாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்

### 4.9 அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள்

இந்திய விளையாட்டு ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுகளில், 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. தேசியப் போட்டிகளில் பங்கேற்புக்கு முன், மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும், தெரிந்தெடுக்கப்பட்டவருக்குப் பயிற்சி முகாமும் நடத்தப்படுகின்றன.

### 4.10 தேசிய மகளிர் விளையாட்டு விழா

இந்திய விளையாட்டு ஆணையம் மகளிருக்காக வயது வரம்பின்றி 13 விளையாட்டுகளில் தேசிய மகளிர் விழாவை நடத்தி வருகிறது.

தமிழக அணி இவ்விழாவில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. இப்போட்டிகளில் பங்குபெறுவதற்கான மாநில அணியை தெரிந்தெடுப்பதற்காக ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தெரிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தேசியப் போட்டிகளில் பங்குபெறுவதற்கு முன் பயிற்சி அளிக்க பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

### 4.11 விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்

சென்னையில் சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்கள் இருப்பதால், மாநில விளையாட்டுக் கழகங்கள் தேசிய விளையாட்டுப் போட்டிகளையும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் மற்றும் இதர முக்கிய விளையாட்டுப் போட்டிகளையும் சென்னையில் நடத்த தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. இவ்வாறான சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் தமிழ்நாட்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இயலும்.

## அத்தியாயம்-5

## உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

### 5.1 விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 17 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் மாநில அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒருமுறை மட்டும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5,000-மும், கல்லூரி/பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6,500 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.



### 5.2 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு தலா ரூ. 1 இலட்சம் பண முடிப்பும் மற்றும் பாராட்டுப் பத்திரமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. சர்வதேசப் போட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்த 12 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

### 5.3 உயரிய ஊக்கத் தொகை

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் பட்சத்தில், வீட்டுமனை மற்றும் அடுக்குமாடி வீடு வழங்குவதற்குப் பதிலாக உயரிய ஊக்கத் தொகை வழங்கவும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் (இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் நடத்தப்படுவது) பதக்கங்கள் பெறும் பட்சத்தில், அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும், அரசு, அரசாணை (நிலை) எண்5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 24-1-2002-ல் கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கியுள்ளது:

**போட்டிகளின் முன்னுரிமை மற்றும் வழங்கப்படும் ஊக்கத் தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| இனம் | விளையாட்டுக்களின வரிசைக் கிரமம் | ஊக்கத் தொகையின் அளவு தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|---|
| 1. | **ஒலிம்பிக்** ஒற்றையர் போட்டி/குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100 | 50.00 | 25.00 |
| 2. | **ஆசிய விளையாட்டுப் போட்டிகள்** ஒற்றையர் போட்டி/குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |

| இனம் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி தங்கம் ரூ. | ஒற்றையர் போட்டி வெள்ளி ரூ. | ஒற்றையர் போட்டி வெண்கலம் ரூ. | குழுப்போட்டி தங்கம் ரூ. | குழுப்போட்டி வெள்ளி ரூ. | குழுப்போட்டி வெண்கலம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 3. | காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஒற்றையர் போட்டி/குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | | | | 20.00 | 15.00 | 10.00 |
| 4 | தெற்காசிய/ தேசிய விளையாட்டுப் போட்டிகள் | 1.00 இலட்சம் | 50,000 | 25,000 | 20,000 ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 15,000 | 10,000 |

## 5.4 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

தற்போது நலிந்த நிலையிலுள்ள கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், அவர்களுடைய மாத வருமானம் ரூ.2000/-க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால் அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது.

## 5.5 விளையாட்டு வீரர்கள் நல நிதி

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தாலோ/இறக்க நேரிட்டாலோ, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு, விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## 5.6 அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்குதல்

தமிழ்நாடு ஒலிம்பிக் கழகம் மற்றும் 40 மாநில விளையாட்டுக் கழகங்களை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அங்கீகரித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு, தேசிய மற்றும் தென்மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் மற்றும் அப்போட்டிகளில் தமிழக அணி கலந்து கொள்வதற்கும் மானியம் வழங்கப்படுகின்றது.



## 5.7 சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மானியம்

தமிழ்நாட்டைச் சார்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க மைய அரசின் பயணச் செலவின உதவியினைப் பெறாதபட்சத்தில், விமானப் பயணக் கட்டணத்திற்கான மானியம் அதிகபட்சமாக ரூ.25,000/- வரை வழங்கப்படுகிறது.

## 5.8 சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்

சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம் ஒரு தனித்தன்மை வாய்ந்த திட்டமாகும். திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் சர்வதேச விளையாட்டில் பதக்கங்கள் பெறும் வகையில் திறமை பெற்றவர்களை அதிக அளவில் மேம்பாடடையச் செய்யும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டு வீரர்களுக்குத் தகுந்த முறையில் நிதி ஆதாரத்துடனோ அல்லது நிதி ஆதாரமில்லாமலோ ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்கி ஒலிம்பிக் நிலையை அடையச் செய்வது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

## 5.9 திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்

தற்போது காவல் துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு முறை, ஏனைய சமமான பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

## 5.10 திறமையான விளையாட்டு வீரர்களை தத்தெடுக்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள், உயர்/மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து 50 மாணவர்களும், கல்லூரிகளிலிருந்து 25 மாணவர்களும் மற்றும் மாணவரல்லாத இளைஞர்கள் 25 பேரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உதவிகள் வழங்கப்படும்:-

| | | |
|---|---|---|
| உணவுப் படி | : | மாதம் ரூ.350/- வீதம் 10 மாதங்களுக்கு |

சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள். : ஆண்டுக்கு ரூ.1500/-

கல்விக் கட்டணப்படி : ஆண்டுக்கு ரூ.1000/-

# அத்தியாயம்-6

## இளைஞர்களுக்கான திட்டங்கள்

### 6.1 இளைஞர் மன்றங்கள்

இன்றைய இளைஞர்களிடையேயுள்ள சக்தியினையும், திறமையினையும், தனி மனித வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் பயன் அடையும் வகையில் வெளிக்கொணர வேண்டும். நமது இளைஞர்களிடையேயுள்ள சக்தியினை வெளிக்கொணரும் வகையில் இளைஞர் நலத்திட்டங்களை செயல்படுத்திட அரசு முடிவு எடுத்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் இளைஞர் மன்றங்களை நிறுவுவது ஆகும். மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களின் நேரம் மற்றும் சக்தியினை ஒருமுகப்படுத்தி அவர்கள் விளையாட்டுக்கள் மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்தும் பணிகளில் இம்மன்றங்கள் செயல்படும். அவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் மது அருந்தாமை, தீண்டாமை, சமுதாயப் பாதுகாப்பு, வீரதீரச் செயல்கள் போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள். இளைஞர்களின் சக்தியினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் 300 இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

### 6.2 இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு அதிகச் செலவில்லாத தங்கும் வசதிகளை இளைஞர் விடுதிகள் அளிக்கும் நோக்கத்தோடு கட்டப்படுகின்றன.

இது மைய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்காக முழு அளவில் மேம்படுத்தப்பட்ட நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய



அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் நான்கு இளைஞர் விடுதிகள், சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி கட்டுவதற்கு மைய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இராமேஸ்வரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிதாக இளைஞர் விடுதிகளைக் கட்டுவதற்கு மைய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

### 6.3 இளைஞர் விழா

இளைஞர் விழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளைஞர்களிடையே அர்த்தமுள்ள சுமுகமான நட்புறவையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நடத்தப்பட்டு வருகிறது. மைய அரசும் இதேபோன்று ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவில் இளைஞர் விழாவினை சனவரித் திங்கள் 12-16 வரை நடத்தி வருகிறது. இவ்விழாக்களில் பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த அணிகள் 18 வெவ்வேறு போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றன.

### 6.4 இளைஞர்களின் செயல்பாடுகள் மற்றும் பயிற்சி மேம்பாட்டிற்கான நிதி உதவி

இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை வளர்த்திடவும், வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றிட சிறுதொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து புதியதொரு நாட்டை உருவாக்கவும்

1. தொழிற்கல்வித் திட்டம்
2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்
3. கண்காட்சித் திட்டம்

ஆகிய திட்டங்களில் பலவித பயிற்சிகளை மேற்கொள்ள "இளைஞர் மேம்பாட்டு நிதியுதவி" திட்டத்தின்கீழ் மைய அரசு, நிதி உதவி அளித்து வருகிறது.

பல்வேறு வணிகங்கள் மற்றும் தொழிற்கல்வி பற்றிய குறுகிய கால அளவிலான பயிற்சிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படுகிறது.

15-35 வயது வரம்பிலுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்குபெற தகுதியுடையவராவார். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பப் பயிலகங்கள், பல்கலைக்கழகங்கள், நேரு யுவ கேந்திர சங்கேதன், சங்கங்கள் பதிவு சட்டம் மற்றும் பொது பொறுப்பாட்சி நிறுவனங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. அவ்வாறான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மேற்கூறிய நிதி உதவி பெற்றிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவி புரிகிறது.

# அத்தியாயம்-7

## புதிய திட்டங்கள்

### 7.1 பீச் வாலிபால்

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் மணற்பாங்கான தளத்தில், பீச் வாலிபால் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளது. மேலும், கடலோர மாவட்டங்களில் பள்ளிகளுக்கிடையேயான பீச் வாலிபால் போட்டிகள் நடத்திட உத்தேசிக்கபபட்டுள்ளது.

### 7.2 பளு தூக்கும் விளையாட்டுக் கூடம்

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் பளு தூக்கும் விளையாட்டுக் கூடம் ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.3 மாவட்ட விளையாட்டு வளாகம், திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில், 15 ஏக்கர் நிலப்பரப்பளவில், திறந்த வெளி விளையாட்டு அரங்கம், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் முதலிய வசதிகள் அடங்கிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்பட உள்ளது.



### 7.4 மாவட்ட விளையாட்டு வளாகம், தேனி

தேனி மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், 15 ஏக்கர் நிலப்பரப்பளவில் திறந்த வெளி விளையாட்டு அரங்கம், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் முதலிய வசதிகள் அடங்கிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்பட உள்ளது.

### 7.5 உயரமான மலைப்பிரதேசத்தில் பயிற்சியளிக்கும் மையத்தினை உதகையில் அமைத்தல்

விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளின் திறனை வளர்க்க உயரமான மலைப்பிரதேசத்தில் பயிற்சியளிப்பது நடைமுறையிலுள்ளது. அவ்வாறு மலைப்பிரதேசத்தில் பயிற்சியளிக்கும், பயிற்சி மையத்தை உதகையில் அண்ணா விளையாட்டு அரங்க வளாகத்தில், உதகை மலைப்பிரதேச மேம்பாட்டுத் திட்டத்தின் நிதி உதவியுடன், ஆண்கள்/பெண்கள் தங்குவதற்காக 30 படுக்கைகள் கொண்ட விடுதி ஒன்று அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.6 சிறப்பு விளையாட்டு அகாடமிகளை நிறுவுதல்

திறமையான விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளத்தக்க வகையில் பயிற்சி அளிப்பதற்காக, சிறப்பு விளையாட்டு அகாடமிகள் படிப்படியாக தமிழ்நாட்டில் நிறுவப்பட உள்ளன. இத்திட்டத்தில், தனியார் துறை மற்றும் பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில், மதுரையில் தாண்டுதல் மற்றும் குறுந்தூர ஓட்டம் தொடர்பான விளையாட்டிற்காக ஒரு விளையாட்டு அகாடமி நிறுவப்பட உள்ளது.

சென்னையில் நலிந்த பிரிவு சமுதாயத்தினரிடையே மேசைப் பந்து விளையாட்டை மேம்படுத்தும் வகையில் தனியார் நிறுவனத்தின் கூட்டாண்மையுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.7 மண்டல அளவிலான தடகளம் மற்றும் நீச்சல் தர விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

மண்டல அளவிலான தடகளம் மற்றும் நீச்சல் தா விளையாட்டுப் போட்டிகள் கோவை, சேலம், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், ஒவ்வொரு காலாண்டிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 4

### 7.8 பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள்

பள்ளி மாணவர்களுக்கிடையே வாள்சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ், குத்துச்சண்டை மற்றும் ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுகளில் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் மாணவ, மாணவியரிடையே போட்டி மனப்பான்மையை மேம்படுத்தவும் மற்றும் அவர்களின் திறமைகளை வெளிக்கொணரவும் இயலும். இதன்படி தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அறிவியல்பூர்வமான பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் உயர்மட்டப் போட்டிகளில் பங்கேற்க ஏதுவாகும்.

### 7.9 தருமபுரி மாவட்டத்திற்கான சிறப்புத் திட்டங்கள்

தருமபுரி மாவட்ட இளைஞர்கள் சட்டவிரோத செயல்களைத் தவிர்த்து, விளையாட்டில் ஈடுபட ஏதுவாக, அம்மாவட்டத்தில் பல விளையாட்டு மையங்களை ஏற்படுத்தும் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

### 7.10 முதலமைச்சர் விருது

தங்களிடமுள்ள விளையாட்டுத் திறமையை மெய்ப்பிக்கும் வகையில் மிகத் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் இரண்டு பயிற்சியாளர்களுக்கு, ஆண்டுதோறும் முதலமைச்சர் விருது வழங்கப்படும். இது போன்று, உடற்பயிற்சிக் கல்வியில் சிறந்து விளங்கும் இரண்டு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் இவ்விருது வழங்கப்படும். முதலமைச்சர் விருதிற்காக தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1 இலட்சம் பணமுடிப்பும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

### 7.11 வளைகோல் பந்து விளையாட்டரங்கத்தினை மின்னொளி மயமாக்குதல்

சென்னை எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல் பந்து விளையாட்டரங்கத்தில் ரூ.1 கோடி செலவில் மின்னொளி அமைப்பை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வசதி, சென்னையில் சர்வதேச அளவில் வளைகோல் பந்து விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு உதவும் வகையில் அமையும்.



2003 ஏப்ரல் 4]

## அத்தியாயம்-8

## தேசிய மாணவர் படை

### தொடக்கம்

தேசிய மாணவர் படை இயக்ககம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தேசிய மாணவர் படை சட்டத்தின் (எண்.XXXI 1948) கீழ் 16-7-1948 அன்று தோற்றுவிக்கப்பட்டது.

### குறிக்கோள்

(அ) இளைஞர்களிடையே நற்பண்பு, துணிவு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமை, சமய சார்பற்ற நோக்கம், துணிவுச் செயல், போட்டி நேர்மைப் பண்பு மற்றும் சுய நலமில்லாத தொண்டுகளின் உயர் குறிக்கோள்களை வளர்த்து அவர்களை ஒரு நல்ல குடிமகனாக்குதல்.

(ஆ) ஒழுங்கு முறையில் பயிற்சி பெற்று சிறந்த செயல் நோக்குடைய இளைஞர்களின் மனித வளத்தைக் கொண்டு அவர்கள் வாழ்வின் எல்லா நடைமுறைகள் மற்றும் ஆயுதப்படைகளிலும் தலைமைப் பொறுப்பு வகிக்க வகை செய்து அவர்களை நாட்டுப் பணிக்காக எப்பொழுதும் கிடைக்கச் செய்தல்.

(இ) இளைஞர்கள் ஆயுதப்படையில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கு பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

### நிர்வாகம்

தேசிய மாணவர் படையைச் சார்ந்த பல்வேறு பயிற்சிகள் மைய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. தேசிய மாணவர் படைத் துறையில் பணிபுரியும் துணை இயக்குநர் வரையிலான பணியாளர்களின் ஊதியம் மாநில அரசால் வழங்கப்படுகிறது. மாணவர்களின் சிற்றுண்டிப் படி, பயிற்சிக் கட்டணங்கள் ஆகியவற்றையும் மாநில அரசே மேற்கொள்கிறது. தேசிய மாணவர் படையின் துணைத் தலைமை இயக்குநருக்கு தமிழக அரசின்கீழ் உள்ள துறைத் தலைவர் அந்தஸ்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய மாணவர் படை மாணவர் எண்ணிக்கை**

தேசிய மாணவர் படையில் 94,619 மாணவர்கள் சேர்ந்துள்ளனர் இவர்களில் 67,879 மாணவர்கள் பள்ளிகளிலும் 26,740 மாணவர்கள் கல்லூரிகளிலும் உள்ளனர்.

**விருதுகள்**

தமிழக தேசிய மாணவர் படை இயக்ககம் பெருமைமிக்க அனைத்திந்திய இயக்ககங்களுக்கிடையேயான சேம்பியன்ஷிப்/பாரதப் பிரதமரின் பதாகையை 2003 ஜனவரி 27-ல், புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தினப் போட்டிகளில் வென்றுள்ளது. இப்பதாகையை இவ்வியக்ககம் வெல்வது 12-வது முறையாகும். இது ஒரு சாதனையாகும்.

**ஊக்கங்கள்**

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் ஊக்கங்களை தேசிய மாணவர்படை மாணவர்களுக்கு அளித்துள்ளது:

(அ) 80 முதுநிலைப் பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.1200/-ம், 90 இளநிலை பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.600/-ம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சிறந்து விளங்கும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இத்திட்டம் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கல்லூரி மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில், இளநிலை பட்ட வகுப்பில் ஒரு இடமும், முதுநிலை பட்ட வகுப்பில் ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) குடியரசு தின முகாம் மற்றும் மாநில அளவிலான முகாம்களில் பங்குபெறும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வருடத்திற்கு ரூ.3.17 இலட்சங்கள் வரை ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

(ஈ) தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் பத்து இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

(உ) 2001-2002 கல்வியாண்டு முதல், தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.



(ஊ) தமிழ்நாட்டில் இளநிலை பட்டதாரி பயிற்சி மற்றும் முதுநிலை பட்டதாரி பயிற்சி ஆசிரியர் தேர்வுகளிலும், நியமனத்திலும் நடைபெறும் வாய்மொழித் தேர்வினில் வழங்கப்படும் 12 மதிப்பெண்களில் தேசிய மாணவர் படை செயல்பாடுகளுக்காக 1/2 மதிப்பெண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## முதலமைச்சர் அணி வகுப்பு

சென்னையில் 6-2-2003 அன்று "முதலமைச்சர் அணி வகுப்பு" நடத்தப்பட்டது. முதலமைச்சர் பதாகை, கோவை தேசிய மாணவர் படை தலைமையகத்திற்கு அளிக்கப்பட்டது.

# அத்தியாயம்-9

## நாட்டு நலப்பணித் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான மானியம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2001-2002 ஆம் ஆண்டில் 1,87,000 ஆக இருந்த மாணவ தொண்டர்களின் எண்ணிக்கை 2002-2003 ஆம் கல்வியாண்டு முதல் 2,05,700 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுள், சிறப்பு முகாம்களில் 1,02,850 மாணவ தொண்டர்கள் 2002-2003 கல்வியாண்டில் பங்கேற்றுள்ளனர். பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 1,407 அலகுகளும், மேல்நிலைப் பள்ளிகளில் 1,300 அலகுகளும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

நாட்டு நலப்பணித் திட்டத் தொண்டர்களும், அலுவலர்களும், அரசின் பல்வேறு நலத் திட்டங்களை குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தினை செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். மரம் நடுதல், இரத்த தானம், மழை நீர் சேகரிப்பு, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, அனைவருக்கும் கல்வி, எயிட்ஸ் விழிப்புணர்வு, நுகர்வோர் விழிப்புணர்வு, சுகாதார முகாம்கள் ஆகியவற்றையும் செயல்படுத்துவதில் இவ்வியக்கம் ஈடுபட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் மைய அரசு தனது முதல் தவணைப் பங்காக ரூ.248.28 இலட்சமும், மாநில அரசு தனது முதல் தவணைப்

[2003 ஏப்ரல் 4

பங்காக ரூ.177.35 இலட்சமும் நாட்டு நலப்பணித் திட்டப் பணிகளுக்கு விடுவித்துள்ளன.

நாட்டு நலப் பணித் திட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அதில் முனைப்புடன் செயல்படும் மாணவர்களுக்கு 'A' மற்றும் 'B' சான்றிதழ்கள் வழங்க அரசு முடிவெடுத்து, அவர்கள் 2002-2003 ஆம் கல்வியாண்டு முதல், உயர் கல்வி வகுப்புகளில் சேருவதில் முன்னுரிமை வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2002-2003 கல்வி ஆண்டு முதல், 'A' மற்றும் அதற்கு மேலான சான்றிதழ் பெற்றுள்ளவர்களுக்கு, பொறியியல் கல்லூரிகளில் 3 இடங்கள் ஒதுக்கீடு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-10

### சாரண சாரணியர் இயக்கம்

75 வருட பழமைவாய்ந்த சர்வதேச இயக்கமான சாரண சாரணியர் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள், பள்ளி மாணவ மாணவியரிடையே நல்லொழுக்கத்தை வளர்த்தல், நாட்டுப்பற்று உணர்வு, இரக்க மனப்பான்மை, சமூகப் பணி ஆகியவைகளைப் புகட்டுவதாகும். இது ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கமாகும். "எப்போதும் தயாராக இரு" என்பது அதன் கோட்பாடாகும். இந்த இயக்கம் தமிழ்நாட்டில் 5,300 பள்ளிகளில் இயங்கி வருவதுடன், இந்த இயக்கத்தில் 1,05,577 மாணவர்களும், 50,760 மாணவியர்களும், உறுப்பினர்களாக உள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டு 4,171 சிறந்த சாரண சாரணியருக்கு "இராஜ்ய புராஸ்கர்" விருது வழங்கப்பட்டது. அரசு, இவ்விருதிற்காக ஓராண்டிற்கு ரூ.5 இலட்சம் செலவு மேற்கொண்டுள்ளது. 4 ரோவர் 373 சாரணர்கள் மற்றும் 352 வழிகாட்டிகள் ஜனாதிபதி விருதிற்காகத் தகுதி பெற்றுள்ளனர். இது தவிர பராமரிப்பு மானியமாக தமிழக அரசால் ஆண்டொன்றிற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

**நிறைவுரை**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நற்பணிகள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. நாட்டின், விளையாட்டு மற்றும் இளைஞர் நலனில், தமிழ்நாடு உன்னத நிலையினை அடையும் வகையில், இளைஞர்களுக்கான பல திட்டங்களை நிறைவேற்றுவதில் [illegible] இத்துறை முயற்சித்து வருகிறது.

காப்பகம்
184530
சென்னை-600 008